உ

கணபதிதுணை.

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீ மகாபாரதம்.

(நான்காவது வால்யம்)



இஃது,
காணியம்பாக்கம்
முருகேச முதலியாரவர்கள்
குமாரர்
சண்முகமுதலியாரால்

பலவித்வான்களால் முன்னச்சிட்ட பிரதிகளைக் கொண்டாராய்ந்து

அமரிக்கன் டைமென்ட் அச்சுக்கூடத்தில்
பதிப்பித்துப்பிரசுரிக்கப்பட்டது.

சென்னை:
1918.

Sivakami Vilasam Press, Choolai Madras.

ஶ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமகாபாரதம்.

ஏழாவது

துரோண பர்வம்.

விருத்தம்.

காயமும்புலனுமந்தக்கரணமுமாகியெல்லாத்
தேயமும்பரந்துநின்றுமீளவுஞ்சித்துஞ்சுத்த
மாயமுமாகிநீங்கிவருபெருஞானனந்த
மாயவெம்பெருமானென்னையாண்டருளாழியானே.

பதினோராம் போர்ச்சருக்கம்.

குருகுலத்துதித்த கோமகனே கேளும், பீஷ்மாசாரியர் இறக்கும் விசனத்தினால் ராத்திரி யெல்லாம் நித்திரையற்றிருந்த வீரப்பிரமுகாள் யாவரும், குடபால் ஆழ்ந்த கதிரவன் குணபானுதயகிரியில் எழும்புமுன், எழுந்து விதிமுறைக் கடன்களைமுடித்து சதுரங்கசேனைத்தலைவர் முதலிய யாவருடனேயும் யுத்தகளத்தில் வந்துற்றனர். அர்ச்சுனனுக்கெதிரில் நிலைபெற்று நிற்கத்தகும் பீஷ்மாசாரியர் துரோணாசாரியர் அசுவத்தாமர் மூவரில், பிரதாபசாலியாகிய பீஷ்மர் ஒழிந்துபோய்விட்டாரே, இனி மேல் நமக்குத் திக்கியாரென்று மனங்கவன்று கர்ணமகாராஜனை சேனாதிபதியாய்நின்று நடத்தும்படி வேண்டினார்கள். அவன் அதற்கு உடம்பட்டு வீரப்பிரதாபங்கள் பேசி சயனித்திருக்கும் பீஷ்மாசாரியர் பாதங்களிற் பணிந்து தேவரீரைவதைத்த மகாபாபிகளை மணிமுடிசிதற உருட்டுகிறேன் எனக்கு விடைதாருமென்று விண்ணப்பஞ்செய்ய, பீஷ்மர் குலுங்க நகைத்து கர்ணன் சந்தோஷிக்கும்படி ஒருவசனஞ் சொல்லுகின்றார். உன்னை அதிரதத்தலைவர்களில் சிரேஷ்டனென்றுதன் மனசில் சர்வதா பதித்திருக்கும் ராசனுக்கு அனுகூலமாகும்படி அர்ச்சுனனை ஜெயித்து துரியோதனனுக்கு பட்டாபிஷேகஞ் செய்து வைப்பது உன்கடமையாயிருக்க, அதைவிட்டு என்னைக்கொன்றவர்களை எரிக்கிறேனென்று எனக்கு இதம் பேசவந்தது போர்வீரர் சொல்லும் பேச்சல்ல; என்னுடைய கர்மானுபவம் நான் அனுபவித்தேன், ஒருநாள் இரண்டுநாள் உன் கர்மத்தையும் நீ தொலைத்துவிடு, படைமுனையில் அடிபட்டு வருந்தியிருக்கும் அரசர்கள் பழுத்தமரத்திற் பறவைகள் சேருந்தன்மைபோல், பலம் பொருந்திய உன்வில்லின் நிழலில்வந்து சேர்வார்கள். அப்போது வாடிய பயிருக்கு மழைபெய்வதுபோல் அவர்களை யாதரிப்பாய் என்று, பல

வாறு நீதிகளைச் சொன்னார். கர்ணன் மகிழ்ந்து தானே சேனாதிபதிப் பட்டமும் கோலமுங்கொண்டு பார்த்தவர்களெல்லாரும் இன்றைக்கே யுத்தம் முடிந்துபோம், நாளைக்கு நமக்கு வேலையில்லையென மேகம்போ லிரைந்து விரைவில் ஓடிவந்து கர்ணனைக்கண்டு கைதொழுதார்கள். அப்போது நந்தியாவட்டன் இதைக்கேட்டு கர்ணனிடத்தில் வந்து, அண்ணா இப்போ நீகொண்ட யுத்தகோலம் மெத்தவும் நன்றாயிருக்கின்றது, இன்றைக்கே எனக்கு ஜெயம்வருமென்பதற்குச் சந்தேகமில்லை, ஆனால் தேவரீருக்கு வருத்தங்கொடுக்க எனக்குச் சம்மதமுமில்லை. பாண்டவரென்னும் பஞ்சைப் பயல்களையோ நீர்செயிக்க நினைப்பது, யசமானாகிய தேவரீரே சுதாவில் ஆயுதங்கொண்டு பஞ்சவர் ஐவரைக்கொன்றுவிஜயம்பெறுவீராகில் மிகவும் நன்மை, அப்படிக்கில்லாமல், தெய்வீகத்தால் உமக்கு உயிர் நஷ்டம் வருமாகில் அரைசாட்சி செய்பவர்கள் யார், நமதுகையின் கீழ் இருக்கிற மனிதரைக்கொண்டு செயம்பெறவேண்டுமல்லாது, நாமே யுத்தஞ்செய்வது நலமன்று. நமது வீரர்யாவரும் ஒழிந்துபோய்விட்டால் நாம் சுதாவிலே வெளிப்படவேணும், என்று கர்ணனைத்தழுவி சேனாதிபதியாக இருக்கவிடாமல் நிறுத்திப்போட்டு, துரோணாசாரியரை சேனாதிபதியாக்கி அவருக்குப் பட்டந்தரிப்பித்து அவரை வணங்கி சண்டைமுனையில், தர்மராஜனை இளைக்கச்செய்து கைப்பிடியாய்ப்பிடித்து என்னிடத்தில் ஒப்பிக்குங்கடமை தேவரீருடையது, நான் இருகரத்தையும் ஏந்தி விரும்பிய வரமாகக் கேட்டுக்கொண்டேன் என்று நாகக்கொடியோன் உரைத்தளவில், துரோணாசாரியர் மனம்நொந்து சிந்தித்து சில வார்த்தை சொல்லத் தொடங்கினர்.

அரசனே, பகைமேற் கொண்ட பாண்டவர்களுடைய முடிகள் பொடிபட அமர்முடித்து சந்திரவட்டக்குடை நிழலில் இந்திரனைப்போல் என்னையிருத்தி அரசாட்சிசெய்ய வரம்கொடுத்தருளுமென்று ஒரு சொல் கேளாமல் தருமபூபதியை உயிருடன் பிடித்துக்கொடுக்கும்படி வரங் கேட்டாயே, அப்பா இவ்வுலகத்தில் சரதமொழி விரதசீலதர்மராசனுக்கு மகாவிஷ்ணுவையும் ஒப்பாகச்சொல்லப்படாதே, அப்பேர்ப்பட்ட அருளாளனை எப்படிப்பிடித்துக் கொடு என்று கேட்பாய். மும்மூர்த்திகள் கூடி முனைந்தாலும் அவரை செயித்து வெற்றி பெறுவோமென்பது லேசான வார்த்தையல்லவே. ஒருக்காலும் நாம் நினைக்கவேண்டியதில்லை. ஒருவேளை என்கைவசப்படுவாராகில் அவரைக் கொண்டுவந்து உன்னிடத்தில் விடுகிறேன், நீ அவரை என்னசெய்ய நினைவுகொண்டிருக்கிறாய் என்றுவினவ, துரியோதனன் மறுவுத்தரஞ் சொல்லுகிறான்.

ஆசாரியபுருஷரே கேளீர், முரசக்கொடியோனைப் பிடித்துவந்தால் அவன் உயிரைப் போக்கிவிடவேணும், அதனால் மற்றத்தம்பியர் நால்வரும் மடிந்துபோவார்கள். நமக்கொருபோதுஞ் சஞ்சலம் இல்லையென்று நினைக்கிறேன், அந்த நினைப்பை நிதானிக்கும்போது தர்மராசனைக் கொன்றுபோட்டால் தம்பிமார்களும் சாவார்கள் என்பதற்குச் சந்

தேகமில்லை, அப்படி சாகத்தக்கவர்கள் சும்மாய் சாகமாட்டாமல் போற துபோருமென்று எண்ணி ஒரு புதுமை விளையாடிப் போவோமென்று அர்ச்சுனன் வெளிப்பட்டு நம்மையும் நமது படைகளையும் அதமாக்குவான், அவனைக் கொல்லுவோமாகில், சக்கரந்தரித்த மாயோன் ஏற்பட்டு நமது புத்திரமித்திரர்களுடன் ஒன்றொழியாமல் நம்மைமுடித்துப் பெண் காணியாக குந்திதேவியாரைத் துரைத்தனஞ்செய்ய ஏகச்சக்கிர பட்டாபிஷேகம் பண்ணிப்போடுவான். ஆகையால், தருமராசனைக் கொல்லப் படாது, முன்போல் சகுனியைவிட்டுச் சூதாடச்சொல்லி, உரிமைமுதலிய எல்லாவத்தையுங் கெலித்துக்கொண்டு வனவாசத்துக்கு அனுப்பிவிடலாமென்று நினைக்கிறேன், இஃது என்தாற்பரியம் என்ன, துரோணாசாரியர் நகைத்து தருமராசனுக்குத் துணை நிற்கின்ற அர்ச்சுனனை சற்றுத் தொலைவில் எட்டி நிற்கும்படியான சாமர்த்தியஞ்செய்து நீ அவனுடன் போர் கொடுத்துக்கொண்டு நிற்பையாகில், தர்மராஜனை ஒருவேளை பிடிக்கப் பார்க்கலாம் என்று கூறி துரோணர் ரணக்களத்தின்கண் வந்து சேர்ந்தார்.

இவ்விடத்தில் நிகழ்ந்தவைகளை தூதுவரால் தெரிந்துகொண்ட தர்மராஜன், பீமசேனன் முதலிய தம்பிமாரையும் கிருஷ்ணதேவரையுஞ் சேர்த்துவைத்து இச்செய்திகளை அவர்களுக்குத் தெரிவித்து, அப்பா தம்பி அர்ச்சுனா துரியோதனனுக்கு வரங்கொடுத்திருக்கிற துரோணர் என்னைக் கைப்பிடியாய்ப் பிடிக்கவரும்போது, நீ முனைந்து யுத்தஞ் செய்தால் மாத்திரம் நான் பிழைப்பேன், நீ முனையாவிடில் நமக்கெதுவும் முடியாது, ஆசாரியர் எதிர்த்துவருங்காலத்தில் ஆசாரியரென்னும் மரியாதையைப் பாராமல், எனக்கு உற்றதுணையாய் நின்று போர் நடத்த வேணும் என்றதற்கு, என்பிராணன் இருக்கிறவரையில் தேவரீரைக் கைவிடுவேனாகில் குருத்துரோகஞ்செய்து ஆசாரியர் உயிரை வாங்குந் தோஷமும், உம்மைக் கைவிட்டுப் பிரிவதினால் நேரிடுந் தோஷமும் இவ்விரண்டும் எனக்கு ஒன்றாய் வரக்கடவது என்கர்த்தவ்வியமே, இந்த துரோணர் மாத்திரமல்ல இன்னம் யார்வந்து எதிர்த்தபோதிலும் உம்மைக் காட்டிக்கொடேன் என்றான், அர்ச்சுனன்.

இருதிறத்துப்படைகளும் இருபக்கத்துச் சேனாதிபதிகளும் யுத்தத்திற்கு ஆரம்பித்தார்கள். அப்போது அர்ச்சுனன் துரோணர்மீதுஎதிர்த்து பாணப்பிரயோகம் பண்ணினான். அதைக்கண்ட கர்ணன் அர்ச்சுனனைத் தகைந்து பிரம்மாஸ்திரம் விடுத்து எதிரிட்டான், இன்னொரு பக்கத்தில் சகாதேவனும் சகுனிமாமனும் நேருக்குநேரே யுத்தஞ் செய்யும்போது சகாதேவன் தன்பாணங்களினால் சகுனியின் தேர் குதிரைகளை அழித்து அவன் தேகத்தையுங் காயப்படுத்தி வருத்தினான். சகுனி தன் தேரை விட்டிறங்கி சகாதேவனை கதையால் மாட்டவரும்போது, நகுலன் வந்து கூடி தன்கையினால் சகுனியை அடிக்கவே அவன் புறமுதுகிட்டோடினான் அப்போது துரியோதனன் பீமசேனனை வளைத்துக்கொண்டு அஸ்திர

சஸ்திர வருஷங்களாய் பொழிந்தான், பீமன் எதிரிகள்விட்ட பாணங்களை அதங்கண்டு சல்லியனைத்தகைந்து ஆவிவேசாறும்படி பாணங்களாற் சாடினன். நகுலராஜன் சல்லியனுடைய சாரதி முதலானவர்களைத் தலையுடைய அடித்து சல்லியனைப்பதாதியாக்கினன். அதினல் அவன் பின்னிடைந் தோடும்படியாச்சுது. இன்னெருபக்கத்தில் கர்ணனும் விராடராசனும் அபரிமிதமான யுத்தஞ்செய்தார்கள், மற்றெரு பக்கத்தில் துருபதராசனும் யாகசேனனும் ஒன்று சேர்ந்து பகதத்தனை மடக்கி ஒருபகல் முழுதும் தங்கள் வல்லமைக்குத் தக்கபடி சண்டையிட்டார்கள். சோமதத்தனும் மற்றவீரர்களும் சண்டையிட்டுப் பின்னடைந்தார்கள். பீஷ்மாசாரியரைவென்ற சிகண்டிராசன் இன்றையதினத்தில் செய்த போரின் திறத்தை என்போலியர் சொல்லத்திறமல்ல.

இப்படிசண்டையிட்டுக் கொண்டிருக்குங்கால், அர்ச்சுனன்குமாரன் அபிமந்யுவும் துரியோதனன்மகன் இலக்கணனும் எதிர்த்து நெடுநேரம் யுத்தம்பண்ணி இலக்கணன் தோற்றுப்போனன். அவன்தலைமயிரை அபிமந்யு பிடித்திழுத்துவந்து தன்தேரிற் கட்டிக்கொண்டு போகும்போது ஜயித்திரதன்வந்து எதிர்நின்று தடுத்தான். அவனைப் பின்னடையும்படி பாணங்களால் நோகச்செய்து மேல்வந்து விழுந்த சயிந்தவனையும் அயரப் பண்ணினன். அந்நேரத்தில் புஜபலபராக்கிரமர்களாகிய கர்ணன் முதல் போர்வீரர் எல்லோரும் வந்தெதிர்த்து அபிமந்யுவை வளைத்துக் கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் அதிசயிக்கும்படி தன் அம்புகளை விட்டு அவரவர்தேகங்களில் காயம்படும்படி அடித்து எதிர்த்துவந்தபேர்களையெல்லாம் ஒட்டி செயம்பெற்றுவருஞ் சமயத்தில், சல்லியனுனவன் அபிமந்யுவின்பேரில் சரவருஷங்களாகப் பொழிந்தான். அபிமந்யுவானவன்சல்லியனைத் தன்பகழிகளினல் அதங்கண்டுஅவனைபதாதியாக்கினன். சல்லியன்மிகவுங்கோபங்கொண்டு கையில்கதையை எடுத்து அபிமந்யுவைக் கொல்லப் பாயும்போது, பீமன்கண்டு தன்கதையினலே அடிக்கவே, சாவுக்குச் சரியான மூர்ச்சைப்பட்டு மத்திரராசன் பூமியில் விழுந்தான். அடித்த பெரியதந்தை பீமனைப்பார்த்து முகம்வெயர்த்து, சல்லியனும் நானும் போர்புரியும்போது, நீர் எப்படி குறுக்கே விழுந்து கதையால் அடிப்பீர், இது தருமந்தானு ஒருவனும் ஒருவனும் போர்புரியும்போது இன்னெருவன்வந்து கலக்கலாமா, நான் என்னகையாலாகாதவனு, நான் இளைத்ததாகவும் நீர்வந்து சகாயஞ்செய்ததாகவும் பேரோ, அல்லது நான் இறந்துபோவேனென்று கருதியோ இப்படிசெய்தீர். அப்படிநான் இறந்தால் வீரசொற்கம் கிடைக்குமல்லவா, எனக்கு நீர் அவமானந் தேடிவைத்தீர் என்று உடல் கறுத்து ரதத்தின்பேரில் அயர்ந்து சாய்ந்தான். அப்போது இலக்கணன் கட்டவிழ்த்துக்கொண்டு பூமியில்கிடந்த சல்லியனைத்தூக்கி ரதத்திலேற்றிக்கொண்டு திரும்புகாலில், கிருதபன்மனுனவன் இலக்கணனுக்குத் துணையாகி துரியோதனனிடங் கொண்டுவந்து விட்டான். துரியோதனன் வெட்கி அபிமந்யுவைப் பிடிக்கவேணு

மென்றுபோரிடுகையில், அசுவத்தாமன் பீமனுடன் எதிர்த்து யுத்தஞ் செய்து தன்வில் முதலியவற்றைப் போக்கடித்துக்கொண்டு பின்னடைந் தான், பீமசேனன் மற்றப்படைகளை அதமாக்கினான். அபிமந்யுவான வன் இலக்கணனைக் காணுமல் தப்பி யோடிப்போனானென்று நினைத்து வெற்றிபெற்ற வீரருந்தானும் பாடிவீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

அவ்விடத்தில் துரியோதனன் பாதிராத்திரிவரையில் நித்திரையில்லா மல் இருந்ததை கர்ணன்முதலானபேர் அறிந்து அவனைத் தேறுதற்படுத் தினார்கள். ராஜன் துரோணாசாரியைப்பார்த்து, என் கண்ணிருக்கும் போதே என்பிள்ளை கைப்பிடியாய்ப் பிடிக்கப்பட்டானே, நாளையுத்தத் திலாகிலும் தர்மராஜனைப்பிடித்துக் கொடுத்தாலொழிய, என்மனசின் வர்மம் நீங்காதென்றான் அர்ச்சுனனையும் பீமசேனனையும் ஒரு இமைப் போதுமாத்திரம் தர்மராசனைவிட்டுப் பிரியும்படிசெய்து மடக்குஞ்சேவ கர் நமதுபடையில்சிலர் இருப்பாராகில் இன்றைக்காவது நாளைக்காவது கைப்பிடியாய்ப் பிடித்துத்தர வல்லேன். அந்த அர்ச்சுனனும் பீமனும் அவரைவிட்டுப் பிரியாவிட்டால், அவரைப்பிடிப்பது அசாத்தியமென்று துரோணர்சொல்ல, திரிகர்த்ததேசாதிபரும் சஞ்சத்தக ராஜாக்களில் சில ரும் பீமனையும் அர்ச்சுனனையும் தருமனைவிட்டகலும்படி செய்கிறதாக சபதங்கூறி பொழுது எப்போவிடியும் விடியுமென்று எதிர்பார்த்திருந்த னர். இதுகளைச்சஞ்சயன் திரிதராஷ்டிரனுக்கு அறிவித்துவிட்டுத்திரும்பி ரணக்களத்தில் வந்தான் என்று வைசம்பாயனர் உரைத்தருளினர்.

பதினோராம் போர்ச்சருக்கம்-முற்றிற்று.

பன்னிரண்டாம் போர்ச்சருக்கம்.

விருத்தம்.

பொய்யாததவமுனியின் போயருளித்தாடகைதன்
மெய்யாவி தீரென்ன வஞ்சரத்தால் வீக்கியபின்
மையாரு முகில்வண்ணன் வாங்கியவண் பூங்கமலக்
கையாலு மொருபாசங் காலாலுமொருசாபம்.

கேளும் ஜநமேஜயராஜனே, துரியோதனராஜன் தருமரைக் கைப் பிடியாய் பிடித்துவரப்பண்ணின ஆலோசனையைக் கேள்விப்பட்ட யுதிஷ் டிரர் காலையிலெழுந்தவுடனே, ஸ்ரீகிருஷ்ணரிடத்திலும்சகோதரர்களிடத் திலும் தெரியப்படுத்தி தன்னைப்பாதுகாக்கும்படி எச்சரித்தார். அதைக் குறித்து போர்க்களத்தில்வந்த பாண்டவசேனைகள் தங்கள் படைகளை மண்டலவியூகமாக வகுத்து, பீமசேனனைப் பின்புறத்திலும் நகுலசகா தேவரை இருபுறத்திலும் விஜயனையும் அபிமன்னனையும் முனைமுகத்திலும் நிறுத்தி, தருமராஜனை நடுவில்வைத்து கைப்பிடியாய்ப் பிடிக்கசமர்த்துள் ளவன் வெளிப்படலாமென்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

நேற்றிரவில் சபதங்கூறிய திரிகர்த்தராஜ குலத்தலைவரும் சஞ்சத்த தகாரும் துரோணாசாரியர்முதலிய சேனைகளும் தங்கள்சைநியங்களைமகர வியூகம்போல வகுத்துநின்று, திரிகர்த்ததேசாதிபரும் நாராயண கோபாலரும் அர்ச்சுனனை எதிர்த்து பாணங்களைத் தொடுத்தார்கள். அர்ச்சுனனனவன் சாத்தகி முதலிய தங்கள் படைவீரர்களைக்கொண்டு தருமராஜனைப் பாதுகாக்கும்படி செய்வித்து, இந்த எதிரிகளுக்கு நேர்சென்று பாணவருஷங்களால் அவர்களை அடித்தான்.

அப்போது சைத்திரதன் குண்டலன் சௌபலன் முதலியமுடிமன்னருடன் முப்பதினாயிரம்பேர் அரசருங்கூடி துரோணாசாரியரைத் துணைக்கொண்டு தருமனையெதிர்த்தார்கள். பாஞ்சாலர்களும் பதினாயிரம் படைமன்னரும் சேனாதிபதி திருஷ்டத்தியும்நனும் தருமருக்குத் துணைப்பட்டுச் சண்டைசெய்யும்போது, துரோணர் கோபங்கொண்டு பாணப்பிரயோகஞ் செய்ததினால் அநேகராஜவீரர்கள் மாண்டார்கள். திருஷ்டத்தியும்நனால் துன்முகனும் காந்தாரரும், கலிங்கரும், கோசலரும், நிடதர் முதலிய தேசமன்னவர்களும் களைத்து இளைத்தோடினார்கள். துரியோதனனுடைய சேனைகள் மிகவும்நொந்து துரோணாசாரியரிடத்தில் முறையிட்டபோது, அவர் சினங்கொண்டு திருஷ்டத்தியும்நன்வில்லைப் பிளந்து, ஒருபெருங்கணையால் தருமராஜன்வில்லையும் முறித்து சிகண்டியின்தேரை அழித்து உத்தமோசன் உதாரமன்னன் முதலிய வெற்றிவேந்தரைப் புறமுதுகிட்டோட அடித்து, நகுலசகாதேவருடைய நாணை அறுத்துவிட்டு, பாண்டியராஜனை ஒண்டியாக்கி, பாஞ்சாலரை ஓடும்படி பறக்கடித்து தேரேறி யெதிர்த்துவந்த வியாக்கிரதுண்டனையும் அவனுள்ளிட்டாரையும் அநேகமாயிரம் அரசர்களையும் மாய்த்துவருங்காலையில், ஆண்மையிற்சிறந்த சோழராஜன் துரோணரை எதிர்த்து அவரால்விடப்பட்டபாணங்களை சகியாமல், காற்றிற்பறக்கும் பஞ்சுபோல் பின்னிடைந் தோடினான்.

அவ்வேளையில் மச்சதேசாதிபன் எதிர்த்து லச்சைகெட்டு வாடியோடினான். கடோற்கசன் பிள்ளையாகிய அஞ்சனபதுமன் அலைக்கழிந்து அகன்றான். இவ்விதமாய் துரோணரால் எண்ணிறந்தபேர் மாண்டுபோவதை தருமராஜன்கண்டு, வில்லாசிரியரையெதிர்த்து அளவில்லாதபாணங்களைத்தொடுத்து ஒருவரோடொருவர் சளையாமல் யுத்தமிட்டதுமன்றி இருதிறப்படைகளையும் அத்தியந்தம் கணக்கில்லாதபடிகொன்று குவித்தார்கள். தேர்க்காரர் தேர்க்காரரையும், குதிரைவீரர் குதிரைவீரரையும், காலாள்கள் காலாள்களையும், அணியினம் அணியினமாக எதிர்த்து அவரவர் பக்கத்தில் அநர்த்தமாய் மாய்ந்தனர்.

இரண்டுமகாவீரராகிய தருமருந் துரோணரும் மேலுமேலும் இளக்கரியாமல் மும்மரித்து ஒருவர் உடலம் ஒருவராலுருவும்படியாகவும்இந்த யுத்தம் போதும் போதும்என்று கண்டவர் நடுநடுங்கும்படியாகவும் சண்டைநடத்தும்போது, ஆசாரியரினுடைய மறைக்கொடியை மளுக்கென்றொடித்து நாலுகுதிரைகளையும் கண்டதுண்டமாடி சாரதிதலையைவெட்டி

ரதத்தையுந்தகர்த்து நாணையும் வில்லையும் அறுத்து முறித்து, அதினல் வெதும்பிநிற்குங் குருவானவரைப்பார்த்து, நீர்பிராமணகுல சிரேஷ்டர், மெத்தவும் இளைத்திருப்பதால் இனிஉமதுபேரில் வேறுபாணமுந்தொடுக்கமாட்டேன், ஐய்யப்படாமல்போய் இளைப்பாறிவாருமென்று தருமர் சொல்லவே, குருவானவர் தேறிக்கொண்டு மறுபடியும் எதிர்த்தார். சைத்திரதன் விட்ட பாணங்களால் உதிரப்பிரவாகமாகி மனமுறிந்து துரோணர் பின்னிடைந்தனர்.

அபஜயப்பட்ட ஆசாரியபுருஷர் மறுபடியு மனந்தேறிப் படைதிரட்டி தருமனை யெதிர்த்து வரும்போது இதைப்பார்த்த அபிமந்யு முதலாகிய சிறுவீரர்கள் முகம்வெயர்த்து, மச்சதேசாதிபரையும் திருஷ்டத்தியும்நனையும் குந்திபோசனையும் சேர்த்துக்கொண்டு துரோணரை வந்து வளைத்தார்கள். துரியோதனன் படையில் கர்ணராஜன், சகுனி, சௌபலன் கலிங்கன், துரியோதனன், அவன்தம்பிமார் இத்தியாதியர் பெரும் படைதிரண்டு ஆசாரியருக்குத் துணைநின்றார்கள்.

பாண்டவாள் பட்சத்தில் நகுலசகாதேவர்கள் தருமருக்குப் பின்பலமாக நின்று இருபடைகளும் ஒரேதிரளாய் ஏகோபித்து நெடுநேரம் கைகலந்து யுத்தமிட்டு, இதினல் பயங்கரமாய் மாண்டசதுரங்க மகாபலங்கள் எண்ணத்தொலையாது. ஆசாரியர் எதிர்த்து நிற்க மாட்டாமையைப்பற்றி தருமராசனுடைய படைமன்னர்கள் கேலியாய் நகைத்துப் பரிகாசித்தார்கள். பின்னடையும் ஆசாரியரை கடோற்கசனும் அபிமந்யுவும் மேலுமேலும் நோகச்செய்தனர். இதினல் பயந்து அரவக்கொடியோன் பக்கத்தில் ஓடிச்சேர்ந்தார்.

இச்சமயத்தில் கிருபாசாரியர் துரோணசாரியருடன்கூடி மறுபடியும் பெரும்படை திரட்டித் தருமனைவந்தெதிர்த்துச் சண்டை செய்து அவரை வெல்லக்கூடாமல் தளர்வடைந்து அரவக்கொடியோனிடம் திரும்பிப்போய் சேர்ந்தார்கள். அதிஷ்டங்கெட்ட சுயோதனன் முன்பின் யோசியாமல் இவ்வளவுதானு உங்கள் தயிரியமென்று சினந்து செத்தவர் போக இன்னும் இருப்போரைக்கூட்டி மறுபடியும் போருக்கு முடுக்கிவிட்டு தானும் படையில் முனைமுகமாய்ச் சென்று சேனைகளை அநேக முகங்களாய் வகுத்துவிட்டு எதிரிகள்பேரில் முனையுங்காலத்தில், அபிமந்யுவானவன் தான் ஒருவனே அசகாயசூரனுய்நின்று, எதிரிபடைகளை உயிர் போகும்படி அடித்துவந்தான்.

திரும்பிவந்த துரோணர் தேரழிந்து நிலத்தில் நின்று தவிக்கும் போது கோடாகோடித் தேராளிகள் ஆசாரியர்பால் துணைசேர்ந்ததினல் அவர் மறுபடியும் தருமராஜன்பேரில் எதிர்த்தார். அப்போது அபிமந்யுவானவன் வெகுண்டு துரோணரையும் வேந்தரையும் சேனைகளையும் மார் பொடிய அடித்து மாட்டியகாலையில், ஆசாரியர் சேனைகள் பின்னடைந்தார்கள். இதைப்பார்த்த பகதத்தன் அபிமந்யுவை எதிர்த்து யுத்தஞ் செய்து களைத்தோடினன். நாகக்கொடியோனும் தம்பிமாரும் தேசமன்

னவரும் அபிமந்யுவை எதிர்த்தபோது, பீமசேனன் வந்துமுனைந்து பகதத்தனை முன்னுக்கிழுத்துப் பின்னுக்குத்தள்ளி தண்டாயுதத்தால் மாட்டி பகதத்தன் ஏறிவந்த யானையை நொறுக்கியபோது, பகதத்தன் ரதமேறி பீமசேனன்பேரில் அஸ்திரங்களைப் பிரயோகித்தான். பீமராசனும் சளையாமல் பகழிகளைவிடுத்து ஒருவரால் ஒருவர் அடிபட்டுப்போராடினார்கள்.

பகதத்தன் ஏறிவந்தயானையானது செய்தபோரைச் சொல்லுகிறேன் கேளும் ராசாதிராஜனே, அந்த யானைக்கு சுப்பிரதீபம் என்று பெயர். அதன் மகாபலத்தைச் சொல்லவேணுமானால், திக்குயானைகள் எட்டும் பயந்து நடுங்கி பதுங்கும்படியாகும், இவ்வித பலமுடைய யானையானது இருப்புலக்கையைத் தூக்கிக்கொண்டு அவ்விடத்தில் எதிர்த்து வந்த யானைக்கூட்டங்களையும், குதிரைக்கூட்டங்களையும் வீரர்களையும் அல்ப்ப காலத்துக்குள்ளே கொன்று குவித்தது.

களைத்துப்போன பாண்டவர்களில் தருமராஜனானவர், பக்தவற்சலனை சிந்தையில் நினைத்து ஸ்துதிசெய்தார், தருமராஜனைக் கைப்பிடியாய்ப் பிடிப்போமென்று சபதஞ்செய்த சஞ்சத்தகரர் முதலிய திரிகர்த்தரையும் நாராயண கோபாலரையும் அர்ச்சுனன் வேறொருமூலையில் சண்டையிட்டு அவர்கள் பாரிசத்தாரை வெகுவாய் மாய்க்கவே, அவர்கள் களைத்து அநேகர் இறக்கவும் புறமுதுகிட்டோடவுமானார்கள்.

இப்படிக்கு அர்ச்சுனன் கையிலிருந்து புறப்படும் இந்திராஸ்திரம் வருணாஸ்திரம் வாயுவாஸ்திரம் குபேராஸ்திரங்கள் எதிரிகள் எங்கேயென்று இரைச்சலிட்டுக்கொண்டு போகும்படியாகிய பாணங்களால் எட்டுத்திக்கும் மறையும்படி பொழிந்து வராநின்ற நரனுடைய முகத்தைப் பார்த்து, அவன் கொண்டிருக்கும் மனக்களிப்பை கண்ணன் அறிந்துகொண்டு, விஜயனே நாம் நெடுந்தூரம் வந்துவிட்டோம், அவ்விடத்தில் பகதத்தனானவன் தர்மராஜனை வளைத்துக்கொண்டு கொடியயுத்தம் செய்கிறான்போலிருக்கிறது, இவ்விடத்தில் சஞ்சத்தகர்களில் பதினாலாயிரம் வெண்கலரதக்காரரும், திரிகர்த்தனுடைய சேனைகளும் இறக்கும்படியாய் யுத்தம் செய்ததினால், பகைவர்பலம் குறைந்தது, இனி உன் தமயனுக்குத் துணைபோகவேணுமென்று, விரைவில் தேரைச்செலுத்தி வரும்போது தங்கள் வருகையை யுதிஷ்டிரர் தெரிந்துகொள்ளும் பொருட்டு சங்கத்தொனிசெய்து, பகதத்தனைவந்து வளைத்துக்கொண்டார்கள்.

களத்தில் பின்வாங்கிய பாண்டவர்சேனைகள் விஜயனைக்கண்டமாத்திரந் திடங்கொண்டு அவனுக்குப் பக்கபலமாகநின்று முனைந்தார்கள். அப்போது அர்ச்சுனன் பகதத்தனுடன் எதிர்த்து அவன்விட்ட பகழிகளைச் சிதைத்து அவனை உபத்திரவித்தவேளையில், அதைப் பொறுக்கமாட்டாமல், தேவேந்திரனால் பூர்வத்தில் இவன் அவனுக்குச்செய்த சகாயத்தினிமித்தியம் பெற்றிருந்த உக்கிராக்கினியென்ற வேலாயுதத்தை யெடுத்து அர்ச்சுனன்மீது பிரயோகித்தான். அதைப்பார்த்த கோபாலகிருஷ்ணர் தான்பிடித்திருந்த கடிவாளத்தைக் கோலுடனெறிந்துபோட்டு, நிராயுத

ராக எழுந்துநின்று அந்த வேலாயுதத்தைத் தன் வக்ஷஸ்தானத்தில் தாங்கிக்கொண்டனர். அந்த வேலாயுதமானது கண்ணன் மார்பிற் பட்டவுடனே புஷ்பமாலையைப்போற் பிரகாசித்தது. அர்ச்சுனன் உடல்பதறி பகதத்தன் என்பேரில் விடுத்த வேலாயுதத்தை நீர் எப்படி தடுப்பீர், நான் அவ்வளவு கையாலாகாதவனா, நாலுபேரும் என்னை நகைக்கும்படி செய்தீரேயென்று கோபித்தெழுந்த காலையில், கருணைமேகம்போன்ற நெடுமாலானவர் காண்டீபனைப்பார்த்து இந்த உக்கிர வேலாயுதம் யுத்தஞ்செய்யுஞ் சத்ருருவின்மேல் பிரயோகிக்கப்பட்டால் எப்பேர்ப்பட்டவனையும், அவன் பிராணனை வாங்காமல் தப்பிப்போகாது; இதை தேவேந்திரன் பகதத்தனுக்குக் கொடுக்கும்போது, நிராயுதன்பேரில் விடுவையாகில மலர்ந்த புஷ்பம்போற் குளிர்ந்திருக்கும் என்று வரங்கொடுத்திருக்கிறார். அந்த உளவையறிந்தவன் நானாகையால், அதைத் தாங்கினேன். இந்த பூமியுள்ள வரையிலும் உன்புகழுக்கும் கீர்த்திக்கும் குறைவில்லை, எதிரி பகதத்தனைக்கொல்ல இது நல்லசமயமென்று ஒரு துரும்பை யெடுத்து இதை உக்குக்கணையென்று நினைத்துவிடு என்று ஆசீர்வதித்துக் கொடுத்தார். அதை நன்றி வந்தனத்தோடு ஒப்புக்கொண்ட விஜயன் உடனேபகதத்தன்மீது பிரயோகித்தான். வெளிப்பட்ட அந்தஅஸ்திரமானது பகதத்தனுடைய தளங்களையும், அவன் ஏறிவந்த சுப்பிரதீபகஜத்தையும் அவனையும் மாய்த்துவிட்டது. பகதத்தன் இறந்தத்தினாலே சுயோதனன் படைகள் பின்னிடைந்தோட ஆரம்பித்ததை, சகுனிபார்த்து அர்ச்சுனன் மீது எதிர்த்தான். சகுனியின் பிள்ளைகளாகிய விடன்,சேயன்,என்னு மிருவரும் கோடிபாணங்களைவிட்டார்கள். விஜயன் நகைத்து அவ்விருவருடைய பாணங்களையும்சிதைத்து அவர்களையும் யமபுரிக் கேளப்பண்ணினான். சகுனியானவன் விஜயன்மீது சிலகணைகளைத்தொடுத்தபோது, அவைகளைக்கொய்து, சகுனியின் வீரப்பட்டத்தை முறித்து அவன்தேகமுழுதும்ரத்ததாரையாகும்படி பாணங்களால்தாக்கினான். இதனால் வெட்கிக்காலெழாமல் நிற்கின்றசகுனியைக் காண்டீபன் நோக்கி, அடாமாமா, ஏன் இப்படி நொந்தாய் போருக்கேன்வந்தாய் இது ரணக்களம், சூதாடரங்கமல்லவே, இன்றைக்கே உன்னைமுடிக்கவேண்டியதாயிருந்தும், உன்னைவைத்துக்கொண்டுஎல்லாமன்னவரையும்கொல்லவேண்டியிருக்கிறபடியால்,உன்னுயிரை மன்னித்தேன் என்ற அர்ச்சுனன் சொல்லைக்கேட்ட, சகுனியானவன் வேறொருரதமேறி தருமாசன்மீதெதிர்த்தான். அவர் இவன் மீது விட்ட கணைகளால் நொந்திளைத்து அவருடன் ஊடுதாளி நிற்கமாட்டாமல் அவரவர் பாடிவீடுபுக்கனர்.

மற்றொரு பக்கத்தில் துரோணாசாரியரும் அசுவத்தாமனும் கர்ணனும் துரியோதனனும் துச்சாதனன் முதலிய தம்பிமார்களுஞ் சேர்ந்து பீமசேனனுடன் சண்டையிட்டார்கள். பீமசேனன் தன்முழு வல்லமையையும் பாணப்பிரயோகங்களினால் அவர்களுக்குக் காண்பித்து அவர்களை நோகச்செய்து, துரியோதனனை மடக்கிக்கொண்டு பாதாதிகேச பரியந்

தம் துவளையிட்டுத் துளையிடுவதுபோல் துடிதுடிக்கக்காய்ச்சி அவன் மனமுங் கொதிகொதிக்கப் பண்ணினன். சுயோதனன் களைத்து நிற்பதை தம்பிமார்கள்கண்டு பீமனை வளைத்துக்கொண்டு உபத்திரவித்தார்கள். இவர்கள் எல்லாரையும் பாணங்களினல் அடித்துவெதுப்பி கொல்லாமற்கொன்றதுபோலாக்கினன். இதினல் இவர்கள் பயந்து அமர்க்களத்தைவிட்டகன்று புறமுதுகிட்டோடவே, தளக்கர்த்தனகிய துரோணரும் பின்னிடைந்தார். இருபடைகளுந் தங்கள் தங்கள் பாசறைபோய் சேர்ந்தார்கள்.

பாசறைபுகுந்த சுயோதனன் துரோணுசாரியர் பின்னிடைந்தோடி வந்ததைக் குறித்து மிகவும் இகழ்ச்சியாக தூஷணித்தபோது கர்ணன் கலீரென்றுநகைத்து தருமனைக் கைப்பிடியாய்ப்பிடித்துத்தருகிறேனென்ற வாக்கை, இன்று நிறைவேத்தினீரோ துரோணரே என்று உள்ளங்களித்தான். துரோணுசாரியர் சிந்தைவருந்தி கர்ணு நீ க்ஷத்திரியன்தான், நீ வெற்றிபெற்றது வேணதுண்டு, அஃதிருக்கட்டும், எப்படிப்பட்ட வீரனுகிலும் தருமனுக்கெதிர் நின்று சண்டை கொடுத்து கொற்றம் பெறத்தக்கபேர் இச்சமுத்திரஞ்சூழ்ந்த பூமியில் உளரோ, துரியோதன மகாராஜனே, இப்போது ஒன்றும் முழுகிப்போகவில்லை. நாளை யுத்தத்தில் உனக்கு உரியவர்களை ஏவிவிட்டு அவர்கள் வல்லாண்மையினல் தருமனைப் பிடித்துவரச் செய்யும், அப்படி செயம்பெற்ருலொழியத் திரும்பிவராத வீரரைத்தேடியனுப்பும். நான் பட்சபாதமாய் நடத்தினேனென்று நீ சொல்வது உனக்கு அழகல்ல, நான் தர்மராஜனை கைப்பிடியாய்ப் பிடித்துப் போடுகிறேனென்று வாக்குக் கொடுக்கவுமில்லை. நான் அவருடன் போர்புரிகையில் அவர்விட்ட அஸ்திரங்கள் கொத்துக்கொத்தாகவும் கும்பல் கும்பலாகவும் நான்விட்ட பாணங்களைக் கவ்வித் தறிபட்டுவிழும்படி பிரயோகித்தாரே. இன்றையதினம் என்னுடன் யுத்தஞ்செய்து சாதித்ததிறத்தை நான் என்னென்று கூறுவேன், சொன்னல் துக்கம் அழுதால் வெட்கமென்னுந் தன்மைபற்றி பேசாமலிருக்கிறேன். ஆகிலும் ஒருவாக்கியங்கேள், நான்விட்ட பாணங்களெல்லாம் ஒவ்வொரு விதைவிதைத்தாப்போல் இருந்தது. அந்த தருமசொரூபி விடப்பட்ட பாணங்களானவை, ஒருவிதைக்கு ஒருமுதல் முளைத்துப் பலபலவாகக் கிளைத்து ஒண்ணுக்குப் பதினயிரமென்பதுபோல அபரிமிதமாகப் பெருகிவளர்ந்தன. நகுலன், பீமன், அர்ச்சுனன், இவர்களுக்கு நிகராகியபேர் இவ்வுலகத்தில் இல்லையென்றுஎல்லாஅரசரும் சொல்லுவார்கள். ஆயினும் அவர்கள்திறமைக்கு ஈடாகஇன்னஞ்சிலரைச்சொல்லலாம்; ஆனல்பொறுமைக்கடலாகிய தருமராஜனது நன்னெறிநிலைக்குரியபேரை ஈட்டுக்கீடாக யோசிக்குமிடத்தில் எங்கும் அகப்படார்கள். இப்போது வீண்வாதம் பேசுவதில் காரியமில்லை. உலகங்குலையப் போர்புரியும் யுதிஷ்டிரனுடன் எதிர்த்து யுத்தம் பண்ணும்பேர்கள் உளராயிருப்பாராகில் அப்படிப்பட்டவர்களை நாளையுத்தத்தில் நான் பார்க்கவேணும். வஞ்சனையில்லாமல் புறப்படுங்கள் என்று பேசிக்கொண்டே பாசறைக்குட்புக்கனர். மற்றவர்

கள் விடைபெற்றுத் தத்தம் பாடிசென்றனர்கள் என்று சஞ்சயன் திரித ராஷ்டிர பூபதிக்குச்சொல்லித் திரும்பினன் இராவுங்கழிந்து சூரியன் இந் திரதிசையில் எழுந்தான்.

பன்னிரண்டாம்போர்ச்சருக்கம்-முற்றிற்று.

பதின்மூன்றும்போர்ச்சருக்கம்.

விருத்தம்.

சங்கையிலாவகை யம்படராலுமுயிர் தளர்பொழு தத்தருகே
மங்கையர்சூழ விருந்தமுதுள்ள மயக்கினும் யான்மறவேன்
கங்கையுநான்மறை யுந்துளவுங்கமழ் கழலிணை யுந்திருமால்
அங்கையின் மீதொளிர் சங்கமுநேமியு மஞ்சன மேனியுமே.

பரிமிசையழகிய பூபதியேகேளும், இராத்திரிமுழுதும் நித்திரையில் லாதிருந்த துரியோதனராசனும் விற்குருவானவரும் மற்றமற்ற படைத் துணைவரும் விடிந்தெழுந்தபின்னர், ஆயுதபாணிகளாகி அமர்க்களத்து வந்துநிறைந்தபிறகு, துரோணுசாரியர் பதுமவியூகங்கட்டி கர்ணன்,அலம் பன், சல்லியன், அசுவத்தாமன், அடலாயிரவாகு, அகம்பன், முதலிய பேரை தாமரைப்புஷ்பத்துக்கு நடுவிலிருக்குங்கருணிகையாக அமைத்து பலதேசத்துமன்னர்களையும் கிருபாசாரியரையும் கருணியை சுற்றியிருக் கும் அகவிதவிதழாய் நிறுத்திப் போரில்வல்ல சதாயு, நைதாயு முதலிய மகாரதர்களைப் புறத்திற் புறவிதழாக இருத்தி, இதழ் இதழுக்குமுன்பாக யானையொருவரிசை தேர்ஒருவரிசை குதிரை ஒருவரிசை பதாதி ஒருவரி சை இந்தப்படி நாலுவகைச்சேனைகளை அமைத்து, நடுமத்தியில் துரியோ தனனைநிறுத்தி அந்த வியூகத்தைச் சுற்றிலும் சூகிகாவியூகமொன்று ஏற் படுத்தி அந்த வியூகத்துக்கு நால்வகைச் சேனைகளையும் ஊசிக்கொப்பாக நிறுத்தி, அதைச்சுற்றிலும் மதிற்சுவர்போல் விருத்தமாய் சக்கரவட்ட வியூகமுஞ்செய்து ஜெயம் ஜெயமென்று முனைமுகத்தில் ரதமேறி நின்றார் கள். இங்கேபாண்டவர்பால்,காலையேயெழுந்து காலைக்கடன்களைமுடித்து தர்மராசனுனவர் கிருஷ்ணனையுந் தனஞ்செயனையும் பார்த்து இராத்திரி எதிரிபாசறையில் கூடியமன்னர் சபையில் என்னைக்கைப்பிடியாய் துரோ ணர் பிடித்துவர இல்லையென்று துரியோதனன் நிஷ்டூரப்பட்டிருக்கிறு னும், தூதரால்கேள்விப்படுகிறேன். நீங்கள் சாக்கிரதையாயிருக்கவேணு மென்று எச்சரிக்க, சேனதிபதி திருஷ்டத்தியும்நன் தங்கள் சேனைகளைக் கூட்டிக்கொண்டு போர்க்களம்வந்து படைகளை மகரவியூகமாக வகுத்து போர்முனையில் வந்தெதிர்த்து முனைந்தான். அப்போது சஞ்சத்தகரர் அர்ச்சுனனைவளைத்துச் சண்டையிட்டார்கள். அர்ச்சுனன் அவர்கள்மீது வாயுக்கணை, வாரிக்கணை, முதலிய கணைகளைக் கார்வருஷம்போல் உதிர் த்து அவர்களில் அநேகமாயிரவரைப் பிராணனைப்போக்கி, அநேகரை

தேகத்தைத் தொளைத்து ரத்தவெள்ளமாக்கி அநேகமாயிரவரை பூமியில் குப்புறவீழ்த்து மூன்றுயோசனை தூரத்துக்கப்பால் வரையிலும் சண்டையிட்டுக்கொண்டிருந்தான். முனைமுகத்து நின்ற திருஷ்டத்தியும்நன், துரோணரை எதிர்த்து யுத்தஞ்செய்து அவர்விட்ட கணைகளுக்கெதிர் தாளமாட்டாமல் தளர்ந்து பின்னிட்டோடிவருஞ் சேனாதிபதியை, தருமராஜன் ஓடாதேயென்று கையமர்த்தி முனைமுகத்துக்கதிகாரியாகிய நீயே பின்னிட்டோடினால், பின்னை யார்நின்று யுத்தம்புரிவார்கள். ஐயோ பாவம், நீ மெத்தவும் போர்புரிந்து இளைத்தாப்போலிருக்குது, சற்றுவேளை இவண் இருந்து சிரமம் நீங்கக்கடவையென்று உபசரித்து அவனை நிறுத்திவிட்டு, எதிரில் நின்ற பிரகாசம்பொருந்திய அபிமந்யுவை அழைத்து உச்சிமுகந்து நீ ஒருவன் முனைந்து போர்புரிந்தாலொழிய துரோணாசாரியர் கட்டியிருக்கும் மூன்று வியூகமும் குலையமாட்டாது. உன் தந்தை முதல் நாங்கள் யாவரும் களித்துப்புகழும்படி யுத்தத்திற்கேகுவாய், உனக்கு உபபலமாக பீமசேனனையும் அழைத்துக்கொள்ளென்ன, இவ்வசனத்தை அமுதம்போல சந்தோஷித்து உள்கொண்டு பெரியதந்தையை வணங்கியபோது, நீ முன்னேநட பீமன் துணையாக வருவான், இதோ நானும் பின்னோடே வருகிறேன், நீ எதிரிகளை வீரலக்ஷ்மியின் அருளால் விஜயத்துடன் வெல்கவென்று வாழ்த்தினாரேயன்றி, திரும்பிவரக் கடவையென்கிற வாக்கியத்தை திவினைவசத்தாற் சொல்லாமற்போயினார்.

பீமசேனன் துணைவருவானென்று கூறிய வாக்கியம் இளைஞனுக்குப் பிரியப்படாமல் சற்றுநேரம் நிதானித்து சூரசங்காரக்கடவுள்போல் ஆக்கிரமித்துநின்ற மைந்தனை தருமபூபதி பார்த்து, ஒகோ நாம்சொன்ன உத்தரம் அபிமந்யு மனதை வருத்திற்றுபோற் காணுகிறது, உச்சாகந்தப்பி யுத்தத்துக்குப் போகலாகாதென்று, உடனே பலவித நன்மைகளைப் பகர்ந்து, பகைவரை வெல்லும் வில்திறமைகளையும் போதித்து வெற்றிமாலையைப் புத்திரன் கழுத்தில் போட்டு விடைகொடுத்தார். அபிமந்யு ஆயுதபாணியாகி ரதமேறி நிற்கையில் அவன் சாரதியாகிய சுமித்திரன் பணிந்து ஒரு வசனங் கூறுகின்றான். ராசனே! துரோணாசாரியர் அசுவத்தாமன் முதலிய வீரர்களை உமது தகப்பன் வென்று வருவார். அப்பேர்ப்பட்டவர்களை நீர் ஒண்டியாய் நின்று வெல்வது பிரயாசையென்று பல தன்மைகளையு மெடுத்துக்காட்டினான். இதைக்கேட்ட அபிமந்யு புன்னகைகொண்டு தன்வீரப்பிரதாபங்களையும் வின்மைகளையும் எடுத்துக்கூறவே சாரதி கேட்டு மகிழ்ந்து தேரைச்செலுத்தினான்.

துருபததேசக் கூட்டத்தாரும் இன்னும் பலமன்னரும் இருபக்கத்திலுஞ் சூழ்ந்துவர அபிமந்யுவானவன் எதிரிபடையிற்புகுந்து சனங்களை கால்மாடு தலைமாடாக மாய்த்துவரும்போது, துரோணர் இவனுடைய பாணத்தினால் நொந்து அவர்களும் அநேகபாணங்களை இவன்மீது விடவே, அதுகளை இவன் நிர்மூலமாக்கி மூர்த்தந்நியத்துடன் நின்றான். சே

ளும் ஜனமேஜய ராசனே! கிரீடி புத்திரன் அபிமன்னன்செய்த சண்டையின் மகத்துவமானது பூர்வகாலத்தில் ஸ்ரீராமர்முதல் அநேக சங்கிராம வீரர்கள்செய்த யுத்தங்களுக்கெல்லாம் மேலாயிருந்தது. இப்படி நடத்தி வரும் அபிமன்னனனவன் எதிரி வியூகங்களை உடைத்து உட்புகுந்து க்ஷீராப்தியைக் கடைந்தாற்போல, தனது ரதத்தைக் கும்பின் மத்தியிற் சுழட்டி பாணங்களினால் நால்வகைச்சேனைகளையும் அதமாக்கி வருங்கால், கர்ணனும், கிருபாசாரியும், அசுவத்தாமனும், கிருதவன்மனும், பூரிசிரவனும், சோமதத்தனும், தம்பிமாரும், துரியோதனனுக்குத் துணைநின்று அபிமந்யுவை யெதிர்த்து பாணவருஷங்களை அவன்மீது பொழிந்தார்கள், அவர்கள்விட்ட பாணங்கள் கற்பாறைமீது பட்டுத் தெறிபட்டதுபோல் அபிமன்னன் உடம்பில் அழுந்தாமற்போச்சுது. எதினாலென்றால், சாரதி சாமார்த்தியத்தினாலும், அபிமன்னன் வில்திறமையின் லாகவங்களாலும் என்றறிக. இந்தஅபிமன்னன் ஒருவன்பேரில் அநேகங்கோடி அரசரும் படைகளும் எதிர்த்து யுத்தஞ்செய்யமாட்டாமல் ஒட்டமெடுத்தார்கள். இந்தஅலங்கோலத்தை துரோணர்கண்டு அபிமந்யுமேல் தேவதாஸ்திரங் களைப் பிரயோகித்தார். அதுகளை அபிமந்யு நிமிஷத்திற் போக்கிவிட்டு தீக்கணையெடுத்து, துரோணர்பேரில்கன்மாரிபோல் பொழிந்தான். அவர் மிகவும் தளர்ந்து, தந்தையும் பிள்ளையும் இந்த வேலைக்கென்று வந்தார்களோ வென்று ஓடுகிறபேர்களுக்கு முந்தியே ஓடினார்.

அசுவத்தாமன் அபிமந்யுவை யெதிர்த்து மேகத்திலிருந்தெழும்பும் மின்னலுக்கொப்பாகிய பாணங்களை வடித்தான். அபிமந்யு தன் எதிர் பாணங்களினால் அவைகளை அதமாக்கினபோது அசுவத்தாமனும் பின்னடைந்தான். கிருபாசாரியரும் கிருதபன்மனும் அதுகாலையில் அபிமந்யுவை வளைத்துக்கொண்டு பனித்தூறலைப்போல் பகழிகளேவி அமரிட்டார்கள். ஒப்பற்ற அபிமன்னன் அவரவர்விட்ட கணைகளுக்கு மறுகணை விட்டு அவர்களுடைய தேர் குதிரைகள் அழியும்படிசெய்து அவர்களை ஒட்டிவிட்டான். மாமன் சகுனியும் அவன் புத்திரன் உலூகனும் இன்னுமுள்ள காந்தாரதேசத்தலைவர்களும் நால்வகைச் சேனைகளுங்கூடி அபிமந்யுவை எதிர்த்தார்கள். சகுனிமகன் உலூகனை ஒரேபாணத்தினால் ஆகாயத்திற் கேற்றினான். அவன் இறந்ததற்கு சகுனிவியாகுலித்து அபிமந்யு பேரில் சரமாரிபொழிந்தான், அவர்கள் யாவரும் எதிர் நிற்கமாட்டாமல் அடிபட்டு ஓடும்படி அபிமந்யுசெய்தான். சேனாதிபதி துரோணர் கிருபர் இருவரும், யாவருங் கேட்கும்படி துரியோதனனைப்பார்த்து யாதுதுணையுமின்றி ஒருவில்லும் ஒரு தேருமாகவந்து பலபேரும் படைகளுங்கூடிய வீரர்கள் எல்லோரும் திடுக்கிடும்படிசெய்து, நடுக்கமில்லாமல் திரியும் அர்ச்சுனகுமாரனைக் குமாரசுவாமியென்று சொல்லலாமோ அல்லதுமுருகந்தனென்று பேரிட்டழைக்கலாமோ, எங்களுக்கொன்றுந் தோன்றவில்லை இவன் ஒருவன்செய்யும் யுத்தத்துக்கே நாம் சகிக்கக்கூடாதிருக்க இவன் தந்தையரும் அவர்கள் சகோதராளும் வந்து கூடினால் யாவர் எதிர் நிற்

பார் என்ற வசனத்தை துரியோதனன்கேட்டு கோபமடைந்து, விற்குருவைநோக்கி, ஐயரே, ஒருமசகம்போலொத்த சிறியனை ஒரேபாணத்தினுற் கொல்லாமல், அவனை ஒருவீரனென்றும் அதிரதவீரருடன் சமானப்படுத்திப் பேசியது உம்மைப்போலொத்த உத்தமருக்குத் தகாதென்று நகைத்து மறுபடியுஞ்சொல்லுகிறுன். இப்போ நமது வியூகமத்தியில்வந்து நிற்குஞ் சிறுவனைப்பார்த்து வீரராகிய நீங்கள் பயந்து மயங்காதீர்கள். பெருங்கடல்போற் பொங்கியெழுந்து அவனை ஒருவிநாடியில் அதமாக்குங்கள் என்ன, துச்சாதனன் முதலிய தம்பிமார் அவனை ஒரு நிமிஷத்திற் கொல்லுகிறதாய் வீரியம்பேசி எதிர்த்தார்கள், துச்சாதனன் தொடுத்த பாணங்களை இரண்டிரண்டாய்த் துண்டித்து அவன் கைவில்லைத்தறித்து அவன் சடலத்தில் ஆயிரம்பாணங்களுருவும்படி யடித்தான். அது சகியாமல் மூர்ச்சித்த துச்சாதனனை அபிமந்யுபார்த்து, அப்பா சித்தப்பா, தர்மராசனை ராசசபையில் மனம்வருந்தச் செய்தாயே; உன் உயிரை இப்போதே யமபுரம்போக்க யத்தனித்தேன். என் பெரியதந்தையின் சபதத்திற்குப் பழுதுவருமென்றெண்ணி உன்னை உயிருடன் விட்டேன் ஓடிப்பிழையென்றுன். துச்சாதனன் வருந்தி வந்ததை அறிந்த சுயோதனன் வெட்கித் துக்கித்தபோது, கர்னன் அபிமந்யுவை எதிர்த்து நூறுநூறு பகழிகளால் அடிக்க அடிக்க, அதுகளை அபிமந்யு தடுத்து எதிர்பாணம் பிரயோகித்து கர்னனைத் தேர்மீது வீழ்த்தினுன். இதைப்பற்றி கர்னனையெடுத்து வளர்த்த ராதையின் சொந்தப்புத்திரர்களில் மூத்தவனுகிய ராதன் என்பவன் அபிமந்யுபேரில் எதிர்த்து சண்டைசெய்தான். அவனுடன்கூட துரியோதனனும் அவனுக்கிசைந்த கர்னனுஞ்சேர்ந்து சண்டைசெய்து பின்னடைந்தார்கள். அப்போது அப்பா கர்ண அறியாதபையன் அபிமந்யுவை வெல்லக்கூடாமல் அவனுல் அடிபட்டு இளைத்தோடுதல் உங்களுக்குத்தகுமோ, மானிகளே சத்திரியகுலத்திற் பிறந்த நீங்கள் ஓடலாமோவென்று துரோணர் கர்னனைப் பின்தொடரும்போது, அவரைத் திரும்பிப்பார்க்க வெட்கி மேலும் ஓட்டம்பிடித்தார்கள். தம்பிபுத்திரன் அபிமந்யு ஏகாங்கியாய் யுத்தஞ் செய்கிறுனேயென்று அறிந்த பீமசேனன் தருமரைப்பணிந்து, சதுரங்கபலங்கள் மொய்த்த சமரில் சிறுவனை ஒண்டியாய் சமர் செய்யும்படி விட்டது சரியோ, மகாபாபம் என்று, தண்டாயுதங் கைக்கொண்டு, வியூகமத்தியில் வந்துபுகுந்து அநேகர் அநேகராக மாய்த்தான். இவனுலிறந்த படைகளுக்குக் கணக்கில்லை.

இதைப்பற்றி துரியோதனன் விகர்னனையும் அசுவத்தாமனையும் பீமராசன்மீதேவினுன். அவர்களிருவரும் விடப்பட்ட பாணங்களைச்சிதைத்து அவாள் சேனைகளை அதமாக்கி, அவர்களையும் அடித்தோட்டினுன். பீமனும் அபிமன்னனும் ஏகோபித்து நிற்கும்போது நாம் எதிர்த்து நிற்க முடியாது, இருவரையும் வேறுவேறுக்கி தூரப்படுத்தினுல் மாத்திரம் நலமுண்டாகுமென்று துரியோதனன்கூற, சைத்திரதன் அபிமந்யுவைக் கொல்லுவதாகச் சொல்லிச் சிலசேனைகளுடன் அவனை வளைத்துக்கொண்

டான். அவ்வேளையில் தருமராசன் சதுரங்கபலங்களுடன்கூட வந்து எதிர்த்தார். சிந்துதேசாதிபன் இவர்கள்மீது நாகாஸ்திரப் பிரயோகம் பண்ணினான். அபஜெயமென்று இந்நேரம் வரையில் அறியாதபாண்டவ வீரர்கள் பயந்து வேசாறினார்கள். நாகாஸ்திரத்துக்குக் கட்டுப்படாத வாயுபுத்திரன் இந்த வியூகத்துக்குட் போகலாமென்று அநேகமாய்ப் பார்த்தும், கூடாமல் சுழண்டுவரும்போது, சிந்துதேசாதிபதி தருமராசன் தேரையும் வில்லையும் பொடியாக்கி, பீமசேனன் ஏறிய ரதத்தையும் கைவில்லையும் குதிரைகளையும் அழித்தான்.

இப்பால் பீமசேனன் கதையைக் கையிற்கொண்டு அந்த வியூகத்துக்குள் நுழையக்கூடாமல், வெளியில் நின்றபடி சுற்றில் நின்ற சேனைகளை மாய்த்தான். தருமராசன் எதிரிவிட்ட சரமாரிக்குப் பின்னடைந்தார். இடும்பிகுமாரன் கடோற்கஜனும் அவன் பிள்ளையும் அடிபட்டு நாலுபக்கத்திலும் பயந்தோடினார்கள். இவ்வாறாய் சைத்திரதனானவன் விசேஷமான யுத்தம்புரிந்தான். அப்படிக்குப் புரிந்தபோதிலும் பாண்டவர்கள் விட்ட பாணம் விதை விதைத்ததுபோலும் அவன்விட்ட எதிர்கணைகள் விளைந்த விளைவுபோலுமாயின. அப்போது துருபதராசனும் அவன் பிள்ளைகளும் வந்து கலந்து சைத்திரதன்மீது அஸ்திரப்பிரயோகஞ் செய்தார்கள். அவைகளை சின்னாபின்னமாக்கி ஐந்து எதிர்கணைகளினால் துருபதனையும் அவன் குமாரன் திருஷ்டத்தியும்நனையும் உதிரம் பிரண்டோடத் தாக்கி மற்ற ராசாக்களுடைய அழகும் சாமார்த்தியமும் நிலைகெடச் செய்து, சாத்தகியின்பேரில் பத்துக்கணைகளை ஏவி அவர் மார்புந்தோளுங் காயம்படும்படி யோட்டினான். இவன் செய்த சண்டையினால் பாண்டவப் படைகள் அவதிப்பட்டு, ஐயோ இந்தவேளையில் அர்ச்சுனன் வராமற் போனானே, அவன்பிள்ளை அபிமந்யுவானவன் வியூகத்துக்குள் சிக்கிக் கொண்டு யுத்தம் நடத்துகிறவனுக்குத் தகப்பன் துணைப்படுகிறதற்கு இல்லையேயென்று கஸ்திப்பட்டுப் பின்னடைந்தார்கள். துரியோதனன் இவ்விதமாய் சிந்துதேசாதிபதியை ஒருபக்கத்தில் ஏவிவிட்டு தானும் கர்னனும் துரோணரும் திரண்டபடைகளைக் கூட்டிக்கொண்டு அபிமந்யுபேரில் எதிர்த்தார்கள். அவரவர்விட்ட பாணங்களையும் தேர் கவசம் முதலானவைகளையும் தன்பாணங்களாலும் சூலாயுதங்களாலும் பின்னப்படுத்தி அவர்கள் தோல்வியடையும்படி யடித்து வெற்றிவீரங்கொண்ட அபிமந்யுவை மத்திர தேசாதிபரும் சில வில்வீரர்களும் வந்து எதிர்த்தார்கள், அவர்களையும் அபிமந்யுகாயப்படுத்தி யோட்டினான். அங்கதேசத்தலைவன் எதிர்த்துப்பார்த்தும் அபஜயமடைந்தான். மறுபடியும் துரோணாசாரியரும் அசுவத்தாமனும் அபிமந்யுவுக்கெதிரில்வந்து தாராகணம்போல் பிரகாசம்பொருந்திய நூறுகணைகளை விட்டார்கள். அபிமந்யுவானவன் இரண்டு சரோருகப் பகழிகளைவிடுத்து அவர்கள் வில்லுகளைமுறித்து நோகச் செய்தான். இதென்ன விபரீதம் என்று மத்திரதேசாதிபனும் அவன் பிள்ளைகளும் ஆதிபராசனும் அவனுக்குரிய அநேகமித்திரரும் வந்து பாணங்

களினால் அபிமந்யுவை சாடும்போது, அவரவர்விடுத்தகணைகளை அறுத்து அண்டையில்வந்து சண்டைபுரிந்த ஆதிபராசனை ஒரேவாளியினாலே அந்தரம்போக அனுப்பிவிட்டு, சல்லியனுக்குநேரேதிரும்பின அளவில், அவன் இவன்மீது ஒன்றுநூறு ஆயிரமாக பாணங்களைவிடுத்தான். அப்பால்மகாரதத் தலைவரெல்லோரும் ஒரே கும்பலாய்க்கூடி இந்தச் சிறுவன்மீது எதிர்த்து அநேகவிதங்களாய் யுத்தஞ்செய்து பார்த்தும், இவனுடைய பாணவேகத்திற்கு அநேகர் மடிந்தார்கள். அப்போது அபிமந்யு சக்கரவியூகத்தையும் பதுமவியூகத்தையும் தகைந்து தன்தேரைப் பல இடங்களிலும் குயவன் திகிரிபோல் சுழற்றி வரும்போது, சகலவீரரும் பின்னிட்டோடினர். துரியோதனன் வெட்கி ராசகுமாரரென்கிற இளவரசர்கள் பலபதினாயிரவருடன் தன்பிள்ளையாகிய இலக்கண குமாரனை அனுப்பிவித்தான்.

அவர்கள் அபிமந்யுவை யெதிர்த்தகாலத்தில் மதமேறிய யானைபோன்ற அபிமன்னன் எதிர்த்தார்மீது வாயுவாஸ்திர முதலிய பல அஸ்திரங்கள்விடுத்து எதிரிகளின் கணைகளை பின்னப்படுத்தி வெகுமன்னர்கள்உயிர் பிழைத்தாற்போதுமென்று ஓடும்படியடித்தான். அபிமந்யுவின் வின்மையைப்பார்த்த அவனுடைய சாரதி மிகவும்புகழ்ந்து இதுவரையில் மூன்று வியூகத்தை யுடைத்துத் தகர்த்து அவர்களுக்கு உயிர்ப்பிச்சைகொடுத்து வெளிப்பட்டீர், இந்தமட்டும் யுத்தத்தை நிறுத்திப்போட்டுத் தங்கள் தந்தையிருக்கும் இடத்தை நோக்கிப்போவது நலமென்றும் உங்கள் அத்தைபுருஷன் சைந்தவன் உங்கள் பிதாக்களை பாணங்களால் இம்சிக்க இடங்கொடுத்துக்கொண் டிருக்கிறார்களே யல்லாமல் அவனை செயிக்க இவர்களால் கையாலாகவுமில்லை, உன் தந்தை அர்ச்சுனனும் அங்கில்லையே நீர் இவ்விடத்தில் செயங்கொள்வதினால் என்னபலன், நீர் உமது தந்தையருக்குத் துணைபோவது உத்தமம் என்றுசொன்னான். அபிமந்யு அவிடத்திலுமுள்ள வீரருடன் சண்டைசெய்யலாமென்று சந்தோஷித்து ரதத்தைத் திருப்பிக்கொண்டுவரும்போது மார்க்கத்தில் எதிர்த்துவருவோரை அதம்பண்ணிச்செல்லும் வீரப்பிரதாபத்தை தருமராசன் முதலியபேர்கள் பார்த்து மகிழ்வுகொண்டிருக்குங்காலையில், துரியோதனன் தன் அரசர்களைப்பார்த்து வலையிற் சிக்கிய சிங்கம் திரும்பிப்போய்விட விடாதீர்கள் விடாதீர்கள் என்று கெர்ச்சித்துப் பின் தொடர்கிறதை அபிமந்யு திரும்பிப்பார்த்து, அவர்கள்மீது மூடுகணைகளைப்போல் அமோகமாய்த் தொடுத்தான். இதினால் அரசர்கள் பின்னடைந்து, நந்தியாவட்டனும் அவன் குமாரரும் ஒருபக்கத்தில் ஒதுங்கி இளைப்பாறிக்கொண்டிருந்தார்கள். அப்போது விடசேனன் என்னும் விடங்கதேசத்து ராசகுமாரன் நேரே புகுந்து யுத்தஞ்செய்யும்போது அபிமந்யு அவனை அடித்துமாய்த்தான். இலக்கணகுமாரனும் சிலரும் மேலும் மேலும் அபிமன்னனை யெதிர்த்து அடியுண்டு இலக்கணகுமாரன் மாண்டான்.

துரியோதனன்கேட்டு மனமெரிந்து அவன் படைத்தலைவர் துரோணரிடம் முறையிட்டபோது, அவர்களெல்லோருங்கூடி அபிமந்யுவைப்

புலியைப்போல் சூழ்ந்து வளைத்துப் பழைய இடமாகிய பதுமவியூகத் தண்டையில் சண்டைகொடுத்துக்கொண்டே இழுத்துப்போனார்கள். அபிமந்யுவின் பாணங்களால் அநுகுலராசன் தலையறுந்துவிழுந்தான். கேகயராசகுமாரன் மாய்ந்தான். கிருபாசாரியர் வில்முறிந்து பின்னிட்டார். மகததேசாதிபர் மாண்டார்கள். கோடி மகுடவர்த்தனர் கொலையுண்டார்கள். இஃதன்றியில் வில்லொடிந்தவர் அநேகர். பின்னடைந்தோடினவர் அனேகர் கால்கைமுறிந்து இளைத்தவரநேகர். இத்தறுவாயில் துரியோதனன் தம்பிமாரும் துரோணாசாரியரும் கர்ணனும் மோசத்தினால் அபிமந்யுவைக் கொல்லாவிட்டால் முடியாதென்று யுத்திசெய்து, நாகாஸ்திரம்போல் நெளிந்து நெளிந்து, நான் பின்புறமாய்ப் போகிறேன், அவன் என்னைத் திரும்பிப்பார்க்க இடங்கொடாமல் நீங்கள் அஸ்திரந்தொடுங்கள், நான் அவன்பின்புறத்தில்வந்து வில்லைமுறிக்கிறேன், என்றுசொல்லி அதுபோல் யுத்தம் நடத்திவருங்கால், கர்ணனனவன் அவன்வில்லை முறித்தான். மற்றவர்கள் அவன்தேரையும் அழித்தார்கள். வல்லமைசாலியாகிய அபிமந்யு கையில் கத்தியுங் கேடயமுந்தாங்கி, கர்னன்செய்த மோசமென்று ஆங்காரங்கொண்டு பூமியில் நின்றபடியே அநேகரை நாசமாக்கி தருமராசன் முதலியபேர் தன்மேற் கவலைகொள்ளாதிருக்க சங்கத்தொனி செய்தான். தொலைவில் சண்டைசெய்து நிற்கும் அர்ச்சுனனிடத்தில் இருந்த ஸ்ரீகிருஷ்ணர் பாஞ்சசன்னியத்தைப் பூரித்தார். துரோணர் முதலியோர் அர்ச்சுனன் ஒருவேளைவந்து கொல்வானென்று அச்சப்படுஞ் சமயத்தில், துச்சனியென்பவன் அபிமந்யுவைக் கொல்வதாக வீரம்பேசித் தேரைச்செலுத்தி யெதிர்த்தான். அபிமந்யு பாதசாரியாய் நின்றபடிக்கே அவன்தேரைத் தவிடுபொடியாக்கினபோது, கதையை எடுத்துக்கொண்டு இருவரும் ஒருவரையொருவர் அடித்து தொந்தயுத்தம்புரிந்து இருவரும் கீழேவிழுந்து ஒருவரோடொருவர் புரளும்போது யுத்த தர்மத்துக்கு விரோதமாய் அநேக அரசர்கள் அபிமந்யுமேல் விழுந்து அவனை அடித்துக் கொன்றுபோட்டார்கள். அங்ஙனங் கொலையுண்டவனைக் கிட்டிப் போய்ப் பார்க்க துரியோதனன் முதற்பலரும் பயந்தனர். இப்பால் அபிமந்யுவால் அனேகர்கூடித் திரும்பிவந்து அவனைப்பார்த்து அவனுக்காகக் கண்ணீர்விட்டார்கள். துரியோதனனுந் தம்பிமாரும் இறந்த செய்திகேட்டவுடனே களிப்படைந்து துச்சனி இறந்தசோகத்தையும் மறந்து அபிமந்யு தொலைந்தது தங்களுக்குக் கோடிபிள்ளைகள் பிறந்ததுபோல் களித்தார்கள்.

அவிடத்தில் அபிமந்யுவானவன் மூன்று வியூகங்களையும் உடைத்து அநேகரைக்கொன்று பின்னமாக்கித் தந்தையரை நோக்கித் திரும்பிவருபவனை சைந்தவன் முதலிய வீரர்கள் போகவொட்டாமல் தடுத்து அநியாயமாய் அவனைக்கொன்ற செய்தியைக்கேட்ட தருமபுத்திரர் வயிற்றிலடித்துக்கொண்டு அப்பா மகனே, நமது குலத்தில் பிறந்த எல்லாப்பிள்ளைகளில் நீ மிகுந்த அழகும் கல்வியும் வீரமும் உடையவனாய் இருந்தாயே

யென்று பிரலாபித்துத் தேர்த்தட்டிலேயே மூர்ச்சித்து விழுந்துவிட்டார். பீமசேனன் பூமியில்விழுந்து பிரண்டு விண்ணுலகம் நாணும்படியாய்க் கதறியழுது, என் அருமைத்திருமகனே, உன்பெரிய தந்தையின் வசனத்தைக்கேட்டு சண்டைக்குப்போய் வியூகங்களையும் உடைத்து அநேகரைக் கொன்று நீயும் மாய்ந்தாயேயென்று புலம்பி சிந்துதேசாதிபதி உனக்குக்காரணனு யிருந்தானேயெனக் கறுவிப் பிரலாபித்தான். துரியோதனன் தன்மைத்துனன் சைந்தவனை எதிர்கொண்டழைத்துத்தழுவி முத்தமிட்டு, இன்று உம்மால் பிழைத்தோம், நீர் எங்களுக்குப் பிராணபிச்சை கொடுத்தீர் என்று தன்பிள்ளைகள் தம்பிபிள்ளைகள் முதலிய பதினாயிரம் ராஜபுத்திராள் அபிமந்யுவால் இறந்துபோன துக்கத்தை மனதில் வைக்காமல், இவன் ஒருவன் இறந்தமகிழ்ச்சியினல் புஜங்கள் பூரிக்க இவர்கள் யெல்லோரையும் இட்டுக்கொண்டு பாசறைபோக இரவும்வந்துற்றது. இஃதிங்ஙனம் நிற்க, தருமராசனும் தம்பிமார்களும் பாசறைபோய்ப் பலவிதமாயத் துன்புற்றிருக்கும்போது, விராடன் துருபதேயன் திருஷ்டத்தியும்நன் முதலிய ராசர்கள் தருமருக்கு ஆறுதல்சொல்லி ஆற்றிக்கொண்டிருக்குங்கால், ஈரேழுலோகமும் புகழும் மாதவநேசராகிய ஸ்ரீவேதவியாசர் எழுந்தருளினர். அவரை வணங்கி ஆசனமளித்தார்கள். உன்மனதில் விளைந்ததுக்கம் என்னவென்று தருமபுத்திரரை வினவியதற்கு என் உயிராகிய அபிமன்னன் மரித்தானென்ற வார்த்தைசொல்லும்போதே மூர்ச்சித்து விழுந்தார். அவர் படுந்துயரத்தை வேதவியாசர்பார்த்து தருமநந்தனு, பூர்வவிதியின் புணர்ப்பின்படி இங்ஙனம் வந்ததேயன்றி மற்றியார் கொல்லத்தக்கவர் உளர், உனக்குத் தெரியாத காரியம் ஒன்றுண்டோ ஆயினுஞ் சொல்லுகிறேன் கேளும், சிருஷ்டிக்கர்த்தாவாகிய முதற்கடவுளுண்டாக்கிய ஆத்துமகோடிகள் அனைத்துக்கும் அமைத்திருக்கும் ஆயுளென்கிற ஒர்கணக்கின்படி நல்வினை தீவினைகளை அனுபவித்து இறப்பதேயல்லாது ஆயுள் முடியு முன்னம் இறப்பதில்லை. அபிமந்யு சகல வீரரையும் வென்று வீரசொற்கம் அடைந்தான். இப்பேர்ப்பட்ட பேறு எவர்களும் பெறமாட்டார்கள், என்று பலபல நீதியுணர்வுகளை ஓதியருளவே அதனல்தருமருக்குச் சோபந்தணிந்து சொல்லுகின்றுர்.

வேதமுதல்வனே திரிலோகாதிபதிகளும் யாகாதிகிருத்தியங்களால் உயர்ந்தோரும் மற்றுமற்று மானிடரும் ஞானிகளும் யோகிகளும்மடிந்து போகிருர்களேயொழிய, ஊழ்வினையைக்கடந்து நீடூழி இருக்கும்படியாகச் செய்துகொள்ளக்காணேமே, அவர்கள் கருத்தென்ன, எண்ணம்இன்னதென்று அடியேனுக்கு அருளவேணுமென்றுர். கேளும் சத்தியதருமமே நிஜமென்று உறுதிகொண்ட தருமநந்தனு, கடல்சூழ்ந்த பூமியை ஒருகுடைநிழலில்ஆண்ட மநுமாந்தாதாக்களும் மாற்றுதற்கரிதாகிய மிருத்தியுமாயையென்று ஒன்றுண்டு. அதைக்கடக்க அரி பிரமாதிகளாலும் ஆகாதென்றுல், மற்றவர்களால் ஆகத்தக்கதோமாயும்படியாகிய காரணத்தைக்குறித்து நான்ஒரு திருஷ்டாந்தரத்தை சொல்லுகிறேன் கவனமாய்க்

கேளுமென்று தொடங்கினர். பிரமாவானவர் இவ்வுலகத்தை உண்டு பண்ணி சராசரங்களை சிருஷ்டித்தருளினர். ஆத்துமகோடிகளெல்லாம் சாவில்லாமல் ஒருகாலத்தில் நித்தியசீவிகளாயிருந்தபோது, பூமிதேவி சுமைதாங்கமாட்டாமல், பிரமனிடம்முறையிட்டாள். அவர்ஓர்ந்து மனந் தடுமாறி சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, அதிகாலோசனையினல் உருகியஅவருடைய வேர்வைபூமியில் விழுந்து ஆலகாலவிஷம்போல் எழுந்து சீவகோடிகளை மாய்த்துவரும்போது, ஆத்துமகோடிகள் வருந்தி பசுபதியேயென்று ஓலமிட்டலறும்போது, மறைகளுணர்ந்த முக்கண்ணன் பிரமனுக்கெதிர்வந்து, இவ்வுலகத்தையும் உயிரையும்படைத்த தந்தையாகிய நீதானே அழிக்கத்தொடங்குவையாகில், பழியானது யாரைச்சேரும், நீ இதையோசித்துப்பார், கொல்லுங்காரியத்தை நிறுத்தெனக்கோமான் கூற, பூமிதேவி பாரஞ்சுமக்கமாட்டாமல் வருந்துகிறளே, இதற்கொரு உபாயஞ் சொல்லவேணுமென்று பிரமன் பிரார்த்திக்க கைலையம்பதியானவர் கழறலுற்றார்.

கேளும் பிரமதேவனே, உமதுதேகத்திலிருந்து சிந்திய வேர்வைத் துளியை ஒரு பெண்ணுகச் சிருஷ்டித்து, அவளைக்கொண்டு சங்காரகிருத்தியம் நடக்கும்படி செய்வாயென்று பரமன்பகர, மண்பொருத்தந்தையானவர் அதுபோல் ஒருஉருவையுண்டுபண்ணி மிருத்தியுதேவதையென்று அதற்குப்பெயர்கொடுத்துப் பரமேஷ்டியின்பக்கத்திலிறுத்தி, இவ்வுலகத்து உயிர்களை மாய்க்குஞ் சங்காரத்தொழிலை நடத்திக்கொண்டிரு என்றுகற்பிக்க, அதைக்கேட்ட அந்தஸ்திரீயானவள் உடல் நடுங்கி, நான் அப்பேர்ப்பட்ட தொழிலைச் செய்யமாட்டேன், என்னைக்காத்து ரட்சிக்க வேணும் கண்ணுதலேயென்று கைதொழுதாள். பிரமாவும் சிவனும் அவளுக்கு இதங்கூறி அனுப்ப, அவள் பூலோகத்தில்வந்து உயிர்களை வதைப்பதை யுன்னிப்பார்த்து, சிருஷ்டிகர்த்தாவைக்குறித்துத் தவஞ்செய்தாள். அவர் அவள் முன் பிரசன்னமாகி, ஆத்துமகோடிகளைச் சங்கரிக்குந்தொழிலை உனக்குக்கொடுத்தேன் என்னகாரியங்கருதி இத்தனைநாள் என்னை நோக்கித்தவம் இயற்றினையென, மன்னுயிரை நான் வதைக்கும்போது அவர்களைப்பெற்ற தாய்முதலியகிளைஞர்கள் படுந்துயரத்தை நான் சகிக்கக்கூடாமற்போகிறேன், கர்த்தனே என்றாள். பிரமாவானவர் சந்தோஷித்து மகளே, சங்காரத்தொழிலைச்செய், அதுபற்றி உன்னை ஒருபழியும் தொடராது, ஆத்துமகோடிகளுக்கு விதித்த காலநிர்ணயப்படி வியாதியென்னும் ஒருசாக்குவந்து மாளுவார்கள் என்றார். அதுமுதல் அவள், அவரவருக்கு அமைத்த ஆயுட்பிரமாணத்தைப் பார்த்திருந்து வாயிற்போட்டுக்கொள்ளும் வல்லமையுள்ளவல்லியாயிருக்கின்றாள் தருமநந்தனு, எப்பேர்ப்பட்ட உயிர்களானாலும் தோன்றி அழிவதேயன்றி, அழியாதிருக்கப்பட்ட தொன்றுமில்லையென்றறி யென்றார். ஆண்டவனே சுவர்ணதீபன் என்கிற ஒருராசபுத்திரன் இறந்து பின் பிழைத்தானென்று மேலோர் செப்புகின்றனரே, அதென்னவென்றுவேண்ட, வியாசபகவான்

விளம்புகிறார். அப்பனே, முன்னம் யான் சொன்ன மிருத்தியுதேவதை முடிவுகாலம் பார்த்திருந்து என்போலொத்தவனைப் பிடித்தாலும் தப்ப மாட்டாது, அப்படியிருக்க ஆயுள்முடியாமல் அந்தமிருத்தியு தேவதையி னுல் பிராணன்போமாகில் மணிமந்திரம் அவிழ்தங்களால் மீளும், இதற் காகத்தான் ஆயுள்வேதமந்திரங்கள் பிறந்திருக்கின்றன. அந்த சுவர்ண தீபன்கதையைச் சொல்லுகிறேன் கேளும். நீதிதவருமல் செங்கோல்செ லுத்திவந்த சஞ்சயன்என்ற ஒருஅரசன் புத்திரன் இல்லாமைக்கு வருந்தி நோன்புகாத்து தானதருமஞ்செய்துவரும்நாளில், நாரதமுனிவர் பிரசன் னமானர். அவரைவணங்கிப் பிரார்த்திக்கும்போது, உமக்கு எப்பேர்ப் பட்ட பிள்ளைவேணும் தெரிவியுமென்ன, சுந்தரவடிவும் தீர்க்காயிசும் நோவின்மையும் பொன்பொன்னுக விசர்ச்சனம் பண்ணுதலுமுடையஒரு புத்திரனை அனுக்கிரகஞ் செய்யுமென்று இரந்துகேட்க, அப்படிஆகுக என்று அநுக்கிரகித்து மறைந்துபோயினர். அன்றுமுதல் ராசபத்தினி கெர்ப்பவதியாகி ஒருபுத்திரன் செனித்தான். அந்தப்புதல்வனுக்கு சுவர் ணம்என்னும் பெயர்வைத்து அன்புடன் வளர்த்தார்கள். சில களவாளி கள் இந்தப்பிள்ளை தனித்திருக்கும் இரவில் இவனைத்தூக்கிப்போய் வதை த்து இவன்வயிற்றைப்பீறிப் பார்க்குமளவில், திரவியங்காணுமல் எண் ணங்கொலைந்து பிரேதத்தைக் குளக்கரையிற் போட்டுவிட்டு ஏகினர்கள்.

இராசன் பிள்ளையைக் காணுமல் வருந்தி தேடும்போது, பிரேதத் தைக்கண்டெடுத்து ஈமவிதிகளைச்செய்து புத்திரசோபக்கடலில் ஆழ்ந்து வியாகுலித்துக்கொண்டிருக்கும்போது, நாரதபகவான் பிரசன்னமானர். அவர் பாதங்களில் விழுந்தழுது பிள்ளைக்கு நேரிட்ட அபாயத்தைக்கூறி னன். அதைக்கேட்ட நாரதர் ராசனுடைய கண்ணீரைத்துடைத்துஅவன் விசனம்தீரும்படி பெரும்பாலும் பூர்வம் நடந்த தன்மைகளைச் சொல்லு கின்றார். முன் ஒருகாலத்தில் சக்கரவர்த்திகளில் ஒருவனுகிய சுகேத்திர ராசன்என்கிற நரபதியும் நங்கன்என்கிறராசனும் சிபிச்சக்கிரவர்த்தியும் சக்கிரவர்த்தித்திருமகனும் பகீரதனும் திலீபனும் மாந்தாதாவும் யயாதி மகாராசனும் இன்னும் அநந்தமானபேர்களும் அளவிறந்ததருமங்கள்யா கங்கள் புரிந்து வாழ்ந்தும் மாண்டார்களேயன்றி உயிருடன் இருந்தவர் கள் இல்லை. இவ்வுலகில் நாமரூபங்களாய்த் தோன்றுவனயாவும் அழி யுமேயன்றி, இன்றிறந்தவனுக்கு நாளைக்கிறப்பவன் அழும்படியான காரி யம் என்னஎன்றுதேறுதற்படுத்த, தேவரீர் இப்போது சொல்லிவந்த அர சர்களுக்கு நிகர் சொல்லமாட்டேன். அவர்கள் மகா புண்ணியவான்கள் தான் சந்தேமில்லை, சுவாமீ குணமேருவாகிய நாரதமகாமுனிவரே, என் பிள்ளைபிழைக்கவேண்டுமென்கிறதைப்பற்றி நான்கவலைப்படவில்லை, என் மைந்தன் நியாயமாய் புகழ்பெற்று வாழாமல் திருடரால் உயிரிழந்தது எனக்குப்பழியும் அபகீர்த்தியுமாய் முடிந்ததே, மேலும் அவமிருத்தியு சாயையால் இறந்தவர்களுக்கு விதித்திருக்கும் நரகத்தில் அல்லவோபுகு வான். கொடியேனுகிய அடியேன் நெடுநாள்புத்திரனில்லாமல் வருந்திய

என் விண்ணப்பப்பிரகாரம் ஆயுளுள்ளபிள்ளை உண்டாவானென்று ஆசிர்வதித்த தேவரீர் வார்த்தையும் பொய்த்துப்போகுமே என்று வருந்துகிறேனென்றான். நீர்ஏன் மெத்தவருந்துகிறீர், இதோஉமது புத்திரனைக் கொண்டுவருகிறேனென்று சொல்லி யமதர்மராசனுடன் வார்த்தையாடி விவகாரப்படிக்கு அந்தப்புத்திரனைக் கொண்டுவந்து தன்வார்த்தைபழுதுபட்டுப்போகாதபடி கொடுத்து மறைந்துபோனார். ஆகையால் தருமபூபதீ எத்தனைகோடிகாலம் இருந்து இந்திரபோகங்களை அனுபவித்தாலும் துன்பம் மேலிட்டிருக்குமே யல்லாது, இன்பமென்பது எள்ளத்தனையும் எஞ்சக்கிடையாது. எப்பேர்ப்பட்டவர்களும் இந்தக்கர்மபூமியில் வந்து நன்மைதீமைகளை அனுபவித்து இதைவிட்டுப்போய் மேலானபதவியைப் பெறக்கருதுவார்கள். ஆனால் எல்லோர்க்கும் எண்ணியபடி கிடைக்கமாட்டாது, அதுமெத்தஅருமை அப்படிப்பட்ட பதவியை உங்கள் புத்திரன் அபிமந்யு மெத்தவும் லேசாகப் பெற்றான். இதற்காகச் சந்தோஷப்படவேணுமேயல்லாது துக்கப்படலாகாதென்று அவர்கள் விசனத்தை மாற்றி, வியாசபகவான் தன் யதாஸ்தானஞ்சென்றனர். மறையவன் மறைந்தபின்னர், தம்பிவிஜயனுக்கென்னசொல்லப்போறேமென்று முன்னிலும் அதிகசஞ்சலத்தில் முழுகியிருந்தார் தருமராசன்.

இப்பால் சஞ்சத்தகர்மேற் சண்டைக்குச்சென்றிருந்த கிருஷ்ணார்ச்சுனனுடைய செய்தியைச் சொல்லுகிறோம். தென்திசைப் பாரிசமாய்ச் சென்ற விஜயன் சண்டப்பிரசண்டமாய் எதிரிகளை அதஞ்செய்து வெற்றிபெற்று, அவிடம்விட்டு தர்மராசன் இருக்கிற இடத்தை நோக்கிவருவதற்கு ரதத்தைத் திருப்பச்சொன்னான் அப்போது பூதபவிஷ்யத் வர்த்தமானாதிகளையெல்லாம் ஏககாலத்திலே உணரும் சர்வாந்தர்யாமியாகிய பார்த்தசாரதியானவர், தன்மருமகனாகிய அபிமந்யு பதுமவியூகத்தையுடைத்துச்சென்றதும் அநேகராஜபுத்திரரை அதம்பண்ணி வீரசொர்க்கம் அடைந்ததும் இதுகள் எல்லாம் தனக்குள்தானே நன்றாய்த் தெரிந்திருந்தும் ஏதுமறியாதார்போல், காண்டீவனிஷ்டப்படி தேரை மெதுவாய்ச் செலுத்திக்கொண்டு வரும்போது, எல்லாச்சோபங்களிலும் புத்திரசோபம் பெரிதாகையால், அதிப் பிரியமான அபிமந்நன் இறந்ததை இவன் கேட்பானாகில், தன்பிராணனைத் திரணமாகவெண்ணித்து மாணமாகிவிடுவான். இதற்கொரு உபாயம் தேடவேணுமென்று தன்மனதிற்கருதி, பஞ்சபூதங்களையும் ஆட்டத்தக்க இவர், ஸ்மரித்தமாத்திரம் இந்திரன் மிகுந்த விருத்தப்பிராமணனாக வடிவங்கொண்டு இவர்கள்வரும்வழிக்கு அருகாமையில் பெரிய அக்கினிகுண்டத்தைச் சுற்றிக்கொண்டு வாய்விட்டழுது கண்ணீர் வடித்து, தெய்வமேயென்று கூவித் தீக்குழியிற்பாய எத்தனிக்குங்கால், இதை தனஞ்செயன்கண்டு இருவரும் ரதத்தைவிட்டு இறங்கி, ஆகண்டலன் என்ற அந்தபிராமணன் கையை அர்ச்சுனன்பிடித்து நீர் ஏன் அழுகிறீர் என்று வினவ, அழுவார் அழுவது தன்தன் துக்கத்துக்கல்லாது பிறர் துக்கத்துக்கல்ல, தெய்வம் என்னைச்சோதித்ததற்காக என்விதியை நான்

அனுபவிக்கிறேன், தளர்ந்தவயதில் என்புத்திரனை இழந்து ஆறுதல்கெட்டுப் பாவியானேன். நீங்கள் கேட்பதினால் பயன் என்ன, உயிரைத் திருப்ப உங்களால்மாளுமாஎன்னைவிடுங்கள் என்று பிராமணன் தீயிற்குதிக்க பிடிவாதம் பண்ணினான். இகத்தில் பிறந்ததெல்லாம் இறக்காமலிருக்க மாட்டாது, நீர் வருந்தாதீர் என்று அர்ச்சுனன் பலவித தருமங்களை யெடுத்துரைத்தான். அதைக்கேட்ட அந்த ஆகாண்டல ஐயர் அருள்வடிவாகிய அரசரே, தருமமும் தைரியமும் பிறருக்கு லேசாய்ச்சொல்லுவார்கள். தங்கள் தங்களுக்கு இருக்கமாட்டாது, இப்பேர்ப்பட்டதுயரம் உங்களுக்குவந்ததால் அப்போதுதெரியும் என்று பிராமணன்சொல்ல, அர்ச்சுனன் நகைத்து, ஐயரே, தாம்சாகமருந்துண்பரோ, எங்களுக்கு இப்பேர்ப்பட்ட இடர் வந்தாலும், இன்னம் எப்பேர்ப்பட்ட இடுக்கண் நேர்ந்தாலும் உம்மைப்போல் இளையோம், இறக்கவும் நினையோம்;இதை நான் உண்மையாய் உனக்குச்சொல்லுகிறேன் என்ன, நீர்சொல்லுகிற வண்ணம் உண்மையாய் நிற்பீரா, ஒருகாலத்தில் உமக்குரியபுத்திரர்களில் யாராவது இராசிகம் தெய்வீகம் சம்பவித்து இறந்துவிட்டால், நீர் விசனப்படாமலிருப்பீரா என்று பிராமணன் கேட்க, ஒருக்காலும் அழேனென்று கிரீடிசொல்லினன். இந்தச்சொல் யதார்த்தமானால் எனக்குக் கைபோடுமென்று பிராமணன்கேட்க, இதுவேசத்தியமென்று கையறையப்போம்போது,கண்ணன், என்னத்துக்கு வீண்காரியம் அர்ச்சுனா, இலையும் பழுப்பும் எல்லார்க்குமுண்டு, நாம் இப்போது புரிவதோ உயுத்தம், சாவார்யாரோ பிழைப்பார்யாரோ நாமெதைக் கண்டோம், ஆத்திரப்பட்டுக் கையடிக்கவேண்டாமென்று கண்ணன் தடுக்க,அவ்வார்த்தையைக் கேளாமல் அப்படி எதுவந்தாலுஞ்சரிதான் நான்சொன்னசொல் தப்புவதில்லையென்று கையறைந்து அக்கினிக்குழியை அவித்து, ஐயருக்குவிடைகொடுத்தனுப்பிவிட்டான்.

குற்றமில்லா விஜயன் தன் ஆயுதங்களை யெல்லாம் தேரில் கழட்டிவைத்து மெள்ள மெள்ள இளைப்பாறிவரும் மார்க்கத்தில்,கண்ணனவர் அவனுடைய ஆயுதங்களை யெடுத்து மறைத்துப்போட்டு பிராமணனுயிரைக்காப்பாற்றி நல்லபலனை கைக்கொண்டாய் பார்த்திவனேயென்றுவார்த்தையாடிக் கொடுவரும்போது, எதுகாரியத்திலும் அசையாமனதுடைய இந்திரகுமாரன் தனக்குக்கண்டுவருந் துற்சகுணங்களைப்பற்றி மனங்குழப்பமாகினன். சூரியன் அஸ்தமித்தபடியால், சந்தியனுஷ்டானஞ் செய்து வரலாமென்று ஒருகுளக்கரையிலிறங்கி, நித்தியகடனை முடித்துக் கொண்டு எழுந்தார்கள். காண்டீவன் ஸ்ரீகிருஷ்ணனைநோக்கி என்விழித்துணையே சமுத்திரகோஷம்போல் இரைந்துமுநீசுராளுடைய ஆசீர்வசன சந்தடியாயிருக்கப்பட்ட நமது பாசறையானது, சந்தடியில்லாமலும் மாணிக்கதீபம் இல்லாமலும் ராசசபையிற் கூட்டமில்லாமலும் இருக்கின்ற காரணம் என்னமோ, இஃதொன்றும் தெரியவில்லையே சுவாமீ இயம்புமென்றுகேட்க, வெண்ணெயுண்ட கள்வனவர் சற்று யோசித்து, எனக்

குஞ்சந்தேகமாகத்தான் இருக்கிறது, என்ன நடந்ததோ அறியேன், உன்னுடன்கூடஇருக்கிற எனக்கெப்படித்தெரியும்,எல்லாவற்றிற்கும் போய்ப் பார்ப்போம் வாவென்று பாசறை நோக்கி வரும்போது அர்ச்சுனனுக்கு இடதுதோளும் இடதுகண்ணும் துடித்தன. இரதத்தை விட்டிறங்கினவுடன்,தன்புத்திரன் அபிமந்யு இறந்தானென்றறிந்து, ஆணிவேரற்றமரம் போல், பூமியிற்படிந்து மூர்ச்சையாகி சிறிதுபொறுத்துத்தெளிந்து, சில வார்த்தை சொன்னான் என்று வைசம்பாயனர் சொல்லிவரும்போது, எங்கள்மூதாதையாகிய காண்டீவருக்கு எங்கள்பாட்டன் அபிமன்னன் இறந்தசங்கதி ஒருவரும் சொல்லாதிருக்க, சபாமண்டபத்தில் வந்தவுடனே, எங்கள் மூதாதை தெரிந்துகொண்டாரென்று தேவரீர் சொன்னதெப்படி என்று ஜனமேஜயன் வினவினதற்கு:—

அரசே கேளும், இந்த யுத்தந் தொடங்கிய நாள்முதல் பிள்ளையுந் தகப்பனும் ஒருவருக்கொருவர் அலங்காரம் பண்ணிக்கொண்டு ஆயுதபாணிகளாகித் தந்தையை முந்தித் தேரிலேற்றிவிட்டு,தான் பிற்பாடு தேரேறிச்செல்லுவான். சாயங்காலம் தந்தைவருமுன்னே தான்வந்து தந்தை வந்தவுடனே எதிர்போய் வணங்கி ரதம்விட்டிறங்கச்செய்து அவர் ஆயுதங்களை வாங்கிவைத்து தந்தையுடன் உட்கார்ந்து தன் சண்டைத்திறமைகளைச் சொல்லுவான், இப்படிநடத்துகிறதுவழக்கம். இஃதன்றியும் கூடநின்ற அரசர்களை அபிமந்யு எங்கேயென்று கேட்டதற்கு ஒருவரும் பதில் சொல்லாமல் மவுனமாயிருந்ததைக்கொண்டும், புத்திரன் இறந்ததற்குச் சந்தேகமில்லையென்றுதெளிந்து, அடாமகனேயென்று மண்மேல்விழுந்து அழுதான். கூடநின்ற அரசர்களை மகாகோபத்துடன் நோக்கி சிறுவனைக் காட்டிக்கொடுத்து உங்களுயிரைக் காப்பாற்றிக்கொண்டு வந்துவிட்டீர்களேயென்று தாங்கற்பட்டுக்கொண்டான். அச்சமயத்தில்தருமபூபதி தம்பியைநோக்கி இன்று காலமே நாமெல்லோரும் படைமுகத்தில் நிற்கும்போது, சைந்தவன் நம்மை இழிவாகப்பேசினான். இதைக்கேட்ட இளஞ்சிங்கமாகிய அபிமந்யு எதிரியின் சக்ரவியூகத்தைப்பிளந்து துரோணாசாரியர் கர்ணன் துரியோதனன் முதலிய எதிர்வந்தவீரரையெல்லாம் ஒருதரமல்ல, பலதரமும் நையக்கொட்டி அவர்கள் அவலப்பட்டோடும்படி முடுக்கியடித்து, நால்வகைச்சேனைகளையும் தரையில்தேய்த்து,இரத்த வெள்ளத்தில் கரைத்து இலக்கணகுமாரன், சல்லியகுமாரன், மகதராசன் குமாரன், முதலிய அநேக ராசபுத்திரரை யெல்லாங் கொன்று, கர்ணனும் துரோணராலும் வில்லுந்தேருமிழந்து, பதாதியாகி தேர்ச்சக்கரத்தைக் கையிற்கொண்டு துச்சனியுந்தானும் தொந்தயுத்தம்புரிந்து அவனை முடிசிதற அடித்துத்தள்ளித் தானும் படிசிதறவீழ்ந்தான் வீழ்ந்தான் அப்பனே, ஒப்பில்லா அபிமன்னன். அவனுக்குத்துணைபோக வியூகத்தைச் சுற்றி நாலுபுறங்களிலும் நாங்கள் நுழையப்பார்த்தும், நுழையவொட்டாமல் சைந்தவன்வந்து எங்களைத்தகைந்து இதுவரையிலும் நாங்கள் பிழைத்த பிழைப்பெல்லாம் வீண்பிழைப்பென்றாகும்படி எங்களை சாயங்

காலமட்டும் சகல அவமரியாதைகளை யெல்லாம் செய்து மடக்கிப்போட்டான். அதினால் நமது புத்திரன் வீரசொர்க்கம் அடைந்தான். சைந்தவ னுபத்திரவம் இல்லாவிட்டால் நாங்கள் அவனை ஒண்டியாய்விட்டுப்போகிற தில்லை. அவன் சாகவுமாட்டான். விதிவசத்தால் நேரிட்டதேயன்றி வேறல்ல. நமக்கு உயிர்த்துணையாகவந்த அரசரை நீ வெறுக்கலாகாது. அவர்கள் என்னசெய்வார்கள் என்றவுடனே அர்ச்சுனன் மறுபடியும் மூர்ச்சித்துவிழுந்து தெளிந்து, என்மைந்தனைக்கொல்வதற்கு சைந்தவன் காரணமானான் என்றகேள்வியினால் மிகவும் பிரலாபிக்கையில், அவன்பின் நின்றமாயவன் பொய்நித்திரை கொள்ளுவாரை எழுப்ப ஒருவராலும்இல்லையென்பதுபோல், மிகவும் துயரப்படுகின்றவர்போற் காட்டி தன்னுள் தானே ஆறி, தருமராசன் முதலியவர்களுக்குத் தேறுதல் சொல்லி சாந்தப்படுத்தினார்.

அப்போது விஜயன் கோபங்கொண்டு இந்தப் பதின்மூன்றாம்போரில் அபிமந்யுவுக்குத் துணைவந்தவர்களைப் போகவொட்டாமல் தடுத்த சைந்தவனை, நாளைப்போரில் அஸ்தமனத்துக்குள்ளே நானே முனைந்து அவன் தலையை வெட்டித்தள்ளுகிறேன், இதுசத்தியம் அப்படிசெய்யாதொழிவேனேல் தீயிற்குதித்து இறப்பேன் என்று தன் தேவதத்தச் சங்கையெடுத்து பூரித்தான். சுவாமியும் பாஞ்சசன்னியத்தைப் பூரித்தார். சகோதராள் தங்கள்தங்கள் சங்கங்களையும் பூரித்தார்கள். நாளைவிளையப் போகிறகாரியம் இன்னதென்று அறிய விதரணையுடைய தருமராசன்தீன தயாளுவாகிய முகுந்தனைப்பணிந்து, ஆண்டவனே, உமக்குஇதுபெருமை தானா, எடுப்பார் கைப்பாலகனாகினீர் என்று, அவரைத்தனித்து அழைத்துப்போய் கண்ணீர்விட்டு, நாளுக்குநாள் எங்களுக்கு துன்பம் ஒன்று போனால் ஒன்று இரட்டித்துவருவதேயன்றி ஒழியக்காணோம், நான்பிறந்தவேளையோ, அல்லது என் பொல்லாவினையோ, இருக்கட்டும். தம்பிமார் ஆதியில் சபையில்கூறிய சபதங்கள் உனக்கோ எனக்கோ என்றிருக்க, துரோபதை கூந்தல்முடிக்காமலுமிருக்க, இதுகளை யோசியாமல், இப்போது விஜயன்பேசியசபதப்படி நாளைமுப்பதுநாழிகைக்குள் சைந்தவனைக்கொல்லமுடியுமோ, எங்களிஷ்டதெய்வமே, நாளைமுடியாமற்போய் அர்ச்சுனன் அக்கினிக்குழியில் விழுவானாகில் அப்பால் நாங்கள் உயிருடனிருக்கத் தக்கதுண்டோ. சைந்தவனைக் கொல்லுகிறேனென்று ஒருவார்த்தைமாத்திரஞ் சொல்லாமல், கெடுவிட்டு சபதஞ்சொன்னானே, இவன் சபதம் எப்படியாகுமோவென்று தெரியவில்லை ஐயனே, என்று அவர் பாதங்களில் விழுந்தார். தஞ்சமென்றதருமனை மார்போடணைத்து அவர் மனக்கவலையைத் திருத்தினார்.

பாண்டவாள்செய்த சங்கத்தொனி துரியோதனன் பாசறையில்கேட்டமாத்திரம் திடுக்கிட்டு, தீமைவிளைந்தது தீமைவிளைந்தது, சரிதான் நமக்குப் போங்காலம் நேரிட்டது, அபிமந்யுவின் மரணத்தைக்கேட்டு யாவரையும் அடங்கலுக்கு முடிக்கிறேன் என்று காண்டீவன் புறப்பட்டிருக்

கிறன், இனிக்கெஞ்சினும் விடானென்று அஞ்சிப் பேசிக்கொண்டிருந்தார்கள். மீண்டுந் துரியோதனன் முகக்குறிப்பை அறிந்த நால்வகைச் சேனை வீரரில் சிலர், அர்ச்சுனன்தானா ஆண்பிள்ளை, நாமெல்லாங் கையாலாகாதவர்களா, இதோ இப்பொழுதேபோய் ஒருகை பார்த்துவருகிறோமென்று கூச்சலிட்டு எழுந்தார்கள். வேறுசிலர் அவர்களைக் கையமர்த்தி உங்கள்வீரத்தை நாளைக்குக் காட்டுங்கள் அப்பா, என்று நிறுத்தவே ஆர்ப்பாட்டம் அடங்கிற்று.

அர்ச்சுனன்செய்த சபதத்தைத் தெரிந்துகொண்ட சைந்தவன் துரியோதனனிடம் வந்து நான் அபிமந்யுவைக் கொல்லாதிருக்க பழி என்பேரில் நேர்ந்திருக்கிறது, அர்ச்சுனன் பண்ணினபிரதிக்ஞை நிறைவேறாதபடிக்கு நான் இந்த இடத்தைவிட்டுவிலகி நாளைப்பொழுதை எங்கேயாகிலும் கழிக்கிறேன். அவன் பிரதிக்ஞை நிறைவேறாமற் போகும்பட்சத்தில், அவன் நெருப்பில் மாண்டுபோவான். அதினால் மற்ற நால்வரும் இறப்பர். துரோபதையுடன் நீ சுகித்து வாழலாம், விடைதாருமென்று கேட்கவே, சுயோதனன் கலகலவென்று சிரித்து, ஓய் மைத்துனரே வெந்நீர் என்கிறதற்கு முன்னே வீடுவெந்துபோச்சுதென்னும் பழமொழிப்படி அஞ்சுகிறீர். இராசாதிராசனாகிய நீர் இப்படி நடுங்கவேண்டாம். உம்முடைய உயிருக்கு ஒரு சேதமும்வரவொட்டாமல்காக்கிறேன். கேளும் சிந்துதேசாதிபதீ! நமதுசேனாதிபதியாகிய துரோணர் அங்கதேசாதிபதி கர்ணன் முதலிய வீரர்கள் முனைந்துநின்று உம்மைக்காக்கும்போது அர்ச்சுனன் கூறிய சபதம் ஒருபோதும் முடியாது. நீர் அஞ்சாதீர் என்று அவனைச் சமாதானஞ் செய்தான். உடனே துரோணரை அழைத்து விஸ்தாரமாகிய நமது சேனைகளை இரண்டு பிரிவாகப்பிரித்து சைந்தவனைச் சூழ்ந்திருக்கும்படி செய்து நாளைமுப்பதும் தனஞ்செயனைத் தலைகாட்டவொட்டாமல், உங்கள் வல்லமையைக் காண்பிப்பீராகில் சயிந்தவன் தப்புவான், அதினால் அர்ச்சுனன் அக்கினியில் விழுந்து இறப்பான், நமக்கு க்ஷேமமுண்டாம் என்று பலவாறாய் அவரைப்புகழ்ந்து தீர்க்கதெண்டமாகப் பூமியில்விழுந்தெழுந்தான். விஜயனும் நீயும் தநுர்வேதசாஸ்திரங்களை பேதமில்லாமல் என்னிடத்தில் கற்றுக்கொண்டீர்களே! கற்றவித்தை எல்லோருக்குஞ் சரியாக வரவேணுமேயென்று வினவினால், அந்த அர்ச்சுனன் அசஞ்சலனாக அறிவிற் சிறந்தமையால் அவனைப் புகழ்கிறார்கள். நீர் செல்வச்செருக்கினால் சுதாவில் பிரயாசை எடுத்துக்கொள்ளாமல், ஆட்களைக்கொண்டு ஆகவேண்டிய வேலைகளை முடித்துக்கொள்வதினால், முன் கற்ற வித்தை உமக்குப் பலிதப்படாமலிருக்கிறதென்று துரோணர் கூறி, இப்பவுமென்ன பார்த்தன் வெற்றிபெற வெகு பாடுபட்டு வந்தாலும் சேதிக்கக்கூடாத வியூகமொன்றைக்கட்டி நான் அதில்முண்டி நிற்பேனேயாகில், திரிமூர்த்திகளாலும் வெல்ல முடியாது. என்னாலியன்றமட்டும் பார்க்கிறேன் என்றார். வல்லமைசாலிகளாகிய சுத்தவீரர்கள் தங்கள் வல்லமையை வெளிவிட்டுப் பேசமாட்டார்கள், அப்படியிருக்க என் தந்தை

யரும் அர்ச்சுனனும் தங்கள் தங்கள் ஆண்மையினுல் செயிக்கிறேமென்கிற உண்மைத்திறமையும் பகைவருடையவின்மையையும் நாளைப்போரில் நீரேபார்க்கப்போறீர் காவலனே, ஒன்றுக்கும் யோசியாதீர் என்று அசுவத்தாமா வற்புறுத்திநிறுத்திவிட அவரவர் தம்தம்படுக்கைகளிற் சாய்ந்தனர். துரியோதனன் பாசறையில் நடந்தசங்கதிகளையெல்லாம் தூதுவரால் தருமர் அறிந்து, துரோணர் முதலிய பலவான்கள் முனைந்துவந்தால் எப்படி நாம் வெல்லப்போறோமென்று மனஞ்சோர்ந்து தெய்வசகாய மிருந்தால் மாத்திரம் பலிக்கும், மனுஷசகாயம் உதவாது, தேவரீர் கிருபை செய்வீராகில் பராக்கிரமவிஜயனுக்கு இஃதெம்மாத்திரமென் றெல்லோருஞ் செயங்கூறினர்கள். அர்ச்சுனனைப்பார்த்து நீ என்ன சொல்லுகிறுயென்று கருணாநிதி கேட்க வில்லாளி விளம்புகின்றான். ஓ மெய்த்தெய்வமே, எங்களை யாண்டிரட்சிக்கும் தேவரீருடைய கிருபையும் அருளும் பூர்ணமாயிருக்கும்போது, நாம் நினைத்தகாரியம் முடிவதற்கு ஐயமா! நாளைப்போரில் தேவேந்திரன் முதலிய அஷ்டதிக்குப்பாலகரும் சிருஷ்டிகர்த்தாவும் சைந்தவனுக்குத் துணைவந்தபோதிலும் அவர்களை அகற்றி அவனை முடிக்கிறது முடிக்கிறதே என்றான். இம்மட்டும் போதும், கெட்டிக்காரன்தான், வீணனகாரியத்தை விளைவித்துக்கொண்டாயே யென்று சில பலமொழிகளை ஸ்ரீகண்ணன்மொழிய அர்ச்சுனன் கோபந்தணிந்து, ஓகோபாலா! என்புத்திரனை யுத்தகளத்திற்போய்ப் பார்த்துவருகிறேனென்று எழுந்தான். இராக்காலத்தில் இரணக்களத்தில் படைத்தலைவர் போய்ப் பார்க்கக்கூடாதென்று ராசதர்மம் இருக்க, நீ எப்படி போகலாம் என்ன, அர்ச்சுனன் வணங்கி என்குழந்தையின் முகத்தைப்பார்த்தாலொழிய என்குறைதெளியாது இரகசியமாயாவது போய்ப்பார்ப்போம் வாருமென்ன, அர்ச்சுனனுடன் சகோதராளும் புறப்பட்டு ரணக்களத்தில் வந்தபோது, போர்க்களத்தைச் சுத்திசெய்யுங் காரியஸ்தாள் அபிமந்யுவையெடுத்துத் தைலமாட்டிப் பரண்மீதேற்றப் பக்குவம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். குழந்தை முகத்தைப்பார்த்த விஜயனும் மற்றையரும் பூமியில் விழுந்து பிரலாபித்தார்கள்.

பாண்டவர்களே! உங்களுக்கு நேரிட்டிருக்கிற சங்கடங்கள் தலைக்குமேல் வெள்ளமாயிருக்க, அதுகள் எப்போ நீங்குமென்று நான் இரவும் பகலும் நித்திரைகொள்ளாமல் இருக்கிறேன், அருமையுணராத அவசரக்காரன்போல் ஆத்திரப்பட்டு சபதங்கூறினன். இதற்கு வேண்டிய முயற்சியை ஈசுவரானுக்கிரகத்தால் பெறவேண்டியிருக்கிறது, தெய்வச்செயல் எப்படியோ அறியேன். நீங்கள் பாசறைக்குப்போங்கள் என்று அனுப்பிவிட்டு, அர்ச்சுனனை மாத்திரம் இட்டுக்கொண்டு, அவன் பத்தினிமாரிடம் போனர், இவர்களைக் கண்டமாத்திரம் சுபத்திரை துரோபதை உத்தரை முதலியோர் மிகவும் அழுதார்கள். அவர்களுக்கு வெகுவாய்த் தேறுதல் சொல்லி விசனத்தை மாற்றி, இங்குலிக நீர்கரைத்து ஆறு எள்ளுப்பூவையும் அதில்போட்டு பந்துக்கள் வந்துகாணும் உலகசாங்கியத்தை நிறை

வேற்றி அவரவர்களைப் பாசறைக்கனுப்பிவிட்டார். பிற்பாடு அன்றிராத்திரியில் அரிவாசுதேவன் அர்ச்சுனனைக் கூட்டிக்கொண்டு ஒரு சோலையை நோக்கி நடந்தாரென்று வைசம்பாயனர் சொல்ல, ஜநமேஜயன் வணங்கி, சுவாமீ! இங்குலிகநீரில் ஆறு எள்ளுப்பூ இட்டுத் துக்கம் நோக்கினார்கள் என்று திருவாய்மலர்ந்தருளிய வாக்கியத்தை சந்தேகமறச்செய்யுமென்ன அரசே இங்குலிகநீர் என்பது சுரோணிதம், எள்ளுப்பூவென்பது சூக்ஷ்மமாகிய சுக்கிலம், இதை வைத்தகாரணம் யாதெனில், அபிமந்யுவின் பாரியாள் உத்தரை கர்ப்பவதியாயிருப்பதினாலே, பின்னுக்கு சந்தேகமுண்டாகாதபடி வைக்கப்பட்டதென்றறிக. இந்த கர்ப்பந்தான் உன் தந்தையாகிய பரிச்சித்துமகாராசன் என்றார். கிருஷ்ணமூர்த்தியானவர் என் மூதாதை அர்ச்சுனமகாராசனை ஒரு ஆரணியத்துக்குள் அழைத்துப்போனார் என்றீரே, அப்பால் நடந்த கதையை அருள்செய்யவேணுமென்ன, வைசம்பாயனர் வகுக்கலுற்றார். செகந்நாதனாகிய கிருஷ்ணபகவான் அர்ச்சுனனை அழைத்துக்கொண்டு ஆரண்ணியத்துள் செல்லும்போது அர்ச்சுனன் காலமே புசித்தபின் இந்நேரமட்டுஞ் சண்டையினாலும் துக்கத்தினாலும் பசியினாலும் வருந்தினவனாகி வழிநடக்கக்கூடாமல் கால்தடுமாறி வருகிறவனுடைய முகத்தை நோக்கி, வாட்டமில்லா மகிழ்வுடைய நின்முகம் வாடியகாரணம்யாது, நாம் நோக்கிப் போகுங்காரியம் விசேஷமானது. அதைப்பெற்றால்மாத்திரம் நீநரன் என்றும் நான் நாராயணனென்றும் இதுவரையிலும் பெற்றபெயர் இன்னங் கொஞ்சநாளைக்கு இருக்கும் இல்லாவிடில் நாம் இல்லாமற்போன தன்மையாகும், மைத்துனனே! நான் சொல்லுகிற வார்த்தையைச் சற்றுநிதானித்துக்கேள். இவ்விடத்தில் அநேகம் பண்டுபலாதிகள் இருப்பதினாலே உன்னுடையபசியை தீர்த்துக்கொண்டு புறப்பட்டால், நினைத்துவந்த வேலைமுடியும், சபதமும் நிறைவேறும். ஆலசியம் பண்ணாமல் சாப்பிட்டுக்கொள் என்று மாதவன்கூற, இராக்காலத்தில் மகாதேவர் பூசாவிதிமுடித்துக்கொள்ளாமல் சலபானஞ் செய்கிறதில்லையென்கிற என்விரதம் தேவரீருக்குத் தெரிந்திருந்தும், பலாதிகளைப் புசிக்கும்படி என்னை ஏளனம் பண்ணுகிறீரே என்றான். அப்பா அர்ச்சுனா! என் அருமைமருமகனைப்பறிகொடுத்து ஆவியும் உடலும் அலக்கலக்காயிருக்கின்ற நான் என்ன சந்தோஷத்தைக்கண்டு உன்னை ஏளனம் பண்ணப்போகிறேன். அப்பா! உன்னை போசனஞ்செய்யும்படி ஏன் சொன்னேனென்றால், தேகம் சோற்றாலெடுத்தசுவர், பசிவருமாகில் யாவுங்கெடும், வீட்டில் செய்யும் பூசையினும் காட்டிற் செய்யும் பூசை மிகச் சிறந்ததென்றறி, இங்கே அந்தப்பூசையைச் செய்யலாமென்றதற்கு, ஈசன் திருவாராதனையாகிய பூசைப்பெட்டியை நான் கூடக்கொண்டுவர இல்லையே. இப்போது நான் என்னசெய்வேனென்று பீபத்சு என்னும் பெயரிய அர்ச்சுனன் வருத்தப்பட்டபோது, சமயங்கள் தோறும் நிறைந்திருக்கும் சநார்த்தனன், சுருதி குரு சுவானுபவ மென்னுந் தூய்மையால் கடவுளை பேதமினையாக் கருத்தினையுடைய காண்டீபனே! எல்லாச் செய்கைக்கும்

மனம் காரணமாகையால், கவலையை ஒழித்து உன்மனதை ஒருவழிப்படுத்தி நன்மைக்கு நாயகமாகிய நம்பனை உன்மனத்துட்படுத்தி கணப்போதேனும் வழுவாமல் மாறுபடாமல் பேதமில்லாமல் துணிவோடிருந்து சிவலிங்கமூர்த்தமாக என்னையேற்படுத்தி சிந்தித்து என் தலையிலுந் தேகத்திலும் பத்திர புஷ்பங்களைச்சாத்தி ருத்திரமந்திரத்தை உருவேற்றி சகஸ்திர நாமார்ச்சனை செய்வாயாகில் ஈசுவரனுடைய திருவுளங்களித்து உன் மனோபீஷ்டங்களெல்லாம் நிறைவேறுமென்று மாதவன் உரைக்க, சுரேந்திரமைந்தன்கேட்டு, யதுகுலத்தோன்றலே! தேவரீரை சிவலிங்க மூர்த்தமாக நான் சிந்திப்பதெவ்வண்ணமென்று வினவியபோது, பரந்தாமன் தன் இரண்டு கால்களையுங் குத்துக்காலிட்டு இரண்டு கைகளாலும் முழந்தாளை யோகப்பட்டைபோற் கட்டிப் பிடித்துக்கொண்டு பத்துவிரல்களையும் கும்பிடுந் தன்மைபோற் குவித்து லிங்கமுகமாக இருந்தார். இந்தப் பிரகாரம் பிர்மா விஷ்ணு ருத்திர ரென்னும் மூன்றுருவுகளுஞ் சிவலிங்கமூர்த்தமென்கிற ஆகமப்பிரமாணப்படி அமைந்திருந்தார். ஆதி மூலப்பொருளாகிய கேசவன். இந்த சிவலிங்க ரூபத்தை வில்வல்லவன் கண்டு ஸ்நானஞ்செய்து புஷ்பம் பத்திரம் முதலிய அபிஷேக திரவியங்களையுஞ் சேகரித்துவந்து ஏகாக்கிரசித்தனாகி அவரை ஆராதித்து அளவிறந்த சிவநாமங்களைச்சொல்லிப் பிரதட்சணஞ்செய்து ஏகாங்க திரியாங்க பஞ்சாங்க சப்தாங்க அஷ்டாங்க நவாங்க தசாங்க சாஷ்டாங்க நமஸ்காரங்கள்செய்து, பாடித்துதித்த பார்த்தனுடையபக்தியைப்பாண்டவர்சகாயன்கண்டு மகிழ்வுகொண்டு, என்மைத்துனனே கேளாய், அரன் அரிஎன்றுரைக்கும் இரண்டுபொருளும் ஒன்றன்றிவேறல்ல, வேருய்க் கருதினார்க்குமாத்திரம் வேருகும், இந்தஉண்மையை உன்னுடைய மனசில் ஸ்திரப்படும்படி தெரிவிக்கிறேன். அதாவது, என்சிரமுதற்பாதபரியந்தம் நீசாத்தியபுஷ்பதினுசுகளையெல்லாம் மாருமல் உன்சிந்தையில் குறிப்பாய்வைப்பாயாகில், இதுகளெல்லாம் அந்த சிவபெருமானுடைய அவயவங்களில் இருக்க உனக்குக்காட்டுகிறேனென்றுவாழ்த்தி, நைவேதனஞ்செய்தகனிகளை அர்ச்சுனனுந்தானும் புசித்து தாகசாந்திசெய்து, அப்பால் சற்று தூரம் நடந்துவந்து, வாசனைநிறைந்த மணல்தடத்தில் அர்ச்சுனனை நிறுத்திக்கொண்டு உண்ட இளைப்பு தொண்டருக்கு முண்டென்பதனால் சற்று நேரம் படுத்து நித்திரைசெய்து அப்பாற்போகலாமென்று தர்ப்பைப்புல்லுகளை பூமியிற்பரப்பித் தானும் அர்ச்சுனனும் அந்தப்பாயலின்மீது உட்கார்ந்தார்கள். அப்போது அர்ச்சுனனானவன் சுவாமியின் துடைமீதுதலையைவைத்துப்படுத்துத் தன்னைமறந்து நித்திரைபோனான்.

அவ்வேளையில் இந்திரன்முதலிய தேவர்கள்வந்து நந்தநந்தனனைதுதித்துநிற்க, அருட்கடலானவர் தன்துடைக்குப்பதிலாக மணலைக்குவித்து அவன் தலைக்குத் தலையணையாக்கிவிட்டுத் தான் எழுந்து வாசனைப்புஷ்பங்களை விஜயனுக்கு நாலுபக்கத்திலும் தூவி விற்படை வேற்படை வாட்படை கதைப்படையாகிய நாலுவித ஆயுதங்களை நாலுபக்கத்திலுங் காவ

லாகநட்டு வனதேவதை முதலிய தேவதைகளைக் கைதொழுது காண்டீப னைப் பிராணபயமில்லாமற் காருங்கள் என்று வேண்டிக்கொண்டு, அவி டம்நீங்கி சிறிதுதூரம்போய் ஒருமேட்டின்பேரில் உட்கார்ந்து தன்னை வந்து பணிந்த இந்திரன்முதலியவர்க்கு வேண்டிய வார்த்தைகளைச்சொன் னார். அஃதாவது, நரனுக்கும் நமக்கும் பயமில்லை நாரிபாகனிடத்தில் பாசுபதாஸ்திரம் பெறப்போகிறோம். குறைவில்லாமல் பூமிபாரம் தீரும் உங்கள்குறையும் நீங்குமென்று அவர்களை அனுப்பிவிட்டு, பரமபதத்தி லிருக்கும் தன்சாரதி தாருகனைவரும்படி ஸ்மரித்தார், உடனே தாருகன் பிரத்தியக்ஷமானான். அவனை நோக்கி இந்தபூமிபாரந் தீர்க்கும்படி பரம பதம்விட்டுப் பாண்டவருக்கு உதவிசெய்ய பூலோகத்தில் வந்து அவர்க ளுக்குத் துணையாகி நிற்கிறேன். காண்டீவக்காளை தன்பிள்ளை அபிமந்யு இறந்த ஆயாசத்தால் நாளை அஸ்தமனத்துக்குள்ளே சிந்துராசனைக்கொல் லுகிறேனென்றும் இல்லாவிடில் நெருப்பில்விழுந்து இறக்கிறேனென்றும் சபதங்கூறியிருக்கிறான். இச்செய்தியைக்கேட்டு, எதிரிகளும் பலங்கட் டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சபதம் நிறைவேறுவது இலகுவல்ல. அர்ச்சுனன் கூறியபிரகாரம் வெற்றிபெறுவானாகில் மெத்தவும் நல்லது, அந்தச்சபதம்முடிய கொஞ்சம்வருத்தம் நேரிடுமாகில் ஆயுதமெடுப்பதில் லையென்றுரைத்த நாம் ஆயுதமெடுத்தோமென்று உலகத்தார் நம்மை தூ ஷித்தாலும் தூஷிக்கட்டுமென்று துணிந்து தேரேறிச் சக்கராயுதங்கைக் கொண்டு யாவரையும் முடித்து அர்ச்சுனன்சொல்லை நிலைநிறுத்தவேண்டி யிருப்பதால், பெருமைபொருந்திய சாரதி! நாளைப்போரில், நரன்ஒருவே ளைஇளைப்பானாகில், தக்ஷணம் பாஞ்சசன்னியத்தை முழக்குவேன். அந்த ஓசைகேட்ட நொடிக்குள்ளாக பஞ்சாயுதங்களையும் தேர்மேற்கொண்டு என்னெதிரில் நிற்கவேண்டும் என்று திருமாலானவர் ஒருதரமாத்திர மல்ல பலதரமும்சொல்லி அன்றிராத்திரிமுழுதும் அவனுடன் இருந்தார்.

புத்திரசோபத்தினாலும் சபதத்தினாலும் உள்ளுடைந்து நாம்சொன் னசபதத்தை யெப்படியும்முடிக்கவேணுமே, சம்போ சங்கரா சக்கிரதரா என்று ஆசைகொண்டவனாய் அயர்ந்து சொர்ப்பனாவஸ்த்தையில் நித்தி ரைபோன அர்ச்சுனனுடைய கனவில், கருங்கடல்வண்ணன்வந்து அவன் கருதியவண்ணம் கைகூட்டிவைத்தார், அரசனே என்று வைசம்பாயனர் கூறவே, பரமாத்துமாவாகிய பண்ணவன் சாரதி தாருகனுடன் பேசிக் கொண்டிருந்தவர், அர்ச்சுனன் கனவில்வந்து பிரவேசித்தாரென்பதுஎன க்கு அதிவிந்தையாயிருக்கிறது,அந்தரகசியத்தைநான் அறியவிரும்புகிறே னென்று ஜநமேஜயன்கேட்க, இந்த இரண்டு இடத்திலும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி இருந்தாரென்றது ஆச்சரியமல்ல,அவர் எப்பேர்ப்பட்டவரெனில், கடல்சூழ்ந்த உலகமெல்லாம் தன்கர்ப்பத்தினின்று புஷ்பிக்கவும் உலகில் நிறைந்த ஆத்துமகோடிகடோறும் சீவாத்துமாவுக்குள் பரமாத்துமாவா ய்த் தவழ்ந்துகொண்டிருக்குந் தன்மையர், அவர்எங்கும் இருப்பவர், அர சனே உங்கள் மூதாதை விஜயன் சொப்பனாவஸ்தையில் பரிபூர்ண உருவ

மாகிய புண்ணியனைக்கண்டு, தான்கொண்ட சோபமெல்லாம்விண்டு புண்டரீகன் பாதத்தைச் சிரமேற்கொண்டு கண்ணீர்விட்டழும்போது, அவர் விஜயனை எடுத்து மார்போடணைத்து உனக்கேதாகிலும் குறைவானால் சொல், அதை நிவிர்த்திக்கிறேனென்று கமலநாபன்கேட்க, விஜயகாண்டீபன் சொல்லுகிறான்.

மனத்துயர்மாற்றும் மாதவனே! நாளையுத்தத்தில் பிரமாமுதல்யாவரும் சைந்தவனுக்குத்துணையாகி என்சபதம் நிறைவேறவொட்டாமல் தடுத்தபோதிலும், நான்கூறிய சபதப்படி நிறைவேற்றி செயத்துடன் வரும்படியாய் என்சிந்தையில் துணிவு கொண்டிருக்கிறேன், இதற்கு தேவரீர் சகாயம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தபோது, அப்பா மகனே, நீ சொல்லியபடி முடிப்பது மெத்தவும் அருமை, ஆனாலும் நீ இளைப்பு நித்திரை யாவத்தையும் விட்டு என்னுடன்கூட வருவாயாகில், புராதனநாயகனாகிய புராந்தகன் உறையுங் கையிலையங்கிரியைக்கண்டு தெரிசித்துக்கொண்டு சூரியோதயத்துக்கு முன்னே யுத்தகளம்வந்து சேரவேண்டியிருப்பதால், சீக்கிரம் புறப்படு என்றார். அதற்குடன்பட்டு அவருடன் கூடப் போனான். பிரமா விஷ்ணு ருத்திரன் என்னும் மூவுருவமும் ஒருருவாய் அமைந்த கையிலையங்கிரியை நோக்கிவரும்போது, சிவபூசையில் நம்மைவிட அதிகபக்திமான் கிடையாதென்று மனதில் கர்வித்த தனஞ்செயனுடைய நினைப்பை சர்வ்சீவதயாநிதியாகிய சகாயனுணர்ந்து, இவனை கர்வபங்கம் பண்ணவேணுமென்று கருதியவேளையில், அநேகசிவகணங்கள்பூதகணங்கள் கோடாகோடிகூடைகளில் தினுசுவாரி நிர்மாலிய புஷ்பங்களை வாரிவாரிக்கொண்டுவந்துகொட்டிஅலுத்து, அப்பாஇப்படிசிவபூசைசெய்யும் மனிதன் ஒருவன்இருப்பானாவென்று வெயர்த்துப் பெருமூச்சுவிட்டு இரைந்து பேசிக்கொண்டு போம்போது, அர்ச்சுனராசன் வாசுதேவனைப் பார்த்து இதென்ன விபரீதம், இவ்வித புஷ்பம் எந்தலோகங்களில் உண்டு ஈசுவரசிருஷ்டியில் இல்லாத புஷ்பங்களையெல்லாம் இப்போதுகண்டோமே, சிவார்ச்சனைசெய்வதற்கு இந்த புஷ்பங்களை கூடையில் வாரிவாரிச் சொரிந்தாலும் எத்தனையோகோடிகாலஞ்செல்லுமே, எந்தமனிதன் இப்படிப்பூசிப்பான், இதன்தத்துவத்தைச் சொல்லுமென்றுகேட்டான். அப்பா!எனக்கொன்றுந்தெரியாது, இப்பேர்ப்பட்ட சிவார்ச்சனைசெய்தபேர் உண்டென்பதைக் கனவிலுமறியேன் என்று, அவ்விடமிருந்த சிவகணங்களைப்பார்த்து, இப்பேர்ப்பட்ட பூசைசெய்யும் அன்பர் யாரென்றுவினவ, பூமியில் அவதரித்திருக்கும் பாண்டவர்களில் பீமசேனனுக்கு மானசபூசையாக பூசிக்கும்வேலையும் மணஞ்செறிந்த அவன்மனம்நிறைந்தமலர்களை நாங்கள் வாரிவாரிக்கொட்டும் வேலையும் உள்ளநாளுள்ள மட்டும்எங்கள் தலையெழுத்தாயிருக்கிறது. பெட்டிமகன் ஒருநாளாகிலும் எமாறுனா, நாலுகூடை இரண்டுகூடையாவது குறைக்கானா, என்று சொல்லிப்போய்விட்டார்கள். இதைக்கேட்ட அர்ச்சுனன் நாராயணனைப்பணிந்து, என் அண்ணனாகிய பீமசேனனுடைய அன்பு இப்பேர்ப்பட்டதோ, அடியேன்

சிவபூசையில் மிஞ்சினவனென்று கொஞ்சங்கர்வமடைந்திருந்தேன், மாய வனே இந்த உத்தமனுடைய மானசபூசையின் மகத்துவத்தைக் கேட்ட வுடன், என் ஆணவங்குன்றி மாய்ந்தேனென்று மிகுந்தபயத்துடன் வருந் திய அர்ச்சுனனைத்தேற்றி, இந்தபூலோகத்தில் தவம் அன்புமுதலிய சத்தி யங்களில், இன்னான் சிறந்தவன் என்று யாரைச்சொல்லலாம், இந்த ஈச னுடைய திருவிளையாடல் எப்படிப்பட்டதென்று நாம் அறிவோம். அவ ரவர்கள் இருதயத்திலிருந்து சிந்திப்பவனும் பூசிப்பவனும் சிந்திக்காதவ னும் பூசிக்காதவனும் அவனேயாகியிருப்பானாகில், நாம் இன்னவிதம் என்று எவரைச்சொல்லலாம் என்று பேசிக்கொண்டேபோய் கயிலையங் கிரியில் உறையும் பரமேசுவரனைக்கண்டு பணிந்தபோது, உமாபதியான வர் அவர்களைப்பார்த்து கிருபை புரிந்து, இதுவரையிலும் நடந்ததெல் லாம் சுபமாஎன்று திருவாய்மலர்ந்தருள, மோக்ஷமுதல்வனாகியமுத்தனே தேவரீர் கண்ணருளினாலே எங்கள் புத்திக்குப் போதுமான க்ஷேமத்தை அடைந்திருக்கிறோம் என்றார்கள். இந்த இரவில் வந்த காரணம்யாது, நீங் கள் விரும்பியவரங் கொடுப்போமென்று விடையோன் விளம்ப, நரநாரா யணாள் இருவரும் அவரை வணங்கிச் சொல்லுகின்றார்கள்.

சத்துச் சித்தானந்தமாய் விளங்குஞ் சாம்பசிவமே! தேவரீர் முன் னால் அநுக்கிரகஞ் செய்தருளிய பாசுபதாஸ்திரத்தால் காலகேய நிவாத கவசர்களைக் காய்ந்து தேவர்கள் குறையைத் தீர்த்தோம். மறுபடியும் அந்த அஸ்திரத்துக்குரிய முஷ்டிநிலையும் மந்திரமும் சாகசமும் எங்களுக் குப்பிடிபட அருள்செய்தால் பாரதயுத்தத்தில் துரியோதனன் முதலிய மன்னர் படைகளைவென்று பூமிபாரந்தீர்ப்போம் அவ்வண்ணம் அநுக் கிரகிக்க வேண்டுமென்று மன்றாடினார்கள். கொன்றைமாலை புனைந்த கௌரிபாகன் கேட்டு அன்புகூர்ந்து, முன்னே நாம்கொடுத்து உங்களிட மிருந்து திரும்பிவிட்ட அந்த வில்லும் பாசுபதாஸ்திரமும் கையிலையின் வாயுமூலையிலிருக்கும் ஒரு தடாகத்தில் இருக்கின்றது, நீங்கள் சத்தியஞ் சவுசம் ஆசாரமுள்ள உத்தமர்களாகையால் அவிடம்போய் அதைஎடுத்து வாருங்கள் என்றனுப்புவித்தார். இவர்கள் இருவரும் தடாகத்தடியில் வந் துநோக்கிப் பார்த்தபோது, சொல்லுதற்கரிய அநேகமாயிரம் படங்கள் விரிந்தோங்கிய இரண்டு சற்பங்கள் வாடைக்காற்றுப்போற் சீறி வாலடித் துப்புரண்டு, வந்தவர்களைக் கிட்டி நெருங்கவொட்டாமல் செய்தளவில், நரநாராயணாள் நடுநடுங்கித்தியங்கித் திரும்பும்போது கூடவந்த சிவனடி யார்கள் அவர்களைத்தேற்றி, இது நாகசற்பமல்ல; ஆதிமூர்த்தியாகிய எம தண்ணலால் போடப்பட்டவில்லும் பாசுபதாஸ்திரமும் இதுதான் என்று புகன்று, நீங்கள் சுசி ஆசாரங்கள் குறைந்திருப்பதால் இப்பேர்ப்பட்ட விபரீதமாகி தோன்றுகிறது, உங்கள் நித்திய விதியை முடித்துக்கொண்டு அர்த்தநாரீசுவரரை நினைத்து பக்தியோடு விரும்புவீராகில், இவை உங் கள் கைக்கெய்துமென்று சொல்லவே, அவர்கள் அம்மொழிவழித்தேறி ஸ்நான முதலியதுசெய்து ருத்திரமந்திரத்தை நூறுதரஞ் செபித்தார்கள்,

உடனே பாம்பாகத்தோன்றிய வில்லும் பாசுபதமும் யதாரூபமாய்ப் பிரகாசித்தன. அதுகளை எடுத்துவந்து சதாசிவத்தின் சந்நிதானத்தில் வைத்தார்கள். அவ்வேளையில் பரமன் தமக்கெதிர் நின்ற அதிகார நந்திதேவரை அழைத்து, இந்தவில்லின் முஷ்டிநிலை யாவற்றும் நரநாராயணர்க்குக் காட்டிக்கொடும் என்று கற்பிக்க, அந்தப்படியே நந்தி சொல்லிக்கொடுக்க இருவரும் முழுவதுமுணர்ந்து, இதின்மந்திரத்தையும் அருள்செய்யவேணுமென்று பிரார்த்தித்தபோது, பாசுபதாஸ்திரந் தொடுக்கும் பிரணவத்தை அர்ச்சுனன் செவியில் உபதேசித்து, நீங்கள் பூலோகத்துக்குப் போய் பாவிகளாகிய சத்துருக்களை முடித்து பாரதத்தை நிறைவேற்றி மேன்மையடையக்கடவீர்கள் என்று வாழ்த்தி, இந்த தநுசையும் பாணத்தையும் முன்னிருந்த தடாகத்தில் விட்டுப்போட்டுப் போங்கள், அதுகள் உங்கள்பால் வரும் என்று அருள்செய்ய, அதுபோல் அவர்கள் செய்துவிட்டு, மறுபடியும் அந்திவண்ணன் திருவழகையும் அங்குள்ள தெய்வாலயங்களையுஞ் சுற்றிப் பார்த்துக்கொண்டு, நீலமேகத் திருவுருவாய் வந்த நெடுமாலை சிவலிங்க மூர்த்தமாகக்கண்டு வனத்திற் பூசித்து அர்ச்சித்த புஷ்பங்களை எந்தெந்த அவயவங்களில் வைத்தானோ அந்தந்த இடங்களில் அப்படியே இருக்கக்கண்டு, புத்தி பூர்வமாய்த் தெளிந்து மகிழ்ந்தான். கேளும் ஜநமேஜயராசனே! முன்னம் விஜயன் தவஞ்செய்தபோது ஜெகந்மாதாவுடன் வேடரூபங்கொண்டு வரக்கண்டான், பிற்பாடு ரிஷபவாகனரூடராய் வரக்கண்டான். இப்போது சகலவுயிருக்கும் தாய்தந்தையாகிய உமாமகேஸ்வரரைக் கயிலையில் கண்களிக்கக்கண்டு பணிந்தான். நற்றவத்தோன் என்று உங்கள் பாட்டனாகிய அர்ச்சுனன் ஒருவனைச் சொல்லவேண்டுமேயல்லாது மற்றொருவரையுஞ் சொல்லப்படாதென்று வைசம்பாயனர் சொல்லி மேலுங் கூறுகின்றார்.

சங்கரனவர் நரநாராயணரை தன்மனத்துள் மதித்து, நீங்கள் போய் இந்தக்காரியத்தை முடித்துவரக் கடவீரென்று விடைகொடுத்தருள, சந்திரனைக்கண்டு சலசலவென்று பொங்குங்கடல்போலிரைந்து மகிழ்ந்து கயிலையினீங்கிக் கேசரிமார்க்கமாய் பூமியில் வந்து பாசறைபோய்ச் சேர்ந்தார்கள். இந்தச் சம்பவங்களை யெல்லாம் அர்ச்சுனன் கனவாகக் கண்டு ஆச்சரியப்பட்டுத் திடுக்கென்றுவிழித்துத் திருமாலைக்கூவியபோது தாருகனையனுப்பிவிட்டு, ஏன் அருச்சுனா இதோ இருக்கிறேனென்று ஓடிவந்து, அருண்டெழுந்த அர்ச்சுனனை அணைத்து, என்மைத்துனா! படபடவென்று உன் உடல்பதறுதே ஏனென்றுகேட்க, நான் ஒரு சொர்ப்பனங் கண்டேனென்றான். கண்ட சொற்பனத்தை விவரித்தபோது பகவான் நகைத்து, இதென்ன நீ பித்தனாயிருக்கிறாய், புத்திரன் இறந்த துக்கத்தினாலும் சபதங்கூறிய கலவரத்தினாலும் பித்தந்தலைக்கேறி இப்பேர்ப்பட்ட நினைவு கனவாக விளைந்திருக்குமென்று பரிகாசித்தார். அதைப் பற்குனன்கேட்டு நான்கண்ட சொற்பனத்தைக் கலவரமென்று சொல்வீராகில், இதோ பாரும் அந்த வில்லின் முஷ்டிநிலை பாசுபதாஸ்திரம் மந்திரநிலை

இவைகளையெல்லாம் ருசுவில் கேளும், இதன்றியும் இதோவில்லும் பாண மும் அடியேன்கையில் வந்திருக்கிறது என்று கனவிற்கண்ட காட்சிகளை யெல்லாம் கருத்தைவிட்டகலாமற் சொல்லிக் காட்டியபோது, இதுவரை யினும் சொர்ப்பனத்திற் கண்டபொருள் மெய்ப்படாதென்று பெரியோர் சொல்லுவர், ஏதோ உன் அதிஷ்டம் கைகூடிவந்தது, உன்னுடையசபதம் நிறைவேறும் தடையில்லையென்று சூரியோதயத்தில் ஒரு குளக்கரையில் வந்து காலைக்கடனை முடித்துக்கொண்டிருந்தார்கள். இவ்விடத்தில் நடந்த சங்கதி ஒன்றுந்தெரியாத தர்மராசன் நானாவித வியாகூலங்களால் நித்தி ரையில்லாதிருந்து, பொழுதுவிடிந்தவுடனே தங்கள் கடன்களை முடித்து விட்டு தம்பிமார் முதலிய அனைவரையும் யுத்தசன்னுத்தராகக்கொண்டு, கிருஷ்ணார்ச்சுனனை யெதிர்நோக்கி யிருக்கிறாரென்று திரிதராஷ்டிரனுக்கு சஞ்சயன்சொல்லித் திரும்பினதாக வைசம்பாயனர் ஜநமேஜயமகாராச னுக்குச் சொல்லியவண்ணம் உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று நைமிசாரண்ணியவாசிகளுக்குச் சூதபுராணிகர் உரைத்தருளினர்.

பதின்மூன்றும்போர்ச் சருக்கம்-முற்றிற்று.

பதிநான்காம்போர்ச்சருக்கம்.

விருத்தம்.

அரியதண்கலைவாண் மதியமுங்குதிகொ ளாலமுந் தனதிடத்தடக்கி
உரியவெண்கங்கா நதிக்கொருபதியா யுரைபெறு முயர்மகோததியிற்
பரியதிண்சிலையோ டம்பெலாமுகந்து பற்குணப்பொற்பிடை பொழியுங்
கரியவண்புயலைக் கைதொழுபவரே கருவிலே திருவுடையவரே.

கேளும் ஜநமேஜயமகாராஜனே, தருமபுத்திரர் பிராதக்காலமெழு ந்து நேமங்களை முடித்துக்கொண்ட பின்னர், மூன்று தம்பிமார்களும் மற்ற அரசர்களும் சூழ்ந்துவரக் கொலுமுகத்தில் வந்து, என்தம்பி அர்ச் சுனனும் ஸ்ரீகிருஷ்ணனும் நேற்றிராத்திரிபோனவர்கள் இன்னம் வரக்கா ணோம், புத்திரவாஞ்சையால் அர்ச்சுனன் உயிர்விட்டானோ அல்லது அம ரைவெறுத்து ஒழிந்தானோ, அவர்கள்கெதி எப்படியிருக்கிறதோ தெய் வமே! தெரியவில்லையே யென்று பலவாறுய்ச் சிந்தித்துக்கொண்டிருக்கும் போது, துவாரகாபுரிவாசன்மாத்திரம் தனித்துவருவதை சாரகரால்அறி ந்து அவரைக்கண்டவுடனே முகமலர்ச்சியாகி எதிர்சென்று அழைத்துப் போய் சாத்தகியுடன் சிம்மாசனத்தில் உட்கார்ந்தார்கள். அப்போது தருமராசன், தேவதேவனைப்பார்த்து அர்ச்சுனன்செய்த சபதத்தை முடி க்க அவனாலும் என்னாலும் முடியமாட்டாது. இதுவும் உன்கடனே ஏழை மீது இரக்கம்வைப்பாய் என்று குந்திமுதல்வன் இறைஞ்சிக்கேட்க, சுவா மியானவர் தலைகுனிந்து புன்னகைகொண்டிருக்கும்போது, காண்டீபன் அவ்விடம்வந்து எல்லோரையும் வணங்கிச் சந்தோஷமுகமாய் நின்றான்.

அறன்மகன்கண்டு, உன் குழந்தையைப் பறிகொடுத்து இனிப் பிழைப்ப தில்லையென்று அழுதகண்ணும் சிந்தையுமாகச்சென்ற என் இளவரசே, உன்துயரங்களை எங்கேகொண்டு கொட்டினாய், எப்படி தேறினாய், உன் முகத்தில் அமுதகிரணஞ் சொலிக்கிறதே, இந்த அதிசயத்தை எனக்குச் சொல்லவேண்டும், என் உயிருக்குயிராகிய தம்பியே என்றார். விஜயன் நகைத்து சுவாமியின் முகத்தை நோக்கும்போது, கண்ணன் சாடைகாட்டினார். கருத்தைத் தெரிந்துகொண்ட காண்டீபன் தருமருக்குக் கட்டுரையை விட்டுரைக்கத் தொடங்கினான். அநாதரக்ஷகனாகிய ஆபத்பாந்தவன் தன்னை இட்டுக்கொண்டு ஒருபெரிய வனத்துக்குள் போனது முதல் சொப்பனாவஸ்தையில் தான்கண்ட காட்சிகள்யாவையும் சவிஸ்தாரமாகச் சொல்லித் தான் பெற்றுவந்த வில்லையும் காண்பித்தான். யாவரும் அதிசயித்து நாமெல்லோரும் பிழைப்பதற்கு சிவனருள் கிடைத்ததென்று ஆர்ப்பரித்துச் சந்தோஷங்கொண்டாடினார்கள்.

அர்ச்சுனன் தருமராசனைநோக்கி, அண்ணா! தேவரீர் எனக்குச்சிரேஷ்ட பிதாவாயிருந்து செய்யவேண்டிய நன்மைகள் எவ்வளவோ அவ்வளவுக்குக் கோடிபங்கதிகமாக இந்தமாதவன் செய்த சகாயத்துக்கு வரையறையுமுண்டோ. ஐயா, தெளிவில்லாத நாம் என்னத்தையறிந்து சொல்லுவோம். ஆகாயத்திலிருக்கும் மேகங்களினால் உலகத்தில் அடங்கிய உயிர்ப்பிராணிகள் சுகம்பெறும்படியாயிருக்க, இந்த உயிர்களினால் மேகத்துக்கு யாதேனும் கைம்மாறுண்டோ. அதுபோல் நமது ஆண்டவனுக்கு நாம் என்னத்தைச் செய்யப்போகிறோமென்று பலவிதங்களாய்ப் பார்த்தன் துதிக்கும்போது, தருமராசனவர் மாதவனை நோக்கி, தாமோதரனே எங்களுக்காக வருத்தம் எடுத்துக்கொண்டு, கைலையங்கிரிக்குச்சென்று பாசுபதாஸ்திரம் வாங்கிக்கொடுத்த பட்சத்தைச் சொல்வதோ, அல்லது எங்கள் தந்தையை இழந்து சிறுவர்களாய்க் காட்டைவிட்டு நாட்டில்வந்த நாள்முதல் நாளதுவரைக்கும் வணங்காமுடியோன் செய்த வஞ்சகத்தால் நாங்கள் அழிந்துபோகாமல் எங்கள் துணையாக இருந்து காத்திரட்சித்து வரும் அன்பைச்சொல்வதோ, அன்றியும் அர்ச்சுனன்பேரில் பகதத்தன் சதாயு என்னும் சத்துருக்கள் விட்ட ஆயுதங்களை தேவரீர் திருமார்பில் தாங்கிக் காத்தருளிய அருமையைச் சொல்வதோ, நான் எத்தனையென்று சொல்லப்போகிறேன் இறைவனேயென்று புகழ்ந்து அர்ச்சுனன் கையைப்பிடித்து அருளாளன்கையில் ஒப்பித்து, ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! அன்று குந்திதேவிகர்ப்பத்தில் இருந்தோம், இன்று தேவரீருடைய கர்ப்பத்தில் பிறந்திருக்கிறோம். கார்க்கும்கடன் உனது கண்ணனே, முன்னம் ஆதிமூலமேயென்றழைத்த யானையைக்கார்த்தவனேயென்று கைகுவித்து நிற்குந் தருமனை நோக்கி கிருஷ்ணர் மொழிகின்றார். ஓய் தருமநந்தனரே! நீர் யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம். இந்த அர்ச்சுனனைக் குறித்த கவலை உமக்கு வேண்டியதில்லை. சுவாமி சகாயத்தால் சூரியன் அஸ்தமிக்கு முன்னே சைந்தவனை அடிவேருடன் முடிதறியச்சிதைத்துச் சபதம் நிறை

வேற்றி உம்மிடத்திற்கு வருவோம் என்றருளினர். உடனே சகல சன்னு கங்களுடனேயும் அமர்க்களம்வந்து ராஜமண்டலங்களையும் சேனைகளையும் நிரைசெய்து பலமான வியூகமாகக்கட்டிப் படைமுகத்தில்வந்த சேனுதிபதி திருஷ்டத்தியும்நன் முனைமுகத்தில் வந்து நின்றான். அவ்விடத்தில் இரவு முழுதும் நித்திரையில்லாதிருந்த எதிரிகள் விடிந்தெழுந்து தங்கள் சேனைகளை ஆயத்தப்படுத்திக்கொண்டு யுத்தகளத்தில் வர, படைத்தலைவர் துரோணுசாரியர் தன் சைநியங்களைப் பலவிதமாகப் பிரித்து அத்தியத்புதமான வியூகங்கட்டினர். அஃதாவது, மூன்றுயோசனை முப்பது நாழி வழிதூரம் சேனைகளை வட்டமான சூசிகாவியூகமாக ஏற்படுத்தினர். அதின் சங்கியமாவது, யானைகள் நாற்பதினுயிரம். தேர்கள் அறுபதினுயிரம். குதிரைகள் நூருயிரம். பதாதிகள் பத்துநூருயிரம். இதன் நடுமத்தியில் சைந்தவனை நிறுத்தி கர்ணன் அசுவத்தாமன் கிருபாசாரி சல்லியன் பூரிசிரவன் விடசேனன் முதலிய அதிரதத்தலைவர்களை யெல்லாம் சூசிகாவியூகத்தையும் சைந்தவனையும் காத்திரட்சிக்கும்படி அங்கங்கே நிறுத்தி வைத்து பஞ்சையாகிய அர்ச்சுனனால் இந்தவியூகத்தைக் கொலைக்க முடியாதென்று துரோணர் மெச்சிப்பேசி, சூசிகாவியூகத்தை மேலும் ஆதரிக்கும்படி பதுமவியூகமேற்படுத்தி அதற்கு கிருதபன்மன் கிருதவீரியன் காம்போசன் கன்னடன் கலிங்கன் முதலிய எண்ணிறைந்தபேரை மேற்றிசையில் நிறுத்தி, கலிங்கதேசாதிபன் முதலிய மகாரதத் தலைவர்களுக்கு மேற்காவலாக கிழக்குத்திசையில் துரியோதனனையும் அவன் தம்பிமார்களையும் அரமனைச் சேவகரையும் வைத்து, அக்கினிக்கோட்டை அமைத்திருப்பதுபோல் சமரதத் தலைவர்களாகிய விந்தன் அநுவிந்தன் முதலிய தேசராசாக்களை வடகீழ்த்திக்கில் அமைத்து, பங்காளம் யுகந்தரம் மராடம் மிலேச்சம் முதலாகிய மகாரதத்தலைவர்களைத் தெற்கில் நிறுத்தி, மலையாளன் சேரன் பாண்டியன் சீனர்முதலிய மன்னரை முன்னுற நிலைசெய்தார். சூசிகாவியூகமென்பது தாமரைப்பொகுட்டைப்போலும், சகரவியூகம் உருளையைப்போலும், பதுமவியூகம் தாமரைமலர்போலும், சகடதுண்டம் வண்டியின் வட்டைப்போலும் எட்டுத்திக்கில் நிறைந்த கொடுமுக வியாக்கிரதுண்ட வியூகம் புலிமுகம்போலும் இப்படியான வியூகங்கள் கட்டி துரோணுசாரியர் முனைமுகத்தில் விளங்கினர்.

இங்ஙனம் நிற்குஞ்சமயத்தில் துன்மருஷனென்பவன் இரண்டிலட்சஞ் சைநியங்களைக் கூட்டிக்கொண்டுவந்தான். அவனைத் தங்கள்சேனையின் அணியிற் சேர்த்து வகுக்க துரோணர் யோசித்தபோது, துரியோதனனுக்குப் படைத்துணையாய்வந்த நான், உமது ஒட்டிலிருந்துசெயித்தேன் என்கிறபேர் பெறுவதைப்பார்க்க விழுந்தாலும் எழுந்தாலும் உம்முடன் கலக்காமல் என்சேனைகளும் நானும் பாண்டவரை வென்று சைந்தவனைக் காக்கிறேம் என்று சேனுதிபதியை வெகு அலட்சியமாய்ப்பேசி, படைமுகத்தின் முன்சென்று அறைகூவி மார்தட்டி நின்றான். துன்மருஷன் நிற்குந் தைரியத்தைக்கண்டு கிருதபன்மனுக்கும் துச்சாதனனுக்கும் பவுருஷ

முண்டாகி, துன்மருஷனுடைய படைக்குமுன்னே தாங்களும்வந்து நின்ருர்கள். அவ்வேளேயில் அர்ச்சுனராசன் சாத்தகியைத் தேரிலேற்றி வைத்துக்கொண்டு எதிரிகள் நிற்கும் பலத்தைக் காண்பித்து துரோணுசாரியருக்குப் பட்டங்கட்டும்போது தர்மராசனைக் கைப்பிடியாய்ப் பிடித்துக் கொடுக்கும்படி வாக்குத்தானம் வாங்கியிருக்கிருர்கள். நான் இன்றைய தினம் சபதம் முடிப்பதற்காக சேனைகளை நாசப்படுத்தச் செல்லுகிறேன் நீர் இவ்விடத்தில் தர்மராசனை இடைவிடாமற் காத்திருப்பது உம்முடகடமையென்று சாத்தகியானவரை அவ்விடத்தில் நிறுத்தி வைத்தான். அப்பால் அர்ச்சுனனுனவன் தர்மரிடம் விடைபெற்று, உத்தமோசன், உதாரமனு என்னும் இரண்டு மைத்துனரும் துணைவரக்கொண்டு, துரியோதனன் சேனைகளை நாலாதிக்கிலும் மாளும்படி அடிக்கத்தொடங்குவதற்காக கிருஷ்ணமூர்த்தியும் அர்ச்சுனனும் சங்கங்களை முழக்கினுர்கள். அதனுல் எதிரிபடைகள் திக்பிரமைகொண்டு கலங்கினர். துரோணுசாரியர் கட்டிய வியூகத்தைக்கார்க்கிறேன் என்று இறுமாப்படைந்து நின்ருர். எதிர்த்துவரும் துன்முகனுடைய யானைப்படைமீது விஜயன் தன்தேரைச் செலுத்தும்படியேவி, துன்முகனுடைய நால்வகைச் சேனைகளையும் ஆவியழியமாய்த்தான். சேனைகள் நாலாவிதமாய்த் துன்புற்றுச் சேதமாவதை துன்முகன்பார்த்துச் சகியாமல், இந்திரகணை முதலிய அநேகபாணங்களையெடுத்து அர்ச்சுனன்மேலும் சாரதிபேரிலும் குதிரைகள் பேரிலும் விட்டடித்தான். அர்ச்சுனன் அதுகளைத் தன்பாணங்களால் தகைந்து முறித்தொடித்து வேறு அஸ்திரங்களால் துன்முகனைப் பின்னடையச் செய்தான். துன்முகன் பின்னிட்டோடுவதைப் பார்த்த துச்சாதனன் அர்ச்சுனனை யெதிர்த்து சொல்லரிய பாணங்களைப் பிரயோகித்தான். அர்ச்சுனன் அவன் பாணங்களை பஸ்மீகரம் செய்துவிட்டு, அவன் ஏறிவந்த தேரை நாசஞ்செய்து அவன் தேகமெல்லாம் ரத்தவெள்ளமாகும்படியடித்து அவன் எதிர்த்து நிற்கமாட்டாமல் பிராணன் தப்பினுல் போதுமென்ருேடும்படிசெய்தான். இந்தப்போரில் கரங்கள் அற்றவர் கால்களொடிந்தவர் தலை யறுப்புண்டவர் இவ்வளவென்று கணக்கிடமுடியாது. பின்னடைந்தோடுந் துச்சாதனனை உயுத்தத்திற் பின்னிட்டோடுவது ராசதர்ம்மமல்லவென்று அர்ச்சுனன் இகழ்ந்து இரண்டு வச்சிரக்கணைதொடுத்து அவன் முதுகைக் காயம்படப் பண்ணிவிட்டான். ஓடிப்போன துன்முகனும் துச்சாதனனும் தங்கள்சேனுதிபதியிடம் சொல்லிக்கொண்டிருக்கும் போது, ஸ்ரீகிருஷ்ணர் தன்தேரைத் துரோணுசாரியருக்கெதிரில் கொண்டுபோய் நிறுத்தினுர். ஆசாரியரைப்பார்த்த அர்ச்சுனன் கைகுவித்துத் தலைமேல்வைத்து, தேசிகனே! எனக்குத் தாயுந்தந்தையும் குருவும் நீரும் தருமருஞ் சரியென்று என்னெஞ்சில் வைத்திருக்கிறேன். தங்களுக்கு அசுவத்தாமனும் நானும் ஒன்றென்று வேற்றுமையில்லாமல் எண்ணவேண்டும் என்று ஸ்துதித்து, சிந்துராசனைக் கொல்லவேண்டியிருப்பதால், எனக்குச் செலவுகொடுத்தனுப்பிவிடுமென்று கேட்டதற்கு, ஆசாரியர் நகை

த்து நான் கட்டியிருக்கிற வியூகத்தையும் என்னையுஞ் செயித்தால் மாத்திரம் போகலாமேயல்லாது, தயவாகக் கேட்டுக்கொண்டுபோக முடியாதென்று சில பாணங்களைத் தொடுத்துவிட்டார்.

அர்ச்சுனன் அதின்பேரில் வியாகூலப்பட்டு கருக்காகியகொடுங்கணைகளை ஆசாரியர்மேல் விட்டு நெடுநேரம் யுத்தம் நடத்தினன். இருவருடைய வில்திறமையால் ஒருவர்பாணம் ஒருவர்மேற்படாமல் தட்டிப்போட்டனர். அவ்வேளையில் சாரதியானவர் தனஞ்செயனைநோக்கி இப்போது நாம் இருக்கும் இடத்துக்கும் சைந்தவன் நிற்கும் இடத்துக்கும் இருபது யோசனைதூரமிருப்பதால் நீ எந்தக்காலத்தில் போய் செயிக்கப்போகிருய் என்று கோபித்து, துரோணுசாரியர் தேரை இடித்துக்கொண்டு வெகு துரிதமாயவிடம்விட்டேகினர். அப்போது துரோணர் அவர்களை விடாமல் வளைத்து மந்திரவாளி சந்திரவாளிகளை விட்டு ஏன் திருடனைப்போல் ஓடுகிருயென்று கெர்ச்சித்தபோது, தேவரீருடனெதிர்த்துப் போர்புரியும் பக்குவம் தேவராலும் ஆகாதென்றல், என்னல் முடியுமோ ஆண்டவனே இன்று முப்பது நாழிகைக்குள்ளாக சைந்தவனை நான் கொல்லுகிறேனென்று கூறியவார்த்தை பொய்க்காமல்கார்க்கவேணும் என்குருவேயென்று அர்ச்சுனன் ஸ்துதிக்க, ஆசாரியன் குலுங்க நகைத்து ஜெங்மாந்தரவிதியையும்நினைத்துக்கோபமாறி போய்வாடாவென்று விடைகொடுத்து, தான் வேறுபக்கம் திரும்பினர். சண்டைக்குப்போகும் அர்ச்சுனனை காம்போஜன் முதலிய காவலர் தடுத்துக் கணைகளையேவிப் போர்புரியுங்காலையில், காண்டீபனுடைய பாணங்களுக்குத்தாளாமல் பின்னிடைந்தார்கள். அப்பால் நான்கு புறத்திலும் நெருங்கி நிற்கின்ற சேனைகள்மத்தியில் புகுந்து அவர்களையும் எதிர்த்துவரும் போர்வீரரையும் சிலீமுகங்களால் சேதித்து, தனஞ்செயன் நடத்துகிற சண்டையால், இத்தன்மையனென்று சொல்லவல்லவர்கள் இல்லையென்னும்படியாய் வெற்றிசெய்துவரும் விஜயனை கிருதவன்மன் எதிர்த்துப் போர்கொடுத்தான். அவன்மீது சுடுசரங்களைவிட்டு அவன் மார்பைப்பிளந்து தேரினில் மூர்ச்சித்துவிழ அடித்துப் போட்டு, தன்தேரை விரைவிற் செலுத்தி எதிர்த்து வருவோரை ரத்தவெள்ளத்தில் மூழ்கும்படி சாடிக்கொண்டு போம்போது, மூர்ச்சித்துக் கிடந்த கிருதவர்மன் அர்ச்சுனனுக்குத் துணைவந்த உத்தமோசன் உதாரமனு இருவரையும் வளைத்துக்கொண்டு இரண்டுநாழிகை வரையில் நல்ல யுத்தஞ் செய்தான். அப்போது கிரீடி முனைந்து மறுபடியும் கிருதவர்மனை பின்னிட்டோடும்படி முடுக்கி அடித்தான். இதுகண்ட வருணராசன்குமாரனுகிய சதாயுவானவன் திரண்ட சேனைக்கூட்டங்களுடன் அர்ச்சுனனை வளைத்து சித்தங்கலங்காமல், நாகாஸ்திரம் முதலிய தேவாஸ்திரங்களைத் தொடுத்துவிட்டான். அர்ச்சுனன் பாராதியண்ட முகடமெட்டும் பாம்புப் பாணங்களை யேவினன். அவைகளைத் தன்பேரிற் படவொட்டாமல், ருத்திராஸ்திரம் முதலிய மகாபாணங்களை விட்டுச் சதாயுவானவன் தகையும் போது, பீபத்சுவானவன் முகஞ்சுளித்து இடிக்கணை எரிக்கணை முதலிய

கொடிய கணைகளைவிட்டு அவன்வில்லை முறித்தான். சதாயுவானவன் வில்லையெறிந்துவிட்டு, மகாகோபத்துடன் தண்டாயுதத்தை யெடுத்து பூசித்து அர்ச்சுனன்மேல் விடவே, அர்ச்சுனன் சாரதியானவர் இதுகண்ட மாத்திரம், தான் எழுந்துநின்று அந்தகதையைத் தன்மார்பில் தாங்கினார். அர்ச்சுனன் அழிந்துபோவான் என்று ஆசைகொண்டெறிந்த கதையானது அவலமாயினதை சதாயுபார்த்து தன்னைமறந்து விழுந்து விண்மிசையெழுந்தான். கொண்டல்வண்ணனாகிய கோபாலனைத் தனஞ்செயன் பார்த்து, மாதவனே என்னுடன் யுத்தஞ்செய்த சதாயு என்பேரில் எறிந்த கதையை தேவரீர் திருமார்பில் தாங்கவும் சதாயு கெட்டழிந்து சாகவும் காரணம்யாது, விவரித்தருளுமென்ன, கேளாய் அர்ச்சுனா! வாதையென்கிற தாய்க்கும் சமுத்திரராசனாகிய வருணனுக்கும் பிள்ளையாகப் பிறந்த சதாயுவென்பவன் தந்தையைக் குறித்துத் தவஞ்செய்து பலபல ஆயுதங்களைப்பெற்று, ஒருவராலும் உயிரழியாத உத்தமவரத்தையும் பெற்றான். ஆனால் போர்முகத்தில் இவன்விடும் ஆயுதம் நிராயுதன்பேரிற் படுமாகில் தானே மாள்வானென்று மாறுவரம் பெற்றிருந்தான். இந்த கதை உன்பேரிற் பட்டால் நீ எப்படியும் இறப்பாயென்று தெரிந்த நான் என் மார்பைக்கொடுத்துத் தாங்கினேன் என்றார். அப்பால் காம்போஜனென்கிற சுதக்கணராசன் அர்ச்சுனனை யெதிர்த்து பாணப்பிரயோகஞ்செய்து பூமியில் விழுந்து மாய்ந்தான். தகப்பன்வந்து மரித்ததைப்பார்த்த பிள்ளைகளில் சதாயுவென்பவனும் நயுதாயுவென்பவனும் அர்ச்சுனனை யெதிர்த்தார்கள். இருவரையும் உடல்வேறு தலைவேறாக அறுத்துத் தள்ளினான். இறந்துபோன இருவர் குமாரராகிய தீர்க்காயு வென்பவனும் நியுதாயு வென்பவனும் உடனே அர்ச்சுனனைவிடாமல் போர்கொடுத்தார்கள். அவர்களிருவரையும் பிதாக்களுடன்கூட யமபுரிக் கனுப்பிவிட்டான். இந்த விந்தையைப்பார்த்த அரவக்கொடியோன் கலிங்கதேசாதிபதியை ஏவிவிட்டான். அவன் அநேக சேனைகளுடன்வந்து அர்ச்சுனனை யெதிர்த்தான்.

இஃதன்றியும் யவனதேசாதிபர் புவனதேசாதிபர் சோனகதேசாதிபர் கானகதேசாதிபர் பப்பரதேசாதிபர் உப்பரதேசாதிபர் மிலேச்சதேசாதிபர் துளுவதேசாதிபர் சீனதேசாதிபராகிய அளவிறந்த அரசரும் படைகளும் அர்ச்சுனனை வளைத்துப் போர்செய்தார்கள். இவன் தனது விசேஷித்த பாணங்களால் சுழற்காற்றில் அகப்பட்ட இலவம்பஞ்சுபோல் எதிரி கணைகளைப் பறக்கடித்து அநேகரை மாளச்செய்தான். உயிர் தப்பினவர்கள் ஓடும்படியானதைக்கண்டு சைந்தவனைக்காத்திருந்த அநேகம்படைகளும் வீரரும் ஒன்றுகூடித்திரண்டு காண்டீபன்மீது அளவிறந்த பாணங்களை ஏவினார்கள். அர்ச்சுனன் தன் மாறுகணைகளால் கொடிமுடிசிகரம் தேர் குதிரை சாரதியாவற்றையும் ஒரு நாழிகையில் இரண்டிரண்டாய்த் துணிபட்டழிந்து போம்படி போக்கினான், அதனால் எதிர்நின்றயாவரும் நிர்மூலமாகினார்கள். இரணக்களத்தில் விழுந்த பிரேதங்களை பட்சிக்கவந்த கழுகுகள் பருந்துகள் பறந்துவரும் இரக்கைகளின் நிழலினால்

பூமியெங்கும் பந்தலிட்டாற்போல் இருந்தது. இன்றையதினம் இறந்த சேனைகளின் பெருக்கத்தை இவ்வளவு அவ்வளவென்று சொல்ல என்றால் முடியாது, ஆயினும் கூடியமட்டுஞ் சொல்லுகிறேன் மகாராஜனே! முதல் நாள் முதல் நேற்றுப் பதின்மூன்றும் நாள்வரையினும் நடந்த யுத்தத்தில் இறந்தவர்களின் தொகையானது, இன்றொருநாள் இறந்தவர்களின் தொகைக்குச் சரியொத்து இருக்கமாட்டாது. அவ்வேளையில் விந்தனென்பவன் தன்சேனைகளைப் பறிகொடுத்துப் பாதசாரியாய் கையில் கெதைபிடித்து அர்ச்சுனனுடன் எதிர்ப்போரிட்டு தன்கதையையுமிழந்து பூமியில் விழுந்தான். இதைப்பார்த்த பீபத்சுவானவன் மற்றசேனைகளை மிஞ்சவொட்டாமலடித்து மாய்த்து வரும்போது, சூரியன் ஆகாயமத்தியில் வந்தது பதினைந்து நாழிகையாயிற்று. வெயில்விடாயினால் வித்தகன்களைத்து தண்ணீர்குடித்து இளைப்பாற வேண்டுமென்றபோது, அர்ச்சுனன் தேரைவிட்டிறங்கி ஆதிசிவமுஞ் சத்தியும் கொடுத்திருந்த பகபேதி பாதாளபேதி என்னும் பாணங்களை யெடுத்து வருணமந்திரத்தை உச்சரித்து பூமியில் அடித்தான். அடித்த ஒருநாழிகைக்குள்ளாக அவ்விடத்தில் பிரபலமாகிய தடாகமொன்றுஉண்டாயிற்று. அதில்கோபாலரும்தாகசாந்திசெய்துகுதிரைகளுக்கும் தண்ணீர்காட்டி இளைப்பாறினர். எதிரிபடைகள் வெயிலினால் கஷ்டப்பட்டு தண்ணீர் தேடிக்கொண்டிருந்தவர்களும் விந்தையாகிய இந்த தடாகத்தை யணுகித் தாங்களும் யானை குதிரை முதலிய சீவசெந்துக்களும் தாகசாந்திசெய்து முசிப்பாறினார்கள். அர்ச்சுனன் சிருஷ்டித்த இந்த அற்புதத்தடாகத்தினால் தாங்கள் தாங்கள் அடைந்தசுகத்தை வணங்காமுடியோனிடத்தில் அவரவர் அறிக்கையிடவே, துரியன் பொறுமையால் வெந்து துரோணாசாரியரிடம் போய், அவர்பாதத்தில் வணங்கி பராக்கிரமனாகிய அர்ச்சுனனை எதிர்த்த நம்மவர்களில் யார்மீந்தார்கள் நமது மைத்துனன் தலையை அஸ்தமனத்துக்குள்ளாக முடிப்பான்போலிருக்கிறது, எதிரியைக் காணாதபோது தங்கள் தங்கள் ஆண்மிக்கையை எடுத்துப்பேசுகிறார்கள். சிந்துராஜன் தான் எங்கேயாகிலும் ஓடிப்பிழைக்கிறேனென்று சொன்னபோது, பயப்படாதேயென்று நீர் அபயாஸ்தங் கொடுத்தீர், இந்நேரம் பதினைந்து நாழிகைக்குள்ளாக நமது சேனைகளில் பாதிமாண்டன, அர்ச்சுனனும் பேரணிக்குள்ளே வந்துவிட்டான். இனி நீர் என்ன ரட்சிக்கப்போகிறீர். சத்துருக்களிடத்தில் நம்முடையவர்கள் அன்புவைக்க மாட்டார்களென்று நம்பியிருந்தேன். தேவரீர் மனவஞ்சகம் வைத்துக் கூறியவார்த்தையென்று எண்ணாமற் போனேன்; உம்முடைய வல்லமைக்கு அந்த அர்ச்சுனன் ஈடா. தேவரீருடைய கண் காண நானேசென்று அர்ச்சுனன்முதலிய பாண்டவர்களைக் கொல்லும்படியான என் சாமார்த்தியத்தையாகிலும் சீக்கிரம் வந்துபாரும் ஐயாஎன்று வணங்காமுடியோன் சொன்னான்.

மறையவராகிய துரோணாசாரியர், ராஜாதிராஜனே! துன்பம் வந்த காலத்தில் சோர்வடையாமலும், இன்பம் வந்தகாலத்தில் மகிழாமலும்

ஒரேசிராகவிருந்து, இப்போது நீசொன்னசொல் தப்பாமல் இனிமேலாகிலும் தைரியத்துடன் எதிரிகளை நாசமாக்கி உன்மைத்துனனைக் காப்பாற்று, நீ கொண்ட கருத்து நன்மையானதுதான். மேலும் நான் ஒன்று சொல்லுகிறேன்கேள்? ஒப்பற்ற தேரில் விளங்காநின்ற கிருஷ்ணார்ச்சுனனை நரநாராயணுளென்று ஞானவான்கள் சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள் என்றால், எப்பொருட்கும் இறைவராகிய ஈஸ்வரன் அநுக்கிரகத்தால் சத்துருக்களை வெல்லும் பாணங்களும் அதற்குத் தகுந்த மந்திரங்களும் சகலவரமும் பெற்றிருக்கின்றவர்கள்; இவர்களை எதிர்ப்பதற்கு பிரமனாலும் முடியாது. இராஜகுலத்திற்பிறந்தோர் அந்நிய ராசாக்களிடத்தில் பகைவைத்துக்கொள்வது நியாயம்; அதைவிட்டு தாயாதிகளுடன் விருதாவிலே பகைவைத்துக் கொள்ளப்படாதென்று ஆதியில் நான் உனக்குச் சொன்னேன். நீ அதைக்கேளாமல், பாண்டவர்களைத் துரும்பாக நினைத்து நீ பேசிய வசனங்களை நான் என்னென்றுரைப்பேன். உத்தமர்கள் மனம்நோகப்பேசிய உன்னைப்போலொத்தபாவிக்கு உதவி செய்யக்கூடாதென்று மேன்மையான பராக்கிரமனாகிய விதுரன் தன்வில்லை இரண்டு துண்டாய் வெட்டியெறிந்து யாத்திரை போனான், என்று பலவாறுஞ் சொல்லி, நான் இதோ கட்டியிருக்கும் வியூகமத்தியில் நிற்கும் சைந்தவனை இன்று சாயங்காலத்துக்குள் கொல்ல அர்ச்சுனனாற் கூடாது. விதியின்வழி எப்படியோ தெரியாது. என்னால்ஆனமட்டும் உதவியுஞ் செய்கிறேன் என்று தன்னிடமிருந்த கவசத்தை ஆசீர்வதித்து சுயோதனன் கையிற்கொடுத்து இந்தக்கவசத்தின் மகிமையை அவசரப்படாமல் கேள்? இந்தக்கவசம் பிரமாவிடத்தில் இருக்கும்போது ராக்ஷசர்களால் துன்பப்பட்ட தேவேந்திரன் இதைப் பிரமாவினிடங்கேட்டுவாங்கி வைத்திருந்தான். அதை ஆங்கீரஸ் என்கிற மகாரிஷிக்கு இந்திரன் கொடுத்தான். அவரிடத்திலிருந்து நான்பெற்றுக்கொண்டேன். நீ இந்தக் கவசத்தை அணிந்துகொண்டால் எட்டு மலைகள் விழுந்தாலும், இந்தக்கவசம் கெடாது, இதற்குச் சாலிகையென்றுபெயர். இதைத் தரித்துக்கொண்டு அர்ச்சுனன்மீது சண்டைக்குப் போவென்று அனுப்பினார்.

துரோணாசாரியர் தருமராசனைக் கைப்பிடியாய்ப் பிடிக்கவேணுமென்கிற எண்ணத்தைமாற்றாமல், தருமருடன் வந்தெதிர்த்து யுத்தம்பண்ணும்போது, இருபுறத்திலும் அநேகஞ் சேனைகள்மாண்டன, தன்சேனைகள் தளர்கின்றதை துரோணர்கண்டு கடுமையான யுத்தஞ் செய்யும்போது திருஷ்டத்தியும்நன் அவரை எதிர்முனைந்து அமர்புரிந்து அவருடைய தேரையுங் குதிரைகளையும் நாசமாக்கினான். அதினால் துரோணர் வெட்கி திருஷ்டத்தியும்நனுக்குப் பக்கத்துணையாய்வந்த சாத்தகியுடன் சண்டைக்கு ஆரம்பித்தார். சாத்தகியுந் துரோணாசாரியரும் நெடுநேரம் வெற்றிதோல்வியில்லாமல் அடித்துக்கொண்டு நிற்கும்போது, துரோணாசாரியர் தேருங் குதிரைகளும் பின்னப்பட்டன. வேறு தேரேறி சாத்தகியின் தேரை நாசமாக்கினார். சாத்தகியும் வேறு தேரேறி அவருடன்

எதிர்த்துயுக்தஞ்செய்தான். இவர்கள் புரிந்த யுத்தத்தின்திறமையை யாவராலும் வகுத்துரைக்க முடியாது, தேவர்களும் அதிசயிக்கத்தக்க மகா மகத்துவமாயிருந்தது. சாத்தகியின்வின்மையை துரோணர்மெச்சித் தலையசைத்து நமதுசிஷ்யன் அர்ச்சுனனிடத்தில் கற்றுக்கொண்ட இவர் சாமார்த்தியத்தை உள்ளத்தில் அத்தியத்புதமாகப் புகழ்ந்து வியந்தனர். அநேகஅரசருடன் நகுல சகாதேவர் இருவரும் துரோணரை யெதிர்த்து தொந்தரிக்கும்போது துரோணருடைய அஸ்திரபலத்தினல் நகுல சகாதேவர் பின்னடைந்தார். இதைப்பார்த்த தருமர், வேதியரைவளைத்துக் கொண்டு தேவதாஸ்திரங்களைப் பிரயோகித்தார். துரோணர் எதிரஸ்திரங்களைவிட்டு தருமன் கைவில்லை முறித்தார். அவர் உடனே வேறுவில்லெடுத்து துரோணருடைய தேர் குதிரை சாரதிகளைப் பின்னப்படுத்தி, அவர்கைவில்லையும் முறித்தார். ஆசாரியர் சேமத்தேரேறி முரசக்கொடியோன் வில்லையுந் தேரையும் மறுபடியும் ஒருவிசை போக்கினர். தருமராசன் வேறுரதமேறி ஒருசத்தியை துரோணர்மீது விட்டபோது, அவர் பிரமாஸ்திரத்தைக்கொண்டு அதனை வின்னப்படுத்தினபின் தருமர்மேல் அந்தஅஸ்திரமானது பாய்ந்துவரும்போது, தருமனந்தனர் வேறஸ்திரங்களால் அதை அவித்து ஆசாரியர் தேரையும் வில்லையும் உடைத்து அவர் தேகம் முழுவதையும் அம்புகளால் நிரப்பினர். ஆசாரியர் பூமியில் அசைவற்று நிற்பதை தருமர் உற்றுப்பார்த்து, உம்மை நான் கைப்பிடியாய்க் கட்டுவதை மன்னித்தேன் என்று இவரை விட்டுத்திரும்பி இவர்சேனைகள் மீது யுத்தம்புரிந்தார். துரோணர் பாதசாரியாய் நடந்து போகும்படியாய் முடிந்தது. அக்காலையில் தருமராசன் செய்யும்போர்த்திறமையைக் கண்ட பீமசேனன் அந்த இடத்திற்கு அணுகினன். அவனைக்கண்டவுடனே, தருமபூபதி சண்டையை இவன்கையில்விட்டு வெற்றி விஜயகோஷங்களுடன் திரும்பினர். ஆசாரியரை மன்னித்துவிட்ட தருமருடைய நற்குணத்திற்கு தேவர்கள் புகழ்ந்தார்கள். நகுலனும் விகர்ணனும் கடூரமாக போர்புரிந்து அநேக சீவன்களை மாய்த்துவிட்டார்கள். அன்றியும் துன்முகனும் சகாதேவனும் எதிரெதிர் யுத்தஞ் செய்யும்போது துன்முகன் தேரும் வில்லும் அற்று விழுந்து தோல்வியடைந்தான். திரிகர்த்தன் புத்திரனனவன் சகாதேவனுடன் போராடினன். அவனை சகாதேவன் மாய்த்துவிட்டான். பீமசேனன் புகுந்த இடத்தில் எதிர் நின்ற யானை குதிரை முதலியவைகளெல்லாம் நாசமாயின. பீமசேனன் புத்திரன் கடோற்கஜனனவன் அலம்பாசுரனைவளைத்துக்கொண்டு இருவரும் செய்த யுத்தத்தின் விந்தையைச் சொல்லமுடியாது.

துரோணர் ஆசீர்வதித்து அளித்த கவசத்தையணிந்த சுயோதனன், அரசரையும் படைகளையும் சேர்த்துக்கொண்டு மேற்கூறிய தடாகத்தில் தாகசாந்தி செய்தபின்னர் தனஞ்செயனை யெதிர்த்தான். பூமியில் இளைப்பாறிநின்ற அர்ச்சுனன், குதிரைகளைப் பூட்டச்சொல்லிக் கற்பித்துவிட்டுப் பாதசாரியாகவே ரதங்களையும் யானைகளையும் பார்த்து தனித்தனிக்

கணைகளால் போக்கிப் போர்போராகக் குவித்துவிட்டான். அப்போது அதிரதத்தலைவரில் சிலர் திவ்விய வினோதமான அஸ்திரங்களை விட்டார்கள். கிரீடியானவன் அவைகளை எதிரடியடித்து அவர்கள் தேர் குதிரைகளை யெல்லாம் அழித்து தேர்வேந்தரை மண்ணில் மடித்தபின் தேர்மேலேறி சேனாசமுதிரத்திரத்தில் இறங்கி யுத்தஞ்செய்யும்போது, சகுனியும் துரியோதனன் தம்பிமாரும் எதிர்த்தார்கள். அவர்களையும் வேதியர் கட்டிய சகடவியூகத்தையும் அடியோடழித்து சகுனியுடன் ஆறு தம்பிமாரை எதிர்நிற்கவொட்டாமல் சாடினான். துரியோதனன் அர்ச்சுனனைமறித்து பலமானபாணங்களை அவன்மேல் விட்டான். துரியோதனன் யுத்தஞ்செய்யத் துவக்கின நாள்முதல் இதுவரையில் தொலைவில்நின்றவன் இன்றைக்கு அணுகிவந்ததென்ன ஆச்சரியமென்று கேசவனைக் கேட்க, பற்குனா! கேள், சாலிகையென்று ஒருகவசத்தைத் துரோணர் கொடுக்கப்பெற்ற தைரியத்தினால் கிட்டிவருகிறான். அஃதழியத்தக்கதல்ல அதை உடைக்கும்படியான உபாயத்தைத் தேடென்று விரைவில் தேரை நடத்தினர். அர்ச்சுனன் திடங்கொண்டு கொடிய சரங்களை துரியோதனன்மீதுவிட்டான். அதுகள்பயன்படாமல் நிலத்தில் உதிர்ந்துபோயின. மறுபடியுஞ் சரங்களைவிட்டு அவன் தேர் குதிரைகளை அடித்து வீரர்களையும் கொன்றான். கர்ணனனவன் துரியோதனன்பால் பரிந்துநின்று சண்டைசெய்து அர்ச்சுனனால் அடிபட்டுப் பின்னடைந்தான். கிருதபன்மன் கலிங்கதேசாதிபர் கிருபாசாரி சேதிராசன் இவர்கள்கூடி அர்ச்சுனனுடன் சண்டையிட்டுப் பிராணன் தப்பிப்பிழைத்தனர். அணிவகுப்பில் நின்ற பூபதிகளில் சிலர் பலர் உயிரிழந்தனர். துரியோதனன் மறுபடியுமெதிர்த்துவந்து விஜயன் தேகத்திலும் சாரதி தேகத்திலும் பாணங்களை விட்டுக் காயப்படுத்தினான். விஜயன் எதிரிபாணங்களை அழித்து மறு அஸ்திரங்களை சுயோதனன்மேல்விடவும், அவன் அதுகளைத்தடுத்து விஜயன் சரீரத்தைமெலியப்பண்ணி பார்த்தசாரதியும் தத்தளிக்கும்படி யடித்தான். அர்ச்சுனன் திகைத்து நின்று தன்பாணங்கள் அவலமாயினதை யோசித்து சூரியாஸ்திரத்தைசெபித்து சுயோதனன்மேல் விட்டான். அதைப்பார்த்த அசுவத்தாமன் நாராயணாஸ்திரத்தைவிட்டுத் தடுத்துத் தானுஞ் சிறிதுநேரஞ் சண்டை தொடுத்து ஓய்ந்தான். அவ்வேளையில் எதிரியின் படைவீரரெல்லோரும் ஒரேமுகமாய்த் திரண்டு ஆக்கிரமித்து வருவதை விஜயன் பார்த்து, முகம்வெயர்த்து முகுந்தன் பாதங்களில் பணிந்து கலங்கினான். அப்போது கண்ணனனவர் பாஞ்சசன்னியத்தைஎடுத்துப்பூரித்தார். அதனால் எதிரிகள் யாவரும் உள்ளம் நடுங்கினர். ஸ்ரீபரந்தாமன் அர்ச்சுனனைக் கடாட்சித்து சிலபாணங்களைத் தன் திருக்கரத்தால் தொட்டுக்கொடுத்து துரியோதனனுடையகைநகக்கண்களில் படும்படிதொடுக்கச்சொல்லிப் பூர்வத்தில் தேவேந்திரன் அளித்த வேலாயுதத்தையும் பிரயோகிக்கக் கட்டளை பண்ணினர். அதுபோல் அர்ச்சுனன் பிரயோகித்தபோது, சுயோதனன்கவசம்நீறி நகக்கண்களின் வழியாய் ரத்தம் பெருகி இளைத்

தான். கர்ணனும் சகுனியும் சிலவேந்தரும்வந்து அர்ச்சுனனை யெதிர்த்து இளைத்துப் போனார்கள்.

துச்சாதனன் முதலிய தம்பிமார்களும் அர்ச்சுனனுடன் அமர்தொடுத்து அசந்துபோனார்கள். அர்ச்சுனன் மேலும்மேலும் விட்டுவந்த அக்கினியாஸ்திரங்களினால் அநேகந்தலைவர்கள் உயிர்விட்டழிந்தார்கள். இதைப்பார்த்ததேவதைகள் அர்ச்சுனன் கொண்டிருக்கிற ஆக்குரோஷத்தினால் இன்றைக்கே பாரதத்தை முடிப்பான்போற்காணுது, இவனுடன் எதிர்த்துநிற்கக் கூடியவர்கள் யாருமில்லையென்று அறிவித்து இவன் மகாபுண்ணியசாலியென்று ஸ்துதித்துக்கொண்டு நின்றனர். இப்பால் பரந்தாமனும் பார்த்தனும் சிந்துராசனைத்தேடித் தேரைநடத்தினார்கள். அப்போது தர்மராசனால் நடத்தப்பட்ட சிலசெய்திகளைச்சொல்லுகிறோம் கேளும் தர்மவேந்தேயென்றார் வைசம்பாயனர். சற்றுமுன்னே மாயவன் மாத்திரம் பூரித்த சங்கத்தொனியைக்கேட்ட தருமநந்தனர் சந்தேகப்பட்டு தன்னருகிலிருந்தசாத்தகியை அழைத்து அர்ச்சுனனுக்கு ஏதோஅபாயம் நேரிட்டிருக்கிறதுபோற் காண்கிறது, நீர்போய்ப்பார்த்து வாருமென்று சொல்ல அவர்கள் உமக்குத்துணை நிறுத்திப்போன என்னை ஏவுவதுசரியல்ல, அவனுக்குஅபாயம்நேரிடமாட்டாது என்றுசொல்லியும், மறுத்து அவரை ஏவினர். கிருஷ்ணர்ச்சுனரை நோக்கி வரும் சாத்தகியை கிருதபன்மன் கிருதவீரியன் கிருபாசாரியர் மூவருமெதிர்த்தார்கள். அவர்களையும் அவர்களோடுவந்த நூறுயிரந் தேராளியரையும் ஜலசந்தனையும் தீய்த்துக்கரித்து அநேகரை நிர்மூலமாக்கினர். திரிதராஷ்டிரன் பிள்ளைகளில் சிலர் நாலுபக்கங்களிலும்வந்து சாத்தகியை வளைத்துச் சண்டையிட்டு தோல்வியடைந்தனர். இதைக்கண்ட துரோணர் சாத்தகியை அப்பாற்போகவொட்டாமல் தடுத்து அநேகம் பாணங்களால் தகைந்தார். சாத்தகி தன் எதிர்பாணங்களால் முறைமுறையேதடுத்து ஆசாரியரைக்காயப்படுத்தி திக்குப்பிரமைகொள்ளச் செய்துவிட்டு வெளிப்பட்டு வந்தார். உடனே துரியோதனராசன் சிலவீரரைச்சேர்த்துக்கொண்டு சாத்தகியை வந்து தடுத்தான். அவர்மிகவுங்கோபங்கொண்டு அவனுடன்வந்தசதுரங்க சேனைகளையும் அடித்து அவனையும்நோக்காடுஅடையும்படிசெய்தார். அரவக்கொடியோன் பின்னுஞ் சிலபாணங்களை அவர்மீதேவினன். அதுகளை அவர் தகைந்து அவனுடைய அரவக்கொடியை அறுத்து தேர்ச்சக்கரங்களை உடைத்து வில்லையும்முறித்து சாரதியையும் போக்கி துரியோதனன் உடம்பைச் சல்லடைக்கண்களாக்கி, இன்னமும் எதிர்ப்பாருண்டானால் வாருங்கள் என்று தாஷ்டீகம் பேசிக்கொண்டு நின்றார். துரியோதனன் பயந்து இளைத்துப் பாதசாரியாய் ஓடுவதை தேவர்கள்கண்டு நகைத்தார்கள். துரியோதனன் அவமானப்பட்டதை கிருதபன்மன் அறிந்து சாத்தகியை யெதிர்த்தான். அவர் அவனை வெகுசுளுவில் தேரின்பேரில் அயர்ந்து விழும்படி ஒரேபாணத்தினால் தாக்கினர். கிருதபன்மன் சோர்ந்ததைக்கண்ட துசுவாசன் பெருமூச்சுவிட்டு சிலசேனைகளுடன் சாத்தகிமீது

சோனைமழைபோல் சுடுசுரங்களைத்தொடுக்கவே, அவைகளையும் தன்பாணங்களால் அவலமாக்கி சேனைகள் விலகிப்போகவும் துசுவாசனும் பூனை போற்பதுங்கிவிடவும் செய்தார். துரியன்தம்பி துன்முகன்சாத்தகியுடன் சண்டைசெய்து அவனும் இளைத்தபின்னர், அரவக்கொடியோனால் ஏவப்பட்ட பலபாஷை மன்னர்கள் வந்தெதிர்த்துப்பார்த்தும் அவலமேயாயினர். சாத்தகியானவர் இனித் தங்குதடையின்றி நரநாராயணுள் பக்கம் திரும்பினர்.

இவர்சரிதம் இன்னனமாய் இருக்க, தருமர், தம்பி பீமனைக்கூப்பிட்டு அர்ச்சுனன்செய்தி ஒன்றும் தெரியவில்லை, நீ போய்ப்பார்த்துவாவென, துரோணுசாரியர் அளவிறந்த சேனைகளுடன் உம்மைக்கைப்பிடிசெய்யக் கங்கணங்கட்டிக்கொண்டிருக்கும்போது, உம்மைக்காப்பதுவிட்டு என்னை வேறிடம்போக ஏவவேண்டாம். நம்மிஷ்டதெய்வம் கிருஷ்ணமூர்த்தியிருக்கஅவனுக்குயாதொரு பொல்லாங்கும் வாராது. நீர் எனக்குக் கட்டளையிடுவது எப்படியிருக்கிறதென்றால், சீதாபிராட்டியாருக்குக் காவல்வைத்துப்போன இளையபெருமாளை சக்கிரவர்த்தித் திருமகனுக்கு அபாயம் வந்திருக்குதென்று அனுப்பிவிட, பிராட்டியாரை இராவணன் தூக்கிப் போனதையொத்த அபாயம் உமக்கு வரும்போலிருக்கிறது, என்னையேவவேண்டாமென்று அதிவிநயத்துடன் கூறியும், கேளாமல் அர்ச்சுனனிடம் போக்கினர். பீமசேனன் எதிரிபடைகளில் புகுந்து வருவதைச் கலிங்கர்முதலிய பாஷைமன்னவர்கண்டு இவன்மீது போர்புரிந்தகாலையில் பீமன்முனைந்து அவர்களைக் கால்மாடு தலைமாடாகப் பிளந்து விண்ணுலகேற்றிக் கடகடென்று தேரைச்செலுத்திவரும்போது, துரியன்தம்பிமார்களில் விந்தன், விந்தரன், சுசருமன், சுதரிசனன் என்னும் நால்வர் பீமனையெதிர்த்துயுத்தஞ்செய்து மாண்டார்கள். இதைப்பார்த்த மற்றைத்தம்பிமார்களில் குண்டலபோகி, தீர்க்காலோசனன், சித்திரசேனன் என்னும் மூவர் பலசாலிகள் பீமனையடிக்கவந்து அவனால் அடியுண்டிறந்தனர். இவ்வண்ணமாக துரியோதனனுடைய ஏழுதம்பிமார்கள் முடிசாய்ந்ததைப் பார்த்த புஜவீரர் சிலர் பீமனைவளைத்து மண்ணும் விண்ணும் அதிரப்போரிட்டு நிமிஷத்தில் அவனால் மடிந்தார்கள். துரோணுசாரியர் தான்கட்டிய வியூகம் சாத்தகியாலும் பீமனாலும் உடைபட்டு சின்னபின்னமாகிறதைப் பார்த்து, பீமனைவந்தெதிர்த்தார், பீமன் ஆசாரியரை வணங்கினபோது, தநுர்வேதியர் நகைத்து இன்றையதினம் எவர்களானாலுஞ்சரிஏமாறமாட்டேன். நீ எனக்கு இதமாகிய உபசாரஞ் சொல்லவேண்டாம், ஒருகை பார்த்துப் போகவேணும் என்று சஞ்சரீக மென்னும் அடலஸ்திரங்களை விடுத்து பீமன்தேகத்தைத் தொளைத்து உபத்திரவித்தார். பிறகு பாணங்களைவிட்டபின், தேரினிழிந்து குருவின் சமீபம்வந்து கீழேகிடந்த தேருருளைகளைக் கையிலெடுத்து அவர் இரதத்தின்மேல் சுழட்டித்தாக்கி அவர் இரதத்தைத் தூக்கியெறிந்தான். வேதியர் தரையில் விழுந்து இளைத்தார். மறுபடியும் துரோணர் வேறுதேரேறி பீமசேனனைத் தன்பாணங்களால்

நோகச்செய்தார், ஆசாரியருடன்வந்தசேனைகள் அனைத்தையும் துரும்பு போல் பறக்கடித்து ஆசாரியரையும் எதிர்நிற்கவொட்டாமல் அடித்த போது, துரியோதனன் மனந்தளர்ந்து அஞ்சி இளைத்தான். பீமன் சண்டைசெய்யும் இடத்தைநாடி கிருஷ்ணரும் அர்ச்சுனனும் வர அவர்களிடம் தான்வந்த காரணத்தைத் தெரிவித்தான்.

அர்ச்சுனனுடன் சண்டைசெய்து இளைத்தோடிய சேனைகளெல்லாம் மறுபடியுங்கும்புகூடி கர்ணனுக்குத் துணைப்படையாகி வந்தபோது, கர்ணன் பீமன்மேல்போரிட்டு, பீமனுடைய பாணங்களினால் போர்வீரர் அநேகர் மாளவும் கர்ணனுடைய நெஞ்சமழிந்து போரொழிந்து பீமசேனன் வேகத்துக்கெதிர்நிற்கமாட்டாமல் பின்னடைந்தான். பலம்பொருந்திய விடசேனன் என்னும்பாலியன் கர்ணனுடன்சேர்ந்து பீமனுடன்அமர்கொடுத்து தங்கள்சேனைகளை இழந்து பாதசாரியாய் துரியோதனனிடம் ஓடி தாங்கள் பட்ட பாட்டையும் தங்கள் சேனைகள் கெட்டகேட்டையும் சொல்லிமுறையிட்டார்கள். துரியோதனராஜன் கண்சிவந்து துரோணரிடம்போய், உம்மைநம்பினதற்கு நடுச்சமயத்தில் கைவிட்டு,பீமார்ச்சுன சாத்தகிமூவரும் அடவாக்கினிபோல் நமதுசேனைகளை அழிக்க இடங்கொடுத்து வேடிக்கைபார்க்கிறீர், என்மைத்துனன் சைந்தவன் அப்பவே எங்கேயாகிலும் ஓடிப்பிழைத்தாலும் பிழைப்பானே, அவனையும் போகவிடாமல் பதுமவியூகத்தில் நிறுத்தி சாகாமற்செய்கிறேனென்று விலங்கைவிட்டுத் தொழுவில்மாட்டி வம்புக்கிடஞ்செய்தீரே. இந்தயுத்தமுனையை நீர் கிரமப்படிப் பார்க்கவில்லையென்று மனஸ்தாபத்துடன் அவரிடத்தில் மோதிக்கொண்டான். உனக்கு இஷ்டனாகிய கர்ணனும் மாமன் சகுனியும் மகாபதிவிரதையின் வஸ்திரத்தையுரிந்த துச்சாதனனும் நீயும் அவிடத்திலிருக்கு சைந்தவனுயிரை யார்கைக்கொள்ளத்தக்கவர்கள். நான் இவிடத்திலிராவிட்டால் பாண்டவர்படைகள் யாவும்வந்து கலந்து இங்கு நிற்கும் படைகளை அதமாக்குவார்கள். ஒருவனுடன் இவர்வந்து கலந்ததற்கேநமதுபடைகள் இத்தனைபாடுபட்டபோது, எதிரிகள் ஏகோபித்து வந்துவிழுந்தால் நாமெப்படித்தப்புவது, அதனால் தான் நானிங்குநின்று தடுத்துக்கொண்டிருக்கிறேனென்றார் துரோணாசாரியர். இதன்றியும் நான் இவிடத்தில் ஏதோ யுத்தஞ்செய்ய பயந்து உல்லாசமாக சும்மாயிருக்கிறேனென்று நினையாதே, ஹரீஹரீ, இவிடத்தில் எனக்கு அநேகவருத்தங்கள் நேரிடவும், உடனுக்குடனே அவைகளைநிவிர்த்திக்கவும், பாம்பின்வாய்த் தேரைப்போல் பரிதபித்துக்கொண்டிருக்கிறேன். இத்தனையுபத்திரவத்துடன் இவிடத்தில் இருப்பானேனென்று கேட்பாயாகில், உன் விருப்பப்படி தர்மராஜனை சமயம்பார்த்து கைப்பிடியாக பிடித்துவரவேண்டுமென்றே சகலசிரமத்தையும் தாங்கி நிற்கிறேன். மேலும் நான் அவ்விடம் வந்தும் என்னபிரயோசனம், பிரமதேவன் நமக்குப் படைத்துணைவர்துநின்றாலும் வினையின்படியே முடியும். சிந்துராஜன் அர்ச்சுனன் கையினால் இறந்துபோக விதித்திருக்குமாகில் அதைத்தடுக்க உன்னாலுமில்லை என்

னுமில்லே. உன் ஊக்கத்தைக் கைவிடாமல் உன்னலானமட்டும் யுத்தம் செய்துப்பார் என்றுரைத்தார். துரியன் ஆசானுரைத்த வசனத்தைக் கேட்டு வாய்பேசாமல் திரும்பிவரும்போது அர்ச்சுனனுடைய பக்கத்துணேவராகிய உத்தமோசன் உதாரமனு இருவர் அர்ச்சுனனை முன்விட்டு அரைநாழிவழி பின்னிட்டு வருவோர், சும்மாவராமல் தங்கள் கையில் உள்ள அஸ்திரங்களைப்பொழிந்து எதிரிகளை நீறுக்கிக்கொண்டே வரும்போது அவர்கள் துரியோதனனைக்கண்டு மடக்கிக்கொண்டு போர்கொடுத்தார்கள். வண்காமுடியோன் அவர்கள் விட்ட அஸ்திரங்களை அறுத்துக்குவித்து அவர்கள் தேர்குதிரைகளை நாசப்படுத்தி அவர்கள் தேகத்தில் சிலபாணங்களை நுழைத்தபோது, அவர்கள் இருவரும் பூமியிற் குதித்து நந்தியாவட்டனுடைய தேர் குதிரை சாரதிகளைச் சிதைத்து விட்ட பின்னர் துரியோதனன் எதிர் நிற்கமுடியாமல் ஓட்டம் பிடித்தான். ஓடுகிறவனைப்பார்த்து நகைத்து அவிடம்விட்டுத் திரும்பிவரும்போது அங்கே எதிரிட்ட இரண்டுவீரரை சாடிவிட்டு அவர்கள்தேரில் தாங்கள் ஏறிக்கொண்டு அர்ச்சுனனிடம்போய் நடந்தவற்றைச் சொல்லினர்கள். கால் நடையாய்வருந் துரியோதனனை சல்லியன் தன் ரதத்திலேற்றிக்கொண்டு சிந்துதேசாதிபதியை நிறுத்திவைத்திருக்கும் இடத்தை நாடிவந்தனர். பீமனிடத்தில் அடிபட்டோடின கர்ணன் மறுபடியும் வேறுதேரேறி பீமனைவந்து வளைத்துக்கொண்டு முப்பது கூர்கணைகளை அவன் தேகத்திலுருவும்படி யடித்து பலமான வேலாயுதங்களாலும் அவனைத்தாக்கினன். வாயுகுமாரன் தன்மீதுவரும் ஆயுதங்களைத் தன் வேலாயுதத்தைக்கொண்டு அதம்பண்ணி மறுபடியுங் கர்ணன் ஏறிவந்த தேர்குதிரைகளை மடங்கடித்து அவன் நெற்றியில் ஒருபாணத்தை யுருவும்படி எறிந்தான். அதினுல் கர்ணன் தேகத்தினின்று ரத்தமோடி முகம்வெயர்த்து பின்னிடைந்தோடினன். அதைப்பார்த்த துரியோதனன் மனந்தாளாமல் தன் தம்பி துர்ச்சயனென்பவனை பீமன்பேரில் ஏவினன். பாம்பைக்கண்ட கெருடன் போல் பீமன் சீறி அவனை உயிருடன் திரும்பிப் போகவொட்டாமல் மடித்துவிட்டான்.

இதைப்பார்த்த கர்ணன் தன் அரசனுக்குத்தெரிவித்து மனஸ்தாபப்பட்டு இதோ ஒருநொடியில் அந்த பீமனைத் தேருடன் சாய்த்துவிடுகிறேனென்று சபதங்கூறி மறுபடியுந் தேரேறி பீமனையெதிர்த்துப் பதினன்கு பாணந்தொடுத்தான். பீமன் கமலாஸ்திரம் மூன்றைவிடுத்து கர்ணன் மார்பைத் தொளைத்து உபத்திரவித்தபோது, கர்ணன்சாரதி தேரைத் திருப்பிவிட்டான். துரியோதனன் கர்ணனைக்கையமர்த்தி நிறுத்திக்கொண்டு தன்பக்கத்தில் நின்ற தம்பி துன்முகனை ஏவிவிட்டான். அவன் பீமனுடன் சண்டையிட்டு உடனே மாய்ந்தான். துரியோதனன் இதைச் சகியாமல் மறுபடியும் தன்தம்பிமாராகிய துன்மருஷன் துன்முகன் விஜயன் ஜெயன் மாலினி ஐவரை ஏவினன். அவர்கள் பீமன்பேரில் போரிட்டு தாங்களும் மாண்டார்கள். ஐந்துபேர் தம்பிமார் மாண்டதை சூரியபுத்தி

ரன் கர்ணன்கண்டு வெகுண்டு, மீண்டும் பீமன்மேல்வந்து ஒருவரையொருவர் கொல்லும்படி வகைபார்த்துக்கொண்டு சண்டை நடத்துகையில், துரியோதனனுடைய சதுரங்கங்கள் ஓடிவந்து பீமனை வளைததுப் போர்கொடுத்தனர். பீமன்விட்ட சுடுசரங்களால் பெருக்கமாய் நின்ற படைகள் குறைந்து கால்மாடு தலைமாடாக விழுந்து மாண்டனர். கர்ணனும் பீமனும் விடாமல் சண்டைபோட்டு ஒருவர்தேரை ஒருவர் உடைத்து ஒருவர் சாரதியை ஒருவர்கொன்று களையாமலும் சளையாமலும் போர்புரிந்தும் ஊழ்வினை வசத்தால் கர்ணனனவன் பீமசேனனால் அடிபட்டு ஓடினான். ஓடிவருங் கர்ணனை அரவக்கொடியோன் கிட்டேயழைத்து நன்றாய்ச்சமர் புரிந்தீர், சற்று இளைப்பாறுமென்று நிறுத்தி, தன்னெதிர் நின்ற சித்திர விசித்திரன் சித்திராக்கணன் சித்திரசாருகன் சித்திரச்சரன் சித்திராயுதன் சித்திரவர்மன் சித்திரதரன் என்னுந்தம்பிமார் எழுவரைப் பீமனைக்கொல்லும்படி யேவினன். அவர்களும் வந்து பீமன் கணைகளால் ஆவிபோயினார்கள். மேலும் கர்ணன் பீமனைவந்தெதிர்த்து அவன்தோள் முறியத்தக்க தோமராயுதத்தை எறிந்தான். பீமன் அதைத்தகர்த்து கர்ணன் தேரை அழித்தான். அவன் தேர்வேரேறி பீமன்பேரில்விடாமழைபோல் பாணவருஷம் வருஷித்து பீமனை அசையாமல் திக்குமுக்காடும்படி அடித்தான். பீமன் திடங்கொண்டு கர்ணனுடன் முண்டிப்போரிட்டபோது கர்ணன் மகிழ்ந்து மெச்சிப் பின்வாங்கிப் போய்விட்டான். துரியோதனன் மீட்டும் தம்பிகளாகிய சத்துருஜெயன் சத்துருமித்திரன் சுவேதகனன் மாமதனன் நற்றுருவன் சித்திரபானு விகர்ணன் என்கிற ஏழுபேரை அனுப்பவும், அவர்களை பீமன்கண்டு மகிழ்ந்து விகர்ணனைத்தவிர மற்றவர்களை ஆவிபோக்கிவிட்டு, விகர்ணனைத் தப்பித்துக்கொள்ளும்படி அநேகமாய்ச் சொல்லியும் கேளாமல் மேலும் மேலும் முரணி, விகர்ணனும் மாண்டு தொலைந்தான். இதற்காக துரியோதனனும் கர்ணனும் பீமனையெதிர்த்து அஸ்திரங்களைப் பிரயோகித்தார்கள்; பீமன்விட்ட கணையால் துரியோதனன் வருந்தி சூத்திரமிழந்த பாவைபோல் அசைவற்று நின்றான்.

கர்ணராசனும் போர்தொடுத்துப் பின்னடைந்தபோது பீமன் அவனையிழந்து உன்னைக்கொல்ல என்னாற் கூடியதாயிருந்தும் என்தம்பி அர்ச்சுனன் கணைக்கு நீ காத்துக்கொண்டிருப்பதால் உன்னை சும்மாவிட்டேனென்றான். கர்ணன் வேறுதேரேறி பீமனை பாணப்பிரயோகங்களால் உபத்திரவித்து அவன் தேரையும் உருக்குலைத்துவிட்டான். பீமன் கோபித்து கதாயுதத்தைச்சுழட்டி கர்ணன்மேல் எறிந்தான். கர்ணன் அதற்கெதிர்நிற்கத்தாளாமல் ஓடிப்போய் மறுபடி வேறுதேரேறித் திரும்பி வந்தெதிர்த்தான். பீமன் தன் அஸ்திரத்தினால், கர்ணன்வில்லைமுறித்துப் போட்டான். கச்சைக்கொடியோன் தேரின்கம்பத்தடிவாரத்தில் ஆபத்துவேளையில் மறைந்து கொள்ளும்படியான ஒருமறைவான ஸ்தானத்தில் ஒதிங்கினன். வாயுகுமாரன் கர்ணனைக்காணமல் தேடித்திரும்பியபோது கர்ணன் வெளிப்பட்டு மந்திராஸ்திரங்களினால் பீமன் தேகத்தைதொளை

த்து உதிரம்பெருகும்படி செய்து பீமன்கைவாளையும் கேடயத்தையும் கெடுத்துவருத்திய வேளையில், சளையாத பீமன் இளைத்து கர்ணனுடைய பாணங்கள் தன்மீது படாதிருக்கும்படி செத்துக்கிடக்கும் யானைகுதிரைகளை தூக்கித் தன் உடம்புதெரியொட்டாமல் மூடிக்கொண்டிருந்தான். கச்சைக்கொடியோன் தன்கைவில்லால் பீமனைக்குத்திக்கொல்லக் கூடியதாயிருந்தும் குந்திதேவிக்குத் தான்கொடுத்த வார்த்தைப்பாட்டை நினைத்து, தடாகத்து சலமானது வெயிற்காலத்தில் மேலேசூடுகாட்டி உள்ளே குளிர்ந்திருக்குந் தன்மைபோல், அகத்துள் குளிர்ச்சி வைத்துக்கொண்டு முகத்தில் சுளுக்கங்காட்டி அடா பீமா, உன்பெருவயிற்றை நிரப்பிக்கொண்டு வெடிப்பும் எடுப்பும்பேசி உனக்குக் காலங்கழிக்கத் தெரியுமேயல்லாமல், யுத்தஞ்செய்யும் கியானம் உனக்கேது, மூடனுக்கும் படித்தவனுக்கும் அநேகம் பேதங்கள் உண்டு. நீ மூடத்தனமாய் யுத்தஞ்செய்து எத்தனை தடவையோ என்னை வென்றாலும் சாஸ்திர ரீதியாய் செயம்பெறுகிற சம்பிரமத்துக்கிடல்லவே, சபலனே! சுவர்க்கபூமியைக்காண இச்சித்து என்னுடன் எதிர்த்து யுத்தஞ்செய்வாய், இந்தக்கர்மபூமியில் இன்னஞ்சில நாளிருக்க இச்சையுண்டானால், அதோதெரிகிற நரநாராயணனிடத்துக்கு ஒடிப்போ என்று கூறி அவனைவிட்டகன்றான். மிருகப்பிணங்களை வாரி மூடிக்கொண்டிருந்த பீமன் அவைகளை உதறிவிட்டு கிருஷ்ணார்ச்சுனனை நாடிவந்தான். இதுவரையிலும் பீமனுக்கும் கர்ணனுக்கும் நடந்தபோரைச் சொன்னோம். இனிமேல் சாத்தகி செய்த சவுரியங்களிற் சிலவற்றைச் சொல்லுகிறோம், கேளும் மகாராஜனே! என்று மேலும்வைசம்பாயனர் பகராநின்றார். தேவர்களும் புகழும்படி யுத்தஞ்செய்து வராநின்ற சாத்தகியை அர்ச்சுனனால் அடிபட்டோடிவரும் படைவீரர்கள் வகுப்பு வகுப்பாய் முண்டியெதிர்த்து மடக்கிச் சண்டையிட்டு மார்புகிழிந்து உதிரம்வழிந்து அநேகர் விழுந்திறந்தார்கள். இதைப்பார்த்த அலம்புதன் சாத்தகியின் மார்பும் தோளும் உருவும்படியாக வாளிகள் ஏவி மதிமயங்கக்கலக்கினான். சாத்தகியானவர் அக்கினிக்கணைகளைத் தொடுத்து அலம்புதன் கைவில்லை முறித்து ஒட்டம்பிடிக்கும்படி முடுக்கினார்.

அப்பால் சாத்தகி தடையின்றி துரோணர் கட்டிய பார்முச வியூகபந்தியிற் கலந்துவரும்போது பூரிசிரவஸ் என்பவன் வந்தெதிர்த்தான். அவனைச்சாத்தகி அஸ்திரங்களினால் தாக்கினார். பூரிசிரவஸ் தன்பகழிகளினால் சாத்தகியின் வில்லைமுறித்தான். சாத்தகியும் பூரிசிரவசுவும் தேரைவிட்டிழிந்து வாளைக்கைக்கொண்டு நெடுநேரஞ் சண்டைசெய்து சாத்தகி இளைத்து பூமியில் விழுந்தமாத்திரம், அவனைக்காக்கும்படி அர்ச்சுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணர் சொல்லவே, இருவர் தொந்தயுத்தஞ் செய்யுங்காலத்தில் மற்றொருவன் பிரவேசிப்பது அசாஸ்திரீகமென்றுகூற. உனக்குப் படைத்துணை வந்தவனை ஆபத்துவேளையில் ரக்ஷிக்காமல் பார்த்திருப்பது காவலர் தருமமா, ஒருவேளை என்னை யொருவன் மடக்கியடித்தாலும் நீ கூட எனக்கு உதவிசெய்யமாட்டாய்போற் காண்கிறது, இப்பேர்ப்பட்ட

தர்மவிசாரணை கேட்ட உனக்கு நான் சாரத்தியஞ் செய்வதைப் பார்க்கி லும், இப்போதே உன்னைவிட்டகல்வது நலம். கொடியயுத்தத்தில் வலுவு குறையாமலும் மனமுஞ் சலிக்காமலும் தன்னையும் தேர் குதிரை சாரதி வில்லுகளையுங்காத்து வெற்றிபெறும்படியானவன் எவனோ, அவனையல்ல வோ அதிரதவிஜயனென்பார் தநுர்வேதியர், அந்த விஜய னென்னும் பேரை உரிமையாகப் பெற்றிருக்கிற நீ எனக்கு இரண்டுகையே யொழிய பலகைகள் இல்லையென்று சொல்லத்தகுமோ, செயிக்குந்திறம் உன்னிடத் திலிருக்கிறதென்றுணர்ந்து நான் சொன்னேன், நீ மகாபுத்திசாலிதான், காலதாமசமன்றி பூரிசிரவசை ஒருகணையால் போக்கிவிடென்றார். விஜ யன் வினயத்துடன்கேட்டு உடனே வைரவாளியைவிட்டு பூரிசிரவசு வாள் பிடித்துச் சாத்தகியை வெட்ட ஓங்கிய அவன் வலது கரத்தைத் துண்டித் தான். கையிழந்த பூரிசிரவசு, அர்ச்சுனா! நீ ஆசானிடத்தில் வில்வித்தை கற்றுக்கொண்ட சம்பிரதாயம் இதுதானா, யுத்ததர்மத்துக்கு விருத்தமாக இந்த அகிருத்தியத்தை எப்படி செய்வாய் என்று கேட்டான். ஒருவ னுக்கு உயிர்த்துணையாக வந்தபேர்கள் பகைவரின்கையில் அகப்பட்டால், அவர்களுக்கு உதவாமலிருக்கலாமா இதுபழிப்பா, நீயாருக்குப் படைத் துணை வந்தாயோ அவர் இந்தச்சமயத்தில் உனக்கு உதவாமற்போனதை நீ வெறுக்கவேண்டியது, பதின்மூன்றும்நாள் யுத்தத்தில் அபிமந்யுவை நீங்கள் எல்லோரும் சதிசெய்து கொன்றீர்கள். நீ அப்போது அவ்விடத் தில் இருக்கவில்லையா? இப்போது நீ அறிந்து கூறும் பாபபுண்ணியத்தை ஏன் அப்போ மறந்துபோனாய் என்றுசொல்ல, பூரிசிரவசு அறுபட்டதோ ளுடன் சாய்ந்து பிராணனை விடுந்தன்மையாகிய வேளையில், சாத்தகி யெ ழுந்து கோபங்கொண்டு வாளால் அவனை வெட்டவரும்போது, நரநாரா யணர் இருவரும் வெட்டாதே யென்கிறசொல் புறப்படுமுன்னே தலை வேறு உடல்வேறுசெய்துவிட்டு சாத்தகியானவர் அவர்களிடங்கிட்டினார். மகாவிசனத்துடன் திரும்பிவரும் பீமனை நரநாராயணர் இருவருங்கண்டு, இதென்ன அதிசயம்,இப்படி வாடிவருவதற்குகாரணம்யாதென்றுகேட்க, தேவரீர் முழக்கிய சங்கம்மாத்திரம் கேட்டு தேவதத்தத்தைக் கேளாததி னால் அர்ச்சுனனுக்கென்ன அபாயமோ என்று, யுதிஷ்டிரர் ஐயப்பட்டு சாத்தகியை முன்னால் அனுப்பிவிட்டு, அப்புறஞ் சற்றுநேரத்துக்குள்ளே என்னையும் அனுப்பிவைத்தார். அவருத்தாரப்படி புறப்பட்டு வரும்யான் எதிர்த்த பலவீரரையும் ஜெயித்து வரும்போது கர்ணன் என்னை மடக்கி னான். அவன் மதத்தை அடக்கிப் பலமுறையும் வென்ற என்னை மறுபடி யும் வந்தெதிர்த்து என்வில்லைமுறித்து என்தேகம்சிதைய அடித்து வருத் தினான். அந்த உபத்திரவத்துக்கு அஞ்சி யானைச்சருமங்களை வாரி மூடிக் கொண்டு நின்ற என்னை அவமானமாய்ப் பேசினான் என்றான்.

விஜயன் கேட்டுவெதும்பி அண்ணா! அந்தக் கர்ணனானவன், உன்னை இழிவாகப்பேசினவனல்ல, என்னைப்பேசிய வார்த்தையேயாம். நீர் விய சனப்படாதேயுமென்று வனமாலையணிந்த திருமாலைவணங்கி, என் அண்

ணன் பீமமகாராஜன் சொன்னதைக் கேட்டீரா, இதொரு புறத்திலிருக் கட்டும் என்ருன். சோமதத்தன்பிள்ளை பூரிசிரவசினல் சாத்தகியின் சாம ர்த்தியம் குறைந்துபோக விளைந்த காரணம்யாது, அதை விளம்பியருளு மென்று விஜயன் வினவ புண்டரீகாக்ஷன் புகல்கின்ருர். கேளாய் அர்ச் சுன! கம்சனுடைய தந்தை உக்கிரசேனனும் அவனுடைய தம்பி தேவக னும் நாடாளுங்காலத்தில், தேவகனுக்குக் குமாரத்தியும் எனக்குத் தாயு மாகிய தேவகிதேவியை சுயம்வர கல்யாணஞ்செய்ய சகலராசாக்களும்வந் திருக்கும்போது, எங்கள்பாட்டனுராகிய சூரசேனனும் சீநிஎன்பவரும் அங்கே வந்திருந்தவர்கள், அந்த தேவகி தேவியைத் தூக்கிக்கொண்டு தங் களுக்குப்பிள்ளையும் எனக்குத் தந்தையுமாகிய வசுதேவருக்குகலியாணம் பண்ணிக்கொடுக்க வரும்மார்க்கத்தில், இந்தச்சாத்தகிக்கு சொந்தப்பாட் டனுகிய சிநியென்பவர்பேரில் மற்றராசாக்கள் வந்தெதிர்த்து அபஜெயப் பட்டார்கள். அப்போது பாகலீக குமாரனுகிய சோமதத்தன் ஒருத்தன் மாத்திரம் நெடுநேரம் சிநியுடன் எதிர்த்து அபஜயப்பட்டு ஓடித்திரும்பி வருபவனை மற்ற ராசாக்கள்கண்டு பரிகாசித்தார்கள். இவ்வசைக்கு வெட் கமடைந்து உடனே காட்டுக்குப்போய் கைலாசபதியைக்குறித்து வெகு நாள் தவமியற்றி சாம்பவமூர்த்தி பிரசன்னமானபோது தன்பகையாளி சிநியென்பானை வெல்லும்படி அருள்புரிய வேண்டினன். அப்பா சோம தத்தா, உன்பகைவனுகிய சீநியும் அவன்பிள்ளை விருஷ்டியும் இறந்துநெடு நாளாயின, உன் பகைவர் ஒழிந்தனர். நீ செயம்பெறவேணுமாயின் உன் கால்வழியிற்பிறக்கும் பிள்ளையானவன் சிநியின்பேரப்பிள்ளையை வெல்லு வான் என்றுவரமளித்து அந்தர்த்தானமாயினர். அதனுல்தான் இந்தசாத் தகிகளைத்தான் அர்ச்சுன, காரணமில்லாமல் ஒன்றும் நடவாதென்று கம லக்கண்ணன் பூர்வோத்தரம் பொருந்தச் சொல்லினர். இவிடத்தில் இப் படியிருக்க தர்மராஜனுக்குசந்தேகம்விளையும்படி ஜநார்த்தனன் முன்னே சங்கந் தொனித்தாரென்று சொன்னேமே, அந்த தோனியைக் கேட்டு பதின்மூன்ரும்நாள்ராத்திரி தாருகனுக்குக் கொடுத்திருந்த உத்தாரப்படி சாரதியானவன் சங்கு சக்கிர கதா கட்க கோதண்டத்துடன் சுவாமியின் கனக ரதத்தை கொண்டுவந்து ஆகாயத்தில் வட்டமிட் டுலாவிக்காட்டி னன். அதைப்பார்த்த கேசவன் அவனை அவிடத்தில் ரதத்தை நிறுத்தச் சொல்லிக் கையமர்த்திவிட்டு அர்ச்சுனனுக்குச் சாரத்தியஞ் செய்துகொ ண்டிருந்தார்.

அங்கே தருமராசன் சண்டைக்குப் போயிருக்கிற தம்பிமார்களுக் குச் சமயத்துக்கு உதவும்படியாக ஆயுதவர்க்கங்கள் நிறைந்த இரண்டு இரதத்தை அனுப்பிவைத்தார். அவைவந்து சேர்ந்தவுடன் பீமனும் சாத் தகியும் தலைக்கொருதேராக ஏறிக்கொண்டு மும்மூர்த்திகள்போல் தேரை ச்செலுத்தி தங்கள் தங்கள் போர்த்திறங்களைக்காட்டி எதிர் ஒருவர் இல் லாமல் இடித்து வரும்போது கர்னன் அர்ச்சுனனை வந்தெதிர்த்தான். அவனைப்பார்த்து, அடாகர்ண! ஜெயாபஜெயம் ஒருவர்பால் அல்ல, சுத்த

வீரருக்கும் உண்டு, நீ அதை யோசியாமல் பீமசேனமகாராசனை தூஷிக்கலாமா, உன்கெட்டகுணத்தைக் காட்டினையல்லவா, நீ எத்தனைதரமோ பின்னிட்டோடினய், அப்போது உன்னை பீமசேனராசன் இகழ்ந்தாரா, பதின்மூன்றும் நாட்போரில் என்கண்மணியிற்சிறந்த அபிமந்யுவை மோசம்பண்ணிக் கொன்றாயல்லவா, இனிநடக்கும் யுத்தத்தில் உன்சிரேஷ்டபுத்திரனாகிய விடசேனன்தலையை உன்கண்ணுக்கெதிரில் நானே அறுத்துத்தள்ளுகிறேன். இன்னும் எவரெவர் என்மகன் இறக்கக்காரணராயிருந்தார்களோ, அவரவர்புத்திரர் மித்திரரும் சின்னபின்னமாகும்படி செய்வேன் என்றுகூறி, கர்ணன் உடல் முழுதும் தொளைபட்டுருகும்படி பங்கபத்திரமென்னும் புங்கங்களைச்செலுத்தினன். கர்ணன் தன் எதிர்ப்பாணங்களினல் அவைகளைத்தகர்த்து வேறுபாணங்களைப் பிரயோகித்து, கிருஷ்ணார்ச்சுனனை மிகுதியும் வருத்தியபோது, விஜயன், கர்ணன் கைவில்லை இரண்டுதுண்டாக்கவே உடனே அவன் பின்னடைந்தோடினன். விஜயனவன், சாத்தகி பீமன் இவர்களிருவருடன் சைந்தவனைத் தேடிவரும்போது துரியோதனன் அவர்களைப் பார்த்தமாத்திரம், அண்ணகர்ணா! இது நல்லசமயம், வருத்தத்துக்குப் பால்மாறாமல் எதிர்நின்று போர்கொடுத்துத் தடுப்பீராகில், இன்னஞ்சற்றுநேரத்தில் சூரியன் அஸ்தமித்துப்போவான். அப்போதுபற்குனன் அக்கினியில்விழுந்திறப்பான். அதனல் நமக்குக்ஷேமமுண்டாம், முனைந்துவாருமென்று கூப்பிட, இதுவரையிலும் பீமனேடெதிர்த்து என்னுடலம் மெத்தவும் மெலிந்திருக்கிறது ஆனலும்ஒருகைபார்ப்போமென்று தன்ரதத்தை நடத்திவந்து பீமார்ச்சுன சாத்தகியருடன் போர்புரிந்தான். விஜயன்விட்ட அஸ்திரத்தினல் கர்ணன் பின்னிட்டதுமல்லாமல், துரியோதனன்சேனைகள் மாண்டதற்குக்கணக்கில்லை. அசுவத்தாமனனவன் காண்டீவனையெதிர்த்து அவன் விட்டபாணங்களை அவலமாக்கினபோது காண்டீவன்முனைந்து மறுபாணங்கள் விட்டுக்கொண்டிருக்குங்கால், துணைநின்ற பீமனுஞ் சாத்தகியும் அநேகதிவ்வியகணைகளையேவி, துரியோதனனுடைய நால்வகைச்சேனைகளையும் சின்னபின்னப்படும்படிவாட்டி மாய்த்தனர். அசுவத்தாமன்மேலுஞ் சினங்கொண்டு அனுமக்கொடியன்மீது சரங்களைத்தொடுக்க, விஜயன்குருபுத்திரனுடைய கேசரிக்கொடியையும், கர்ணனுடைய கச்சைக்கொடியையும், விடசேனனுடைய மயில்கொடியையும், சல்லியனுடைய யானைக்கொடியையும், துரியோதனனுடைய பாம்புக்கொடியையும், மற்றமுனையாளருடைய கொடி குடைமுதலிய ராஜசின்னங்களை யெல்லாம் ஒருநொடியில் துணித்துத் துண்டங்கள்செய்து, அவரவர் வில்லுகளையும் முறித்து அவர்களை நோகச்செய்தான். அங்கதேசாதிபதி கர்ணன் வேறுவில்லைத்தாங்கி சிலவீரரையும் துணைகொண்டு துரோணர் வகுத்த பதுமவியூகப் பொகுட்டின் மத்தியில் விஜயனைப் போகவொட்டாமல் தடுத்து அமராடி நிற்கும்போது, மத்தியில்நின்ற சைந்தவன், அர்ச்சுனன் கிட்டி வந்துவிட்டானென்று அறிந்து பின்பக்கத்திலிருந்து தானும்கணைகளை அர்ச்சுனன்மீதேவி

னன். கர்ணன் விடாமல் செய்துவரும் கடும்போரினல் விஜயன் சற்று ஒய்ந்து உள்ளம்வெதும்பி கணைகளைவாரி கர்ணன்மீது எய்தான்.

குருபுத்திரன் அசுவத்தாமன் காண்டீவனுக்கு எதிர்வந்துநின்று தகைந்து சுவேதவாகனன் மேனிமுழுவதும் சரங்களால் தொளைபடச்செய்து சாத்தகியையும் வீமனையும் கேசாதிபாதமுதல் அம்புகளைப்புகுத்தி செங்குருதி செய்ததுமல்லாமல், பார்த்தசாரதி கைபிடித்திருந்த சாட்டைக்கோலையும் முறித்துத்தள்ளினன். விஜயன் அசுவத்தாமன்வில்லை முறித்து மார்பைக்கிழித்து அவனைச் சோர்ந்து போகும்படி அடித்து முடுக்கினன். கர்ணன்மகன் விடசேனன் தகப்பன்கொண்ட கோபத்திலும் பதின்மடங்கதிகமாக அர்ச்சுனன்மீது கோபங்கொண்டு வெகுவிந்தையாகிய இந்திரக்கணைகளை வாரிவாரிப் பொழிந்தான். பிரதாபவிஜயன் எதிரிதொடுத்த கணைகளையெல்லாம் கெட்டழியும்படிசெய்து எதிரியின் வீரப்பட்டத்தையும் ஒடித்தபோது, விடசேனன் உறக்கங்கொண்டு யுத்தத்தை விட்டோடாமல் ஒருபுறத்தில் ஒதுங்கி நின்ருன். அப்போது கிருபாசாரியர், துரியோதனன், அவன் தம்பிமார், மத்திரதேசத்திராஜனும் சல்லியனும்சேர்ந்து அர்ச்சுனனை வளைத்துக்கொண்டு ஒருவரோடொருவர் கணைகளை விட்டுப் போராடினர்கள். அர்ச்சுனன் பாணவேகத்தினல் அநேகம் படைகள்மாண்டது. அத்தருவாயில் சைந்தவன் இன்னம் எவ்வளவு தொலைவில் இருக்கிருனென்று அர்ச்சுனன் தேரில் எழுந்து நின்று பார்த்தபோது சற்றுத்தொலைவில் சைந்தவனுடைய பன்றிக்கொடிதுலங்கக்கண்டு இரண்டு கணைகளைவிட்டு அந்தக்கொடியை நறுக்கித்தள்ளி முடுகி உந்தும்போது, கர்ணன் மைந்தன் விடசேனனும் கிருபரும் அசுவனும் துரியனும் அடிபட்டோடிய பலபாஷை மன்னவரும் ஒன்றுகூடி அர்ச்சுனனை நெருங்கவொட்டாமல் தகைந்தார்கள். எதிர்த்து நிற்கும் இந்தக் கும்புகளை செயித்து உட்புகுமுன்னர்த் தானே பொழுதுபோகுமென்று விஜயன் தன்மனதில் அருண்டபோது, பார்த்தசாரதி இவன் கருத்தை அறிந்துகொண்டு, நீ எண்ணிய கருத்துச்சரிதான், இனி நாம் வேறுதந்திரம் எடுக்கவேண்டியிருக்கிறது. அதாவது சூரியன் அஸ்தமிக்கிறதற்குள்ளாக என்மாயையினல் சூரியனை மறைத்துப்போடுகிறேன். சூரியன் அஸ்தமித்தானென்று எதிரிகள் மகிழ்ந்து மமதையடைவார்கள். அச்சமயத்தில் சைந்தவனைக் கொல்லலாம் என்று உபாயஞ்சொல்லி ஆபத்ரட்சகனுகிய ஸ்ரீகிருஷ்ணதேவர் தமதுசக்கரத்தைவிட்டுச் சூரியனைமறைத்தார். சூரியன் அஸ்தமித்துவிட்டதென்று நினைத்து சைந்தவன் வெளியில் வந்து மேற்றிசை முகமாக நோக்கிப் பார்த்துக்கொண்டுநிற்கும்போது, பக்தபராதீனரான பகவான் சைந்தவனை அர்ச்சுனனுக்குக்காண்பித்து அவனைக்கொல்ல இதுநல்லசமயம், ஆனல் இன்னெரு பிரமாதம் இருக்கிறது, இவன்தலை எவன் கையால் நிலத்தில் தள்ளப்படுமோ அவன்தலை அநேக துண்டங்களாகக் கடவதென்று இவன் தந்தை சிமந்தபஞ்சகமடுவில் தர்ப்பணம் பண்ணிக்கொண்டிருக்கிறுன். நீஇவன்தலையை அறுத்து அதை பூமியில்விழவொட்

டாமல் தாங்கி இவன் தந்தைகையில் போய்விழும்படி செய்யென்று கற்பித்தார். விஜயன் பாசுபதாஸ்திரத்தைவிட்டு அவன் தலையைத் துணித்து உடனே வேறுஅஸ்திரத்தால் அந்தத்தலையைத்தாங்கி அவன்தகப்பன்கையில் விழும்படி செய்தான். தந்தையானவன் தன்கையில் விழுந்த தலையை காரியந்தெரியாததினால் தண்ணீரில் போட்டமாத்திரம், உடனே அவன் தலை சுக்குச்சுக்காய் வெடித்து மாண்டான். பாண்டவாள் தம்வாக்குக்கு விரோதமாய் சத்தியந்தப்பி நடந்தார்களென்று துரியோதனன் பேசிக்கொண்டிருக்கும்போது, சுவாமியானவர்சுதரிசனத்தை திரும்பவரவழைத்தவுடனே சூரியன் பிரகாசித்தது. இதைப்பார்த்த துரியோதனாதியர் அப்பா இது பெரியமோசமாயிருக்கிறதென்று பிரமித்தார்கள். சுயோதனன் கண்சிவந்து உள்ளங்கறுத்து, சூரியன் இருக்கும்போதே செம்மானமிட்டு மறைவாய் நின்ற காரணம் யாதென்று விவேகிகளாகிய பெரியோரைப் பிரசினைசெய்தபோது, நல்லோர் பெரியோரைத் திடுக்கிடச்செய்து அதினால் அவர்களுள்ளம் வருந்துமாகில் எல்லாப்பொருளும் பேதிக்கும், இரவுபகலாகும் பகல் இரவாகும், மேலும் நாம் எத்தனைபாடுபட்டாலும் காரியமில்லை, ஏனெனில் அர்ச்சுனசாரதியானவர் தன்மார்பில் ஆயுதத்தைத்தாங்கிய உபாயத்தால் வருணகுமாரனுடையபிராணனைமாய்த்தார். ஒருமந்திரத்தை உபதேசித்து துரோணர் துரியோதனனுக்குக் கொடுத்த சேமக்கவசத்தை நீறாக்கினார். பதுமவியூக பந்தியில் நின்ற சேனைகள் மயங்கும்படி பாஞ்சசன்னியத்தை முழக்கினார். பனைப்பொழுதிருக்கும்போதே சூரியன் மறையும்படியான இந்திரசாலம் இப்போதுசெய்திருக்கிறார். இப்பேர்ப்பட்டவர் பக்கத்துணையாய் நிற்கும்போது, காண்டீபன் செயம் பெறாமல் வேறு யார்பெறப்போகிறார்கள் இராசனேயென்று ஏக்கங்கொண்டனர்.

அதற்கு துரியோதனன் பெருமூச்செறிந்து சொல்லுகிறான், கேளுங்கள் என் இதயம்போன்ற இஷ்டர்களே! இந்த மகாமாயாவி கிருஷ்ணன் கஞ்சனுடைய காராக்கிரகத்தில் பிறந்து கானவராகிய இடையர் வீட்டில் வளர்ந்தவன் ஆயுதமெடுத்து அமர்செய்யேன் என்று எனக்கு உறுதிசொல்லிய வார்த்தை தப்பி, உனக்கோ எனக்கோ என்றிருக்கும் நடுச்சமயத்தில் சக்கரத்தைவிட்டுச் சூரியனை மறைத்து என் மைத்துனனைக் கொன்று அர்ச்சுனனைத் தப்பித்துவிட்டான். இனிமேலும் இவன் என்னென்ன செய்யமாட்டான். இவன் சொல்லை நான் எப்படிநம்புவேன், தெய்வமே இப்பேர்ப்பட்ட வஞ்சக நெஞ்சருக்கு நீ என்னகெதி அமைப்பாயோ நான் அறியேன் என்று விரைந்து பொங்கியெழுந்து அஸ்தமனமாகுமுன்னே போர்விளைத்துப் பாண்டவர் ஐவரையும் நானே கொல்லுகிறேன், இல்லாவிடில் அவர்கள் கையால் நானே இறக்கிறேன், இதுநிச்சயமென்று சகோதரர்கள் முதலிய சேனைகளுடன் வந்து பாண்டவரை வளைத்துக்கொண்டான். துரியோதனமகாராசன் வாக்கியத்தைக் கேட்ட அந்தந்த வீரவேந்தர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சபதங் கூறிக்கொண்டு தனித்

தனியே நின்று யுத்தம் புரிந்தார்கள். அப்போது அந்த யுத்தகளத்தில், ஆற்றுப்பெருக்கம்போல் ஓடிய இரத்தவெள்ளமானது ஒரு நிமிஷத்தில் சேறுய்க் குழம்பும்படியாக பீமார்ச்சுன சாத்தகிமூவரும் தங்கள் சேனைகளுடன் வந்து முனைந்து மல்யுத்தம் வில்யுத்தங்களைச்செய்து கிருபாசாரியர் மார்பில் மூன்று பாணங்களை விட்டபோது அவர் தேர்த்தட்டிற் சாய்ந்தார். அவருக்குப் பரிந்துவந்த அசுவத்தாமன் ஒருகணைக்கு ஆற்றமாட்டாமல் புறங்காட்டி யோடினன். துரியோதனராசன் தேரிழந்து பாதசாரியா யோடினன். கர்ணன் நின்றவிடத்திலேயே நின்று மற்றவர்கள் தோற்ருேடுவதைப்பார்த்து தானும் ஓடினன். தேரின்மீது மூர்ச்சித்துக்கிடக்கும் கிருபாசாரியாரை அர்ச்சுனன்கண்டு மனஸ்தாபப்பட்டுக் கண்ணீர் சோரவிடும்போது பச்சைவண்ணன் விஜயனைப் பார்த்து கிருபாசாரியர் சிரஞ்சீவி அவருக்கு யாதொரு அபாயமுமில்லை பயப்படாதே யென்று தேற்றி, கவுரவ சேனைகளைக் குறைத்துக் குறித்த சபதத்தை முடித்து வென்றகோவே,உனக்கு நிகர் ஒருவருமில்லையென்று உந்திபூத்தோன் சொல்ல, தேவரீர் திருவடிக்கிருபையினல் செயங்கொண்டேனல்லாது, என்னல் வென்றேனென்னும் இறுமாப்பெனக்கு கிஞ்சித்தும் இல்லை, என் உயிர்க்குயிராகிய ஆண்டவனே யென்றிறைஞ்சினன். காலைமுதல் இதுவரையிலும் நாம் விலகியிருந்ததற்குக் கவலைகொண்டிருக்கும் தர்மராஜனிடம் போவோமென்று எல்லோரும் வரும்போது, தர்மராஜன் இவர்களைக் கண்டமாத்திரம் முகம்மலர்ந்து கிருஷ்ணர்ச்சுனனை மார்போடு அணைத்துத்தழுவி, எம்பெருமானை அளவற்ற பிரியவசனங்களால் ஸ்தோத்திரித்து பீமனையும் சாத்தகியையும் உபசரித்து தேவதேவனுடன் சல்லாபித்துக்கொண்டிருந்தார்.

அபஜயப்பட்டுத்திரும்பிய துரியோதனன், சைந்தவன் இறந்ததைக் குறித்து சேனபதியாகிய துரோணுசாரியரிடத்தில் போய் மோதிக்கொண்டான். தர்மம் இருக்கிற இடத்தில் ஜெயம் உண்டாகும், நாம் என்ன பாடுபட்டுக் கெட்டிசெய்துகார்த்தபோதினும் அதர்மத்தினல் பயன்படாமல் போயிற்று, நீ என்பேரில் நிஷ்டூரப்படுவதிற் காரியமில்லை, நம்மை வென்ற நரன்முதலியபேர்களை நாம்போய் மறுபடியும் வளைத்துப் பாண்டவரில் ஒருவனையாகிலும் மாய்த்து அல்லது கைப்பிடியாகப்பிடித்து நமக்குநேரிட்டிருக்கிற மனக்கசப்பைத்தீர்த்துக்கொள்ளுவோம், புறப்படுங்கள் என்று சொன்னர். இவர் கூறிய வார்த்தையில் ஐயப்பட்டு சூரியபுத்திரன் பக்கலில்சென்று துரோணர் பேச்சை இனிநம்பலாமா என்றுகேட்டதற்கு, அவர் நமது சேனையை பலம்பண்ணினதற்கு யாதொரு கலனுமில்லை. அர்ச்சுனன்கற்ற சாஸ்திரதட்பத்தினுலும் மேலாகியவரங்களினுலும் நமது கிரகசாரபலத்தினுலும் யாவரும் அசைவற்றிருக்கக்கண்டு ஜெயம்ஜெயம் என்று தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டான். இப்போது ஆசாரியர் சொல்கிற சொற்படி அவர்பேரில் பொறுப்பு வைத்து சண்டைக்குப் போகலாமென்ருன். தநுர்வேதியரானவர் எல்லோ

ரையும் அழைத்துக்கொண்டு துரியோதனனுக்கெதிரில்வந்து, நான் பிடித்தவில்லுடன் போய் பாண்டவரைச் சங்கரித்து நாகக்கொடியோனை இத்தரணியை ஆளும்படி செய்கிறேன். இல்லாவிடில் பாண்டவர்கையில் மாளுகிறேன். இவை இரண்டிலொன்று தெரிகிறவரைக்கும் இந்தரணக்களத்தில்தான் இருப்பேனே யல்லாது பாசறைபுகேன் என்று தன் பிள்ளை அசுவத்தாமனை யழைத்து, எனக்கு ஆதிசத்துருக்களாகிய பாஞ்சாலரை அடியோடழித்துவிடுகிறேன், ஒருவேளை அவர்கள் பிராணன் தப்பி நான் அழிவேனாகில், அவர்களை வேர்களைந்து முடிப்பது எனக்குப் பிள்ளையென்றுவந்த உனக்கு அருங்கடனாக விருக்கக்கடவதென்றுமொழிந்தார். இவ்விதம் சபதங்கூறிய துரோணர் திரண்ட சேனைகளுடன் பெருங்கூச்சலிட்டு வருஞ்சத்தத்தை பாண்டவர்கள் கேட்டு, மறுபடியும் வருகிறார்கள் என்று புளகமுற்று தங்கள்படைகளுடனே வாத்தியங்கள் முழங்க ரணக்களம் வந்தனர். உடனே தருமநந்தனரும் துரியோதனனும் இருவரும் முனைந்து போர்செய்யுங்கால், தருமராசன் எதிரியின் கைவில்லும் அவன் ரதமும் உடையும்படிபாழாக்கி அவன் தேகத்தில் இரத்தம் பெருகச்செய்ததினால் அவன் அயர்ந்து பூமியிற்சாய்ந்தான். அவன் தம்பிமார்கள் செய்த சைத்திய உபசாரத்தினால் அவனுக்கு மூர்ச்சைதெளிந்தது. மற்ற ராசாக்களும் கர்ணனும் தர்மபுத்திரரை வளைத்து அம்புகளை ஏவினர்கள். அவர்கள் பாணங்களைச் சிதறடித்து விழலாக்கி மறுகணைகளைத் தொடுத்து அவர்களைப் பின்னிட்டோடும்படி யடித்தார்.

எதிரியின் சேனாதிபதி தருமராசனை வளைத்து விசித்திரம் விசித்திரமான அஸ்திரங்களை நிரப்பினர். ஒருராசன் இடையில் எழும்பி தர்மர் பேரில் பாணத்தை விட்டான். தருமர் வேறொரு கணையைத் தொடுத்து அந்தராசனைக் கொன்றுபோட்டார். இதைப்பார்த்த சல்லியன்மகன்மாத்திரேயன் தருமரையெதிர்த்துப் போர்செய்து அவரை மிகவுந் தத்தளிக்கச்செய்தபோது, தருமர் தன் கோபவேகத்தினால் கணைகளை அவன்மேல் ஏவவே மாத்திரேயன் மாண்டுமடிந்தான், இவைகளை அசைவின்றிப் பார்த்து நின்ற துரோணாசாரியர் யுதிஷ்டிரருக்கெதிரில் வந்து விருஷபாஸ்திரங்களை அளவில்லாமல் விடுத்தார். அதினால் அநேகம் யானை குதிரைகள் ஆயுதபடாள் மாண்டனர். அப்போது வீரவைரம் பொருந்திய பீமசேனன் படைக்குட்புகுந்து ஆசாரியர் கட்டிய வியூகத்தை தன் ஆயுத சாமர்த்தியத்தினால் சின்னபின்னமாய்பேதித்து மூர்த்தந்நியமாய்த் தாண்டவமாடிக்கொண்டு வரும்போது, துருபதேயன் அவன்பிள்ளை திருஷ்டத்தியும்நன் சிகண்டி சுமித்திரன் பிரியதரிசனன் சித்திரகேது சுகேது துவசேனன் உத்தமோசன் உதாரமனு முதலியோரும் சாத்தகிராஜனும் சேர்ந்து, வரங்களால்பெற்ற சரங்களை மரங்களைப்போல் தூக்கி ஆசாரியன் மீது எறிந்து போரிட்டார்கள். துரியோதன மகாராசனும் அவன்தம்பிமார்களும் வெற்றிவேந்தர் பதினாயிரவரும் ஒன்றாய்க்கூடி பீமனைவளைத்து அவன் தேரையும் குதிரைகளையும் வில்லையுமழித்து தேகத்தில் ரத்தவெள்

ளம் வழியும்படி செய்தார்கள். பீமன் நிராயுதனுய் பூமியில்குதித்து குதிரைகளின் கால்களைக் குறுகப்பிடித்துத் தூக்கி ஒன்றின்மேல் ஒன்ருய் அடித்து மோதிமாய்த்து யானைக்குழாங்களையும் அவ்வாறேஅதம்பண்ணி எதிரிகளின் தேர்களையும் வாரியெறிந்து தரையிலுடைபடமோதி நாசஞ் செய்துக்கொண்டு வருஞ்சமயத்தில், துரியோதனனும் தம்பிமாரில் சிலரும் பலமாகப் பலவிதப் போர்கொடுத்துச் சளைக்கும்போது, அவர்களுடன்கூட விருதன் என்பவனும் சூசியென்பவனும் தைரியத்துடன் நெடுநேரம்வரையில் எதிர்த்துநின்று தோள்வலி தாள்வலி இவைகளின் வீரத்திறங்களை நிலைநாட்டி வீமனை அயர்வடையும்படி செய்தபோது, பீமன் சங்காரருத்திரனைப்போல் அகோரங்கொண்டுசீறி ஒருவர்போனவழி ஒருவருக்குத்தெரியாமல் அவர்களை மடித்து ககனமார்க்கப்பிரவேசமாக்கிவிட்டான். இஃது இப்படி நிற்க, சாத்தகியானவர் சோமதத்தன் பிள்ளையைக்கொன்றதின் நிமித்தியம் அவன் தந்தை சினங்கொண்டு அவரை எதிர்த்து அமர்புரிந்தான். சாத்தகியானவர் அவனுடன் சமர்செய்யும்போது, அவன் இளைத்துப்போவதையும் இவர்வலுத்துமுனைவதையும் நந்தியாவட்டன் உற்றுப்பார்த்து சகுனிமாமனையும் நால்வகைச்சேனைகளையுங் கூட்டி சோமதத்தனுக்குத் துணையனுப்பிவைத்தான்.

பாண்டவசேனுதிபதி திருஷ்டத்தியும்நனும் அநேக அரசரும் சேர்ந்து சாத்தகிக்குத் துணைவந்துநின்று உபயபட்சத்தாருங் கைகலந்து வெகுநேரம் சண்டை நடத்துகையில் சோமதத்தன் அசந்து தேரில் சாய்ந்தமாத்திரம், அவன்சாரதி தேரைத்திருப்பிக்கொண்டு விரைவில்போய்விட்டான். சகுனிமுதலியோர் அடிபட்டுநொந்து காலைப்பின்னிப்பின்னிஇழுபறியென்று திரும்பினுர்கள். அசுவத்தாமர் பரிந்து சாத்தகிமன்னனை வளைந்து ஆக்குரோஷித்துப் பேசும்போது கடோற்கசன் அசுவத்தாமன் மீது வர்மம்பொருந்திய அநேக அஸ்திரங்களைப் பொழிந்து உபத்திரவிக்குங்கால் நந்தியாவட்டனும் அவன் சமூகங்களும் இடும்பிமகன்மேல் அசுவத்தாமனுக்கு உபபலமாய்வந்து சண்டை கொடுத்தார்கள். கடோற்கஜன் பூதப்பிரேத பிசாசங்கள் கூத்தாடுவதுபோல் மாயாயுத்தங்களைச் செய்து படைகளைபாழாக்கிவிடுவதைசூராள்கண்டு கூடியவரையில் எதிர்த்துப்பார்த்து பின்னடைந்தார்கள். கடோற்கஜன் மைந்தன் அஞ்சனவர்மன் தேவர்களுடன் இராக்ஷதாள் செய்த போர்த்திறம்போலும் அந்தரமும் தாரணியும் செங்குருதிபிரளும்படி சமரமாடி வருங்காலையில் அசுவத்தாமனுனவன் பகலவன்கொடுத்த பாணத்தை பூசித்து அஞ்சனவர்மன் மீதுவிட்டு நிமிஷத்தில் அவனை யமலோகம் புகுத்தினன். பிள்ளைபறிகொடுத்த கடோற்கஜன் சிறியெழும்பி பிரம்மாண்ட விருக்ஷங்களைப் பிடுங்கி அசுவத்தாமன் பேரில் சாடிவிட்டபோது, ஆசாரியர் அவைகளைபாணயந்திரங்களால் தட்டிவிட்டு கடோற்கஜனை மூர்ச்சித்துப்போம்படி அடித்தனர். கடோற்கஜன் எழுந்து திருஷ்டத்தியும்நன் தேரிலேறிக்கொண்டு மாயாவல்லபங்களால் மாறிமாறி அருஞ்சமர்புரிந்து துரியன் படைகள்

திடுக்கிட்டுத் திசைகெட்டோடும்படி அடிக்கும்போது அசுவத்தாமன் வந்துதடுத்து அயமுகாஸ்திரந் தொடுத்துத்தாக்கி கடோற்கஜன் முதலிய பாண்டவ வீரர் விட்ட கணைகளை நொறுக்கி தீமையிற்சிறந்த அரக்கரை யெல்லாம் நொடிப்பொழுதில் ஆவிபோக்கி ஆகாயஞ் சேர்த்தான். முன்னே சாத்தகியுடன் சண்டைசெய்திளைத்த சோமதத்தன் களைதீர்ந்தெழுந்து மிகுந்த படைகளுடன் சாத்தகி எங்கேயென்று சண்டைக்கு வந்தான். அப்போதுபீமன்குறுக்கேவிழுந்து தகைந்து வச்சிரக்கணையால் அவனை மறுபடியுஞ் சோர்வித்தான். சோமதத்தன் தந்தை பாகலீகன் சீக்கிரம் வில்லைவளைத்து தீமுகபாணங்களைத் தொடுத்தபோது பீமன்அதுகளைச் சிதறடித்து பாகலீகனுடன் நெடுநேரம் தேவதாஸ்திரங்களைப் பிரயோகித்துச் சண்டைசெய்து பாகலீகன் தலையை அறுத்துத்தள்ளினான். அதினால் அவன் படைகள் கலைந்து பலதிக்கிலும் பறந்தனர். துரியன் தம்பிமார் ஓடியபடைகளைத் திருப்பிக்கொண்டு பீமனை யெதிர்த்து அஸ்திரமலைகளை அவன்மீது பொழிந்தனர். வாயுமைந்தன் அவைகளை யெல்லாம் நாசமாக்கி நாகதந்தன், உக்கிரசாயி, வேகதரிசி, தண்டலசாயி, உலூகநாதன், பீமபிந்து, மக்குவாசி, தூர்த்தன், இப்பதின்மரையும் கொன்று தொலைத்தான். மற்றொருபுறத்தில் அசுவத்தாமன் வெகுசேனைகளைத்திரட்டிக்கொண்டு வரும்போது குந்திபோஜன் மைந்தரில் இருவர் முந்தியெதிர்த்து ஐந்துவகைக்கணைகளையுந்தி அசுவத்தாமனை யடித்து அவன்விட்ட எதிர்கணைகளால் ஆவிமாய்ந்தார்கள். இன்றையத்தினம் சக்கிரதரனால் மறையுண்ட ஆதித்தன் தானும் மறைந்தான். துரியோதனன் யுத்தத்தை நிறுத்தாமல் ராத்திரியும் நடத்தவேணுமென்கிற தன் எண்ணத்தை எதிரிகளுக்குத்தூதனுப்பி, பாண்டவர்முன்னம் வந்துநின்று, சூரியப்பிரகாசம் போல் பெரும்பெருந் தீபங்களை யானைமீதும் குதிரைமீதும் கம்பத்தின் மீதும் நாட்டிவைத்து சங்கம் பேரியாதிகளை முழக்க சண்டைக்காக எல்லோரும் வந்தார்கள்.

இராத்திரிச் சண்டை.

அப்போது விஜயன்மேல் கர்ணன் மூண்டுவந்து போர்செய்தான். கிருதபன்மன் முரசக்கொடியோனை முடுக்கினான். துரோணாசாரியர் பழய பகைஞனாகிய திருஷ்டத்தியும்நனை எதிர்த்தார். துரியோதனன் பீமனோடெதிர்த்துப் போர்புரிந்தான். சல்லியராசன் சதாநிகனை வளைத்துக்கொண்டான். கடோற்கஜன் அசுவத்தாமனை எதிர்த்துப்போராடினான். தரணிபாலகராகிய தார்வேந்தர் தங்கள் தங்களுக்குரிய பகைவருடன் சண்டைக்காரம்பித்தார்கள். அந்தந்த அணிவகுப்பார் தந்தம் வரிசைகளின்படி ஒருவரோடு ஒருவர் முனைந்து போர்செய்தார்கள். இவ்வாறு அவரவர் புஜபலத்துக்குத்தக்கதாய் சண்டைசெய்யும்போது அர்ச்சுனனும் கர்ண

னும் அமோகமான யுத்தங்களைவிளைத்து கர்ணனைப்பார்த்து நீ பிறக்கக் காரணனுயிருந்த சூரியன் மறைவாய்ப் போய்விட்டான். இனி உன்பாடு தள்ளாட்டந்தான். நான் காண்டவதகனத்தில் உதவிசெய்த அக்கினி பகவான் பிரசன்னமாயிருக்கிறுர், என்பாடு செயந்தான் என்று பேசி சிலீமுகங்களால் கர்ணன்பற்றிய வில்லையும் நாணையும் தேரையுஞ் சாரதி யையும் அற்றுவிழும்படி யடித்து அவனையும் மற்றவர்களையும் வெந்நிடு வித்தான். தருமபூபதியும் கிருதவர்மராசனும் முனைந்து சாடுகையில் தர் மருடைய வின்மையினுல் அவன்தேகத்தில் இரத்தம்பெருகி அர்ச்சுனனி டத்தில் அபஜயப்பட்ட கர்ணனைப்போல் இவனும் தோற்று ஓடினுன். உரககேதனன் துரோணரிடம்போய் அர்ச்சுனனுல் கர்ணன் இளைத்தான், தருமரால் கிருதபன்மன் ஓடுகிறுன் பாருமென்ன, அவ்வார்த்தை காதிற் பட்டும்படாம லாகிறபோதே ஆசாரியர் உரங்கொண்டு யுதிஷ்டிரரைவளை த்து யுத்தஞ்செய்து இருவருங் கையிளைத்து மறுபடியுந்தேறி, துரோணர் பலவித அம்புகளைப் பிரயோகித்தார். அவருடன் கூட வந்தவர்களுங் கோடாகோடி அம்புகளை யெடுத்து விட்டார்கள். தருமராசன் அதற்குச் சளையாமல் தன்மீது ஒருபாணமாகிலும் படாமலே தடுத்துக்கொண்டு எதிரிகளை தன்கணைகளால் உபத்திரவித்தார். துரோணுசாரியர் பிரம் மாஸ்திரத்தை விட்டபோது யுதிஷ்டிரர் ஜிநேந்திராஸ்திரத்தினுல் அதைத் தட்டிப்பொடிபட அடித்து ஆசாரியரைப் பின்னேடும்படி செய்தார்.

பீமசேனனுடன் துரியோதனன் எதிர்த்து மல்லாடி அபஜயப்பட் டுத் தன்தோழனுகிய கர்ணனை அணுகி, பாண்டவாள் நாலுபக்கத்திலுஞ் சூழ்ந்து நமதுபடைகளை மாய்க்கின்றுர்கள். நீர் இத்தருணத்தில் என்னை ப்பற்றியாவது முனைவீராகில் சத்துருக்களை வெல்லலாம் என்ன, கர்ணன் வீரியம்பேசி எதிரிகளை நிமிஷத்தில் அதமாக்கிறேன் என்று தன்வல்லமை யைப்பாராட்டினுன். பக்கத்தில் நின்றகிருபர், சூதகுமாரனே நீசிங்காரப் பேச்சுப் பேசவல்லவனே யல்லாது சத்துருக்களை செயிக்க வல்லவனல்ல வே, நீஎத்தனைதடவையோ அர்ச்சுனனிடத்தில் அபஜயப்பட்டு ஓடினுய், அதைநினைத்துப்பார் என்றவுடன், கர்ணன் அவரைக்கிட்டிஇன்னெருவர் இப்படி உதாசனித்தால் அவர் நாக்கை இரண்டுதுண்டாய் அறுப்பேன், நீரானதால் சகித்தேன் என்றுன். அங்கிருந்த அசுவத்தாமன், தன்னைத் தானே புகழ்ந்துகொள்ளுஞ்சவுங்கலே! எவராகினும் உள்ளத்தைச்சொன் னுல் அவர்கள் நாக்கைத் துண்டிப்பேன் என்று யென்ன எண்ணத்தைக் கொண்டுசொன்னுய்? காரியத்தையோசிக்குமிடத்தில் சவ்வியசாசியைஎவ் வளவேனும் நீவெல்ல வல்லவனல்லவென்று ஏற்கெனவே பத்துத்தரஞ் சொல்லி யிருக்கிறேன். இப்பவும் அந்த விஜயனை நீ அசைக்கமாட்டாயெ ன்று இதோ உன் ருசுவில் சொன்னேன். இசைகெட்டவனே! நீசொல்லிய சொல்வழுவாமல் என் நாக்கைத் துண்டித்துவிட்டு மறுகாரியம் பாரென் று கர்ணனைக்கிட்டினுன். காந்தாரிமைந்தன் தக்ஷணம் எழுந்து இருவர் மத்தியில் நின்று உள்ளுக்குள்ளே நாமே படைவெட்டிக்கொண்டால் நாம்

எதிரிகளை எப்படி செயிக்கமுடியும். நான் உங்களனைவரையும் என் உயிருக்குயிராய் நம்பியிருக்க, போர்க்களத்தில் நீங்கள் ஒருவருக்கொருவர் பலபடியாய் வார்த்தைகளைப் பேசிக்கொள்வது நீதியோ என்று தணிவு சொன்னான். உடனேகர்ணன் வெளிப்பட்டு இந்திர குமாரன்பேரில் எழும்பி உக்கிரவேலாயுதத்தை விட்டபோது அதை இடிக்கணையால் அர்ச்சுனன் மோதித்தள்ளி கர்ணன்தேரையும் உடைத்து அவன்தேகத்தை அம்புகளால் தொளைத்ததனால் கர்ணன் புறங்காட்டி யோடினான். வணங்காமுடியன் தன்தோழன் கர்ணமகாராஜன் ஓடுகிறதைப்பார்த்துச்சகியாமல் தானேநேரில் சண்டைக்குப்போகத் தேரைத்திருப்புகிறபோது, கிருபாசாரியர் மனமிரங்கி தன்மருமகன் அசுவத்தாமனைச் சண்டைக்குப் போகும்படி ஏவி, துரியோதனனைப் பின்னுக்குவிட்டார். துரோணாசாரியர் பட்சபாதத்தினால் சரியானபடியுத்தஞ்செய்யவில்லையென்று அசுவத்தாமனிடத்தில் தாங்கற்பட்டு, உங்களையே தஞ்சமென்று நம்பினேனென்றான். என் தந்தையின்பேரில் நிந்தனை சொல்லுகிறாய், அஃதுனக்குத் தகாது, பெரியோர்களுடைய செய்கை எப்படியென்றால் பாசமும் அன்பும் உண்டாயிருந்தாலும் போர்க்களத்தில் நேசத்தைப்பாராட்டாமல் சண்டைசெய்து எதிரியைக் கொன்று ஜெயம்பெற்றாலும் பெறுவார்கள், ஒருவேளை தாங்கள் மடிந்தாலும் மடிவார்கள். எப்பேர்ப்பட்ட பகை உண்டாயிருந்த போதிலும் எதிரிகள் பூர்ணபலமுடையவராகயிருப்பாராகில் அவர்களையும் புகழ்ந்து கொண்டாடுவார்கள். அப்படி மெச்சிக்கொண்டபோதிலும், காரியத்தைவிடார். வின்மையும் போர்த்தன்மையும் தெரிந்தஎன் தந்தை வேதியராகையால் விஜயனுடைய வில்வித்தையைக்கண்டு மகிழ்ந்திருக்கலாம், நல்லது இருக்கட்டும் நான் இப்போது வேகமாய்ச் சென்று போர்புரிகிறேன். இந்த யுத்தத்தை உன்கண்ணாரக்கண்டு மனசாரத் தெரிந்துகொள்ளும் காவலனே, என்று புகன்று தேரைக் கடுகமுடுக்கென்று சாரதியை ஏவினன். உடனே பாண்டவர் படைக்குட்புகுந்து தன்கல்வியாகிய வில்லின் திறமையினால் எதிரிபடைகளைப் பஞ்சாகப்பறக்கடித்து அநேகரை மாய்த்து அநேகரைத் தோற்கடித்தான்.

பாண்டவசேனாதிபதி திருஷ்டத்தியும்நன் அசுவத்தாமனுடன் கைகலந்து நெருப்பைப்போல் கோபமூண்டெரிய கரதூஷணர் திரிசிரசென்னும் மூவரையும் மூதண்டங்குலுங்கக் கோதண்டங் கொண்டு சண்டைசெய்தவாறேபோல் இவ்விருவரும் நெடுநேரம் யுத்தம்புரிகையில், அசுவத்தாமன் நிமிஷத்தில் உன் உயிரை வாங்குகிறேன் பாரென்று கொடிய பாணம் ஒன்றை விட்டான். பாண்டவசேனாதிபதி மறுபாணத்தினால் அதை யடித்துத் தகைந்தான். அசுவத்தாமன், திருஷ்டத்தியும்நனுடைய தேர் வில் சாரதிகளை பங்கப்படுத்தி அவன் தேகமெல்லாம் காயம்படும்படி அடித்தான். திருஷ்டத்தியும்நன் வேறுதேரேறி அசுவத்தாமன்தேரில்கட்டிய கொடியை பங்கம்பண்ணவே, அசுவத்தாமன் மறுபடியும்திருஷ்டத்தியும்நன் தேரையும் பக்கத்துணையான யாவரையும் சதைத்துச்

சிதைத்துச் சேனாதிபதியைக் கால்கை அசையவொட்டாமற் செய்ததினால் அவன் களைத்துத் தேரில் சாயவே சாரதி பின்னுக்கோட்டிப்போய் விட்டான். சேனாதிபதி தெளிந்து தேறிவருகிறதற்குள்ளாக, அவன் படைகளில் அநேகரை அசுவத்தாமன் முடித்துப்போட்டான். நகுல சகாதேவர் இருவரும் அசுவத்தாமனை யெதிர்த்து கவ்வம்பாகிய கணைகளையெறிந்து சண்டைசெய்தார்கள். அசுவத்தாமன் அவர்களுடைய தேர் சாரதிகளை அழித்து அவர்களைப்பதாதிகளா யோட்டம்பிடிக்கச்செய்தான். தனஞ்செயன் அசுவத்தாமனுடன் முனைந்து வாடைக்காற்றுடன் வடவாமுகாக்கினிசேர்ந்து பற்றிக்கொண்டதுபோல் மூர்த்தன்னியமாய் வேதனைவிளைவிக்கும் அஸ்திரங்களை இருவரும் ஒன்றின்மேல் ஒன்றாய் விட்டு ஒருவரையொருவர் விடாமல் அமர்புரிந்தார்கள். இந்தச்சண்டையை துரியனும் துரோணரும்பார்த்து அற்புதம் அற்புதம் என்றாச்சரியப்பட்டு ஆங்காரித்துக்கொண்டு அர்ச்சுனனருகிற்போனார்கள். அசுவத்தாமன் அர்ச்சுனனைவிட்டகன்று வேறு போர்முனையிற் புகுந்து அல்லோலகல்லோலமாகும்படி யடித்தான். விஜயன் ஆசாரியரைக் கண்டமாத்திரம் விரைவிலே தேரைச்செலுத்தி தளர்ந்துபோகாமல் நினைப்பதற்கரிய பாணங்களைத் தொடுத்துவிட்டான், இருவரும் இங்ஙனஞ் சமரமாடுங்கால் பாகலீகன்குமாரன் சோமதத்தன் சாத்தகியுடன் உடன்றான். சாத்தகியானவர் எதிரியின்தேர் குதிரைகள் வீரப்பட்டம் வில்லுகள் பாழாகும்படி நொறுக்கி அவனுடன்வந்த படைஞரைக்கலக்கி ஐந்திராஸ்திரத்தைத் தொடுத்து சோமதத்தன் உயிரைப் போக்கிவிட்டார். பீமசேனன் துரியோதனனுடைய படைத்திரள்களைக் கலக்கிவரும்போது, பூரீசன் தம்பியாகிய பூரியென்பவன் சாத்தகியை யெதிர்த்து எண்டிசைகளுமதிரச் சண்டைவிளைத்து சாத்தகிதொடுத்த சங்கிராமபாணத்தினால் தன் உயிரை இழந்தான். இப்பால் தருமராசனுடன் எதிர்த்துநின்ற பூபாலரெல்லோரும் புயவலியிழந்து தேரிழந்து வில் முதலிய ஆயுதமொழிந்து உதிரம் வழிந்து உயிரழிந்தார்கள். சதாநீகன் தொடுத்த உக்கிரகணையால் மத்திரதேசாதிபதி சல்லியன் மனமடிந்து இருட்டுவழியை நாடியோடினான். இஃதிப்படியிருக்க அசுவத்தாமன் உடற்றிவாராநின்ற உபத்திரவத்தினால் ஐவர்படைகள் படுகின்ற அலங்கோலங்களை இடும்பிமைந்தன்கண்டு பாய்ந்தெழும்பி வேலாயுதமொன்றை அசுவத்தாமன்மார்பில் தாக்கினான். அதுபட்ட மாத்திரம் மூர்ச்சித்துத் தேரிற்சாய்ந்தான். சாரதி அவனைத்தேருடன் தூரக்கொண்டுபோய்ச் சேர்த்தனன். அங்கர்கோமானுடன் சகாதேவராசன் எதிர்த்து யுத்தஞ்செய்து கர்ணன்பாணத்தினால் கத்தி கேடயம் முதலியவையிழந்து சகாதேவன் பூமியிற்குதித்து கதாயுதத்தைச் சுழட்டி யெறிந்தான். கர்ணன் தன்கணைகளால் அதைப் பொடிப்பொடியா யுதிர்த்தான். சகாதேவன் தன் கையிலிருந்த சகலகணைகளையும் விட்டும் அவலமேயாயினான் இப்படியாக ஒடுங்கிநின்ற சகாதேவனுடைய கழுத்தில் தன்வில் நாணினை மாட்டிக் கிட்டி யிழுத்து, குந்திதேவிக்குத் தான் கொடுத்த வாக்கை

னைத்து அவனைக்கொல்லாதுவிட்டு அடா சகாதேவா நீ தனிமையிற்சென்று சண்டைசெய்ய வல்லவனு, உனக்கீட்டுக் கோனவனைப் பார்த்துப் போர்செய்யவேணுமேயல்லாமல், மலையுடன் மண்ணுங்கட்டி யெதிர்ப்பதுபோல், என்னுடன் எதிர்த்து இல்லாத ஆட்டமெல்லாம் ஆடினையே, நீ என்னபலனைக்கண்டாய், நான் உன்னை இப்போ கொல்லலாமல்லவா, அப்படியுன்னைச் சங்கரிப்பதினல் எனக்கு லாபமும் இல்லை, உன்னை உயிருடன் விடுவதினல் எனக்கு ஒரு லோபமும் இல்லை. நீ அகப்பட்டதைப் போல அர்ச்சுனன் அகப்படுவானுகில், ஆ ஆ, அவன் உயிரை இந்நேரம் வாங்கியிருப்பேன் என்று பலவாறும் இகழ்ந்து அர்ச்சுனன் நிற்குந் திக்கைக்காட்டி அவனை விரட்டிவிட்டான். தேறிவந்த பாண்டவசேனதிபதி திருஷ்டத்தியும்நனும் அநேக அரசரும் கூடிவந்து அர்ச்சுனனையடிக்கிற துரோணரைமாட்டி யோட்டிவிட்டதுமல்லாமல், அவர்கூடநின்ற யானைசேனை காலாள் குதிரைகளும் அடிபட்டோடினர்கள். சகாதேவனை விட்டுவிட்டுத் திரும்பின கர்ணனுனவன் துரியோதனனிடம்வந்து வார்த்தையாடிக்கொண்டிருந்த சமயத்தில் ஒடிவந்து அபயமிடுந் தன்படைகளைக் கையமர்த்தி, துரியோதனனுடைய தம்பிமாரையும் மன்னவரிற் சிலரையும் துணைப்படைகொண்டு வெளிப்பட்டுவரும் வீரத்தை தாஷ்டீகாள் கண்டு இனிமேல் யுத்தம் என்னவாகுமோவென்று ஏங்கித் தளரும்படி இவனுக்கெதிர்ப்பட்ட வீரரெல்லோரும் அடிபட்டுமடிந்தார்கள்.

தர்மராசன் சினந்து, அங்கன்விடுங்கணைகளுக்கு தமது சேனைகள் சேதப்படுவதினல் மனத்தாங்கலடைந்து கிருஷ்ணமூர்த்தியை அவன்மீதேவினர். கர்ணன் இராக்ஷச அமிசையானதால் அவனுக்கு இரவில் அதிகபலமுண்டு. அதனல் அவன் மூர்த்தன்னியங்கொண்டு எதிர்க்கிறன். அவனுக்கு ஈட்டுக்கீடாக கடோற்கஜன் பிரவேசிப்பானுகில் பொளையமாடுவான் என்று கோபாலன் புகன்றர். கடோற்கஜன் இருதோளையுந்தட்டி புயவலிகாட்டி கிருஷ்ணர்ச்சுனனையும் தருமபுத்திரரையும் பணிந்து பேய்கள்பூட்டி கழுகுக்கொடி கட்டிய பெருந்தேரில் ஏறி விருஷபவிராட்டைப் போல் அநேக ராஜாக்கள் படைசூழ்ந்து வரும்படிசெய்து சூரியகுமாரனை வளைத்து மாரிபோற் கணைகளைப் பொழிந்தான். கர்ணன் சிறிப்பாய்ந்து தேவாஸ்திரங்களைச்செலுத்தி கடோற்கஜன் வில்லைத் துண்டாக்கினன். கடோற்கஜன் அந்த துண்டங்களையெடுத்துக் கர்ணன்மீதெறிந்து வெகுவான துணிச்சலுடன் கதையைக் கையிலெடுத்து துரியோதனனும் மற்ற அரசர்களுந் திகைக்கும்படியாய் சாடிவரும்போது, ஜடாசுரன் பிள்ளையாகிய அலம்புதன் கடோற்கசனைத்தகைந்து யுத்தங்கொடுத்தான். இருவரும் பூமியிற்குதித்துச் சண்டையிடும்போது, அலம்புதன் கடோற்கஜன் காலைப்பிடித்திழுக்கவே, இவன் தன் மற்றெரு காலைத்தூக்கி அலம்புதன் மூளை சிதறும்படியாக உதைத்து இருபிளப்பாய்ப்பிளந்து, குருகுலநாயகன் தேரில்போய் விழும்படி யெறிந்து, உனக்குரிய அலம்புதனைப்பார், இதோ சூரியன்குமாரன் தலையையும் இப்போதே அறுக்கிறேன் என்று

எதிரிபடைகளை பிரசண்டமாருதம்போல் சாடுகிறபோது, சூரியன் தன் படைகளைக் கையமர்த்தி மூன்று மின்னற்கணைகளைத் தொடுத்தான். கடோற்கஜன் அதுகளை அவித்துப்போட்டு அவனை நோகச்செய்ததினால் எதிரிபடைகள் மிகவும் அவஸ்தையடைந்தார்கள். கர்ணனுக்கு உயிர்த்துணைவனாகிய அலாயுதன் என்பவன் துரியோதனனுக்காகப் பரிந்துவந்து அர்ச்சுனனையெதிர்த்து அவனாலடிபட்டயர்ந்து அவனை விட்டு நீங்கி பீமசேனனுடன் போர்கொடுத்து இருவரும் கடும்போர் புரிந்தார்கள். மற்றொருபக்கத்தில் கடோற்கஜன் யுத்தமிடுவதைப்பற்றி அசுவத்தாமன் அவன்மீது ஆயுதத்தைப் பிரயோகிக்கவே, கடோற்கஜன் வேலாயுதத்தால் அசுவத்தாமன் இறந்தானென்று சொல்லும்படியாய் நோகச் செய்துவிட்டுத் திரும்பும்போது, கர்ணனைக்கண்டு அவனையும் பின்னடையும்படி செய்துவிட்டு, பீமனிடம்வந்துபணிந்து அலாயுதனுயிரை அரைநொடியில் வாங்குகிறேன்பார் என்று இருவரும்பலரூபங்களெடுத்து யுத்தம்பண்ணி அலாயுதனுயிரை அந்தகனூரில் புகுத்திவிட்டான். இதுபற்றி கடோற்கஜனை தேவர்கள் முதலிய யாவரும் புகழ்ந்தார்கள். பூர்வத்தில் ராவணனாலுங் கொல்லக்கூடாதிருந்த இந்த அலாயுதனை பீமன் மகனானவன் கொன்றது மாத்திரமல்லாமல், அவனுடன் கூடிவந்த அரக்கர் வெள்ளங்களையும் அதமாக்கிய வல்லமையை அத்தியத்புதமான தென்றறிக. கடோற்கஜன் மாயாபலத்தினால் நடத்திவரும் யுத்தத்தைச் சகிக்கமாட்டாத துரியோதனன் கர்ணனைப்பார்த்து நமதுசேனைகளை யமனைப்போல மாய்க்கும் இந்த கடோற்கஜன்மீது நீர் தேவேந்திரனிடத்திற் பெற்றிருக்கும் அரியவேலாயுதத்தை இப்போதேவிட்டு நாசஞ்செய்தால்தான் நாம் தப்பிப்பிழைக்கலாம், விரைவில் அவனைக்கொல்லவகைதேடுமென்றான். கடோற்கஜனுக்கு இராக்காலத்தில் அதிகபலமாதலால் இன்னுஞ் சற்றுநேரத்துக்குள் பொழுதுவிடியும் விடிந்தவுடனே அவன் தலையைத் தப்பாமல் உருட்டிவிடுகிறேன்; மேலும் நாளை நடத்தப்போகிற யுத்தத்தில் என் வேலாயுதத்தை அர்ச்சுனன்பேரில்விட்டு அவனை மாய்த்து இந்தபூமி முழுவதும் உமக்கு சுவாதீனப்படும்படி பண்ணுகிறேன். என் பிராணபதமாய்க் காப்பாற்றி வைத்திருக்கிற இந்த வேலாயுதத்தை விருதாவில்விட எனக்குப் பிரியமில்லையென்று கர்ணன்கூற, அண்ணா! நீர் சொல்லியது சரியே யானாலும், இராத்திரிப்பொழுது நாமெல்லாரும் தப்பிப்பிழைத்திருந்தால் அல்லவோ நாளைப்பகலில் அர்ச்சுனனை வென்று எனக்குப் பட்டங்கட்டப்போகிறீர். இந்தஆபத்துவேளைக்குத்தப்பினால் நாளைக்குப் பார்த்துக்கொள்ளுவோம், நீர்இப்பொழுதே இவனைக்கொல்லவேணுமென்று பிடிவாதம்பண்ணினதின்பேரில், கர்ணனானவன் அந்த வேலாயுதத்தை எடுத்து பூசித்து பிரயோகித்தான். அது கடோற்கஜனைக் கொன்றுவிட்டுப் பாகசாசனனிடத்தில் போய்ச் சேர்ந்துவிட்டது.

அவ்வேளையில் சொந்தக்காரராகிய பாண்டவர்கள் அவ்விடம் வந்து செத்தவனை யெடுத்துப் பார்த்துத் துக்கித்தபோது, ஸ்ரீ ஜனார்த்தனன்

அவர்களைத்தேற்றி உங்கள் சத்துருவாகிய கர்ணன் உங்களைச் சதிசெய்ய நாகாஸ்திரம் ஒன்றும் இந்தவேலாயுதம் ஒன்றும் கைவசப்படுத்தி வைத்திருந்தான். நாகாஸ்திரம் தப்பினால் இதை விடுகிறதற்கென்று அவன் வைத்திருந்த இந்த வேலாயுதம் வெளிப்பட்டால் எப்பேர்ப்பட்ட சூரனாயிருந்தாலுங் கொல்லாமல்விடாது, அப்படிப்பட்ட அருமையான ஆயுதத்தை இந்த கடோற்கஜன் படுத்திய பாடுகள் தாளாமல் துரியோதனன் கேட்டுக்கொண்டபடி செலவிட்டுப்போட்டான். அது பழையபடி தேவேந்திரனிடம் போய்விட்டது, இனி உங்களுக்குச் சிந்தையில்லை. நான் கொண்டிருந்த கவலையும் தீர்ந்தது என்றார். ஜனார்த்தனன் சாற்றிய வாசகத்தினால் அர்ச்சுனன் தப்பினான் என்கிற திடநிச்சயங்கொண்டு சகோதராள் அவனைத்தழுவி கடோற்கஜன் இறந்த துக்கத்தைச் சற்றே ஆற்றிக்கொண்டார்கள். புத்திரசோபம் இவ்வளவு இலேசிலே நீங்கிவிடுமோ வென்றால், வையகத்தியற்கையும் காலகமனமுந் தெரிந்த வித்தகாள் எப்பேர்ப்பட்ட காரியங்களுக்கும் கலங்கமாட்டார்கள் என்பதே இதிகாசக் கர்த்தாவின் கருத்தென்க. சக்கிரவர்த்தித் திருமகனால் இராவணனிறந்த படுகளம்போல் இருந்தபோர்க்களத்தில் அரவக்கொடியோன் கட்டளைப்படி துரோணாசாரியர் நால்வகைச்சேனைகளுடன் எட்டி நடந்து, பாண்டவர்களில் விராடன் துருபதேயன் முதலிய வேந்தர்களுடன் எதிர்த்து விஷக்கணைகளைவிட்டு விராடன் துருபதேயன் இருவர்சிரசுகளையும் அறுத்து பூமியில்தள்ளினார். திருஷ்டத்யும்நன்உள்ளங்கறுத்து துரோணரைக்கறுவிப் பார்த்துஎன் தந்தைதுருபதராசனைஎன்கண்முன்னே சிரச்சேதஞ்செய்தபடியால் நாளைப்போரில் எல்லா அரசர்களுக்கும் முன்பாக உன்மகன் அசுவத்தாமன் கண்ணுக்கெதிரில் உன்தலையை வாங்குகிறேன் பார் என்று கொடுஞ்சபதங்கூறி சலசலவென்று சரமாரி பொழிந்தான். தன் மாமன் தலையை அறுத்தாரென்று விஜயன் கோபப்பட்டு குருவை வளைத்துக்கொண்டு பாணங்களால் அகோரமாய் சாடித்து ஒட்டம்பிடிக்கும்படி அடித்தான். கர்ணன்மகன் விடசேனனானவன் சாத்தகியை எதிர்த்து அவரால் அடிபட்டலுத்து ஓடிப்போனான். நகுலனைச் சகுனிவந்தெதிர்த்துக் கடும் போர்விளைத்து அநேகந்தடவை தளர்ந்து தன்னுடன்வந்த ராசாக்களைப் பறிகொடுத்து அஞ்சியகன்றான். இதுவரையில் இரவு இரண்டுசாமமாகி மூன்றாஞ்சாமத்தில் யுத்தம் நடந்துகொண்டே யிருக்கும்போது, நேபாளரும் மற்றும் பூபாலரும் நித்திரை மயக்கத்தால் மிகவும் வருந்திக் கையினின்றும் ஆயுதங்கள்நழுவவும், தாங்களே எதிரிகள்போல் ஒருவரையொருவர் வெட்டிமடிக்கவும்ஆரம்பித்தார்கள். இதைப்பார்த்தவிஜயன் தூக்கமயக்கத்தால் சனங்கள் நஷ்டமாகிறது சண்டையை நிறுத்துங்கள், என்று உரத்திச் சத்தமிட்டுக் கூவினவுடனே அம்மட்டில் இருதிறப்படைகளும் இராத்திரி யுத்தத்தை நிறுத்தினார்கள்.

சேனாபதி துரோணாசாரியர் வெல்வது தோற்பதென்கிற இரண்டிலொன்று அறியாமல் பாசறை புகேனென்று சபதம்பண்ணி நின்ற இடத்

திலே தங்கினர். அவரைச்சேர்ந்த படைமன்னரும் படைகளும் அவருடன் கூடவே இருந்தனர். பாண்டவர்களும் அவர்கள் படைகளும் இறந்தாரை நினைத்து துக்கித்து இனி இருப்பவர்களும் இறக்கும்படியாகிய காலம் நேரிட்டிருக்கிறதேயென்று ஏக்கங்கொண்டு பாடிவீட்டிற்குள் போகாமல் நித்திரைநீங்கி களத்திலேயே தங்கியிருந்தனர். சூரியன் உதயமாயினன் என்று வைசம்பாயனர் சொல்ல, ஜனமேஜயமகாராசன் வபுஷ்டாதேவியுடன் எழுந்து தீர்க்கதெண்டமாய்விழுந்து பலவித தானதருமங்களைச்செய்து மகாபயபத்தியுடன் பணிந்து, அப்பால் நடந்த சரித்திரத்தின் விந்தையைச் சொல்லியருள்கவெனப் பிரார்த்தித்தான். இந்தமட்டும் பதினன்குநாள் யுத்தம் முடிந்ததென்றறிக.

பதிநான்காம்போர்ச்சருக்கம்-முற்றிற்று.

பதினைந்தாம்போர்ச்சருக்கம்.

விருத்தம்.

சித்திசித்திலங்கிநின்று செப்புகின்றமூவகை
தத்துவத்தின்முடிவுகண்ட சதுர்மறைப்புரோகிதன்
கொத்தமூத்திநாடனன்றி கூரநாடநெஞ்சிலே
தைத்தமுத்திநாடனன்றி வானநாடர்முதல்வாயார்.

கேளும் ஜநமேஜயமகாராஜனே! பொழுதுவிடிந்தபின்னர் இருபுறத்துச்சேனைகளும் பழையபடி சண்டைக்கு ஆயத்தமாகி யுத்த பூமியில் வந்து நிறைந்தார்கள். அப்போது சுத்தவீரனாகிய நரனும் பீமனும் நகுலனும் சகாதேவனும் திருஷ்டத்தியும்நனும் முதன்மையாக வந்துநின்று தங்கள் சேனைகளை நான்குபங்காகப்பிரித்து சாதுர்த்துவார வியூகங்கட்டி ஆதிபகவானாகிய நாரணன் நடத்திய ரதத்திலேறிவந்த விஜயன் போர்செய்யப் புகுந்தான். பலம்பொருந்திய பீமனும் புராதனராஜாக்களும் எதிர்த்து யுத்தம் புரியும்போது, அர்ச்சுனன் நெருங்கிவந்து ஐந்திராஸ்திரந் தொடுத்து எதிரிகளையும் வீராதிவீரரையும் மாய்த்தான். இன்னஞ் சில மன்னவர்கள் அர்ச்சுனனைப்பாய்ந்து முன்னின்று சண்டைசெய்து அவன் விட்ட கணைகளினால் எதிர் நிற்கமாட்டாமல் அவன் வின்மையை வியந்து பின்னடைந்தார்கள். கிழக்கு மேற்குத் தெற்கு வடக்கு நாலுதிக்கிலும் கவிழ்ந்துநின்ற பாண்டவசேனைகளை தநுர்வேதாசாரியர் துரோணர் ஐந்துபாணங்களைவிட்டு அவர்களைக் கண்கண்டபடியெல்லாம் சிதறியோடும்படி முடுக்கினர். துரோணருடன் எதிர் நிற்கமாட்டாமல் சேனைகள் பின்னிடுவதைப்பற்றி குந்திபோஜமகாராஜன் ஆயிரந்தேர் முதலிய யானைக் கூட்டங்களுடன் ஆசாரியரை யெதிர்த்துச் சண்டைசெய்ததினால் போர்க்களம் இரத்தவெள்ளமாய்ப் புரண்டோடிற்று. மத்திரதேசாதிபதி சல்லியனும் சகாதேவனும் ஒருபுறத்தில் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். மாளவராசன் சாத்தகியுடன் சமர்செய்தான். குருபுத்திரன் அசுவத்தா

மன் அர்ச்சுனனுடன் அமர்புரிந்தான். கர்ணனனவன் பீமசேனனை யெதிர்த்துக்கொண்டான். பாண்டியனைச் சகுனி மடக்கிக்கொண்டான். இப்படி ஒருவருக்கொருவர் நாலாபக்கத்திலும் முனைந்து ஊழிகாலமிதுவே என்றுரைக்கும்படியாய் அவரவர்களுடைய ஆண்மையைச்சொல்லி முடியாத மாதிரிகளாய்க் காட்டிச் சண்டையிட்டு, துரோணர் தொடுத்ததேவ தாஸ்திரங்களினால் சேனைகள் பட்டுக் கெட்டழிவதைக்கண்டு தர்மராஜன் தன் பாணங்களால் ஆசாரியரது வீராவேசத்தைத்தணித்துப்போட்டார். துரோணரும் துரியோதனனும் தாங்கள்காட்டிய வல்லமையைக்குறித்து எதிரிகள் இன்னம் வரலாமென்று வீம்பு வீரியம் பேசிக்கொண்டிருக்கும் போது, ஒப்புவமையில்லாத மரீசி அகத்தியர் ஆங்கீரசர் கௌதமர் காசிபர் புலஸ்தியர் பரத்துவாசர் முதலிய ரிஷி சிரேஷ்டர்கள் துரோணரை வந்து சூழ்ந்தார்கள். துரோணர் அவர்களுக்கு தீர்க்கதெண்டஞ் சமர்ப்பித்து தந்நியனானேனென்று ஸ்துதித்தபோது, ஓய் துரோணரே! கேளும் வேதியருக்குரிய வேதபாராயணம் சாஸ்திரவிசாரம் ஔபாசனம் பிரம்ம தேஜஸ் மாதவம் ஞானம் தெளிவு யாகம் இத்தியாதிகளைவிட்டு க்ஷத்திரிய தர்மங்களாகிய வில் முதலிய ஆயுதங்களைத் தரித்துச் சத்துரு சங்காரம் செய்யும் பந்தம் உமக்கென்னத்திற்கு, உம்மை நீர் மறந்திருக்கிறீர், சோபத்தைவிட்டு தெய்வலோகம் வந்து சேர்வீராக, இப்போது நீர் முழுகியிருக்கின்ற பாசபந்தங்களை யொழித்து புத்திபூர்வகமாய் உமது பழமையை உன்னிப்பார்த்தால் பூர்வக்கியானம் தோற்றமுண்டாகுமென்று கூறிச் செலவு பெற்றுக்கொண்டார்கள்.

உடனே துரோணாசாரியார்மனதில் உலகத்தின் வாழ்க்கைமீது வெறுப்புண்டாகி பரிசுத்தம் பிரகாசிக்கும் சாந்தமடைந்து தேவவிமானம் எப்போது வருமென்று எதிர்பார்த்துக்கொண்டு நின்ற துரோணருடைய நிலையையும், சப்தரிஷிகள் வந்துரைத்த சூக்ஷமத்தையும் புருஷோத்தமன் தெரிந்துகொண்டு பாண்டவர்களுக்கும் இந்தரகசியத்தை உடனே வெளியிட்டு, இது நல்ல சமயமென்று துரோணருக்குச் சென்மப்பகைஞனாய்ப்பிறந்த திருஷ்டத்தியும்னனை அவர்பேரில் ஏவிவிட்டு தர்மராசனைக்கண்டு, அர்ச்சுனன் சண்டைசெய்ததில் மாளவபூபதியேறிவந்த அசுவத்தாமாவென்னும் பேருடைய பட்டத்து யானையிறந்து நமலனுலக மடைந்தது, அந்த யானையைக் கொன்றது மிக்க அருமையாதலால் உமது வாக்கினால் அதனைச்சொல்லி செயங்கூற வெண்டுமென்று திருவுளம்பற்ற, அறன்மகன் கேட்டு, பட்டத்துயானை இரந்தால் அதின்பேரை யெடுத்து நான் சொல்லவேண்டிய பிரகரணம் ஒன்றுமில்லையே யென்று மறுத்த போது, ஓதருமநந்தனா! முதனாள்யுத்தம் ஆரம்பிக்கும்போது, நாம்பீஷ்ம துரோணர்களிடம்போய் நமது குறையைச்சொல்லிக் கேட்ட காலையில், தர்மராஜன்வாக்கினால் என்மகன் அசுவத்தாமா இறந்தானென்று சொல்லக்கேட்பேனாகில், புத்திரசோபத்தால் உயிர்விடுவேனென்று சொல்லிய அந்த வேளையானது இப்போது சம்பவித்திருக்கிறபடியால் நீரும் பொய்

சொல்ல வேண்டியதில்லை, இந்தப்போரில் அவர் மகன் பெயர்கொண்ட யானை இறந்ததென்று கூறுவீராகில், அவ்வசனம் அந்தணன் செவிபிற்பட்டமாத்திரம் அவர் தன்னைமறந்திறந்துபோவார். நீர் அவருக்கெதிரிலே எழுந்துசென்று இவ்வனம் பகர்வீரென்றுரைக்கவே, அரீ அரீ யென்று தன் இருசெவியையும் மூடிக்கொண்டு, நான்பொய்சொல்லி வாரிக்கொள்ளும் இந்தபூமியாகிய மண்ணுக்காகவா வென்று நகைத்து, அப்பா அனந்தசயனா! ஒருபொய் சொல்வாராகில், புத்திரர் மித்திரர் சுற்றத்தாரையுமிழந்து தவமும்போய் நரகம்புகுவார்களேயென்ற பாண்டுமைந்தனுக்கு கோவிந்தன் பலபலவிதங்களில் சொல்லிப்பார்த்தும், தருமர் சம்மதிக்காமையைக்கண்டு, நீர் இப்படி பிடிவாதம்பண்ணினால் எப்படி போர் முடியும், எவ்விதமாய் சபதம் நிறைவேறும், அபவாதம் யாரைச்சாரும், இம்மைமறுமைப் பயன்களைச் சீர்தூக்கிப்பார்க்கில் உலகோர் அவரவர்கட்குரிய இயற்கைகளின்படிக்கு முடித்துக்கொள்ளவேண்டியதற்காக பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின் என இந்தப்படிக்கே சொல்லி ஒருவருக்கு நேரிட்ட விபத்தை நீக்குவதே தர்மம், இஃதன்றியும், நீர் நினைத்த வண்ணம் இதுபொய்யானால் தான் என்ன, ஆய்ந்துதேர்ந்த மகான்களால் வெருவாகிய சாஸ்திரதர்மங்கள் உமது இருதயத்தில் ஊறிச்சுவறி உமதுதேகமெல்லாம் அறமே மயமாயிருக்கும்போது, ஒரு பொய்சொன்னால் என்ன முழுகிப்போயிற் றென்றதற்கு, யானையாகிய அசுவத்தாமன் இறந்ததாகச்சொல்லுகிறேன் என்ன, நீர் சொல்லியவாசகம் முன் பின்னாகப் புரண்டிருக்கின்றது, வாக்கியம் அழகாயிருக்க வில்லை, அசுவத்தாமா ஹத குஞ்சர என்று கூறுவீராகில் சத்தியமுங் குறைபடாது, நமது எண்ணமும் நிறைவேறுமென்றார். தருமர் அதற்குடன்பட்டு துரோணரை நோக்கி என்குருவாகிய ஈசனே, அசுவத்தாமா ஹத என்கிறபோதே, குஞ்சரசப்தம் தருமர்வாயிற் புறப்படு முன்னரே, மாதவன் பாஞ்சசன்னியத்தை குபீரென்று பூரித்தார். துரோணர்காதில் குஞ்சரசப்தம் கேளாமையால் தன்மகன் இறந்தானென்று நம்பி வில்லை நழுகவிட்டு அசைவற்றநிலையில் மனதைநிறுத்தித்தேரில் இருந்தவண்ணமே இருந்தார்.

அவ்வேளையில் திருஷ்டத்தியும்நன் வீரவாளிபூட்டிதுரோணர்பேரில் பாணம்விடப்போகிற சமயத்தில், ஆ ஆ என்று அதட்டி அர்ச்சுனன் மறித்து இந்தமகாநுபாவர் சுசானுபவத்தில் இருக்கின்றார், இச்சமயத்தில் நீபாணந்தொடுக்காதே, என்சொல்லைத் தட்டுவாயேல், உன்புகழும் வீரப்பிரகாசமும் குறைந்துபோம் என்று தடுத்தும், கேளாமல் பாணத்தை விட்டு ஆசாரியர் தலையை அறுத்துத்தள்ளினான். விஜயன் கண்ணீர் விட்டுதிருஷ்டத்தியும்நன்சிரசைவெட்டுகிறேனென்றுகிட்டிநெருங்கினான். துரோணர் மரித்தாரென்று அவர்சேனைகள்பின்னிட்டோடினார்கள். அசுவத்தாமா விரைவில் ஓடிவந்து பூமியில் விழுந்தழுது தந்தையின்பாதங்களைச் சிரமேல்வைத்துப் பிரலாபித்தபோது, துரியோதனன் வந்து அவ

னைச் சோபந்தணித்து தேறுதற்படுத்தினான். கிருபாசாரியர் தன்மைத்துனர் இறந்ததற்கு மனம்வருந்தித் தெளிந்தபின்னர், என்தந்தையைக் கொன்றவன் யாரென்று அசுவத்தாமன் கேட்டபோது, அப்பா அசுவத்தாமா கண்ணனானவர் தருமராசனைமயக்கி அசுவத்தாமா ஹதம் என்று பொய்சொல்லப் பண்ணினார்; இந்தச்சொல்லைக்கேட்ட உன்தந்தை வில்லை வைத்துவிட்டு, நிருபாதிக நிஷ்டையிலிருக்கும்போது, திருஷ்டத்தியும்நன் என்னுங் குருத்துரோகி கொன்றான். அவர்வில்லெடுத்து யுத்தம்பண்ணியிருப்பாராகில் பிரமாதியாராலும் அவரை வெல்லமுடியாதென்று கிருபாசாரிவிடுத்தார். அசுவத்தாமா காலாக்கினி ருத்திரனைப்போல்பொங்கி திருஷ்டத்தியும்நனையும் பாண்டவர்களையும் ஒருகணையால் உயிர்மாய்க்கிறேன்பாரும் துரியோதனமகாராசனேயென்று சேனைகள் புடைசூழ்ந்துவர எதிர்சென்று யுத்தத்திற்குப் புகுந்தான். அசுவத்தாமா முனைந்து வரும் வீராவேசத்தைப்பார்த்துத் தருமர் அஞ்சி இவனால் யாதேனும் துன்பம்விளையுமோ என்று கிருஷ்ணதேவரிடத்தில் யோசிக்குங்கால், அசுவத்தாமா மிகுந்த வரப்பிரசாதி யாகையால் யுத்தத்துக்கு முனைந்து வருகிறான், எப்படிமுடியுமோ தெரியாது, நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, அர்ச்சுனராசன் திருஷ்டத்தியும்நனைப்பார்த்து, நான்தடுக்கத்தடுக்க நீஎன்னைமீறி அவர்தலையைப்போக்கினையே, இதோகொடியவில்லாளி அசுவத்தாமன் ஆலகாலவிஷம்போல் கொதிக்கொண்டு வருகிறானே, இப்போது என்னசெய்யலாமென்று அவன்பேரில் கோபித்துகொண்டான்.

துரோணரைக் கொல்வதற்குப் பாஞ்சாலன் யாகத்தில் நான் பிறந்தவனாகையால் அவர்தலையை வாங்கினேன், படுகளத்தில் ஒப்பாரியா, உன்பாணங்களினால் அநேகர்மடிந்தார்களே அதுமாத்திரந்தருமமா, மைத்துனனேயென்று கடுமையாய்ப்பேசி, எங்கள் பாஞ்சாலகுலமனைத்தும் பற்றறக்களைந்து பாவமூட்டை கட்டிக்கொண்ட துரோணரென்னும் பாவியை நான் தலைவாங்கினதற்கு துயரக்கடலில் ஆழ்ந்து கரையேற மாட்டாமலிருக்கிறாயே, சண்டைக்குவரும் அசுவத்தாமனுடன் நானே சண்டையிட்டுவெல்லுகிறேன் அல்லது சாகிறேன். நீங்கள் உங்கள் பிராணனைக் காத்துக்கொள்ளுங்கள் என்றான். இப்படி சொல்லவே சாத்தகிமன்னன் திருஷ்டத்தியும்நனைப்பார்த்து, நீ உன்னை மறந்து பேசுகிறாய். கங்காபுத்திராகிய பீஷ்மரை உன்தமயனாகிய சிகண்டி கொன்றான். துரோணாசாரியரை நீ கொன்றாய், நீங்கள் இருவரும் குருவைச்சுட்டுத்தின்னவந்தபெரும் பாவிகளாய்ப் பழிக்குடன்பட்டிருக்க, பீஷ்மரை அர்ச்சுனன் கொன்றானென்பது நீதியோ என்றார். இம்மொழியை பீமன் கேட்டு மனஸ்தாபமடைந்து, அர்ச்சுனனைநோக்கி, அடாதம்பி விஜயா! இந்தச்சாத்தகியும் பூரிசிரவனும் போராடியபோது பூரிசிரவன் வலதுகரத்தை வாங்கிய வல்லமையும், உன்தந்தையாகிய இந்திரனுக்கு நண்பனாகிய பகதத்தனைகொன்றதும் தருமமா, நீசெய்தது இப்படியிருக்க திருஷ்டத்தியும்நன் ஆசாரிய

ரை வதைத்தது கொடும்பாவமென்று சொல்ல, தருமராசன் இவர்களைக் கையமர்த்தி, தம்பிமாரே! கொல்லப்படுவதெல்லாந் தீவினையேயாயினும் ஸ்ரீகிருஷ்ணருடைய திருமொழியை நம்பி செய்வோமாகில் ஒரு தீங்குமில்லை, நாம்செய்வதெல்லாம் பரிசுத்தம், வேதமந்திரத்தைநம்பிவேள்வியில் உயிரைப்போக்குந் தன்மைபோல் ஆகுமென்று சத்தியக்கியான உத்தமன்சொல்ல, முத்திவித்தாகிய முகுந்தன்கேட்டு, பருந்துங் கழுகும் பந்திடாநின்ற படுகளத்தில் முன்பின்பாராமல் பலபேரைக்கொன்ற பலவானுக்கல்லவோ வீரசொற்கம் விதித்திருப்பது, இவைகள் அர்ச்சுனனுக்குத் தெரிந்திருந்தும் தெரியாதவனைப்போல் சொன்னதெல்லாங்கூடி ஆசாரியன் இறந்தானென்கிற ஆருமையால் அவசரப்பட்டுச் சொல்லுகிறான். ஒருவிதந் தீர்ந்துமுடிந்துபோன செய்கைக்கு இனியோசிக்கவேண்டாம். சங்காரனைப்போல் பொங்கிவரும் அசுவத்தாமனைக் குறித்து யோசிக்காமல், வீண்காரியங்களைப் பேசுகிறீர்களென்று மேகவண்ணன் உரைத்தபோது, நவமோக அவதார நாராயணனே கேளும் தேவரீருடைய திவ்வியகடாட்சம் எங்களுக்குத் தீரத்துவமாகிய திடமென்று ஸ்திரமாக நம்பியிருக்கிறோம், இஃதுண்மையான வார்த்தையென்றும் வேதமென்றும் அகமும் முகமும்மலர்ந்து ஆனந்தமயமாய்ச் சொல்லிய தருமபுத்திரர் முகத்தை ஜனார்த்தனன் பார்த்து சிறுநகைசெய்து, நல்லது படையெடுத்து வாருங்களென்று போர்புரியப் போனார்கள்.

அசுவத்தாமன் பாண்டவர்களையுஞ் சேனைகளையும் அதமாக்குகிறேனென்று உக்கிர நாராயணாஸ்திரத்தைப் பிரயோகிக்கிறதாய்ச் சொன்னபோது, துரியோதனன் அசுவத்தாமனை நோக்கி உன்தகப்பனைக் கொன்றவனைக் கொல்ல உனக்குக்கோபம் இருக்குமாகில், அவனைமுடிக்க வகைதேட வேணுமேயல்லாது, இந்தக்கடுமையான அஸ்திரத்தை விட்டால் திரிபுவனமும் நிலைபெறமாட்டாதே ஐயனேயென்று சொல்லியும் கேளாமல், குருபுத்திரன் அந்த உக்கிர நாராயணாஸ்திரத்தை எடுத்து செபித்துவிட்டான். அது வெளிப்பட்டு முப்புவனங்களையும் தகிக்கும்படியாய் வரும் வேகத்தைப் புருஷோத்தமன் அர்ச்சுனனுக்குக் காண்பித்துச் சமீபத்தில் நின்ற போர்வீரர் யாவரையும் தேரைவிட்டிழிந்து நிராயுதபாணிகளாகி சென்னிமேற் கரங்களைக்குவித்து அதை ஸ்தோத்திரிக்கும்படி கற்பித்துத் தாமும் அர்ச்சுனனும் தேரைவிட்டிழிந்து வணங்கி நின்றார்கள். இவர்வார்த்தைக்குப் பீமன் ஒருவன்மாத்திரம்கட்டுப்படாமல் முறுக்காய் நின்றான். வெளிப்பட்ட அந்த தேவதாஸ்திரமானது சீறிவீறி ஒவ்வொருவருடைய மயிர்க்காலொன்றுக்கு ஒவ்வொரு கணையாக வெடித்துவந்து யுத்தகளம் புகுந்து நோக்குங்கால், எதிரிகள் யாவரும் நிராயுதபாணிகளாய் நிற்பதைக்கண்டு வெறுங்கை வீணர்பேரில் நம்மைவிட்டானேயென்று கடுகடுத்துத் திரும்பியபோது அஞ்சாமல் நின்ற பீமராசன்மேற்பாயவே, பீமன் அதற்கிளக்கரியாமல் பலவித ரூபமெடுத்து பலபல அஸ்திரங்களையும் விடுத்து ஆனமட்டும் தனக்குத்தெரிந்த எல்லா சாமர்த்தியங்க

ளாலும் பார்த்துப் படாத பாடும்பட்டுப் பயன்படாமல் உக்கிர நாராய ணாஸ்திரம் அவன் மார்பைத்தொளைக்க மேற்கொண்டதை நமதுகர்த்தனு கிய அறிதுயிலமர்ந்தோன் அறிந்து, ஆஆ மோசம் வந்ததேயென்று அர் ச்சுனனுந் தானும் பீமனைக்கிட்டி அவனைத் தேரைவிட்டிழுத்துக் கீழே தள்ளி அவன்கை ஆயுதத்தைப்பிடுங்கி யெறிந்துவிட்டு, ஓம் அரிநாராயணு ஸ்திரமே இதோ உம்மைப்பணிந்தான் பீமசேனன் என்று பரந்தாமனுகிய அப்பிராகிருதன் சொல்லவும், அது திரும்பி அசுவத்தாமனிடம் போய்ச் சேர்ந்து விட்டது. அசுவத்தாமன் தான்விடுத்த நாராயணாஸ்திரம் பலிக்க வில்லை யென்றுணர்ந்து, அக்கினியாஸ்திரத்தைப் பிரயோகித்தான், அதை விஜயன் பிரம்மாஸ்திரத்தினுல் சிதைத்துவிட்டான். இதனுல் அசுவத்தா மன் மனங்கசந்து ஆயுதங்களையெல்லாம் பூமியிலெறிந்து பரிசுத்த மகாவே தங்களையும் தநுர்மந்திரங்களையும் உண்மையென்று நம்பப்படாது, இவை கள் பொய்யான மந்திரங்கள், மந்திரங்களுக்குடைய மூவரும் பட்சபாதிக ளாயிருக்கிறுர்களென்று யுத்தபூமியைவெறுத்துத் தவமியற்றப்புறப்பட்டு இவன் போகும் மார்க்கத்தில், ஸ்ரீ வேதவியாசரைக்கண்டு தீர்க்கதெண்ட மாய் வணங்கினின்றுன். இக்கோலமாய் எவ்விடம்போகிறுயென்றுமுனிவர் வினவ, தந்தைஇறந்தவிசனத்தால் தவம்புரியப் போகிறேனென்றுன். அப் பா அசுவத்தாமா! யாகசேனன் என்கிற பாஞ்சாலன் செய்த யாகத்தில் பிறந்த திருஷ்டத்தியும்நனுல் உன் தகப்பன் இறக்கும்படி அந்திவண்ணத் திறைவன் அநுக்கிரகஞ் செய்திருக்க, அவராக்கினைப்படி வென்றுனே யல் லாமல், மற்றெவ்விதத்தினுலும் உன்தகப்பனை வெல்லத்தக்கவனல்ல, இத ற்கு நீ விசனப்படாதே, நீகோபத்துடன் படபடத்து வெளிப்பட்ட மற் றக் காரணங்களைக் கூறென்றுகேட்க, அசுவத்தாமன் விளம்பலுற்றுன்.

கேளும் என் ஐயனே! என்போலொத்த பிள்ளையிருக்க எனக்கெதி ரில் இறக்கக்கூடாத என்தந்தை இறந்ததைக்குறித்து மறக்கக்கூடாத வியசனத்தில் முழுகியிருக்கிறேன்; இஃதொருபக்கத்தில் வருத்த, விந்தை விந்தையாக நேரிட்ட குறைகள் என்சிந்தையில் நிறைந்திருக்கின்றன; அவைகள் சொல்லுந்திறமல்ல. எங்கள் தெய்வமே! யாவருக்கும் பொது வாய் நிற்பதுவேதம், அதினுலுண்டாகியது மந்திரம். தேவர்முதலிய மூவ ர்கள்கொடுத்த திவ்வியாஸ்திரங்களை எடுத்துத் தொடுக்கும் கைத்திறம் சாகசம் குறிப்பு நிதானம் இவையெல்லாம் எல்லோருக்கும் ஒன்றேயொ ழிய இரண்டில்லை. என்தந்தை துரோணுசாரியர் எனக்கும் அர்ச்சுனனுக் கும்ஒரேவிதமாய் அனுக்கிரகஞ்செய்திருக்க, அந்தமந்திரத்தினுடைய வல் லமை அர்ச்சுனனுக்குத் துணைப்பட்டு உறுதிசெய்வதுபோல் எனக்குச் செய்யாமற் பாழாய்ப்போனதினுல் வில் முதலிய ஆயுதங்களையெல்லாம் எறிந்து விட்டுத் தவஞ்செய்யப் போகிறேனென்றுன் அசுவத்தாமன். அப்பா அசுவத்தாமா கேள், இவ்வுலக முதலிய சராசரங்களைப் படைத் தருளிய காலத்தில், திரிநேத்திரமுடைய சிவபெருமான் செந்தாமரைப் பதத்தை அறிந்து சிந்தைசெய்யுங் கேசவனுக்கெதிரில் கங்காதரன் பிர

சன்னமாகி, என்னைவருந்தித் தவஞ்செய்யுங் காரியம் யாதென்றுவினவ, பிரமசிருஷ்டியினல் ஏற்பட்ட ஆத்துமகோடிகளையெல்லாம் குறைவில்லாமல் ரக்ஷியுமென்று எனக்குக் கட்டளையிட்டிருக்கின்றீர், நான் அவ்வாறே நடத்திவரும்போது, பூலோகத்தில் பலம்பொருந்திய துன்மார்க்கர் சிலர் சாபாநுக்கிரக சாமர்த்தியமும் ரக்ஷீகர்த்துருதத்துவமும் தங்களால் நடக்கவேண்டுமென்று தர்மவிரோதமாய்ச் செய்கிறார்கள். அப்பேர்ப்பட்ட தீயருடைய தலையைத்தறித்து தர்மத்தை நிலைநிறுத்தும்படியாய்க் கடாட்சிக்கவேண்டுமென்று இருடிகேசன் மொழிய, கைலைநாதன் சொல்லுகின்றார், ஓ நாரணனே! உமதிஷ்டப்படி நீர் ஜெயமடைய வரங்கொடுத்தோம், இதுவுமல்லாமல் யாரிடத்தில் அஞ்ஞானம் அகங்காரம் கொடுமை குடிகொண்டிருக்கிறதோ அவர்களுக்குரிய வல்லபமும் மேலாகிய ஆயுதமும் மந்திரபலமும் பிரயோசனப்படமாட்டாது. உம்மைப் பகைத்து எதிர்ப்பாருடைய வரங்களும் உரங்களும் மற்றெல்லாவல்லமைகளும் உம்மையடையக்கடவது, நீர் முறைமையினுணர்ந்து தர்ம சம்ஸ்தாபனஞ்செய்து ஸ்திதிக்கிருத்தியத்தை செய்யக்கடவீரென்று அனுக்கிரகித்தார். அப்பால் அச்சுதனாகிய பரந்தாமன் தன் இச்சையின்படி நரநாராயணரூபந் தாங்கி இவ்வுலகந்துதிக்கவந்து பாபத்தொழிலைக்கைக்கொண்ட அரக்கரைவாட்டி தேவர்களைத் தருமத்துடன் நிலைக்கநாட்டி சத்தியவேதத்தை நிலைநிறுத்தும்படியாக இந்த்கிருஷ்ணமூர்த்தியும் இந்திரகுமாரனாகிய அர்ச்சுனனும் அவதரித்திருக்கின்ற இவர்கள், சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய வரப்பிரசாதப்படி வஞ்சகமாய்க் குருகுலத்தில் விளைந்த வெஞ்சமரை முடிப்பதற்கு வந்தார்கள்.

இந்த அவதாரத்தில் ஒப்புவமையற்ற உமாபதியைவணங்கி ஆராதனை செய்துவருகின்ற அன்பினையுடையவர்களாதலால் மதங்கொண்ட சத்துருக்களை சிங்கம்போலெதிர்த்து பங்கப்படுத்தி மிகவும் இலேசிலே யுத்தமுனையைவென்று மேன்மையைப் பெறுகின்றார்கள். ஆதலால் எதிரிகள் பிரயோகஞ்செய்யாநின்ற அஸ்திர சஸ்திரங்கள் யாவும் பயன்படாமல் போகிறதென்று கிருஷ்ணத்துவைபாயனர்கூற, அசுவத்தாமன் வணங்கிக் கும்பிட்டு, துஷ்டராகியபேர்களை நரநாராயணர் சங்கரிப்பாரென்று சொன்னதுசரியே, சிவபூசை விதிநிற்குஞ் சிஷ்டர்களை எப்படிசெயிக்கக்கூடும்? பிரமகுலத்திற் பிறந்த அடியேன் வேதவேதாந்த மூர்த்தியைப் போற்றி அவர் கிருபையினாலே நலம்பெற்ற நல்ல ஆயுதங்களெல்லாம் இந்த நரநாரணருடைய வில்லின் வல்லமையினால் வீரமழிந்து போகவேண்டிய காரணம்யாதென்ற அசுவத்தாமன் கேள்விக்கு வேதவியாசர் அருளிச்செய்கிறார். கேளாய் அசுவத்தாமா! மேற்கண்ட நரநாரணர் இருவரும், தோகைபாகனாகிய சுந்தரேசனை பாணலிங்கமான ஒரேதெய்வமென்று சிந்தித்து வருகிறார்கள். நீயோவென்றால் உன்மனசில் இலிங்காகாரத்தை சொரூபமாக வேறுருப்படுத்திப் பூசிக்கிறாய். சிவபிரானை உருவாகப் பூசிப்பதைப் பார்க்கிலும் பாணலிங்கவடிவாய் பூசிப்பதே ஆயிரம்பங்கதிகமாகையால்,

அவர்கள் நினைத்தபடியே முடிகிறதென்றார். தன்மனோநிச்சயத்தை அறிந்துசொல்லியவேதவியாசர் பாதத்தில்விழுந்து சுவாமீ, தேவரீர் சொல்லிய இலிங்க பூசாவிதியின்படி, இன்றுமுதல் அநுஷ்டிக்கிறேனென்றான். நீ திரும்பியும் யுத்தபூமிக்குப்போய் வெற்றி பெறும்படியாய்ப் பாடுபட்டு அரவக்கொடியோன் அழிந்தபிற்பாடு என் தபோவனத்துக்கு வருவையாகில் அப்போது உனக்குகந்ததை தெரிவிக்கிறேனென்று வியாசர்சொல்ல, அசுவத்தாமன் அவர்சொல்லை அங்ஙனமே தலைமேற்கொண்டு ரணக்களத்திற்குத் திரும்பினான். ஸ்ரீவேதவியாசர் அசுவத்தாமன் நீங்கிய பின்னர் பாண்டவருக்குப் பிரசன்னமாகி அசுவத்தாமன் சரிதைகளை அருளாளனுக்குத்தெரிவித்தபோது, அர்ச்சுனன் அவரைப்பணிந்து, ஆண்டவனே! இந்தப்போர்க்களத்தில் நான் எந்தபாணங்களைத் தொடுத்தாலும் திரிநேத்திரதாரியாகிய ஒருமகாபுருஷன் சூலப்படையுடன் தோன்றி சத்துருக்களைக் கொல்லுகிறார், இதென்ன காரணமென்று வினவ, அர்ச்சுனா! நீ மகாதேவனை பாணலிங்கமூர்த்தமாய் பக்தியுடன் பூசிக்கிறபடியால், அந்தச் சிவபெருமான் உன்னிடத்தில் அன்புகொண்டு திரிசியமாய் விளங்குகின்றார். இன்னமும் உன்சிந்தையில் உறுதி நம்பிக்கை வைத்து அவரை வணங்கி வருவாயென்று ஆசீர்வதித்து அவர்களை விட்டகன்றார். யுத்தபூமிக்குவந்த அசுவத்தாமன் துரியோதனனுடன் கலந்து எதிரிகளை மறுபடியும் எதிர்த்து யுத்தஞ்செய்யும்போது இருபடைகளிலும் நெருங்கிய நால்வகைச்சேனைகளில் அநேகம்மாண்டன. முதல்நாள் யுத்தம்முதல் பதினாலாம்நாள் போர்வரைக்கும் இறந்த தொகைகளைப்பார்க்கிலும் இன்றைக்கு இறந்தவர்கள்தொகை பதின்மடங்கு அதிகமாயிருந்தது. சூரியன் குடதிசைக்குட்சென்று இருள்மூடியபடியால் சண்டையை நிறுத்தி அவரவர் பாடி வீடுபுக்கனர். இந்த ரணக்களத்தில் நாய்நரிமுதலிய மிருகங்கள் தின்றுகொழுத்து ஜெயம்பாடிக்கொண்டிருந்தன, கேளும் ஜநமேஜயராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லி முடித்தார்.

பதினைந்தாம்போர்ச்சருக்கம்-முற்றிற்று.

துரோணபர்வம்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீமகாபாரதம்.

எட்டாவது
கர்ணபர்வம்.

விருத்தம்.

மாதுலனுகியு மேதிலனுகியும் வஞ்சனைகஞ்சன் வரவிட்ட
பூதனைதன்னுயிர் முலைபொழிபாலொடு போதுரவுண்ட புயல்வண்ண
மாதவயாதவ வாசவாகேசவா மாயாமதசூதா
ஆதியந்தமு மாகியநின்புக ழல்லாதுரையே னடியேனே.

பதினாறும்போர்ச்சருக்கம்.

வைசம்பாயனரானவர் ஸ்ரீவேதவியாசரைப் போற்றிசெய்து, இம்மட்டும் துரோணபர்வம், இனிமேல் கர்ணபர்வமென்று புகல, ஜனமேஜயமகாராசன் வபுஷ்டாதேவியுடன் அவரை எழுந்து பணிந்து, தேவர்கள்மகிழுந் தேசிகனுகிய தெய்வமே, என் குறைதீரவும் என் இருசெவிக்கமுதமாகவும் கர்ணனுல் நடத்தப்பட்ட பதினாறும்போர்ச்செயல்களனைத்தையும் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்றுவினவ, வைசம்பாயனர்சொல்லத்தொடங்கினர். பாராளும் பார்த்திபனே கேளும், பதினாறும்நாள் காலமே, துரியோதனுதியர் எழுந்து கொலுக்கூடம்வந்து பீஷ்மாசாரியரும் துரோணுசாரியரும் சேனுதிபதிகளாயிருந்து தங்களால் இயன்றமட்டும் போர்புரிந்து நம்மைக் கைவிட்டிறந்தார்கள். இப்போது என் நேசனுகிய கர்ணமகாராசனையல்லாமல், வெல்லத்தகுந்த வல்லமையுள்ளவர்கள் வேறுயாவருமில்லை என்று அரவக்கொடியோன் அங்கதேசாதிபதியை சேனுதிபதியாகப் பட்டங்கட்டினபின்பு, கர்ணமகாராசன் வாகனுதிகளுடனே போர்க்களம் வந்து புகுந்தான். பாண்டவர்கள் தங்கள் துணைப்படைகளாகிய பாஞ்சாலர் பப்பரர் சோமகர் போஜர் திராவிடர் மராடர் கருநாடர் சாளுவர் சாளவர் கேரளர் விராடர் முதலிய வீராதிவீரருடன் தாங்களும்வந்து போர்க்களம் புக்கனர். துரோணவைரியாகிய திருஷ்டத்தியும்நன் கர்ணனைக்கண்டு வெகுண்டமாத்திரம், அவன் தன் படைகளை மகரமீனைப்போல் வியூகம்வகுத்தான். பாண்டவர்கள் தங்கள் படைகளை நேமிவியூகமாகவகுத்து, இன்றையதினம் கர்ணன் சேனுதிபதியாகியிருப்பதால், நாமெல்லோரும் ஏகோபித்து நின்று யுத்தஞ்செய்து வெல்லவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணர்சொல்லவே, அவர்கள்யாவரும் திர

ண்டுவந்து எதிரிகள்மீது போர்விளைத்தார்கள். வெற்றிபெறும் பீமசேனராசன் தேரைவிட்டிழிந்து யானைமீதேறி அமர்செய்யத் தொடங்கினனென்று வைசம்பாயனர் சொல்லிவரும்போது, பதினாயிரம்யானை பலமுடைய அந்தபீமனைச்சுமந்த யானையானது எப்பேர்ப்பட்டதென்று ஜநமேஜயன்வினவ, அவன் ஏறிவந்த யானையானது, பனைமரம்போற் பருத்து நீண்ட துதிக்கையும் மலைச்சுனைபோற் பொழியும் மதத்தையும் பர்வதாகாரமான தேகத்தையுமுடையது, அஷ்டதிக்கெஜங்களும் அதைக்கண்டால் பயப்படத்தக்க அவ்வித யானைமீது ஏறிவந்தான். காசிராசனாகிய கேமதூர்த்தன் பீமனுக்குச்சமானமான யானைமீது ஏறிவந்து பீமனுடன் முனைந்து, இரண்டு தேவேந்திராள் எதிர்யுத்தஞ் செய்வதுபோல் அமர்நடத்துங்கால், கேமதூர்த்தி யென்கிற காசிராசன் தன் வேலாயுதத்தை பீமன்மேல் எய்தான். பீமன் அதை சூலாயுதத்தால் தடுத்தெறிந்தான். அப்போது, காசிராசன் யானையைவிட்டிறங்கி பீமன் ஏறிவந்த யானையை கதாயுதத்தினால் புடைத்துக் கொன்றவுடனே, பீமன் பூமியிற் குதித்துத் தன்கெதையை எடுத்துக்கொண்டு, காசிராசனுடன் நெடுநேரம் கதாயுத்தஞ்செய்து கடைசியில் அவனை அடித்துக்கொன்றான். சேனாதிபதி கர்ணன் ஓடுகின்ற தன்சேனைகளைக் கையமர்த்திப் பேரணியாக வகுத்து முனைமுகத்தில் நிற்கும்போது, தர்மராசன் முதலியபேரும் யுத்தஞ்செய்யக் கிட்டிநெருங்கி இருபடைகளும்ஒன்றோடொன்றுகலந்துபோர்செய்தனர்.

கர்ணனும் நகுலனும் குதிரைமீதேறி யுத்தஞ்செய்யும்போது நகுலராசன் கர்ணன் குதிரையை மாய்த்தான். கர்ணன் தேரேறி யெதிர்க்கையில், நகுலனுந் தேரேறிக்கொண்டு போரிட்டான். இவர்கள் விடுங்கணைகளினால் இருபக்கத்துச் சேனைகளிலும் அநேகர் மாண்டார்கள். இந்த இரண்டுவீரரும் ரதமிழந்து பூமியில் நிற்கும்போது இருவர் சாரதிகளும் சேமத்தேர் கொண்டுவந்தவுடனே இருவருந்தேரேறி யுத்தஞ்செய்யுங்கால் நகுலன் இளைத்துவருவதைக் கர்ணன்பார்த்து தன் அன்னைக்கு அளித்த வார்த்தைப்பாட்டை நினைத்து அவனைக்கொல்லாமல் விட்டு, அவன் தேர் முதலானதுகளைத் தகர்த்து அவனுக்குத் துணைவந்து நின்ற மகதராசனையும் விடதரனையும் சங்கரித்துப்போட்டு, அர்ச்சுனன் படைமுகத்தைநாடி வரும்போது, நரனானவன் அவனைக் கூவி யழைத்து இன்றைக்குப்போய் இளைப்பாறி நாளைவாவென்றான். சாத்தகியுஞ் சல்லியனும் ஒருபக்கத்தில் நின்று போர்புரிந்தனர். சிகண்டியுங் கிருதவர்மனும் ஒருவருக்கொருவர் சமரமாடினர். பாண்டியனும் சகுனியும் சளையாமல் யுத்தஞ்செய்யத் துவக்கினார்கள். துரியோதனன்தம்பி துசுவாசனும் சகாதேவனும் ஒருவரையொருவர் எதிர்த்துக்கொண்டார்கள். அசுவத்தாமனும் பீமனும் கைகலக்கும்போது, அசுவத்தாமன் எட்டு வாளிகளை விட்டு பீமனுடைய தேர் குதிரை சாரதியை அதம்பண்ணினான். பீமன் வேறுதேரேறி முனைந்து சண்டையிட்டதினால் அசுவன் புறங்கொடுத்தோடினான். கேகயராஜனும் இளம்பஞ்சபாண்டவரில் சுருதகீர்த்தியும் உயுத்தந் தொடங்கி

ளுர்கள். எதிர்த்துநின்ற சிகண்டியும் கிருதவர்மனும் நடத்திய பலமான யுத்தத்தில் இருவரும் தேரழிந்து ஓய்ந்தார்கள். திருஷ்டத்தியும்நனும் கிருபாசாரியரும் எட்டுத்திசையும் திடுதிடென்று நடுநடுங்கும்படி சமர மாடிக் கிருபாசாரியர் தோற்றுப்போனர். இவ்விதமாய் இருகட்சி மன் னவருஞ் செய்துவந்த யுத்தத்தினல் குருக்ஷேத்திரம்முழுவதும் பருந்துக ளுங்கழுகுகளும் பந்தர்போற் பரம்பிப்பறந்தன. அலகைக்கூட்டங்களெல் லாம் ஆர்ப்பரித்து மன்னவர்உடலகங்களில் வழிந்துவருமுதிரங்களை மாந் திக்கூத்தாடிக்கொண்டிருந்தன. தேர்த்திறங்கொண்ட விஜயனும்சஞ்சத்தக் கர்களும் நவகோடி நாராயண கோபாலர்களும் யுத்தம்பண்ண ஆரம்பித் தபோது, எதிரிகள் விஜயனையும் சாரதியையும் அஸ்திரங்களினல் அடித்து உபத்திரவித்தார்கள். மேகவண்ணனனவர் தன்ரதத்தை அவர்கள்மீது முடுக்கிவிட்டு சஞ்சத்தகரரைத் தலைவிரிகோலமாய்ச் சிதறும்படி நடாத்தி விட்டார்.

அர்ச்சுனனுஞ் சித்திரசேனனும் தாளாண்மை பெற்ற மத்திரபால னும் மற்றப்படைகளுங்கலந்து போர்விளைத்து பாணப்பிரயோகம் பண் ணுங்கால், விஜயனுக்கு இந்திரன் அளித்த பலம்பொருந்திய அஸ்திரங்க ளைக் கொண்டு சஞ்சத்தகரரையும் நாராயண கோபாலரையும் தலை கை கால்கள் அறச் சாடும்போது, தப்பிப்பிழைத்த சிலர் துரியனிடம் வந்து முறையமிட்டனர். அரவக்கொடியோன்ஐயாயிரங்குதிரையும் நாலயிரம் யானையும் ஆயிரந்தேரையுந் திரட்டிக்கொண்டு தானே முனைந்துவந்தான். தர்மராசன் அவனையெதிர்த்துச் சண்டைகொடுத்து, துரியோதனன் மார் பைக்கிழித்தும், தைரியம்விடாமல் தர்மராஜனுடைய தோளைத்துளைத்து அவரையும் துன்புறச்செய்தனன். தருமர் நகைத்து நாலுகணைகளைவிட்டு ஒருபாணத்தினல் துரியனுடைய பாம்புக்கொடியை அறுத்து மற்றென் றினல் தேரையழித்து இன்னென்றினல் குதிரைகளைக் கொன்று நாலாங் கணையால் சாரதியை மோதிவிட்டகாலையில், அவன் வேறுதேரேறி முனை ந்துவந்து கோபத்துடன் வேலாயுதமொன்றை ஓங்கியெறிந்தான். தரும ராசன் தன்மாறுகோல்கொண்டு அதை உடைத்துப்போட்டார். அதினல் துரியன் மெலிந்து தலைகுனிந்தபோது, அப்பா தம்பி துரியோதனமகா ராசனே! வஞ்சநெஞ்சமுடைய உன்மாமன் எங்கே, சூதில் சொக்கட்டா ணடி இலேசாய் செயித்த சந்தோஷம்போல் இந்த பாண ஆட்டத்தில் உண்டாகிற அரிஷ்டத்தைச் சரிப்படுத்திக்கொள், தீரமென்பது எள்ளத் தனையும் உனக்கில்லையே. ஆணிடிபோன்ற அனிலகுமாரனகிய என்தம்பி இடும்பிகொழுநன் உங்கள் நூற்றுவரையுங் கொல்லுகிறேனென்று கூறிய சபதம் பழுதாகுமென்றெண்ணி உன்னைக் கொல்லாது விட்டேனேயல் லது, உன்பலத்துக்குப் பயந்து நான் உன்னை விட்டவனல்ல, இன்றை க்கு ஓடிப்போய் நாளைவரலாம். எங்களுடைய ஆண்மையை உன்னு டன் சொல்வதில் என்னபயன் என்னவே, அரவக்கொடியோனுக்கு கோபம் சனித்து தன் கதையை யோங்கி தர்மராசன் மார்புக்கு லட்சி

யம்பிடித்து எறிந்தான். நீதிமான்கண்டுவேலாயுதத்தால் அதைத்தகர்த்து எதிரியின் சாரதி தேர் குதிரைகளையும் அடித்து அவன்மார்பைக்கிழித்து வாயால் உதிரமும்வடிய அவனைவீழ்த்தினர். சுற்றிநின்ற வீரர்களும் சதுரங்கங்களும் ஓடினர். அங்கதேசாதிபன் மோசம் வந்ததேயென்று கிட்டி அணுகினன். அசுவன் இச்செய்திகேட்டுமெத்தவருந்தி ஓடிவந்தான். கிருபரும் சல்லியனும் தம்பிமாரும் பதறிவந்து தருமரைவளைத்துச் சமர்தொடுத்தனர். அவ்வேளையில் அர்ச்சுனன் பீமன் நகுலன் சகாதேவன் ஒப்பற்ற தரணிபாலகர் முரசக்கொடியனுக்குத் துணை நின்று சாடினபோது, எதிரிகள் களைத்து நாகக்கொடிபடைத்த நராதிபனை இழுத்துக்கொண்டு ஆயுதங்களைப் பறிகொடுத்து மிகுந்த வெட்கமுந் துக்கமுமாய்ப் பாடிவீடு போய் புக்கனர். இவ்விடத்தில் பாண்டவர்களும் மிச்சப்பட்ட சேனைகளுடன் தங்கள் பாசறைக்குத் திரும்பினர்கள். ஆயிரங்கதிரோன் அந்தித்திசைக்கண் அமர்ந்தான். இராமுழுதும் முசிப்பாறியிருந்த உபயத்திராளும் சூரியன் விடியற்போதில் எழும்பினமாத்திரம், தாங்களுமெழுந்து யுத்தத்துக்கு ஆயத்தப்பட்டார்கள் என்று வைசம்பாயனர் ஜநமேஜயமகாராஜனுக்குக் கூறியருளினர்.

பதினாறும்போர்ச்சருக்கம்-முற்றிற்று.

பதினேழாம்போர்ச்சருக்கம்.

விருத்தம்.

ஈரொருபிறப்பிலொருசிறுகுறளா யாவருந்தேவரும்வியப்பக்
காரொருவடிவுகொண்டெனச்சென்று காவல்கூர்மாவலியளித்த
நீரொருகரத்துவீழவெண்டாக நீனிறவாகரேருடுத்த
பாரொருகணத்திலளவிடுங்கமலப் பாதர்நாதனர்நமக்கே.

கேளும் ஜநமேஜயமகாராஜனே! அரவக்கொடியோனும் அவனுடைய படைகளும் காலையிலெழுந்து ஆயுதபாணிகளாகி யுத்தகளம் வந்து நிறைந்தனர். சேனதிபதி கர்ணமகாராஜன் அன்றையதினம் தன்னை அதிசிறப்பான அலங்காரஞ் செய்துகொண்டு ஆயுதபாணியாக சகல சந்நாகங்களுடனேயும் படைமுகத்தின் முனைமுன்னர் வந்து இரதத்தில் விளங்கி நின்றான். இவ்விடத்தில் தருமராஜன் முதல் ஐவரும் அழகுவாய்ந்த திருமேனியராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் தங்கள் படைகளைத் திரட்டிக்கொண்டு இரணக்களம் வந்து சேர்ந்து, துரியோதனன் நிற்கின்ற பெருக்கத்தையும், சூரியபுத்திரன் விளங்குகின்ற காம்பீரதாஷ்டீகத்தையும்பார்த்து, ரதத்தின்மீது விளங்காநின்ற மாதவனை அர்ச்சுனன்நோக்கி, அவர் திருவடியை மனனஞ்செய்து, இன்றையப்போரில் கர்ணன் வானுலகம் புகுவானு அல்லது எங்களைமாய்த்து வாழ்வானு சொல்லும் எந்தையே யென்று வினவ, சிறிய அணுவும் பெரிய அகண்டமும் தானேயாகி விளங்

கும் சச்சிதானந்தாத்வயமாகிய திருமால் திருவாய்மலர்ந்தருளுகின்றார், ஓதருமநந்தனே! சூரியபுத்திரனாகிய கர்ணன், அர்ச்சுனன் பாணத்தினால் இன்று இறந்துபோவான், நாளையதினம் வாயுபுத்திரனாகிய நமது பீமசேனனால் துரியோதனன் வெம்பிச்சாவான். அஸ்தினாபுரமும் நாற்கடல்சூழ்ந்த எண்டிசைப்பூமியும் உமக்குச் சொந்தமாகி பட்டாபிஷேக பாக்கியம் பெறுவீர் சிலாக்கியனே யென்றார். இவ்வசனத்தைக் கேட்ட யுதிஷ்டிரர் காயாம்பூவண்ணனைப்பார்த்து எங்கள் அழியாமனமும் பழமையாண்மையும் அளவில் கீர்த்தியும் எங்களுக்கு நிலைபெறச் செய்கின்ற தெய்வமே! தேவரீரையல்லாது எங்களுக்கு திக்குவேறு யாருமில்லை. நாங்கள் அநாதராயிருக்கிறோம் துரியோதனனுடைய வஞ்சனைக்கடலில் வீழ்ந்து மாய்ந்திடாமல் கருணையளித்து எங்களைக் கரையேற்றி சகல ஐசுவரியங்களையும் அகண்ட மண்டலாதிபத்தியமும் தந்த அத்தனே! எங்கள் தந்தையாகிய கர்த்தனேயென்று பலவாறும் ஸ்துதித்தார். அருளாளனாகிய முகுந்தன் சிறுநகைகொண்டு, மன்னவனே கேளும்! என்னால் என்னமாலும், நான் என்ன செய்யக்கூடும், எல்லாம் உம்முடைய சத்தியமேயன்றி வேறில்லை யென்றார். முரசக்கொடியோன் மிகவும்வருந்தி, அநந்தசயனா! செத்துஏழு பிறப்புப்பிறந்தாலும் உம்முடைய நல்ல சகாயத்தை நாங்கள் மறக்கமாட்டோம், அரீ அரீ என் அப்பனே! தேவர் தேவனே! நாங்கள் பாலியராயிருக்கும்போது,—க. துரியோதனன் கங்கையில் வசிநட்டு எங்களைக்கொல்ல வகைதேடினதில் பீமனைச்சாகாமல்ஆருயிர்பிழைக்க அருளினை.—உ. இராசசபையில் துரோபதையை வஸ்திரபங்கம் பண்ணினபோது, அவள் தேவரீரை ஸ்மரித்தமாத்திரம் மாளாத்துகிலை வளர்த்தளித்தாய்.—ங. நாங்கள் பனிரண்டுவருடம் வனவாசந்தொலைக்குங்காலத்தில்,துரியோதனன் ஏவுதலால் கடும்பசி யென்றுவந்த துர்வாசர் சாபம் நேரிடாமல், அவர் பசிக்கமுதளித்து எங்களைக் காத்திரட்சித்தாய்.—ச. கர்த்தனே, எங்களை ஒருபொருட்டாக எண்ணி துரியோதனனிடம் தூதுசென்று விதுரமகாராசனுடைய நிகரற்ற வில்லையும் முறிப்பித்து, சந்தேகத்தால் அசுவத்தாமனுக்கு சேனாதிபதிப்பட்டம் ஆகொட்டாமல் கெடுத்து, துரியோதனனுக்கு இருந்த மகா துணைபலங்களையெல்லாம் அபலப்படுத்தி, அவன்மனோரகசியத்தை யெல்லாம் அறிந்து, அந்தந்தகாரியத்துக்குத்தக்க சுள்ளாணிகளை அடித்து,எங்களுக்குச் சகாயமாய்நின்றாய்.—ரு. முதல்முதல் யுத்தத்துக்கு வரும்போது, பதினொரு அக்குரோணி சேனையையும் பெரியோரையும் விஜயன்கண்டு, இவர்களை எப்படி கொல்வதென்கிற சீவகாருண்யத்தினாலேயோ, அல்லது வேறுகாரணங்களாலேயோ, சிந்தைகலங்கிமெய் தளர்ந்து ஆயுதங்களைக்கைநெகிழ்ந்துவிட்ட அவனுக்குத் தத்துவக்கியான போதகீதையை உபதேசித்து, விஜயன்மறுபடியுந் திடங்கொண்டெழும்பி எல்லாரையும் நானே கொல்லுகிறேனென்று வீராவேசங் கொள்ளச்செய்தாய்.—சு. இந்திரஜால தந்திரியே, ஆயுதமெடுப்பதில்லையென்று அரசனுக்கு இட்ட ஆணையை மறந்து, சக்கரமெடுத்து பீஷ்மருடன் எதிர்த்து

எங்களுக்காகப் பாடுபட்டுத் தேர்நடாத்திச் செகண்டிமனோரதம் நிறைவேறும்படியாய் மூதாதையையும் முடித்தாய்.—எ. ஒருநாள் யுத்தத்தில் அர்ச்சுனனை யெதிர்த்த பகதத்தன் எறிந்த வேலாயுதத்தை தேவரீருடைய திருமார்பில் தாங்கி, நிராயுதன் நான் என்று நியாயம் எண்பித்து, எங்களை நிர்விக்கின மாக்கிவைத்தாய்.—அ. சதிமோசடியால் இறந்த அபிமந்யுவைக் குறித்துப் புத்திரசோபத்தால் அவசரப்பட்டு அர்ச்சுனன் செய்த சபதம் நிறைவேறும்பொருட்டு அர்த்த ராத்திரியில் அர்ச்சுனனை அழைத்துக்கொண்டு கைலையங்கிரிக்குச் சென்று பாசுபதம்பெற்று அவன் சபதத்தை நிறைவேற்றி வைத்தாய்.—கூ. வருணன் மகனாகிய சதாயு, அர்ச்சுனன்பேரில் எறிந்த எஃகுக் கதையானது கிருபையாகிய தேவரீர் திருமார்பில் புதையும்படியாய்ப் பட்டபோது அது கல்லின்மேற் பட்டதுபோல் தெறித்து விழுந்து எறிந்தவனும் அழிந்திடும்படி செய்தனை.—௧௦. பதினாலாம்நாள் யுத்தத்தில் மத்தியான வேளையில் தடாகம் ஒன்றேற்படுத்தி அதில் தாகம் தீர்க்க வந்த எதிரிக் கூட்டங்களைப்பார்த்து சங்கமுழக்கி அவர்கள் மயங்கிப்போகும்படி செய்தனை.—௧௧. அந்தப் பதினாலாம்நாள்போரில் சூரியனை மறைத்து சயிந்தவனைக்கொன்று சபதத்தைமுடிப்பித்து அர்ச்சுனனைஉயிர்காத்தருளினாய்.—௧௨. பதினைந்தாம்நாட் போரில் அசுவத்தாமன்விட்ட உக்கிரநாராயணாஸ்திரத்தால் நாங்களும் எங்களைச் சார்ந்தவர்களும் மாளாதிருக்கும்படி அந்தஅஸ்திரத்தை அவலமாகும்படி திருப்பிவிட்டாய்.—௧௩. அமலனே! போர்தொடங்கிய முதல்நாள் யுத்தத்தில் பீஷ்மதுரோணாசாரியர்களிடத்துக்கு எங்களை அழைத்துப்போய்க் குறைகூறி, அவாள் இறக்கும்படியான விரியாண நிச்சயத்தைக் கேட்டு பீஷ்மரைப் பத்தாம்போரிலும் துரோணரைப் பதினைந்தாம்போரிலும் முடித்துவைத்தாய். மும்மூர்த்திகளும் ஒன்றாகிய ஒருமூர்த்தியே! வேதங்கள்தேட நிற்கும் வேதாந்தனே! யாவரும் அறியக்கூடாத நின்செயலை அற்பனாகிய எம்போலியரால் அறியத்தக்கதோ, ஆதியநாதியேயென்று தருமநந்தனர் அநேகமான நன்றிவந்தனங்களை ஸ்தோத்திர ரூபமாகக்கூறினர். அப்பால் ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்குக் கருணைபிறந்து தருமரை இருகரத்தாலுந்தழுவி, நீங்கள் ஐவரும் இப்போது நடக்கிற யுத்தத்தில் இறக்கமாட்டீர்கள், பயப்படாதீர்கள் என்று ஆசிர்வதித்து எதிர்நின்ற திருஷ்டத்தியும்னனை வியூகங்கட்டும்படி கற்பித்தார். எதிரியின் சேனாதிபதி கர்ணன் வாய் வீம்புகள் மெத்தவும் பேசி, அர்ச்சுனனுக்கு மாயவன் சாரதியாயிருக்கிற படியினாலே, அவனை வெல்லக்கூடாதிருக்கிறது, அந்தப் பார்த்த சாரதிக்குச் சமானமான ஒருவன் எனக்கும் அகப்படுவானாகில் இராச்சியமெல்லாம் உனக்கே பட்டங்கட்டிவைப்பேனென்று புகழ்ந்தான். இதற்குத்தகுந்த சாரதி யாரென்று துரியன்வினவ, சல்லியனே சிறந்தவன் என்றான். உடனே சல்லியராசனை வரவழைத்து, அவனை அநேகமாய் துதித்து கர்ணனுக்குச் சாரத்தியஞ் செய்யும்படி வேண்டிக்கொண்டனன். இதுகேட்ட சல்லியன் மனம் புழு

ங்கி, நீர் என்னை முன்பின்பாராமல் இன்னகுலமென்று தெரியாத கர்ணனுக்குச் சாரத்தியஞ்செய்யச்சொல்லுகிறீர், ஆ ஆ இப்பேர்ப்பட்ட வசனம் இன்னொருவன் கூறியிருப்பானாகில் அவன் நாவானது இந்நேரம் என்னபாடுபடுமோ தெரியாது அறியேன். தேர்ப்பாகன் வளர்ப்புப்பிள்ளைக்கு நான் சாரத்தியஞ் செய்வதைப் பார்க்கிலும் சாகிறதுமேல், வீரதீரங்களில் எங்கள் இருவரையும்பரிட்சிக்கவேணுமாகில், பாண்டவசேனைகளை இருபங்காகப்பிரித்து, எனக்கு ஒருகூறும் கர்ணனுக்கு ஒருகூறுமாகவிட்டுப்பார்ப்பீராகில் என்பங்குக்கு விட்டசேனைகளை முந்தி அதம்பண்ணி கர்ணன்பங்கையும் நானேமுடித்து சிறந்த ஜெயம்பெறுகிறேன் பாரும், அப்படி செய்யாமற் போவேனேயாகில் அப்பாற் கர்ணனுக்குச் சாரத்தியஞ் செய்கிறேன் என்றான். இவ்வார்த்தையைக்கேட்ட அரவக்கொடியோன் சல்லியபூபதியே! உம்மிலும் மிகுந்தகீர்த்திபடைத்து அமர்முனையிற் செயிப்பவர் இல்லை. உம்மைவிடத் தேர்ச்சாரத்தியஞ் செய்யும் வல்லவருங்கிடையாது இந்தச்சாரத்தியத்தொழிலைக் குறைவென்று நினையாதீர். யாவரும் இதுசகஜமாய்ச் செய்யக்கூடியதல்லவேயென்று அரவக்கொடியோன் சல்லியன்கையைப்பிடித்து மிகவும்வேண்டிக்கொண்ட அளவில், சல்லியன் ஒமென்று உடன்பட்டான். துரியோதனனானவன் சல்லியனுக்கு இதினால் நேரிட்ட மனக்கவலையை நீங்கும் பொருட்டு, பூர்வத்தில் தாருகாசூரன் பிள்ளைகள் வித்துவமாலி, தாருகாக்ஷன், கமலாக்ஷன், இவர்கள் வரப்பிரசாதத்தினால் பெற்றிருந்த திரிபுரங்களை யெரிக்கப் பரமேசுவரன் வெளிப்பட்டகாலத்தில், பிரமாவானவர் சாரத்தியஞ் செய்த கதையை திருஷ்டாந்தமாக முழுக்கச்சொல்லிக் காண்பித்து, கர்ணனுக்குச் சாரத்தியஞ்செய்வது தீவினைப்பயன் என்று மனச்சலிப்புக்கொள்ளவேண்டாம், அந்தக் கர்ணன் எப்பேர்ப்பட்டவன் என்றால் ஒப்பில்லா உரம்பெற்றவன், மிகுகொடையாளன், கவசகுண்டலத்தோடுபிறந்தவன், சொற்சோர்வுபடாத நிறைமையன், ஒருகாரணத்தினால் சவ்வியசாசியைக் கொல்ல அவதரித்திருக்கிறவன், பரசுராமரிடதில் திவ்வியமந்திரங்களையும் பெற்றவன், அவனுக்குச் சாரத்தியஞ்செய்வது இழிவல்ல என்றான்.

சல்லியராசன் சாரத்தியஞ்செய்ய உடம்பட்டதற்கு கர்ணன் சந்தோஷமடைந்து, அவனைத்தழுவி யணைத்துத் தேரைக் கொண்டுவரச்சொல்லி இரதத்தின் மீதேறிப் படைமுகம் புகுந்தவுடன், கர்ணனானவன் சல்லியனைப்பார்த்து, தேவேந்திரன் பிடித்திருந்த இந்திரதநுசை சூரியன் பெற்று, அதை மதங்கமாமுனி அடைந்தார். அவரிடத்திருந்து பரசுராமர் பெற்று அந்தமகாபுருஷன் அதை எனக்குக் கொடுத்தார். இத்தன்மைய அரியவில்லையும் அதற்குத்தக்கபகழிகளையும் பெற்றிருக்கிறேன். ' நாரணனுக்கு ஒப்பான உன்னை எனக்குத் தேர்ப்பாகனாகவும் பெற்றேன். இவ்வளவு பலமான பேறுபெற்ற எனக்குப் பகைஞன் அர்ச்சுனனேயல்லாமல் வேறொருவருமில்லை. அந்த அர்ச்சுனனுக்கு எதிரி என்னைத்தவிர இவ்வுலகத்தில் வேறேகிடையாது, என்தோழனாகிய துர்யோதனமகாராசனை

மண்டலமுழுவதும் ஆளும்படியாய் செய்யப்போகிற என்சங்கிராமவீரத்தைப் பாருமென்று தன்னைப்புகழ்ந்துகூறினன். மத்திரதேசாதிபதிநகைத்து கர்ணமகாராசனே! உன்சாமர்த்தியத்தை எனக்குச் சொல்லவேண்டாம், உங்கள் இருவருடையதேரும் கிட்டநெருங்கி யுத்தஞ்செய்யும்போது உங்கள் இருவர் சேவகமுந்தெரியும், நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் உயர்வுதாழ்வில்லாமல் வரமும் உரமும் பெற்றவீராள். இதுவரையிலும் நீங்கள் இரண்டுபேரும் யுத்தம்பண்ணிய இடங்கள்தோறும் நாங்களும் பக்கத்திலிருந்து பார்த்திருக்கிறோம், போர்முகத்தில் பயப்படாத விஜயனை ஒருகாலத்திலாவது நீசெயிக்க நாங்கள் கண்டறியோம், நீகூறிய சபதப்படி நெஞ்சிளைக்காமல் சமர்செய், ஆர்செயிப்பாரோ ஆர்தோற்பாரோதெரியாது என்றபோது, கர்ணன் பெருமூச்சுவிட்டுப் பற்கடித்துப் பின்னுஞ் சொல்லுகிறான். ஆகண்டலன் மகனாகிய காண்டீபனுக்கு நான் எதிராளியேயல்லாது வேறொருவருமில்லையென்று நிச்சயமாய் எண்ணிக்கொள், நீ என்னை இகழ்ச்சியாய்ப்பேசாதே. சாரத்தியஞ்செய்ய உனக்கு வல்லமை யுண்டாயிருக்குமாகில், உன்சொந்தமாகிய அந்தவேலையைமாத்திரம் செய்வையேயல்லாது, மிகுந்தசமர்த்துடன் செய்யும் யுத்தத்திரங்களுக்கும் உனக்கும்என்னசம்பந்தம் தோற்பதுஞ்செயிப்பதும் நீயா எடுத்துக்கூறுகிறவன். உன்வேலையைப்பார் என்றான். சல்லியன் கொதிகொதித்துக் கடுங்கோபமாய்க் கர்ணனைப்பார்த்து, தகுதிபெறத்தக்க சாமார்த்தியரை அற்பபலம்பெற்ற அறிவீனர்கள் வெற்றிபெறுவாரோ, அப்படியிருக்க நான்செயிப்பேன் செயிப்பேன் என்று வாய்மதமாகச் சொல்லிய வார்த்தை ஒப்பாமோ, அந்தஅர்ச்சுனனைப்புகழ்ந்து நான்மாத்திரஞ்சொல்லுவதல்ல உலகமுழுவதும் புகழுகிறார்கள். துரியோதனன் கேட்டுக்கொண்டநிமித்தியம் உனக்குத் தேர்செலுத்தி சமயோசிதமான காரியாகாரியம் தன்பலம் மாற்றான்பலம் முதலியதை உனக்குச்சொல்லிக் கொடுக்கமாத்திரம் வந்தேன் மற்றபடிக்கல்ல, இப்பவுமென்ன துள்ளிக்குதித்துச் சண்டைபோடச் செல்வாயாகில், நீ பட்டுப்போவாய் என்கிறதற்கு யாதொரு ஐயமுமில்லை. தீர்க்காலோசனைசெய்து உன் இஷ்டப்படி செய்துகொள்ளக்கடவையென்றான்.

சல்லியராசனே! நீ சொன்ன உத்தரம் மிகவும் விசித்திரமாயிருக்கிறது, இந்த அர்ச்சுனனை வெல்வது எனக்கு அரிதல்ல, அவனைக் கொல்லமுடியாதென்று நீ சொல்லுகிறாய். அப்படியானால் உன்போலியரால் அவனைக்கொல்லமுடியுமா! அர்ச்சுனன் பிராணனுக்கு நான் நாகாஸ்திரம்வளர்த்து வைத்திருக்கிறேன். அதற்கு அவன் தப்பமாட்டான் என்பதற்குச் சந்தேகமில்லை. இஃதன்றியும் காலம் இடம் கருவி வலி யிவைகளை நோக்கிபிராநின்ற கருத்தினர்கள் செயம்பெறுமளவும் தங்கள் வல்லமைகளை வெளியிடார்கள். அதுபோல் சமயம்வரும் வரையிலும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். ஞாலம் முழுவதும் நகைக்கும்படியாய் குறைவான வார்த்தைகளைப்பேசினயே என்று கர்ணன் சொல்லினன். இம்மொழி

கேட்ட மத்திரன் தீதறச்செப்பலுற்ருன். அங்கர்கோனே! உன்கைத்திற த்தை அறியாதார் யாருமில்லை. நேற்றுப் பதினலாம் நாட்போரில் சைந் தவனை உயிர்போகாமல் ரட்சித்ததை திரிலோகத்திலும் கொண்டாடினர் களே, அது உன்னைத்தான்போலிருக்கிறது. எக்காலத்திலும் போர்முகத் தில் சளையாமல் எதிர்த்துவரும் விஜயனை நீ கூடிய வரையிலும் போர்புரி ந்துபார்க்கிருய் ஒருநாளாகிலும் நீ செயிக்க வில்லையே. விஜயனைச்செயித் தேனென்று நீ சொல்வாயாகில் காலம் தலைகீழாகும், சிங்கத்தை யானை கொல்லும். இதற்கொருகதை சொல்லுகின்றேன். உத்தரதேசத்தில் ஒரு சிற்றூர்உண்டு, அதில் காக்கைதவிர மற்றப் பறவை ஜந்துக்கள் எல்லாம் இருந்தன. காக்கையைப் பார்க்க அவ்வூரார் ஆசைகொண்டிருந்தார்கள். ஒருநாள் வாடைக்காற்றில் அகப்பட்ட ஒருகாக்கையானது அவ்வூரில்வந் து விழுந்தது; அதை அவர்கள் அபூர்வமென்று எடுத்து வளர்த்தார்கள். அதுதின்றுகொழுத்து புதுவாழ்வினல் அன்னப்பட்சிபோல் நடந்து அ தைப்பரிகாசித்தது,அன்னமானது காக்கையைப்பார்த்து நாங்கள் என்ன அற்பமான ஜெந்துக்கள் நீரில்வாழுஞ்சாதிகள் உனக்குச் சமானமாய்ப் பறக்கமாட்டோம் என்ன, இவ்வளவுதானு உங்கள்பவிஷியம் என்று காக் கைசொல்ல, அப்படியானுல் நாம் இருவரும் பறந்துபார்ப்போமென்று இரண்டுஜெந்துக்களும் வெளிப்பட்டன. காக்கை தன்கெருவத்தினல் கடு ம்வேகமாய்க் கடல்மீது பறந்துபோய் திரும்பிவந்து, நீ என்ன பறக்கமா ட்டிலை; இதோநான் ஒருமுறைபறந்து திரும்பினேன், மறுபடியும் உனக் குமுன்னே இதோ பறக்கிறேன் என்றுசொல்லித் திரும்பியும்பறந்துபோ ய்வாய்மதம்பேசிய கொழுப்பினல் இளைப்பாகிக் கடலில்விழுந்து மாண்ட தாம். அர்ச்சுனனுடன் எதிர்த்து வெல்லுகிறேனென்று நீசொல்லும் வெ ல்லப்பேச்சானது, இப்போது நான்சொன்ன கதைக்கொப்பாயிருக்கிறது எப்படியெனில், சிற்றூர் என்பது துரியோதனன், காக்கையென்பது கர் ணனுகிய நீதுரியோதனன்வீட்டுச் சோறுதின்று கொழுத்து அவ்வன்னப் பட்சிபோன்ற அர்ச்சுனன்பேரில் யுத்தஞ்செய்கிறேன் என்று சொல்வதி னுல் காக்கையடைந்தகதி உனக்கு முண்டாமென்பது என்கருத்து என் றறிக என்ருன். இவ்விதமாய் சல்லியன்சொல்லிய பலவசனங்களையும் கர் ணன் சற்றேசகிதானித்து இவன் நமதுராசனிடத்தில் அன்புபோற் காட்டி தன்மருமக்களாகிய எதிரிபால் பட்சமாயிருக்கிருனல்லவா என்று கோப ங்கொண்டு வாளையோங்கி, நீ கூறிய இழிமொழிகளுக்காகஒரேவெட்டாய் வெட்டுவேன், சீக்கிரம் தேரைச்செலுத்தென்ருன். சல்லியனும் தன்கத்தி யை யெடுத்துக்கொண்டு, அடா சூதன்மகனே! நான் உனக்குச் சாரத்தி யஞ்செய்யத்தக்கதோ, எவ்வளவும் நீ நினையாமற் போனுயென்று சீறி, இருவரும் தறையிற்குதித்து சண்டைக்கு எதிர்த்தார்கள். சற்பக்கொடி யோன்கண்டு இருவர்மத்தியிலும் நின்று இவரையுஞ் சந்திபொருத்திவிட் டான். அவ்வேளையில் கிருதபன்மன் கிருபர் சகுனி சாளுவன் முதலியர் கர்ணனைச் சூழ்ந்து நின்ற கோலத்தைப்பார்த்த துரியோதனன் இன்று

விஜயனை வென்றுவிடலாமென்கிற களிப்பினல் ஒருவார்த்தை சொல்லுகிமுன். கேட்மர்களா என் உரிய இஷ்டர்களே! கிருஷ்ணனிடத்தில் வைத்திருந்த அன்பினல் விதுரன் உற்றசமயத்தில் யுத்தஞ்செய்யாமல் தன்வில்லையும் உடைத்துவிட்டு எனக்குத் துணைவந்த பலராமரையுங் கலைத்து அழைத்துக்கொண்டு தீர்த்தயாத்திரைக்கு போய்விட்டான். இஃதல்லாமலும், எங்கள் பாட்டனுகிய பீஷ்மாசாரியர் எனக்குச் சேனதிபதியாயிருந்து பத்துநாள் போர்செய்து தேகமெல்லாம் நொந்து வீராதிவீரர்களை அதமாக்கி, தாமுந்தேவர்களில் ஒருவராகச் சேர்ந்து போகப்போகிமுர்.

அப்பால் தநுர்வேத மகாபண்டிதராகிய துரோணுசாரியர் என்பட்சத்தில் சேனதிபதியாகி ஐந்துநாள் யுத்தஞ்செய்து அநேகவீரர்களைச்சங்கரித்துவிட்டு அவரிவ்வாழ்க்கையை வெறுத்து இரும்புண்ட நீர்போல் திரும்பாதிருக்கும்படியாகிய மோக்ஷவீட்டையடைந்தனர். சிவசுப்பிரமணியர் சூரர்களைச் சங்காரஞ்செய்து தேவர்களுக்கு வாழ்வையளித்தவாறே, அவதாரியாகிய கர்ணராசன் இவ்வேளையில் என்னை நிலைபெறச்செய்யவேணும், வேறே எனக்கு உரியார் ஒருவருமில்லை சூரியன்போன்றசூரா!உன்னைநான்அடைந்தேன். சல்லியராசன் பாண்டவர்களாகிய மருமக்கள்பட்சத்தைப் பாராட்டாமல் தன்சத்தியவார்த்தைக்கு கெடுதியில்லாமல் என்மீதுண்டாயிருக்கின்ற சிநேகதர்மத்தினல், உனக்குச் சாரத்தியத்துக்குத் துணையானர்; இவர் காலமறிந்து நமக்கு அனுகூலமாகிய சத்விஷயங்களை சொல்லுவாரே யல்லாமல் நஷ்டம்வரும்படி சொல்லமாட்டார். இவர் உரைக்கின்ற மொழிகளெல்லாம் உமக்குச் சுகத்தையும்நலத்தையுந் தரும். நீங்கள் இருவரும் நீரும் பாலும்போற்கலந்து என்காரியத்தைநடத்துங்கள் என்முன். உடனே சல்லியனும் கர்ணனும் தேரேறிக்கொண்டு ரதத்தை நடத்தும்போது, கர்ணனனவன் சல்லியனைப்பார்த்து, கேளும் மத்திரதேசாதிபதி! பூர்வத்தில் நான் பரசுராமரிடத்தில் தநுர்வேதம் படித்தபோது, தேவர்கள் பொறுமைகொண்டு என்னைச்சதிசெய்ய நினைத்து, ஆசாரியர் என்துடைமீது தலைவைத்து நித்திரைபண்ணுஞ்சமயத்தில், இந்திரன் வண்டுருபமெடுத்து, என்துடையைத்துளைத்து ரத்தப்பெருக்காக்க, அந்தரத்தத்தைக்கண்ட குருவானவர் நான் பிராமணனென்று மாறுபாடாய்ச் சொல்லி தநுர்வித்தைகளை கிரகித்து விட்டேனென்று வைரங்கொண்டு உற்றசமயத்தில் என் ஆயுதம் எனக்கு அவலமாய்ப் போகும்படி சபித்திருக்கிமுர். இஃதல்லாமலும் ஒருநாள் நான் இரதத்தின்மீது ஊர்வலம்வரும்போது, என் தேர்ச்சக்கரத்தில் சிவந்த நிறமுள்ளபசுவின் கன்றுவந்து மாட்டிக்கொண்டு மாய்ந்தது. அதைப்பற்றி ஒரு மகாரிஷியானவர் என்னிடம்வந்து, தன்பசுவின்கன்றை நான் கொன்றேனென்று கோபப்பட்டார். ஒன்றுக்கு லட்சங்கொடுக்கிறேன் என்குற்றமல்லவென்று சொல்லியும், அவர்கேளாமல் நடுச்சமயத்தில் என்தேர்புதைந்து அதினல் என்காரியங்கெடுமென்று சபித்திருக்கிமுர். இப்போ திந்தயுத்தவேளையில் அந்த இரண்டுசாபமும் நேரிடுமாகில் பாண்டுபுத்திராள் ஜெயிக்க

வே கெலிப்பார்கள். இஃது ஒன்றுதான் என்மனதில் வாதித்துக்கொண்டிருக்கிறது, இல்லாவிடில் என்னைசெயிப்போர் ஒருவருங் கிடையாதென்ருன். சல்லியராசனும் தேரைப் போர்முகத்தில் கொண்டுவந்து நிறுத்தினன். இருபடைகளும் கைகலந்து போர்புரிந்ததில் திருஷ்டத்தியும்நன் முண்டி நிற்கமாட்டாமல் வேறுதேரேறிப் பின்னடைந்தான். மீந்திருந்த பாஞ்சாலமன்னவரில் அனேகர் அசுவத்தாமனுடன் எதிர்த்து யுத்தஞ் செய்து மாண்டார்கள். அப்போது தர்மராசன் பீமனையேவிவிட்டார். அவன்புகுந்து அசுவத்தாமனையெதிர்த்து அடித்து நோக்காடு செய்த காலையில், கர்ணன்மகன் விடசேனன் வந்தெதிர்த்து பலமானயுத்தஞ்செய்து பீமன்மார்பைத் தொளைத்தான். பீமன் ஆக்கிரமித்து சிலபாணங்களை அவன்மீதுவிட்டு அவனை நோகயடித்துவிட்டுக் கர்ணனைவந்தெதிர்த்து சாடுகையில், இருவர்படைகளும் அநேகமநேகமாய் மாண்டன. அவ்வேளையில் விடசேனன் பீமனைச் சீறியெதிர்த்துப் போரிட்டான். காவேரிநாட்டுக்குடைய சோழனும் மகததேசனுகிய சாதேவனும் ஒருவருடனொருவர் எதிர்த்தபோது, சோழனுல் மகததேசன் உயிர் இழந்தான்.

அசுவத்தாமன் தருமராசன் தம்பிமாரில் இருவரைக்கொல்லுகிறேனென்று வெளிப்பட்டபோது, விஜயன் அவனை முண்டியெதிர்த்தடித்து விரட்டிவிட்டான். குருபுத்திரன் ஓடுவதைக்கண்ட துரியோதனன் தம்பி சுதக்கணனுனவன் யுத்தஞ்செய்ய வந்தவனை நகுலன் வளைத்துக்கொண்டு சண்டையிடும்போது கர்ணன்வந்துமுனைந்து சண்டையிட்டு அநேகஞ் சேனைகளை மாய்த்தான். கர்ணனும் தர்மராசனும் பிரபலமான யுத்தஞ்செய்யுங்கால், தருமர்மார்பில் ஏழுபாணங்களைவிட்டுத் தொளைத்ததற்கு அவர் இளக்கரியாமல் கர்ணன் கைவில்லை முறித் தவனையும் நோகவடித்தார். கர்ணன் வேறுதேரேறி இருவரும் யுத்தஞ்செய்ததினுல் இருவர்தேகத்திலும் இரத்தம் பெருக்கெடுத்து வழிந்தோடிற்று. இன்னொரு பக்கத்தில் பீமசேனன் துரியன்படைகளை மாய்த்துவருவதைச்சகியாமல், அவன்தம்பிமார்களில் சகாதேவன், தண்டகன், சித்திரதேவன், சாத்தகி, சித்திரகீர்த்தி, தண்டநாதன், தண்டதரன், ஏழுபேர் எதிர்த்துவந்து போரிட்டபோது, பீமன் அவ்வேழுசகோதரர்களையும் தன் கெதைக்கிரையாக்கிவீர சொற்கம் போக்கிவிட்டான். கர்ணன், கிருபாசாரியரையும் அசுவத்தாமனையும் துணைசேர்த்துக்கொண்டு பீமனை முனைந்தான். சாத்தகி முதலியோர் பீமனுக்குத்துணைநின்று ஈட்டுக்கீடாகப் போர்கொடுத்தார்கள். இதினுல் அநேகம் குதிரைவீரர் தேர்வீரர் கால்வீரர் கணக்கில்லாமல் மாய்ந்தார்கள். காயம்பட்டவர்களும் கணக்கில்லை. அர்ச்சுனனிடத்தில் அடிபட்டுவந்த சஞ்சத்தகர் சிலர்பீமனை வளைத்து கூடியமட்டும்போரிட்டு நால்வகைச்சேனையுடனுஞ் சேர்ந்து தருமரை யெதிர்த்தடித்தார்கள். அனைவரையும் அவர் தமதுகணைகளினுல் நோகயடித்து அநேகர் சாகவும் அநேகர் ஓடிப்போகவுஞ் செய்தார். மறுபடியுஞ் சிலவீரர்கள் தருமராசனை பாணங்களினுல் நோகச்செய்தார்கள். அச்சமயத்தில் கர்ணன் அவரையெதி

ர்த்துச் சண்டையிட்டான். அவர்விடுத்த அஸ்திரங்களினால் சாரதியாகிய சல்லியன் பலமாயடிபட்டுத்தேரழிந்தான். வேறுதேரேறிய கர்ணன் தருமரை மாறிமாறி யுபத்திரவித்தபோது அதைத்தாளாமல் தருமர் பின்னடைந்தார். ஓடாதீர் நில்லும் நில்லும் என்று கர்ணன் பரிகாசித்த அச்சமயத்தில், பீமன்வந்தெதிர்த்து முனைந்து சாடினத்தில் எதிரிகள் பின்னடைந்தார்கள். கர்ணன் தைரியத்தைவிடாமல் பீமன்மீது பாணந்தொடுத்து உபத்திரவித்தபோது, பீமன் இளைக்கரியாமல் கர்ணனையெதிர்த்து பாணப்பிரயோகஞ்செய்து அவன் பிரேதம்போல் ரதத்திலே விழுந்திடும்படி நேர்ந்தது. கர்ணன் களைதெளிந்தெழுந்து எதிரிபடையுட்புகுந்து மன்னர் பலரை அடித்து மாய்த்தான். அசுவத்தாமன் அர்ச்சுனனை யெதிர்த்து அவனையும் சாரதியையும் அஸ்திரங்களினால் நோகச்செய்தான். விஜயன் தனதுசரங்களால் அசுவத்தாமனை வருத்தியும் அசுவன் முனைந்து திவ்வியாஸ்திரங்களைப் பிரயோகிக்குங்கால், அர்ச்சுனன் தளர்ந்தான்; அப்போது பார்த்தசாரதி அவனை தைரியப்படுத்தி முடுக்கினார். திடங்கொண்ட பார்த்தன் ஆங்காரத்துடன் வாளிகளேவி அசுவத்தாமனை அசந்துபோம்படி பண்ணினான். மூர்ச்சித்துவிழுந்த அசுவத்தாமனை துசுவாசன் கொடுபோய்த் தேற்றினான். அசுவத்தாமன் தேர்வேறேறி மறுபடியும் போர்கொடுத்தான். அவன்ரதத்தையழித்துச் சாரதியைப் புடைத்தபோது, அசுவத்தாமன்வேறுதேரேறி நூறுநூறாக அஸ்திரங்களை பாண்டியன்மேல் விட்டான். அவைகளையெல்லாம் பாண்டியன்தடுத்து துரோணரைப் பின்னிடவடித்ததேபோல் அவர்மகனையும் அடித்து விரட்டிவிட்டான். அசுவத்தாமனும் பாண்டியனுஞ்செய்த யுத்தத்தில் சேனைகள் பெரும்பாலும் மாண்டன. அசுவத்தாமன் ஒருதிவ்வியகணையினால் பாண்டியனைப் பிராணன் போக்கினான். அதினால் பாண்டவவீரர்கள் ஓட்டம் பிடிக்கும்படியாயினார்கள். சோழராசன் அசுவத்தாமனை யெதிர்த்து போர்செய்து ஒருவருக்கொருவர் முனைந்து நிற்கும்போது, சோழனால் அசுவத்தாமன் களைத்து விழுந்தான். அவனைச் சகுனியும் வேந்தரில் சிலருந் தூக்கிப்போய் அவிழ்தாதிகளினால் தேற்றினார்கள். அசுவத்தாமன் வேறுதேரேறி கர்ணனைத் துணைகொண்டு சண்டைக்குவந்தான். சோழன் அவர்களுடன் அமர்புரிந்து தன்னுயிரை இழந்தான். அப்பால் சுவாகுவென்பானும் கர்ணன்குமாரன் சங்கனும் அங்கதேசப் பிரபுக்கள் அநேகரும் அவதிப்பட்டு உயிரிழந்தார்கள்.

துரியோதனப் படைகள் பாண்டவசேனைகள்மீது சண்டைசெய்து அநேகர் மாளுகிறதை அர்ச்சுனன்கண்டு எதிரிகளில் வெகுபேரைக் கொன்று துரியோதனன் தம்பிமாரைஅவதிப்படவுபத்திரவித்தபோது, கர்ணன்அர்ச்சுனனைவந்தெதிர்த்துக்கொண்டு கடும்போர் புரிந்து, விஜயனை விட்டுவிலகி நகுலசகாதேவர்களை வளைத்துக்கொண்டு சாடினான். அவர்கள் எதிர்நிற்கமாட்டாமல் பின்னிட்டோடும்போது, அவர்களைக்கொல்லுகிறதென்று கர்ணன் பின்தொடர எத்தனிக்கையில், அவன் சாரதியாகிய சல்

லியராசன் அவனைத்தடுத்து இளைஞராகிய இவர்களைக் கொல்வதில் உனக்குகீர்த்தியில்லை, கோபந்தணியென்றான். குந்திதேவியாருக்கு தான்கொடுத்த வார்த்தைப்பாட்டையும் நினைத்து கர்ணன் அவர்களை விட்டுத்திரும்பி விஜயனைவந்தெதிர்த்து நெடுநேரம் வரையில் யுத்தஞ்செய்து இருவரும்சளைத்து நிற்கும்போது, ஸ்ரீகிருஷ்ணனவர் நீ கர்ணனைக் கொல்லாமல் திகைத்துநிற்பானேன் என்றதற்கு, அர்ச்சுனன்கண்ணீர்சொரிந்து, ஆபத்பாந்தவனாகிய அண்ணலே! என்னுடன் போர்புரிகின்ற கர்ணராசன் சாயலில் தர்மராசனைப்போல் விளங்குகிறான், அதனால் என்எண்ணம் வேறுபட்டு துக்கம்மேலிடுகிறது, கண்கள் மறைகிறது, நான் தொடுக்கும்பாணங்களோ அவர்மேற் செல்லாமல் முகங்கூசி முனைகெட்டு விழுகிறதே, இனி நான் இவரோடே யுத்தஞ்செய்கிறது கூடாதென்றான். உடனே கண்ணன் கோபித்துத் தேரைத்தடதடவென்று நடத்தித் தர்மராசனைத் தேடிவரும்போது நகுலசகாதேவர் இருவரும் எதிர்ப்பட்டு, அண்ணாவாகிய தர்மர் கர்ணனுடன் எதிர்த்து நெடுநேரஞ் சண்டையிட்டு அவன் ஏவியகணையால் சத்துவங்குறைந்து கிருஷ்ணார்ச்சுனர்களுக்கு செய்திசொல்லுங்கள் என்றுஎங்களை அனுப்பிவிட்டுப் பாசறைபோயினர் என்றார்கள். தர்மராசனைப்போய்ப் பார்த்துவந்தபின் சண்டைசெய்யலாமென்று பார்த்தன் பகர, அங்ஙனமே சென்று தருமரைக்கண்டவுடன், அவர் தம்பியைப் பார்த்து இவ்விடம் வந்ததென்னவென்றுகேட்க, தேவரீரைதெரிசித்துப் போகலாமென்று வந்தோம், தாங்கள் களைத்துச்சென்றதாக நகுலசகாதேவர் நடுவழியில் சொல்லக்கேட்டு அமரைவிட்டு இவ்விடம்வரலானோமில்லாவிட்டால் இதுவரையில் கர்ணன் மாண்டிருப்பான் என்றான். தருமராசன்பற்கடித்துக் கோபப்பட்டு கர்ணன் இன்னும் உயிரோடிருக்கிறானா, என்ன கிருஷ்ணா இதுமெய்யா, கர்ணனை ஒருபாணத்தினால் மாளும்படி யடித்துப்போடாம லிவ்விடம்வந்ததுவீண், மற்றராசர்கள் நம்மை சிரிப்பார்கள், நீ விஜயகாண்டீபனென்று பேரெடுத்தும் காரியமில்லையென்று கடிந்து பேசினார். விஜயன் கோபப்பட்டு என்வில்லை நிந்தித்தவர் ஒருவருங் கிடையாது, நீர் என்வில்லைக் குறைகூறியபடியால், என்வில்லை இழிவுகூறுவோர்தலையை வெட்டுகிறதென்கிற என்சபதப்படி, உமதுதலையை வெட்டுகிறேன் என்று வில்லை வளைக்க ஆரம்பித்தான். அரிவாசுதேவர் விஜயனைத் தணித்துமூத்தோரை நிந்தித்ததினால் பாபம்விளைத்துக்கொண்டாயென்று தருமசாஸ்திரங்களை யெடுத்துக்கூறி, அதற்குத் திருஷ்டாந்தமாக, கௌசிகன் என்னும் ஒருரிஷியானவர் பூவலஞ்செய்தபின்னர் ஓரிடத்தில் வந்து தங்கியிருக்க எண்ணி ஒரு நகரத்தருகில் மடங்கட்டிக்கொண்டு, பொய்யாமை ஒன்று, மௌனம் ஒன்று, இந்த இரண்டினையும் விரதமாக அனுஷ்டித்துப்பரிசுத்தாத்துமாவாகித் தவம்புரிந்துவந்தார். அவரதுநற்செய்கைகளுக்கெல்லோரும் மகிழ்ந்து தொண்டுபட்டிருந்தார்கள். இப்படி நடந்துவரும்நாளில் திருடர் சிலர் மடத்துக்கடுத்த வீட்டில் கன்னம்வைத்துகளவாண்டார்கள். சொத்துக்குடையவன் அவர்களைப் பின்தொடர்ந்து வரும்போ

து கள்ளர்கள் மடத்துக்குள்ளேபுகுந்து மறைந்திருந்தார்கள். துரத்திவந்தவன் சோரர் எங்கேயென்று ரிஷியைக்கேட்டதற்கு, கள்ளர் போனதிக்கைச் சுட்டிக் கைச்சாடை காட்டினர். அந்தக் குற்றத்திற்காக கௌசிகரிஷியினுடைய மறுமைக்காலத்தில் நரககதியடைந்தார். இது நீ கேட்டிலேயோ விஜயா என்று கிருஷ்ணர் உரைத்தருளி, நீ கூறிய சபதம் சத்துருக்களுக்கேயல்லாமல் சகோதரவிஷயத்தில் அல்ல என்றபோது, காண்டீபன் சுவாமியை வணங்கி, தமயனை யெதிர்த்துப்பேசிய வார்த்தையால் வந்த பாவமும் நான் கொண்டிருந்த சபதமும் பழுதுபடாமல் இரட்சிக்க வேணுமென்றான். சவ்யசாசி கேளாய், மூத்தோரை நீஇகழ்ந்ததே கொலைக்குச் சமானமாயிற்று, இதுசாஸ்திரத்தில் விளங்கும் பெரியசுருதி. இஃதுண்மையென்று உந்திபூத்தோனுரைத்தார். விஜயன் தருமரை மன்னிப்புக்கேட்டபோது அவர் மாறுத்தரஞ் சொல்லாமல் தவஞ்செய்யப் போகிறேனென்று வெளிப்பட்டார். நரநாராயணரிருவரும் விரைவிலோடி அவர்பாதம்பணிந்து மறுபடியும் அழைத்துவந்து சமாதானஞ்செய்து நீர் இப்போது எங்களுக்கு விடைகொடுத்தனுப்புவீராகில், நிமைப்போதில் கர்ணனுயிரைக் கொண்டுவருகிறோமென்றார்கள். தர்மராசன் அவர்களை செயம்பெற்றுவரும்படி ஆசீர்வதித்தனுப்பினர். இருவரும் யுத்தமுனைக்குவந்தபோது ஸ்ரீகிருஷ்ணரானவர் அர்ச்சுனனை நோக்கி இதோ எதிர்நிற்குங் கர்ணன் இன்றையயுத்தத்தில் நம்மெல்லோரையும் வென்று துரியோதனனுக்குப் பட்டங்கட்ட நினைத்திருக்கிறான், அவனைத் தப்பவிடாமல் போர்முனைந்து சங்கரிக்கவேண்டும், இவ்வளவு தீமைக்கும் இவனே, கொடுமையை மறந்திடாதே யென்று சொல்லித் தேரைச் செலுத்தினர். மார்க்கத்தில் பீமன் எதிர்ப்பட்டு தருமருடைய க்ஷேமத்தை வினவினன். சுகசெய்திகேட்ட பீமனனவன், நகுலசகாதேவரையும் உத்தமோசனையும் உதாரமனுவையும் கூட்டிக்கொண்டு கர்ணனுக் கெதிரிற்போய், சண்டையிட்டு இருவரும் முண்டிநின்று ஒருவருக்கொருவர் சளையாமல் போர்கொடுத்து, அதனால் கர்ணன்படைகள் அதமாகிப் பின்னடைந்தன.

துச்சாதனன் சண்டை.

இந்தச்சமயத்தில் துச்சாதனனும் அவன் தம்பிமாரும் பீமசேனனுக்கு நேர்புகுந்து அமரமாடிவரும்போது, பீமன் துச்சாதனனைப்பார்த்து, துரோபதையின் கூந்தல் முடிக்கிறநாள் இன்றே நேர்ந்தது என்று வீரவாதங்கூறி, அஸ்திரங்களைவிட்டு அவனை நோகச்செய்தான். பீமன் துச்சாதனனை நிந்தித்த வாசகங்களைக்கேட்ட அவன் தம்பிமார் விசித்திரவீரன், விசித்திரபாகு, விசித்திரன், விநோதன், அகண்டதரன், விஷயன், ஆகண்டிதன், சுசிநாதன், சுகிர்தன், போரங்கன் இப்பதின்மரும் கோபங்கொண்டு பீமன்பேரில் பாணங்களை ஏவினர்கள். அவன் அவைகளைக்கண்டித்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருகணைவிட்டுப் பதின்மரையுங்கொன்

றுன். இதுகண்டதுச்சாதனன் பீமனைப்பின்னும்விடாமல் முனைந்துபோர் கொடுத்து பீமன் தேரைப்போக்கினன். பீமன் எதிரிதேரை அதமாக்கி இருவரும் நெடுநேரம் மல்லயுத்தம் புரிந்து, துச்சாதனன் களைத்தபோது பீமன் அவனைப் பன்றிக்குட்டிபோல் இருகால்கைகளையும் பற்றித்தூக்கி துரியோதனனும் கர்ணனும் நின்ற இடத்தில் கொண்டுபோய்க் காண்பித்து அவன்முகத்தில் ஒரு அறையறைந்து இவனை இப்போது கொல்லப் போகிறேன், உங்களுக்குச் சமர்த்து உண்டானல் மீட்டுக்கொள்ளுங்கள் என்று அறைகூவினன். கர்ணன் முதலிய வீரர்கள் துச்சாதனனைக்காத்து மீட்டுக்கொள்ள வகைபார்த்துங் கூடாமற்போய்விட்டது. பீமராஜன் துச்சாதனன் தலைமேல் ஒருகுத்து வைத்தான் அதினல் அவன் தலை சப்பையாய் நெருங்கிப்போயிற்று. அவனைக்கசக்கி அவனை பூமியில் அறைந்து அவன் வயிற்றைப்பீறி இரத்தம்பெருகின உடலைத்தூக்கித் தன்மீதுபோட்டுக்கொண்டு படைக்கூட்டங்களிலே புகுந்து புகுந்து அவன் அங்கத்தைக் காண்பித்து, தண்ணீர் விடாய்தீர்க்க நினைத்து அவன்குருதியைப் பருகப் போனன். அப்போது ஸ்ரீகிருஷ்ணனனவர் அவனை அணுகி இரத்தத்தைக் குடிக்கவேண்டாமென்று தடுத்தார், தான்செய்த சபதம் அபலமாகுமே யென்று பீமன்மறுத்தபோது, இரத்தத்தை வாயில்கொப்பளித்து உமிழ்ந்துவிடென்று கற்பிக்க, அதுபோல் பீமன் உமிழ்ந்துவிட்டு பார்த்தாரெல்லாம் பயங்கரமுறும்படி ருத்திரமூர்த்திபோல் கூத்தாடித்திரிந்தான். வீராவேசமான அச்சமயத்தில் ஸ்ரீகிருஷ்ணர் தேவரானபடியால் அவனையணுகிப்பேசிவந்தார், மற்றொருவராயிருந்தால் முடியாதென்றறிக. கர்ணனுக்கு சாரத்தியஞ்செய்யும் சல்லியராஜன், துச்சாதனனைக் காக்காமல் வெறுங்கைவீணனைப்போல் ஒதுங்கிநின்றுயே, பீமனைவெல்லமாட்டாத நீவிஜயனை எப்படி செயிக்கப்போகிருய். இந்தபயித்தியக்கார துரியோதனன் உன்னை நம்பி புத்திரமித்திராதிகளுடன் பிராணனை இழக்கப்போகிருன். இனிக் காரியமில்லை, இன்னஞ் சண்டைசெய்கிறதில் என்ன பிரயோசனம், நாம் நாமே நம்முடைய கையாயுதங்களால் நம்முடைய கழுத்தையறுத்துக் கொண்டு மாய்ந்தால் நல்லதேயென்று பரிகாசித்த வசனத்தைக் கேட்டு கர்ணன் கழறலுற்றுன். கேளாய் சல்லியராஜனே ! துச்சாதனன் பீமனிடத்தில் அகப்பட்டுக்கொண்டானே யென்கிற அதிசயத்தினலே பிரமித்ததுபோல் இருந்தேனேயல்லாது, நான் பீமனுக்குப்பயந்து பின்வாங்கவில்லை என்று-கர்ணன் மொழிந்ததற்கு, சல்லியராஜன் நாமேன் வயிற்றெரிச்சலை விளைக்கவேண்டுமென்று சும்மாயிருந்து விட்டான். கர்ணராஜன் மீதிநின்ற சேனைகளைக் கூட்டிக்கொண்டு சண்டைக் கெத்தனித்தபோது, திருஷ்டத்தியும்நன் எதிர்த்துப் பார்த்துங் கூடாமற் பின்னிட்டபிறகு, வாயுபுத்திரனைத் தொடுத்துக்கொண்டான். இருவரும் ஈட்டுக்கீடாகப் போர்புரியும்போது, அசுவத்தாமனும் சஞ்சத்தகரரும் பீமனை வளைந்து மாட்டினர்கள். பீமன் அவர்களில் அநேகரைமாய்த்தான். கர்ணன் குமாரன் விடசேனன் நகுலனுடன் போர்தொடுத்து நகுலன்தேரை அழித்

தான். நகுலன் தேர்வேறேறி முடுக்கிப்பார்த்தும், விடசேனன் பாணத்தினால் தேரில் அயர்ந்து விழுந்தான்.

இதைப்பார்த்த பீமன் விடசேனன்மேல் திரும்பிப் போர்செய்து விடசேனனால் பலதடவை யடிபடுகிறபோது, விஜயன் விடசேனனையெதிர்த்து காண்டீபத்தினால்கொன்று யமபுரிக்கனுப்பிவிட்டான். விடசேனன் இறந்தசெய்தியைக் கர்ணராஜன்கேட்டு துக்கித்து மூர்ச்சித்தபோது சல்லியன் அவனைத்தேற்றினான். சண்டையிட்டுநின்ற அசுவத்தாமனை யுத்தம் எப்படி நடக்கிறதென்று துரியோதனன் கேட்ட காலையில், நாம்வேண்டிய மட்டும் சண்டையிட்டுப் பார்த்தும் தர்மராஜன் புகழ்பெற இருக்கின்ற இந்த அமர்க்களத்தில் நம்பெரியோரெல்லாம் விழுந்தார்கள். நம்படைகள் மிகவும் மெலிவடைந்திருக்கின்றன, இனி சண்டைசெய்வதிற் காரியமில்லை, சமாதானமாவதேகாரியமென்றான். பூமியை ஆளவேண்டுமென்று ஆசைகொண்டவனுக்கு சமாதானம் வேணுமேயல்லாது வீரசொற்கம் விரும்பிய எனக்குச் சமாதானம் வேண்டியதில்லை. போரைத்தொடர்ந்து நிற்பதே காரியமென்றான். துரியோதனராஜன் அப்பால் கர்ணனைப்போய்க்கண்டு உன்னைவிட தைரியசாலி ஒருவருமில்லை, விடசேனனைக்குறித்து மனங்கலங்காதேயென்று வணங்காமுடியன் தேறுதல் சொல்லியபோது, கர்ணன் கண்விழித்து கல்மலைகலங்கினாலும் என்சித்தங் கலங்குமோ துரியோதனமகாராஜனே! என்மகன் விடசேனன் தலையை என்கண்ணெதிரில் சிரச்சேதஞ்செய்த அர்ச்சுனன்தலையை ஒரேபாணத்தினால் துணிப்பேன் என்றுகூறி, சாரதி மத்திரதேசாதிபதியைப் பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறான். கேளும் சல்லியபூபதியே! இன்றையதினம் அஸ்தமிப்பதற்குள்ளாக அர்ச்சுனன் தலையை விண்ணுலகஞ் சேர்க்கிறேன். இந்தவேளையில் உன்கைவல்லமையை நான்பார்க்கவேண்டும், விசாலமாகிய நமதுரதத்தை நடத்தென்றான். ஐயா அங்கர்கோனே பூமி அதிருகிறது, அநேக துற்சகுனங் காண்கிறது, இன்றையப்பொழுதை உபாயமாய்ப் போக்கிவிட்டு நீ உயிர்தப்பி நாளையதினத்தில் போர்புரிவாயாகில், இந்த அர்ச்சுனனை செயித்து சுயோதனனுக்கு மகுடமுஞ் சூட்டிவைப்பாய், என்பேச்சைத் தள்ளாதே, இன்றைக்கு நீ எப்படியும் எதிரிகையால் பட்டுப்போவாய் என்றான். அந்த வார்த்தையை கர்ணன் கேட்டுக் கலீரென்று நகைத்து என்னுடைய நாகாஸ்திரத்தை விடுப்பேனாகில், அவன்தலைதப்புமோ உன் சொல்லைக்கேட்டு நான் திரும்பப்போகிறதில்லை, உமது உத்தியோகக்கடமைப்படி விஜயனுக்கெதிரில் தேரைச் செலுத்தென்று ஆக்கியாபித்தான். அதைக்கேட்ட சல்லியன் மனஞ்சலித்து இவ்வுலகத்தை தருமராசன் ஏகச்சக்கிராதிபதியாய் ஆளும்படியான நாள் சமீபித்ததென்று உள்ளத்தில் நினைத்து, வினைப்பயன்படி முடியுமென்று கனைத்து கடமைப்படி தேரை விரைவிற் செலுத்தினான். அங்கதேசாதிபன் விஜயனுடன்போர்தொடங்கி அமராடும்போது இருபக்கத்திலும் அநேகஞ் சனங்கள் மாண்டன. ஆகாயத்தில் வேடிக்கை பார்த்து நின்ற தேவர்களில் பிரமாவானவர்,

இந்த யுத்தத்தை நிறுத்தி சமாதானப் படுத்தலாமாவென்று சிவபிரானைக் கேட்டார். ஆகாயத்தில் எறிந்தகல் பூமியில்விழாமல், அந்தக்கல்லை மேற் செல்லும்படி தவருது நடத்துவாருண்டாகில் அப்போதிந்த யுத்தத்தை நிறுத்திச் சமாதானஞ்செய்வது சாத்தியமாகுமோ அசாத்தியமாகுமோ அறியோம், நீர் கேட்பது அத்தியத்புதம். நம்மிலொருவர் நடத்தப்போயிருக்க இந்தப்போர் எப்படி நிற்குமென்றார். தேவேந்திரன் பரமனைநோக்கி இப்போது எதிரெதிர் சமரமாடும் கர்ணன் விஜயன் இருவரில் யாருக்கு செயம் யாருக்கு அபசெயம் என்று வினவ; புரந்தரனே கேளாய்! விஜயனுக்கு யாதொரு இடரும் துன்பமுங் கிட்டாதிருக்கப் பூர்வம் நாம் நல்லவரம் அளித்திருக்கிறோம், மேலும் நாரணன் காப்பாயிருக்கிறார், அதினால் அர்ச்சுனனே செயம்பெறுவான். கர்ணன் ஆவிபோய் அரிவாசுதேவனுடைய அருட்பார்வையினால் நற்கதி புகுவானென்றார். அப்போது சதாஸ்து சதாஸ்து என்று இந்திரன் முதலிய தேவர்கள் ஆசிர்வதித்து விஜயன் தேர்மீது புஷ்பங்களைப் பொழிந்தனர்.

இப்பால் கர்ணனும் அர்ச்சுனனும் போரை நடாத்துகையில், அசுவத்தாமன் கிருபர் கிருதபன்மன் முதலியோரும் அர்ச்சுனனை யெதிர்த்து அஸ்திரப்பிரயோகம் பண்ணினார்கள். அர்ச்சுனன் விட்ட கணைகளினால் அவர்கள் பின்னடைந்தபோது, கர்ணனவன் எதிரிபடைகளை கணைகளால் முடுக்கியடித்து மாய்த்தான். அதனால் இறந்தசேனைகளுக்குக்கணக்கில்லை. அங்கதேசாதிபன் கோபங்கொண்டு சூரியன் தனக்குக் கொடுத்திருந்த பராபரமென்னும் பாரிய வலம்புரிச்சங்கத்தை யெடுத்துப் பூரித்து அருச்சுனன் பொழிந்த வடிக்கணைகளுக்குப் பதில்விடுத்துக் கொய்தான். அர்ச்சுனன் தன் தேவதத்தத்தை முழக்கி நாகாஸ்திரங்களை விட்டுக் கர்ணனை உபத்திரவித்தபோது, கர்ணன் அதுகளைத் தன்பாணங்களால்துண்டித்து, காற்றின் கணையை யேவினான். அர்ச்சுனன் அதனைத் தறித்துவிட்டான். விஜயன் மறுபடியும் தேவேந்திரன் கொடுத்த இந்திராஸ்திரத்தைப் பிரயோகிக்க, கர்ணன் சூரியாஸ்திரத்தினால் அதை அதஞ்செய்து, இருவரும் சளையாமல் போர்புரிந்து நிற்கையில், பீமன் ஓடிவந்து அர்ச்சுனனைப்பார்த்து மும்மூர்த்திகளாலுஞ் செயிக்கப்படாத காலகேயநிவாத கவசர்களை வென்ற நீ இந்தக்கர்ணன்பேரில் நிமிர்ந்தவாளிகள் தொடுத்து அவனைக்கொல்ல நினைக்காமல் உனக்கு ஈட்டுக்கீடாக அவனை நிறுத்திக் கொண்டிருக்கிறாயே, நான் கதாயுதங்கொண்டு இவன் தலையை நிமிஷத்தில் வாங்கிப்போடுவேன், அப்படியானால் உன்சபதங் கெடுமேயென்று ஐயப்படுகிறேன், தம்பீஎன்னசொல்லுகிறாய், உனக்குச்சாரதியமைந்த மாயன் கர்ணனுக்கு ஒடுங்கியிருக்கிறார்போற் காண்கிறது, அக்கறைக்காரன் எவனோஅவன் தன்காரியத்தைத்தானே நிறைவேற்றிக்கொள்ளவேணுமேயல்லாது, ஒருவர்ஏவவேணுமென்பதில்லையே; இப்போதே முனைந்துகர்ணனை வீழ்த்திவிடென்றான் பீமன். விஜயன் அதற்கு ஒப்பி பிரமாஸ்திரத்தைப் பூசித்து கர்ணன்மீது விட்டான். கர்ணன் தன்னிடத்தில் இருந்த பிரபைக் கணையை விட்டு அதைத்தகைந்து போட்டான்.

நாகாஸ்திரப் பிரயோகம்.

கர்ணனவன் கிரீடியைக் கொல்லுகிறதென்று மனசில் உறுதிபண்ணித் தான் வளர்த்துவந்த நாகாஸ்திரத்தை எடுத்து அர்ச்சுனன் கழுத்துக்குநேராய் லக்ஷியம்வைத்து விடப்போகிறதறுவாயில், சாரதி சல்லியன், அவசரப்பட்டு அவன் தலைக்கு நேராய் லக்ஷியம் வையாதே, அவன் மார்புக்கு நேராய் லக்ஷியம் வைத்துவிடு, ஒருவேளை மாயவன் யாதேனுந் தந்திரஞ்செய்தாலும் மார்புக்கு பிடித்த லக்ஷியம் தப்பினாலும் தலைக்காவது பிடிக்கும் என்று யோசனை சொல்லியும், வினைவசத்தினால் உணராமல், தான்பிடித்தபடியே கழுத்துக்கு லக்ஷியமேகொண்டு நாகாஸ்திரத்தை விட்டான். விஜயன் தப்பமாட்டானென்று துரியோதனன் படைகள் சந்தோஷித்துக்கொண்டிருக்கையில், தருமர் முதலானோர் எப்படியாகுமோவென்று வருந்திக்கொண்டிருந்தார்கள்.

அப்போது அரிவாசுதேவன் தான் நடத்துந்தேரை ஒரு பெருவிரலால் ஊன்றி அழுத்தினமாத்திரம் அது பனிரண்டு அங்குலம் பூமியில் புதைந்தது. கழுத்துக்கு நேராய்ப் புறப்பட்ட அந்த நாகாஸ்திரமானது விஜயன் தரித்திருந்த கிரீடத்தை யிடறிவிட்டு நேரேபறந்துபோய் விட்டது. விஜயன் தன்வில்லில் தொடுத்திருந்த பாணத்தைப் பின்புறமாக நாகத்தின்மேல் விடுத்தான். அது புறப்பட்டு நாகத்தை இருபிளப்பாக்கிவிடவே, பிளவுண்ட ஐந்தலைநாகம் கர்ணனிடந் திரும்பிப்போய் நீர் என்னைவிட்ட அவசரத்தினாலேயோ, அல்லது என்புத்தி போதாமையினாலேயோ லக்ஷியம் தப்பிப்போனேன், இன்னமொருவிசை என்னை விடுப்பீராகில், நான் அவனைத் தப்பாமல் கொல்லுகிறேன் என்று அநேகமாய் வேண்டிக்கேட்டும், சூராள் விட்ட பாணம் ஒருதடவை லக்ஷியந் தப்பினால் அதை மறுபடியும் விடுவதில்லையென்பது என்சபதமானதால் நான் செத்தாலும் பிழைத்தாலும் உன்னை இனிப்பிரயோகிக்கமாட்டேனென்றான். ஸ்ரீ கண்ணனவர் கிரீடியின் பூமியில்விழுந்த முடியையெடுத்து அகண்ட சாம்பிராச்சியமும் நீயேயாளக்கடவாயென்று ஆசீர்வதித்து முடிசூட்டினார். இஃதிப்படியிருக்க சல்லியராசன் விசனப்பட்டு என்வார்த்தைகளை நீ கேளாமல் அவலமாக்கினபடியால் இனி உனக்கு நான் சாரத்தியஞ் செய்யமாட்டேன் என்று பூமியிற் குதித்து அப்பாலகன்றான்.

அங்கதேசாதிபன் தன் பழையசாரதியைத் தேர்மீதேற்றிக்கொண்டு விஜயனை யெதிர்த்தபோது, விஜயன் அவனைப்பார்த்து ஆசாரியன் இட்ட சாபம் இப்போது உன்னைவந்துசூழ்ந்து உன்னை மோசஞ்செய்து உன்கழுத்தை யறுக்கப்போகிறதே யென்றுசொல்லி பாணங்களைவிட்டான். இந்த வார்த்தை சொல்லி முடியுமுன்னே கர்ணன்தேர் பூமியில் புதைந்தது. சாரதி பூமியிற் குதித்து தேரைத்தூக்கிவிடப் பார்த்துங் கூடாமல், அங்கர்பிரான் பூமியிற் குதித்து தேர்ச்சக்கரத்தைக் கிளப்பிவிடுஞ் சமயத்தில், விஜயன் அநேகம் பாணங்களைத்தொடுத்து அவன் தேகத்தைத் தொளைத்தான். அர்ச்சுனனுடைய தயையற்ற முகத்தைப்பார்த்து, அப்பா அர்ச்

சுனே! யானைக்கும் அடிசறுக்கு மென்கிறபடிக்கே எப்பேர்ப்பட்ட சூரனுக்கும் அபாயம் நேரிடலாம், நிராயுதன்பேரில் நீ பாணம் விடுவது நியாயமா என்று விதிகளைக்கூறி உடனே வேறுதேர் ஏறிக்கொண்டு, தன் படைமன்னரைப்பார்த்து, தர்மமே சத்தென்று நம்பியிருந்த என்னைப்போல் நீங்கள் ஏமாறுதீர்கள் அதர்மமே முன்னிற்கிறதென்று தர்மத்தை வெறுத்து நொந்துகொண்டான்.

அப்போது கண்ணனவர் அங்கர்கோமானைப்பார்த்து, தர்மத்துக்கு ஒருக்காலும் குறைவில்லை, தர்மம் தலைகாக்குமென்பது சத்தியமே, நீ ஏன் தர்மத்தை நிந்திக்கிறாய்? அதர்மம் ஆறுபங்கும் தருமம் ஒருபங்குமா யிருக்குமாகில், இங்கே தருமம் என்னசெய்யமாட்டும், நீ சத்துருக்களை வெல்லத்தத்தக்க வல்லவன்தான், உன் தருமத்துக்கு ஒருக்காலும் குறைவில்லை, நீ எப்படியும் வெல்லுவாய், வெற்றிகொண்டால் அந்தப்பலனை அனுபவிக்க துரியோதனன் காத்துக்கொண்டிருக்கிறான், வெற்றியின் லாபத்தை அனுபவிக்கப்போகிற அவன்தேடிக்கொண்ட பாவமானது அவனையுங்கெடுத்து அவனுக்குத் துணைவந்த உன்போலியரையுங் கெடுக்கிறது, இதற்குயார் என்னசெய்யலாம், அப்பனே கர்மஞ்செய்தவன் கர்மத்தை அனுபவிப்பான். தர்மஞ்செய்தவன் தர்மத்தை அனுபவிப்பான். தர்மத்தை நிந்தித்துக் குறைவாகப்பேசி வெகுபேருடைய மனம் ரோசும்படி செய்யாதே, உலகவிரோதங் கூறாதே யென்று சுவாமி சொல்ல, கர்ணராசன் இஃதுண்மையென்று உட்கொண்டு தர்மத்தின்பேரில் தான்கொண்ட ஆத்திரந்தணிந்து, வில்லில் அநேகமாயிரம் பாணங்களைப்பூட்டி மூடுபனிபோல் கிரீடியின்மேல் தூவினான். அர்ச்சுனன் பேச்சுமெத்தவும் விலவிலத்துப் போச்சுது. பார்த்தசாரதிக்கும் மயிர்க்கூச்சு மேலிட்டது. பாண்டவசேனைகள் பெருமூச்சுவிட்டு காச்சுமூச்சென்று கதறுங்காலையில், கண்ணனவர் அர்ச்சுனனை தயிரியப்படுத்தி அவன் கணைகளை ஆசிர்வதித்து அவனை முடுக்கிவிட்டார். விஜயன் விட்டகணைகள் மேலிட்டுவந்து கர்ணனைத்தாக்கி அவன் எண்ணிய எண்ணத்தைமறந்துகளைக்கச்செய்து அவன் அதினால் அயர்ந்து போகியும், அவன் விற்சாதுரியமானது அவன் கையிலிருந்து அம்புகளை வெளிப்பட்டுக்கொண்டே யிருக்கச்செய்ததாம். அர்ச்சுனன் அவன்மீது கணைகளைத் தொடுக்கத் தொடுக்க, அது ஒன்றும் பயன்படாமற் போனதைப்பற்றி தருமதேவதை அவனுக்குத் துணைநின்று எதிரி பாணங்களை கவுளீகரணம் பண்ணுகிறதென்று ஸ்ரீகிருஷ்ணர் உணர்ந்து, விஜயனைப்பார்த்துக்கண்ணனுக்கு தர்மதேவதை துணைப்பட்டு நிற்பதினாலே உன் பாணங்கள் அவலமாகிவிடுகிறது, இனி விடாதே நிறுத்து, நான்போய் அறிந்துவருகிறேனென்று ரதத்தைவிட்டிழிந்து பிரம்மதேஜஸ் பொருந்திய வேதியவுருவங்கொண்டு அசைவற்றிருக்கிற கர்ணனிடம் வந்து, ஏழைகளுக்கு இஷ்டப்பட்டவைகளையெல்லாம் தடையறக்கொடுத்து இன்னமும் வேண்டுவதுண்டோவென்று கேட்குந்தாதா நீ என்று கேள்விப்பட்டேன், நானோ மகாமேருவண்டை தவஞ்

செய்பவன், தரித்திரமென்னும் வியாதியால் உழந்து நொந்தேன், உன் கீர்த்தியைக்கேட்டு இங்கோடிவந்தேன், நான் வந்ததற்கும் நீ நொந்து கிடப்பதற்கும் சரியாய் இருக்கிறது, நான்செய்தபாவம். இப்போது என் சிறுமை நீங்கும்படி உன்னாலியன்ற பொருள் ஏதாகிலும் ஒன்று கொடுத் தனுப்புமென்றார்.

கர்ணராசன் இதுவுஞ்சோதனைதானென்று நினைத்து, மெலிந்த இந்த தசையிலிருக்கிற நான் இப்போது தரத்தக்க பொருளைச் சொல்லுமென்று கேட்க, நான் மறையவனாகிய நாரணன், நீ அடைந்திருக்கும் புண்ணியங்களையெல்லாம் கொடுவென்று பிரார்த்தித்தார். கர்ணன் மகிழ்ந்து நல்லவேளை, வேறுகாரியத்தைக் கேளாமல் என்கைவசமாயிருந்த ஆபத் தனமாகிய புண்ணியத்தைக் கேட்டீரே இதுவே என்பாக்கியம். ஆனால் வேண்டியவர்க்கு வேண்டியது கொடுத்த என் பக்குவதசையில் வராமற் போனீர். நான் பாவியானேன், நான்செய்த தருமம் புண்ணியம் அனைத் தையும் இதோ தருகிறேன் பெற்றுக்கொள்ளும், சுவாமீ! உம்முடை சொரூ பத்தைப் பார்க்கும்போது சதுமுகனும் நிகராகமாட்டான்போற் காண் கிறது, திருவடி வருந்திவந்த தேவரீருக்கு நான்கொடுக்கிற இந்தச் சொற் பமாகிய இந்தப்புண்ணியம் உமக்கொரு விஷயமோ வென்றான். அவ்வே தியன் களித்து, கர்ணமகாராஜனே! நீ நிதானமாயிருந்து கொடுப்பாயா கில், நான் பெற்றுக்கொள்ளலாம், உலகம் என்னை நிந்தியாது, நீ உடல் வருந்தி யிருக்கிற இச்சமயத்தில் நான் பெறுவேனாகில் என்னமோ ஏமா த்தி வாங்கிப்போட்டான் என்று என்னை இழிவாகபேசுவார்கள். நீ நல்ல ஞாபகத்துடன் எனக்குக் கொடுக்கப்போகிற உன் புண்ணியத்தை உன் திரிகரண சுத்தியாய் தத்தஞ்செய்தளிப்பாயாகில், உனக்கும் பலனுண்டு எனக்குஞ் சொந்தமாகும் என்றார். தாரைவார்த்துக்கொடுக்க தண்ணீர் இல்லாமையால தன்பிராணன் சதமல்லவென்கிற ஐயத்தினால், தன்மீது தைத்திருந்த ஒருபாணத்தைப் பிடுங்கிவிட்டு அதின் வழியாய் வந்த உதி ரத்தைப்பிடித்து நான்பண்ணிய புண்ணியத்தையெல்லாம்மனப்பூர்வமாய் தத்தஞ்செய்தேன் என்று தாரைவார்த்தான். அந்த உதிரத்தை தாரை நீராக உள்ளங்கையில் ஏந்தினார். மைத்துனனாகிய கர்ணன் சொன்ன வா ய்மையையெல்லாம் மெய்த்துணையாகிய கண்ணன் கேட்டு அகமகிழ்ந்து தனது கமலமலர்களாகிய இருகரங்களினாலும் அவனைத்தழுவி மார்போ டணைத்து செங்கமலம்போன்ற கண்களால் கருணைநீர் சொரிந்து, அவன் தேகத்தை முழுவதும் நனைத்து முழுக்காட்டி, உத்தமக்கொடையாளனே! நீ எத்தனைபிறவி யெடுத்தாலும் அந்தப்பிறவிகடோறும் உன்னை அடுத்துக் கேட்பவர்களுக்கு இல்லையென்னாமல் கொடுக்கும்படியாகிய மனமும் அத ற்குத்தகுந்த செல்வமுந் தனமும் உண்டாகிச் சிலகாலம் சகலபோகங்களை யும் அனுபவித்து, முடிவில் முத்தியும் பெறுவையென்று அனுக்கிரகஞ் செய்தருளினார், மூவருமோருருவாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர். அப் போது தேவர்கள் புஷ்பமாரி பெய்தனர்.

கர்ணன் களைதெளிந்து கிருஷ்ணமூர்த்தியின் முகாரவிந்தத்தை உற்று தெரிசித்து, தருமர் முதலிய சகோதராளுடன் எதிர்த்துச் சண்டை செய்து துரியோதனனுக்காக செஞ்சோற்றுக்கடனைக் கழித்தேன். தேகியென்று கேட்ட இந்திரனுக்குக் கவசகுண்டலங்களை ஈய்ந்தேன், ஆத்துமலாபமாயிருந்த நல்வினைப்பயனை உமக்குத்தந்தேன். ஆருமற்ற ஒண்டியாகிய தமியேன் மாதவத்தால் வாழ்ந்த வாழ்வுக்கு மீந்தமிகுதி இதுவே சுவாமீ! எது எப்படி போனாலும் போகட்டும், நான் தேவரீரைத் தெரிசிக்கப்பெற்ற பாக்கியமே பாக்கியமென்றான். கர்ணமகாராஜனேகேள், தேவேந்திரனை விட்டு உன்னுடைய கவசகுண்டலங்களை வாங்கச்செய்தவனும் குந்திதேவியாகிய உன் தாயாரைக்கொண்டு நாகாஸ்திரத்தை மறுபடி விடாமல் வரம்வாங்கச்சொன்னவனும் நான்தான். ஏனெனில் விசுவாசியாகிய உன்னிடத்தில் எனக்கும் என்னிடத்தில் உனக்கும் அன்பு மிகுந்த பரிபூர்ண கிருபை இருப்பதினால், சீக்கிரம் என்னிடத்திற்கு உன்னை வருவித்துக் கொள்ளும்பொருட்டு இவ்வளவு பிரயாசையெடுத்துக் கொண்டு மெத்தவேலை செய்தேன். இல்லாவிட்டால் உனக்கு இவ்வளவு பேறு கிடைக்கமாட்டாதென்று கூறி, உருமறைந்து திரும்பிப்போய் விஜயன் தேரில் சாரதிரூபமாய் விளங்கினார். அவர்யாரென்னில் எல்லாக் கடவுளரும் ஒன்றாகிய ஏகமயமானவர் என்றறிக. இப்பால் சூரியன் மேற்றிசையில் வீழுமுன்னே கர்ணனைக் கொல்லென்று சொல்ல, விஜயனானவன் சஞ்சரீகம் என்னும் அருமையான அஸ்திரத்தை யெடுத்துவிட்டான். அது கர்ணன் மார்பிலுருவி வெளிப்பட்டு விஜயனிடம் வந்தடங்கிற்று. கர்ணன் பூமியிற் சாய்ந்தமாத்திரத்தில், சற்றுநேரத்திற்கு முன்னே தன் தேர்மீது கண்ட காட்சிபோல் கருடவாகனாரூடராய்க் கண்டு வீரசொர்க்கமடைந்தான். சேனாதிபதி இறந்தானென்று துரியன்படைகள் கலங்கோடினார்கள்.

இச்செய்தி கேட்ட துரியோதனமகாராஜன் கர்ணன் விழுந்துகிடக்குமிடத்தில்வந்து மிகவும் பிரலாபித்தழுதான். அவன் படைமன்னவர்கள் அவனைத் தேற்றினார்கள். அவன் திடங்கொண்டு கர்ணன் தேகத்தை இருகரங்களாலும் தழுவி அவன் தனக்குச்செய்த நன்மைகளையும் அவன் சௌரியங்களையும் வெகுவாயெடுத்துரைத்து வருந்தியபின்னர், சகுனிமாமன் சொல்லிய ஆறுதல் தேறுதலான வாக்கியங்களால் தேறிப் பாடிவீடு போய்ச்சேர்ந்தான். ஸ்ரீகிருஷ்ணார்ச்சுனர் இருவரும் கர்ணன் இறந்த செய்தியைத் தருமருக்கு தெரியப்படுத்தினபோது, அவர் இருவரையும் ஆலிங்கனஞ்செய்து மிகுந்த களிப்படைந்தார். இங்கிப்படி நிற்க, கர்ணனிடத்தில் ஸ்ரீகிருஷ்ணர் புண்ணியத்தைக் கைப்பற்றி வந்தசமயத்தில், கர்ணனைக் கொல்லென்று விஜயனுக்குச் சொல்லிவிட்டு குந்திதேவி யிருக்கும் பாசறையில் விஜயனால் கர்ணன் மாண்டான் என்று ஆகாயவாணி சொல்வதுபோல் சத்தங்காட்டினார். இவ்வாக்கியங் கேட்ட குந்திதேவி ரணக்களம்ஓடிவந்து மார்பிலடித்துக்கொண்டு, என்மூத்தமகனே மகனே

யென்று கோவென்றலறி, இவனைப்பெற்ற வாலாரெல்லாஞ்சொல்லி அழு தாள். இதைப்பார்த்த தருமர் முதல் ஐவரும் மனங்கறுத்துச் சமீபத் தில் நிற்கும் மாதவனைப்பார்த்து, இதென்ன ஆச்சரியம், இதென்ன விந் தை, இமைப்போதில் சொல்லுமென்று இறைஞ்சிக்கேட்டார்கள். அப் போது ஸ்ரீகன்னனனவர், எனக்கென்ன தெரியும், நான் உங்களை விட் டுப் பிரியாதிருக்கையில் உங்களுக்குத் தெரிந்தளவுக்கு மிஞ்சி எனக்கென் ன அதிகந்தெரியுமென்றார். பீமனுக்குக் கோபம்வந்து கதையைத்தூக்கிக் கொண்டு, நீர் அறியாத ரகசியமுண்டோ நீலமேனியா, உள்ளபடி சொல் லுகிறையா அல்லது எங்களையெல்லாம் ஒருங்கே கொல்லுகிறையா, வந்த பாவம் வரட்டும் உன்னை ஒரே அடியாய் அடிக்கட்டுமாவென்று கதையை ச்சுழட்டினன். அப்பா பீமா! அடிக்காதே, நான் அறிந்தமாத்திரம் சொ ல்லுகிறேனென்று உண்மையை ஆதியோடந்தமாய் வெளியிட்டார்.

இதைக்கேட்ட பாண்டவர் ஐவரும் பூமியில் விழுந்து பிரலாபித்து, குந்திதேவியைப்பார்த்து கர்ணராஜன் பிறப்பு வளர்ப்பைக்குறித்து முன் னே தெரியப்படுத்தாமல் இத்தியாதிகாரியங்களுக்கு இடம்பண்ணிவைத் தாயே தாயேஎன்று நொந்துகொண்டார். குந்தியும் பாண்டவர்களும் கர் ணனைக்குறித்துப் புலம்புகிறதையெல்லாம் பாம்புக்கொடியோன் கேட்டு அநேகம் வெளிச்சங்களுடன் ரணக்களம்வந்துபார்த்து, ஐயையோ தெய் வமே இதென்ன சூது, நாடாண்டவனும் கர்ணன்தான் காடாண்டவனும் கர்ணன்தான், எங்கும் பாண்டவர்களாய் முடிந்ததே, நான் ஏன் உலகத் துக்கு விருதாவாய்ப்பழியானேன், கர்ணனுடன் பாரதஞ் சரியாய்ப்போ யிற்று, இனி என்னவென்று மனம்ரோசி துக்கமுடையவனகிப் பாசறை திரும்பினன். இவிடத்தில் குந்திதேவியாகிய தாயும் பாண்டவர்களும் மாயவனும்தேருமல் திகிலடைந்து வியாகுலத்தில் மூழ்கினவர்களாய்த் தங்கள் பாடிக்குப்புக்கனர். அவ்வேளையில்சஞ்சயன் துரியோதனைப்போ ய்க் கண்டான். ஒய் சஞ்சயனே இனி காரியமில்லை, என்னுடையக்ஷே மத்தை திரிதராஷ்டிரமகாராசனுக்கும் காந்தாரியம்மனுக்கும் சொல் லிப்போடென்று அனுப்ப, அப்படியே சஞ்சயன் அஸ்தினபுரம் வந்து கண்ணில்லா அரசனுக்கு அறிவித்தபோது, இனி புத்திரன் பிழைப்பது அரிதென்று பெருமூச்சு விட்டான். காந்தாரியம்மன் கண்கலக்கப்பட்டு அழுததுமன்றி, கர்ணன் மனைவி பொன்மாலையானவள் பாண்டவர்க்குத் தன் புருஷன் மூத்தவன் என்றும் குந்திக்குமுதற்புத்திரன்என்றும் கேள் விப்படவே தேகபரவசமடைந்து தெய்வமேயென்று பேச்சுமூச்சற்றிருந் தனள். இவர்கள் அனைவரும் படுந்துயரங்களை சஞ்சயன் தேற்றித் திரும் பவும் யுத்தகளம் வந்திருந்தான். நீதிவழுவா நெறிமுறைப்படி செங்கோல் செலுத்தும் ஜநமேஜயன் கேட்டு வைசம்பாயனரை தம்பதி சமேதமாய் பிரதக்ஷணஞ்செய்து, சகலபலங்களும் சம்பத்துக்களும் மனுஷனுக்கிருந் தாலும் தெய்வத்தின்பலம் அனுவத்தனை இல்லாமறபோமாகில் அபலம் அபலமே யென்கிற நிச்சயத்தை இப்போது தெரிந்துகொண்டேன், மேல் நடந்த சல்லியபர்வத்தின் கதையைச் சொல்லியருளவேண்டுமென்று மே லும் வினவ, வைசம்பாயனர் வகுக்கலுற்ருர்.

கர்ணபர்வம்-முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீ மகாபாரதம்.

ஒன்பதாவது

சல்லியபர்வம்.

விருத்தம்.

மீனுமைகோளநெடு நரசிங்கமாகியுளம் விரகாலளந்தகுறவாய்
ஆனுஞ்சீறுமழு வில்லுங்கொள்வெல்லுமுனை யலமுற்றசெங்கையவராய்
வானுடர்சென்றுதொழ மண்ணுடரைவரையும் வாழ்விக்கவந்தவடிவாய்
நானுவிதங்கொள்பரி யாளாகிநின்றருளும் நாராயணாயநமவே.

பதினெட்டாம்போர்ச்சருக்கம்.

சர்வ வல்லவராகிய ஸ்ரீ கிருஷ்ணருடைய செந்தாமரைத்தாளினை வணங்கி ஸ்ரீவேதவியாசர் திருவடிகளைச் சிந்தையில் இருத்திப் பதினெட்டாம்நாட் சல்லியபர்வத்தைச் சொல்லுகிறேன், கேளும் ஜநமேஜயராஜனேயென்று வைசம்பாயனர் தொடங்குகின்றார். பொழுதுவிடிந்து சூரியனுதித்தபின்னர், திரிதராஷ்டிரபுத்திரன் சுயோதனன் இராத்திரி முழுதும் நித்திரையில்லாமல் கர்ணனைக்குறித்து துக்கித்திருந்தவன் எழுந்து நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு சபைக்கு வந்தான். அப்போது கிருபாசாரியர் துரியோதனனைப்பார்த்து இதுவரையிலும் நடந்த சண்டை விந்தைகளைப் பார்த்தாயே அருமையாகிய படைமன்னரெல்லாம் மாண்டொழிந்தார்களே, இனியாகிலும் தாயாதிகளுடன் இம்மட்டில் சமாதானப்பட்டுப் போவாயாகில் மிகுதியும் நல்லது, அவர்களையும் நான் சமாதானத்துக்கு வரப்பண்ணுகிறேன் என்று சொல்ல, துரியோதனன் கோபித்து கையைப் பூமியிலறைந்து எல்லாம் அறிந்த நீர் என்னவார்த்தை சொன்னீர், பாண்டவர்களுடன் நான் ஒருபோதும் சமாதானமாய் வாழேன், அமரே நடப்பதுமுக்கியமென்றான். காலஞ்சென்றுபோன சேனாதிபதி கர்ணனுடைய இடத்துக்கு யாரைநேமிக்கலாமென்று, இராசன் பலரையும் யோசித்துப் பார்த்துக் கடைசியில் சல்லியராசன் தகுந்தவனென்று எண்ணி அவனை வரவழைத்து, பிரிய வசனங்களால் சேனாதிபதியாக ஏற்படும்படி உடன்படுத்தினான். அம்மத்திரதேசாதிபதி சல்லியன், படைகளைத் திரட்டிக்கொண்டு போர்க்களம் வந்து சுயோதனனை மத்தியில் நிறுத்தி, சர்வதோபத்திரமென்கிற வியூகங்கட்டி தனக்கு ஒருவரும் நிகரில்லையென்கிற வீரியங்கொண்டு யுத்தமுனையில் மதயானைபோல்

விளங்கினன். அங்கே பாண்டவர் பாசறையில் தங்கள் மூத்தசோதரன் கர்ணமகாராசன் தங்கள் கையினலே மாண்டதைக்குறித்து பலவிதத்தி லும் மனஸ்தாபப்பட்டுத் தாயாரைநொந்துகொண்டு தங்களுக்குள் தாங் களே ஆறித்தேறிக் காலையிலெழுந்து சேனைகளைக்கூட்டிக்கொண்டு திருஷ் டத்தியும்நனுடன் ரணக்களம் வந்து சேனைகளை விசித்திரயூகமாகத் தொ கைவகைசெய்து யுத்தசந்நத்தமாய் நிற்கும்போது, தருமராஜன் கிருஷ் ணரைப்பார்த்து, நம்முடை படைகள் மிகவுங்குறைந்திருக்கின்றமையால் பெருத்த எதிரிகளின் பலத்தை எப்படி செயிக்கலாமென்று வினவினர். கர்ணன் முதலிய மகாவீரர்களை முடித்த உன்தம்பிமார் உனக்குத் துணை யிருக்கும்போது, மற்றவர்களைமாய்ப்பது பெரிதல்ல, வெகுசீக்கிரத்தில் நீரே இலேசாக சல்லியனைக் கொன்றுபோடுவீர், அர்ச்சுனன் அசுவத்தா மனை செயிப்பான், சகாதேவன் சௌபலனை வெல்லுவான், நகுலராசன் சகுனிமுதலிய பலவான்களைக் கொல்லுவான், பீமசேனன் துரியோத னனை மலைவான், நீர் மத்திரனை யெதிர்த்து அவனுயிரை வாங்கக்கடவீரெ ன்று அருள்வாக்களித்தார். ஸ்ரீகண்ணனல் அருள்பெற்ற பாண்டவர்கள் போர்தொடங்கி, சல்லியராசனும் தருமராசனும் அமர் நடத்தினர்கள். இருவரும் எய்யப்பட்ட பாணங்களினல் இருபடைகளிலும் அநேகர் மாண்டுபோயினர். சேனபதி மத்திரராசன் கடுகடுத்து தருமருடைய கொடி குதிரை தேர்களை அழித்தான். அவர் எதிரியின் பாணத்தினல் அடிபட்டுநொந்து பதாதியாகி நின்ருர். அதைப்பார்த்த பீமசேனன் சல் லியன் தேரைப்போக்கி அவன் தேகத்தையும் அஸ்திரங்களினல் நோக் காடாக்கினபோது, சேனபதி வேறுதேரேறி, பீமனுடைய உடம்பில் கூரிய கணைகளால் உபாதைகளை யுண்டுபண்ணினன். பீமன்கோபப்பட்டு கெதையைக்கொண்டு சல்லியன் தேரைநொறுக்கி அவனைப் பாதசாரியாக் கிவிடவே சல்லியன் அலுத்து நிற்பது கண்ட வாயுபுத்திரன், ரணக்களத் தில்வந்த நீ தப்பிப்பிழைக்கலாமென்று கருதாதே, துரியோதனன் தரு மர்பேரால்வைத்த தண்ணீர்ப்பந்தலில் இளைப்பாறின தோஷம் உன் ஆவி யிழக்கும்படியாயிற்றே, இனித்தேருயென்று வீம்புபேசி அநேகம் பாண ங்களைவிடுத்து அவன்படைகளை நாசஞ்செய்தான். சல்லியன் பீமன்மீது கோபப்பட்டு இனி என்வல்லமையைப் பாரென்று முண்டியெதிர்த்துஒரு தோமராயுதத்தை பீமன் தோளில் அடிபடமோதினன். அது பீமன்மீது பட்டவுடனே ஒருநிமிஷமாத்திரம் அசைவற்றுத் தன்னைமறந்து நின்ருன். அத்தருவாயில் சல்லியன் வேறுதேரேறி எதிரி படைகளை அநேகமநேக மாய் மாய்த்தான்.

கீர்ணன் புத்திரனுகிய சித்திரசேனன் சூரியவர்மன் இருவரும் தந் தை இறந்த குறைநீங்கும்படி வீராதிவீரரையெல்லாம் போக்கடித்து வரு ம்போது, நகுலராசன் அவர்களை அஸ்திரங்களால் அடித்து அவர்கள் தந்தை அடைந்த கெதியில் அவர்களையும் போக்கிவிட்டான். சகுனியின் மைந்தர்களாகிய உலூகன் சைந்தவன் இருவரும் நகுலனுடன் எதிர்த்து

தேர் குதிரைகள் அழிந்து பின்னிட்டோடினர்கள். சஞ்சத்தகாளும் சாளுவர் முதலிய தரணிபாலரும் ஒரேமுகமாய்த்திரும்பி அர்ச்சுனன்மீது எதிர்த்தார்கள். விஜயன் தொடுத்த பாணங்களினல் எதிரிபடைகளில் மாண்டவர்களுக்குக் கணக்கில்லை. அச்சமயத்தில் சல்லியன் தருமரைவளைத்துச் சண்டையிட்டான். அவன்விட்ட அஸ்திரங்களைத் தகர்த்து இவர் அவனை மனங்கலங்க அடித்தார். பீமன்மத்திரனுடன் விற்போர்செய்தான். சல்லியன், பீமன் தேகமெல்லாம் தொளைகள் படும்படியாய் அஸ்திரங்களால் தாக்கினன். இருவருஞ்செய்த போர்த்திறத்தை இன்னபடியென்று வாய்விட்டுச்சொல்ல முடியாது. நகுலசகாதேவர் இருவரும் சல்லியனை யெதிர்த்தார்கள். அவன்விட்ட கணைகளினலே வீராதிவீரருடைய மெய்யெல்லாம் வருந்தி கைவில்லுகளும்போய் நிராயுதராயினர்கள். தம்பிமார் அடைந்த தளர்வை பீமன்கண்டு சல்லியனை யெதிர்த்துப் பத்துப்பாணங்களைவிட்டு மத்திரனேறியதேரையும் அவன்சாரதி பாகுவையுங் கீழேவிழும்படி யடித்தான். சல்லியன் வேறுதேரேறி பீமனைவளைப்பதற்கு முன்னமே பீமன் பூமியிற்குதித்து துரியோதனன் படைகளின் தேர் குதிரை பதாதிகளைத் தூக்கித்தூக்கி யெறிந்து கொன்று குவித்துப்போட்டான். இதுகண்ட அசுவத்தாமன் எதிர்த்துவந்தபோது, தருமர் முதலியபேர்கள் அவனுடன் அமர்கொடுத்துப் போர்செய்து, அர்ச்சுனன்விட்டபாணங்களினல் அவன் களைத்துப் பின்போய் பூமியில் நின்றவன், கும்பகெதையையெடுத்து அர்ச்சுனன்மீது விட்டான். விஜயன் விட்ட கணையினல் அந்த கதை இருபிளப்பாகி பூமியில் விழுந்து அபலமாயிற்று. அதினல் அசுவனுக்கு அதிககோபம் பிறந்து எஃகாயுதத்தை யெடுத்து சாடினன், கிரீடியானவன் உச்சிதக்கணையையேவி எஃகாயுதத்தை யுருகிவிழும்படி தாக்கினன். இதைப்பார்த்த அசுவத்தாமன், இவன் ராக்ஷசனுயிருக்கிமுன் இவனை வெல்லமுடியாதென ஒட்டம்பிடித்தான். மருமகனுகிய அசுவத்தாமன் இளைத்தோடுவதுகண்ட கிருபாசாரியர், பார்த்தனை யெதிர்த்துவந்து பகைத்துக் கடுமையானவாளிகளைத்தொடுத்தனர். விஜயன் கார்வியாளமென்னுங் கருங்கணைகளைச்செலுத்தி, கிருபர் கைவில்லையும் ஏறிய ரதத்தையும் நொடிக்குள் பொடிசெய்தான். ஆசாரியர் தாளாமல் பின்னிட்டார். அதுகாலையில் கிருதபன்மனும் கிருதவீரியனும் அவர்களுடைய தம்பிமாரும் யாதவகுமாரரும் அர்ச்சுனனை வந்தெதிர்த்துக் கணக்கில்லா அஸ்திரவருஷங்களைப் பொழிந்தார்கள். அர்ச்சுனன் இருகண்ணுஞ் சிவந்துசீறித் தீமூட்டுங்கொடியபாணங்களை இடையருமல் விட்டு அவர்கள் தொடுத்தகணைகளை அதமாக்கி அநேகரை மாய்த்ததினல், எதிரிட்ட மன்னர்மன்னவரெல்லாரும் சூரியனைக்கண்ட பனியேயாயினர்கள். அதிலே கிருதபன்மன்மாத்திரம் மீந்துநின்றவன் தன் ஆங்காரம் தாளாமல் விஜயனுடன் மறுபடியும் போரிட்டு மாய்ந்துபோனன்.

விஜயகாண்டீபன், தர்மராசன் முதலியோர் நிற்குமிடந் திரும்பி எல்லோரும் ஏகோபித்துச் சல்லியனை வளைந்தனர். சல்லியன் பல்லாயிரஞ்

13

சரங்களைவிடுத்து சாத்தகியின் தேரையுங் கைவில்லையும் நாசமாக்கி நகுலனை ஒருகணையினால் நோக்காடாக்கினான், பரிந்துவந்த சகாதேவனை மற்றொருகணையால் மாட்டி நோகடிக்கவே இருவரும் பின்னிட்டார்கள். சல்லியராசன் மூன்று பாணங்களினால் பற்குனனுடைய தோளும் மார்புந் துன்புறும்படி புண்படுத்தி அவன் சார்பில்நின்ற தருமருடையநெற்றியில் நாலுகணைவிடுத்து இரத்தமோடும்படி செய்தான். இதைப்பார்த்த பீமன் கதாயுதங்கொண்டு சல்லியன் முடிமீது புடைக்கவே அந்தப் புடையால் சல்லியன் தேர்மீது சாய்ந்தான். அரவத்துவசன்பார்த்து விலவிலத்துபல பல மன்னரையுங் கூட்டிக்கொண்டு பீமனைவந்தெதிர்த்தான். இருவரும் ஈட்டுக்கீடாக நின்று சண்டைசெய்தபோது, வாயுகுமாரன் தன் கதையை யோங்கி மூச்சுத்தாங்கித் துரியனை ஓரடி அடித்தமாத்திரம், தலைவீங்கி மற்றெல்லார்க்கு முன்னேதானே யோட்டம்பிடித்தான். சேனாதிபதி சல்லியன், கிருபாசாரி, அசுவத்தாமன், சகுனி, வீரியகிருதன் இவர்கள் ஆர்ப்பரித்து பீமனுடன் எதிர்த்தார்கள். பீமனுடைய தம்பியராகியநகுலசகாதேவர் சாத்தகி இவர்கள் ஒன்றுகூடித் தருமராசனுக்குத் துணைநின்றார்கள்; இருபடைகளிலும் இருந்த வல்லமைசாலிகள் ஒருவரோடொருவர் செய்துவந்த சண்டையினால் இரண்டுபக்கத்திலும் பெருங்கும்புகள் குறைந்தன. திருஷ்டத்தியும்நனும் அவன்தம்பிமார்களுஞ்சேர்ந்து மத்திரனுடன் சண்டையிட்டபோது, இவன் அவர்களை விலவிலக்கப் பண்ணிவிட்டான். அப்போது தருமராசன் அவர்களைப் பின்னுக்குவிட்டு சல்லியன்மீதெதிர்த்து ஒருவரையொருவர் அஸ்திர சஸ்திரங்களினால் தங்கள் சாமார்தியங்களைக் காண்பிக்கையில், சல்லியன் தருமர் முரசக்கொடியை அறுத்து அவரைப் பதாதியாக்கினான். என்றைக்கும் கோபம்வராத தருமருக்குக் கோபம்வந்து ஒரு சத்தியை யெடுத்துவிடவே, அதுமத்திரன் முடித்தலையை யெற்றி அவனைமாய்த்தது. சுயோதனனுடைய நால்வகைப்படைகளும் மன்னவர்களும் கலகலத்துத் திகிலடைந்து போயினர். இவர்கள் வருந்தி நின்றதைப்பார்த்து சகியாமல் சல்லியனுடைய மித்திரர்களில் எழுநூறு தேர்வீரர் தருமனைவந்து வளைத்துச் சல்லியனிலும் எண்மடங்கதிகமாய் சண்டைசெய்தார்கள். சகுனிமாமனும் அவ்வேளையில் கூடிக்கொண்டான். பீமன்முதலாகிய தம்பிமார்கள் தருமருக்குத்துணைப்பட்டு எதிரிகளைமடக்கி அதமாக்கும்போது, துரியோதனனுக்குத் தம்பிகளாகிய செயகந்தன், செயவர்மன், செயசேனன், சேனாபிந்து, சைத்திரன், திறலவிந்து, செயவிகர்மன், எழுவரும் பீமனை மடக்கிக்கொண்டு அமரிட்டனர். இவர்களனைவரும் ஏககாலத்தில் அவன்விட்ட பாணப்பிரயோகத்தால் ஆவிபோனார்கள்.

துரியோதனனுடைய மற்ற தம்பிமார்களில் சித்திரபாகு, பிலசேனன், ஜெயசூரன், சித்திரோத்தமன், விந்தன், இவ்வைவரும் பீமனைக்கொல்லப் போர்புரிந்தனர். பீமன் களிப்புற்று, தம்பிமாரே இன்னும் ஒழிந்திலீரோ வென்று பாணங்களைப்பூட்டி அவர்களையும் பூ பாரந் தீர்த்தான்.

துரியோதனன் சிலபடைகளுடன், பீமனையெதிர்த்து சகாதேவன்பிடித்த வில்லையும் முறித்துவிட்டான். சகாதேவன் வேறுவில்லெடுத்து துரியன் வில்லைமுறித்து மார்பிலுந்தோளிலும் வாளிகளுருவும்படி மாட்டினன். அப்போது சகுனிமாமன் தன்படைகளுடன் பீமனையெதிர்த்து, பீமன் தொடுத்தகணைகளினல் சகுனிமாத்திரம் ஒண்டியாய் நிற்கும்படியாயிற்று. இதைப்பார்த்த துரியன் தம்பிமார்களில், உத்தமன், உதயன், பானுகீர்த்தி, பிலவன்மன், பலவீமன், பிரபலதனன், விக்கிரமவாகு, சுசீலன், சீலன், இவ்வொன்பதின்மரும் பீமனுடன் பிரபலயுத்தம் பண்ணினர்கள். தம்பிமாரே பயப்படாதீர்கள் என்று காற்றுடிபோற்சுழண்டு கணைகளை விடுவிடென்றுவிட்டு ஒன்பதின்மரையும் உயிர்போக்கிவிட்டான். இப்பால் துரியோதனன் ஒருவனேயல்லாது தம்பிமார் யாருமில்லாமல்ஒண்டியாகி ஆதியில் பெரியோர்கூறிய புத்திமதியைக்கேளாமற் போனேமேயென்று அநுதாபப்பட்டுத் தலைநட்டுச் சிந்தித்துக்கொண்டிருக்குங்கால், மாமன் சகுனி அவனைத்தேற்றி இட்டுக்கொண்டு கிருபாசாரியர் அசுவத்தாமன் முதலியோருடன் பீமனை வந்துவளைந்தான். பீமன்விட்டகணையால் அவர்கள் எல்லாரும் அடிப்பட்டோய்ந்தார்கள். சகாதேவன் சகுனிமீது கொடுங்கணை தாக்கினன். அதை துரியன் தகைந்து வேலாயுதங்கொண்டுசகாதேவன் மார்பிலுருவும்படிதெறிக்கவே அவன் மூர்ச்சித்து ரதத்திற்சாய்ந்தான். இதைப்பார்த்த பீமன் சகுனிக்குத்துணைப்பட்ட வணங்காமுடியன்மீது நூறுகணைகளைத்தூவினன். இந்த அஸ்திரபலத்தினல் துரியோதனன் தலைநடுக்குற்றுக் குப்புற்றுவிழுந்தான். அசுவத்தாமன் பரிந்துவந்து பீமன்மேல் ஒருவேலைவிடுத்தான். பீமன் அதனைத்துண்டங்கண்டு அசுவத்தாமன்மார்புக்கு வேறுவாளியேவினன். அசுவன் நொந்துநிற்குந்தருணத்தில், கிருபர்வெகுண்டு பீமனையெதிர்த்துப்போர்கொடுத்தார். சகுனியானவன் சகாதேவனை மறித்துச் சண்டையிட்டு அவனல் இறந்தான். நெடுநாட்பாபியாகிய சகுனிமாமன் தொலைந்தானென்றுகொண்டாடினர். வணங்காமுடியன் மறுபடியும் மிஞ்சிநின்றதிரளைக் கூட்டிக்கொண்டு ஐவருடன் சண்டைசெய்தான். அப்போது பதினைந்துநாழிகையாகிச்சூரியன் நடுமத்தியில் வந்தானென்று வைசம்பாயனர்சொல்ல, மேல் நிகழ்ந்தவற்றை விளம்பியருளுமென்று ஜநமேஜயன்கேட்க வியாசபகவான் சிஷியரானவர் கூறலுற்றார்.

சல்லியபர்வம்-முற்றிற்று.

[illegible]

[illegible]

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீமகாபாரதம்.

பத்தாவது

சுயோதனபர்வம்.

விருத்தம்.

நாலிதழிடையி லிருந்தவீரியனும் நாலிரண்டிதழி லிருந்தவனும்
கோலமாரீரைந் திதழிருப்பவனுந் துவாதசகோணம் வைகினனும்
தாலின்மூலத்திற் சோடசவிதழ்மேற் றரித்திரண்டிதழ் பொருந்தினனும்
மேலினுயிரப்பொற் கமலம்வைகின்னு மெவனவனின்பதம் விழைவாம்.

பதினெட்டாம்போர்ச்சருக்கம்.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியையும் ஸ்ரீவேதவியாசரையும் வந்தித்து மேல் நடந்த முடிவை ஜநமேஜயமகாராசனுக்கு வைசம்பாயனர் வகுக்கலுற்றார். இன்று பதினெட்டாம்நாள் பகல் பதினைந்துநாழிகைக்குமேல், யாவரும் மடிந்துபோனதால் சுயோதனராசன்தானே சேனாதிபதியாக ஏற்பட்டு போர்புரிய வருகின்றதை ஸ்ரீகிருஷ்ணரும் பாண்டவர்களும் பார்த்து, இந்த வில்வேந்தன் எல்லோரையும் இழந்துவிட்ட பின்னர், இன்னமுஞ் சண்டைக்குவருவதில் பயனென்ன, வில்வேந்தரெல்லோரும் பிரத்தியக்ஷமாய் மடிந்துகிடக்கிறதைப்பார்த்திருந்தும், கொஞ்சமேனுமெண்ணாமல் மேலும் யுத்தத்துக்கு வருகிறானே இவனுக்கு என்னபுத்தி, தப்பிப்பிழைக்கலாமென்று எண்ணாமல், கொஞ்சநஞ்சம் இருக்கிறவர்களையும் முடிக்க வகைபார்க்கிறானேயென்று அர்ச்சுனன் ஸ்ரீ கண்ணபிரானிடத்தில் சொன்னபோது, அர்ச்சுனா உங்கள்பொருட்டில் நான்தூதுசென்று அவனுக்கு உரைத்த நீதிமொழிகளையும் பெரியோர் புத்திமதிகளையும் கேளாமல் நம்மை வந்தெதிர்த்தான். நாம் இன்னம் உயிரோடுஉள்ள இரண்டொருத்தரையும் போக்கிவிட்டு இவனை ஒண்டியாக்கி இவனுக்கு முன்னே. சொன்ன புத்திமதிகளை எடுத்துக்காட்டி பிற்பாடு இவன்பிராணனை முடிக்குமாறு யோசிக்கவேண்டியதே காரியம். இவன்பிறந்தபோதே இவனுக்கு ஜாதகங்கணித்த கணிதநூலோர் ஏற்கெனவே எழுதியபடிக்கு இந்தபூமியிலுள்ள பேர்களையெல்லாம் இவன்முடித்துப்போட்டு பிற்பாடு தானும் இறப்பானென்றிருந்ததினால் இவனுக்கு நராந்தகன் என்றுபேர்கூறியிருக்கிறார்கள். அவ்வசனம் பொய்படாது. அது இப்போது சரியாய் முடிந்தது, நாம் ஆலோசிக்க வேண்டியதில்லையென்றார். விதரணசாலியாகிய பீமராசன் தேர்விட்டிறங்கி கதையைக்கையில்கொண்டு, துரியோதனராசனுக்கு எதிர்சென்று மீந்துநின்ற அவன்சேனைகளை அதமாக்கினான். இதனால்ஒன்

டியோதுங்கி மீந்தவர்கள் எல்லோரும் மாண்டொழிந்தனர். வெற்றி விஜயன் படையுட்புகுந்து மீந்திருந்த மன்னவர்களைத் தன்காண்டீபவல்லமையினால் அதமாக்கினான். இப்படி பலமுகங்களிலும் பாண்டவர்கள் ஏற்பட்டு அதம்பண்ணிவருவதை துரியோதனனுடைய பாசறைப்பாளயத்தில் பாதுகாத்திருந்த காவலாளரும் மெய்காப்பாளருந் திரண்டு பாண்டவர்களை யெதிர்த்தார்கள். அனைவரையும் கால்மாடுதலைமாடாய் விழுந்து மாளும்படி பாண்டவர்கள் நடத்தினதிறமையை இராசன்கண்டு ஆற்றாமைப்பட்டு, தன் இராசகோலம் இராஜசின்னங்களை ரதத்தின்மேல் வைத்தவாறே வைத்துவிட்டு ஒருவருக்குந் தெரியாமல் புறங்கொடுத் தோடினான். இப்படியிருக்க எல்லாச்சேனைகளையும் முடித்தபின்னர் பாண்டவர்கள் துரியோதனன் ரதத்தைப் போய்ப்பார்த்தபோது, அவனைக் காணாமல் ஆச்சரியப்பட்டு இங்குமங்குந் தேடிக்கொண்டிருந்தார்கள். அப்போது பாண்டவர்கள்பட்சத்தில் பிழைத்திருந்த மீதிச்சேனை எவ்வளவென்றால், தேர் இரண்டாயிரம், குதிரை இரண்டாயிரம், யானை எழுநூறு, கால்பலங்கள் பதினாயிரம், சேனாதிபதி திருஷ்டத்யும்நன், சிகண்டிராசன், இந்த பதினெட்டு நாளும் பாண்டவசேனைக்கு போசனாதி சாமக்கிரிகள் கொடுத்து நடத்திவந்த சோழராசன், சாத்தகி, பாண்டவர் ஐவர், இளம்பஞ்சபாண்டவாள் ஐவர், கறுத்த திருமேனியுடைய கண்ணபிரான், இவர்கள்தான் மிகுந்திருந்தவர்கள். ஆகாயவாசிகளாகிய தேவர்கள் இந்த அதிசயமெல்லாம் கண்டுகளித்து, மேல்விளையப்போகிறதை எதிர்பார்த்திருந்தார்கள்.

குருக்ஷேத்திரத்தைவிட்டு ஓடின நராந்தகன் கால்நடையினால் அயர்ந்து நாலாதிக்கிலும் ஒளிய இடம்பார்த்து வரும்போது, அடர்ந்தகாடுகளில் குளிர்ந்தசலம் நிறைந்த ஒருமடுவும் மணல்த்தடமுங்கண்டு, அங்கே உட்கார்ந்து பெருமூச்சுவிட்டு, சத்துருக்களுக்கு பயந்து, பெரியோர்கள் முன்னால் தனக்குச்சொன்ன வார்த்தைகளைக்கேளாமல் போனதையும் அவர்களை தூஷித்ததையும் கர்ணனுடைய வல்லமையையும் சகுனியின் வஞ்சகத்தினால் மோசம்போனதையும் நினைத்து மனங்கசந்து தேறி, இறக்கிறது நிச்சயம் இன்னமும் ஒருகைபார்த்துவிடுவோமென்றுதுணிந்து, ஆதியில் தான் கற்றிருந்த அமிர்தசஞ்சீவி மந்திரத்தை செபித்து, இறந்தவர்களைப் பிழைக்கச்செய்து மறுபடியும் பாண்டவர்களுடன் அமர்புரிந்து அவர்களை அழிக்கிறது, இல்லாவிட்டால் நாம் இறந்துபோகிறதென்றுதீர்மானித்துக்கொண்டு இருக்குந்தறுவாயில் சஞ்சயர் திடீரென்று துரியோதனன் எதிரில்வந்து நின்றார். துரியோதனன், நீர் எப்படித் தப்பிவந்தீர் என்றுகேட்க, ஸ்ரீவேதவியாசருடைய அனுக்கிரகத்தால் இதுவரையில் பிழைத்திருக்கிறேன் என்றதற்கு ராசன் சந்தோஷப்பட்டு, பூமியாளப் பேராசைகொண்டு அவதிப்படுகிற பாண்டவர்களை இன்னுஞ் சற்றுநேரத்தில் உருட்டிப்போடுகிறேன்பாரும் சஞ்சயனே, ஆதியில் நான் உபதேசம்பெற்ற அமிர்தசஞ்சீவி மந்திரத்தை செபித்து, இறந்தபடைகளை யெழுப்பிவிட்டு ஐவரையும் அழிக்கிறேன், ஒருவேளை இதுதப்பிப்போமாகில், என்

பிராணனை விட்டுவிடுகிறேன். இனிமேல் இந்த உலகில் உயிர்வைத்திருக்க மாட்டேன். நீர் இதை உறுதியாய்நம்பும், இதுவரையிலும் என்னை நம்பியிருந்த தாய்தந்தையருக்கு என்னைக்குறித்து துக்கப்படாதிருக்க அவர்களைத் தேற்றியருளும், நீர்விரைவில் செலவுவாங்கிக்கொள்ளும் என்று சஞ்சயரை அனுப்பிவிட்டு, கதாயுதத்துடன் திடீரென்று மடுவிற் குதித்தான். அவன்குதித்த அதிர்ச்சியினால் சலம்கரையிரண்டு வெகுதூரம் ஓடியதாம்; சலத்திற்குதித்த துரியோதனன் சலத்திற்குள் சிந்தையடங்கி அசைவற்று நின்று செபித்துக்கொண்டிருந்தான். செபத்தின் உக்கிரத்தினால் ரணக்களத்தில் கிடந்தபிரேதங்களுக்குக் கொஞ்சம் உயிர்த்துடிப்புக் கண்டது. இஃதிப்படியிருக்க இனிநடக்கப்போகிறவைகளைத்தெரிந்துகொள்ள அருள்பெற்ற சஞ்சயன், துரியோதனன் மாளுகிறது நிச்சயமென்று திரும்பி வருமார்க்கத்தில் கிருபாசாரியர் அசுவத்தாமன் கிருதபன்மன் மூவரும் எதிர்ப்பட்டு, துரியோதனன் கெதியென்னவென்று கேட்டபோது, இராசன் அப்போதிருக்கின்ற ஸ்திதியைச்சொல்லி, அவர்களை விட்டு விலகினவுடனே, அம்மூவரும் சத்துருக்களுக்குப்பயந்து மறைந்துபோனார்கள்.

சஞ்சயன் அஸ்தினாபுரத்திற்குப் போகிறதற்குமுன்னமே ராஜஸ்திரீகளிருக்குங் கூடாரத்திற்புகுந்து அவர்கள்படுந்துபரம் சகியாமல் அவர்களுக்குக்காவலாயிருந்த உயுசச்சனை தர்மராஜனிடம் அனுப்பி அவர் உத்தரவுபெற்று அந்த ஸ்திரீகள்யாவரையும் அழைத்துக்கொண்டு அஸ்தினாபுரம்போய் துரியோதனனுக்கு சம்பவிக்கப்போகிற கெடுதியை திரிதராஷ்டிரனுக்கும் காந்தாரி அம்மனுக்கும் அறிவித்து அவர்களை ஆறுதற்படுத்திவைத்துவிட்டு, மறுபடிரணக்களம் வந்துவிட்டான். அஸ்தினாபுரம்போய்ச்சேர்ந்த ஸ்திரீகளை மாமனார் மாமியார் முதலியோர் கட்டியழுது பிரலாபித்துப் புலம்பினார்கள். தீர்த்தயாத்திரை போயிருந்த விதுரர் திரும்பி வந்து ஒருசிற்றூரில் தங்கி யுத்தத்தின் முடிவுகளைக்கேட்டறிந்து, துரியோதனன் மாளுகிறபரியந்தம் தான் அஸ்தினாபுரிக்குள்ளே பிரவேசிக்கிறதில்லையென்று அங்கேயே தங்கியிருந்தார். இக்கதை இப்படியிருக்க, கிருபாசாரியர் அசுவத்தாமர் கிருதபன்மன் மூவரும் மடுக்கரையில் வந்து நின்றுகொண்டு துரியோதனமகாராசனே நீர் சலத்துக்குள் ஒளித்திருக்கிறது சரியல்ல, அதுவெட்கமானகாரியம், நாங்கள் மூவரும் இன்றைக்குள்ளே பாண்டவர்களை அதம்பண்ணுகிறோம் பாரும் என்றார்கள். ஐவர் தலைகளை சாயங்காலத்துக்குள்ளாக வாங்கிப்போடுகிறேன், அப்படி செய்யாவிட்டால் நான் பிராமணனுக்குப் பிறந்தவனல்ல, நீர்சீக்கிரம் எழுந்துவாருமென்று அசுவத்தாமன்கூப்பிட்டான். இந்தச்சத்தங்கேட்ட துரியோதனராசன் வெளியில்வந்து அசுவத்தாமனைப்பார்த்து உமது சாமர்த்தியம் எனக்கு நன்றாய்த்தெரியும், நீர்சொன்னதுபோல் நிறைவேற்றுவீர் சந்தேகமில்லை, இன்னஞ்சற்றுநேரந்தண்ணீர்க்குள்ளிருந்து என்தேகசிரமத்தைத் தீர்த்துக்கொண்டு உங்களுடன்கூடவந்து வெற்றிகொள்ளுகிறேன். நீங்கள் ஒருவருக்குந் தெரியாமல் இதோநிற்கிற ஆலமரத்தடியில்மூசிப்பாறுங்கள்

என்று அனுப்பிவிட்டான். அவர்கள் ஆலமரத்தடியிற்சென்று அசந்துநித்திரை போய்விட்டார்கள். துரியோதனன் மறுபடியுஞ் சலத்தில் முழுகி மந்திரத்தை உருவேற்றிக்கொண்டிருந்தான். அங்கே குந்தியின் புத்திரர்கள் ரணக்களத்தில் ஒட்டுப்பற்றிருந்ததையெல்லாம் துடைத்துப்போட்டு துரியனைத்தேடித் தேடிப்பார்த்துங் காணமல், இவ்வொருவனை மீதியாய் விடப்படாதென்று திரிந்துக்கொண்டிருக்கும்போது, வேடர்களில் சிலர்வந்து துரியோதனன் இருக்குமிடத்தை பீமனுக்கு இரகசியமாய்ச் சொன்னார்கள். இச்செய்தியை தருமராசனுக்குத்தெரிவித்து வேடருக்கு வேண்டிய வெகுமதிகளைக் கொடுத்தனுப்பியபின்னர், ஸ்ரீகிருஷ்ணர் பாண்டவர்களைப்பார்த்து துரியோதனன் அமிர்தசஞ்சீவி மந்திரங் கற்றிருப்பது நிசந்தான், அதினல் அவன் சலத்தில் செபம்பண்ணுகிறன்போற் காண்கிறது. அதுநிறைவேறினல் செத்தவர்கள் பிழைப்பார்கள். அதற்கு திருஷ்டாந்தமாய் பிரேதக்களத்தில் போய்ப்பார்ப்போம் வாருங்கள் என்று பரீக்ஷித்தபோது, இரண்டு துண்டாய்க்கிடந்த பிணங்கள் ஒன்றுக்கொன்று நகர்ந்து கிட்டியணுகுவதைக் கண்டார்கள். உடனே ஐவர்கள் புறப்பட்டு மடுக்கரை வந்துசேர்ந்து, பீமசேனன் துரியோதனனை வெகுவான இழிமொழிகளாய்த்திட்டி சண்டைக்குக் கூப்பிட்டான்.

துரியோதனன் வெளியில்வந்து அவர்களைப்பார்த்து, நீங்களோ கூட்டமாய் ஆயுதபாணிகளா யிருக்கிறீர்கள், நான் நிராயுதனுயிருக்கிறேன்; ஆகையால் என்பேரில் நீங்கள் எல்லோரும் ஏகோபித்துச் சண்டையிடுகிறதோ, அல்லது ஒருவருடன் ஒருவர் தொந்தயுத்தஞ் செய்கிறதோ என்று கேட்டான். நிராயுதனய் நின்ற அபிமந்யு ஒருவன்பேரில் நீங்களனைவரும் ஒருமிக்கக்கூடிவிழுந்து கொன்றீர்களே அதுதர்மமா, நீதிவழுவாத பாண்டவர்கள் அசத்தியனுகிய உன்னிடத்தில் எல்லோருமொன்றுகூடிச் சண்டையிடமாட்டார்கள். ஆதிநாள்முதல் பீமனுக்கும் உனக்கும் க்ஷாத்திரம் இருப்பதினலே, அவன் உன்னுடன் போர்புரிவான், நாங்கள் சொல்லத்தேவையில்லையே யென்றார் கிருஷ்ணதேவர். துரியோதனன் பீமனைப்பார்த்து ஆயுதமெடுத்து யுத்தஞ்செய்கிறையாவென்று கேட்க, கெதையைக்கொண்டு செய்கிறேனென்றான். அதற்குத் தகுதியான இடம் எங்கே யென்றதற்கு, சீமந்தபஞ்சகம் இதற்குத் தகுந்தயிடம். அதில் இறப்பவர்களுக்கு சொர்க்கம் கிடைக்குமென்றார்கள். உடனே சகல போகங்களையும் செல்வங்களையும் அனுபவித்தராசாதிராசனுகிய துரியோதனமகாராசன் பாதசாரியாய் நடந்துபோகிற சிரமத்தைப்பார்த்து வியாகுலித்து தருமராசன் ரதத்தைவிட்டு இறங்கி துரியோதனனை நோக்கி, அண்ணலே! இதுவரையில் நடந்த வைஷம்மியங்களை மறந்து இப்போதே சமாதானமாகி இனி என்தம்பிமாரும் நானும் உன் கட்டளைக்குக் கீழ்ப்பட்டு நடக்கிறோம், நீயே அரசாட்சிசெய்; ஸ்ரீ கிருஷ்ணதேவர் முதலானவர்கள்முன்னிலையில் நான்சத்தியமாய் சொல்லுகிறேன், நீ உறுதியாய்நம்புமென்று பலவாறும்சமாதானப்படுத்திப்பார்த்தும், துரியோதனன்அதற்

குடன்படாமல் சண்டைக்குக் குறித்த இடத்தருகில் போய் இருவருஞ் சண்டைக்கேற்படவே, மற்றெல்லாருஞ் சுற்றி நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்குங்கால் பீமனுக்கு துரியன் ஆதியிலே செய்த அடாத காரியங்களை யெல்லாம் ஸ்ரீகிருஷ்ணர் தூண்டிக்காட்டிச் சண்டைக்கடா முடுக்கிவிடுவதுபோல் பீமனைத் தட்டிக்கொடுத்து விட்டார். இவ்வேளையில் தீர்த்தயாத்திரைக்குப் போயிருந்த பலராமர் அவிடம் வந்து சேர்ந்தவுடன், யாவரும் அவரைப்பணிந்தார்கள். இருவரும் எதிர்த்து நிற்கும் நிலையைப்பார்த்து, விசனப்பட்டபோது, ஸ்ரீகிருஷ்ணரானவர் தமயனை நோக்கிச் சண்டை நடந்ததன்மைகளைச்சொல்லி, பலராமர் வேறுபேச்சுப் பேசாதிருக்கும்படி ஒரு யுக்திபண்ணி, அண்ணா! வெகுசீக்கிரத்தில் தீர்த்தபலன் பெற்றுவந்தீர்கள்போற்காண்கிறது, இங்கிருந்து புறப்பட்டு தீர்த்தயாத்திரை போனசெய்தி என்னவென்று வினவ, அதற்கு அவர்சொல்லத்தொடங்கினதாவது:—

பலராமர் ஆடிய தீர்த்த மகத்துவம்.

கேளும் தருமநந்தனா, இருக்குவேதத்தில் பிரபலமாய்க் கூறுகின்றதும் சந்திரனுக்குச் சாபவிமோசனஞ் செய்ததுமாகிய சரஸ்வதி தீர்த்தத்தின் பிரிவாகிய பிரபாசமென்னும் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தேன். அதைவிட்டு அங்கணன் என்னும் ஒரு கலை முனிவர் வசிக்கும் ஆசிரமத்தில் அவரைத்தெரிசித்து அப்பால் கௌசிகதீர்த்தத்திற்சென்று நீராடியபின்னர், வசிஷ்டதீர்த்தம் சோமதீர்த்தம் சரவணப்பொய்கை இத்தியாதிகளில் முழுகி தர்பணுகி இந்த சிமந்தபஞ்சக தீர்த்தத்தின் மகாத்துமியத்தைக்கேட்டு இங்கே ஸ்நானத்துக்கு வந்தேன் என்றார். அவரைப் பாண்டவர்கள் பணிந்து பலவாறும் ஸ்தோத்திரித்துச் சண்டைக்கு முனைந்து நிற்கிற இரண்டுபலவான்களையும் பார்க்கக்கடவீர் என்று காட்டினார்கள். பலராமர் அவ்விருவரையும் நோக்கிப்பார்த்தபோது, அவர்கள்இருவரும் அவருக்கு வந்தனஞ்செய்தார்கள். அவர் அவர்களை ஆசீர்வதித்து காரியத்தை நடத்துங்கள் என்றார். துரியோதனனும் பீமனும் ஆக்குரோஷம் வரும்படி ஒருவரை ஒருவர் இகழ்ந்து பேசிக் கோபங்கொண்டு கதாயுத்தம் ஆரம்பித்து மாறிமாறி ஒருத்தரையொருத்தர் அடித்துவரும் துரியோதனன் பீமனைநோக்கி உன் உயிர்நிலையைச் சொல்லு என்றான். என் உயிர்நிலை சிரசில்இருக்கிறதென்று பீமன்சொல்லி வாய்மூடுமுன்னே கதையாலோங்கி அவன் தலையில்விட்டான். பீமன் மூர்ச்சித்து பூமியில்விழுந்து உடனே சுதாரித்தெழுந்து, துரியோதனா! உன் உயிர்நிலை எங்கே யென்றதற்கு தன் உயிர்நிலை சிரசிலேதான் என்று பொய்யுரைக்கூறினான். பீமன் துரியோதனனைத் தலையில் கதையால் அடிக்க அவன் களைத்து பூமியில் விழுந்தெழுந்து நின்றான். இவ்விதமாய் அடித்துக்கொண்டு நிற்கும்போது

பீமன் அதிகசிரமம் அடைந்திருப்பதை விஜயன்கண்டு தேரைவிட்டிறங்கி திருமால் திருவடியிற்பணிந்து பீமனுக்கு அபாயம் நேரிடும் போலிருக்கிறது,தீனதயாளுவாகியதேவரீர் திருக்கண்ணோக்கம்வைக்கவேண்டுமென்றுவணங்கவே, அர்ச்சுனா! வாயுகுமாரனும் சுயோதனனும் மிகுந்த பலசாலிகள், அவர்கள் இறக்கமாட்டார்கள். சுயோதனனைக்கொல்ல உனக்கு இஷ்டமிருக்குமாகில் ஒருசூக்ஷமம்இருக்கிறது, வாக்கினாற்சொன்னால்மகா பாவம், நான்போய் அவனுக்குச்சொல்வது தகுதியல்ல, இதுதான் மகா வஞ்சகமென்பது, பீமன் ஏற்கெனவே தான்கூறிய சபதத்தைமறந்து இப்போது துரியோதனன் சொன்னதை அவன்உயிர்நிலை என்றுநம்பி அடிக்கிறானேயல்லாமல் தன்சபதப்படிசெய்யக்காணோம். துரியோதனனுக்கு உயிர்நிலை துடையில் என்றார். இம்மொழிகேட்ட விஜயன் பீமனுக்கு நேரேசென்று, தன்கரத்தையுஞ் சிரத்தையும் ஆட்டி இரண்டுகையையும்சேர்த்து நீட்டித் துடைமீது அடிக்குந் தன்மைபோல் அவனுக்குச் சாடைகாட்டினான். ஞானபண்டிதனாகிய வாயுகுமாரன் அறிந்து துரியோதனன் துடையில் ஓங்கி கதாயுதத்தால் ஒரு அடிபோட்டான். துரியோதனன் களைத்துத் தெளிந்து மறுபடியும் பீமனைமுனைந்து சண்டைசெய்கையில், பீமன் மறுபடியும் அவன் துடையில் அடித்து துடைமுறியக் கீழேதள்ளிக் காலால் அவன்சிரசில் உதைத்தான். கீழேகிடந்த துரியன் முண்டி நிமிர்ந்து பீமன் மார்பிற் குத்தினான். இந்தக்குத்தை வாங்கிக்கொண்டு துரியனுடைய கன்னத்திலும் வாயிலும் இரத்தம்வர இடித்து அவன் முடியைப்பிடுங்கி பூமியில் எறிந்து அவன் தலையில் மறுபடியும் உதைத்தான். இதைப்பார்த்த தருமர் சகிக்கமாட்டாமல் பீமனைநோக்கி ஒருவாக்கியஞ் சொல்லுகிறார்.

அப்பாபீமா! நம்மட்டில் இவன் மனவஞ்சகம் வைத்து நடந்தானேயல்லாமல், மற்றெவரிடத்திலும் அப்படி நடந்தவனல்ல, இராசாதிராசாக்கள் பணியும்படியாகிய செல்வக்குமாரன் இவன் வினைவசத்தால் தறையில் விழுந்தவனை நீ காலால் உதைக்கலாமா தரும்மா என்று கடிந்தனர். கூட இருந்த பலராமருக்குக் கோபம்பிறந்து, பீமா! சாஸ்திரவிரோதமாய் நீ கதையினால் துடையில் அடிக்கலாமா, நீ செய்தது அக்கிரமம். அப்போதே எனக்குவந்த கோபாவேசத்தை அடக்கிப்பொறுத்திருந்தேன், நீ துரியோதனனைச் சிரசில் உதைத்தாயே இதோ உன்னை நான்கொன்றுபோட்டு அப்பால் துவாரகைக்குப்போகிறேன் என்று கலப்பையைக் கையிலெடுத்துக் கீழே குதித்து வாடா பீமாவென்று கூவினார். இந்தப் பிரமாதத்தைப்பார்த்த கண்ணபிரானானவர் பலராமரைப் பணிந்தெழுந்து பாத்திரம் பார்த்து அன்னமிடு என்கிறபடிக்கே ஒன்றையோசியுங்கள், பீமன் துடையில்அடித்ததே குற்றமென்கிறீர், துரியோதனன் இந்தப்பாண்டவர்களுக்குச்செய்த பொல்லாங்குகள் எண்ணத்தொலையாது, ராசசபையில் துரோபதையை அவன்பண்ணின அவமானத்தை நீர் பார்த்திருந்தால், இந்தபீமன் உதைத்த உதையிலும் பதின்மடங்கதிகமாய் உதைத்திருப்பீர். அந்த

பதிவிரதையாகிய துரோபதை நீ துடைமுறிந்து சாவக்கடவாய் என்று கொடுத்தசாபத்தினாலும் ஒருபெரியரிஷியின் சாபத்தினாலும் இவன்துடைமுறிந்தானே யல்லாமல், பீமசேனனை வெறுப்பதிற் காரியமில்லை. இந்த மகாவஞ்சகனாகிய துரியோதனன் நமது மருமகனாகிய அபிமந்யுவை ஒண்டியாய் வளைத்துக்கொண்டு சாஸ்திரவிரோதமாய் கோடிவீரர்கள் சூழ்ந்து நல்ல கைக்காரராகிய கர்ணன் துரோணாசாரி இருவரும் பின்பக்கத்தில் மறைந்து அவன் தேரையழித்து அவனைக் கொலைசெய்து போட்டார்கள். தேவரீர்கொண்டகோபத்தை ஆற்றிப்போடும், அண்ணா! ஆர் எப்படிபோனாலும் நமக்கென்ன என்று வணக்கமாய்ச் சொல்லிச் சமாதானப்படுத்தினார். அவர் கோபமாறி துவாரகாபுரி போய்ச் சேர்ந்தார். ஸ்ரீகிருஷ்ணரானவர் தருமரைநோக்கி, துரியனை பீமன் காலாலுதைத்ததற்காக நீர் அவனை மெத்தவும்வெறுத்தீர். சும்மா இருந்த பலராமரும் நீர் கொண்டகோபத்தைப்பார்த்துத் தானும்கோபங்கொண்டார். அந்த சற்பக்கொடியோன்செய்த சதிகளையும் ஏசியபேச்சுக்களையும் நீர்மறந்நீரோ, இப்போதான் கூடப்பிறந்தீரோ, ஐயோ அரக்குமாளிகை கட்டி நெருப்புவைத்தானே அதைமறந்தீரோ, இந்த பீமன்செய்தது பொல்லாங்கோ, சொல்லும் பெரியோனேயென்று துளபத்திருமார்பன் செப்பவும், பீமசேனன் சோபப்பட்டு, அண்ணன் பாதத்தில்வணங்கி கண்ணீர்விட்டுச் சொல்லுகிறான், ஜேஷ்டப் பிராதாவாகிய தருமதேவதாய்! சற்சனருக்குப் பொல்லாங்கு நேரிடுமாகில் எல்லோரும் இரங்கவேண்டியது நியாயமே. அரக்கக்கொடிய நராந்தகனுக்கு ஆர் இரக்கப்படுகிறார்களோ அவர்களுக்குப் பாபஞ் சேருமே அண்ணா, இவனுக்கும்இரங்கலாமா, இவன்மகாதுரோகி, இவன் செய்தவஞ்சகமெல்லாம் ஒருபக்கத்திலிருக்கட்டும்,இப்போதுகதாயுத்தம் பண்ணும்போது, உயிர்நிலைஎங்கேயென்று என்னைக்கேட்டான். நான்சத்தியத்தை அனுசரித்து உண்மையைச் சொன்னேன். வாய்மூடுமுன்னே என்தலைமீது புடைத்தான். கர்த்தாவின் கிருபையினாலும் தங்கள்புண்ணியத்தினாலும் அந்த அடிக்குத் தப்பிப்பிழைத்தேன். அவன் தன்உயிர்நிலையின் யதாஸ்தானத்தை உண்மையாய் சொல்லாமற்போனான்; இப்பேர்ப்பட்ட துஷ்டனைத் தலையில் உதைத்தது மாத்திரமல்ல இன்னம் என்ன செய்தாலும் என்கோபந்தணியாதென்று உரக்கச்சொன்னான்.

தருமநந்தனர் நகைத்து கோபாலன் முகத்தைப்பார்த்து, நீரும் பீமனுடன் கூடிக்கொண்டு குதிக்கிறீர், அநேகங்கோடி பாவங்களைச் செய்த பேர்கள் தப்பிநடந்தால் அதை ஒரு பொருட்டாய் பேசமாட்டார்கள். பாபமற்ற புண்ணியவான்கள் பரமாணுவிலும் அணுவாகிய குற்றத்தைக் கூடச் செய்யக்கூடாது, செய்வாரேல், பரிசுத்த வெண்மையான பசுவில் ஒரு கறுப்புப்புள்ளி விழுந்ததுபோற் காணும். ஆகையால் இந்தக் கொடுமை நமக்கென்னத்துக்கென்று சொல்லவந்தேன். கருத்தின்மிகுந்த கர்த்தனே! அவரவர் ஊழ்வினையின்படி நடக்கவேண்டியது நடந்துதீர்ந்தது, இந்தபீமனை இப்போதுவெறுப்பதில் பிரயோசனமில்லைத்தான், ஞானியைக்

கொண்டு கோரிக்கை நிறைவேற்றிக்கொண்ட தன்மைபோல், அல்ப்பரை வைத்துக்கொண்டு சர்வசாட்சியாகிய நீர் குறைவில்லாமல் உமது வேலையை முடித்துக்கொண்டீர். உமது அற்புதச்செய்கைகளை அறியத்தக்கோர் யாவர் உளர் என்று இவர்கள் சம்பாஷித்துக்கொண் டிருக்கும்போது, துரியோதனன் களைதெளிந்து கண்விழித்துப்பார்த்து, ஆம் ஆம், நான் ஒருவன்தான் நீதிதப்பினவன், நீங்கள் எல்லோரும் நீதிமான்களல்லவா? அம்மட்டும் வாயைமூடுங்கள். குலசிரேஷ்டராகிய பீஷ்மாசாரியரையும் வில்லாசிரியராகிய துரோணரையும் நீங்கள் கொலைசெய்தீர்களே, கர்ணன் தேர் பூமியில் புதைந்துபோய் அதைக் கிளப்பிக்கொண்டிருக்கையில் அவனை அத்திரம்விட்டு வேலைத்தீர்த்தீர்களே, சைந்தவனைமோசம்பண்ணி சூரியனைஜாலத்தினல்மறைத்தவன் தலையை வெட்டிமாய்த்தீர்களே, துரோணர் இறக்கும்படி பொய்பேசினீர்களே,இப்போதுநடந்தயுத்தத்தில்துடையில் அடித்துக்காட்டி என்னைத் துடைமுறித்தீர்களே. சத்தியந்தப்பாத தருமராசனை அசத்தியனாக்கிப் போட்டீர்களே, நீருண்டமேகம்போன்ற கபடநாடகனே! நீநினைத்தகாரியம் நிறைவேறிப்போயிற்றல்லவா, இனிமேலாகிலும் உன்செங்கண் றுறங்குவையேகண்ணா! என்றுபல்லைக்கடித்து உதடுதுடிக்கக் கூறினன். அப்பா சுயோதனா! எய்தவன் இருக்க அம்பை நோவதுபோல் என்னை நொந்துகொள்வதில் என்னலாபம். இன்னமும் பாவமூட்டை கட்டப்பார்க்கிருயே பாபி! பீமனுக்கு உன் உயிர்நிலை மாறுபாடாய்க்கூறிய உன்சூதுமொழியை அர்ச்சுனன்கேட்டு, வாக்கினுற் சொல்லாமல் குறிப்பினல் சாடைகாட்டி உன்னை அடித்திருக்க என்னை ஏன் நிந்திக்கிருயென்று, வாசுதேவன்சொல்லி வாய்மூடுமுன்னே துரியன்சீறி, ஆ கிருஷ்ணா! என்கெதையினல் ஐவரையும்மாய்த்து உன்னையுஞ்சிறையிலடைத்துக் கடல்சூழ்ந்த இவ்வுலகத்தை என்தாயின்வாக்கியப்படி நானேஅரசு செய்ய இருந்தேன், ஆனல் உன்சூதினல் என் எண்ணம் நிறைவேருமற் போயிற்றென்று தளர்ந்து சொன்னன். இப்படிக்கூறிய சுயோதனனிடம் நெடுமால் நெருங்கி, துரியோதனா! உன்சூது உன்னைக்கெடுத்ததென்று உரைக்கக் கூடாதா? நான் உன்னிடத்திற்கு தூதுவந்தபோது இப்படிக்கெல்லாம் நடக்குமென்று தெரிவித்தேனல்லவா? பெரியோர் உரைத்த மொழியையும் விதுரராசனுடைய சொல்லையுங் கடந்து, தந்தையின் வார்த்தையையும் தள்ளி நடந்த உன்குற்றமானது உன்னை இப்போது கெடுத்துவிட்டதென்று மேலும் விளம்புகின்ருர்.

பீஷ்ம துரோணுதிகளை நாங்கள் கொன்ருேமென்ருயே, பாஞ்சாலன் அருந்தவத்தால் சிகண்டியென்றும் திருஷ்டத்தியும்நன் என்றும் அவதரித்தவர்கள் தன்தன் எதிரியைக் கொன்ருர்கள். நீயோ பேராசைப் பேய் பிடித்து பாண்டவர்களைப் பறக்கடிக்க அந்தப் பெரியோரையும் மற்றை யுரியோரையும் ரணக்களத்தில் முடித்து நீயும் வந்து மாண்டாய். இந்தப் பாபமும் வசையும் உனக்கேயல்லாமல் எமக்கொன்றுமில்லை. பூரிசிரவனைக் கொன்றது பிழையென்ருய் அதற்கு நியாயங்கேள்? தனக்குத்துணை

ப்பட்ட ஒருவனுக்கு இடையூறுவருமாகில் அவனுக்கு உதவிசெய்து காக்கிறதா இல்லையா? நீதானேசொல்லு என்று துரியோதனன் இவாள்பேரில் ஏற்றிய குற்றங்களுக்கெல்லாம் ஏற்பட்டிருந்த முகாந்தரங்களையும் எடுத்துக்காட்டி நீ அரசாளுங்காலத்தில் பெரியவராகிய மைத்திரேயர் உன்துடைமுறிந்து இறக்கும்படி கொடுத்த சாபத்தை தள்ளுகிறதற்கு உன்னாலாகுமா? துரோபதை இட்ட சாபத்தைத்தடுக்க உன்னால் முடியுமா? எல்லாந்திரண்டு வந்துசேர்ந்து ஆளைப்பிடித்து அமுக்கும்போது, இனிப்பிழைக்க யாரால்முடியும்? ஏன்ஊரார்பேரில் தோஷம்பேசுகிறாய்? நீசிறுபோதுமுதல் இதுவரையிலும் தேடிக்கொண்ட தீமைகளெல்லாம் இந்த பீமன் கதையடியால் உனக்கு விமோசனமாயின. நீ நிர்விக்கினமாய்ச்சுவர்க்கம் அடையலாம் என்று கூறி, சுவாமி திரும்பினவுடனே, வேடிக்கை பார்த்து நின்ற தேவேந்திரன் முதலிய தேவர்கள் அவன்மீது புஷ்பமாரி பெய்தனர். இப்பால் சூரியன் அஸ்தமித்து தருமராசன் முதலியபேர்தங்கள் பாசறைசென்றனர். அவ்வேளையில் ஸ்ரீ ஜனார்த்தனன் ஐவரைப்பார்த்து, சஞ்சயன் திரிதராஷ்டிரனுக்கு துக்கச்செய்தி சொல்லு முன்னமே, நான்போய்ச் சொல்லி அவர்களைத் தேறுதற்படுத்தி வருகிறேன், அதுவரையில் தேரைவிட்டிறங்காதீர்கள் என்று அவர்களை நிறுத்திவிட்டு, தாம் அஸ்தினுபுரத்துக்கேகினார். பட்டணமெங்கும் அழுகுரலாக இருந்தது, இவர்போய்ச்சேருமுன்னே வேதவியாசரும் அங்கே வந்திருந்தார். சுவாமியானவர் அரண்மனையிற் பிரவேசித்து அவர்கள் இருவரையும் பார்த்தபோது,பீமனைக்கொண்டு என்மக்கள் நூறுபேரையும் அதமாக்கி எனக்கு வயிற்றெரிச்சலை விளைத்துத் தன்வயிறு குளிரவைத்துக்கொண்ட கிருஷ்ணனுவந்தது, இன்னம் என்ன காரியத்துக்கு வந்தீரோ, வாரும் என்று திரிதராஷ்டிரன்கேட்டான். மாமா மாமா நமஸ்காரம். எல்லாவற்றிற்கும் பாத்திரன்தான் நான், ஆத்திரமாகச் சொல்லவேண்டாம். நீர் விவேகத்தில்மிகுந்தவர். தூய்மையர் நீர்அறியாததொன்றுண்டோ. விதிசெயலைக்கடக்க வொண்ணாதென்று மேலோர் விதித்திருக்கும் வாக்கியங்கள் உமது மனசில் பதிந்திருந்தும், மறந்து பேசுகிறீர்போற் காண்கிறது. உமது புத்திரர்கள் சீவித்திருக்க விதியிருக்குமாகில், நான் தூதுவந்தபோது பலவந்தமாய் எவ்வளவு சொல்லியும், நீங்கள் எவ்வளவோ பாடுபட்டும் உம்முடைய வார்த்தையைத்தள்ளி அவர்கள் நடந்தார்களோ இல்லையோ, அருந்ததிக்கொப்பாகிய கற்புடையாளை ராசசபையில் இழுத்து அவமானஞ்செய்தார்களே, இப்பேர்ப்பட்டவர்கள் பிழைத்திருப்பார்களா? அவர்கள் வந்தவேலையைப் பார்த்துக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களைப் பிள்ளைகள் என்று நீர் நினையாதீர். அதோ இருக்கிற பாண்டவர்களை உமக்குப்பிள்ளைகள் என்று நம்பினால் பரகெதியடைவீர். அவர்கள் உம்மைக்காணும்படியாய் வர இருக்கிறார்கள். அவர்கள் உம்மிடம் வந்தால் நீரும் மாமியும் ஆதரணைசெய்து அவர்களைக் காப்பாற்றுங்கள். கடூரமாய்ப் பேசவேண்டாம், இதோ வியாசபிரம்மம் எழுந்தருளியிருக்கிறதே

இந்த உத்தமனாலே தத்துவவேதங்கேட்டு முத்தியைப் பெறுவீரென்று சொல்லி, என் வியாசமகாமுனிவர்களே! நான் சொல்லுகிற தெப்படியென்றுசொல்லி அவரைத்தூண்டினர். அதின்பேரில் வியாசபகவான் சொல்லத்தொடங்கலுற்றார்.

எனதன்பிற்குரிய திரிதராஷ்டிரனே! இந்த கேசவனை லேசாக நினையாதீர். தாசர்வணங்கும் பூசனைக்குரியவர் இவருடைய வாக்கியமே நான்குவேதம், இவர் உம்மிடத்தில் வந்து இவ்வளவு சமாதானம் சொல்லியது உமது நல்லமுறையார் செய்தபாக்கியம் இவர்கூறிய உண்மையினல் மனந்தேறுவது நன்மையென, வியாசர்சொன்ன விதியில் மனதைச்செலுத்திக் கருதியிருந்தான் திரிதராஷ்டிரன். இப்பால் காந்தாரியினுடைய கண்கலக்கத்தையும் தீர்த்து, கிருஷ்ணரானவர் மாமன் மாமியிடத்திலும் வேதவியாசரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு, பாண்டவரிருக்கும் பாசறை நோக்கி வந்தார். அப்போது அவ்விடத்திலிருந்த ஐவரும் எதிர்கொண்டு வணங்கி தேவரீர் போன இடத்தில் நடந்தகாரியம் யாதென்றுவினவ திரிதராஷ்டிரன் காந்தாரி இவர்களிடத்தில் நடந்த காரியங்களையெல்லாம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொன்னர். அதினல் பாண்டவர்கள் சஞ்சலம் நீங்கினர்கள். விஜயனைநோக்கி, அர்ச்சுன உன் ஆயுதங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு தேர்விட்டிறங்குவாயென்று கற்பித்தார். அவன் அதுபோல் தேரைவிட்டிறங்கினவுடன், அழியாத ரதமானது குபீரென்று பற்றிக்கொண்டு எரிந்துபோயிற்று. இதைப்பார்த்த ஐவரும் பரவாசுதேவனைப் போற்றி பக்தவச்சலனே! இதென்னமாயம், நீர்எங்களைத் தப்பவைத்ததுவே போதுமான சகாயம் இந்தவிந்தையைப்பகருமென்று கேட்டார்கள். பாண்டவர்களே! இந்த அர்ச்சுனனுக்கு அக்கினிதேவன் தேர் கொடுத்த காலத்தில், சத்துருக்களுடைய பாணங்களினல் அழியாதிருக்கும்படி கேட்டோம், அதுபோல் இந்தயுத்தம் முடிகிறவரையில் இந்தரதம் அழியாதிருக்கும், அப்பால் பஸ்மீகரமாயெரிந்து என்னிற்கலந்து போகுமென்று அக்கினிதேவர் வரங்கொடுத்திருந்தார். இந்தப்பதினெட்டுநாள் யுத்தத்திலும் மகாவரப்பிரசாதம்பெற்ற வீரர்கள் இந்த தேரின்பேரில் தொடுத்த கொடியபாணங்களின் தீக்ஷணமானது சத்தியத்திற்குக்கட்டுப்பட்டு இதுவரையிலும் நின்றிருந்தது, யுத்தம்முடிந்துபோனபடியால் ரதம் அழிந்துபோய்விட்டதென்றார். பாண்டவர்கள் மாயவனைப்புகழ்ந்து வாழ்த்தினர்கள். மறுபடியும் ஸ்ரீகண்ணனானவர் பாண்டவர்களை அழைத்து நீங்கள் ஐந்துபேரும் என்தம்பி சாத்தகியும் என்னுடன்கூட வாருங்கள், இவ்விடத்தில் தீங்குநடக்கப்போகிறது, நாம் சற்று ஜாக்கிரதையாய் மறைவாக இருக்கவேண்டுமென்று சொல்லி எல்லோருக்கும் முன் எட்டி நடந்தார். மழைகாலத்து இருட்டினாலும் தங்கள் புத்தி சுவாதீனமில்லாத மயக்கத்தினாலும் தளர்வடைந்து பின்சென்ற பாண்டவர்கள், நாம்மாத்திரம் போவோமாகில் பாசறையிலிருக்கிற நமதுபுத்திரவர்க்கங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஏதேனும் அபாயம்வருமோவென்று சுவாமியைக்கேட்ட ஐவரை

நோக்கி நீங்கள் கவலைப்படாதிர்கள் நீங்கள்பிழைக்கும் வகையைத் தேடிக்கொள்ளுங்கள், நான்ஒருபூதத்தைப் பாசறைக்குக் காவல்வைக்கிறேன், அப்பால் தெய்வச்செயல் எப்படியோவென்று திடஞ்சொல்லி, எல்லோரையும் அழைத்துக்கொண்டுபோய், ஒரு மலையடிவாரத்தில் இருகரையுமொருகரையாய்ப்பெருகி ஓடிவராநின்ற ஒரு ஆற்றின் கரைப் பள்ளத்தாக்கில் இராமுழுதும் நித்திரையில்லாம லிருக்கவைத்துத் தாமும் கூடயிருந்தார்.

இம்மட்டும் இவர்களுடைய கதையைச்சொல்லிவந்தோம். இனிமேல் ரணக்களத்தில் விழுந்துகிடக்கும் துரியோதனனுடைய சங்கதியைச் சொல்லுகிறோம் ஆலமரத்தடியில் சயனித்திருந்த அசுவத்தாமன் கிருபாசாரியர் கிருதவன்மன் நித்திரைவிட்டெழுந்து துரியோதனன் வெளியில்வாராமையினாலே அவன்கெதிஎன்னமாயிருக்கிறதென்று நினைத்து அவனைநாடி மடுக்கரைக்குவந்து பார்த்தபோது, அவ்விடத்தில் அனேகந்தேர் குதிரைகளுடைய அடிச்சவட்டைப்பார்த்து, இதென்ன விபரீதமென்று துரியோதனன் அடிச்சுவடுபட்டிருந்த வழியை நாடிவரும் மார்க்கத்தில் தீர்த்தமாடித் திரும்பிவருகிற சிலவேதியர்கள் இந்த மூவரையும் எங்கேபோகின்றீர்களென்று வினவ, துரியோதனராசனைத்தேடிப்போகிறோமென்றார்கள். ஐயோ? துரியோதனன் பீமராசன்கதையால் துடைமுறிந்து வீழ்ந்தானென்று வேதியர்கள்கூற அம்மொழியைக் கேட்டவுடனே, மூவரும் மனவருத்தமடைந்து துரியோதனன் விழுந்துகிடக்கு மிடத்தில் வந்து மிகவும் பிரலாபித்தழுதார்கள். இவர்கள் பிரலாபித்த சத்தத்தினால் துரியோதனன் கண்ணைத் திறந்துபார்த்து இவர்களைத்தழுவி அணைத்துச் சிலசங்கதி சொன்னான். ஐயா கிருபாசாரியரே! அசுவத்தாமரே! கிருதவன்மனே! நீங்கள் மூவரும் மடுவிலிருந்த என்னிடத்தில் வார்த்தையாடிப்போன தட்சணம் பாண்டவர் ஐவரும் சேனைகளுடன் மடுக்கரையை வந்து சூழ்ந்துநின்று வெகுவிதமாய்த் தூஷணித்தார்கள். அதைக் கேட்டவுடன் நான் வெளியில்வந்து அவர்களுடன் சண்டையிட்டு இந்தகெதியை அடைந்தேனென்று சவிஸ்தாரமாய்ச்சொன்னான். அம்மொழியைக் கேட்டவர்களில் அசுவத்தாமர் மிகவும் மனவருத்தமடைந்து அரவக்கொடிக்கரசே! முதல்நாள் யுத்தத்தில் எனக்குச் சேனாதிபதிப்பட்டம் கட்டியிருப்பாயாகில் இந்த பாண்டவர்களை வென்று உனக்குப் பட்டங் கட்டியிருப்பேன். என்மீது சந்தேகப்பட்டு நீக்கிவிட்டாய், இப்பவுமென்ன இன்றுபொழுது போவதற்கு முன்னே பாண்டவர்களை வெட்டித் தலைத்து உன்னிடத்துக்கு வருகிறேன் அப்படிக்குச் செய்யாமல் வருவேனாகில், நான் துரோணாசாரியருடைய புத்திரனல்ல, நவரத்தினமணிமகுடந்தரித்த உனது தலையின்மீது பீமன் கால்கொண்டு உதைத்தானென்பதைக் கேட்டு நான் உன்னுடன்கூட உயிர்விடாமல் இதுவரையினும் பிராணனை வைத்துக்கொண்டிருப்பது எனக்குப் பெரிய அழகுதான். இப்போதாகினும் உனது சேனை நாயகனென்று என்னைநேமித்து அனுப்புவையாகில் பழிக்

குப்பழியாகிலும் முடிக்கிறேனென்று அசுவத்தாமன் அக்கறையாய்ச் சொல்ல, வாகுமாலையணிந்த அவன் தலையின்மீது முழுமணிப்பட்டஞ்சூட்டி பாண்டவர்களை முடித்துவாவென்று முடுக்கிவிட்டான் துரியோதனராசன். இப்பால் சஞ்சயன்வந்து பிரலாபித்தான். துரியோதனன் கண்ணைத் திறந்து பார்த்து விவகாரந்தெரிந்த நீர்தானே விசனப்படலாமா, ஊழ்வினை ஒருவரையும்விடாது, எனது தாயுந்தந்தையும் சிந்தைநொந்து மெத்த வருந்துவார்கள். அவர்கள் துயரந்தீரும்படி செய்யும். நான்விசேஷித்துச் சொல்லவேண்டியதொன்றுமில்லை போய்வாருமென்று அனுப்பிவிட்டான்.

சஞ்சயன் அஸ்தினபுரத்திற்குவந்து மாதாபிதாவாகிய திரிதராஷ்டிரனையும் காந்தாரி முதலிய பேர்களையுங்கண்டு, துரியோதனனுக்குச் சம்பவித்த தீமைகளைச்சொல்லி அதனல் அவர்கள் அடைந்த துயரத்தை நீதிமொழிகளால் மாற்றி அதிகமாய் அவர்கள் துயரப்படாதிருக்கும்படி பிராமணுள் முதலிய பெரியோர்களைக்கொண்டு தர்மநீதிகளைப் போதித்துக்கொண்டிருக்கும்படி அமைத்து வைத்து மறுபடியும் சஞ்சயன் குருக்ஷேத்திரத்திற்குத் திரும்பிவந்தான். இப்பால் அசுவத்தாமனும் மற்றிருவரும் புறப்பட்டு பாண்டவர்களை சதிசெய்யும்படி யோசித்து அவர்கள் பாசறையை நோக்கி வந்தார்களென்று ஜனமேஜய மகாராஜனுக்கு வைசம்பாயனரானவர் பகரலுற்றுர்.

சுயோதனபர்வம்-முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீமகாபாரதம்.

பதினோராவது

சௌப்திகபர்வம்.

விருத்தம்.

உருவெற் றருவென் றுளதென் றிலையென்
றிருவென் றெளியென் றிகல்வோர் முனிவோர்
மருகன் றிடரும் வரதா வுனைநின்
னருளென் றிலவே லறிவா ரெவரே.

பதினெட்டாம்நாள் ராத்திரி பாசறை யுத்தம்.

ஸ்ரீவேதவியாசரை வைசம்பாயனர் மனதில் ஸ்துதித்து அசுவத்தாமனால் நடந்தேறிய விந்தையை ஜனமேஜய மகாராஜனுக்குச் சொல்லத் தொடங்கினர். கேளும் கிருதார்த்தனாகிய ஜனமேஜய மகாராஜனே! வேதக்கொடியோன் மைந்தனாகிய அசுவத்தாமன் கிருபாசாரியர் கிருதபன்மன் இவர்கள் மூவரும் ஒருகுளத்தருகில்வந்து சந்தியனுஷ்டானத்தை முடித்துக்கொண்டு பொழுதுபோகிற வரையிற் காத்திருந்தார்கள். அவ்விடத்திலிருக்கிற ஒரு ஆலமரத்தில் உட்கார்ந்திருந்த அநேகங் காக்கைகளை ஒரு பெரிய கூகைப்பட்சியானது வந்து அவைகளைக்கொத்தி இறக்கும்படி செய்தது. இருட்டில் காக்கைகளுக்குக் கண்தெரியாமையினால் கூகைக்குத் தப்பித்துக்கொள்ளாமல் மாண்டன. இதைப்பார்த்த அசுவத்தாமன் ராத்திரியென்றும் நித்திரையென்றுந் தருமம் பார்க்கலாகாது, பகற்காலத்தில் சத்துவமில்லாத கூகையானது ராக்காலத்தில் தன் பகைவரை வெல்வதுபோல் தானும் அவ்விதமே நடத்தவேணுமென்று போர்செய்ய நினைத்து எழுந்திருந்தான். கிருபாசாரியர் அசுவத்தாமனுடைய கருத்தை அறிந்து அவனைப்போகவொட்டாமல் நிறுத்தித் தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, நீதிநூல்களைப் போதித்து இராக்காலத்தில் நித்திரை செய்யும் பேர்களையும் நிராயுதரையும் சரணமடைந்தோரையும் உயுத்தத்துக்குப்பயந்து ஓடுகிறவரையும் கொல்லலாகாது. கொன்றால் அவனுக்கும் அவன் கால்வழிக்கும் மாறாத கொடும்பாவம் பிடிக்கும் நீ பிராமணனானதால் க்ஷாத்திரம் வைக்கலாகாதென்றும் பழிவாங்கக்கூடாதென்றும் பலவித ஞாயங்களைச் சொல்லிக்காட்டித் தடுத்தார். அந்த வார்த்தையை அசுவத்தாமன் கேளாமல், பதினெட்டுநாள் நடந்த உயுத்தத்தில் எதிரிகள் உயுத்த

15

விதிகளுக்கு விரோதமாய் அனேகங் கொடுமையான காரியங்களை நடத்தியிருக்கிறார்கள். துடைமுறிந்து விழுந்த துரியோதனராஜனை பீமசேனன் முறைமைக்குவிரோதமாய் சிரசில்காலால் உதைத்தது மிகவும்அக்கிரமம், என்தகப்பனார் துரோணாசாரியர் ஏகாக்கிரசித்தராய் இருந்ததைப் பார்த்தும் திருஷ்டத்தியும்னன் கொன்றது மிகவும் கொடுமை, அப்படிப்பட்டவர்களை இராத்திரியில் கொல்வதனால் எனக்குப் பாவம் நேரிடாதென்று பிடிவாதமாய்ச் சொன்னான். மருமகனாகிய அசுவத்தாமன் வார்த்தையைக்கேட்ட கிருபாசாரியர் இது உன் செய்கையல்ல உமாமகேஸ்வரருடைய செயலாயிருக்கிறதென்று மருமகனுடன் பாண்டவர்களது பாசறைநாடிச் சென்றார். அப்போது இந்த அசுவத்தாமனுடன் திருவிளையாடல் செய்ய வேணுமென்று உமாமகேஸ்வரர் இச்சையுடையவராய்ப் பாசறைவாசலுக்கு வெளியில் ஒரு மகாபூதத்தை நிருமித்தனுப்பினார். அசுவத்தாமன் அதைக்கண்டு பரமனுடைய திருவிளையாட்டென்று அறியாமல் அந்தப் பூதத்துடன் எதிர்த்து உயுத்தஞ்செய்து தன்னுடைய ஆயுத அஸ்திரங்களையெல்லாம் போக்கடித்துக்கொண்டு சோர்ந்து நின்றான். கிருபாசாரியரும் கிருதபன்மனும் அந்தப் பூதத்தையெதிர்த்து யுத்தஞ்செய்து அபஜெயப்பட்டார்கள். அந்தப்பூதமானது இவர்கள் மூவரையுந் தேருடன் தூக்கி ஆகாயத்திலெறியவே, மேலோங்கிய தேரானது பூமியில்விழுந்து சாரதிகுதிரைகள் மாண்டன. இவர்கள் மூவரும் மிகவும்நொந்து, இந்தப் பூதமானது இந்தமட்டும் நம்மைபிராணனுடன் விட்டதுபோதும் அசுவத்தாமரே! நாம் உயிருடன் திரும்பிப்போவது நன்மையென்று கிருபாசாரியர் சொன்னார். அசுவத்தாமன் அதற்கு உடன்படாமல் ஈசனுடைய கருணை என்னைவிட்டு நீங்கிப்போகுங்காலம் நேரிடுமாகில், அப்போது உமது பேச்சைக்கேட்டுத் திரும்பினாலே யல்லாது இதன்மத்தியில் இளைத்துப்போவேனென்று எண்ணாதீர். நான் பரமசிவனைக்குறித்துத் தவம்பண்ணி என் எண்ணப்படி நிறைவேற்றுகிறேன். அதுவரையில் நீங்களிருவரும் இந்தமரத்தடியிலிருங்களென்று அவர்களை நிறுத்திவிட்டு அருங்காட்டைக்கடந்து பரிசுத்தமாகிய ஒரு இடத்திற்போய் ஆசாரத்துடன் பரமனைக்குறித்துத் தியானித்துக்கொண்டிருந்தான்.

இவ்விதமாக யோகநிஷ்டையிலிருந்து தவம்புரியும் அசுவத்தாமனுடன் திருவிளையாடல் செய்வதற்கு விரும்பிய விமலன் அந்த அசுவத்தாமனுக்கெதிரில் ஒரு அக்கினிவேதிகைபோல் வந்திருந்து அனேகவித பூதங்களை அவன்மீது ஏவிவிட்டார். அவைகள் செய்த உபத்திரவத்தை இலக்ஷியஞ் செய்யாமல் அசைவற்றிருந்தான். அப்படி உறுதியாய் நிலைத்து நின்றவனை ஒரு பூதமானதுவந்து அவனை நெருப்புக்குண்டத்தடியில் இழுத்துக்கொண்டுபோய் தள்ளிற்று. அவன் கண்விழித்துப்பார்த்து ஈசன் பிரசன்னமாகாததினால் மனங்கசந்து இறந்துபோவதே நலமென்று நெருப்புக்குழியில் விழத்தாவினான். அந்த அக்கினிகுண்டமானது உடனேமறைந்துபோய் உமாமகேஸ்வரியுடன் ஈசன் பிரசன்னமானார். அவரைக்கண்டு

துதித்துப் போற்றினுன். இப்படியாக ஸ்துதித்துநின்ற அசுவத்தாமனே சர்வேஸ்வரன் ஆசையுடன் அணைத்து உன்னுடன் போர்செய்த பூதங்கள் யாவும் நமது விபூதியின் திருவிளையாடல் விநோதமென்றறிக. இத்தியாதி உபத்திரவங்களுக்கு நீ அசஞ்சலனுயிருந்து நம்மை ஸ்துதித்தபடியால் உன் கருத்தென்னவென்று வினவ, சுவாமீ பாரதப்போரில் மீந்திருக்கும் பேர்களை முடிக்கவேண்டுமென்று பணிந்தான். உமாமகேஸ்வரன் அவனுக்கு ஒருவாளாயுதத்தைக்கொடுத்து சேனைகள்யாவையும் நீகொன்றுமுடிப்பாய், இன்று ராத்திரியில் உன்னுடன் யுத்தம்புரிந்து ஒருவரும் பிழைக்கமாட்டார்கள். ஆனல் உன்கண்ணிற் படாமல் ஓடிப்போனவர்களுக்கு உயிர்தக்கும் அவர்கள் பிழைத்திருப்பார்கள், பூதங்களினுல் அழிந்துபோன தேர் வில் முதலிய யாவும் உனக்குப் பழையபடி கைகூடுமென்றருளி தோகைபாகனுகிய சூலபாணியர் கைலாசத்துக்கெழுந்தருளினுர். உடனே பூதங்களால் சேதப்பட்ட தேர் குதிரை வில் அம்புகள் யாவும் அசுவத்தாமனுக்கு நேரிலிருக்கக்கண்டு அற்புதமடைந்து தேரிலேறி கிருபாசாரியரிடம் வந்தணுகி கங்காதரக்கடவுளின் கருணைபெற்ற மகாத்மியம் அனைத்தையுஞ்சொல்லி அவர்களையும் தேர்மேலேற்றிக்கொண்டு பாசறையில் வந்திறங்கி கிருபாசாரியரையும் கிருதபன்மனையும் கூடாரவாசலில் காவல்வைத்து உள்ளிருந்து வருபவர்களை விடாமற் கொல்லும்படி எச்சரிக்கை செய்துவிட்டு வாளாயுதத்தைக் கையிற்கொண்டு உட்புகுந்து நித்திரைசெய்த திருஷ்டத்தியும்நனுடைய கழுத்தில் வில்லின் நாண்கயிற்றைமாட்டி வெளியிலிழுத்துவந்து அவன் தேகத்தைச் சிலுக்கக்கொத்தி அவனைக்கொன்றுவிட்டான். இந்த அரவத்தைக்கேட்ட மற்றவர்கள் எழுந்து வெளியில் வருவதற்குமுன்னமே, இளம்பஞ்சபாண்டவர்கள் சிகண்டி முதலிய மன்னவர்கள் யாவரையும் நிமிஷத்தில் கொன்று குவித்தான். பகற்சண்டையைப்பார்க்கிலும் இது பத்துப்பங்கதிகமாக நடந்து, தாதுபிராதில்லாமல் இத்தியாதிகளும்முடிந்தன. பாண்டவர்களும் சாத்தகியும் அவன் கண்ணுக்குத் தென்படாமல் போனதைப்பற்றி ஈசனுடைய அருளினுல் நீங்கினுர்கள்போலிருக்கிறதென்று நினைத்து பழமையாகிய பகைமை முடித்த அசுவத்தாமன் கோபந்தணிந்து துரியோதன ராசனிடம் போக மற்ற இருவரையும் அழைத்துக்கொண்டு, அவிடம்வந்து ராசன் கிடக்கும் நிலையைப்பார்த்து துயரப்பட்டழுதார்கள். இவர்கள் துயரப்படும் சத்தத்தைக்கேட்ட துரியோதனன் கண்விழித்துப்பார்த்து நீங்கள் போய்வந்தகாரியம் யாதென்று வினவ அசுவத்தாமன் பாசறையில் நடத்திய கொடுமையான விந்தைகளையெல்லாஞ் சொல்லி, கண்ணனுகிய மாதவனும் அவர்தம்பி சாத்தகியும் மன்னவர் ஐவரும் நான் போகுமுன்னேமே தப்பித்துக்கொண்டு அவிடம் விட்டு நீங்கி ஓடிஒளித்துப்போனுர்கள். மற்றவர்களெல்லோரும் இறந்துபோனுர்கள். தேவரீரைப்பார்த்து இச்செய்தி சொல்லும்படியாய் மீண்டுவந்தோமென்று சொல்ல, அதைக்கேட்ட அரவக்கொடியோன் சொல்லத்தொடங்கினுன்.

ஆழ்ந்த பேரறிவுடைய அசுவத்தாமனே! உன்திறத்தை யோசிக்காமல் கர்ணனையும் சல்லியராசனையும் என் வாழ்நாளெல்லாம் நம்பி அவர்களால் என்காலத்தை விருதாவாய்க் கழித்துப்போட்டேன். கடைசியில் யோசிக்குமிடத்தில் பாண்டவர்களுக்கு தமையன் கர்ணனாகவும் அவர்களுக்கு மாமன் சல்லியனாகவும் இருந்தார்கள். இனி அதை நினைப்பதில் காரியமில்லை. அவர்களென்மட்டில் பாடுபட்டதற்கும் குறைவில்லை. என் கதியிப்படியாயிற்று. ஆதிநாளில் உம்மை நம்பாமல்போன அநியாயத்தால் நானிறந்தேனென்றான். அந்தச்சமயத்தில் சஞ்சயன்வந்து ராசன் பாதத்தில்விழுந்தழுது ஒருபுறத்தில் நின்றான். மூவரும் ராசனைப்பார்த்து மிகவும் வியாகுலித்தார்கள். அப்போது துரியோதனன் அவர்களைப்பார்த்து என்பிரியமானவர்களே! ஆருக்கார்துணை, ஒருவருக்கொருவர்சம்பந்தமில்லை, கன்றும் பசுவும் காடேறிமேய்ந்தால் கன்றொருபக்கம் பசுவோர்புறமே என்பதுபோல், அவரவர்கள் நல்வினைதீவினைப்படிமுடியும் என்றுரைத்து, பக்கத்தில் நின்ற சஞ்சயனைப்பார்த்து, நீயுமிவர்களும் இதுவரையிலுஞ் சஞ்சலப்பட்டீர்களே, அதினாலாவதேதாவது முண்டோ, அப்பனே என்று தாய்க்கும் தந்தைக்கும் தேறுதல் சொல்லி அவர்கள் சொல்லுக் கெதிர்பேசாமலிருந்து நல்லபலனை அனுபவிக்கச்செய்யும். நான்மெத்தவும் வணங்கினேனென்று சொல்லும். எனது சிறியதந்தை விதுரராசனுக்கு எனது வணக்கத்தைச்சொல்லி அவர்வார்த்தைக்கு இணங்காத நான் பிணங்குவியும் களத்தில் அணங்குழந்தேனென்று சொல்லும். நான் செய்த அபசாரங்களை க்ஷமிக்கச்சொல்லும், நான் சொந்தப்பிள்ளையென்றும் பாண்டவர்கள் தம்பிபிள்ளைகளென்றும் நினைக்காமல் இனி அவர்களைத் தன்பிள்ளைகளென்றும் நினைக்கும்படி சொல்லும். அவர்களுடன் கலந்து இருக்கும்படியாய் என் தாய்க்குந் தந்தைக்கும் பாண்டவர்களுக்கும் உறவுகூட்டிவைக்கக் கடவாய், உத்தம சஞ்சயனே என்றியம்பி, அசுவத்தாமர் கிருபாசாரி இருவர்களைநோக்கி நீங்கள் இதுவரையிலும் அனுபவித்த சுகமேயொழிய இங்கே வேறில்லை; இனிமேலாகிலும் அருந்தவம் புரிந்து ஆத்துமலாபந் தேடிக்கொள்ளுங்கள். என்னிடத்திலிருந்து என்சுகத்தை விரும்பினவர்களாகையால் பாண்டவர்களிடத்தில் சேரவேண்டாமென்று சொல்லி விடைகொடுத்தனுப்பிவிட்டு, ஜகதீசனை சிந்தையில் நிறுத்தி வாக்கினாலும் வாழ்த்தினான்.

ஆகாயத்தில் வேடிக்கை பார்த்துநின்ற தேவதைகள் துரியனைப் புகழ்ந்து நின்று புஷ்பமாரி பொழிந்து இந்திரவிமானத்தில் சகல மரியாதைகளுடன் அவனை யேற்றிக்கொண்டு சுவர்க்கம் போய்ச் சேர்ந்தார்கள். இவ்வித கோலாகலமாய்வருகிற பூபதியை இவனுடைய தம்பிமார்களெல்லோரும் முக்கோடிதேவருடன் எதிர்கொண்டழைக்க, உவந்து மகிழ்ந்து அம்பொன்னாட்டை அடைந்து பரமகதிபெற்று ஆனந்தமுற்றான் துரியோதனமகாராசன். இப்பால் அவிடத்திலிருந்த கிருபாசாரியர் அசுவத்தாமன் கிருதபன்மன் சஞ்சயன் வருந்தி ஒருவருக்கொருவர் தேறிச்

கொண்டு அவ்விடம் விட்டுப் போனர்களென்று வைசம்பாயனரானவர் ஜெனமேஜய மகாராசனுக்கு விவரித்தருளினர்.

பாசறையுத்தம் முற்றிற்று.

அசுவத்தாமனுடைய சிரோமாணிக்கத்தை கவர்ந்த சருக்கம்.

விருத்தம்

வடித்தரிய கலைகளெல்லா மறைமுனி பாற் றெளிந்தபதம்
வெடித் தண்டம் பொதுளவனை விசயனுக் குறித்தபதம்
முடிக்கரிய பாரதத்தை முடித்தபதம் விடத்தரவின்
நடித்தபத நினைந்த வர்க்கு நல்குபதம் பணிகுவாம்.

கேளும் ஜனமேஜயமகாராசனே! அசுவத்தாமன் சண்டை முடிந்த மறுநாளாகிய பத்தொன்பதாம்நாட்காலமே. சூரியனுதயமாகையில் பாண்டவர்கள் ஐவரும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் சாத்தகியும் பாசறையை நோக்கிவருஞ்சமயத்தில் திருஷ்டத்தியும்நனுடைய சாரதியெதிர்ப்பட்டு அவர்கள் பாதங்களில் விழுந்தழுது அசுவத்தாமனல் ராத்திரிமாண்டபேர்களுடைய முடிவனைத்தையும் உரைத்தான். இதைக்கேட்ட மன்னவர்கள் கடுங்கோபங்கொண்டு அசுவத்தாமனை அதமாக்கி நாங்களு மிறப்போமென்று சபதஞ்சொல்லிக்கொண்டு வரும்போது, ஸ்ரீகிருஷ்ணர் அவர்களைத் தேறுதல்படுத்தி, பாசறையில்புகுந்து அவிடத்தில் பிரேதங்களாய்க் கிடக்கும் இளம்பஞ்சபாண்டவர்கள் திருஷ்டதூய்நன் முதலானவர்களுடைய தேகத்தின்மீது ஐவரும் விழுந்தழுது கண்ணீர் சோரவிட்டு துயரப்பட்டுக்கொண்டிருக்குஞ் சமயத்தில் உபலாவியத்திலிருந்த துரோபதையானவள் இச்செய்தி கேட்டு, இளம்பஞ்சபாண்டவாள் இறந்து கிடக்கும் பாசறையில்வந்து பிரேதங்களைப்பார்த்தழுது, கணவனுகிய காவலனையும் கண்ணனையும் கண்டு கதறி பூமியில் விழுந்தழுது பிரலாபித்தாள். பாண்டவர்களும் ஸ்ரீகிருஷ்ணரும் அவளுக்குத் தேறுதல் சொன்னார்கள். நீங்களிருந்து மிப்படி நடந்ததே இதென்ன சூதோவென்று விசனப்படுந் துரோபதையை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் ஆறுதல் படுத்தி, பாண்டவாகளை அழைத்துக்கொண்டு வனத்திற்குப்போய் அவர்களை அமைச்சலாய் நித்திரைசெய்யும்படி விட்டு நானும் காவலாயிருந்தேன், அசுவத்தாமன் இப்படிக்கெல்லாஞ் செய்தானென்றார். துரோபதை தர்மராசனைப்பார்த்துஎன் பிள்ளைகள் ஐவரையும் எனதுசகோதரனையும் தூக்கத்தில் தலையறுத்தபாவியாகிய அசுவத்தாமனுடைய கொழுத்ததலையை அறுத்து என்பாதத்தில் போட்டு மிதித்தபிற்பாடு என் தலைமயிரை முடிப்பேனே யல்லாது இதன் மத்தியில் மூடிக்கமாட்டேனென்று சபதங்கூறினள். இதைக்கேட்ட தரு

மராசன் துரோபதையைப்பார்த்து, நீராஜ சபையில் கூறிய சபதத்தை நிறைவேற்றி உன்கூந்தலை முடிப்பதற்கு நிறைவேறியும் நிறைவேறாமலும் இருக்கும்போது, சிரஞ்சீவியாகிய அசுவத்தாமன் தலையை வாங்குகிறதாய்ச் சொன்னையே இதற்குபதில் யார்தலையைவாங்க இந்தப்பேச்சுச்சொன்னையென்று மனத்தாங்கலடைந்தார். ஸ்ரீகண்ணனவர் புத்திரசோபத்தால் துரோபதைஆத்திரப்பட்டுசொல்லிவிட்டாள். எண்சாணுடம்புக்கும் சிரசேபிரதானம்; அந்தச்சிரசைப்பார்க்கிலும் சிரமேலணிந்தபொருள்பிரதானமானதால் அந்த அசுவத்தாமன் தலைமேல் சிரோமாணிக்கம் ஒன்றிருக்கிறது அதைவாங்கிக்கொடுத்துவிட்டால் இவள் சொன்ன சபதமும் நிறைவேறும். அவனுக்கும் கெர்வமடங்கிப்போம். இப்பேர்ப்பட்ட அநியாயயுத்தஞ்செய்த அவனை இவ்வளவுவேலை செய்யாவிட்டால் நமக்கும் பெருமையிராது என்று விளம்ப, பாண்டவர்களும் பாஞ்சாலியும் அதற்குடன்பட்டார்கள்.

அசுவத்தாமனுடைய சிரோமாணிக்கம் இளப்பமா, அதைத்தான்வாங்க ஆரால்முடியுமென்று தருமராசன் சலித்துச்சொன்னபோது, பெருமைபெற்ற பீமசேனன் இதோ நான்போய் அவன்தலையை என்கதையால் பூமியிலுருட்டி சிரோமாணிக்கத்தை கவர்ந்து உங்கள்கையில் தருகிறேன்; அப்படிச்செய்யாமற் போவேனகில் அக்கினியில்விழுந்து இறந்துபோறேனென்று விளம்பினன். அவ்வேளையில் ஸ்ரீகிருஷ்ணர் பீமனைப்பார்த்து உன்னலாகாதகாரியமொன்றுண்டோ, இப்போதேபோய் ஜெயித்துவரக்கடவையென்று சொல்ல சகாதேவன் சாரத்தியஞ் செய்யும்படியான ஒரு தேரிலேறிக்கொண்டு புறப்பட்டான். ஆயர்பாடியிற்பிறந்து ஐவரை ஆளவந்த அருள்சிறந்த பரந்தாமன் சொல்லுகின்றார். கேளும் தருமநந்தனா! சண்டைசெய்யப்போற பீமசேனன் வெற்றிபெறும்படியாய் மகாகொடும்பாவியாகிய அசுவத்தாமன் இவனுக்கு இடங்கொடுக்க மாட்டான். அவனுடைய தந்தை துரோணாசாரியர் பரமசிரமென்னும் ஒரு அஸ்திரங்கொடுத்திருக்கிறார், அந்த அஸ்திரத்தின் வல்லமையை எவர்களாலும் அளவிடப்போகாது. அந்தஅஸ்திரமும் சிரோமாணிக்கமும்அவனுக்கு அற்றுப்போய்விட்டால் அவன் கொட்டம் அடங்கிப்போம், சிலவிசை அவனந்த அஸ்திரத்தை பீமன்பேரில் பிரயோகித்தால் அப்பால் பீமனைநாம் காணப்போகிறதில்லை இன்னமொன்றுண்டு கேளுங்கள், சிலநாளைக்குமுன்னே இந்த அசுவத்தாமன் துவாரகைக்குவந்து என்னைக்கண்டபோது பரமசிரமென்னும் அந்தக்கணையின் பிரதாபத்தைச்சொல்லி உமக்கிந்த அஸ்திரத்தைத்தருகிறேன் அதற்கீடாக உமது சக்கரத்தைக் கொடுமென்று தைரியமாகக்கேட்டான். நல்லது ஐயனே! உமதுகணை நமக்குவேண்டாம், சக்கராயுதம் உமக்குத்தருகிறேன் இதோ இருக்கிறது எடுத்துப்போமென்றேன். சக்கராயுதத்தை வெகுலேசாகத் தூக்கலாமென்று நினைத்து ஒருகையினலெடுத்தான். அதையெடுக்கமாளாமல் இருகரத்தாலும் எடுத்துப்பார்த்தும் தன்னல் மாளாமல் சிறுநகை நகைத்து என்முகத்தைப் பார்த்

தான். நானும் அவன் முகத்தைப்பார்த்து நகைத்து இந்த சக்கராயுதத்தை எடுக்கத்தகுந்தகாரியமும் வீரியமுமில்லாத நீ எப்படி சத்துருக்களை வெல்லப்போருய், இந்த சக்கராயுதத்தின்திறம் எப்பேர்ப்பட்டதென்று நீஅறியாமல் போனையே, திரிலோகத்திலும் பொருந்தியிருப்பவர்களுக்கு இது கிடைக்குமோ அவர்கள் கையில் கிட்டுமோ இங்கேவாரும் உட்காரும் இதுவரையிலும் ஒருவருமிந்த சக்கராயுதத்தை இச்சித்ததில்லை, நேரே நீர் பாருமென்று என்கையை நீட்டினேன் என்கைமீது சக்கராயுதம் வந்துநின்றது. அதை அதிசயமாக அசுவத்தாமன்கண்டு எனக்கு உபசாரஞ்சொல்லி தெரியாமல் கேட்டேனென்று தியங்கினுன். உடனே அவனுக்கு வேண்டும் மரியாதைகளைச்செய்து அனுப்பிவிட்டேன்.

இதுகாரியத்தை புத்திமான்களாகிய நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். அவன் கணைக்கும், என்சக்கராயுதத்திற்கும், சரியென்று அவன்கொண்டிருந்த நினைப்பை கண்டீர்களா ஓ பாண்டவர்களே இப்போது அது எனக்கு நினைவுவந்தது, நாம் அனைவரும் அவ்விடத்துக்குப் போகவேண்டுமென்று மாதவன் வேறுதேரேறி, அர்ச்சுனனை அழைத்துக்கொண்டு போனுர். இவர்களிப்படி வருவதற்குள்ளாக கிருபாசாரியரை அஸ்தினபுரத்திற்கும் கிருதபன்மனை அவன் ஊருக்கும் அனுப்பிவிட்டு துரோணசாரியர் பூர்வத்திலிருந்தவனத்திற்குவர எத்தனப்பட்டிருந்தான் அசுவத்தாமன். கோபங்கொண்டு கிளம்பிவந்த பீமசேனன் அசுவத்தாமனைக் கண்டு பிடித்து என் தண்டாயுதத்தால் உன்னைக் கொல்லுகிறேனென்று அறைகூறியழைத்தான். அசுவத்தாமன் யாதொன்றும்பேசாமல் வில்லில் நாணை ஏறிட்டு குணத்தொனிசெய்து பரமசிரமென்னும் கணையைப் பூசித்துவிடுத்தான். அந்தக்கணையானது வெளிப்பட்டு அநேகம் ரூபங்களாய் வருவதைப்பார்த்த பீமசேனன் பண்ணவன் பதத்தை மனதிலுன்னி அசைவற்று நின்றுன். அந்தக்கணையின் வல்லபத்தை அறிந்த மாயவன் விஜயனை நோக்கி உன்னிடத்திலிருக்கும் பிரம்மசிரநாமக்கணையை யெடுத்து விடென்றுர். விஜயன் அதுபோல் தன்கணையை விடுத்தான். இந்தஇரண்டுகணையும் ஒன்றோடொன்று கட்டிப்பிரண்டு செய்யும் அமளியினுல் நிலத்தில் பொருந்திய ஆத்துமகோடிகளெல்லாம் பதைபதைக்கும்போது நாரதரும் வேதவியாசரும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியிருக்குமிடத்திற்கு வந்தார்கள். அவர்களைக்கண்டு இவர்கள் உபசரித்தபோது ஐயா அவரவர் தங்கள் தங்கள் சவுக்கியம் பெறுவதற்கு உலகத்தை அழித்துவிடலாமா, ஜீவகாருண்ணிய மில்லாமல் இப்பேர்ப்பட்ட கொடுஞ்சரம் புரியப்போமா, இதனுல் முத்திபெறலாமாவென்று கேட்டகாலத்தில் அசுவத்தாமன் மௌனமாயிருந்தான். பரிசுத்தமாகிய விப்பிரனே! உன்னைப்போலொத்த உத்தமன் இப்பேர்ப்பட்டகொடியதொழிலுக்குப்பிரவேசிப்பானுகில் தயவுதாக்ஷண்ணியமில்லாதபேர்கள் தர்மத்தை யெண்ணிப்பார்ப்பார்களா, நீரல்லவோ உலகத்திற்கு தருமத்தை போதிக்கவேணும், நீர்தானே இப்படி செய்யப்போமா, உலகமழிந்து போகுமுன்னமே நீர் விட்டகணையை திருப்பிக்

கொண்டு ஆத்மகோடிகளை இரக்ஷித்து விடுமென்றுகூற இந்தக்கணைவிடத் தெரிந்துகொண்டேனேயல்லது மறுபடியும் மீட்க நான் கற்கவில்லை; இந்தக்கணைக்கு ஏதாகிலும் ஆஹூதிகாட்டுவீராகில் இதினுடைய வேகம் அடங்கிப்போமென்று அசுவத்தாமன் மர்மமாகச்சொன்னான். அதைக்கேட்ட இரண்டுமுனிவரும் அர்ச்சுனனைப்பார்த்து நீயாகிலும் தயவுசெய்து உன் கணையை அழைத்துவிடென்று உபசரித்தார்கள். மகாமேன்மைபொருந்திய முனிவர்களே! தேவரீருடைய அனுக்கிரகத்தினாலும் ஆசாரியர் அருளினாலும், விடவும் அழைக்கவும் கற்றிருக்கிறேன். ஆனால் நான் விட்ட கணைக்கு இந்த அசுவத்தாமனுடைய சிரோமாணிக்கத்தைக் கொடுப்பானாகில் ஒருநொடிப்பொழுதில் என்பாணங்களை திருப்பிவிடுகிறேனென்றான். அந்தச்சொல்லையுணர்ந்து இரண்டு முனிவர்களும் அசுவத்தாமனைப் பார்த்து அஸ்திரத்தைவிடவும் திரும்பவாங்கவும் கற்றுக்கொள்ளாமல் போனாய், மகாபாபத்தொழிலைப் பூண்டாய், நரகம் தேடிக்கொண்டாய், நல்லது அர்ச்சுனன் தன்பாணத்தைத் திருப்பிக்கொள்ளுகிறேனென்கிறான் அந்தக்கணைக்கு ஆஹூதியாக என்னலக்ஷியம் காட்டுகிறாய் சொல்லென்று கேட்க, அசுவத்தாமன் சொல்லத்துடங்கினான்.

சுவாமிகளே! பாண்டவர்களுடைய பிராணனைவாங்கும்படி நான்கணைவிடுத்தேன். என் எண்ணமும் வாய்ச்சொல்லும் பழுதுபடாமல் இந்த பாண்டவகுலமாதர்களுடைய கெர்ப்பங்களையெல்லாம் முடிக்காமல் போகாது, அவ்வளவாகிலும் எனக்கு ஆஹூதிசெய்யவேணுமென்று அசுவத்தாமன்சொல்ல, அம்மொழியைக்கேட்ட முனிவர்கள் தியங்கி நிற்கும்போது முகுந்தனானவர் சொல்லுகின்றார். ஐயா அப்படியே சம்மதந்தான். உத்தரையின் கெர்ப்பத்தி லிருக்கின்ற ஒருகருவை மாத்திரம் இந்தப் பூமியை ஆளும்படி விட்டுவிட்டு மற்ற கருக்களையெல்லாம் அவர் வாயிற்போட்டுக் கொள்ளும்படி அவரது அஸ்திரத்தைப்பரவசஞ்செய்யச்சொல்லுமென்று மாதவனுரைக்க, அதுகூடாது முந்தி அவளுடைய கருவைத்தான் அழிப்பேனென்று அசுவத்தாமன் பிடிவாதமாய்ச் சொன்னபோது, திருமகனாகிய ஸ்ரீமான் நீயப்படி சம்மதியாமற்போனால் உன் கணையானது செய்ய வேண்டியதைச் செய்யட்டும், உன்கணையால் அந்தக்கருவானது சேதப்பட்டாலும் மறுபடியும் உருவாகச்செய்து காலத்திற் புத்திரனாக பிறக்கும்படி செய்து அவனே இந்த பூமியாளும்படி மணிமுடிசூட்டி வைப்பேன் என்றார். அசுவத்தாமன் மந்திரத்தைமாற்றி யுருவேற்றி பாண்டவர்களின் பத்தினிமார்கெர்ப்பத்தையும் உத்தரையின்கெர்ப்பத்தையும் அழித்தான். இப்பால்அர்ச்சுனனைப்பார்த்துஅசுவத்தாமனுடைய உபத்திரவம்தீர்ந்தது உன்னுடைய பாணத்தைத் திருப்பிவிடென்று முனிவர்கேட்க, நான்முன் கூறியதுபோல் அசுவத்தாமனுடைய சிரோரத்தினத்தை ஆஹூதிகொடுத்தால் திருப்பிவிடுகிறேனென்று சொன்னான். அந்தமுனிவர்கள் அசுவத்தாமனை சமாதானப்படுத்தி அவன் சிரோரத்தினத்தை வாங்கி காண்டீபனிடத்தில் கொடுத்தார்கள், அர்ச்சுனன் தன்பாணத்தைத் திருப்பிக்கொ

ண்டான். பிறகு அசுவத்தாமனுடைய முந்திய பாணமானது, பாண்டவர் பத்தினிமார்கருவையழித்து வரும்போது, பச்சைமாலனவர் பஞ்சாயுதத்துடன் பிரவேசித்து உத்தரைக்கு யாதொரு துன்பமில்லாமற்செய்து அவள்கெர்ப்பத்தில்பிறக்கும்சிசுவுக்கு சுவல்பமேனும்பிராணச்சேதமில்லாமல்காத்து அசுவத்தாமனைப்பார்த்து, அடா குருத்துரோகி! நீ இன்று முதல் மூவாயிரம்வருஷம் பெண்சாதியில்லாமலும் அன்னந்தண்ணீர் முதலாகிய இன்பபோசனங்கள் ஏற்றுக்கொள்ளாமலும் கருமகாண்டப்படிக்கு பெருவியாதிபிடித்து உபத்திரவப்படுவையென்று சபித்தார். வேதவியாசர் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை வியந்து நன்றாய்ச்சொன்னீரென்று நாவினால்வாழ்த்தி அசுவத்தாமனைப்பார்த்து, நீஇவ்வளவுக்கு இடந்தேடிக்கொண்டாய், உனக்குஇதுவேண்டுமென்று விளம்பினர். அந்தமொழியைக்கேட்ட அசுவத்தாமன் கோபங்கொண்டு வேதவியாசரையும் கோபாலனையும் நோக்கி, எனக்கு நேரிட்ட சாபத்தை நான் அனுபவிக்கும்போது நீங்களிரண்டுபேரும் என்னைவிட்டு நீங்காதிருந்து அந்த வியாதியின் துர்க்கந்தத்தை அனுபவிக்கத்தக்கது. மேலும் உங்களை உலகத்தில் யாவரும் நிந்திக்கும்படியாகவும் நீங்கள் செய்யுந் தொழில்கள் எல்லாம் அசத்தியமென்று பேசிக்கொள்ளும்படியாகவும், தெய்வத்தன்மையில்லாமல் மனிதத்தன்மையாக மகத்துவமற்றுப் போகக்கடவதென்றும் பிரதிசாபங்கொடுத்து வனத்தை நாடிப்போனன். அசுவத்தாமனுடைய கணையினல் சிரமமடைந்த ராஜஸ்திரீகள் முதலாகிய உயிர்களெல்லாம் மாதவனுடைய அருளினல் மனக்களிப்படைந்து மகிழ்ந்திருந்தார்கள். ஸ்ரீவேதவியாசரும் நாரதரும் ஸ்ரீகிருஷ்ணதேவர் முதலானவர்களிடத்தில் விடைபெற்று தவச்சூழல் புகுந்தார்கள். அர்ச்சுனன் பெற்ற சிரோரத்தினத்தைப் பாசறையிற் கொண்டுவந்து பாஞ்சாலியின் கையில்கொடுத்து நடந்தவிருத்தாந்தத்தைச்சொன்னர்கள். துரோபதை சந்தோஷித்து பிராமண குமாரன் அசுவத்தாமனுக்கு நமதுபேரில் இவ்வளவு வர்மம் வரவேண்டிய தென்னவென்று வினவியபோது, அது அசுவத்தாமனுடைய வல்லபமல்ல ஈசனுடையவரப்பிரசாதத்தினல் அவனப்படி நடத்தினன். ஆபிசு முடிந்தாலொழிய ஒருவருக்கும் அனுக்கிரகம் பண்ணமாட்டார். அந்தப்பரமசிவனுடைய செயலினல் நீங்களைவரும் பிழைத்தீர்கள். அப்படிக்கில்லாமல் ராத்திரிதினம் இந்த அசுவத்தாமன் கண்ணில் நீங்கள் தென்பட்டிருப்பீர்களாகில் உங்களை நாசப்படுத்தியே விடுவான். நீங்கள் தப்பிப்பிழைத்தது நீறணிந்தோன் கிருபையென்று அவருடைய சில திருவிளையாடல்களின் மகாத்துமியத்தை யெடுத்துக்கூறி, அவருடைய அடிமுடியை அறிய பிரமாதிகளாலும் காணக்கூடாமல் போன அவ்விதப் பெருமையுடைய சர்வசாக்ஷி

யாய் எல்லாப்பிரளயங்களிலும் ஆட்சியா யமர்ந்து இருப்பவரென்றும்' ஒருவராலும் அறிதற்கருமையாகிய உமாபதியின் பெருமையினல் அசுவத்தாமன் யாவரையுஞ் செயித்தானென்று முகுந்தன் சொல்ல, பாண்டவர்கள் கேட்டு மனதில்பதித்து, பணிந்து அனுக்கிரகனுகிய வசந்தனை வாழ்த்தி போற்றித் துதிசெய்து மகிழ்ந்திருந்தார்களென்று ஜனமேஜயமகாஜனுக்கு வைசம்பாயனர் சொல்லி வாழ்த்தினர்.

சௌத்திகபர்வம்-முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீமகாபாரதம்.

பன்னிரண்டாவது

ஸ்ரீ பர்வம்.

விருத்தம்.

மருந்தைவானவர்க்களித்து வையமுண்டுசெய்யசெம்
பருந்திலேரிமாதவத்தர் பணியவாயர்பாடியிற்
பொருந்துகின்றபொதுவர்மாதர் பூந்துகிற்கவந்துபூங்
குருந்திலேறுகின்றகொண்டல் குறைகழற்கெடுதிசெய்.

திரிதராட்டிரன் புத்திரசோபச்சருக்கம்.

ஸ்ரீவேதவியாசரை சிந்தையிற்கொண்டு வைசம்பாயன மகாமுனிவர் ஜநமேஜயமகாராசனைப்பார்த்து, இதுவரையிலும் பாரதயுத்தத்தின் சரித்திரங்களைச்சொன்னோம், இனி சாந்திபஞ்சகந் தொடங்கிச் சொல்லுகிறேன், கேளும் இராசனே! சௌத்திகபர்வத்தின் சங்கதிகளைத்தெரிந்துகொண்ட சஞ்சயன் சீக்கிரம் அஸ்தினாபுரத்துக்குப்போய், திரிதராஷ்டிரபூபதிக்கு யாவத்தையுஞ் சொல்லியபோது, இராசன்மிகவுந்துயரமடைந்து மெலிந்திருக்கும் தருணத்தில் தீர்த்தயாத்திரை போயிருந்த விதுரமகாராசன், துரியோதனன் மாண்டானென்று அறிந்து, திரிதராஷ்டிரனிடம்வந்து அண்ணனைவாரியணைத்து தேற்றியும் அவர்விசனம் ஆறாமை நோக்கி, வியாசபகவானை வரும்படிஸ்மரித்தார். உடனே அவர்பிரசன்னமாகி, திரிதராஷ்டிரனுங் காந்தாரியுங்கொண்ட புத்திரசோபத்தை தர்மமர்மங்களைச்சொல்லி கொஞ்சங் கொஞ்சமாய் அவர்களுக்குத் தணித்தார். திரிதராஷ்டிரன் வேதவியாசருடைய பாதங்களிற் பணிந்து, இனி நான் செய்யவேண்டிய காரியம் யாதென்று கேட்டான். நீர் இவ்விடமிருந்து துயரப்படுவதினாலே ஸ்திரீகள் எல்லோரும் அதிகமாய்க் கண்கலக்கப்படுகிறார்கள். நீர் அவர்களெல்லோரையும் அழைத்துக்கொண்டு குருக்ஷேத்திரம்போய் மரித்துப்போன பேர்களையெல்லாம் தகனஞ்செய்து நீர்க்கடன் முதலிய யாவும் முடித்துத் திரும்பிவருவது நன்மையென்றார் வியாசர். உடனே அஸ்தினாபுரத்துக் குடிகள்யாவரும் சண்டையில்மடிந்த தங்கள் தங்களுக்குரிய மனுஷரைக் குருக்ஷேத்திரம்வந்து தகனஞ்செய்யலா

மென்று பறைசாத்தச்செய்த பின்னர், தனது ஸ்திரிசனங்களை யழைத்துக்கொண்டு ரணக்களம்வந்து சேர்ந்தான்: இவர்கள் வந்த சங்கதியைப் பாண்டவர்கள் தெரிந்துகொண்டு ஸ்ரீ கிருஷ்ணருடன் தாங்களும் அங்கே வந்து சேர்ந்தார்கள். மூலகாரணராகிய முகுந்தன் பாண்டவர்களை திரிதராஷ்டிரனைப்போய் திடீரென்று காணவேண்டாமென்று நிறுத்தி, தான் முந்திப்போய் இதோ நான் வந்தேன் என்றார். அப்பாகிருஷ்ணா! என் பிள்ளைகளையெல்லாம் வஞ்சித்துக்கொன்றாயே, இனியாவது உனக்குக் கண்ணுறக்கம்வருமா, வஞ்சகனே யென்று வாய்விட்டுப் புலம்பினான். இம்மொழிகேட்ட முரகரிமுகுந்தன் திரிதராஷ்டிரனைப்பார்த்து, சார்வபௌமா பெரியமாமா, நான்செய்தாலுஞ் செய்யாமற்போனாலும் உலகம் என்னையேசொல்லும், தேவரீர் என்னையும் வாயிற்போட்டு மெல்லுவீர், அதனால் எனக்கொரு குறைவுமில்லை உண்மை உண்மைப்படியே இருந்தது. இல்லையென்றாலும் நான் பிறந்தவேளைவிடாது, அப்பால்உமதிஷ்டம், நடக்கவேண்டியது நடந்துபோன பிற்பாடு வருத்தப்படுவதில் பிரயோசனமில்லை. மேல் நடக்கவேண்டிய காரியத்தை யோசிக்கவேண்டியதென்று சொல்லிப் பாண்டவர்களைக் கண்காட்டி திரிதராஷ்டிரர் காலில்விழச்செய்தார். கிட்ட இருந்த விதுரர் அண்ணா உமதுபுத்திரர்களாகிய பாண்டவர்கள் உம்முடைய காலில் வணங்குகிறார்கள் என்றார்.

அம்மொழிகேட்டு ஆமைந்தர்களே என்றுகூறி, என் அன்பான தம்பி பிள்ளைகள் எங்கேயென்று இருகரங்களையும் நீட்டித்தழுவி முந்திக் கையில்தட்டுப்பட்ட தருமனை அன்புடன் அணைத்து முத்தமிட்டுப் பக்கத்தில் உட்காரவைத்து மற்றப்பிள்ளைகள் எங்கே என்று கைநீட்டினர். அவ்வேளையில் பீமனை நேரே போகவிடாமல் நிறுத்தி, அவனைப்போல் ஏற்கெனவே செய்துவைத்திருந்த வெண்கலப் பிரதிமையை முன்னே தள்ளி இதோ பீமன் நான் என்றுபணிந்தான். அப்பாபீமா வாடா என்சாமியென்று கைகால் தழுவி இறுக்கிப் பிடித்தபோது, அந்தப் பிரதிமை பொலபொலவென்று பொடிப்பொடியாய் நொறுங்கிப்போய் திரிதராஷ்டிரன் தானும் களைத்து ஓய்ந்தான். இந்தப்பிரதிமை யாதென்று கேளும் ஜநமேஜயராசனே! பீமன் சிறுவயதில் விளையாடுங்காலத்தில், துரியோதனன் இவனுக்கு விஷத்தைக்கலத்திலிட்டு இவனை ஆற்றிற்போட்டு ஏழுநாள்வரையில் அவனைக் காணாதிருந்த காலத்தில், திரிதராஷ்டிரன் அவன்பேரில் வைத்திருந்த அன்பினால் ஏழுநாள் வரையில் அன்னம் ஆகாரம் இல்லாதிருந்ததைமுன்னிட்டு, விதுரரும் பீஷ்மரும் ஏற்படுத்தி ராசனுக்குக் காண்பித்து தேறுதற்படுத்திக்கொண்டிருந்த அந்தபொம்மைதான் இது என்றறிக. பதுமை பொடிப்பொடியானது கண்டு, பீமன் கோபப்பட்டு, அடா நயவஞ்சகப்பாபீ! நீசெய்த தீவினையால் தங்கமான நூறுபிள்ளைகள் நாசமானார்கள். உனக்கு இந்தக்கெடுநினைவு இல்லாதிருந்தால் இன்னஞ் சிலகாலம் அவர்கள் இருப்பார்கள். நீ இரண்டுகண்ணுங் கெட்டிருந்தபடியால் இன்று நான் பிழைத்தேன். அந்த நூறுபிள்ளைகளைப்போலவே இந்தவஞ்

சகுனேயுங் கொல்லவேண்டியது நியாயம் என்று திட்டினன். இவ்வார்த்தைக்கு திரிதராஷ்டிரன் ஒன்றும் பேசாமல் சும்மாவிருந்தான். அப்போதுமாதவனனவர் பீமனைநோக்கி, ஆபீமா பெரியதகப்பனை இப்படி திட்டலாமா, வாயைமூடென்றுகையமர்த்தி, மாமா! நான் விளைத்த கலகத்தினல் உன் புத்திரர்கள் பௌத்திரர்கள் இறந்தார்களென்று என்மேல் தோஷஞ் சொன்னீரே, இத்தியாதி கேடுகெட்டும் வஞ்சனையுஞ் சூதும் ஆரிடத்தில் நிறைந்திருந்தது. உன்பிள்ளைகள் இறந்ததற்குக்காரணம் நீயேயன்றி வேறொருவருமல்ல, இதோயாவருங் காணும்படியாயிற்றேயென்று இடித்துக் காட்டவே, அன்பாகிய மருமகனே! உன் கடைக்கண் வீக்ஷணம் இருக்குமாகில் என்வஞ்சகம் ஐவரை என்னசெய்யும், என் வஞ்சகம் என்னையே கெடுத்தது. நீங்கள் திருடுந் திருட்டு வெளிக்குவராது. நான் திருடாமல் திருடிக்கெட்டேன். இனியோசிக்குமிடத்தில் இந்த ஐவரைவிட எனக்கு வேறேயார்துணை யென்று இதமான வார்த்தைகளைச் சொல்லிக் கண்ணீர் விட்டான். இதைப்பார்த்த கோபாலகிருஷ்ணர் அவரவர்கள் வஞ்சனை அவரவரையேயழிக்கும், உங்களுக்கு ஒருகுறைவுமில்லை, பாண்டவர்களே! தருமமேஜெயமென்று எல்லாருஞ் சரணஞ் செய்யுங்களென்றார். இராசன் அவர்களைத் தழுவியணைத்து சல்லாபித்துக்கொண்டிருந்தான்.

பாண்டவர் ஐவரும்பெரிய அரசனிடம் ஆசீர்வாதம் பெற்றபின்னர், காந்தாரியம்மனிடம் குடிகொண்டிருக்குந் துயரத்தை நீக்கும்பொருட்டு, முறைமுறையாகச்சென்று வணங்கினர்கள். இவர்களை யெடுத்து உபசரித்த காந்தாரியானவள், பீமனைப்பார்த்து, அடாபீமா! என்னதான் பகையாளியாயிருந்தபோதிலும், சகித்துப்போகாமல் என்பிள்ளைகள் எல்லோரையும் கொன்றாயே! துரியோதனன் பூமியில் விழுந்தபிறகு கொஞ்சமேனும் எண்ணிப்பாராமல், அவன் சிரசில் உதைத்தாயே, இளவரசனகிய துச்சாதனனை சிலுக்கச்சிலுக்கக்கொத்தி உயிர்வதைசெய்து அவன் உதிரத்தையுங்குடித்தாயே என்று கதறியழுதாள். பீமன் அவள் பாதத்திற்பணிந்து தாயே நீஇப்போது மறந்துபேசுகிறாய். பூர்வத்தில்இராஜசபையில் எங்களையும்துரோபதையையும் அவமானஞ்செய்ததைமறந்துபோனீரோ? துரோபதையை துச்சாதனன் சபைக்கிழுத்தபோது மாமிமாமியென்று உன்னைக்கட்டிக் கொண்டவளை இழுக்கவிடாமல் தடுத்தையா, வெட்கமென்னடியென்று பிடித்துத்தள்ளினையே, அப்போது நாங்கள்பட்ட வயிற்றெரிச்சலுக்கு நீஎன்னபரிகாரம்பண்ணினய். உன் மருமகள் துரோபதையிட்ட சாபத்தினுலும் மகாமுனிவர் ஒருவர் இட்டசாபத்தினுலும், தாயாகிய நீ துரியோதனனைத் தொட்டுத்தடவும்போது, அவன்துடையில் துணிதட்டுப்பட்டு, அப்பாமகனே உனக்குப் பிராணன் நிலை துடையிலிருக்கிறது, உன் துடைமுறிந்தால் மரணமாவாயென்று ஏற்கெனவே நீகொடுத்த சாபத்தினுலும், எல்லாஞ்சேர்ந்து அவனை முடித்துப்போட்டன, தாயே! துச்சாதனனுடரத்தத்தை நான்சொல்லிய சபதப்படி வாயில்விட்டுக் கொப்புளித்து உமிழ்ந்து விட்டேனேயல்லாமல் குடிக்கவேயில்லை. இறைவி

யே! என்பேரில் கோபம்வைக்காமல் க்ஷமியென்றான். நல்லது பீமா! துரியோதனன் முதலியோர்தான் துஷ்டாளென்று நீ கொன்று போட்டாய் போகட்டும்; சொக்கட்டானுடிய சபையில் துரோபதைக்காகப் பரிந்து தமயனுடைய கோபத்தையும் பழியையும் ஏற்றுக்கொண்ட விகர்ணன் என்னும் அந்த தர்மவானையுங் கொன்றாயே, இது தருமந்தானு வென்று காந்தாரியம்மன்வினவ, பீமன் பதில்சொல்லத்தெரியாமல் திகைத்துநின்றான். அச்சமயத்தில் துளபமாலையணிந்த தூயோன், மாமீ! அதுசங்கதி நான் சொல்லுகிறேன்கேளும், நல்லவனுகிய விகர்ணன் துஷ்டருடன்கூடி சண்டைக்குவரமாட்டானென்றிருந்தோம், மிஞ்சிவந்துவிட்டான். நீமெத்தவும் நல்லவன், உன்னைநான் கொல்லமாட்டேன், திரும்பிவிடு என்று பீமன் பலதரஞ் சொல்லியும், கேளாமல் சண்டையிட்டு உபத்திரவித்தான். உபத்திரவந்தாளாமல் அவனை இவன்கொன்றான். நல்லது என்தமயனுகிய சகுனியைச் சகாதேவன் கொன்றானே அது தருமமாவென்று சலித்தாள்; அப்போது ஆதிகேசவனுகிய அமலன், மாமீ சூதாடிப்பாண்டவர்களை இக்கோலங்கண்டு நல்ல குலத்திற்பிறந்த உன் நூறுபிள்ளைகளையுங் கெடுத்து ஆவிதொலையச்செய்த மாபாவிபோன்றவனை சபையிற்கூறிய சபதப்படி சகாதேவன் முடித்துப்போட்டான். அவனையும் நீ நோகப்படாது. இனி அவைகள் ஒன்றையும் நினையாதீர். இதோ இந்தஜவரும் உன் சொந்தப்பிள்ளைகள் என்று அவள் பாதத்தில்விழச்செய்தார்கள். அவ்வாறே துரோபதை உத்தரை முதலிய ஸ்திரீகளும் வந்து வணங்கினர்கள். அவர்கள் துயரத்தைத்தீர்த்து அழைத்துக்கொண்டு துரியோதனன் மரித்துக்கிடக்கும் சிமந்தபஞ்சகத்துக்குப்போய், அவ்விடத்தில் செத்துக்கிடக்கும் அவன் தேகத்தை தாயுந்தகப்பனும் எடுத்துவைத்து ஒப்பாரிசொல்லியழுதார்கள். உரியோராகிய விதுரனும் கிருஷ்ணரும் சஞ்சயனும் அவர்களைத் தேற்றினர்கள். அவ்விடம்விட்டு துச்சாதனன்முதலிய பிள்ளைகள் செத்துக்கிடக்கும் ரணக்களத்துக்குவந்து ஒவ்வொருபிள்ளையையும் தேடித்தேடி யெடுத்து அவரவர்ஸ்திரீகள் பிரலாபித்தழுதார்கள். அப்படியே பேரப்பிள்ளைகளாகிய இலக்கணன் துச்சனி அபிமந்யு இளம்பஞ்சபாண்டவர்கள் பாஞ்சால திருஷ்டத்தியும்நன் முதலிய மன்னவர்களையும் வீரர்களையும், திரிதராஷ்டிரன் காந்தாரி எடுத்துப்பார்த்து துக்கங்கொண்டாடினர்கள். அவர்களை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் தேற்றி, கேளீர் மாமர் மாமி, வேதநாராயணன் உலகின் அரசர்களெல்லாரும் மடிந்து போகும்படி இச்சை கொண்டு திருவிளையாடலாக நடத்தின தன்மையே யல்லாது, வேறொருவரால் விளைந்ததல்ல, இது நாராயணன் செயலென்று எண்ணுவீராக, இன்னம் பார்க்கப்பார்க்க இப்படியே இருக்குமென்று துயரப்பட்டவர்களைத் தணித்தார். அவர்மொழியை உண்மையென்று நம்பித்தேறியும், காந்தாரியம்மன் ஆறுதவளாய் மாயனைநோக்கி ரத்தக்கண்ணீர் விட்டு, ஐயோ அநியாயக்காரனுகிய கிருஷ்ணு! வஞ்சகனே! நாராயணன் என்பவன் வேறொருவன் இருக்கிறானு? அவன் விளையாட்டென்று எங்க

ளுக்குப் பராக்குக்காட்டுகிறையோ, அப்பனே, உன் சித்தமல்லாமல் வேறென்றிருக்கிறதா இதெல்லாம் உன்னால் விளைந்தது, உன்னால் முடிந்தது. ஆயினும் அவரவர்கள் புத்திரபௌத்திரர்களையும் புருஷர்களையும் பறிகொடுத்து வயிறெரிந்து வாடுகிற வாட்டமும் மனக்கசப்பும் உன்னை விடுமா, படுபாவீ! இந்த உலகத்தையெல்லாம் படுசூரணமாய்ப் பாழாக்கிவிட்டாயே, பிறந்த இடத்தை மறைத்தபேயா! பேயின்முலைப் பாலையுண்டவாயா! அநேகவிசித்திரங் கற்றமாயா! இந்தப்பாவத்தினாலே உன்னை நான் சபிக்கிறேனென்று சொல்ல, இதோ வந்தேன் மாமியென்று கிட்டிவந்து ஒருசவுக்கத்தைக் கையில்விரித்தேந்திக்கொண்டு, உன் இஷ்டப்படி சாபத்தையெல்லாம் போடு என்றுநின்றார். குடும்பங்களையெல்லாம் குருக்ஷேத்திரத்தில் கெடுத்ததோஷத்தால் உன் புத்திரமித்திர களத்திராதிகளும் இன்னம் சில பலவருஷத்தில் இப்படியே சிதைந்து அழிந்துபோகக்கடவதென்று தேவர்முதல் மூவரும் திடுக்கிடும்படியாய் காந்தாரியம்மன் சபித்தாள். அந்த உத்தமியைப்பார்த்து, மாமீ! இந்த உலகத்தில் வந்து உற்பவிக்கும்யாவும் மறுபடியும் ஒடுங்கும்படியானது உண்மையல்லவா, நீயும் தப்பிதமாய்ச் சபிக்கவில்லையேயென்று விரித்த குட்டையை மூட்டையாய்ச் சுருட்டிக் கக்கத்தில் வைத்துக்கொண்டு, அவர்களுடன் கலந்துகொண்டார்.

எல்லோரையுங் கூட்டிக்கொண்டு ஒருவனத்தில் வந்தபின், தருமபூபதி திரிதராஷ்டிரனைப்பணிந்து, இனிஅடியேன் செய்யத்தக்கபணி ஏதாவதுண்டோ கட்டளையிடுமென்றார். பெரியராசன் தருமனை யழைத்து நமதுசொந்தமென்றும் அந்நியமென்றும் பாராமல் வித்தியாசமின்றி மாண்டோர் யாவருக்கும் தீக்கடன் முடித்துப்போடென்று உத்தரவு கொடுக்க உடனே வேண்டிய காஷ்டங்களைச் சேகரித்து பீஷ்மாசாரியர் ஒருவர் நீங்குதலாக எல்லோருக்கும் ஈமவிதிக்கடன்களை முடித்தார்கள். அவரவருடைய பத்தினிமார்களில் பிராணனுடனிருக்க விரும்பினவர்களும் கர்ப்பமாயிருக்கிறவர்களுந்தவிர, மற்றவர்கள் தங்கள் தங்கள் புருஷருடன் உடன்கட்டையேறினார்கள். அப்போது அந்தக்குருக்ஷேத்திரத்தில் உண்டாயின அக்கினிச் சுவாலையானது ஆகாயமட்டும் எட்டியது. ஆஞ்சநேயர் இலங்கையைச் சுட்டழித்த காலத்தில் பிரகாசித்த அக்கினிச்சுவாலை இதினும் அதிகமாகவேயிருக்குமோ என்று அதிசயித்தார்கள். இப்பால் திரிதராஷ்டிரன் தருமர்முதல் ஐவர் விதுரர் குந்திதேவி காந்தாரி உலூகி திரௌபதை சுபத்திரை உத்தரை இன்னுமுண்டாகிய ஸ்திரீசனங்கள்துயரத்தை மறவாமல் ஆழ்ந்து நின்றார்கள். அப்போது ஸ்ரீஜநார்த்தனன் அவர்களுக்கு விவேகமும் ஞானமும் போதித்துத் தணியப்பண்ணினார்.

புத்திரசோபச் சருக்கம்-முற்றிற்று.

ஈமவிதி முடித்த சருக்கம்.

விருத்தம்.

தாயாய் மகவாய் தனியாய் பலவாய்
நீயா யானுய் நிற்கும் மொருவன்
வாயா மனனுய் மாய்கைக் கணுக
வாயா தவனென் மனநீங் கிலனே.

கேளும் ஜநமேஜயமகாராஜனே! விதுரமகாராசன் பலவிதங்களினு லும் தருமநீதிகளைச்சொல்லித் துயர்போக்கத் துன்பம் நீங்கிய கண்ணில் லான், யாவரையுஞ் சுட்டுப்போட்டோமே, இனிச்செய்யுங் கர்மங்களுக் குத் தர்மநூன்முறைப்படி செய்யக் கட்டளையிடு விதுரா என்றுன். தம யன்மனதில் இன்னமும் நீங்காது குடிகொண்டிருக்கும் துயரத்தை ஆற்ற எண்ணி, மகாமுனிவர்கள் ஆதியிற்கூறிய சிலவாக்கியார்த்தங்களை யெடுத் துக்கூறத்தொடங்கினர். அதிபதியாகிய திரிதராஷ்டிர மகாராசனே! கே ளும், தருமமென்பது ஒருவர்சொல்லுந் தகையதல்ல, எவராலுஞ் சொல் லப்படாதது, சொன்னுலுந் தெரியக்கூடாதது. காரியகருமங்களை அறி யுந்தோறும் தருமம் என்பது இன்னதென்று தெரியுமென்று சாஸ்திரங் களில் பெரியோர்களால் ஏற்பட்டிருப்பதை சாதுசங்கத்துடன் பழகிப் பார்த்தால், இந்தபூமியிற்பிறக்குங் கருவினுடைய துன்பம் மாறிப்போம், காவலனே! இந்தகர்மபூமியில் அந்த தருமசாஸ்திரத்தின் கருத்தை மண் ணுசை பெண்ணுசை பொன்னுசை யென்னும் அகண்ட கடலில் முழுகிய பாவிகளால் அறியக்கூடாது; பின்னையாவர் அறியக்கூடியதென்றுல், கால நுட்பமற்று, அசைவற்று, உணர்வற்று, உறைவற்று, உருக்கமற்று, மலை வற்று, மாசற்று, விசுவாசமுற்ற மகிமையோர் மாத்திரம் அதைஅறிவார் கள். சுக்கிலசுரோணிதமென்னும் இரண்டும் பனித்துளிபோல் சேர்ந்து கருவாகி நாளுக்குநாள் விருத்தியடைந்து தாயின் கர்ப்பத்தில் உபத்திர வப் பட்டுக்கொண்டிருந்து, தனஞ்செயன் என்னும் வாயுவினுல் தலைகிழா கத் தள்ளப்பட்டு பூமியில் விழுந்து பிணி பசி மூப்பு முதலியதுகளுக்கா ளாகி பொய்யுலகிற்சஞ்சரித்து முதுமையில் வியாதி மேலிட்டு கடைசியில் மானிடர்கள் யமபடாள்கையில் அகப்பட்டு ஸ்தூலதேகத்தைவிட்டு சூக்ஷ் மதேகத்துடன் யமபுரஞ்சென்று, யாதனுசரீரமெடுத்து நல்வினை தீவினைப் பயனை அனுபவித்துவிட்டு மறுபடியும் இந்தக் கர்மபூமியில் வந்து பிறந்து தர்மாதர்மங்களுக்கு ஆளாகிறுர்கள் என்று சாஸ்திரம்பேசுகின்றது. தே கமெடுக்குங்கணக்கை கடல்மண்ணை எண்ணத்தக்கவன் எவனே அவன் அறிவான். இவ்வுயிர்கள் எல்லாம் பழையவஸ்திரம்போய் புதுவஸ்திரந் தரிக்கிறதுபோல் வேறுவேறுன உடல்களில் வந்துசேரும். இதினுடைய நிலையை தான் அறியாமலும் தன் பொறிபுலன்களை அடக்காமலும் தான் இத்தன்மையன் என்பதை நினைக்காமலும் குருவென்று பேர்வைத்துக்

கொண்டு பிறருக்கு உபதேசஞ் செய்வார்கள். இன்னம் வேறு சிலர் தங்கள் குலத்தை சிலாகித்துப் பிறருடைய குலத்தை நிந்திப்பார்கள். பின்னுஞ்சிலர் தங்களுக்குரிய திரவிய கர்வத்தினால் ஆதுலரை இகழ்வார்கள். இத்தியாதிகளால் இவர்கள் மயங்கி அநித்திய வாழ்வை சதமென்று நம்பி பெரும்பாசக்கூட்டத்தில் அகப்பட்டுத் தெளிவில்லாமல் அலைந்துகுலைந்து போவார்கள். கொஞ்சப்பொழுதேனும் நல்லபழக்கத்தினால் சாதுசங்கத்தில் தானென்றும் அவனென்றும் பேசுவதை எண்ணிப்பார்ப்பார்களாகில், சஞ்சலமென்பதும சலிப்பென்பதும் அற்று ஜெனனமரணவேதை ஒழிந்து முத்தியடைவார்கள்.

இஃதன்றியும் இன்னம் ஒன்றுசொல்லுகிறேன்கேளும், இறைவனே! மறைநூல்வல்லோர் திருவாய்மலர்ந்த தெளிவினை, உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நான்கண்டதொன்றுண்டு. அதை பொய்மனத்தாராகிய பேர்களுக்குச் சொல்லப்படாது. நன்னெறியாகிய அருமையான அப்பொருளை உமக்குச்சொல்லுகிறேன். நீர் இந்தப் பிரபஞ்சமயக்கம் புத்திரவாஞ்சை முதலிய பெருமைபபின் ஆட்டத்தை விட்டுக்கேளும் பெரியராச சிங்கமேயென்று விதுரமகாராசன் மேலும்விளமபலுற்றான். இப்புவியில் ஒருபிராமணன் தன்னூரிலிருந்து காந்தாரகிரியென்னும் ஒரு பெரிய மலையைநோக்கிப்போனான். தன்மனதில் எண்ணங்கெட்டு நினைவுதப்பித் தப்புவழியாகச்சென்று அடர்ந்தகாட்டைக்கடந்து பசியால் வாடிப் புலிமிருகங்களுக்குப்பயந்துஓட்டமாயோடும்போது, வழியில் ஒருஸ்திரீயானவள் இவனைக் கிட்டிவந்து, ஆகாரம்வேண்டுமென்றாள். அப்போது அவள்முகத்தைசற்று நோக்கிப்பார்த்துநின்றான் அதற்குள்ளாக ஒருவேங்கை இவனைத் துரத்திவந்தது. அதைப்பார்த்து பயந்து பக்கத்தில் நின்ற ஒரு ஆலவிருக்ஷத்தின்மேல் தட்டுத்தடுமாறியேறி அம்மரத்தின் ஒருகிளையின்மேல் உடல்சாய்ந்து நித்திரைமயக்கத்தால் ஓய்ந்துமாய்ந்தவன்போல் மண்ணில் விழுந்தான். அப்படி விழுகிறவனுடைய கைகளானது நாலுபக்கத்திலும் தடவும்போது, மரத்திற் படர்ந்திருந்த கொடிகளைக் கையினாற் பற்றிப்பிடித்து இதுகொஞ்சம் ஆதரவென்று சற்றுச் சந்தோஷித்தான். உடனே இவன்பிடித்த கொடிகள் சரசரவென்று பூமியில் தாழ்ந்தபோது, ஐயோ! இக்கொடியும் நம்மைத் தாங்காமல் உருவிவருகிறதேயென்று விசனப்பட்டு, நம்மை எங்கேகொண்டு போய்விடுகிறதோவென்று தலைகுனிந்து பூமியைப்பார்த்து, நல்லகாரியம் பூமியில் இறங்கி அந்தப்பெண்ணுடன் கூடிப் போய்விடலாமென்று மகிழ்ச்சிப்பட்டான். பூமியைக்கிட்டியும் அது இன்னம் கீழ்நோக்கியே போய்க்கொண்டிருப்பதால், இதென்ன இவ்வளவு ஆழம் என்று நிதானித்துப் பார்த்தான். அவ்விடத்தில் பிரம்மாண்டமான ஒருபாழ்ங்கிணறு இருப்பதைப்பார்த்து, ஆ ஆ தெய்வமேயென்று அலறிக் கிணற்றிலாவது இறங்கிக் கரையேறலாமென்று கொஞ்சம் மகிழும்போது, அக்கிணற்றுக்குள்ளே ஒரு பெரிய கரும்பாம்பானது படம் விரித்து சிறிச்சிறித்தன்னைக் கொத்தக்கண்டு, உயிர்குறைந்து பரிதாபப்

பட்டுக் கொடிகளைக் கைப்பற்றியபடியே தொங்கும் இருகால்களையும் முடக்கிக்கொண்டு ஊசலாடுவதுபோற் சுழண்டு அந்தப்பாழ்ங்கிணற்றின் பக்கத்தில் குதித்துவிடலாமென்றுகளித்துப் பாயப்போகும்போது, சொல்லத்தக்க கோபமுடைய ஒரு காட்டானையானது இருகொம்பு ஆறுதலை பனிரண்டு கால்களையுடையதாய் ஒருபுறங் கறுப்பும் ஒருபுறம் வெள்ளையுமாகக் கிணற்றருகில் நின்றுகொண்டு தும்பிக்கையால் தன்னை திருவிப் பிடிக்கக்கண்டு, தான்பிடித்த கொடிவழியே மேலே தாவலாமென்று தைரிய சந்தோஷங்கொண்டு மேல்நோக்கினன். நோக்கும்போது எண்ணிறந்த வண்டுகளும் குளவிகளும் தும்பிகளும் இவனை மொய்த்துக் கொட்டும்போது, வேலாயுதம்பட்டு வீழ்ந்தவனைப்போல் பொருமல் அடைந்து அயர்ந்து நின்ற வேளையில் அடுத்தகொடியில் கட்டியிருந்த தேன்கூண்டு உடைந்து தித்திப்பாகிய தேன் தாரைதாரையாய் ஒழுகிறதைக் கண்ட அந்த பிராமணன் இத்தனை துன்பமடைந்திருந்தும் பசியினாலும் தாகத்தினாலும் வருந்தினவன் தேனைத்தன்வாயினால்குடித்து நாவினால்சப்பக்கொட்டினன். இவ்வேளையில் வெள்ளையுங்கறுப்புமான இரண்டெலிகள் இவன் பிடித்திருந்த கொடிகளை உச்சியிற் கடிக்கக்கண்டு, நாவறண்டு நாடியொடுங்கி நலிந்திருந்தான். அண்ணாவே! இன்பதுன்பத்தின் தன்மையைப்பார்த்தீரா வென்று விதுரன் கேட்டபோது, ஞானவிவேகமுடைய திரிதராஷ்டிரனும் பண்டிதர்களாகிய தூயோரும் யாதொன்றுந் தோன்றாதவர்களாய், மெய்யுணர்ந்த விதுரரே! அந்தப் பிராமணனுடையகெதி என்னமாயிற்று, இவ்வளவு துன்பத்தில் நின்றும் என்னமாய்த் தேறினன், அதைச் சொல்லுமென்று கேட்க, விதுரமகாராசன் திரிதராஷ்டிரனுக்கு வியாக்கியானிக்கத் தொடங்கினர்.

அரைசாகிய அண்ணாகேளும். க. காந்தாரகிரியென்பது மெய்யாகிய மோக்ஷமென்னும் முக்திஸ்தானம். உ. இவன் புறப்பட்டுப்போனகாடானது இந்தப்பிரபஞ்சம். ௩. தப்புவழியாகச்சென்றது தீவினைவழி. ௪. அப்புறம் நாடியோடியவழி நல்வினைவழி. ௫. தாறுமாறான காடுகளெல்லாம் வேறுவேறுபேதமான உயிர்கள். ௬. மிருகங்கள் எல்லாம் அழகையழிக்கவந்த வியாதிகள். ௭. பெண்ணாகவந்தவள் விகிர்த அவிகிர்தமாயை. ௮. ஆலமரமானது மானிடசரீரம். ௯. அக்கொடிகளானவை பலவித ஆசைகள். ௧௦. கிணற்றில் கரும்பாம்பென்பது கூற்றுவன். ௧௧. எலிகள் இரண்டும் பகலும் இரவும். ௧௨. யானையானது ஒருவருஷம். ௧௩. ஆறுதலைகளும் ஷட்ருதுக்கள். ௧௪. யானையின் இரண்டு நிறமும் உத்தராயண தக்ஷணாயனங்கள். ௧௫. கால்கள் பனிரண்டும் பனிரண்டுமாசங்கள். ௧௬. தேன் துளிகள் ஊழ்வினையின்படி நேரிடும் கோரிக்கை. ௧௭. உண்டு களித்தது உயிர்விஷயங்கள். ௧௮. பிராமணனென்றது ஆன்மா. ௧௯. துஷ்ட மிருகங்களும் பெண்ணும்பாம்பும் யானையும் குளவிகளும் எலிகளும் இவ்வாறும் காமக்குரோத லோப மத மாற்சரியங்கள் என்கிற பகைகள். ௨௦. அறுவகையாகிய பெரும் பகைக்குட்பட்டடங்கி அச்சமுற்றிருந்து

நேரிட்டொழுகிய தேனைச்சுவைத்தது இந்த உயிர்க்குரிய இயல்பாம் என் றறியும். பெருகப்பெற்ற உடலுக்கு துன்பமேயல்லாமல் இன்பம் உண் டென்று எப்போதுஞ் சொல்வதற்கு இடமில்லை. உண்டானால் நீர் கண்ட மட்டுஞ்சொல்லும் அண்ணாவேயென்று விதுரர் கேட்க, திரிதராஷ்டிரன் தேறித்தெளிந்து, மேல்நடத்தவேண்டியதைச் சொல்லென்று விதுரனைவி னவ, திலதர்ப்பணாதிகளைச்செய்யவேண்டி கங்காநதிக்குப் போகவேண்டு மென்ன, திரிதராஷ்டிரன் முதல்யாவரும் சம்மதித்துப் புறப்பட்டார்கள்.

திலோதகச்சருக்கம்.

கேளும் ஜநமேஜயமகாராஜனே! இவர்கள் யாவருங் கங்காநதிக்குப் பயணப்பட்டபோது, ஸ்ரீவேதவியாசரும் நாரதரும் தௌமியாசாரியரும் கிருபாசாரியரும் பலதபசிக்குழாங்களுடன் எதிர்ப்பட, அவர்களை இவர் கள் வணங்கி ஆசீர்வாதம்பெற்று அவர்களையுங்கூட இட்டுக்கொண்டே பகிரதியைச்சேர்ந்து ஸ்நானஞ்செய்து, அப்பா மக்களே உங்களையெல் லாம் கையைக்கழுவினேம் உலகமெல்லாம் முழுகிப்போயிற்று, இனி நாங் களும் தலையைமுழுகிப் போடவேண்டியதே கடன் என்று துயரப்பட்டு முழுகினார்கள். பீஷ்மருக்குத் தாயாகிய கங்கையானவள் தன் பிள்ளை மரி த்த துக்கத்திற்காகவும் பந்துக்கள் இறந்ததற்காகவும் துக்கித்து அலைக ளால் மார்படித்துக்கொண்டதுபோல் முழக்கஞ்செய்தாள். ஸ்திரீகளும் ஸ்நானமாடினபின்னர், மங்கிலியப்பெண்கள் தங்கள் தலைமயிரைவாரிமுடி த்துக்கொண்டார்கள். அக்கினியிற்பிறந்த துரோபதை மாத்திரம் கூந்தலை முடிக்காமல் நின்று விசனப்படுவதைக்கண்ட வியாசாதிரிஷிகள் துரோப தையை அணுகி, அருந்ததிக்கொப்பாகிய அம்மணீ! நீராசசபையிற் கூறிய சபதமும் பிற்பாடு அசுவத்தாமனைக்குறித்துக் கூறிய சபதமும் உன் எண் ணத்தின்படி முடிந்ததே. இப்போது உன் கூந்தலை முடியலாமே, என்னத டையென்று வினவ, அப்போதுமுகுந்தனானவர், ஏன் அம்மா, நான்தூது புறப்பட்டகாலத்தில் நீவிசனப்பட்டதற்கு உன் கூந்தலை முடிப்பிக்கிறேன் என்று சொன்னதுபோல், உன்பதிவிரதா தர்மத்தினால் நிறைவேறிப்போ யிற்றே, கூந்தலை முடியுமென்று கூறவும், மாமிகளாகிய குந்திதேவியும் காந்தாரியம்மனும் எழுந்து மருமகளுக்கு உபசாரஞ்சொல்லி தங்கள் கை யினால் அவள் கூந்தலை முடிக்க யத்தனப்பட்டபோது, வேண்டாம் மாமீ! நானே முடித்துக்கொள்ளுகிறேன் என்று பதிமூனுவருஷமும் ஐந்துமா சமுமாக விரித்திருந்த கூந்தலை வகிர்ந்து வாரி முடித்துக்கொண்டாள். ஆகாயத்தில் அமர்ந்த தேவதைகள் புஷ்பமாரிபொழிந்து ஆசீர்வதித்தார் கள். பூவுலகிலுள்ள ஸ்திரீஜனங்கள் துரோபதையின் கற்புக்குப் புகழ்ந்து துரோபதையம்மனென்று மெச்சிக்கொண்டாடினபடியால், இது உலக வழக்கமாய் வழங்கி வந்திருக்கின்றது. சொல்லரிய ரிஷிகளின் வாக்கியப் படிக்கு பாண்டு மைந்தர்கள் கருமஞ்செய்வதற்கு அந்த இடத்தில் பெரிய

பந்தலை நிருமித்து கர்மத்துக்கு வேண்டிய உபகரணங்கள் சாமக்கிரிகள் சம்பாரங்களைச்சேகரித்து தருமவிதிதப்பாமல் இறந்த ஜேஷ்ட கனிஷ்டர்கள் முதலிய எல்லோரும், நற்கதியடையும்படி குறைவில்லாமல் கர்மத்தைச்செய்யத் தொடங்கினார்கள். அப்போது தர்மபுத்திரர் இருகரத்தையும் குவித்து நின்று, நான் முந்தி யாருக்கு கர்மஞ்செய்கிறதென்று கேட்க, ரிஷிகள் ஆலோசித்து, உங்கள் தாய்முந்திப்பெற்ற பிள்ளையாகிய கர்ணமகாராசனுக்குச்செய் யென்றார்கள். அவ்வண்ணமே ஆரம்பித்து வரிசைக்கிரமமாய் நிறைவேற்றி வேதியருக்குவேண்டிய அன்னதானம் முதலிய யாவற்றையும் மூன்றுமாதம் வரைக்கும் தாழ்ச்சியில்லாமல் செய்தாரென்று வைசம்பாயனமகாமுனிவர் ஜநமேஜயராசனுக்குச் சொல்லியருளினார்.

ஸ்ரீபர்வம்-முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீ மகா பா ர தம்.

திருமுடிபுனைந்த சருக்கம்.

விருத்தம்.

ஆக்குமாறய னுமுத லாக்கிய வுலகங்
காக்குமாரு செங் கண்ணுடைக் கருணையங்கடலாம்
நீக்குமாறர னுமவை வீந்தநா ளுந்தி
பூக்குமாமுத லாமவன் பொன்னடி போற்றி.

கேளும் ஜநமேஜயமகாராசனே! கங்காநதிக்கரையில் வந்துசேர்ந்த கவுரவகுலத்தார் ஈமவிதிகளையும் கர்மக்கடன்களையும் முடித்து மூன்றுமாதம் அவ்விடத்தில் தங்கியிருந்தார்கள். அப்போது திரிதராஷ்டிரமகாராசனும்கிருபாசாரியரும் விதுரரும் சஞ்சயரும் ஸ்ரீகிருஷ்ணரும் சாத்தகியும் பாண்டவர்களும் ஆசனங்களில் வீற்றிருக்கும்போது, அங்கேவந்த வேத வியாசர் நாரதர் முதலிய மகாரிஷிகளை உபசரித்து, பின்னர் யாவரும் ஆசனங்களில்எழுந்தருளியிருந்தனர். அந்தரிஷிகள் தருமராசனைநோக்கி, உங்களுக்கு மித்திரனாக அவதரித்திருக்கும் ஸ்ரீகிருஷ்ணனுடைய அருளினாலும் உமது தம்பிமாருடைய புஜபலபராக்கிரமத்தாலும் உம்முட சத்துருக்கள் யாவரும் நசித்து, இவ்வுலகத்துக்கெல்லாம் ஏகசக்கிராதிபதியாய் இருக்க வாழ்வைப்பெற்றீர், சத்தியமே ஜெயம் என்பதற்கு சாட்சியை உம்மிடத்தில்கண்டோம். இனி திருமுடிபுனைந்து, எங்களை அடுத்து யாகாதிகளைப்புரிந்து அரசாளக்கடவீரென்று ஜெனனசாகரத்தைக்கடந்த ஞானவான்கள்கூற, அவர்களை தருமபுத்திரர் எழுந்து வணங்கி, நாங்கள் யுத்தஞ்செய்து வெற்றிபெற்றது மெய்தான். ஆகிலும் எங்கள் மனதுக்குச்சந்தோஷம் என்பதில்லாமல், துக்கமே மேலிட்டிருக்கிறது, ஏனெனில் எங்கள்கால்வழிக்கு உத்தமனாக இருந்த அபிமந்யு ஒருபிள்ளையாகிலும் இல்லாமல் போனானே, நிகரில்லாத திருஷ்டத்தியும்நன் இளம்பஞ்சபாண்டவாள் முதலிய எல்லோரும் சென்றுபோனார்கள், கர்ணமகாராஜன் எங்களுக்கு மூத்தவராயிருந்திருக்க அப்படிப்பட்ட புண்ணியவானைசபதங்கூறி முடித்துப்போட்டோமே, எங்கள் தாய் குந்திதேவியார் கர்ணராசன் பிறப்பு வளர்ப்பைத் தெரியப்படுத்தாமல் சிற்றாத்தாள்போல் கபடமாக இருந்தபட்சத்தை நினைக்குந்தோறும் எங்களை உருக்கிக்கருக்கிறதே, மாசற்ற முனிவர்களே! அந்த கர்ணமகாராசன் பூமியிற் பிறந்துவாழ்ந்த சரித்திரங்களை எங்கள் குறைதீரச் சொல்லவேண்டும் அடிகளேயென்று தருமன்

திருமுடிபுனைந்தசருக்கம் சாந்திபருவத்தில் சேர்ந்ததாகவும் சில பிரதிகளில் உள.

வினவ, நாரதமகாமுனிவர் பகர்தலுற்றனர். ஐவரே கேண்மின், உங்கள் தாய் குந்திதேவியானவள், கன்னிகைப்பருவகாலத்தில், சூரியபகவானுடைய வரப்பிரசாதத்தினால் கர்ணனைப்பெற்று, உலகப்பழிக்கஞ்சி அந்தப் பிள்ளையைப் பேழையில்வைத்து ஆற்றில் விட்டாள். அந்தப் பிள்ளையை திரிதராஷ்டிரனுடைய தேர்ப்பாகன் கண்டெடுத்து வளர்த்துவருங்கால், அவன் பரசுராமருடைய பொன்னடியை வணங்கி வில்வித்தை யாவற்றையுங்கற்று, பிராமணப்பிள்ளையென்று உரைத்த சொற்சோர்வினால் சாபமும்பெற்று, துரியோதனனுடன் சினேகமாகி அங்கதேசபட்டாபிஷேகத்தைக் கைக்கொண்டு, கலிங்கராசன் புத்திரி சுபாங்கிக்குச் சுயம்வரமென்று சுயோதனனுடன் வெளிப்பட்டுப்போய் சுயம்வரமண்டபத்தில்வந்த சுபாங்கி என்பவள் துரியோதனனை வரிக்காத நிமித்தியத்தில் அவன் அவளை பலோத்காரமாய்த் தூக்கிவரும்போது, கலியாணத்துக்கு வந்திருந்த ருக்குமிராசனும் சிசுபாலனும் ஜராசந்தனும் இன்னும் சிலவேந்தர்களும் துரியோதனனையும் கர்ணனையும் மடக்கிச் சண்டையிட, கர்ணனுதவியினால் துரியோதனன் ஜெயம்பெற்று வெளிப்பட்டு வரும்போது, ஜராசந்தன் கர்ணனைமடக்கி நெடுநேரம் யுத்தஞ்செய்தும் அவனைக் கர்ணன் ஜெயித்தான். ஜராசந்தன் அவனைப் புகழ்ந்து இருவரும் சமாதானமாகி விலகிப்போனார்கள். அப்பால் துரியோதனனை எதிரிபடையில் பயமில்லாதபடி தன்னாட்டுக்கு கொண்டுவந்து சேர்த்தான். அதுமுதல் சுயோதனனுக்கு கர்ணன்மீது அதிக விசுவாசமுண்டாயிருந்தது.

கர்ணராசன் அங்கதேசத்தில் ஒருநாள் வீதிவலம் வரும்போது பசுவின் கன்றுக்குட்டி ஒன்று அவன் தேர்சக்கரத்தில் அகப்பட்டு மடிந்தது. அந்தக் கன்றுக்கு சொந்தக்காரனாகிய ஒரு பிராமணன் மனந்தாளாமல் அடாபாபி! என்பசுவின்கன்றைக்கொன்றபடியால் நல்லஉயுத்தசமயத்தில் உன்தேர்ச்சக்கரம் புதைந்துபோகக்கடவதென்று சபித்தான். தேவேந்திரன் இந்தகர்ணனுடன் கூடப்பிறந்த கவசகுண்டலங்களை தானமாகவாங்கிப்போனான். பரசுராமரும் பிராமணனும் இட்ட சாபத்தினாலும் குந்திதேவியார் நாகாஸ்திரத்தை ஒரேதடவைமாத்திரம் விடும்படிக்கும், அர்ச்சுனனைத்தவிர மற்றநால்வரைக் கொல்லப்படாதென்றும் வாங்கிய வரத்தினாலும், பீஷ்மர் யுத்தாரம்பகாலத்தில் அர்த்தரதர்களில் ஒருவனாக நேமித்த அநியாயத்தினாலும் சல்லியராசன் அடிக்கடி இழிவாய்ப் பேசியதினாலும் கடைசிக்காலத்தில் அவனுடைய புண்ணியங்களை யெல்லாம் இந்த ஸ்ரீகிருஷ்ணனானவர் கைகொண்டமையாலும், மகாபராக்கிரமனாகியகர்ணமகாராசன் மடிந்தான். அர்ச்சுனன் மீந்தான். இத்தனை இடையூறுகளில்லாவிட்டால் அந்த மகாபுருஷனை வெல்லத்தக்கவர்யாவர் என்று நாரதமுனிவர்சொல்ல, தருமர் கண்ணீர் சோரவிட்டுப் பக்கத்தில் நின்ற தாயார் முகத்தைப்பார்த்து, நல்லதம்மா! உள்ளனுங் கள்ளனுமாயிருந்து எங்களைக் கழுத்தறுக்க மாட்டாமல் நீசெய்தகாரியமா இது, கருணைநிறைந்த மாதாவேயென்றார். அப்போது குந்திதேவி அப்பா மகனே, கேள். நான்

பெட்டியில்விட்ட அந்தப்பிள்ளை இந்தக்கர்ணனென்று எனக்கு முன்னமே தெரியாது, யுத்தஞ்செய்ய நேமித்துக்கொண்டபிறகு கிருஷ்ணமூர்த்திதூதுவந்தகாலத்தில் அப்போதுதான் அவன்என்மகனென்று அறிந்து கண்கலக்கப்பட்டேன். என்னை நீங்கள் நிந்திக்க வேண்டாம். ஊழ்வினையை ஒழிப்பவர்கள் ஒருவருமில்லை. என்பாபி கர்ப்பம் இப்படியாச்சுதென்று புலம்பியழுதாள். இதைப்பார்த்த தருமராசன் சலித்து இனிமேல் ஸ்திரீகளுடைய மனசில் எப்பேர்ப்பட்ட இரகசியங்களும் ஒளியாமல் வெளியாகக்கடவதென்று சாபமிட்டு தன்தம்பியாகிய அர்ச்சுனனை நோக்கி, அடா அர்ச்சுனு! ஜேஷ்டப்பிராதாவாகிய கர்ணமகாராசனைக்கொன்ற பழிக்குக்காரணம் நீயும் நானும் ஆயினோம். இவ்வுலகையாள நினைப்பது நியாயமல்ல, தவஞ்செய்யும்படி கானகம் புகுவோம் வாவென்ன, அர்ச்சுனன் சொல்லுகின்றான்.

இதுவரையிலும் யுத்தஞ்செய்து எல்லோரையுங் கொன்றபிற்பாடு, இப்போது காட்டுக்குப்போவோமாகில், பூர்வம்நமக்குவந்திருக்கும் பழியைப்பார்க்கிலும் பத்துப்பங்கதிகமான பழிச்சொல்வந்து சம்பவிக்கும். எல்லாக்காரியமும்நிறைவேறினபின்பு இப்போதுஎனக்குப்பட்டம்வேண்டாமென்கிற வார்த்தை அழகல்ல, நீங்கள்எல்லோரும் இந்தபூமியைஆண்டுகொண்டிருங்கள். கர்ணராசனைக்கொன்ற பாபிநானுகையால், நானேவனம்போகிறேன் என்றான். அவ்வேளையில் பீமசேனன் நகுல சகாதேவர் திரௌபதைமுதலியோர் தருமரையணுகி, எம்மிறையே! ஒருகாரியத்தை தீர்க்காலோசனைசெய்து தொடங்கவேண்டும், தொடங்கியபின் எண்ணி விசனப்படுவது பேதமையென்று நீதிநூலோர்பேசியிருக்கிறார்கள். சகல பகைஞரையுஞ்செயித்துஇப்போது காட்டுக்குப்போய்விடுகிறேன்என்றால் பின்புத்தியுள்ள பெண்புத்திக்காரர் பாண்டவர்கள் என்று உலகத்தில் வசை ஏற்பட்டுப்போம். பூஷண தூஷணங்கள் சரீரத்துக்கல்லாது ஆத்துமாவுக்கொன்றுமில்லையென்கிற வாக்கியப்படி, ஆரென்ன சொன்னாலும் நமக்கென்னவென்பீராகில், மிகவும் நல்லதுதான். ஆகிலும் நாம் காட்டுக்குப்போய்த் தவஞ்செய்வோமாகில், அந்தத்தவமும் அவமாகி கொடுமையான பாபம்வந்து பிடிக்குமேயொழிய சுகங்கிடைக்கமாட்டாது. ஒருவரையொருவர்பகைத்து யுத்தஞ்செய்வதினால் சத்திரியருக்கு பாபம் பழி நேரிடுவதாயிருந்தால் அப்படி யுத்தஞ்செய்து மரிப்போருக்கு வீரசொர்க்கமென்று விதித்திருக்க வேண்டியதென்ன. இங்ஙனம் பலவாறுவோதியும் யுதிஷ்டிரர் அதைச்செவிக்கொள்ளாமல் இதோ காட்டுக்குப் போகிறேனென்று எழுந்தார். அப்போது ஸ்ரீவேதவியாசர் தருமரைத் தகைந்து, இப்பேர்ப்பட்ட எண்ணமுள்ள நீர் பூர்வத்திலேயே எல்லாவற்றையும் வெறுத்துத் தவம் புரியவேண்டும், அதைவிட்டு யாவரையும் முடித்தபின் காட்டுக்குப்போறேனென்கிற வாக்கியம் சரியல்ல நாட்டில் இருந்து நீதியாக அரசுபுரிவதினால் வருகிறகுற்றமும் வருத்தமும், அருந்தவம் புரிவதினால் உண்டாகும் சுகமும் சௌக்கியமும் இன்னதென்றுஎனக்குத்

தெரியக்காட்டும் என்றுகேட்டதற்கு, தருமராசன் அவரைப்பணிந்து,சூரியகுமாரனுகிய கர்ணராசனை மாய்த்துப் பாபியாயினநான் இந்தபூமியைத் துரைத்தனஞ்செய்வதில் என்னபலனைக்காணப்போறேன். எங்கள் யோக்கியதாமிசையை சீர்தூக்கிப்பார்க்குமிடத்தில் ராக்ஷசாள்குலம் உத்தமமாயிருக்கிறது. என்னைவணங்கி உபசரிக்கும்படியான தம்பிகளாகிய துரியோதனன் முதல் நூறுபேர்களையும் குருவாகிய துரோணரையும் மெய்யோராகிய பீஷ்மாசாரியரையும் உயிர்போக்கி சுற்றத்தார் முதலிய பேர்களைவிண்ணிலேற்றி அவர்களுடைய புத்திரமித்திராதிகளை மாளச்செய்து, நான் இவ்வுலகத்தை ஆளஇருந்தேனே, தெய்வமே அந்நியருடன் பகைத்துச் சண்டைசெய்து செயம் பெறுகிறதுவழக்கம், ஒரே குலத்திற் பிறந்து ஒருகலத்தில் உண்டு உயிருக்குயிராயிருந்த சகோதரரை முன்பின் எண்ணுமல்அமராடி அழித்தபேர் அவனியில் யாராகிலும் என்னைப்போலுண்டோ, இதுசெய்யத்தக்க காரியந்தானு, அரீ அரீ! மீளாநரகத்துக் காளாகத்தேடிக்கொண்ட வினையை அப்போதைக்கப்போதே ஒழித்துக்கொள்ளவேண்டுமேயல்லாது,அதைவிட்டு மேலும் மேலும் மூட்டைகட்டிக்கொள்ளப்படாதே, பாரமார்த்திகனே, நான் நரகத்துக் கேதுவாக மாட்டேன். அரசாட்சியாகிய ஆசையில் ஆழ்ந்துவாழேன் என்றார்.

இதுகேட்ட ஸ்ரீவேதமாமுனிவர் விளம்புகிறார். கேளாய் தருநந்தனு! தருமம் என்பது வேதத்தால் விளையுந்தன்மையல்லாது வேறொன்றுமில்லை ஆரோ இறந்துபோனர்கள் என்று விசனப்படுகிறாயே, வீணுகஇறந்தார் ஒருவருமில்லை. நீ கொன்றதாகவும் உன்னுல் சிலர் மாண்டதாகவுஞ் சொல்லுகிறாயே, ஒருவரைக்கொல்லும் வல்லமை உனக்குத்தானுண்டோ, அல்லது எனக்குத்தானுண்டோ, உன்னுடம் இல்லை என்னுலுமில்லை. இதற்கு நீயோசிக்கவேண்டியதுமில்லை நான் அதைப்பேசவேண்டியதுமில்லை. புராண புருஷனுகிய புராதன பூர்ணபுண்ணியன் எவனே அவனுடைய திருவிளையாடலென்று உணர்வதேமேலானபுத்தி, மேலானஞானம், அவரவர்க்கு இயற்கைப்படிகுறித்த விதிவசங்கள்அவரவரையடைந்து இறக்கவேண்டியதாகையால், காலம்வந்துற்ற இப்போது இங்கே பலரும் வந்து மடிந்தார்கள். இதற்கு சர்வசாட்சியாம் ஸ்ரீகிருஷ்ணர் இதோ இருக்கின்றார். நீங்களும் அவர் சொலவழிகேட்டு எல்லாம் கிருஷ்ணார்ப்பணம் என்று நடத்தி வந்தீர்கள் அதினுல் யாதொருவினையும் உங்களைத் தொடரமாட்டாது. நீங்கள் சஞ்சலப்படவேண்டாமென்று தேற்றியருளினர். தருமராசன் ஸ்ரீகிருஷ்ணரை நோக்கி நாங்கள் நரகத்தில் வீழ்ந்தாலும் மோக்ஷமடைந்தாலும் எல்லாம் உனக்கு அற்புதமென்றும் நீயே எங்களுக்குத் தெய்வமென்றும் ஸ்தோத்திரித்தபோது, ஓ தருமநந்தனரே! நீர் யாதொருகாரியத்தையும் மனசாரநினைத்திருக்கமாட்டீர், ஆகையால் தீவினை உம்மைச்சேராது. இப்போது உமது தம்பிமார் உம்மைவணங்கும்படி அஸ்திருபுரத்தில் நீதியான தர்மராஜாங்கம் பண்ணக்கடவீர் என்று ஆசீர்வதிக்க, தருமன் முதலியோர் களித்து ஆசனத்தில் உட்காந்தபின்னர், வேத

வியாசரைப்பார்த்து இவ்வுலகில் உள்ள ஆத்துமகோடிகள் முன்செய்த நல்வினை தீவினைகளை அனுபவிப்பார்கள் என்று சொல்லுகிறார்களே அதின் காரியமென்ன, அதின் சூட்சுமத்தை நான் அறியும்படி கிருபைசெய்யுமென்று தருமராசன் வினவினர்.

சாஸ்திரங்களில் கூறியிருக்கிற பிரகாரம் விதிகள் விலக்குகள் நன்மைகள் யாவையும் குறைவில்லாமல் நாள்தோறும் செய்துவருவாராகில் அது நல்வினையாம், அதற்கு மாறுபட்டு நடப்பாராகில் அதுவே தீவினையாம். மேலுஞ் சொல்லுகிறேன் கேள். சூரியோதயத்தில் தூங்குகிறதும் அஸ்தமனத்தில் நித்திரைசெய்வதும் பிறர்மனைவியை விரும்புவதும் பிறர்பொருளை யபகரிப்பதும் தெய்வமிகழ்வதும் பொறாமைப்படுவதும் அகாலத்தில் ஸ்திரீபோகஞ் செய்வதும் தான் செய்யவேண்டிய சத்கர்மங்களை நெகிழ்வதும் விருதாவில் மிருகாதிகளை யுயிர்வதை செய்வதும் அடைக்கலமடைந்தவரைக் காட்டிக்கொடுப்பதும் இத்தியாதிகள்தான் பாபம், இதுகளில் சிலது பாவம்போலிருந்து தீவினையாகாமல் புண்ணியபலனைத் தருவதுவுமுண்டு, அவையாவையெனின், எதிர்த்துவருபவன் பிராமணனாலும் பசுவானாலும் தனக்குப் பொல்லாங்குபண்ணினல் உடனே சண்டைசெய்து கொல்வதெல்லாம் புண்ணியமேயாம். யாகத்தில் பசுவதை செய்தால் மோக்ஷமென்று இப்போதுநடந்துவருகிற வழக்கத்தை நீர் பார்த்திருக்கிறீரல்லவா என்று முடித்தார். இப்பால் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தருமநந்தனரை நோக்கி, இந்த வியாசரிஷியாகிய மகாநுபாவர் சொன்ன வாய்மையெல்லாம் கேட்டீரல்லவா, நமதுவேதவியாசருடைய லீலைசெயல் முதலியவைகளை நீர் அறிந்திருக்கிறீர். இதைக்குறித்து நான்விஸ்தரித்துச் சொல்லவேண்டியதில்லை. இவ்விடத்திற்கலந்தநாரதமகாமுனிவருடையபெருமைகளைச் சொல்லத்தக்கவர்களுமுண்டோ. நான்அறிந்தமாத்திரம் ஒரு கதை சொல்லுகிறேன் கேளும். இந்த நாரதமுனிவருடைய தங்கைபிள்ளை பருப்பதன் என்னும் முனிவர் இவருடன் பிரியாத் தோழனாக இருந்து வரும்நாளில் சஞ்சயன் என்கிற ராசனிடம்சென்று அவனை ஆசீர்வதித்து அயனவிரதம் மாசவிரதங்களை அனுஷ்டிக்க அவன் உதவியை வேண்டினார்கள். ராசன் அதற்கு உடன்பட்டு இவர்களுழியத்துக்கென்று தன்குமாரி சுதை என்பவளை ஆக்கியாபித்தான். அவளுடைய அழகினுக்கு நாரதர் சபலப்பட்டு அவளைக் காதலித்தவராய் நாளுக்குநாள் தேகம் மெலிந்து உன்மத்தம் பிடித்தவர்போலிருப்பதை மருமகன்பார்த்து மாமா நீர் ஏன் இப்படி குன்றிப்போகிறீர். நீர்கொண்ட காதலை என்னிடத்திற்சொல்லப் போகாதா! நாம் இருவரும் எந்தக் காரியங்களையும் ஒளிக்காமல் பேசிக் கொள்ளுகிறதென்று நிச்சயித்திருக்க இந்தப்பெண்ணின்பேரில் நீர் ஆசைகொண்ட துன்பத்தை எனக்குச் சொல்லாமல் போனது சரியா. நமக்குரிய செபம் தபம் முதலிய நன்னெறியைக் கைசோர்ந்து, துன்மார்க்க நடத்தைக்கு உடம்பட்டீரே, உம்மை இப்போது தவம்புரிய வாருமென்றால் வருவீரா, அந்தப்பெண்ணை அணையாமல் விடமாட்டீர். அப்பெண்ணை கலி

யாணம்பண்ணிநீர் கூடும்போது உமது முகம் குரங்குமுகமாகக்கடவதென்று சபித்தான். நீ நாட்டிற் சஞ்சரிக்காமல் காட்டில் அலைந்து திரிவாயென்று நாரதர் பருப்பதனுக்குச் சாபமிட்டார்.

நாரதர் கொண்ட காதலைப் பெண்ணுக்குத் தகப்பனாகிய சஞ்சயன் அறிந்து, அவரிஷ்டப்படி அப்பெண்ணை அவருக்கு கற்பித்துக்கொடுத்தான். அவர் அப்பெண்ணுடன் நெடுங்காலம்கூடி வாழ்ந்து வரும்போது ஒருநாள் மருமகனாகிய பருப்பதன் காட்டில் எதிர்ப்பட்டான். அவனைப் பார்த்தவுடன் நாரதமுனிவர் மிகவும் பிரியமாக அரவணைத்து நீ காட்டில் அலைந்து துயரப்படவேண்டாமென்று அவன்சாபத்தை விமோசனம்பண்ணினார். மருமகன் மாமனாருக்கு இட்ட சாபத்தையும் நிவிர்த்தித்தான். இருவரும் அரண்மனைக்கு வந்தபோது மனைவி புருஷனுடன் பேசக்கூச்சப்பட்டாள். இந்த சாடையை அறிந்துகொண்ட பருப்பதன் நாரதருக்கு குரங்குமுகம் நீங்கினகாரணத்தைச் சொன்னவுடன் ஸ்திரீயும் புருஷனும் கூடியிருந்தனர். சிலநாளைக்குப்பின் நாரதர் காட்டில் தவத்துக்குப்போக ராசனை விடைகேட்டபோது தனக்கொரு புத்திரபாக்கியம் உண்டாகவேண்டுமென்று வேண்டினான். அதுபோல் அனுக்கிரகஞ்செய்து காட்டுக்கேகினார். இப்பால் சஞ்சயராஜனுக்கு ஒருகுமாரன் செனித்தான். அவன் பொன்மலம் விசர்ச்சனஞ்செய்வதைக் கேள்விப்பட்ட திருடர் சிலர் அந்தப் பிள்ளையைத் திருடிப்போய்க்கொன்றனர். இறந்த பிள்ளைக்காக ராசன் துயரப்பட்டு நாரதரை ஸ்மரித்தான். இவர் பிரசன்னமாகி அந்தப்பிள்ளையை எழுப்பிக்கொடுத்தார். இப்பேர்ப்பட்ட மகத்துவமுடைய இவரும் மற்ற மகான்களும் சொல்லுகிற வாக்கியத்தை நீர் தள்ளாமல் திருமுடிபுனைந்து அரசாளக்கடவீரென்று கண்ணன் கூறினார்.

அப்போது அர்ச்சுனன் மாயோனைப்பார்த்து, தருமபூபதி சமரில் இறந்தோரைக்குறித்து அஞ்சிப்பயப்படுகின்றாரே, அந்த பயத்தை ஒழித்து தருமந்தப்பாமல் துரைத்தனஞ்செய்வாராகில், தீவினைப்பழிகள்எக்காலமும் சேராது; அப்படிக்கில்லாமல் அடவிபுகுவாராகில் இதைவிட வேறு பாவங்கள் உண்டோ, எந்தலே! நான்தெய்வலோகம் போயிருந்தபோது, அவ்விடத்தில் நடந்த ஒருகதை சொல்லுகிறேன்கேளும்..அஃதாவது, பூர்வத்தில் மிதிலாபுரியை யாண்ட சனகமகாராசன் செங்கோல் செலுத்தி வரும்நாளில், அவர் தம்பியாகிய சங்கரனனவன் ஒரு ரிஷியின் வனத்தை நெருங்கி அவரைத் தெரிசிக்கப் போனபோது, அங்கே பழுத்திருந்த மாம்பழம் ஒன்றைப் பறித்தான். அந்த வனக்காப்பாளர் கண்டு இந்தப் பழத்தை ஏன் தின்றாயென்று பின்தொடர்ந்தார்கள். அவன் லிகிதமாமுனிவரைக்கண்டு பணிந்தபோது, கூடவந்த தோட்டக்காரர் தங்களைத் தெரிசிக்கவந்தவர் மாம்பழத்தை அறுத்தாரென்று முறையிட்டார்கள். இம்மொழியைக் கேட்ட பெரியவர் சங்கரராசனை நோக்கி, நீ பிறர்பொருளைக் கவர்ந்ததினால் பொல்லாங்காகிய தீமை உன்னைப்பிடித்தது. இதற்கு தண்டனை ஆளுலொழிய அது நீங்காது. இதைப்பற்றி சனகராசனிடம்

போய்க் குற்றத்துக்குத் தண்டனையடைந்து அப்பால் இவ்விடத்துக்குவா வென்று கற்பித்தார். அவ்வண்ணமே அந்த சங்கராசன் சனகராசனிடம் தெரிவித்தான். அவர் தருமநூலைப் பரிசோதித்துப் பிறர்பொருளைக்கவர்ந்த குற்றத்துக்கு விதித்த தண்டனைப்படி இவன் திருடின கையைத் தறிக்கும்படி கட்டளையிட்டார். அதுபோல் கொலையாளிகள் அவன் கையைத் தறித்துப்போட்டார்கள். தறித்த கையை யெடுத்துக்கொண்டு லிகிதமா முனிவரிடம்போய் சந்தோஷமாய் தனக்கு நடந்த தண்டனையைக் காண்பித்தான். நீ ராசதண்டனை யடைந்தபடியால் உன் பாபம் மன்னிக்கப்பட்டதென்று ஆசீர்வதித்து அவர் அனுக்கிரகத்தினால் பழையபடி கையுண்டாகித் தன் அரண்மனைக்குத் திரும்பினான். தம்பியென்று பாராமல் தண்டனை விதித்த சனகராசனை உலகோர் புகழ்ந்தார்கள். அதுபோல் நீர் நடுவுநிலைமை தப்பாமல் செங்கோல் செலுத்துவீராகில், ஒரு தீமையும் உம்மை அணுகாது. தேவரீர் இவைகளையெல்லாம் ஆழ்ந்த யோசிப்பதே முக்கியம் என்று முடித்தான். இவைகளையெல்லாம் கேட்ட தருமராசன் எங்கள் பாட்டன் பீஷ்மாசாரியர் சரசயனத்தில் துன்புற்றுக்கிடக்க, நான் சுகத்தை விரும்பி யுலகத்தை யாளத்தக்கதோ என்று வருந்திக் கண்ணீர் விட்டார். கூடயிருந்த அருந்தவத்தோர் அந்த பீஷ்மரிடம் போய்க்கேட்போம் வாருமென்று எல்லோரும் எழுந்து ரணக்களத்தில் வந்து சேர்ந்தார்கள்.

பீஷ்மர் கண்விழித்துப்பார்த்து சங்கதிகளைக் கேட்டறிந்து இந்தக் குருக்ஷேத்திரத்தில் உயுத்தஞ்செய்து ஆவியை இழந்த எல்லாரும் மோக்ஷம் அடையும்படியாய் மந்தாகினிக்கரையில் முறைப்படி கருமக்கடனைத் தீர்த்தாய். இனி இவ்விடத்தில் நில்லாமல் அஸ்தினபுரத்தைச் சேர்ந்து வர்ணாசிரம தருமந்தப்பாமல் குடிகளைச் சம்ரக்ஷணைசெய்து, திரிதராஷ்டிரன் காந்தாரி முதலிய பெரியோரை ஆதரித்துக்கொண்டிரு. தவம்புரியப் போகிறேனென்பது அபாயமாகிய கொடிய தொழிலாய் முடியும். கர்ணன் முதலியவீரர்கள் இறந்தார்களேயென்று விசனப்படுவாயாகில் அவர்கள் விருதாவில் இறந்தார்கள் என்று நினைக்காதே, வீரராகிய ராசாக்களுக்கு விதி என்னவென்றால், பகைவருடன் பொருதி வெற்றிகொண்டு மண்டலத்தை யாளுவதே அறம், இதனால் உனக்கு ஒருபொல்லாங்கும்வராது. உன்னாலாகிய தொன்றுமில்லை. எல்லாம்வல்ல வல்லவர் யாதொரு பேச்சும்பேசாமல் இதோ என்னெதிரில் நிற்கிறார். அந்தத் திருமாலைக் கைவிடாதே. அவரையும் மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு அஸ்தினபுரிபோய் திருமுடிதரித்து வாழக்கடவையென்று பீஷ்மர் விளம்ப, அவர் மொழியைப் பழுதுபடாமல் தலைமேற்கொண்டு எல்லோரும் திரும்பி அஸ்தினபுரம் வந்துசேர்ந்தார்கள். நெடுநாட்பிரிந்திருந்த பாண்டவர்களைக் காண அபேட்சித்திருந்த குடிசனங்கள் அநேகமநேகங் காணிக்கைகளுடன் தருமரை வந்து கண்டார்கள். ஸ்ரீவேதவியாசர் முதலிய பெரியவர்களை அவரவர்கள் ஆசனங்களில் எழுந்தருளப்பண்ணி தருமர் சிம்மா

சனத்தில் வீற்றிருந்தார். அந்தணர்கள் கும்பாய்க்கூடி அவரைவந்துகண்டபோது, தருமராசன் சிம்மாசனத்தை விட்டெழுந்து அன்னோரைப்பூசித்து ஆசனமளித்தபின்னர், அவர்களுடன் பிராமணவடிவெடுத்து வந்திருந்த ஒரு அசுரனானவன், முரசக்கொடியோனைப்பார்த்து, யாவரும் பிரமிக்கும்படியாய், தருமநந்தனன் என்ற பெரியபேரை வைத்துக்கொண்டு, ஆஷாடபூதிபோல் நடித்துக்காட்டி குருக்ஷேத்திரத்தில் சகலமானபேரையும் முடித்துவிட்டாய், உனக்குத் தருமன் என்கிறபேர் தகுமாவென்று அத்துமீறிப்பேசினான். வேதியர்கள் திடுக்கிட்டு உதாசித்த அந்த பார்ப்பானை நோக்கிப் பார்த்த பார்வைத்தீயினால் அவன் எரிந்து பஸ்பமாயினான். அதைக்கண்ட அறன் மைந்தன் கண்ணனைநோக்கி இதென்ன விபரீதமென்று கேட்டபோது, இறந்த இவன் ஒருராக்ஷதன், அவன் துரியோதனனுக்கு மிகவும் நண்பன், பிரமப்பிரளயம்வரைக்கும் பிழைத்திருக்கும்படி வரம்பெற்றவன். கூட்டமான பிராமணர்களுடைய மனஞ்சலித்தால் இறந்துபோம்படிப் பிரதிவரமும் பெற்றவன். இவன் இவ்விடம்வர இந்தனை நாள்சென்றது. சர்ப்பக்கொடியோன் இறந்தானென்றது கேட்டு இவ்விடம்வந்து மாண்டான். இவன் ஒருவன் கணக்கிற்குறைவாக்கும், இதுவும் இன்றைக்குச் சரிப்பட்டுப்போயிற்று என்றார். அப்பால் அந்த அரக்கனுடலைச் சபையைவிட்டு அகற்றிப் புண்ணியாவசனம் செய்து இடத்தைச் சுத்திசெய்து தாங்களும்போய் ஸ்நானமாடி வந்தார்கள். அப்பால் திரிதராஷ்டிரமகாராசன் விதுரனுடன் கலந்துபேசி தருமபூபதிக்கு முடிசூட்ட பெரியவர்களை நாள்கேட்டதற்கு நாளைக்கே முடிசூட்டலாமென்று நாள்குறித்தார்கள். உடனே அதற்குத்தகுந்த வேகுமைகளைச்செய்து புண்ணியதீர்த்தங்களையுந் தருவித்து சாஸ்திரோக்தமாய் விதிகளை நடாத்தி திருமுடியை தௌமியாசாரியர் கையில் ஏந்தி யாவருக்குங் காண்பித்து அவரவராசீர்வசனம் பெற்று வியாசர் கையில் கொடுத்தார். அவர் அதைவாங்கி ஆசீர்வதித்து ஸ்ரீஜநார்த்தனன் கையிற் கொடுத்தார். அவர் தமது திருக்கரத்தால் எடுத்து ஆசீர்வதித்து தருமன் சிரசில் முடிசூட்டினார். தேவர்முதல் எல்லோரும் களித்துப் புஷ்பமாரிபெய்து புகழ்ந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணர் சாத்தகியுடன் மகிழ்ந்து பீமசேனனுக்கு இளவரசுப்பட்டமும், அர்ச்சுனனுக்கு சேனாதிபதிப் பட்டாபிஷேகமும் நகுலனுக்குப் பொக்கிஷ அதிகாரமும் ஏற்படுத்தி, சகாதேவனை மதிமந்திரியாக்கி தருமரை ராச்சியபரிபாலனஞ்செய்யும்படி திட்டம்பண்ணினார்கள். அவர் நீதிதவறாமல் அரசாட்சிசெய்துவந்தார். கேளும் ஜநமேஜய மகாராசனேயென்று வைசம்பாயனர் சொல்ல, ராசன் புத்திரமித்திர களத்திராதிகளுடன் மகிழ்ந்து, சித்தந்தெளிந்தவனாகி சத்துவகுணக்கடவுளை பூசித்து உத்தமகுண வைசம்பாயனரை விசுவாசத்துடன் வணங்கி மேல்நடந்த கதையை வினவினான்.

திருமுடிபுனைந்தசருக்கம் முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ண சகாயம்.

ஸ்ரீமகாபாரதம்.

பன்னிரண்டாவது

சாந்திபர்வம்.

விருத்தம்.

தீமோ கனஞ்செய்முலை மானுர் நிதம்பவலை தேறுதழுந்து மிடையும்
மாமோக மைந்தர்பொருள் வாழ்வா யெர்ந்துதட மாறுமயங்குமிடையும்
தாமோ தரன்கமல மாதாள் பவன்சுருதி தேறு தவன்றனது தாள்
நாமோ தவுந்தொழுது ளேகாணவும்பெறுகி ஞமே யநந்த விழியோர்.

பீஷ்மாசாரியரைக்கண்ட சருக்கம்.

திருவிற் சிறந்த கோபதிக் குயர்ந்த மந்தரமனைய தோட் சந்திர குலத்திறைவனே! கேளாய், தருமநந்தனருக்கு மகுடாபிஷேகமாயின பின்னர், அறம்வழாது செங்கோல் நடாத்திவரும்போது ஒருநாள், சரச சயனத்தில் வசித்திராநின்ற பீஷ்மாசாரியரைப்போய்த் தெரிசித்து வர வேண்டுமென, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியாகிய மகான்கள் சகிதமாய் அறன் மைந்தன் அவ்விடம்போய் அனைவரும் பீஷ்மர்மாகாத்துமியங்களையெடுத் துப்போற்றிக்கொண்டுநிற்கையில், சரசயனத்தில் கண்வளராநின்ற பீஷ் மாசாரியர் விழிமலர்ந்து பார்வைசெய்து, வாராய்தருமபுத்திரனே! சகல சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் பெற்றுயா? நின் உடன்பிறந்தார் சுகமா? ஸ்ரீஜெகன்மோகனனுகிய கண்ணபிரான் இங்கெழுந்தருளி வந்திருக்கின் றுரா? என்றுவினவ, உடனே தருமநந்தனர் அவர் அருகிற்சென்று, யாதவ சிரோன்மணி இதோ வந்திருக்கிறுரென்று உரையாமுன்னமே, ஸ்ரீகிருஷ் ணபகவான் அவர் எதிரில் நின்று தன்வரவைத் தெரிவித்தனர். பீஷ்மர் அவர்களை இருக்கையில் எழுந்தருளச்செய்த காலையில் சக்கிரதரன் காங் கேயனை கண்ணுேக்கி தருமநந்தனன் உமது திருவாக்கினுல் தர்மரகசிய ங்களைக்கேட்க விருப்புற்று தன்தம்பிமார் சுற்றத்தோர் சான்றேர் இரு டியர் விதுரர், கிருபர், சஞ்சயர், அனைவரோடும் உமதிடம் வந்தடைந்த னன். உமது வாக்கினுல் வேதநுட்பங்களைத் தேன்பொழியுமாறு நீர் மொழிந்தருள்வீர் என்றுர்.

பீஷ்மர் நகைத்து, பெருமானே! நீ அறியாத நீதியும் அறங்களும் இவ்வுலகத்தில் வேறு உண்டோ நெடியோனே! நான் சரசயனத்தில் வரு ந்தி நாவறண்டு கிடக்கின்றமையால், நீரே திருவாய் மலர்ந்தருளுவீர்

ஐயனே என்றார். காங்கேயரே! உமது வாக்கிலிருந்து வெளிப்படுவதைக் கேட்கவிரும்பிய இவர்களுக்கு ஏனையோர் வாக்கிற் கேட்பது இன்பப்ப டாதே ஆனதுபற்றி, நீர் அடைந்திருக்கும் வருத்தம் நீங்கி, அம்பினால் அடியுண்ட காயங்களாறி, இதுமுதல் திடங்கொண்டு, உச்சாகத்துடன் அருமையான தருமங்கள்யாவும் ஆராய்ந்துதேர்ந்து உரைத்திடுவீரென்று பாபரகிதன் அருள்புரியவே, பீஷ்மாசாரியர்க்கு மனம் வாக்குக் காயம் மூன்றிற்கும் வலுவேறி, வாசுதேவனைப் போற்றவும் புகழவுந் தொடங்கி னர். உயர்ந்தோரினும் உயர்ந்தோராலும் எட்டொணாத கனியே, வேதப் பொருளினுக்கு மேலாயதனியே, பதங்களெல்லாவத்திலும் இதமான பத மே, ஈஷணத்திரையாதிகளை வெறுத்த பெரியோர்க்கு உறவும், இப்புவி யாசைகொண்டு உழல்கின்ற அஞ்ஞானியர்க்கு எட்டாததூரமும் ஆகிய வனே! தருமசாஸ்திரங்களில் ஒட்டியும் ஒட்டாமலும் நிற்போனே! தன் னைத்தான் அறிந்த தலைவர்க்குத்தான் அறியுந் தலைவனாகியும் ஆணவப் பேய்கொண் டலைவார்க்குக் காணக்கிடைக்காத அரும்பொருளாகியும் இருக்கின்ற கண்ணனே! உனது மகத்துவத்தை அடியேன் மதிக்கவல் லேனோ! ஆயிரநாமங்களையும் எடுத்துக்கூறவல்லேனோ! நின் திருவுருவத் தையும் எல்லாவஸ்துவுமாயிராநின்ற இன்பத்தையும் நான் எடுத்துப்பேசி ஸ்துதிக்கும்படி அநுக்கிரகம்புரிவாய் ஈசனே! தேவரீர் முத்தலைச்சூலமும் தண்டுகமண்டலமும் சங்கு சக்கிரமும் அன்னவாகனமும், கருடவாகன மும், ரிஷபவாகனமும், கைலாயமலையுங் கமலமலரும், கடற்பாயலும், வடபத்திரமும் உடைய நீர் அவற்றை நீங்கி, பாரதத்தை முடிக்க தேவகி தேவியார்க்குப் பிள்ளையெனப்பிறந்த துளபமணிமார்பனே! பொருளே! ஐம்பூதமே! ஐம்புலனே! ஐம்புலன்மயங்கும் மயக்கமே! அம்மயக்கத்தை மாய்க்கும் மாண் அறிவே! இருளே, வெளியே, ஆதிமூலமே, ஆகிய இவை அனந்தமும் நீயேயானால் உம்மை யாவர் அறிவர், ஐயனே ஒன் ருய் இரண்டாய் மூன்ருய்க்கிளைத்து கிளைகளில் தழையாய் பூவாய் பிஞ் சாய் காயாய் கனியாய் அதிமூலமாய் அமைந்தமரமாய் வித்தாய் நிறைந்த அநாதியே! நான்மறையாய் முக்குணமாய் இருவினையாய் ஒருமுதலாய் நன்மையாய்த் தீயாய்ப் பலபல சமயமுமாய் அச்சமயங்களுக்குப் பொது வாய் சமரசமாய், ஐந்தெழுத்தாய் எட்டெழுத்தாய் வீற்றிருக்கின்ற விம லமே! இவ்வனமாய் விராட்புருஷத்துவம் என்னவிளையாட்டோ, நாராய ணனேயென்று அநேகமாய்ப் புகழ்ந்து போற்றியபோது, தனக்குத் தானே உவமையாகிய பெருமான் சிறுநகைசெய்து, மகா பெரியோனே! உன் ஆத்துமா பிரியுங்கால் பேசுதற்கரிய எட்டாம் வசுவின்பதம் தடை யின்றி உனக்கு கல்பிக்கக்கடவதென்று ஆசிகூறி அருளினர். பரிபூரண னுடைய கடாட்ச வீட்சணங்கிடைத்த பீஷ்மர் அரவிந்தலோசனன் திரு வடிகளைப் பாடி, பக்கத்திலிராநின்ற வேதவியாசர் நாரதர் முதலிய முனி வர் தம் அருள்வாக்கியம் பெற்று, அறன்மகனாகிய தன் பேரனுக்கு சகல தர்ம சூழ்ச்சிகளையும் போதிக்கத்துடங்கினர். சம்ராட்டாகிய தருமராஜ

னே! நீ தெரிந்துகொள்ளக்கூடாத சந்தேகங்கள் அனைத்தையும் கேட்டுக் கொள்வாயென்று பீஷ்மர் அருள, குந்திமுதல்வன், கோவிந்தனை அகத்தில் இருத்திப் பாட்டன் பாதங்களிற் பணிந்து எழுந்து நின்று இருகரத்களையும் தலைமேற்கூப்பி, தன் மனதில் உண்டாயிருந்த ஐயந்திரிபுகளை ஒன்றென்றாய் எடுத்துக்கேட்க ஆரம்பித்தனன். ஐயா பீஷ்மாசாரியரே! பூவுலகத்தே பல்லாயிரங்கோடி ஆத்துமாக்களிருக்க ஒருவன் மாத்திரம் அரசனாகி அனைவரையும் ஆளுகை புரியவந்த காரணம் யாது, இருவகையோர்க்கும் பிணி பசி மூப்பு இன்பதுன்பம் சாக்காடு இவை ஒன்றேயாகவிருக்க அரசனுக்கு கீழ்ப்பட்டிருக்குஞ் சந்தேகத்தை நிவிர்த்திப்பீரென்று பிரசினைசெய்த பேரப்பிள்ளையைப்பார்த்து புன்னகைகொண்டு தருமராசன் அறிந்துகொள்ளும்படி விரிக்கலுற்றார்.

பீஷ்மர் தருமருக்கு விதிமுறையுரைத்தது.

முரசகேதனா! தேககாந்தி, கிருபை, சத்தியம், இவை நிலைபெற்ற ஒருவன் உலகத்துக்கு அரசனாவான். இவ்வாறாகிய அரசன், ஐம்புலச்சேட்டைகளை அடக்கி தோஷரகிதனாய், யாகாதி முதலிய கிருத்தியங்களைப் புரிந்து, தெய்வாராதனைகளை நடத்தி, விசுவாச நன்னெறியினால் எல்லோரையும் ஆதரித்து ஆளுகை செய்வான். இத்தன்மை யுடைய கோமான் மும்மூர்த்தியர்க்கும் பிராமணர் மேலானவர்களென்று உண்மையில் உணர்ந்து அவர்களிடத்தில் அன்புபாராட்டி வருவானாகில், அவன் மாசில்லாதவனாகி, தீர்க்காயிசும் தருமவிருத்தியும் பெற்றிருப்பான். அவன்குடிகள் துர்வியாதியும் அவமிருத்திபுவும் அடையாமல் சுகசீவிகளாய் இருப்பார்கள். மாதம் மும்மாரிபெய்யும். யாகாதி கருமங்கள் மேலும் மேலும் மிகுந்து நடக்கும். பூமி நன்றாய் பலிக்கும். தைரியம் பெருகும். சத்துருக்கள் நசிப்பர். இவ்வண்ணம்கூறிய நெறிவழுவாது நிற்கும் வேந்தரை, மன்னர் மன்னவர் புகழ்வர். இதனை உன் கருத்தில் அழுந்த இருத்துவாயாக என்றனர். ஐயா! இத்தனை மேன்மை பொருந்திய மறையோர் அரசன் கட்டளைக்கு அடங்கவேண்டி வந்தகாரியம் யாதென்று அறன் புதல்வன் கேட்ட பிரசினைக்கு, கேளாய் தருமபூபதி! அந்தணர் படைகைக்கொண்டு யுத்தம் செய்து வெற்றி நிமித்தம் உயிர்க்கொலை புரிந்தாலும் புரியலாம், பிராமணக்கிருத்தியங்கள் நித்தியானுஷ்டான தருமங்களை விட்டுவிட்டால் அரசன் அவர்களை தண்டிக்கலாம், அதனால் அவனுக்குப் பாவம் அணுகாது. இன்னும் அரசர் லக்ஷணங்களைச் சொல்லுகிறேன் கேளும், பிரமா வானவர் உலகத்தைப்படைத்து உயிர்ப்பிராணிகளையும் தேவர்களையும் சிருஷ்டித்தார். உற்பத்தியாயின தேவர்கள் உலகமூன்றினுஞ் சஞ்சரித்து பாபபுண்ணியப்பலன் இன்னதென்றுபகுத்தறியக்கூடாதவர்களாய் விசாரமேலிட்டுப் பிரமனிடம் முறையிட, அவர் தருமசாஸ்திரத்தை லக்ஷம் அத்தியாயமாய் விதித்து அதற்கு பிரமதருமம் என நாமகரணஞ்செய்து

தேவர்கள் கையில் ஈய்ந்தனர். இந்தகிரந்தத்தின் சூழ்ச்சி தெரியாமல் அமரர்கள் திகைத்தபோது, பிரமன் நெற்றியினின்று பதினொரு உருத்திரர் ஜெனித்தனர். அவர்கள் அந்த தருமநூலை உலகோர் எளிதில் உணர அதைப் பதினாயிரம் அத்தியாயமாகச்சுருக்கி அதற்கு உருத்திர தருமமென பெயர் கொடுத்து பிரபலப்படுத்தினார்கள். அதினாலும் தேவர்கள் தெரிந்துகொள்ளக் கூடாதவராகித் தியங்கும்போது, தேவராசன் அதனை ஐயாயிரம் அத்தியாயமாக சங்கிரகித்துப் பிரசாதித்தான். இதனையும் உணர்ந்தறிய அசக்தராயின நாவலர்க்கு தேவகுருவாகியவியாழபகவான் அதனை மூவாயிரம் அத்தியாயமாக முடித்தார். அதனைச் சுக்கிராசாரியர் ஆயிரம் அத்தியாயமாகச் சங்க்ஷேபித்தார். இதைப்பார்த்தும் சந்தேக நிவாரணம் உண்டாகாமல் பாவத்தையே அனுசரித்து அஞ்ஞானியராகி ஆகுலித்து அனைவருங்கூடி ஆளுகைசெய்ய ஒருவன் இருக்கவேண்டியது அவசரமென்று எண்ணி, மகாவிஷ்ணுவினிடம் முறையிட்டனர். அவர் தமது நினைப்பினால் ஒருமகாபுருஷனை சிருஷ்டித்து அவற்கு விரசுவெனப் பெயரிட்டு, நீ கோவாய்நின்று அறத்தைச் செலுத்தி துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யென்று ஆக்கியாபித்தார். அவ்வரசன் ராச்சியபரிபாலனம் பண்ணாமல், கருத்தமன் என்னும் பிள்ளையைப் பாலித்து, அவனை அரசனாக்கி தான் தவமே புரிந்து மேன்பத மடைந்தனன். கருத்தமனும் தந்தை வழியே தொடர்ந்து தவம் புக்கனன்.

இவன் புதல்வன் அங்கனென்பவன் காசினியை ஆண்டு அறத்தை நிலைநாட்டி சதுர்வர்ணத்தாரும் தங்கடங்கள் ஒழுக்கத்தே நிற்கும்படி செய்து ஒருசேயனை ஈன்று அவனுக்கு நன்னீதியெனப்பெயர்சாத்தி மகுடாபிஷேகஞ் செய்துவைத்து தன் முன்னோருக்கு ஒத்தவண்ணம் தவத்துக்குப் போய்விட்டான். நன்னீதியெனப் பெயருடைய அந்தப்புது அரசனானவன் காமக் குரோதங்கட் கிடுபட்டு, ஒழுக்கநெறிவழீஇ அரசினை நடாத்துங்கால், உலகத்துக்கு அரசுகெடின் வர்ணாசிரம தர்மங்கள் வளராதேயென்று பெரியோர் எண்ணி, அவனியை ஆதரிக்குங்கடமை, மகாவிஷ்ணு பிருதிவீபதே யென்றுங்கே சுருதியிருக்கின்றமையால், அவர் கால்வழியில் தோன்றிய இந்த நன்னீதியின் வலத்துடையினை தருப்பை ஞாண்கொண்டு வேதமந்திரஞ் செபித்துக் கடைந்தனர். உடனே அவன் துடையிலிருந்து ஒருமகன் ஜெனித்தான். பூமியை நீதியுடன் ஆள்வாயென்று அவனை வேடருக்கு அரசாக அமைத்தபின்னர், முன்னங்கூறிய நன்னீதியின் வலப்புறத்தை மேலுங் கடைந்தார்கள். அதிலிருந்து உண்டாகிய பிள்ளைக்குப் பரமாகரன் என நாமந்தரித்தபின்னர், அவன் பார்ப்பார் முதலிய இருடியரை வந்தித்து, நான்செய்யவேண்டிய காரியத்தைக் கற்பியுமென்று பிரார்த்தித்தான். வந்தனைபுரிந்த அந்த வாலிபனைப் பெரியோர் ஆசிகூறி அவனுக்கு நீதிநெறிகளை உபதேசித்துப் பாரினை ஆளக் கட்டளைபண்ணியருளினர். அந்த பரமாகராசன் சத்தியத்தோடு செங்கோல் செலுத்திவரும் நாள்களில், முற்கூறிய நன்னீதியின் எலும்புகளை

மறுபடியும் கடைந்தார்கள். அதிலிருந்து தாதா, விதாதாவென்னும் இருவர் உற்பத்தியாகிப் பரமாகர அரசனுக்குத் துணையாகினர்கள். அவர்களுக்கு சுக்கிராசாரி குருவும் மந்திரியுமாக இருந்து நீதிப்படி அரசுசெலுத்தி வந்தார்கள். அவர்கள் கால்வழியோர் மேன்மேலும் உலகத்தை ஆண்டு பிராமணரைப் பூசித்து வாழ்ந்தனர். அந்நாள்களில் இறைவன் ஆறிலொரு கடமை வாங்கிக்கொண்டு குடிகளைக்காத்துவர இருடியர் சில பல ஏற்பாடுகளை நியமித்து, இவ்வழி நிற்பாயாகில் சகல சுபங்களுமுண்டாம், நெறிவழி தப்பி நடந்தால் கெடுதி சம்பவிக்குமென்று எச்சரித்து வைத்தார்களென்று இங்ஙனங் காங்கேயன் கழறுகின்றார். வருணாசிரம தர்மம் மறையாசிரமதர்மம் எவ்வகைப்பட்டதென்பதைப்பற்றி தருமபூபதி செய்த பிரசினைக்கு பீஷ்மாசாரியர் விடை.

பார்ப்பாரொழுக்கம்.

தருமநந்தன! நால்வகைக் குலத்தார்க்கும் பிராமணர் முதற்குலத்தோர். அவர்கள் செய்யவேண்டிய கிரமங்களைப் பொதுவாகச் சொல்லியிருக்கிறார்கள். கேளும்! வேதியரென்பார் குற்றங் கோபமின்றி உண்மை தவறாமல் நிராசையராய் இரக்கமுடையராய் கற்புடைமங்கையை மணந்து, சுசி ஆசாரம் முதலிய நித்திய செபதப கர்ம காயத்திரியாகிய காரியங்களை முறைபிசகாமல் பழிவராமல் நடத்தி வருவதே பிராமணவிதி. இன்னமும் வேதமோதல், யாகஞ்செய்தல், வேதமோதுவித்தல், யாகம் பண்ணுவித்தல், தவமியற்றல், தெய்வம் போற்றல், ஔபாசம் புரிதல், அக்கினி சாட்சியாய் மணம்புரிதல், விவாக நடத்துவித்தல், ஈகையேற்றல். ஈகையீதல், அதிதிக்கு அன்னம் படைத்தல், நீரின்முன் செபமும் நெருப்பின்முன் தவமும் இத்தியாதிகள் பிராமண கிருத்தியங்கள் என்றறிக.

சத்திரிய தருமம்.

அரசன் அவயவக்குறை யில்லாதவனாய் அழகுடையானாய் குலகோத்திர சுத்தனாய் வேதாத்தியயனஞ்செய்து பிராமணர் மூலமாக வேள்விகளைச் செய்வித்து, தநுர்வேதாப்பியாசம்பண்ணி நால்வகைச் சேனைகளைக் காத்து அமர்முகத்தில் எதிர்த்து நின்று ஜெயித்து பிறர்மனைவியை இச்சியாமல் மன்னுயிர் அனைத்தும் தன்னுயிராய் மதித்து பாரபட்சமின்றி பரராஜபயங்கரனாயிருந்து அரசை நடாத்துவது அரசவொழுக்கமென்று அறிக.

வைசியரொழுக்கம்.

உழுது பயிர்செய்து பசுக்களைக்காப்பாற்றி பரதார கமனம்பண்ணாமல், சத்தியநெறியில் நிலைநின்று புண்ணியந்தேடி சொல்தவறாமல் பிரா

மண விசுவாசஞ்செய்து அன்னதானமிட்டு தெய்வாராதனை முதலிய நோன்புகளைப் பொருட்செலவுசெய்து பூர்ணமாக முடித்துப் பற்று வரவுக் கணக்குகளில் எவ்வளவேனும் பிசகாமல்கோபமடக்கிப் பொறுமைக்குணம் போற்றி, பொருளை சம்பாதித்து அரசற்குக் கீழடங்கி நடந்துவருவது வைசியரொழுக்கமென்றறிக.

சூத்திரரொழுக்கம்.

சூத்திரர் மேற்கூறிய மூன்றுசாதியர்க்கும் சிசுருஷைசெய்து பூவைசியருடைய பூமிக்குக் காணியாட்சிக்காரனுய் நின்று இரப்போர்க்கீய்ந்து தெய்வதாபக்தி குருபக்தி பண்ணி, பெரியோரைப் பிழையாது போற்றி, பசுக்களை ரட்சித்து இத்தியாதிய கிருத்தியங்களுக்காளாகியிருப்பது சூத்திரதர்மம் என்றறியவும்.

இனி ஆசிரமதர்மங்களைச் சொல்லல்.

பிரமசரியவிதி.

பிரமசரியனுக்கு, குருவணக்கம் வேதபாராயணம், செபம், தவம், விதிநெறிக்கருமம், ஒருவேளைப்பிச்சை, ஆசாரியபணிவிடை, சுகந்த பரிமளங்களை யொழித்தல், கௌபீனந்தரித்தல், சிவகாருண்ணிய முடைமை முதலியவை அவனுக்கு உரித்தானதென்றறிக.

கிரகஸ்த விதி.

இல்வாழ்வான், கற்புடை மங்கையை வாழ்க்கைத் துணையாகக்கொண்டு பிறர்மனையாளை வெறுத்துத் தாய்தந்தையரைப் பூசித்து தன்புற்றாரை யோம்பி விருந்தினரையும் பிதிர்க்களையும் அமுதமூட்டி, உயிர்வதை செய்யாமல் வஞ்சனை சூதுகட்கிடுபடாமல், பிறர்பொருளிச்சியாது மயக்க வஸ்துகளை பொசியாமல் வஞ்சனை சதிசெய்யாமல் சுற்றத்தாரைத் தழுவி நோன்புகள் விரதங்கள் காத்து தேவதர்ப்பணம், ரிஷிதர்ப்பணம் பிதிர்தர்ப்பணம், ஆசாரிய தர்ப்பணமுஞ்செய்து தேவதா பக்தியுடன் இருக்க வேண்டும்.

வானப்பிரஸ்தன் விதி.

வானப்பிரஸ்தன், அக்கினியுடன் தன்மனையாள் சகிதமாய் வனத்திற்சென்று, போசனத்தை யொழித்துக் கந்தமூல பலாதிகளை அருந்தி வீண்காலம் போக்காமல் பிரமநிட்டைகூடி கோடை குளிர் முதலிய இடர்களுக்கு அஞ்சாமல் பஞ்சாக்கினி மத்தியில் தவம்புரிந்து பூவுலக இன்பங்களை இச்சியாது நிற்பதே அவனுக்கிட்ட விதியாம்.

சந்நியாச ஆசிரமம்.

சந்நியாசியானவன், பாசபந்தங்களை யறுத்து உலகங்களிற் சஞ்சரித்துக் கிடைத்தபோது பொசித்து, சுகங்களை யொழித்து, சுகதுக்கத்தை நாடாமல் மௌனஞ்சாதித்து, தண்டு கமண்டல காவிகாம்பரங் கைக்கொண்டு வேதாகம சாஸ்திர சம்பிரதாயங்களை அப்பியாசித்து திரிகால ஸ்நானஞ்செய்து, சகலத்தையும் ஈசுவரார்ப்பணம்செய்து அகதைமமதையற்று, விருப்பும் வெறுப்பும்வெப்புங்கெட்டு, சித்தசுத்தி சித்தசாந்தியுள்ளவனாகி இருக்கவேண்டும். இந்த விதிப்பிரமாணம் சந்நியாசிகளுக்குரியது. மற்றவருணத்தாருக்குக் கூடாதென்றறி. சூத்திரனுக்கு இல் ஒழுக்கமே தருமமாதலின் மற்றை மூவகை யாசிரமங்களின் அனுஷ்டிப்பு அவனுக்கில்லை. மறையோரைப்போல சந்நியாச தர்மத்தை சூத்திரன்மேற் கொள்ளுவானாகில், ஆயுள்செல்வ முதலியவைகுன்றி, இம்மையில் வறுமையும் மறுமையில் நரகமும் அடைவானென்று கூறினர். அப்போது தருமராஜன் ஐயந்தெளிந்தவராகி, உலகிலுள்ள சனங்கள் தர்மகர்மங்களை அனுசரித்து சரியாகநடந்து கடத்தேறுவதற்கு ராசனைத்தவிர வேறொருவரால் நடத்தக்கூடாதாவென்ற கேழ்விக்கு, பீஷ்மர் கூறத்தொடங்கினர்.

கேளும் யுதிஷ்டிரரே! அரசே உலகிற்குத்தெய்வம். அரசே உலகரக்ஷகன். அரசே சங்காரகர்த்தவியம். இப்பான்மையார்கிய அரசன் இல்லாவிட்டால் தருமம், புண்ணியம், சத்தியம், யாகம், வேதம், தவம், தானம், மழை, கோவில், குளம், ஒன்றும் ஒழுங்கே நடவாது. பெண்மக்கள் முறைதப்பிப்போவர். ஆண்மக்கள் குலாசார சத்திய சௌசங்கள் தப்புவர். அனைத்துங் கெடுமென்றறி. ஆதலின் வேந்தனே மண்ணினுக்குரியன் அவ்வேந்தன் சத்தியம்பிழையாது செங்கோல் செலுத்துவானாகில் மேல் சொன்ன மூவாசிரமத்தின்பலனும் அவனைவந்து அடையும். அரசற்ற நாடும், சந்திரசூரிய கிரணமற்ற காடும், புத்திரபாக்கிய மில்லாதவீடும் இவை பிராணன்போன பெருஞ்சடக்கூடென்று கூறிய பிதாமகனை, அறன்மைந்தன் மூன்றுமுறை வந்தித்து, தேவரீர் இந்நேரமளவும் எனக்குப் போதித்ததினால் அதிக வருத்தமுண்டாயிருக்கலாம் ஆனதால், இன்றைக்கு இம்மட்டும் நிறுத்தி மற்றையவற்றை நாளையதினம் அருள்கவென்று பிதாமகனிடம் விடைபெற்று அஸ்தினாபுரம் வந்துற்றனர். இரவியும் குடதிசை புக்கனன். மறுநாள் பொழுது விடியுமுன்னமே, தருமாதியோர் எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்ட பின்னர், ஸ்ரீகண்ணமூர்த்தி முதலிய அனைவருடனும் பீஷ்மாசாரியரிடம்வந்து பணிந்தபோது, அவர்களை இருக்கையில் எழுந்தருள விடையளித்து, இன்னமும் உனக்குத் தோற்றிய சந்தேகத்தை கேட்பாயென தருமர் வினவத்தொடங்கினர்.

இரண்டாம்நாள் அரசர் நீதியுரைத்த கதை.

பெருமைபொருந்திய பீஷ்மாசாரியரே! உலகத்தின் அரசன் இராச்சியபாரம் பண்ணும் முறைமை எப்படியென்று தருமர் வினவினர். கே

ளும் வேந்தனே! அரசனுக்குக் குடை கொடி முரசு வாத்தியம் படைகுடி கூழ் அமைச்சு நீதிதெரிந்த மந்திரி தந்திரிகள் அளவற்ற தனம் தானியம் மலே ஆறு கோட்டை கொத்தளம் இவைகள் இருக்கவேண்டியதுமன்றி, வேதம் ஞானம் தநுர்வேதப்பழக்கம் முதலிய கல்விகளிலும், சான்றோர் கேள்விகளிலும், தேர்ந்தவனுய் உயிர்த்தோழனை யுடையவனுய் சத்தியந்த வறுதவனுய் பந்து ஜனரக்ஷகனுய் ஆசாரமுடையவனுய் அதைரியமில்லாமல் சத்துருக்களைச்செயித்து மன்னுயிரைத் தன்னுயிர்போற் பாதுகாத்து நீதிமுறை வழுவாமல் பழமையான மந்திரிகளை அலக்ஷியஞ்செய்யாமல், அவர்கள் ஆலோசனையைக் கைப்பற்றி புதிதாய் வந்தவன் யோசனைகளுக்கு உட்படாமல் செங்கோல் செலுத்தவேண்டும். இதற்கொரு திருஷ்டாந்த கதை சொல்லுகிறேன்.

படைமாட்சி அம்பரீஷன் கதை.

பூர்வத்தில் சூரியவம்மிசத்தில் அவதரித்திருந்த அம்பரீஷமகாராசன் நெடுங்காலம் நடுவுநிலைகெடாது செங்கோல் செலுத்தி இம்மையை விட்டு மறுமையில் இந்திரபதத்தில் தேவேந்திரனேடு சமானமாய் வீற்றிருக்கும் நாளில், இந்த அம்பரீஷனுடைய சேனுதிபதியாகிய சுவேதன் என்பவன் தேவ விமானத்திலேறி சகல ஆடம்பரங்களுடனேயும் அங்கே வந்தான். அம்பரீஷன் அதைப்பார்த்துஆச்சரியப்பட்டு, ஆயிரங்கண்ணனே! பூலோகத்தில் அநேக தான தருமங்கள் யாகாதிகிருத்தியங்கள் தேவதாபூசைகள் செய்து நீதிபிழையாமல் ஜீவகாருண்ணியத்துடன் செங்கோல் செலுத்தும் ஒரு அரசனுக்கு இப்பேர்ப்பட்ட பதவிகிடைப்பது மிகவும் அருமையாயிருக்க, உம்முடையசுவர்க்கமானது என்னுடைய சேனுதிபதிக்குஇவ்வளவு எளிதில் கிடைத்த காரணம்யாது, இவன் தேடிக்கொண்ட நல்வினை எத்தன்மையதோ அதை அடியேனுக்கு விரித்துரைக்கவேண்டுமென்ன, சூரியகுல வீரியனே கேளும், நீர் அரசாட்சி செய்யுங்காலத்தில் உம்முடைய ராச்சியத்தை அபகரிக்க ஆசைகொண்டு சிருங்கனுடைய பிள்ளைகள் இராக்கத ரூபிகளாய் மிகவும் பலசாலிகளான மூவர் நால்வகைச் சேனைகளைக் கூட்டிக்கொண்டு உம்முடன் யுத்தத்திற்கு வந்தபோது, அவர்களை செயிக்கவேண்டி பழமையான இந்த மந்திரியைச் சேனுதிபதியாக ஏற்படுத்தி அனுப்பிவைத்தீர், இவன் சண்டையிட்டுப்பார்த்தும் இராட்சதனை வெல்ல முடியாமையின் நிமித்தியம் இவன்மிகவும்துக்கித்து, உம்முடையஅன்னத்தை நெடுநாள் சாப்பிட்டும், இச்சமயத்தில் நமது அரசனுக்கு நம்மால் யாதொரு பிரயோசனமும் இல்லாமற்போகிறதேயென்று தியங்கி, மனந்துணிந்து தன்தலையை ஈசுவரனுக்குப் பெலிகொடுக்க அவர் சந்நிதிக்கெதிரில்போய் நின்று, வாளைக்கையிலேந்தி தன்தலையை வீசினுன். பசுபதியானவர் பிரத்தியக்ஷமாகி அவன் கையைப் பிடித்துக்கொண்டு அறுந்த சிரசைப்பொருத்தி அவன் புத்தியைத்திருத்தி சத்துருவைச் செயிக்கும்படி

வரமும் அளித்தார். பரமசிவன் அநுக்கிரகத்தால் இந்த சேனாதிபதி எதிரி படைகளை அதமாக்கி அந்த மூன்று அரக்கரையும் போன விடந்தெரியாமல் அகற்றிவிட்டு செயசீலனாகி உம்மைவந்து கண்டபோது, நீர் அவனைப் புகழ்ந்து வேண்டிய வெகுமதிகளைச் செய்தீர். எசமான் துரோகமில்லாமலும் தன்னுயிரைப் பாராமலும் உம்முடையகாரியத்தில் அவன்பட்டபாட்டுக்காக அவன் மரணாந்தரத்தில் இந்தப் பொன்னுலகம் கிடைத்தது. ஆகையால் பூர்வீக சம்பிரதாயமான பேர்களைக் கைவிடப்படாது. அப்படிப்பட்டவர்கள்தான் தங்கள்பிராணனைத் திரணமாகநினைத்து தங்கள் எசமானுக்கு செயத்தையும் சுகத்தையுந் தேடுவார்கள். ஓய்! அம்பரீஷ மகாராஜனே! இவன்தான் உம்முடைய சேனாபதியென்று தேவேந்திரன்கூற, அம்பரீஷன் களிப்படைந்து, ஐயனே! நீர் உள்ளபடியுரைத்தீர். அரசருக்குப் பாரம்பரியமானபேரைக் கைவிடாமல் சம்ரக்ஷிப்பது கடமை. அங்ஙனம் காப்பாற்றாத ஒரு அரசனுக்கு வாழ்வும் சந்தோஷமும் பெருக்கமுங் கிடைக்கமாட்டாது. துன்பமும் அபஜயமும் அவனைத் தலையெடுக்கவொட்டாது என்றான். கேட்டீரோ தருமராஜனே! உண்மையுள்ள சேவகனுடைய காரியத்தை இப்போது சொன்னேன். இனி அரசனானவன் அறிவில்லாத அற்பனைச் சேர்க்கப்படாத முறைமையைச் சொல்லுகிறேன்.

அற்பரைச் சேராமை.

கேளும் தருமபூபதி! இராஜன் அற்பமனுஷனைச் சேர்க்கலாகாது, சேர்ப்பானாகில் அவனால் அவனுக்குத் தீமைவிளையுமேயல்லாமல் நன்மை விளையாது. அவர்களுக்கு என்ன உதவி யொத்தாசை செய்தபோதிலும், அரசனால் சுகப்பட்டோமென்று ஒருக்காலும் எண்ணார்கள், சொல்லவுமாட்டார்கள். பலநாளுதவிசெய்து ஒருநாளுதவாவிட்டால் பலநாளுதவியும் அவமாகி அவதூறுபேசி நமது பகைஞருடன் உறவாடி நமக்குவிரோதிகளாவார்கள். இதற்கொரு சரித்திரஞ்சொல்லுகிறேன் கேளும். ஒருவனத்தில் அநுபமர் ரிஷீசுவரர் நெடுநாள் தபசுபண்ணி மாசற்றவராயிருக்கும் நாளையில், அக்காட்டிலுள்ள மிருகங்கள் அவரை அடுத்து வேண்டிய ஊழியங்களைச் செய்துவந்தன, அவைகளுக்கு ஒருதுன்பமும் நேரிடாமல் இவர் அவைகளைப் பாதுகாத்தும் வந்தார். இப்படியிருக்கையில் நாட்டில் வறுமையடைந்திருந்த ஒரு ஆண் நாயானது இந்த ரிஷியைவந்து அடுத்து அவருடைய தயவைச் சம்பாதித்து அவரிடத்தில் மிகுந்த விசுவாசமாயிருந்தது. அந்தக்காட்டில் வசிக்கும் ஒரு கலைமானானது இந்த நாயைக்கொல்லவந்தபோது, தன்னைச் சரணமடைந்த இந்தநாயைக்காப்பாற்றவேண்டி ரிஷியானவர் தன்கமண்டலசலத்தைநாயின்மீது புரோக்ஷித்தார். உடனே அந்த நாயானது கொம்புகள் முளைத்த ஒரு பெரிய கலைமானாகி எதிரிட்ட மானைப் பறக்கடித்துப் போட்டது. அந்த மானுருவமாகவே அந்தநாயை சிலநாள் வைத்திருந்தார். ஒருவேங்கைப்புலியானது இந்த மாயைமானைக் கொல்லவந்தது. இதுகண்ட பெரியவர் மறுபடியும் கமண்டல சலத்தை

அம்மாயமான்மீது புரோக்ஷித்தார். உடனே அது முப்பத்திரண்டடி வேங்கையாகி வந்தவேங்கையை விரட்டிவிட்டது. அந்தவேங்கை யுருவத் துடனிருந்த நாயின்மீது ஒருமதயானை வந்தெதிர்த்தபோது, அதற்கு மிஞ்சின மதயானையாக இதை யேற்படுத்திவிட்டார் அதனுல் வந்தயானை பின்னிட்டுப் போயிற்று. அப்பால் ஒரு சிங்கம் வந்து இதை எதிர்த்தது. இந்த நாயை அதற்கு மிஞ்சின சிங்கமாக்கி விட்டார். அது கண்டு வந்த சிங்கம் ஓடிப்போயிற்று. பிற்பாடு ஒரு பாம்பு வந்து அந்த நாய்ச் சிங்கத்தை யெதிர்த்த காலையில், இது சர்ப்பரூபமாகி எதிரியை வென்றதாம், இப்பேர்ப்பட்ட உபகாரியாகிய அந்தப்பெரியவருக்கு நன்றி பாராட்டாமல், இந்த அற்பசாதி நாயானது, நாமோ நாய் இவர் மகிமையால் உயர்ந்த அந்தஸ்தை யடைந்திருக்கிறோம், ஒருவேளை நமது சுபாவகுணத்தால் இந்த ரிஷிக்கு கோபம்பிறந்தால் நம்மை முன்போல் நாயாக்கிவிடுவாரே! அப்படி யநியாயமாய்ப் போவதைப் பார்க்கிலும் முன்சாக்கிரதைப் படவேண்டுமென்று, இந்தரிஷியைக் கொல்லச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தது. திரிகால வர்த்தமானமறிந்த ரிஷியானவர் இந்த நாயின் இருமாப்பை அறிந்து தானும் சாக்கிரதையாயிருக்கையில், சர்ப்பநாயானது அந்த ரிஷியைக் கொல்ல வாயைத் திறந்துகொண்டு வரும்போது, என் பழையநாயே இப்படியா கெட்டாயென்று வரவழைத்தவுடனே, முன்போல் நாயாய்ப்பேயிற்று. அவர் தபோமகிமையராதலால் தப்பினர். வேறொருவன் எப்படி தப்புவான். தருமநந்தனு! ராசாக்கள் அற்பமனுஷனைச் சேர்க்கலாகாது. நல்ல விவேக மந்திரி ஒரு அரசனுக்கு அவசியம் உண்டாயிருக்கவேண்டும், அவனுல் க்ஷேமம் கிடைக்கும். துர்மந்திரிகளை வைத்துக்கொண்டால் அப்பேர்ப்பட்ட அரசனுக்கு அபஜயமும் வறுமையும் திராதவியாதியும் நேரிட்டு இறந்தபிற்பாடு ராசனும் மந்திரியும் நரகத்திலே வாழ்வார்கள். இதற்கு திருஷ்டாந்தம் ஒன்று சொல்லுகிறேன்.

துஷ்டமந்திரிகள் குணம்.

கேளும் தருமநந்தனு! கோசலதேசத்தை யாண்ட கேமதரிசியென்ற ராசன் நீதியாய் இராச்சிய பரிபாலனம் பண்ணிவரும் நாளில், அவனிடத்தில் துர்மந்திரிகள் சேர்ந்து, மிகுந்த பாபிகளாய் உலகமெல்லாம் ராசனை நிந்திக்கும்படியாய் அவனுக்கு துர்ப்புத்தி கற்பித்து, குடிபடைகள் அழுதகண்ணீருடன் அலையும்படிசெய்து அரசனை அபகீர்த்திக்குஆளாக்கிவிட்டார்கள். அவ்வரசனுடைய அநீதங்களினுல் மாதமும்மாரிகுன்றி பிரஜைகள் க்ஷீணித்து வருங்காலத்தில், இந்தக் கேமதரிசியின் தகப்பனிடத்தில் மந்திரியாயிருந்த காவலனென்பவர் தன் யசமான் இறந்தபிறகு தன் உத்தியோகத்தை விட்டு, மகா பெரியவராகிக் காட்டில் தவம்புரிந்துகொண்டிருந்தார். அந்தப்பெரியவர் ஒருநாள் கண்விழித்து நமது ராசாவின்பிள்ளை எப்படியிருக்கிறுன். அந்த ராச்சியம் எப்படி நடக்கிறது, போய்ப்பா

ப்போமென்று அவன் பட்டணத்திற் பிரவேசித்து சகல சனங்களுடன் வார்த்தையாடினபோது, யதாராசாஹ ததாப்பிரசாஹா என்பதேபோல் குடிகள் முறைமைதப்பியிருப்பதைக்கண்டு இதேது மோசமாயிருக்கிறது, நம்முடை ராசனுடைய நன்மைக்காக இந்தப் பிள்ளையைக் குணப்படுத்த வேண்டுமென்றுஆலோசித்துத் தமதுதபோமகிமையால், மிகவும் அழகிய ஒரு காக்கையை உண்டுபண்ணி, அதை ராசனிடத்தில் கொண்டுவந்து கொடுத்து, இந்தக் காக்கைக்கு திரிகாலக்கியானம் தெரியும், எப்பேர்ப்பட்ட காரியம் நடந்தாலும் அதை அறிந்து நிசத்தைக்கூறும், நியாயம் அநியாயத்தை யெடுத்துக்காட்டும், இதைப்பத்திரமாய்வளர்த்துவாவென்று தன் அரசன் பிள்ளைக்கு சில புத்திமதிகளை சொல்லிக்கொடுத்துவிட்டுக் காட்டுக்குப் போய்விட்டார்.

இவனுடைய துர்ப்புத்தி மந்திரிகள் இந்தக்காக்கை இருந்தால் நம்முடைய செய்கைகளை வெளிப்படுத்திவிடும், இதைச்சதிசெய்யவேண்டுமென்று அன்று இரவிலே தந்திரமாகக் கொன்றுவிட்டார்கள். பொழுது விடிந்தபின்னர் ரிஷியானவர் ராஜசபைக்குவந்து, செத்துக்கிடக்குங் காகத்தைக்கண்டு வருந்தி, ராசனை இம்மட்டில் விடப்படாது, இவனைச் சுகப்படுத்த வேண்டுமென்று கருதி, ராஜனுடன் ஒரு சிங்கார வனத்துக்குள் போய், நல்லறிவு போதித்து மந்திரிகளுடைய துற்குணங்களை எடுத்துக் காட்டியபோது, ராசன் அவரைப்பணிந்து, நீர்என்னிடத்தில் சிறிதுநாள் இருந்து என்னை ரட்சிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டு, பாபிகளாகிய அந்த மந்திரிகளை நீக்கிவிட்டு, இவர் கூறிய நெறியின்படியே நடந்து சத்துருக்களை செயித்து சுகத்துடன் வாழ்ந்து வந்தான். தருமநந்தனு! பிரமாவைப்போன்ற வேதமுதல்வனே யானுலும், துணைக்காரணமாகிய மந்திரியில்லாவிட்டால் ராசனுக்குப் பிரதிஷ்டையில்லை. ஆனல் யோக்கியமான நடத்தை சாஸ்திரவிசாரம் நல்லகுடிப்பிறப்பு இவைகளை யுடைய மந்திரியாக வாய்க்கவேண்டும். நான் மேற்கூறியபடி அந்த மந்திரி யோக்கியனுயிருந்தபடியால் தனக்கு ஆத்மலாபத்தையுந் தேடிக்கொண்டு தன் அரசன் புத்திரனுக்குத்துணையுமாயிருந்து காப்பாற்றினுன். அப்பேர்ப்பட்ட நல்ல மந்திரியின் தன்மையை யோசித்துப்பாரும். அப்பேர்ப்பட்ட மந்திரி யிருந்தாலுங் கூடப் பெரியோருடைய சகாயமும் இருக்க வேண்டும். இதற்கு திருஷ்டாந்தம்.

பெரியாரைத் துணைக்கொள்.

நான்குவேதம் ஆறுசாஸ்திரம் முதலிய கலைக்கியானங்களை ஓதியுணர்ந்த பெரியோரைத் துணைக்கொள்ள வேண்டும். எந்நேரமும் அவர்களுடைய தெரிசனமும் சாவகாசமும் பெறவேண்டும். வீண்காலம் போக்காமல் சத்காலக்ஷேபம் பண்ணவேண்டும். தானதர்ம பரோபகாரங்களைக் குறித்து அவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும், மந்திராலோ

சனையுடன் தன்மதியையுங் கூட்டிப்பார்த்து அதுசரியோ அல்லவோ என்று பெரியவாள் காதிலிட்டு, அவர்கள் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும். பெரியோர்கிடைப்பது அருமையாயிருந்தாலும். எப்பாடுபட்டாகிலும் அவர்களைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் பெண்டுபிள்ளை முதலானவர்கள் இவன் செல்வத்தைச் செலவழிப்பார்களே யல்லாமல், இவனுக்கு ஆபத்துவேளையில் வந்து உதவார்கள். நீர்நிறைந்த தடாகத்தில் பட்சிகள் சேர்ந்து நீர்வற்றியகாலத்தில் பிரிந்துபோவதுபோல் போவர். பெரியோர் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்போல ஒட்டியுறவாயிருந்து நல்வழிக்கு இவனையீடுபடுத்துவார்கள். இந்த பூலோகத்தில் பெரியவர்களுக்கு மிஞ்சின பதார்த்தம் இல்லை, உலகமென்பது உயர்ந்தோர் மயமேயாம் ஈசுவரன் விளையாடுகிற இந்த செகத்தானது அந்தப் பெரியவாள் நிமித்தமேயல்லாது மற்றப்பேர்களுக்காக அல்ல, அவர்கள் நிமித்தியம் ஜெகதீசன் செய்யும் நன்மைகள் எல்லாம் நெல்லுக்கு இறைத்த நீர்புல்லுக்கும்வந்து பொசிக்கின்றதுபோல் மற்ற ஜீவராசிகள் புசிக்கிறார்கள், ஆனதுபற்றி இந்தப் பிரபஞ்சவாழ்க்கையில் வைத்திருக்கிற பேராசையைப் பார்க்கிலும் பெரியவாள்பேரில் பிரீதிவைத்து அவர்கள் நம்மை நேசிக்கும்படி போற்றி நடந்துகொண்டால், அவர்கள் இவனுடைய அக்கியானத்தை நீக்கிவிடுவார்கள். பெரியவாள் கேள்வியுஞ் சாவகாசமும் இல்லாமற்போனால், யாருக்கு என்னபலம் இருந்தும் நல்ல கதிபுகாமல் பின்னும் பின்னும் பிறவிக்கிடமாய்விடும். இதனைப்பற்றித் தான் அரசனுக்குத் துணைவலியும், தோள்வலியும், கேள்வலியும், இருக்க வேண்டும். துணைவலி இல்லாவிடின் அரசன் அபலப்பட்டுப்போவான். அதற்குத் திருஷ்டாந்தம் ஒருகதை சொல்லுகிறேன்.

அவிவேக ஒட்டகத்தின் கதை.

எங்கள் குலத்துக்குறிய பேரனே! அடர்ந்த ஒரு பெருங்காட்டில் கழுத்துநீண்டு கொழுத்து உயர்ந்த ஒட்டகம் ஒன்று பிரமனைக்குறித்து அநேகநாள் தவமிருந்து அவர் பிரசன்னமானபோது, மூடத்தனமுடைய அவ்வொட்டகமானது, யாவரும் நகைக்கும்படி நூற்றைம்பது யோசனை நீளமுள்ள கழுத்து தனக்குண்டாகும்படி அனுக்கிரகிக்க வேண்டுமென்று வேண்டிற்று. அவ்வாறே ஆகுகவென்று ஆசீர்வதித்தனர். அப்பால் அவ்வொட்டகம் மேகமண்டலத்தை யளாவிய கழுத்தினை யுடையதாய் ஒன்றும் நிகரில்லாமல் காட்டிற் சஞ்சரித்துவரும்போது, ஒருநாள் விபரீதமான பெருங்காற்றும் மழையுமுண்டாக பெருத்ததேகமும் நீண்ட கழுத்துமுடைய அந்தஒட்டகம் ஒதுங்கிநிற்க இடந்தேடி எங்கும்அகப்படாமல் ஒரு சிறியகுகையைக்கண்டு அதனுள் தன்கழுத்தை மாத்திரம் நுழைத்து வைத்துக்கொண்டிருந்தது. ஏற்கனவே அதற்குள் நுழைந்திருந்த குள்ளநரியானது, இந்த ஒட்டகம் கருவித்து காட்டிலுள்ள ஜீவராசிகளைக்

கொன்றுதின்கிற இது, நம்மைக் கண்டால் விடுமா! என்று பயந்து, இது ஒரு பக்கச்சார்பில் ஒதுங்கி அந்த ஒட்டகத்தின் கழுத்து நரம்பைக் கடித்து ரத்தத்தைப் பானம் பண்ணிற்று. அதனால் ஒட்டகம் செத்தது. பிரமனைக்குறித்து தபசுசெய்து வரம் பெறுகிற வல்லமை இருந்தும், பெரியாரைத் துணைக்கொள்ளாமையினால், பெறவேண்டிய வரங்களைவிட்டு நீண்டகழுத்தைப்பெற்று நெடுநாள் இராமல் உயிரை யிழந்தது. துணைவலியாகிலும் இருந்திருந்தால் நரியின்பகை நேரிட்டிராது. மற்ற மிருகங்களைப் பகைத்துக்கொண்டமையால் எதுவும் இதற்கு உதவுகிறதற்கில்லாமல் போயிற்று. ஆகையால் ராஜாக்களுக்குப் பெரியோருடைய நேசவிசுவாசமும், குடிபடைகள் சகாயமும் இருக்கவேண்டும். முற்காலத்தில் வில்லின் முனையில் மேதினியைச் செயிக்கும்படியாகிய ஸ்ரீராமருக்குத் திரிபுரமெரிக்கத்தக்க தம்பியிருந்தும், குரங்குகளைப் படைகூட்டிக்கொண்டு போய் செயித்தாரே! துணைவலியே முக்கியமென்றறி. அதனால்சேங்கோல் செழிக்கும். இதைவிட்டு அற்பமனிதனைச் சேர்த்துவைப்பானாகில், அரசனுக்கு உடனே பின்னம்வரும். அதற்கு உதாரணமாக ஒரு சிறியகதை சொல்லுகிறேன் கேள். பூர்வத்தில் கோசலதேசத்தை ஆண்ட மதரிசி யென்னும் ராசன் காலவரிஷி யென்பவரிடத்தில் நேசவிசுவாசம் வைத்து வந்ததினால், அவர் எந்நேரமும் திரியாக்கினி வளர்த்து வைதிகத்தை அனுசரித்துத் தமது தபோபலத்தினால் ராசனுக்கு இராச்சியச் சட்டங்களை யேற்படுத்தி தானும் கூட இருந்து ராசனைக் குணப்படுத்தி வைத்த பின்பு, காட்டுக்குத் தவம்புரியப் போய்விட்டார். முன்னாலே தள்ளுபடி செய்யப்பட்டமந்திரிகளில் ஒருவன்பழையபடியுபாயமாய் ராசனிடத்தில் வந்து சேர்ந்துகொண்டு, இவனுக்கு உண்மையா யிருப்பதுபோற் காட்டி விதேகன் என்கிற ராசனைக்கொண்டு கலகம் மூட்டினான். அந்த விதேகராசன் சண்டைசெய்து மதரிசிராசனுடைய ஊரைப் பிடித்துக்கொண்டான். இந்த மதரிசிராசன் துக்கப்பட்டு தனக்கு முன் உதவிசெய்தரிஷியைத்தேடிக் கண்டுபிடித்து மனக்குறையைச் சொல்லி அழுதான். அவர் இவனை ஆறுதல்செய்து வைத்துக்கொண்டு, விதேகராசனைத் தம்மிடம்வரவழைத்து, இருவரையும் சமாதானப்படுத்தி அவனுடைய பெண்ணை மதரிசிராசாவுக்குக் கலியாணம்பண்ணிவைக்க அதினால் இருவரும் உறவாகி, மதரிசிராசன் முன்னிலும் அதிகமான தேசங்களை யொப்புக்கொண்டு இராச்சியம் ஆண்டான். ஒ தருமபூபதி! பூரியர் சிநேகத்தைப்போக்கிஆரியர் சிநேகத்தை அடைவாயாகில், அவர்கள் யாரானபோதிலும் மேம்பாட்டையடைவார். இப்பேர்ப்பட்ட ராசனை அடுத்த குடிகள் யாவரும் பாவிகளாயிருந்தாலும் ராசனுடைய நன்னெறியானது பஞ்சுப்பொதியில் நெருப்புப்பட்டதுபோல், அவர்கள்பாபங்களை தகித்துப்போடும் இதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன்.

வேடராசன் கதை.

இந்நாட்டைச் சார்ந்த பெரிய ஒருகாட்டில் பாரியாத்திரம் என்று ஒரு மலையுண்டு. அதில் காப்பவ்வியன் என்று ஒரு வேடன் இருந்தான். அவன் சாதியில் வேடனானபோதிலும், உத்தமகுணமும் சத்தியவசனமும் பொறுமையு மேன்மையு முடையவன், மிகவும் தைரியசாலி! பொய்யை யறியாதவன், தான் வசிக்கிற காட்டில் மிருகபயம் திருடர்பயம் இல்லாமல் தபசிகளுக்கு வேண்டிய உதவியொத்தாசைகளைச்செய்து இவனே உத்தமனென்று பெரியோர்கள் கொண்டாடும்படி நடந்துவந்தான். அக்காட்டில் வாழ்ந்த ஏனாதியர் முதலிய தியரும் மற்றசாதியாரும் சேர்ந்து, இவனுடைய நற்குணங்களைப்பற்றி இவனைத் தங்களுக்கு ராசாவாக இருந்து தங்களை ஆண்டு நடத்தும்படி வேண்டிக்கொண்டனர். இவன் அவர்களைப்பார்த்து, ஓ! பிரசைகளே! நீங்கள் தருமந்தெரியாதவர்கள், நான் சொல்லுகிற வாக்கியங்களின்படி, எப்பேர்ப்பட்ட இடுக்கண்வந்து உயிர் போங்காலத்திலும் என் ஆக்கினையை மீறுகிறதில்லையென்று சத்தியஞ் செய்வீர்களாகில், உங்களை வேண்டி நான் ராசாவாயிருக்கிறேனென்றான். குடிகள் அப்படியே பிரதிக்கினைசெய்து கொடுத்தார்கள். அதின்பேரில் அந்த வேடராசன் எல்லோரையும் வரவழைத்து வைத்துக்கொண்டு தருமங்களைச் சொன்னான். க—வது இன்றுமுதல் பசுக்களையும் பிராமணரையும் தொழுது, அவர்களுக்கு ஊழியஞ்செய்யுங்கள்; அவர்கள் உங்களைக் கோபித்தாலும்திட்டினாலும் நீங்கள் எதிர்க்கப்படாது. உ.—கோபமென்பதை நாயாக நினைத்து கட்டிப்போடுங்கள். ங.—சொர்க்கம் வேண்டுமாகில் தாய்தகப்பன் தமயனைப்பூசித்து அவர்கள் சொல்லுக்கு அடங்கியிருங்கள். ச.—தன் தன் பெண்சாதி பிள்ளைகளை நேசித்து ஆதரியுங்கள். ரு.—பரஸ்திரீகமனம் பண்ணாதீர்கள். சு.—அண்ணன் தம்பி தாயாதிகளுடன்கலந்திருங்கள்; ஒருவரை யொருவர் வஞ்சிக்கப்படாது. எ.—நன்மை தின்மைகளில் விரோத மில்லாமல் கலந்துவாழுங்கள். பிறருக்கு இடங்கொடாதிருங்கள். அ.—சத்துருவின்பேரில் சண்டைசெய்யும்போது மாத்திரம், பொறுமையையுஞ் சாந்தத்தையும் நீக்கிவையுங்கள்; மற்றவேளையில் கோபத்தைப் போக்கிவிடுங்கள். கூ.—சாதியாசாரப்படி உணவுக்கு வேண்டிய மட்டும் கொன்று தின்னுங்கள். க0.—சத்தியந் தப்பலாகாது, பொய் பொறாமை பேராசையாகாது, புறங்கூறப்படாது, என்று இவ்விதக் கட்டளைச் சட்டங்களை யேற்படுத்திக்கொடுத்து, அவர்கள் முறைதப்பாமல் இப்படியே நடந்து வந்ததினால், தீவினைகள் அற்று, தேவலோகத்தில் நற்கதி பெற்றார்கள். கேளும் தருமராசனே! அரசனுடைய நற்புத்தி நன்னடக்கைகளிரேல், குடிகள் நற்கதியடைவார்கள், இதை நீர் அறிந்து கொள்ளும், இனி உத்தமர்களுடைய குணத்தைச் சொல்லுகிறேன்.

தலையாயார் நட்பு.

சகல ஞானமுமுணர்ந்த பெரியோர் புண்ணியவான்கள் தந்திரத்தினால் பொருளைக் கிரகிக்க வெண்ணங்கொண்டு ஒருவனை நேசிக்கமாட்டார்கள். பிறர்பொருளை இச்சியார்கள். இப்பேர்ப்பட்டவர்களுடைய நேசம் ஒப்பற்றதென்று நினைத்துக்கொள்ளும். இவர்கள்தான் கற்பகவிருக்ஷம் போன்றவர்கள். பிரதியுபகாரத்துக் கெதிர்பாராதவர்கள். இத்தியாதி குணமுடைய சாதுக்கள் நான்குவர்ணத்திலுமுண்டு. பட்சி மிருகஜாதிகளிலேயும் உண்டென்றறி. எந்த வர்ணத்தில் ஆத்துமக்கியானமும் ஈசுவரபத்தியும் உண்டோ, அவர்களை மனசார விசுவாசிக்கவேண்டும். கர்மத்தால் சாதிபேதமேயன்றி, சென்மத்தால் சாதிபேதம் இல்லை. இப்படிப் பட்டவர்களை நற்குணத்தர் தெரிந்துகொள்வர். மகான்களுடைய பகை நேரிட்டாலும் அதுபாக்கியமாய் முடியும். ஒருகதை சொல்லுகிறேன் கேள் என்று பீஷ்மர் உபதேசிக்கின்றார்.

புருவின் கதை.

கானகத்தில் வான் அளாவிய ஒரு ஆலாவிருக்ஷத்தின்மீது, ஆணும் பெண்ணுமான ஒருசோடுபுரு பிரியாவிடையாய் நேசித்திருக்கும் நாளில், ஆண்புருவானது ஒருநாள் பெண்புருவை விட்டுவிட்டு மேயப்போயிற்று, அச்சமயத்தில் ஒரு வேடன் கன்னிவைத்துப் பெட்டைப்புருவைப் பிடித்துச் சிக்கத்தில் அடைத்துகொண்டு, இன்னமும் புருக்கள் அகப்படுமாவென்று தேடிக்கொண்டிருக்கும்போது, சூரியனு மறைந்தனன். காற்று மழையும் திடீரென வரவும், வேடன் களைத்து குளிரால் மெலிந்து பசியால் வருந்தி பூமியில் விழுந்தான்.

அச்சமயத்தில் ஆண்புரு திரும்பிவந்து பெண்புருவைத் தேடித்தேடிக்காணமல், துயரப்பட்டுக் கூவிப் பிரலாபித்தழுதுகொண்டிருந்த சத்தத்தை சிக்கத்திலிருந்த பெண்புரு கேட்டு, ஏன் துயரப்படுகிறீர், நாயகனே ! ஆங்காலமெல்லாம் அன்புடன் வாழ்ந்தோம், இது ஏதோ போங்காலம் பிரிவினையானேம், இதற்குச் சஞ்சலப்படாதீர், புருஷமேருவே ! என் வினைவசத்தால் இந்த வேடன் கைக்குள்ளானேன், நான் மகாபாபி! என்னிமித்தம் நீர் வருந்தாதீர், போனதுபோக நின்றவரைக்கும் நிலை தவறுமலிருந்து என்றென்றைக்கும் அழிவில்லாத இன்பத்தைத்தேடும். என் உறவைத் துறவாகக்கொள்ளும். இந்த வேடனுடைய பசி எப்படிப் பட்டதோ, நான் அகப்பட்டதை நம்பி இந்தமழையினல் ஒய்ந்து கிடக்கிருன். நான் இவனுக்கு ஆகாரமாகும்படி நீர்வந்து உதவிசெய்யும், நம்மை நாடிவந்த விருந்தாளிக்கு ஊட்டிவைக்கவேண்டியது உரிமையல்லவா ! அவன் எப்பேர்ப்பட்டவனுயிருந்தாலும் அவனைநாம்அதிதியாக நினைத்து ஆதரிக்கவேண்டும். இந்த வேடனுக்கு ஆயாசந் தீர்த்துப் பூசைபண்ணி

வையும். உம்மால் எனக்கு நல்ல பதவி கிடைக்கும். இனிநாம் கூடிவாழ்ந் தாலும், முன் அனுபவித்த இன்பமேயல்லாமல் வேறில்லை. உமக்கு முந்தி நான் இறக்கவேண்டியது துணிபு. இப்போது நீர் நன்றாயிருக்கும்போது, ஒருவன் அவஸ்தைப்படுகிறதைக்கண்டு நீர் சும்மாயிருந்தால் பாவத்துக் கிடமல்லவோவென்று அநேகம் விதமாய் புத்தி போதித்ததினால், புரு ஷப்புறாதேறி காதலிமீது ஆசையுற்று, சோர்ந்து கிடக்கும் வேடனருகில் வந்து, நான் செய்யவேண்டிய ஊழியம் யாதென்று வினவ, என் குளி ரைப் போக்குவாயாகில் இதற்கு மிஞ்சின தருமம் இல்லையென்று வேண் டினான். உடனே அந்த ஆண்புறா அங்கே கிடந்த சுப்பல்களை அரித்துக் கூட்டி காட்டுத்தீமூட்டி, வேடனைப்பார்த்து, நீ பசியினால் வருந்தவேண் டாம், என்தேகமோ அநித்தியம் நான் உனக்கு இரையாகிறேன் என்று ஆகாயத்தில் எழும்பி அந்த அக்கினியில் விழுந்திறந்தது.

இதைப்பார்த்த அந்தவேடன் ஆச்சரியப்பட்டு, வெந்த அந்தப் புறா வை எடுத்துப் புசித்து, ஞானம்விளங்கி, சிக்கத்திலிருந்த பெட்டைப்புறா வை எடுத்து வெளியில்விட்டு உன்புருஷனுக்கு ஒப்பாகிய புண்ணியவான் கிடையாது, அவனுக்கு நான்துரோகியானேன், நீசுகமாய்ப் பிழைத்துப் போ என்றான். வெளிப்பட்ட அந்தப்பெண்புறா, என்புருஷன் இறந்தபி ன்பு நான் உயிர்வைத்திருப்பதில்லை, நீர் அதிதியாய் எங்களிடம் வந்தமை யால் என்புருஷன் உமக்கு ஆகாரமானதுபற்றாது என்னையும் ஆகாரமாக் கிக்கொள்ளும் என்று பறந்தெழும்பி நெருப்பில் விழுந்தது. உடனே அப் புறாக்கள் இரண்டும் திவ்வியதேகம்பெற்றுச் சகலவைபவங்களுடன் சுவர் க்கலோகம்போய் சுகசீவிகளாயிருந்தன. இத்தியாதி வைபவங்களையுங் கண்டவேடன் உயிராசையையும் தேகாபிமானத்தையும் போக்கி, நமக்கு விருந்தாக இருந்த புறாக்கள் இரண்டும் தேவலோகம் அடைந்ததே. இவர் களைக்கண்டு தெரிசிக்க நமக்குக்கெதிகிடைக்காதா, பரிசுத்தமாகிய அவர் கள் தேகத்தைப்புசித்த நான் பாவியானபோதிலும் நல்லோர்களால் உப சரிக்கப்பட்டு அவர்களையே உணவாகக்கொண்ட என்உடலானது கதிபெ றாமல் இருக்கப்போமா! இனி இந்ததேகம் இருந்தென்ன என்று புறாவை யே குருவாக நினைத்து, நல்லோரைக்கண்டாலும் வசனித்தாலும் உட னே நல்லகதி உண்டாகுமென்று வேதம் விளம்புகின்றமையால், உங்க ளைத் தெரிசித்தேன் பரிசித்தேன், கடித்து புசித்தேன், இதோ உங்களைத் தஞ்சமென்று நம்பினேன், என்று அவனும் தீயில் விழுந்து மாண்டான். உடனே அவனும் திவ்யதேகம்பெற்று தேவலோகம் புகுந்தான்.

கேளும் தருமராசனே! பெரியோர்களுடன் கலந்து வார்த்தையாடு வதினால், நன்மார்க்கம் நற்கதியுண்டாகும். அவர்கள் நீறுபூத்த நெருப் பைப்போல் ஒன்றிலுந் தட்டுப்படாமல், உலகத்தோடு ஒத்திருப்பார்கள். ஒருவேளை சித்த முண்டானால் ராசகொலுவிற்கு வருவார்கள். எந்த வேலை இருந்தபோதிலும் நிறுத்தி அவர்களை உபசரிக்கவேண்டும். அவர்

கள்மீது அன்பு வைத்தால் ராசாக்கள் சுகப்படுவார்கள், இதற்குத்தான் பெரியாரைத் துணைக்கொள் என்று தருமசாஸ்திரம் பேசுகின்றது.

கூடா நட்பு.

கேளும் காவலனே! ஒருகாட்டில் வளர்ந்திருக்கும் ஒருபெரிய ஆல மரத்தின் அடிவாரத்தில் பலசாலியும் புத்திமானுமாகிய பலிதனென்னும் ஒரு எலியானது தங்களினத்துடன் சேராமல் தனித்து ஒருவளையில் வாசமாயிருந்தது. அந்த மரத்தின்கிளையில் ரோமசன்மனென்கிற பூனை ஒன்று குடியிருந்து இரைதேடிப்போன அந்தப் பூனையானது வேடன் கட்டி வைத்த வலையில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும்போது, இந்தப் பூனை படும் துன்பம் எலிக்குத் தெரியும்படியாக ஒரு கீரிப்பிள்ளையும் கோட்டானும் கூவி கத்திற்று. இந்த சத்தத்தைக்கேட்ட எலியானது வெளியில் வந்துபூனையருகில் சென்று நீ உயிர்பிழைக்கவேண்டியிருக்கிறது;உன்வலையை என்பல்லினல் கடித்துவிட்டு உன்னைக்காப்பாற்றுகிறேன், நானப்படி உனக்கு உபகாரஞ்செய்வேனாகில் பூனையாகிற நீஎன்னையும் எங்கள் இனத்தாரையும் கொன்று வாயில்போட்டுக்கொள்ளுவையே, நன்மைசெய்தார்க்குத் தீமைசெய்யும் சாதியாச்சுதே, எங்கள் குலத்தின்பேரில் உங்கள் இனத்தார் விரோதம் வைக்காமல் சிநேகமாயிருப்பீரா, உறுதியாய்ச்சொல்லுமென்று கேட்க, என் பிராணரக்ஷகனே! இந்தவேளையில் நீ எனக்குப் பிராணதாரைவார்த்தால் இந்த உபகாரத்தை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன், நீர் கெட்டியாய்நம்பும். காரியத்தைப்பற்றி சிலர் தழுவுவார்கள் காரியமுடிந்தால் கடைக்கண்ணால் திரும்பிப்பாரார்கள், நான் அப்படிப்பட்டவனல்ல, நம்பிக்கை துரோகஞ் செய்யமாட்டேன் என்று பலவிதமாய் தருமங்களை எடுத்துப்பேசி எலியைப்பார்த்து தெண்டனிட்டது. பலிதனென்னும் அந்த எலி பூனையைப்பார்த்து நான் தூரத்திலிருக்கிறேனென்று நீ யோசியாதே வலைக்கட்டினவன் உன்னைக் கிட்டவந்தால் உன் வலையைப்பட்டென்று அறுத்துவிடுகிறேன் முன்னதாக உன்னை வெளியில் விடமாட்டேன், அதேனென்றால் தனக்குமேற்பட்ட சத்துருவின் நேசம் என்றைக்கும் ஆகாது, அவர்களை நேசிக்கவேண்டிய சந்தர்ப்பம் நேரிட்டால்தூரத்திலிருந்து ஜாக்கிரதையாய் உறவாடவேணும், அல்லாது,கிட்டி நெருங்கினல் உடனே துன்பமுண்டாம், இது நீதிசாஸ்திரத்தின் கருத்தென்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே வேடன் ஓடிவந்தான். அப்போது எலியானது நல்லதருணத்தில் அந்த வலையைக்கடித்துப் பூனையை வெளிப்படுத்திவிட்டு தன்வளையில் புகுந்துவிட்டது.

அன்றுபோக மற்றுநாள் ரோமசன்மன் என்கிற பூனை, எலியண்டைக்குவந்து, ஓ மகாநுபாவா! எனக்கு உம்மைவிட வேறுதிக்கில்லை நீ என் மீது தயவுவைத்து வெளியில்வாரும் ஐயா, எலியரசனே! இன்றுமுதல் நாமிருவருங் கூடியிருப்போம் உமக்கு ஒரு பொல்லாங்குமில்லாமல் காத்து

வருகிறேனென்றுபூனைசொல்லியது, இம்மொழியைக்கேட்ட எலியானது பெரியவராகிய பூனையே! நம்மிருவருக்குஞ் சிநேகம் விட்டுப்போகாது, வானத்தில் மேகம் கண்டால் மயில் ஆடுகிறது. சூரியனைக்கண்டால் தாமரை புஷ்பிக்கிறது அதுபோல் அன்பர்கள் நாமிப்போது இருக்குமிடத்திலேயே யிருப்போம், நீரும் நாமும் கூடியிருக்கிறபேச்சை விட்டுவிடும், எல்லாருக்கும் பெரியவராகிய சுக்கிராசாரியர் தன் சீஷனுக்குச் சொல்லிக்கொண்டுவந்த தர்மங்களில் சிலதை நான் கேட்டிருக்கிறேன், அதை உமக்குத் தெரிவிக்கிறேன் கியாபகமாய்க்கேளும். ராசனானவன் தன்னினும் உயர்ந்த சத்துருவுடன் ஜெயிக்கமாட்டாமல் போனால் அவனுடன் நேசம்பண்ணி சமயம் பார்த்துக் கொல்லச்சொல்லி யிருக்கிறது. பகையாளியின்குடியை உறவாடிக் கெடுவென்று பழமொழி வாக்கிய மிருப்பதால், நம்மினும் உயர்ந்தபேர்கள் இஷ்டத்தைப் பெற்றோமென்றும் மகிழலாகாது, அந்த நேசத்தை எதார்த்தமென்று நம்பினபேர்கள் துன்பப்படுவார்கள். தன்னினும் தாழ்ந்தவர்களுடன் நேசிக்கக்கூடாது, அதுவுமப்படியே கீர்த்தியைக்கெடுத்து கிலேசத்தை விளைவிக்கும் பகைவரிடத்தில் முக்கியமாய் சிநேகஞ்செய்யவேண்டிய அவசியம் நேரிட்டால் நெஞ்சில் பயம்வைத்து நித்திரையற்று பஞ்சும்நெருப்பும் பக்கத்திலிருப்பதுபோல் ஜாக்கிரதையாயிருந்து தப்பித்துக்கொள்ளவேண்டும். தான் போகிற இடமும் படுக்கிற ஸ்தலமும் உண்ணுகிற உணவும் எதிரிக்குத் தெரியப்படாது. அது தெரிந்தால் உடனே இவன் உயிருக்குப் பிராணஹானி வரும். இடையில் வந்தபகையானால் ஒரு சமயத்தில் மாறிப்போம், உங்களுக்கும் எங்களுக்கும் ஆதியில் ஈஸ்வர சிருஷ்டியில் உண்டான பகையாகையால் என்றென்றைக்கு முன்னுடன்சேரலாகாது, என்றுஎலி சொல்ல, பூனை தான்கொண்ட எண்ணத்தையும் ஆலமரத்தையும் விட்டுவேறுயிடத்துக்குப் போய்விட்டது. ஆதலால் அரசர்கள் சத்துருக்களையும் கீழ்மக்களையும் தமக்குமேற்பட்டவர்களையும் நேசிக்கக்கூடாது, இதைக்குறித்து இன்னமும் ஒருகதைசொல்லுகிறேன் கேளுமென்றுபீஷ்மர்புகலுகின்றார்.

செல்வர்களுடைய சிநேகம் ஆகாதென்பது.

பிரமதத்தன் கதை.

பூசநகரமென்ற பட்டணத்தை ஆண்டுவந்த பிரம்மதத்தனென்னும் ராசனிடத்தில் சாரியென்னும் ஒருபெரிய பக்ஷியானது நேசமாகி அந்த ராசனைத் தனக்கு சினேகபாத்திரனென்று மெய்யாக நம்பித் தான் பெற்றகுஞ்சை ராசனுடைய அடைக்கலத்தில் வைத்துவிட்டு இரைதேடப் போய்விட்டது. ராசன் அந்தகுஞ்சை மிகவும் பரிவாக ஆதரித்துவந்தான் ஒருநாள் ராசனுடைய பிள்ளைகள் அந்த பட்சியின் குஞ்சை யெடுத்துத் தரையிலடித்து கொன்றுபோட்டார்கள். அச்சமயத்தில் ஜாரி என்ற அந்தப்பறவை ஒடிவந்து செத்துக்கிடக்கும் தன்குஞ்சைம்பார்த்து கண்ணீர்

விட்டு மிகவும் பிரலாபித்தது ராசன்கூடியமட்டும் சமாதானப்படுத்தியும் கேளாமல் ராஜனையும் அவன் பட்டணத்தையும் நாசஞ்செய்வதாக அந்தப்பக்ஷி ஆக்கிரமித்தபோது, குற்றஞ்செய்தவனை தண்டிக்கவேண்டியதே யல்லாமல் மற்றவர்களை நாசப்படுத்துவது சரியல்ல என்று ராசன் அதற்குச் சமாதானஞ்சொல்லி உன் பிள்ளையைக்கொன்ற என்மகனை நீதண்டித்துக் கொள்ளென்று ராசன் பட்சபாதமில்லாமல் கூறியபோது, ஓய் அரசனே! கேளும் நீர்சொன்ன தருமமானது என்புத்திர சோபத்திற்கு ஈடு செய்ய மாட்டாது. இந்தச் சாஸ்திரம் தன்னையறிந்த மகானுக்கேயல்லது மற்ற மனுஷாளுக்கல்ல. விசேஷமாய் ராசாக்கள் குற்றமற்ற மனசுபோல் வெளிக்கு காண்பித்துச் சத்துருவை மெத்தவுந்தழுவி சமயம்நேரிட்டால் அவனையும் குடும்பத்தாரையும் அழித்துப்போடுவார்கள் இது க்ஷத்திரிய தர்மம். நீ ராஜமனுஷன் நான் பட்சிஜாதி உங்களுக்கும் எங்களுக்கும் பொருத்தங்கிடையாது. நீ நல்லவனென்று நினைத்து உன்னைநேசித்தேன். முடிவில் உன்சத்துருத்தனத்தைக் காட்டினாய், இதினிமித்தம் உன் நாடு நகரத்தை அழிக்கிறேனென மறுபடியுங்கோபப்பட்டது. பட்சிராசனே! நீர் சொல்லிய நீதியெல்லாம் ராசாக்களுடைய முறைமைதான். மற்றவர்களுக்குச் சரிப்படாது. ஏனென்றால் ராஜாக்களுக்கு வாழையடி வாழையாய் பாரம்பரியப் பகைமை இருக்கவேயிருக்கும். இதனால் எந்தமூலத்தினாலாவது ஒருத்தரை ஒருத்தர் கெடுக்கவே சமயம் பார்த்துக்கொண்டிருப்பார்கள். மனிதனுக்கும் பட்சிக்கும் பகையென்று வசனித்தாயே, இதுவரையிலும் அதை நான் அறியேன். மனிதன் நம்மைப் பிடித்துக்கொள்வானென்று பட்சிகள்ஓடிப்போகிறதேயல்லாமல் மனுஷனுக்கு அப்படிப்பட்ட வர்மம் சுபாவத்தில் கிடையாது. நீ என்புதல்வனை உன் பிள்ளைகட்காகப் பழிதீர்த்துக்கொள் இதுவே நீதிமுறை என்றுசொல்ல, பட்சிக்குக் கோபந்தணிந்து, என்பிள்ளைக்காக உன்பிள்ளையைக் கொல்லச்சொன்னையே, அதினால்இறந்த என்பிள்ளைத்திரும்புமா! நீ சத்தியந்தப்பாமல் நடுவுநிலைமை பேசியபடியால், என் சினத்தை விட்டுவிட்டேனென்று இறந்த குஞ்சை யெடுத்துக்கொண்டு தன்னிடம் போய்ச்சேர்ந்தது, கேளும் தருமராஜனே தன்னிலுமுயர்ந்தோருடன் சிநேகஞ்செய்தால் அலட்சியமும் துன்பமுமே வரும். இஃதல்லாமல் கொலை களவு காமம் பொய் அசுத்தப் பார்வை இத்தியாதியுடைய கறுத்த நிறமுடைய மனிதனிடத்தில் சிநேகிக்கக்கூடாது. அப்படிசெய்வானாகில் அவன் பிராணனுக்கு மோசம்நேரிடும், அதற்கு உதாரணம்.

சண்டாளனாகிய கறுத்த பிராமணன் கதை.

என்பேரனே! ஒரு கறுத்த பிராமணன் தன் குலாசாரத்தைவிட்டு மாமிச பட்சணஞ்செய்து ஸ்திரீவிஷயனாய் அலைந்து திரிந்துக்கொண்டிருந்தவனுக்கு திரவிய அபேட்சையுண்டாகி, பொதிமாட்டுக்கார வாணிபரு

டன் தானுங் கூடச்சேர்ந்து சம்பாதனை செய்யப்போனான். ஒருநாள் காட்டுமார்க்கத்தில் இரண்டு காட்டுயானைகள் சண்டையிட்டுக்கொண்டிருந்த அதிர்ச்சியினால், இவனும் அவர்களும் பயந்து ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து ஓடினார்கள். பிராமணன் வழிதப்பி மிகவும் களைத்து சூரியனஸ்தமித்தவுடன் ஒரு ஆலமரத்தடியில் வந்து தங்கினான். அந்தமரத்தில் வசிக்கும் தன்னைத்தானறிந்த கியானமுள்ள நாளசிங்கன் என்ற ஒரு கொக்கு களைத்துக் கிடக்கும் அந்தப் பிராமணனிடம் வந்து அவன் வாய்மொழியைக் கேட்டறிந்து அவனுக்குக் கந்தமூலங்களைக் கொடுத்துப்பசியாற்றி, தகுந்த புத்திமதிகளைக்கூறி, உனக்குத் திரவிய அபேட்சையிருந்தால் இதற்கு முக்காதவழிக்கு அப்பாலிருக்கும் விருபாட்சன்என்னும் ராசனிடம் போய் ஆலமரத்து நாளசிங்கன் என்கிறகொக்கு உம்மிடம்போகச்சொல்லிற்றென்று சொல், அவர் உனக்கு வேண்டிய பொருளை உதவுவார் என்றது. விடிந்தவுடனே அந்த கொக்கினிடம் உத்தரவுபெற்று விருபாட்சன் சமுகத்தில் வந்து நின்றான். நீர் வந்தகாரியம் யாதென்று ராசன் வினவ, உம்முடைய சிநேகிதனாகிய நாளசிங்கக்கொக்கு என்னை உம்மிடத்திற்கனுப்பிற்றென்றான். ராசன் இந்தப் பார்ப்பான் முகத்தைச் சற்றே நிதானித்துப்பார்த்து சகல சாஸ்திராப்பியாசமுங்கண்ட என் சிநேகிதனான நாளசிங்கனுக்கு இந்த துஷ்டக்கருப்பன் எப்படி நேசமானான், இவன் மகா கொலைபாதகனாயிற்றே இவன்பேரில் அந்தப்பட்சிக்குக்காருண்ணியம்பிறந்ததெப்படி, இவனை என்ன காரணத்துக்காக அனுப்பினாரோ தெரியவில்லை. நாம் இதை மறுக்கலாகாதென்று, பிராமணனுக்கு மறுநாள்வேண்டிய திரவியத்தை ஈய்ந்து அனுப்பினார். பொருளைப் பெற்றுக்கொண்ட பிராமணன் அரசனுடைய தயாளகுணத்தை நாளசிங்கனுக்குத் தெரியப்படுத்தினான். நாளசிங்கன் சந்தோஷப்பட்டு இந்தப் பிராமணனைநோக்கி நீ இனி துஷ்கிருத்தியத்துக்கு ஏற்படவேண்டாம், இதுவரையிலும் நீஉன் ஜாதிதர்மந்தப்பி நடந்திருந்தாலும், இனியாகிலும் உன் ஜாதியாருடன் போய்ச்சேர்ந்து நித்தியகர்மங்களில் வழுவாது நடப்பாயாகில் நீ சுகப்படலாம் என்று புத்திமதிசொல்லி அனுப்பிற்று.

இந்தக் கொலைபாதகனாகிய பிராமணன் பட்சியினிடத்தில் ஆஷாடபூதிபோல் அபிநயித்து விடைபெற்று வெளிப்பட்டு வந்தவன் தன்வசம் வந்த திரவியம் ஏராளமாயிருக்கிறதென்றும், ஸ்திரீலோலனாய்த் திரியலாமென்றும் நினைத்து, நடந்துபோகச் சோம்பி தன்பசிக்கு புத்திசொன்ன கொக்கை சுட்டுத்தின்ன விரும்பி ஒருமரத்தடியில் கொக்கு தூங்குகிறவரையில் மறைந்திருந்தான். அந்தக் கொக்கானது இவன் குணப்பட்டிருப்பானென்று நினைத்து, ஐயப்படாமல் நித்திரைசெய்தது. இந்தச் சண்டாளன் சமயம்பார்த்துக் கொக்கைப்பிடித்துக் கழுத்தை முறித்து தோலை உரித்தெறிந்து மாமிசத்தைத் துணியிற் கட்டிக்கொண்டு திரவியத்துடன் திரும்பித் திரும்பிப்பார்த்து அவசரப்பட்டு ஓடினான். இங்கிப்படியிருக்க, நித்திரையிலிருந்த விருபாட்சமகாராசன் நாளசிங்கனுக்குச் சம

சம்பவித்த அபாயத்தை சொர்ப்பனத்தில் கண்டு திடுக்கென்றெழுந்து குரல்விட்டுஅழ ஆரம்பித்தான். உடனே பக்கத்தில் இருந்தோர் அரசனைத் தேற்றுகையில், தான்கண்ட சொர்ப்பனத்தை அவர்களுக்குச் சொல்லி உடனே வேவுகாரர்களை அனுப்பி அம்மரத்தடியில் போய்ப்பார்த்து கனவு சரிப்பட்டிருந்ததால் அந்த சண்டாளனைப் பிடித்து வரும்படி கட்டளையிட்டான். சேவகாள் அதுபோல் மரத்தடியில் வந்து பார்த்து கீழேகிடந்த தோலை யெடுத்துக்கொண்டு, பிராமணன்போன அடிச்சுவட்டைத் தொடர்ந்துபோய் அவனைக் கண்டுபிடித்து ராஜனிடங் கொண்டு வந்து விட்டார்கள். இராசன் அந்தப்பாவியை சித்திரவதை செய்யும்படி ஆக்கியாபித்தான். கொலையாளிகள் அவனைக் கொலைக்களங் கொண்டு போய் புலி கரடி முதலிய மிருகங்களை விட்டு இம்சிக்கச்செய்தபோது, அவனைப் பார்த்தமாத்திரம் அவைகள் திரும்பி யோடிப்போய்விட்டன, கொலையாளிகள் சிலர் இதை ராசனிடம் வந்து அறிக்கையிட்டார்கள்.

இராசன் இதைக்குறித்து ஆச்சரியப்பட்டு நாளசிங்கனுக்கு இஷ்டனாகிய தேவேந்திரனை நினைத்தான். உடனே தேவேந்திரன் பிரத்தியக்ஷமாகி சங்கதியைக் கேட்டறிந்து விசனப்பட்டு, மகாராஜனே! நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் நாளசிங்கன் இறந்தானென்று ஐயப்படாதே! அவனுக்குப் பிரம்மா இஷ்டமானபடியால் அவர் எப்படியும் பிழைக்கச் செய்வார், நீ அந்த மாமிசத்தை தோலுக்குள் இட்டு, உனதிஷ்டப்படி தகனஞ்செய்யும்; அக்கினிக்கு ஆகுதியானவுடன் உமது இஷ்டன் பிழைப்பான். அதினால் நாமெல்லோருஞ் சந்தோஷப்படலாம் என்றார். அரசன் நாளசிங்கனை அதுபோல் தகனஞ்செய்தான். அந்தச்சாம்பலின்மேல் ஆகாயத்திலிருந்து காமதேனு பாலைப்பொழிந்தது. உடனே நாளசிங்கன் நித்திரை தெளிந்தவன்போல் எழுந்தது. விருபாட்சராசன் அதைத் தழுவியணைத்து நீர் எங்களுக்கு அநேக தர்மங்களையும் அரசநீதிகளையும் அநுபவச் செய்திகளையும் தெரிவிக்கிறவராயிற்றே அப்படியிருக்க இந்தப் பார்ப்பானுடன் நீர் எப்படி நேசித்தீர். இந்தப்படுபாவி இவ்வளவு பிரமாதத்தில் கொண்டுவந்துவிட்டானே, கீழ்மக்களுக்குக் கிஞ்சித்தேனும் கிருபை புரியவே படாது என்று நடந்த சங்கதிகளையெல்லாம் விவரித்துச்சொன்னார். கேட்ட நாளசிங்கக்கொக்கானது பதைபதைத்துத்துடிதுடித்து, எங்கே அந்தப்பிராமணன் இருக்கிறனா செத்தானா என்று கேட்ட அவசரத்தைப்பார்த்து, அந்தப்பாவி இதோ இருக்கிறான் என்று எதிரில் கொண்டுவந்து விட்டார். அவனைப்பார்த்து உன்தலைவிதி இப்படியாச்சுதாவென்று பரிதாபப்பட்டு அவன் கட்டை அவிழ்த்து விடச்செய்து அவனுக்கு முன்கொடுத்த திரவியத்தைத் திரும்பக்கொடுத்தனுவிடச் செய்தது. கேட்டீரோ தருமராஜனே! இவ்வுலகில் இந்தப் பட்சிஜாதியாகிய கொக்கு எவ்வளவு விவேகம் உடையதாய் இருக்கிறது, பிரமகுலத்திற் பிறந்தவன் எக்கேடுகெட்டான்பாரும், உயர்ந்த குலத்தில் பிறந்தோ

மென்று சிலமூடர் மதிப்பார்கள், அதனால் பிரயோசனமில்லை; மானிட தேகம் மேன்மையென்பார்கள், அதுவுங்காரியமில்லை. எந்தக்குலமானு லும் எந்தப்பிறப்பானுலும் நற்குணம் ஞானம் பேரறிவு சத்தியம் இவை முக்கியம். குலத்தினுல் நலமில்லை, குணமே பிராதானம் நிதானசுதந்த ரத்தை யுடையபேர்கள் எந்தசாதியிற் பிறந்தாலும் அவர்களை நிகிருஷ் டஞ் செய்யலாகாது. அவர்களும் நம்மிடத்தில் வஞ்சனையின்றி மருவி நமதுசுகத்தைக் கோருவார்கள். அவர்களை நாம் வருத்தினுலும் நமக்கு அது நன்மையாகுமேதவிர தீமைவிளையாது. இதை நன்ருய் யோசித்துக் கொள்ளும். மேலும் ராசாக்கள் உலகத்தின் காரியங்களையும் அரசியல்க ளையும் ஒருவரால் தெரிந்துக்கொண்டு, தாமும் புத்தியினுல் ஆராய்ந்துபா ர்த்து, அப்பால் பலபேருடன் ஆலோசித்து ஒருவனை நேசிக்கவேணும், தீயருடன் நேசிக்கலாகாது. அரசன் அவசரத்தினுலே ஒருவனை கடிந்து கொண்டால் அவன் அவ்வரசுக்கு துரோகம் நினைக்காமல் உண்மையா யிருக்கவேண்டும், அவன்தான் நற்குலஸ்தன் அவனையே எசமான்தழுவும் படி நேரிடும். சத்தியவந்தனுகிய பிரபு ஒருவனையும் வணங்கவேண்டிவ ராது. இதற்கு ஒருசரித்திரம் கூறுகிறேன் கேளும்.

அதர்மராஜன் கதை.

புரசைகிரியென்னும் ஒருபெரிய பட்டணத்தில் பவுரகராசன் என்ப வன் கொடுங்கோல் செலுத்தி மாண்டபின், குள்ளநரியாய்ப்பிறந்து சுடு காடுகளில் அலைந்து பிணங்களைப் பிடுங்கித்தின்றுகொண்டு திரியும்போது முன்ஜெனனத்தில் இவன் கிஞ்சித்துச்செய்த நன்மையினுலே பூர்வக்கியா னம்தோன்றி, நாம்முன்னே வெகுபாவஞ்செய்தபடியால் நரிஜென்மமெ டுத்து இவ்வளவு பாடுபடுகிறேம். இனியாகிலும் நற்கருமங்களைச்செய்து பூர்வபாவத்தை தொலைத்து விடவேண்டு மென்று நல்லறிவு பிறந்து, சாதியாசாரத்துக்குரிய மாமிசபட்சணத்தை நிக்கிரகித்து கந்தமூலாதிக ளைப் புசித்துக் காலங்கழித்துவரும் நாளில், அதின் இனத்தார் மாமிசத் தை பட்சிக்கும்படி அநேகமாய் போதித்துங் கேளாமல், தன் நல்ல பிர திக்கினைப்படியே நின்றுவரும்போது, இதின் வர்த்தமானங்களை யெல் லாம் ஒரு வேங்கைப்புலிகேட்டு, நரியினிடத்தில்வந்து, உம்முட விரதத் தைமெச்சினேன், உம்மிடத்தில் நேசிக்கவேணுமென்று வந்தேன். நீர் எனக்கு மந்திரியா யிருக்கவேண்டுமென்று சொல்ல, புலிராசனே உம்மி டத்தில் நான் புதிதாய் வேலைப்பார்க்கவந்தால், பழையவர்கள் பொரு மைப்பட்டு எனக்கு ஏதாகிலும் அபாயத்தை விளைவிப்பார்கள். நீரோ புலி, என்னை எதுவேணுமோ செய்யலாம். இப்போ திருக்கிற இஷ்டம் போல் எப்போது மிருக்கிறேன் என்று நீர் உறுதிசொல்வீராகில் உம்மை அடுத்திருப்பேன் என்ன, புலி அதுபோல் பரவசஞ்சொல்லிக் கையறைந் தது. அதுமுதல் அந்த நரியானது புலிக்கு நல்ல ஆலோசனைக்கர்த்தனு

யிருந்ததாம். புலியின் பழைய காரியதரிசிகள் நரியைச் சதிசெய்ய நினைத்துப் புலி வெளிப்பட்டுப் போயிருக்குந் தருணத்தில், அதின் உணவுக்கென்று வைத்திருந்த மாமிசத்தை எடுத்து ஒளித்துவிட்டார்கள். திரும்பிவந்த புலியானது பசியால் அம்மாமிசத்தைத் தேடிக்காணுமல், கோபப்படும்போது அந்தப்பழைய மந்திரிகள். மாயமாலக்கார நரி அந்தமாமிசத்தை பட்சித்துவிட்டதென்று சொன்னர்கள். புலி அதைக்கொல்ல வந்தபோது, அதின் தாய் தடுத்து தீரவிசாரணைசெய்து நடத்தும்படி புத்திசொன்னுள். வேங்கையானது கோட்சொன்னவைகளை யெல்லாம் வரவழைத்துத் தனித்தனியே விசாரணைசெய்தபோது, அவர்கள் நிசத்தை ஒப்புக்கொண்டார்கள். புலிராசன் நாம்மோசத்துக்காளாக இருந்தோமே யென்று விசனப்பட்டு, நரியை வரவழைத்து உபசாரஞ்சொல்லி மிகவும் நம்பிக்கையாகத் தன்னிடத்தில் வைத்துக்கொண்டது. கேளும் தருமநந்தன, அறிவில்லாரிடத்தில் விவேகிகள் சேர்ந்தாலும் குற்றம்வரும் ராசாக்களுடைய குணங்களை நன்முய் அறிந்தபின்பு மருவவேண்டும். எவனுகிலும் தன்சுதா விவேகத்தினுல் தீர்க்காலோசனை செய்யவேண்டும. கேள்விப்பேச்சைக்கேட்டு அவசரப்படலாகாது. அவரவர்கள் தங்கள் காரியம் நயப்படுவதற்குச் சமயத்துக்குத்தக்கபடி பேசுவார்கள். அயலார் சொன்னபேச்சை புத்தியுள்ளராசன், சொல்நோக்கம் பொருள்நோக்கம் முகநோக்கங்களையும் நிதானித்துப்பார்த்து, அதை நம்பவுமபோகாது தள்ளவுங்கூடாது பராமுகம் பண்ணவும்படாது. அவர்கள் அக்கறைக்கு அவரவர்கள் பாடுபடுவார்கள். அதற்கொரு கதை சொல்லுகிறேன் கேளும்.

நரி கழுகு இதுகளின் கதை.

கேளாய் முரசகேதனு! விரிசைமாநகரம் என்கிற ஒரு பட்டணத்தில் கிராமப்பிரபுத்துவம் உடைய ஒருவனுக்கு அபூர்வமாயுண்டாயிருந்த ஒரு புத்திரன் மரித்துப்போனுன். அந்தப்பிள்ளையை உறமுறையார் மயானத்தில் கொண்டுவந்து வைத்துப் புத்திரவாஞ்சையால் சிக்கிரத்தில் புதைத்துப்போட மனமில்லாதவர்களாய் நெடுநேரம் வரையில் பிரலாபித்துக்கொண்டிருக்கும்போது, அவ்விடத்தில் வசிக்கும் ஒரு பெரிய கழுகானது சூரியன் அஸ்தமித்தால் மசான தேவதைகள் வருவார்கள், மானிடர் இங்கிருக்கப்படாது என்று அவர்களைப் பயமுறுத்தி விரட்டிவிட்டது. பிள்ளைக்குடையோர் அதைப்புதைக்காமல் போட்டுவிட்டு ஓடிவரும்போது, ஒரு ஆலமரத்தின் பொந்தில் நுழைந்திருந்த ஒரு குள்ளநரியானது வெளியில்வந்து, நீங்கள் அருமையாய்ப்பெற்ற பிள்ளையை இவ்வளவு சுறுக்கில் மண்ணில் புதைத்துப் போட்டீர்களாவென்று கேட்டதற்கு, கழுகு பயமுறுத்தின அவசரத்தினுல் புதைக்காமல் வந்துவிட்டோமென்முர்கள். அதைக்கேட்ட நரி நகைத்து, கழுகு உங்களைமோசம்பண்ணிற்று மகேஸ்வரன் வாசமான மயானத்தில் மற்ற பூதகணங்கள் வரமாட்டாது.

இன்னம் ஒருநாழிகைப் பொழுது இருப்பதால், நீங்கள் திரும்பிப்போய் பிள்ளையின் அருமையைத் தீர்த்துக்கொள்ளுங்கள், ஒருவேளை பிராண வாயு கபாலத்தில் அடங்கியிருந்து திரும்பவும் பிள்ளை பிழைக்கலாம். உரியோர்கள் இறந்தவனைத் தொண்ணூறுநாழிகை வைத்துப் பார்க்கவேண்டிய ஒருசித்தாந்தமுண்டு. இதற்குள்ளாகப் பிழைத்தாலும் பிழைப்பார்கள். நீங்கள் இவ்வளவு அருமையாய்ப்பெற்ற புத்திரனைப் புதைக்காமல் திரும்பிவிட்டது அதிசயம், திரும்புங்கள் திரும்புங்கள் என்றது. துக்கக்காரர் மசானத்துக்குத் திரும்பிவந்தார்கள். கழுகு அவர்களைப்பார்த்து, அறிவீனரே! நரியின்பேச்சை நம்பிவந்தீர்களே! செத்தபிராணன் திரும்பி வருமா. இந்தச் சுடுகாட்டில் நான் ஆயிரத்து முந்நூறு வருஷம் இருந்து சகல வைபவத்தையும் பார்த்திருக்கிறேன். இதில் மாண்டவர்களுக்குக் கணக்கில்லை. மீண்டவர் ஒருவரையும் அறியேன் என்றுசொல்லும்போதே திரும்பவும் ஓட்டம்பிடித்தார்கள், நரி மறுபடியுங்கண்டு ஜெகதீசனுக்குச் சித்தமுண்டானல் செத்தபிள்ளையும் பிழைக்கலாம், பூர்வத்தில் தசரத மகாராசன் புத்திரன் ஸ்ரீராமர் ஆண்டகாலத்தில், ஒரு பிராமணனுடைய மகன் அவமிருத்தியுவாய் செத்தவனை தகப்பன் எடுத்துவந்து ராசசபையில் போட்டு, அரசநீதி குறைவினல் என்பிள்ளை அவமிருத்தியுவுக்கு ஆளாயிற்றென்று முறையிட்டான். ஸ்ரீராமர் நெடுநேரமளவுந் தன் செங்கோன்மையைக் குறித்து யோசித்துக்கொண்டிருக்கும்போது, ஒன்றினும் பிசகுதோணுமையால் தெய்வகிருபையினலே பிள்ளைபிழைத்தது. இப்படி நடந்திருப்பதால் தெய்வசித்தமிருந்தால் உன்பிள்ளை பிழைக்கத்தடையென்ன, திரும்பியும்போங்கள் என்று ஆலோசனை சொல்லிற்று. தன்னறிவு பகுத்தறிவற்ற இவர்கள் இங்குமங்குமாக உழண்டுகொண்டு ஒன்றுந்தோணுமல் நின்றார்கள். இந்த இரண்டு செந்துக்களுடைய தந்திரப் பேச்சுக்களையும் உமாமகேசுவரர் அறிந்து சிறுநகைசெய்தனர். உமையானவள் நகைத்தகாரணம் யாதென்று அவரை வினவ, மயானத்தில் நடந்ததைச்சொல்லி கிருபைகூர்ந்து உமையவளுடன் மசானத்துக்குவந்து, கழுகுக்கும் நரிக்கும் பசியைத்தணித்து அந்திய காலத்தில் நற்கெதி பெறும்படி கட்டளையிட்டு, அந்தப் பிள்ளையை உயிர்த்தெழுப்பினர். தருமநந்தன! மனிதனுக்குப் பகுத்தறிவு மாறாதிருக்கவேண்டும். எவர்கள் என்ன சொன்னபோதிலும், தன்சுயபுத்தியைக்கொண்டு தீர்க்கமாய் ஆலோசிக்கவும் வேண்டும். அன்றியுமிராசாக்களுக்கு ஆசாரம் கர்மக்கிரியை ஒழுக்கம் இவைகள் இருக்கவேணும் இவையில்லாவிடில், செல்வம் நில்லாது, செயமும்பெருர்கள், ஒருவேளை காலக்கெதியால் இக்கருமங்களை தள்ளிவிட்டபோதிலும் பிராணந்திய சமயத்திலாவது ஒழுக்கத்தைத் தழுவி உயிர்விடவேண்டும். அதற்கு ஒருகதை சொல்லுகிறேன் கேளும்.

இந்திரன் கதை.

குந்திதேவியார் ஜேஷ்ட புத்திரனே! தேவேந்திரனும் பிரகலாதனும் ஒருகாரணத்தால் பகைத்துச் சண்டைபுரியுங்கால், தேவேந்திரன் இளைத்துப்போனான். அவன் தன் குருவாகிய பிரகஸ்பதியினிடம் தான் தோற்றதற்கு காரணங்கேட்டு, நீ செயிக்கவேண்டுமாகில், இராக்ஷச குரு சுக்கிராசாரியரிடம்போய்த் தெரிவித்துக்கொள்ளென்றார். அதுபோல் அவன் சுக்கிராசாரியரிடம்வந்து தெரிவித்தபோது, பிரகலாதனனிடத்தில் இருக்கிற நல்லொழுக்கம் உன்னிடத்தில் இல்லை, நீயும் சுகுணம் ஒழுக்கங்களுடன் நடந்துக்கொண்டால் உனக்கு செயமுண்டாகுமென்றார். இந்திரன் மிகவுந் தளர்ந்து பிராமண வடிவெடுத்து, பிரகலாதனனிடம் வந்து கண்டான். இவனுடைய பிராமண தேஜசைப் பார்த்துப் பிரகலாதனர் களிப்புற்று, சுவாமீ பெரியோரே! உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும் என்ன, ஐயா உம்மிடத்தில் இருக்கிற ஒழுக்கத்தை எனக்குக்கொடுத்துவிடும் என்றுகேட்டான். பிரகலாதனர்திடுக்கிட்டு, மோசம் போனோம், இனி சொற்சோர்வு படலாகாது, தேகம் அநித்தியம், கீர்த்தி நித்தியமென்றெண்ணி, பிராமணன்விரும்பியவாறே தன் ஒழுக்கத்தை தத்தம்பண்ணி விட்டார். அவ்வொழுக்கத்தை இந்திரன் பெற்றுக்கொண்டு தேவலோகம் புக்கினன். பிரகலாதனன் தத்தம் பண்ணினபிறகு அவனிடத்தில்நின்று ஒரு திவ்விய புருஷன் வெளிப்பட்டு, ஓபிரகலாதா! இதுவரையிலும் உன்னிடத்தில் நல்லொழுக்கம் இருந்தபடியால், பிராமணருடைய சத்தியெல்லாம் உன்னைவிட்டுஅகலாதிருந்தது. நீஅதை தேவேந்திரனுக்குத் தத்தம்பண்ணிவிட்டபடியால், இனி உன்னிடத்தில் இருக்கமாட்டேனென்று இந்திரனைப்போய் அடைந்தனன். அன்றுமுதல் இந்திரன் ராக்ஷதரைசெயித்து நல்லசுகம்பெற்றுவந்தான். ஆகையால், நல்லொழுக்கம் எவர்களிடத்தில் இருக்கிறதோ, அவர்களுக்குச்சத்துருபயமில்லை. அப்பேர்ப்பட்டஆசாரம் சீலம்ஒழுக்கம் இவைகளைத்துணைக்கொண்டபேருக்குக் குறைவுவாராது. சிலவேளை காலகதியாய் ஒழுக்கம் ஆசாரம்தப்பி ஈனத்துவம் நேரிடுமாகில், அதினாலே அவர்களுக்கு பலம் குறையமாட்டாது. அதற்கு திருஷ்டாந்தம் ஒருகதை சொல்லுகிறேன்.

கௌசிகமகாரிஷி கதை.

தருமநந்தனா! திரேதாயுக முடிவில் துவாபரயுக ஆரம்பத்தில், மழை இல்லாமல் இராச்சியம் க்ஷீணித்துப் பூமியில் யாதொன்றும் பலிதமில்லாமல் குடிபடைகள் அற்று பாழாய்க்கிடக்கும்போது, தவத்திலிருந்தகௌசிகர் கண்விழித்துக்கொண்டார். பசிமிகுதியால் ஆகாரம் எங்குந்தேடியுங் காணாமல் ஒருபுதரில் புகுந்தார். அங்கே ஒருபுலையன் கிணறு உண்டுபண்ணிக்குடிசை அமைத்து விலங்கினங்களைவைத்து அவைகளைக்கொண்டுகாலக்ஷேபம் பண்ணிக்கொண்டிருந்தான். அந்தஉளவைக் கௌசிகர் அறிந்

து இராத்திரியில்அவன்குடிசைக்குள் புகுந்து ரகசியமாயங்கிருந்த இறைச்சியைத் திருடினார். புலையன் கண்டுபிடித்து இவரை வெட்ட ஆயத்தப்பட்டான். அப்பா நான் விசுவாமித்திரன், என்னை வெட்டாதே, பசியின் கொடுமையால் இப்பழித்தொழிலுக்கு ஆளானேன், என்றபோது, புலையன் மிகவும் நடுகடுங்கி, சுவாமீ! நீர் இப்பேர்ப்பட்ட வேலைக்கு உடன்படுவானேன், பெரியோருக்கு இது இயல்போ என்று கேட்க, கேளும்பிள்ளாய்! ஆத்துமகோடிகளில் மானிடதேகம் அரிது, அதிலும் ஆசாரம் இருப்பது மிகவும் அரிது, அவ்வாசாரத்தைப் பிராணபத்துக்காலத்தில் நோக்கிக்கொண்டிருந்தால் சரிப்படாது. அதினால் ஆசாரத்தைவிட்டுஉயிரைக் காப்பாற்றுவதில் குற்றமில்லை, என்று விசுவாமித்திரர் கூறினார். ஐயா சமயத்துக்குத்தக்கபடி சொல்லுகிறீர், பிராணன்போனாலும் பொய்மொழி குலாசாரம் ஒழுக்கம்நெறிமுறைப்பழக்கம் விடலாகாதென்று பெரியோர் செப்பியிருக்க, சகலமுந்தெரிந்த தேவரீர், என்குடிசையிற் புகுந்து பாபத்துக்கும் மகாபாபமென்று எண்ணாமல், துணிந்து நாற்றமான இறைச்சியைத் திருடித்தின்ன நினைத்தது உமக்குதர்மமோ என்று புலையன்தர்கித்தான். அவனைப்பார்த்து, புண்ணியனே! உலகத்தை மெய்யென்று நம்பியிருக்கிற பேர்களுக்குப் பிராணன்போனாலும் ஆசாரத்தை விடக்கூடாது, நீ சொன்னது சரிதான். நாங்களோ இப்பிரபஞ்ச வாழ்க்கை பொய்யென்று ஈஷணாத்திரையாதிகளை யொழித்துப் பற்றில்லாமல், பிரம்மவிசாரம் பண்ணிக்கொண்டிருக்கிற பரதேசிகளாகிய நாங்கள் மோக்ஷத்தைசம்பாதிக்கும் கிரியையே எங்களுக்கு மேலான ஆசாரம், அதை நாங்கள் விடோம், ஒருவேளை ஆசாரம் தப்பினால் அதனால் எங்களுக்கு உபாதியில்லை. நன்மை தின்மை இரண்டும் சமமே. சர்வபூதங்களையும் சமமாய்ப் பார்க்கிற கிருபாமூர்த்தங்கொண்டிருப்பவர்கள் நாங்கள் எங்களுக்கும் பிரபஞ்ச பந்தத்துக்கும் வெகுதூரம். பந்தம் எங்களுக்கு அவசியமில்லை. நாங்கள் சீவன் முக்தர், உலோகோபகார நிமித்தம் உடலைச்சுமந்து ஈசுவரனுடைய திருவிளையாட்டுக்குச் சாட்சியா யிருக்கிறபேர்கள்; எங்களுக்கு இப்பேர்ப்பட்ட காரியம் ஒரு பொருட்டல்ல. இதினால் வருகிற ஆசாரஈனத்தைப் போக்கடித்துக்கொள்ளும் வல்லபம் உங்களுக்கு உண்டு. அக்கியானத்தில் முழுகியபேருக்கு அது போகமாட்டாது, அவர்கள் அகத்தியம் அதை அனுஷ்டித்தே தீரவேண்டும் என்றவுடனே, அந்தப் புலையன் அவர் பாதங்களில் தொழுது உமக்கு வேண்டியமட்டும் புசியும் என்று சொல்லி அவ்விடம்விட்டுவிலகினான். விசுவாமித்திரர்நாயின்மாமிசத்தைச் சுட்டுப்புசித்துத் தன்பசியை ஆற்றிக்கொண்டு இப்படிப்பட்ட பசிநமக்கு உண்டாகவேண்டியகாரணம் யாதென்று தியானித்துப்பார்த்து, இந்தபூமியில் பன்னிரண்டு வருஷமாய் மழையில்லாமற் போனதினால் இத்தனை வருத்த முண்டாயிற்றென்று கோபஞ்செனித்து இந்திரனை எரிக்கிறேனென்று ஆக்கிரமித்தார். இந்திரன் அதற்குப்பயந்துசத்தமேகங்களையுங் கொண்டு வருஷிக்கவே பூமிசெழித்தது. பிரதியுபகாரம் வேண்டாமல்

மேகங்களைப்பொழிவித்த விசுவாமித்திரர் தபத்றுக்குப் போய்விட்டார். ஆகையால் ஒழுக்கமுடையாருக்கு இழுக்கம்வாராது, வந்தாலும் அவ்வி ழுக்கம் ஒழுக்கமாய் முடியும். இராஜசெங்கோல் எத்தன்மையது என்று நீ முன்னம் வினவியதற்கு உத்தரஞ் சொல்லுகிறேன் என்று பீஷ்மர் தொடங்கினர்.

இராஜாக்களின் செங்கோலியற்கை.

தருமபூபதீ! அரசருக்குச் செங்கோலாவதுயாது. அஃது எவ்வழியில் வந்தது. செங்கோலுக்கு அதிதேவதை ஆர். எல்லாம் உனக்குச் சொல் லுகிறேன் கேள். அங்கதேசத்தில் வசுவேமனன் என்பவன் தருமம்வழு வாது செங்கோல் நடாத்தி பெண்சாதியுடன் இமவத்கிரிச்சார்பில் தவம் புரிந்து, பெரியோருடன் நேசமாயிருந்தான். அந்தக்காலத்தில் மூவுலக மும் கீர்த்திபெற்ற மாந்தாதாவென்னும்பார்த்திபன் அவிடத்துக்குவந்து வசுவேமனனை வணங்கி செங்கோலோங்கிய தண்டனை நூல்முறையைச் செப்புமென்று வினவ, அங்கதேசாதிபன் சந்தோஷத்துடன் நீர்கேட்ட செங்கோலியலை விஸ்தாரமாய் விளம்புகிறேன், அதின்பிரகாரம் நடந்தால் அவர்களைப் பழிபாவங்கள் அணுகாதென்று வசுவேமனன் மாந்தாதா வுக்குச் சொல்லியவண்ணம் உமக்குச் சொல்லுகிறேன். பிரமாவானவர் யாகஞ்செய்யக்கருதி மானசத்தினல் ஒரு பிள்ளையைப்பெற்று, அவனை யக்கியயோக்கிய கர்த்தாவாக்கி, இமயபர்வதச்சார்பில் சகலவரமும் மேம் பாடும் வரத்தக்க யாகத்தைச்செய்து நிறைவேற்று முன்னே அந்தமானச புத்திரன் மறைந்துபோய்விட்டான். அதனல் பிரமாவுக்கு கோபமுண் டாகி விஷ்ணுவினிடப்போய் நடந்ததைச் செப்பினர். விஷ்ணு பிரமனை அழைத்துக்கொண்டு உமாபதியிடம்வந்து யாகம் பூர்த்திப்படவில்லை, இதற்கு தக்கவகை என்னவென்று கேட்டார்கள். ஒருவன் பொல்லாங்கு பண்ணினல் தண்டநூலில் செப்பியபடிக்கு உடனுக்குடனே தண்டிக்க வேண்டியது. குற்றவாளியை தண்டித்தால் மற்றவர்கள் குணப்பட்டு நட ப்பார்கள் என்று பரமன்கூற, தேவரீர் செப்பிய தண்டனை நூலை விளம்பு மென்று காதலித்தபோது, சாம்பவமூர்த்தி தண்டனை நூலேற்படுத்தி, நாலுவேதம் ஆறுசாஸ்திரம் பதினெண் புராணங்களிலுமிருந்து நீதிசாஸ் திரம் தருமசாஸ்திரங்களைப் பதினன்கு காண்டமாக வகுத்து, பரதசாஸ் திரம் ஆயுள்வேதம் தநுர்வேதம் மீமாம்சை இந்நான்கையும் நாலுகாண் டமாக்கி, ஆகப்பதினெட்டையும் மகாவிஷ்ணுவினிடம்கொடுத்து உலகத் தில் பரவிவழங்கும்படிக்கும் தப்பினவர்களை சிக்ஷிக்கும்படிக்கும் அருளி னர். இதற்குள்ளாக இச்செய்தியை அறிந்த மானசபுத்திரன் முன்போல் பிரசன்னமாகி, யாகத்தை மூடித்தான். அப்பால் மகாவிஷ்ணுவானவர் ஆங்கிரசன் என்கிற பிள்ளையை மானசத்தால் உண்டாக்கி அவரிடம் ஆதி பாண்டரங்கன் அளித்த சாஸ்திரங்களையெல்லாம் கொடுத்து பூமிக்கு அர

சனுக்கி ஆளுகைசெய்யும்படி அமைத்தார். அந்த ஆங்கிரேசர், மரீசிமகா ரிஷிக்கு சாஸ்திரங்களை உபதேசித்து, உலகத்தில்வழங்கச்செய்தார் அந்த மரீசிரிஷியானவர் அதை தேவேந்திரனுக்கு உபதேசித்தார். அந்த தேவேந்திரனால் மகாரிஷிகள் யாவரும் அறிந்து பூலோகத்தில் விரைத்தார்கள். அதினால் பூவுலகோர் அறிந்துக்கொண்டனர். இதுதான் தண்டனை நூல் பரவினதற்குக்காரணம் என்று அறி, தருமநந்தனா! இந்ததண்டனை நூலுக்குப்பேர் என்னவெனில், கபர்த்தி, சங்கரதாணு, ருத்திரபவம், உமாபதி என்பவையாம். இந்நூற்படி தண்டனை விதிக்கும்போது பட்ச பாதமில்லாமலும் பயப்படாமலும் இரக்கங்கொள்ளாமலும் காரியகருமங்களுக்குத் தக்கபடி தண்டிக்கவேண்டியது. இப்படி தண்டிக்கும் ராசனுடைய ஊர் க்ஷேமமாயிருக்கும். இங்ஙனம் வசுவேமனன்சொல்ல மாந்தாதா கேட்டு மகிழ்ந்து தன் பட்டணம்போய்ச் சேர்ந்து அந்நூலை அனுசரித்து அரசாண்டு வந்ததினால் அவரும் அவர் குடிகளும் மோக்ஷத்தை அடைந்தார்கள் என்றார். மேலும் பீஷ்மர் சொல்லுகிறார். ராசன் தன்னிடத்தில் இருக்கப்பட்டவர்களுக்கு அடிக்கடி சாக்கிரதையாய் நடக்கும்படி பயம்பிறக்க எச்சரிக்கவேண்டும். அப்படி எச்சரித்தும் தெரியாமல் குற்றஞ்செய்தாரை சற்றே இலகுவான தண்டனை செய்பவனே உயிர்கள் மீது தாக்ஷிண்ணிய புருஷன். இது தாயாளுவாகிய ராசனுடைய லக்ஷணம் கொடுந்தண்டனைகூடாது. இத்தன்மையராசன் குடிபடைகளுக்குத் தாயுந் தகப்பனுமென்றறி. அவனைத்தான் தருமராசனென்று சாற்றுவார்கள் அதைவிட்டு ராஜச தாமச சாத்துவிக குணங்களில் அகப்பட்டு மனம்போனபடிக்குத் தாழ்ந்த குற்றத்துக்கு உயர்ந்த தண்டனையிடுகிறவன் மகாபாபி. நிந்தனைகொண்ட கொடுங்கோல் வேந்தனுடைய நாடு பெரும்புலி யடர்ந்தகாடு. சாமபேத தானதண்ட சதுர்வித உபாயந்தப்பாமல் முறைமைவிசாரித்து, அதனதன் காரியத்தை நியாயம் அநியாயம் என்று அறிந்து பெரியோருக்கும் ஊருக்குஞ் சரிப்படச் செய்பவனே நீதிபரன். இதுதப்பி நாம் ராசனாயிற்றே, நமக்கியார் நிகர் என்று, அகந்தைகொண்டு எவரையும் மதிக்காமல் எடுத்தெறிந்து பேசுவானாகில், அவனுக்கு எப்பேர்ப்பட்ட பலம் பணமும் இருந்தபோதிலும், குன்றிப்போய். அபஜயப்பட்டு வறுமையடைவான். அதற்கு திருஷ்டாந்தமாக ஒருகதை சொல்லுகிறேனென்றார்.

நிமிர்ந்திருந்த இலவமரத்தின் கதை.

இமயமலைச்சாரில் ஆகாயமளாவி உயர்ந்துபெருத்திருந்த ஒரு இலவமரத்தின் நிழலில் ஒருநாள் நாரதர் வந்து நின்று அந்த மரத்தைப் பார்த்து, வாயுதேவன் எல்லாவற்றையும் அதம்பண்ணிவருகிறானே. நீ அவன் வேகத்துக்கு எப்படித்தப்பி நிற்கிறாய் என்று வினவியதற்கு, நீர் என்ன வாயுபகவானை மிகவும் பலவானென்று சிலாகிக்கிறீர், என் பலத்துக்கு

அவன் ஈடாவானுவென்று தன்னையே மெச்சிப் புகழ்ந்தது. அம்மரத்தினிடத்தில் விடைபெற்றுத் திரும்பிய நாரதர் வாயுதேவனைக்கண்டு, இலவமரம் உம்மை அதிகமாய்த் தூஷித்ததென்று கோள்மூட்டிவிட்டார். வாயுதேவன் கோபப்பட்டு சண்டமாருதமாய் மும்மரித்து சாடும்போது, இலவமரத்தின்கிளைகளும் இலைகளும் பறந்துபோய் மரம்வேரற்றுக் கீழேவிழ ஏதுவாகுங்கால், அதுஉடனே வாயுவைவணங்கிக்கேட்டுக்கொண்டதினுல் அவர் சினந்தணிந்து விலகினர். மொட்டையாய் நிற்கும் மரத்தடியில் நாரதர்வந்து, உன்கிளைகள் இலைகள் எங்கே உன்கெறுவம் எங்கேயென்று கேட்டு, உன் இறுமாப்பல்லவா உன்னை மொட்டையடித்துவிட்டது, இனி உனக்கும் மற்ற ஆத்தும கோடிகட்கும் அகந்தை மமதை ஆகாது, எப்போதும் தாழ்மையாய் இருக்கவேண்டுமென்று கூறி தன்யதாஸ்தானத்துக் கெழுந்தருளினர். ஆகையால் தன்னைத்தானே புகழ்கிறவன் சீக்கிரத்தில் அவமானப்படுவான். கேளும் தருமநந்தனு! எவனொருவன் ஒடுக்க வணக்கமுடையவனே அவன் தன்மேல்வருங் காரியங்களை அறிந்து தப்பித்துக்கொள்ளுவான்; வருங்காரியங்களுக்கு முயற்சி தேடிக்கொள்ளாதிருப்பானுகில் காரியத்தாழ்ச்சிப்பட்டு இறந்துபோவான். அதற்கு ஒரு திருஷ்டாந்தஞ் சொல்லுகிறேன் கேளும்.

மும்மீன் கதை.

குந்தி முதல்வனே! ஒருபெரியமடுவில் வசித்த மீன்களில் அறிவுள்ள மூன்று மீன்கள் இருந்தன. அவைகளின்பெயர்; ஒன்று தீர்க்கதெரிசி, ஒன்று பிராதக்காலதெரிசி, ஒன்று தீர்க்கசூத்திரதெரிசி, இம்மூன்று மச்சங்களும் நேசமாய் சஞ்சரித்து வரும்போது, கிரீஷ்மகாலத்தில் தண்ணீர் வற்ற ஆரம்பித்ததை யறிந்த தீர்க்கதெரிசி, நாம் இருக்கிற மடுவின் நீர் குறைந்துவருகிறது; இனி இதில் வசிப்போமானுல் செம்படவர் வலைக்கு ஆளாவோம். இப்போதே மடைவாயில் வழிந்தோடுஞ்சலத்தின் வழியே முந்திக்கொண்டோமானுல் உயிர்தப்பலாம் என்றதற்கு, மற்றிரண்டு மீன்களும் நாம் இங்கே வெகுநாளிருந்தபடியால் இதைவிட்டுப் போக வேண்டியதில்லை, நம்மையும் பிடிக்கமாட்டார்கள் இங்கேயே இருக்கலாமென்றன. தீர்க்கதெரிசி, இவைகளுக்கென்னசொன்னுலும் வருங்காரியம் தெரியவில்லை, துன்பப்படுகிறபோது இவைகளுக்குத் தெரியுமென்று சொல்லிவிட்டு வேறொரு குளத்துக்குப் போய்விட்டது. தண்ணீர் வறண்டவுடன் மீன்வேடன் வலைவீசினுன். அப்போது அவ்வலையில் அகப்பட்ட பிராதக்காலதெரிசி செத்ததுபோல் கிடந்து அவன் எடுத்துக்கோர்த்த கோர்வையில் செத்ததுபோற்காட்டி மற்றொரு குளத்தில் வலைவீசியபோது கோர்வையிலிருந்து மெள்ளத்தப்பித் தண்ணீரில் விழுந்தது. தீர்க்க சூத்திரதெரிசியோ தப்பித்துக்கொள்ள வகை தெரியாமல்

வலையினிடத்தில் அகப்பட்டுமாய்ந்தது. ஆனதால் முன்சாக்கிரதையும் பேரறிவு முடையோர் ஆபத்துக்காலத்தில் எப்படியுந் தப்பித்துக்கொள்வர். அறிவீனர் எந்தக்காரியமும் எண்ணிப்பாராமல், எதிரியினிடத்தில் அகப்பட்டிறந்து போவார்கள் என்றார் பீஷ்மர். ஐயா! தேவரீரால சகல நீதிகளும் தெரிந்தேன் ராஜாக்களுக்கு ஜெயம் அபஜயம் உண்டாகிற வயணமும், வெல்ல வழியில்லாதவர்களுக்கு வெற்றிவருகின்ற மார்க்கமும், துஷ்டர்களுக்கு வாழ்வுவருகின்ற வழியும், பரிசுத்தவான்களுக்குச் சம்பத்துநீங்கிச் சஞ்சலம் வருகின்ற தாழ்வும் அடியேன் அறிய விரும்புகிறேன் என்றதற்கு குருகுல பிதாமகர் கூறுகின்றார்.

சமுத்திரத்துக்கும் கங்கைக்கும் வினவிடை.

முன்னொரு காலத்தில் கங்காப்பிரவாகம் கடலில்வந்துகலந்தபோது சமுத்திரராஜன் கங்கையைப் பார்த்து, நீபெருவெள்ளமாய் வரும்போது, பெரிய விருக்ஷங்களையெல்லாம் பேர்த்துப் போடுகிறாய், புல் பூண்டுகளையெல்லாம் விட்டுவிடுகிறாய் இந்த விருக்ஷங்கள் செய்த அபகாரம் என்ன; பூண்டுகள்செய்த உபகாரம் என்ன என்றகேள்விகளுக்கு, கங்கை பிரதியுத்தரமாய் நான்பெருகி மும்முரமாய் வரும்பொழுது எனக்குமுன் பணிந்ததை விட்டுவிடுகிறேன், எதிர்த்ததைப் பேர்த்தெறிகிறேன் என்றாள். சமுத்திரராஜன் சரியென்று ஒப்புக்கொண்டான். ஆதலால் இளைத்த அரசன் வணக்கத்துடன் பலவானையடுத்து, அவன் மனதுக்கு இஷ்டப்படி தாழ்ந்து நடக்கவேண்டும் என்றார். இம்மொழிக்கேட்ட தருமராசனும் சக்கிராயுதர் முதலிய மகான்களும் பீஷ்மரை ஸ்தோத்திரித்து தேவரீர் இன்றைக்கு மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டபடியால், நாளைக்கு வருகிறோமென்று விடைபெற்று அஸ்தினபுரம்போய்ச் சேர்ந்தார்கள்.

அரசர்நீதிச் சருக்கம் முற்றும்.

மூன்றாம்நாள் சம்பாஷணை.

மறுநாட்காலையில் யுதிஷ்டிரர் எழுந்து மற்றவர்களையும் அழைத்துக்கொண்டு பீஷ்மாசாரியரிடத்துக்குவந்து பணிந்து பக்கத்தில் உட்கார்ந்து சுவாமீ, இதுவரையிலும் ராஜநீதிகளைக்கேட்டு இன்பம்அடைந்தேன், இனி எண்பத்து நான்குகோடி சீவாத்துமாக்களும் எவ்விதத்தில் ஜெனனமரண சமுத்திரத்தைக்கடந்து முத்தியடைகிறார்கள்; இதின்விவரத்தை அடியேனுக்கருளுமென்று வினவிய பேரப்பிள்ளைக்கு பீஷ்மர் விரித்துரைக்கத் தொடங்கினார்.

தருமசாஸ்திர தத்துவமுறைச்சருக்கம்.

என் அன்பானபேரனே, தருமங்களைப் பலகோடி முறைகளாய் எடுத்துக்கூறுத சாஸ்திரங்கள் இல்லை, அறிவுடையோர் தருமத்தின் பின் சென்று நற்கெதிபெறுவார்கள்; அறிவீனர் பாவங்களை விருத்திபண்ணி நரகத்துக்கு ஆளாவார்கள். நல்வினை தீவினையினுலே இந்தஉலகம் நடந்து வருகிறது; உலகமுண்டானதும் உடலுண்டானதும் வினைப்பயனென்று அறிந்துக்கொள்ளும். வினைக்குக் காரணமாய் உண்டாக்கப்பட்ட இப்பூமியில் தருமத்தைக் கைப்பற்றிக் கடைத்தேறவேண்டும். கடைத்தேறும் வழிகளும் அனந்தமுண்டு. எந்தவழியைப்பிடித்துச்சாதித்து முடிவுகாண்கிருனே அதில் அவனுக்குச்சுகமுண்டு; அவைகளில் யாதேனும்ஒன்றைக் குறித்து பிரசினை பண்ணுவாயாகில் அதற்கு வழிசொல்லுகிறேன் என்ருர். ஐயா! மிக்க அருமையாய்க் கிடைத்த இந்த உடலானது திட்டென்று விழுந்து பொட்டென்று போவதற்கு முன்னே, விடாமுயற்சியாய் எதைச் செய்தால் எளிதில் கரையேறக்கூடும். இது உலகத்தோர்க்கு எளிதில் தெரியவேண்டியது முக்கியம். அப்படிப்பட்ட மார்க்கத்தை அனுக்கிரகஞ் செய்யுமென்று அறன் குமாரன் கேட்க, பீஷ்மர் அதற்கொரு உதாரணங் காட்டுகின்ருர்.

பிராமணனுகிய மேதாவியின் கதை.

பிரம்மகுலத்தில் பிறந்த மேதாவியென்னும் பெயர்வாய்ந்த ஒருவர் சுருதி குரு சுவானுபவங்களில் சிறந்து பிரபஞ்சத்தை மறந்தவராயிருந்தார். அவர்தகப்பன், சமஸ்த உயிர்களுக்கும் ஜனனம் மரணம் உண்டாவதைக்கண்டு மனம் வெறுத்து கிருகஸ்த ஆசிரமத்தில் ஆத்துமலாபங் கிடையாமையினுல் சாதுக்களுடைய சகவாசம்பெற்று, பஞ்சேந்திரியங்களையும் நிக்கிரகித்துபிராணவாயுவுக்கு யோகவலுவேற்றிக்கொண்டுயமனை செயித்து, விஷ்ணுமாயையினை வென்று பரமானந்தத்தைக்கண்டு வாழ இச்சிக்கிறேனென்று மகனிடத்தில் சொன்னுர். மெய்யனுன மேதாவி கேட்டு, ஐயா! காட்டுக்குப்போய்த் தவஞ்செய்வதினுல் பயனுண்டென்று கழறுகின்றீர். இல்லறத்தின் கண்ணே அஃதில்லையென்று இருவேருகப் பிரித்து ஆத்துமலாபத்தை ஆசிரமத்தின்மேல் ஏற்றிக்கூறுகின்றீர். அஃதப்படியல்ல, ஞானவுறுதி கிட்டாதபேர்களுக்கு இல்வாழ்க்கையில் ஈசுவரச்சார்பு கிட்டாது. நான் எனது என்கிற பற்றில்லாதவர்கள் எங்கே இருந்தால்தானென்ன. வீட்டிலிருந்தால் விசனம், காட்டிலிருந்தால் தெரிசனம் என்பது அவர்களுக்கில்லை. அவர்கள் பெண்சாதி பிள்ளைகளுடன் கலந்து வாழ்ந்தாலும் அவர்களை மாயைஅசைக்கமாட்டாது. மனத்தெளிவும் உண்மைஞானமும் நித்தியாநித்திய விவேகமும் இல்லாதபேர்கள் காட்டுக்குப்போய்த் தவமியற்றினுலும்ஆகப்போகிறது ஒன்றுமில்லை, இருந்தவிடத்தில் இருந்து வரம்பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு எங்கே போனுல்தான் என்ன கைகூடும். பெரியோர்அருளும் உபதேசமும் இங்

கில்லையா! மோக்ஷம் பெறுவோர்க்கு இடபேதம் இல்லை. இருந்த இடத்தில் இருந்து அநுபவிக்கமாட்டாதவன் வனத்துக்குப்போய் புலிக்கிரையாகி மறுபடியும் பிறக்கவேண்டியதாய் முடியும். மனோநிஷ்டையுடையவன் எங்கும் இருக்கலாம் என்றுவழங்கிய மேதாவியின் வார்த்தையைத் தந்தைகேட்டு, சரிதானென்று தங்யனுகி ஈசுவரபக்தி பிறந்தவருய் பூமியில் பிரசித்தராயிருந்தாரென்முர் பீஷ்மர். ஐயா! பூமியில் ஒருவன் செல்வவந்தனுகவும் மற்றொருவன் வறியவனுய் நின்று அவனைத்தாழ்ந்து வாழவும், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்பது என்னகாரணம் என்று பாண்டு புத்திரன் கேட்க, பீஷ்மர் மறுமொழிகூறுகின்முர். மனவுறுதி கொண்ட யுதிஷ்டிரனே கேளாய்! தனமுள்ளவனை மதம்கெருவம்அகங்காரம் இவை பிடிக்கும். பெரியோரை வணங்கான். ஐசுவரியம் சதமென்று அஞ்ஞானத்தை மறவான். சம்பத்தில்லாதவர்களுக்கு இத்தியாதி சங்கடங்கள் ஒன்றும் இல்லை. இதனுல் தரித்திரனுக்கு பரமாராச்சியம் சித்திக்கும். ஜென்மாந்தரத்தில் இந்த தரித்திரமானது இத்தியாதி மமதைகளைக் கொண்டிருந்ததினுல், இப்பிறப்பில் கஷ்டதிசையை அநுபவிக்கப் பிறந்தான். இனி இவன்போல் தரித்திரனுகப் போகிறவனிடத்தில் காத்துக்கிடக்கிமுன். பூர்வ புண்ணியத்தினுல் வந்த பொருளைப் போற்றி இன்னம்புண்ணியம் தேடிக்கொள்ள முயன்று எவரையும் இமிசியாமல் சீவகாருண்ணியமான கடமைகளைத் தீங்கறச்செய்து, தெய்வமிகழாமல் சிந்தையொருமித்து வாழ்வானுகில், இன்னொரு ஜென்மத்தில் இறைவனுவான். இப்படிக்கில்லாதவன் நரகவேதனைக்குட்படுவான். தன் சீவகாலத்தில் மனமறிந்தோ அறியாமலோசெய்த கிஞ்சித்து நன்மையினுல் வேறொருகர்ப்பத்தில் புகும்படிவராமல் மானிடப்பிறப்பில் பிறந்து வறியவனுயிருப்பான். கூடியமட்டும் பாரமார்த்திகமாய் நடந்தவன் பின்னும்பின்னும் மனுஷசென்மத்தில் செல்வந்தனுய்ப் பிறப்பான். ஆணவப்பட்டழிபவன் வேறுபிறவியிற் பிறந்து கஷ்டப்படுவான் என்முர். ஐசுவரியவந்தர் எவ்விதங் கடத்தேறுவர் அதைச்சொல்லவேண்டுமென்று அறன்மைந்தன்கேட்க, பொருளாசை அற்று தனம் அநித்தியமென்று அநுபவத்தினுலும் நல்ல ஆசான் முன்னிலையாலும் ஆசாபாசமென்கிற வேரைக்களைந்து, நிரவிபத்தரை அலட்சித்து அருளாசைமேவி, நெறிவழிப்பட்டு நிற்பானுகில் நல்லகதியைப் பெறுவதுமன்றி, ஜெனனம் நேரிட்டபோதினும் குபேரசம்பத்தைப்பெறலாகும். இதற்கொருகதை சொல்லுகிறேன்.

மங்கன் என்னும் மறையவன் கதை.

வேதநெறி தப்பாத மங்கன் என்னும் மறையவன் பண ஆசைப் பிடித்து சாதியாசாரந்தப்பித் திரவியந் தேடினுன். அதை நல்லவிஷயங்களில் உபயோகப்படுத்தாமல், பூமியில் புதைத்து லோபமிகுந்து ஆத்மக்கியானமும் அறிவுமழுங்கி, சாசுவதமா யிருப்போமென்றெண்ணி,

பொருள் இருக்கும்போதே அருளைத் தேடிக்கொள்ள வேண்டுமென்று யோசிக்காமல் சரீரந்தளர்ந்து உடல்மெலிந்து உடனும் உயிரும் ஒடுங்கி நடுங்குங்காலையில் யாத்திரைக்கியானம்வந்து, ஐயோ! நாம் இறந்துபோய் விட்டால், நம்முடைசுற்றத்தாரும் பொருளும் நம்முடன்கூடவராது, நாம் செய்த நல்வினை தீவினை இவைதானே நமக்கு வழித்துணையாய் வருவது, நமக்குக் காலம் சமீபித்ததேயென்று நல்லபிரஞ்ஞை வந்து, தான்புதைத் துவைத்தபொருளை சத்கருமத்தில் செலவுசெய்து, ஒருகாசும் மீதிவையா மல் ஆசையுமொழித்து, பரப்பிரம்மத்தையே பொருளாகக்கொண்டு பிரா ணனை விட்டான். உடனே அவனுக்கு பரமபதம் கிடைத்தது என்று பீஷ் மர் கூறினர். தருமர் மகிழ்ந்து, எங்கட்கு உவந்த இறைவனே! தேகமா னது பஞ்சபூதசந்நிபாதமென்றும் ஆத்துமாபஞ்சகோசகன்என்றும் பகர் கின்றார்களே, அந்தபஞ்சபூதம் எங்கே இருந்தது, அதுவந்து இந்ததேகத் திற் கலந்தவகை எப்படி யென்ற கேள்விக்கு, பீஷ்மர் சொல்லுகிறார். ஆதிமூலப்பொருளாகிய பரமன் திருநாபியில் பிரம்மா பிறந்தார். அவர் ஆகாயத்தைப் படைத்தார். அதிலிருந்து சகலமும பிறந்தது, வாயுவா னது தோன்றி அதிலிருந்து தேஜஸ் உண்டாகி அதிலிருந்து தண்ணீர் கசிந்து அதிலிருந்து மண்தோன்றிற்று.

உதித்ததெப்படியோ அப்படியே ஒடுக்கமென்று அறிந்துக்கொள் வாய்; இந்த ஐம்பெரும் பூதங்களினல் சமஸ்த பிராணிகளும் ஜெனித் தன. இந்த செகத்தே சரீரமாகவுடையான் அண்டநாதன் அகண்டநாதன் பிரம்மாண்டநாயகன். இவனைச் சாரீரகன் என்பார் பரமார்த்த தெரிச னங்கண்டோர். இவனிடத்தே சரங்கள் யாவும் பஞ்சபூத ரூபமென்றும் அசரங்கள்யாவும் பஞ்சபூத சம்பந்தமல்லவென்றும் சிலர்நினைப்பார்கள். நீ அப்படி எண்ணுதே. சரங்கள் போலவே அசரங்களுமென்று நினை, இவைகளை அதிதீவிரத்தில் அறிந்துகொள் என்று பீஷ்மர்சொல்ல, கர்த்த னே! நற்கதிபெறும் பெரியோருடைய ஆசாரத்தைக்கூறுமென்று தருமர் வினவ, விரதசிலர் பகருகின்றார். பெரியோர் சூரியன் உதயமாக ஐந்து நாழிகைக்குமுன்னெழுந்து கமண்டல சலத்தினல் கைகால் சுத்திசெய்து ஆசமனீயம் பண்ணி பரிசுத்த மனதுடன் தமது ஆத்துமார்த்தக் கடவு ளைத் தியானித்து, செவிமறைப சிரத்தில் வேஷ்டிசுத்தி நிருதிமூலையாய் நோக்கிப்போய் களர்நிலத்தில் வேறுசிந்தை யில்லாமல் குந்தியிருந்து மலம் சலம் விசர்ச்சனஞ்செய்து, ஒருவருடனும் பேசாமல் கையினல் மண்ணைத் தொட்டு குதத்திற்குப் பதினொருதரமும் இடதுகைக்கு ஏழுதர மும் வலதுகரததிற்கு ஐந்துதரமும் காலுக்குப் பத்துதரமும் ஆகமுப்பத் துமூன்றுதரம் சௌசமாற்றி மறுபடியும் முப்பத்திரண்டுதரம் வாய் கொப்புளித்து பதினென்று அல்லது ஐந்து அங்குலநீளமான பூங்கொம்பு களால் பல்லைத்துலக்கி கரந்நியாசம் அகந்நியாசம் பண்ணிக்கொண்டு தடா கத்தில் இறங்கி, பரிசுத்த கங்கையாகப் பாவனைப்பண்ணி சங்கல்பித்து ஸ்நானமாடி நீரோற்றி மடிவஸ்திர முடுத்தி சூரியநமஸ்காரஞ்செய்து நித்

திய கர்மத்தை முடித்து நல்லபாதையாக நடந்து வீட்டுக்குவந்து, மேலும் அனுஷ்டானகிரமப்படி பூசைகளைநிறைவேற்றி அதிதிகளையழைத்து அன்னமிட்டு, கோபத்தையும் குரோதத்தையும் விட்டு சுசீல மனசாய் சஞ்சரித்து, ஈனவிருத்தியில் புகாமல் சித்து சடம் என்கிற பதார்த்தபேதமுணர்ந்து தன்னைத்தான் அறிந்து விலக்குவன விலக்கி அதிகப்பிரஸ்தாபத்தில் அகப்படாமல் நாவைக்காத்து வேண்டியமந்திரங்களை இரகசியமாய் மனத்துள் ஸ்மரித்து, அம்மந்திரத்தை வீணில் போக்காமல் இந்திரியங்களை நிக்கிரகஞ்செய்து தான் கடைத்தேறத்தக்கதாக எவனொருவன் நிலையினை நீங்காமல் அனுஷ்டித்து வருகிறானோ அவனே மேலான பதவியடைவான். இதுவே பெரியோர்ஆசாரம் என்றறிக. யோகிகளுடைய ஒழுக்கமுரைக்கிறேன் கேளும். இயமம் நியமம் ஆதனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி இவை எட்டும் அஷ்டாங்கயோகம். இதின்தன்மையை நன்குணர்ந்த பெரியோர் வாயுவைக்கும்பித்து யோகத்தை அனுஷ்டிப்பார்கள். யோக அப்பியாசத்தில் இருந்தபடி மேலான செபம்பண்ணுகிறதென்று விளம்புவார்கள். இதற்கொருசாட்சி காட்டுகிறேன் கேளும் என்று பீஷ்மர் உரைக்கின்றார்.

கௌசிகன்கதை.

கௌசிகன் என்ற ஒரு பிராமணன் ஆசாரசீலமாய் ஒரு இடத்திலிருந்தபடிக்கே, ஆயிரம் வருஷம் செபம் பண்ணினான். சாவித்திரிதேவதை அவர்முன் பிரசன்னமாகி உமக்கு வேண்டுவதைக் கேளும் என்ன, நான் காமியங்களைவேண்டி செபித்தவனல்ல, நான் செய்கிற செபத்துக்கு விக்கினம் ஒன்றும்நேராமல்மாத்திரம் கடாட்சிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தான், அப்படியே ஆகுகவென்று அனுக்கிரகித்து மறைந்துபோனாள். மறுபடியும் இவர் முந்நூறுவருஷஞ் செபஞ்செய்து வரும்போது, தருமதேவதை பிரசன்னமாகி, எல்லாவற்றினும் மேலானது தவம், அதற்குமேற்பட்ட செபத்தை நீர் அனுஷ்டிக்கிறபடியால், மேலானகதி உமக்குக்கிடைத்தது. இந்தஸ்தூலபூத உடலைநீங்கி சூக்ஷ்மதேகத்துடன் பரகதியடையுமென்று சொன்னபோது, அவர் தருமதேவதையைசரணஞ்செய்து எல்லாத் துன்பத்துக்கும் உடன்பட்டிருந்த இந்த உடலை ஆத்துமா சுகப்படுகிறகாலத்தில் கூடக்கொண்டுபோகாமல் விட்டுப்போவது எனக்குதருமமாகயிருக்கவில்லையென்றார். எப்பேர்ப்பட்ட மகான்களும்தேகம்வேறு தேகிவேறு என்று அறிந்து கடைசியில் தேகத்தை விட்டுப் பிரிந்தார்களேயல்லாமல், உடலைக்கூடக் கொண்டுபோனவர் கிடையாது, இதை நீர்யோசித்து தேகத்தைநீக்கி நல்லகதியையடையக்கடவீர் என்று தருமதேவதை மறுபடியும்புகல, அதைக்காதுகொடுத்துக்கேளாமல், சரீர அபிமானத்துடன் மறுபடியுஞ் செபத்திலிருந்தபோது, அவ்வேளையில் மிருத்தியுவும் காலனும்வந்து, உம்மை ஸ்தூலத்தைநீக்கி சூக்ஷ்மதேகத்துடன் நல்லபதவியில் கொண்டுபோய்விட தருமதேவதை எங்களுக்குக் கட்டளை

யிட்டிருக்கிறது. நான் அவர் காரியதரிசி, என்பேர் காலன் இவர் மிருத்தியு என்று சொல்லி அழைத்தார்கள்; அவர்கள்பேச்சையும் சட்டைபண்ணுமல் எப்போதும்போல் செபத்திலே இருந்தவிட்டார். யமதர்மராசன் நேரே பிரசன்னமானபோது, கௌசிகன் அவருக்கு வந்தனை வழிபாடுசெய்து, இருவரும் பேசிக்கொண்டிருக்கையில், இக்ஷ்வாகு மகாராசன் கங்கையில் நீராடித் திரும்பிவந்து இவர்களிடம் வந்துசேர்ந்தார். கௌசிகர் இக்ஷ்வாகு மகாராசன் ஆதரித்து, நீர் என் ஆசிரமத்துக்கு அதிதியாய் வந்தபடியால், நீர் இச்சைப்பட்டதைக்கேளும் தருகிறேன் என்ருர். பூமியாளப்பட்ட ராசனுகிய நான் நும்போலிய பெரியோர் அபேட்சிக்கப்பட்டபொருளைக்கொடுக்கவேண்டியவனுயிருக்க, உம்மிடத்தில் நான் என்ன பதார்த்தத்தைக் கேட்பேன். ஒரு பதார்த்தத்தை இச்சித்தால் அதுபிறவிக்கு வித்தாகுமென்று அவாவினை அறுத்திருக்கிறேன் என்ருன் ராசன். ஒருவர் நம்மிடத்தில் வந்தால் அவர்களுக்கு நம்மாலியன்றதை உதவவேண்டுமென்று சீவன்முத்தாள் உரைத்திருக்கின்ருர்கள் நீர் அரசனுனதால் பிறரிடத்தில் வாங்கப்படாதென்று மனதில் இலச்சைப்படாதீர். உமக்கு விருப்பமானதைக்கேளும் என்று கௌசிகர் உரைத்தபோது, ரிஷியினுடைய பிடிவாதத்தைக்கண்டு, நீர் பண்ணப்பட்ட செபத்தின்பலன் யாவத்தையும் எனக்குத்தத்தம்பண்ணும் என்று கேட்டான். இதோதந்தேன் ஒப்புக்கொள்ளும் என்று ரிஷிசொல்லவே, ராசன் சந்தோஷித்து, ராசரிஷியே நீர்வெகுகாலம் பிரயாசைப்பட்டுச்சேகரித்த அரும்பொருளாகிய செபத்தின்பலனை அடியேனுக்குத்தருகிறேன் என்றது பெரிய அருமையான காரியம், எவருக்கும் ஆசையுண்டு நான் அவா அற்றவனும் அல்ல, நீர் மனங்கோணுமல் கொடுக்கவேண்டும் என்ருன். இந்த செபத்தினுல் அடையப்போகிற பலனை நான் இச்சியாதவனுனதால் இதோ தந்தேன் என்று, கமண்டலசலத்தைக் கையில் எடுத்தார், இக்ஷ்வாகுராசன் அவர் மனேதுல்லியத்தை யறிந்து, தேவரீருடையசித்தம் அறியாமல் கேட்டேன். தேவரீர் செபப்பலன் எனக்குவேண்டாம், எனக்கிஷ்டமானது உம்மிடத்தில் இருந்தால் நான் அதை வாங்கிக்கொள்ளுகிறதா, உம்க்கு ஆசாபாசம் அற்றதுபோல் எனக்கும் அபேட்சையில் லையென்று அரசன்மறுக்க, நீர் ராசனுயிருந்து சொற்சோர்வுபடலாகாது நீர் வாங்காமல் தடுப்பீராகில் சபிப்பேன் என்ருர்.

இருவரும் இங்ஙனம் வாதாடிக்கொண்டிருக்கையில், விகிர்தாகாரருபத்துடன் இரண்டுபேர் இவர்களிடம்வந்து, ஐயாகௌசிகமுனியே! இக்ஷ்வாகுமகாராசனே! இதோ என்னுடன் வந்திருக்கிற இவர் செய்த கோதானபலனை நான் கேட்டுப் பெற்றுக்கொண்டேன். நான் திரும்புகிற சமயத்தில், நான் முன்னே செய்திருந்த இரண்டு கோதானப்பலனை நீபெற்றுக்கொள்ளென்று இவருக்குச் சொன்னேன். நல்லது என்று ஒப்பினவர் அப்பால் அதை வாங்காமல் மறுத்து மறைந்துபோனுர். இப்போது நான் இவரைக்கண்டுபிடித்து முன் ஒப்புக்கொண்டபடியே தானத்தை

வாங்கிக்கொள்ளச் சொல்லுகிறேன், கூடாது என்கிறார். இதை நீங்கள் ஆராய்ந்து நடுநீதி சொல்லுங்கள் என்றார். மற்றொருவர் சொல்லுகிறார். ஐயன்மாரே! இவர் என்பலனைக் கேட்டு வாங்கினார். சிலநாள் தரித்து தான்செய்த கோதானபலனை என்னைவாங்கிக்கொள்ளச் சொல்லித் தொந்தரவு செய்கிறார். அஃதெனக்கு இஷ்டமில்லை, நான்செய்த உபகாரத்துக்குப் பதிலீடுபெற்றுக்கொள்ள எனக்குப் பிரியமில்லை. இவர் சொல்வது முறைமைதானா என்றபோது, இவர் சொன்னது மெய்தான், நான் வலிய க்கொடுக்கிறேனென்றவுடனே, இவர் என் மறுத்துப்போடாமல் ஒப்புக்கொள்ளுகிறதாகச் சொன்னார். அந்தவார்த்தையை இவர் இப்போது எப்படிமறுக்கலாம். நீங்களே யோசித்துச் சொல்லுங்கள் என்று ரிஷிக்கும் ராசனுக்கும் வழக்கை ஒப்பித்தார்கள். ராசன் தீர்ப்புச்சொல்லாமல் மவுனமாயிருந்தான். கௌசிகரிஷி ராசனைநோக்கி, இவர்கள் வழக்கைக்கேட்டீரோ, நீர் எனக்குச் செய்கிறதும் இதுபோலவேயிருக்கிறது. நீர் வாங்கிக்கொள்ளுகிறீரா அல்லது நான் சபிக்கட்டுமா என்று கோபப்பட்டபோது, அரசன் மறுபேச்சுப்பேசாமல் தத்தத்தை வாங்கிக்கொண்டு அந்த இருடியைப்பார்த்து ஒருவார்த்தை புகல்கின்றான். ஐயா! உம்முடைய தபோபலத்தை நான் வாங்கிக்கொண்டேன். இனிநீர் நல்லகதியடையும்படி என்னுடைய புண்ணியபலன் முழுதும் உமக்குத் தருகிறேன் ஒப்புக்கொள்ளுமென்றான். அப்போது வழக்குச்சொன்ன இரண்டு விகிர்தாகாரபுருஷரும் ராசனைப்பார்த்து நாங்கள் சொல்லிக்கொண்ட விவகாரத்துக்கு தக்க முடிவுசொல்லாமல், நீர் தப்புநியாயம் பேசுகிறீர். நாங்கள் இருவரும் காமக்குரோத புருஷாள். இந்த ரூபமெடுத்துவந்தோம், இதோ இருக்கிறவர் தருமராசன். சகல ராஜதருமமும் தெரிந்தநீர் இந்த கௌசிகமுனியுடன் என் தர்க்கிக்கின்றீர். ஒருவருக்கு ஒன்றுகொடுப்பதும், ஒருவர்கையில் ஒன்றைவாங்குவதும், நம்முடைய செயலல்ல. இந்த உத்தமரிஷிகொடுத்தசெபப்பலனே அவரைமோக்ஷத்துக்காளாக்கிவிடும். உம்முடையபலன் அவருக்கு வேண்டியதில்லையென்று முடிபுமொழிந்த சமயத்தில், பிரமன் முதலிய தேவர்கள் பிரசன்னமாகி கௌசிகருடைய ஸ்தூலதேகத்தை நீக்கி, அவருக்கும் இக்ஷ்வாகு மகாராஜாவுக்கும் மோக்ஷபதவி யளித்தனர். ஆனதுகொண்டு எல்லாத் தவத்தைப் பார்க்கிலும் செபம்பண்ணுகிறதே மேலான ஆத்துமலாபமென்று அறிந்துகொள், அதினால் சீக்கிரத்தில் மோக்ஷவீடு சித்திக்கும் என்று பீஷ்மர்கூற, தருமபுத்திரர் அகமகிழ்ந்து தேவரீர் கிருபையால் இப்பேர்ப்பட்ட மகா ரகசியங்களையெல்லாம் அறிந்தேன். இன்னம் ஒரு சந்தேகம் உண்டு, அஃதாவது, செல்வம் நிலையல்லவென்று சான்றோர் பேசிவருகிறார்களே அஃதேன் நிலைநிற்கிறதில்லை. செல்வத்தை நிலையாய் வைத்திருக்கும்படியான உபாயம் என்னவென்று கேட்டதற்கு பீஷ்மர் விளம்புகிறார்.

தேவேந்திரனும் மாபலிச்சக்கிரவர்த்தியும் செல்வத்தைக்குறித்துப்பேசிய சரித்திரம்.

கேளும் தருமநந்தனு! தேவேந்திரன் பிரமனிடம்போய் ஒருகுடைநிழலில் உலகாண்ட விரோசனன் பிள்ளை மாபலியென்னும் பிரக்கியாதிவாய்ந்த ராசனை இப்போது காணேம், அவன் எங்கே இருக்கிறுன் என்றுகேட்க, பிரம்மா நகைத்து உங்களை உபத்திரவித்த அந்த மகாபலிதான் வாழ்ந்த வாழ்வையெல்லாம் நம்முடைய கையிற் கொடுத்துவிட்டு தாழ்வை யடைந்தானென்றல்லவோ என்னைக் கேட்க வந்தாய் இந்திரனே! இப்போது அவன் இருக்கிற இடத்தை உனக்குச் சொல்லுகிறேன் கேள். சுரபி பயங்கரம் என்கிற ரூபம் எடுத்து பூமியிலே சஞ்சரிக்கிறுன். அவனை கண்டு என்னசெய்யப்போகிறுய் என்று பிரமன் கேட்க, சுவாமீ! அடியேன் அவனைப்பார்த்து சிலவிஷயம் பேசவேண்டியிருக்கின்றது,தாங்கள்மனப்பூர்வமாய் விடைதரவேண்டுமென்று அவரிடம் செலவுபெற்று சத்தியலோகத்தைவிட்டு வெளியில்வந்து எங்குந்தேடியுங் காணுமல் மாறுருவமாய் வாசம்பண்ணுகிற மகாபலியை ஓரிடத்திற் கண்டுபிடித்து நீவாழ்ந்த வாழ்வெல்லாம்போய் இந்த எலிரூபமெடுத்துப் பிழைக்கும்படியாய்ச் சம்பவித்ததல்லவா! உன் செல்வமும் செருக்கு எங்கே மறைந்ததோ, இம்மட்டுந்தானு வாழ்வு, தநுகரணபுவன போகமெல்லாம் சதமல்லவென்று சாற்றியது உண்மைதான் என்று சற்றேமயங்கி நீ பயப்படாதே! நான் தேவேந்திரன் உன்னைப்பார்க்க அபேட்சித்து வந்தேன் என்றுன். அந்த தேவேந்திரனைப்பார்த்து மாபலி சொல்லுகிறுன். வச்சிராயுதனே! என்னுடைய இந்ததிசையையறிந்து பயமில்லாமல் என்னைக்கிட்டிவந்து அற்ப வார்த்தைகளைப்பேசி பரியாசம்பண்ணுகிறுய். நீ இப்படி பேசுவதினல் ராக்ஷதாளுக்கு பலங்குறைந்து போயிற்றென்று நினையாதே! ராக்ஷதாளுக்கு இளைத்தாலும் பலம் சிறக்குமேயொழிய குறைவுபடாது. முற்காலத்தில் நான் பிரபலனுயிருந்தபோது, நீ எனக்கு எதிரில் வரமாட்டாமல் மூலையில் பதுங்கினையே, இப்போது நீ என்னைக்கிட்டிவந்து பயப்படாதே பயப்படாதேயென்று தைரியஞ் சொல்லுவது உன் நல்லகாலமோ, இதுமுறையா, நான் இப்போது அனுபவிக்கிறது உன் வல்லமையுமல்ல என் வல்லமையுமல்ல சர்வேஸ்வரனுடைய செயலென்று அறிந்து அகந்தையை அடங்கி, உலகில் ஒருவனுக்கு நல்லகாலத்திலெல்லாம் தற்செயலாய்வந்து கைகூடும் கெட்டகாலம்வந்தால் எத்தனை இடம் பொருள் ஏவல்கள் இருந்தாலும் ஒன்றும் சமயத்துக்கு உதவாமல் தட்டுக்கெட்டுப் போய்விடும். தெளிந்த மனமுடையோர் ஜெயாபஜெயம் நலம் பொலம் வாழ்வு தாழ்வு இவைகள் சமமென்றே பாராட்டி அகமும் புறமுமொத்து எல்லாம் ஆதிமூலச்செயலென்றே ஆனந்தத்தைக் கைவிடாமல் அனுபவிப்பார்கள்; இதுதான் பெரியோர்நிலை. நான் இருக்குந் துர்திசையையறிந்து என்னைக்குறித்து இரக்கப்படுவதுபோல் ஏசிக்காட்டினையே, யென்று மகாபலி மனஞ்சலித்தான்.

இவ்வண்ணம் துயர்கூர்ந்த மகாபலியின் தேகத்திலிருந்து மிகவுஞ் சவுந்தரியமான ஸ்திரீவடிவம் ஒன்று வெளிப்பட்டு இந்திரனுக்கெதிரில் நின்றது; ஆயிரங்கண்ணன் அதைவணங்கி நீயார் அம்மா என்றபோது, நான் மகாலட்சுமி இதுவரையினும் இந்த மகாபலியினிடத்தில் வசித்து அவன் சகலசம்பிரமமும் பெறச்செய்தேன். இவன் நடத்தை முன்போல் இல்லை. இனி இவனிடமிருக்க மனம் ஒப்பாமல் உன்னை நாடிவந்தேனெ ன்றுள். இந்திரன் தன் இருகரத்தையுஞ் சிரமேற்கூப்பி நாதநாதாந்தரூபி பாலபாலாந்தசிலி, ஐசுவரிய நிதியே, அம்மனீ! நீவருக என்று ஸ்தோத் திரித்தான். உடனே அவன் முகமண்டலத்திற் பிரவேசித்து ஐக்கியமாயி னள். இதைப்பார்த்த மகாபலி ஊக்கமது கைவிடேல் என்கிறபடி தைரி யத்தை விடாமல் நமக்கு நல்லகாலம் வந்தால் அம்மன் திரும்பி நம்மிடம் வருவாள், இந்திரனைச் சுமையெடுக்க வைப்பாள் இவ்வாறு தானே இன் னுன் இனியான் என்றெண்ணுமல் எங்குந் திரிந்துழலுகிறுள், நமக்கென் னவென்று மனஞ்சலிக்காமல் சும்மா இருந்தான். அப்பால் மகாபலியா னவன் இமயகிரியில் இருக்கும் ஒருகுகையில் தபசுபண்ணிக்கொண்டிருக் கும்போது, பிரதாபசாலியாகிய வெள்ளைவாரணன் மகாபலியை வந்து பார்த்து நீ அனுபவித்த சுகத்தை இழந்து இந்தக் குகைக்குள் வருத்தப் படும்படியாய் பிரமன் எழுதினுனேயென்று பரிதாபித்தான். அப்போது மகாபலி இந்திரனைநோக்கி பிரமாதி தேவரானுலுஞ்சரி, சிறிது நாள் சுக மும் சிறிதுநாள் துக்கமும் அனுபவித்து மாளுகிறதேயன்றி வேறுலாபம் இகத்தில் காணேம். நல்வினை தீவினைகளை அனுபவிக்க எடுத்தது இந்த தேகம். இதை நீ அறியாயா! நீ பூர்வத்தில் சகலசம்பத்தையும் இழந்து எழுபதினுயிரம் தேவவருஷம் சீர்காழியில் மூங்கில்வடிவெடுத்து பயந்தி ருக்கவில்லையா, பின்னொரு காலத்தில் தாமரைத்தண்டின் நாளத்தில் நீ நு ழைந்திருந்ததில்லையா, நீ உன்னைமறந்துபேசினுய். எந்தக்காலத்தில் எது அனுபவிக்கவேண்டுமோ அஃது வந்தேதீரும். விவேகிகள் இதுகாரியத் தில் கவலைப்படார்கள். அறிவீனர்மாத்திரம் இதற்கு மயங்குவார்கள். எப் படியெனில், காற்றினுலே நெருப்புப் பிரபலமாகி அந்தக்காற்றினுலேயே அவிந்துபோகிறது நெருப்பினுலே நீர்உண்டாகிறது, அந்தநீரினுலே நெரு ப்புஅவிழ்ந்துபோகிறது. நீரினுலேமண்உண்டாகிறது, அந்தமண்ணினுலே நீர் மறைந்துபோகிறது, நன்மை தீமை நாம்தேடிக்கொண்டதல்ல. ஈசுவ ரன் என்னென்ன அதிசயங்காட்டுகிறுரோ அதை அறிந்துசொல்வதற்கு யாரால் கூடும், மேகவாகன என்றுன். தேவேந்திரன் மகாபலியின் மனே திடத்துக்குச் சந்தோஷித்து தன்னுடைய பொன்னுலகம் ஏகினன். நார தமகாமுனிவர் பாகிரதியில் நீராடி இந்திரனிடம் வந்தார். அவ்விடத்தில் சூரியப்பிரகாசம்போன்ற ஒருஅம்மன் எதிரேவந்து நின்றபோது சிவகா ருண்ணியமே! தேவரீர்பேர் என்ன என்றதற்கு, நான் மகாலட்சுமி இது வரையிலும் ராக்ஷதாளிடத்திலிருந்து இப்போது எனக்குச் சம்மதமில் லாமல் வெளிப்பட்டு வந்துவிட்டேன், எவர் ஒருவர் தீவினை செய்கிறுர்க

ளோஅவர்களிடத்தில் நான் அரைக்கணப்போதும் தங்கேன். தீவினையாவதென்னவெனில், சூரியோதயத்திலும் அஸ்தமானத்திலும் இகழ்வதுமுதலிய அக்கிரமங்களாம். உத்தமரிடத்தில் சற்றுநேரம் இருக்க மனஞ்சம்மதிக்கும். அவர்கள்யாரென்னில், விருந்தினரை முகஞ்சுளியாமல் உபசரிப்போர், பொய்கூறாதவர்கள், தெய்வபத்தி முதலிய நல்லொழுக்கங்களுடையோராம் என்றனள். இம்மொழிகேட்ட தேவேந்திரனும் நாரதரும், அம்மணீ! பாபியாயிருக்கிறவன் ராசனாயிருக்கிறான், அவன் நடத்தையெல்லாம் அக்கிரமமாயிருக்க, கிஞ்சித்து சதகாரியநிமித்தியம் அவனுடைய மற்றப்பொல்லாங்கைமறந்து அவனிடத்தில் வசிப்பாயோ வசிக்கமாட்டாயோ தாயேயென்று கேட்டதற்கு, அறிவுடையோரே! குற்றம் மூன்றுபங்கும் குணம் ஒருபங்கு மிருந்தால் அவர்களிடத்தில் போவேன், போனபோதிலும் தீயின்பேரில் நிற்பதுபோல சிறிதுநாள்நின்று எந்தமுகாந்தரத்தினாலாவது அவர்களை விட்டு நீங்கிப்போவேன், நல்வினை மூன்றுபங்கும் தீவினைஒருபங்குமிருந்தால் அவர்களிடத்திலே நான்போயிருந்து மேலுமேலும் நல்வினையை தேடச்செய்து தீவினையைப்போக்கி நானும் அவர்களிடம் விளையாடிக்கொண்டிருப்பேன், அகந்தை கொள்வார்களாகில் நான் உடனே நீங்குவேன், ஒருவேளை அவர்கள் தெரிந்துந்தெரியாமல் குற்றஞ்செய்தால் அக்குற்றங்களை விசாரணைக்குக் கொண்டுவராமல் வெகுபேர் சந்தோஷிக்கும்படிவிட்டு நான் பொறுத்துக்கொண்டிருப்பேன் என்றாள். அவளை நோக்கி இப்போது நீர் எதற்காக இவ்விடம் வந்தீர் உண்மையைச் சொல்லுமென்று கேட்க, தேவேந்திரனே! முன்னமே நான் உன்னிடத்தில் வசிப்பேன் என்ற வாக்கின்படி இதோவந்தேன் என்றாள். தருமநந்தனா! நீ முன்னம் என்னைக்கேட்ட கேள்விக்கு இதுவே தாட்சியென்று இருதயத்தில்பதியவைஎன்று பீஷ்மர் உரைத்தார். தருமராஜனுக்கு சந்தேகம் தெளிந்து மறுபடியும் பாட்டனை வணங்கி, காலம் காலம் என்கிறார்களே! அதன் நிதானத்தை எனக்குக் கிருபை கூறுமென்று வேண்டினதற்கு பீஷ்மர் விளம்பத்தொடங்கினர்.

காலநிர்ணயம்.

அப்பா பாண்டுபுத்திரனே! நிமிஷம் பதினெட்டு கூடியது காஷ்டம், காஷ்டம் முப்பது கூடியது கலை, கலை முந்நூற்றைம்பது கூடியது சிறுமுகூர்த்தம், சிறுமுகூர்த்தம் இரண்டு கூடியது பெருமுகூர்த்தம், பெருமுகூர்த்தம் பதினாறு கூடியது இராப்பகல் ஒருநாள், அந்த ஏழுநாள் ஒருவாரம், அவ்வாரம் இரண்டு கூடியது ஒருபக்ஷம், பக்ஷம் இரண்டு கூடியது மாதம், மாதம் ஒன்றுக்கு நாள்முப்பது, மாதம் இரண்டு கூடியது ஒருருது, ருது ஆறு கூடினால் ஒருவருஷம், ஒரு வருஷத்தில் தக்ஷிணாயனம் உத்தராயணம் இரண்டு, இது பூலோகவருஷம், அயனம் இரண்டு சேர்ந்த

வருஷம் ஒன்று தேவர்களுக்கு ஒருநாள், இதிலே உத்தராயணம் அவர்களுக்குப்பகல் தக்ஷணாயனம் இரவு, இந்தநாள் முந்நூற்றறுபது கூடியது ஒருதேவவருஷம், தேவவருஷத்தால் கிருதயுகம்பதினேழுலட்சத்திருபத்தெண்ணாயிரம், திரேதாயுகம் பன்னிரண்டுலட்சத்துத்தொண்ணூராயிரம், துவாபரயுகம் எட்டுலட்சத்து அறுபத்தினாலாயிரம், கலியுகம்நாலுலட்சத்து முப்பத்திராயிரம், இப்பேர்ப்பட்ட நான்கு கூடியது ஒரு சதுர்யுகம், இந்தசதுர்யுகம் ஆயிரமானால், சிருஷ்டிகர்த்தாவுக்கு ஒருபகல்,மறுசதுர்யுகம் ஆயிரம்ஆனால் இரவு, இப்படிமுப்பதுநாள்கொண்டது பிரமாவுக்கு ஒருமாதம், அந்தமாதம் பன்னிரண்டுகூடினால் ஒருபிரமவருஷம், பிரமவருஷம் நூறுகூடினால் பிரமாவுக்குஆயுள்முடியும், பிரமதேவன்பகலில்ஆத்துமாக்களை சிருஷ்டிப்பார், இரவில் அதுகள் இறந்துபோம் அப்போது சலப்பிரளயம்வந்து மூடிக்கொள்ளும். இதுதான் காலநிர்ணயமென்றறி. காலதத்துவத்தை யெடுத்துப்பேச பிரமாதியர்களாலும் முடியாது. நாமெப்படி யறியப்போகிறோம் என்று பீஷ்மர் சொன்னார். ஐயா! நல்லகாரியங்களை சீக்கிரத்தில் செய்யென்று செப்புகிறார்களே, என்னத்தினாலே அதற்குமாத்திரம் துரிதப்படுத்துகிறார்கள் என்று தருமர்கேட்க, பீஷ்மர் உரைக்கின்றார். விரைவிற் செய்யுங் காரியமும் மெதுவிற் செய்யுங் காரியமும் இரண்டுவிதம் உண்டு அதை அறிகிறவிதம் எப்படியென்றால், சகல சாஸ்திரங்களையுங் கற்று சாராம்சங்களை கிரகித்தவர்கள் பெண்டுபிள்ளைகள் பதார்த்தங்கள் அநித்தியமென்று ஆசாபாசத்தில் அழுந்தாமல், ஸ்திரீகள் தண்ணீர்க்குடந் தலைமேல்வைத்து எதிர்ப்பார்வையுடன் போகும்போது தலையிலிருக்கும் குடத்தின்பேரிலே மனோதிருஷ்டி இருக்குமாறுபோல், சமுசாரத்தில் வாழ்ந்தாலும் தருமமே நினைப்பாயிருப்பார்கள். இது மோக்ஷத்துக்கு முந்தின சாவியாயிருக்கும். அரை நிமிஷங்கூட சும்மாயிராமல் எப்போதுஎப்போதென்று காலத்தைக்குவித்துக்கொள்ளவேண்டும். தருணந்தப்பினால் மரணம் நிச்சயம். அநியாயமாய்ப் போகாதீர் அவசரத்திற் செய்யுங்கள் என்று சான்றோர்சொன்னது அதுதான். ஆனால்தருமத்தில் பலவிதமுண்டு, அவைகளில் பசுபுண்ணியம் என்றும் பதிபுண்ணியம் என்றும் இரண்டு முக்கியம். இவ்விரண்டினுள் எல்லாப் புண்ணியங்களும் அடக்கம். தருமம்பொதுப்பெயர். எதுவானாலும் சீக்கிரத்தில் செய்வதே நல்லது. அதிலும் பதிபுண்ணியம் பத்தத்தை உத்தமம், பதிபுண்ணியமெல்லாம் பசுபுண்ணியத்தினால் பலப்பட்டுக் கருமமாகும். கருமமாவது சொற்காதிபோகம்; சொற்காதிபோகமாவது பெரியோர்களுக்கு உற்றிடத்தில் உதவியாம். திருப்பணிமுதலிய தருமங்கள் பதிபுண்ணியத்தைச்சேர்ந்து பலனைத்தரும். யாகாதி கிருத்தியங்கள் அன்னதானங்கள் பசுபுண்ணியத்திற் பாய்ந்து சுவர்க்காதி போகங்களைக் கொடுக்கத்தக்கது. ஆதலால் எந்தவிதத்திலாவது பேரறிவுடையவர் நிலையில்லாக்காயத்தை நிச்சயமாய் நம்பாமல் தருமங்களைத் தேடிக்கொள்வார்கள். ஓ சத்தியவிரதனே! உடலுக்கு உறுப்பாகிய இளமைசெல்வம் நித்தியமல்ல, தரு

மங்களைச் சீக்கிரம் செய்யவேண்டுமென்பது துணிபு. மெதுவிற் செய்யுங் காரியங்களையுஞ் சொல்லுகிறேன் கேளும்.

தாயைக் கொல்லச்சொல்லிய கதை.

சிர்காரியென்னும் ரிஷியானவருக்கும் அவர் பெண்சாதிக்கும் இல்வாழ்க்கையில் பிணக்குநேரிட்டு அவள் அத்துமீறிப் பேசியபடியால் ரிஷிக்கு கோபஞ்செனித்து, தன்குமாரன் மேதையென்பவனைநோக்கி, அவன் தாயை வெட்டிப்போடும்படி கற்பித்துவிட்டு காட்டுக்குள்போய்விட்டார். பிள்ளையானவன் தாயின்மீது பட்சத்தினல் அவளை வெட்டத்துணியாமல் தந்தைவார்த்தைக்குப் பயந்து, இந்த தர்மசங்கடத்துக்கு என்னசெய்யலாமென்று யோசித்து தன் பிராணனை மாய்த்துக்கொள்வது நலமென்று துணிவுகொண்டான். இப்படி யிற்கையில் கோபத்தினல் காட்டுக்குப் போன ரிஷியானவர் சினந்தணிந்து, என் பிராணநாயகியை ஆத்திரப்பட்டு வெட்டச்சொன்னேமே, அவன் மிஞ்சி வெட்டிப் போட்டானே என்னமோ, ஜமதக்கினி சொல்லைக்கேட்டுப் பரசுராமர் தாயைவெட்டினது போல் இவன் செய்துவிட்டானே, ஆனல் நமதுபுத்திரன் அவசரப்படமாட்டான், ஆகிலும் போய்ப்பார்ப்போமென்று நினைத்து ஆசிரமத்துக்கு வேகமாய் வந்தார். பிள்ளையும் பெண்சாதியும் எதிர்கொண்டு வணங்கினர்கள். அவர் மிகவும் பரிவாகப்பேசி புருஷனுடன் மனைவியர் எதிர்த்து வாதாடப்படாது, எதிர்ப்பேச்சில்லாதிருந்தால் ஸ்திரீகள் ஈரேழுலோகத்தையும் வெல்லலாம் என்று புத்திமதிகூறினர். ஆகையால் துணிச்சலினுலும் கோபத்தினுலும் அதிகாரத்தினுலும் அகங்காரத்தினுலும் அவத்தினுலும் பொறுமையினுலும் கொலைகளைச் செய்வதற்கு மனதுவருவதுண்டு. கோபமே பாபம், கோபமே சண்டாளம் அதுமகா அநர்த்தங்களைஉண்டு பண்ணும், கோபத்துக் கிடமுண்டாகிறபோது, சற்றுப் பொறுத்திருந்து, தன் பிழையையும் எதிரிபிழையையும் ஆராய்ந்து, தனக்குள் இருக்கும் ஒருத்தனுக்குச் சரிசொல்லி, பொறுமையாய்ச் சீர்தூக்கிப்பார்த்து, இந்த மேதையென்பவன் நடத்தியதுபோல் நடத்தவேண்டும், ஆகையால் சத்கருமங்களை சுறுக்கில் செய்யவேண்டும் துற்கருமங்களை சோர்வாய்விடவேண்டும், சீக்கிரத்திற் செய்வதும் மெதுவிற் செய்வதும் எது எதுவென்று நீ இதனல் அறிந்துக்கொள்ளென்று பீஷ்மர்கூற, தருமர் சந்தோஷப்பட்டு, ஐயா! தருமம் அர்த்தம் காமம் என்கிற மூன்று பதார்த்தங்களிலேயும், சீவனுக்கு உறுதியாய்ச் சகாயஞ் செய்யத்தக்கது இன்னதென்று எடுத்துக்காட்டவேண்டும் இறைவனேயென்று இறைஞ்சியபோது, கங்காபுத்திரர் கழறத்துடங்கினர். சீவனுக்குரியவை, தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம். இன்பமென்பது இலக்ஷ்மிபோல் கற்புடைமங்கையை இல்வாழ்க்கையில் மருவிவாழ்வதே இம்மைப்பிரயோசனம், பொருளாவது வாழ்க்கைத்துணை நலங்களையுடைய ஸ்திரீயுடன் கூடிவாழ்கின்ற மனைவாழ்க்

கையில், போசனமுதலாகிய பிதுர்க்கருமங்கள் செய்வதற்குத்தேடும்பொருளை வழியறிந்து பழியின்றித்தேடி நன்மார்க்கத்தில் செலவழித்து சீவகாருண்ணியனுயிருப்பானுகில், அது இம்மைப்பயனையும்மறுமைபின்பத்தையுங் கொடுக்கும். தருமமாவது காலந்தப்பாமல் நித்தியகருமங்களை நடத்தி குருநாதனையும் ஈசுவரனையுந் துதித்து தான் என்கிற அகத்தைவிட்டு, யாவற்றையும் பகவதற்பணம்பண்ணி அவனல்லதுவேறில்லையென்று அறிந்து நடப்பதுவே தருமம். இந்த தருமத்தினுல் இம்மைப்பயனும் மறுமையின்பமும் அம்மையமையவுங் கிடைக்கும். இவற்றுள் தருமத்தினுல் உண்டாவது இம்மைக்கும் மறுமைக்கும் பலனென்னப்பட்ட பதார்த்தம். தவத்தினுல் வருவது அம்மையென்கின்ற அழியாதகதி, தர்மார்த்தகாமம் என்கிற மூன்றினுலும் பிராணுதார லாபம்வரும். இதற்கு அத்தாட்சியாக ஒரு சரித்திரம் கேளாய்.

தருமார்த்த காமமோக்ஷத்தைத் தழுவிய சரித்திரம்.

பிராமண குலத்திற்பிறந்த ஒருபெரியவர் காமத்தைவிட்டு, பொருண்மேல் ஆசைவைத்து பூமியெல்லாந் திரிந்தயர்ந்தும் கிட்டாமையினுல் பொருளைக்குறித்துத் தவம்பண்ணிவரும்போது, ஒருமகாபுருஷன் அவர் முன்னுக்குப் பிரசன்னமானுர். தனக்குமிகுந்த திரவியம்வேண்டுமென்று அவரை இறைஞ்சினதற்கு அப்போது அந்தத்தேவன் ஒருயக்ஷனை வரவழைத்து, இந்தப்பிராமணன் விருப்பந்தீருமளவும் திரவியத்தை அளிக்கக்கற்பித்தார். அவர் தன் பொக்கிஷத்தைத்திறந்து பிராமணனுக்கு வேண்டும் பொருளையெல்லாம் எடுத்துக்கொள்ளச் சொன்னுர். அவ்வேதியனுக்கு கியானம்பிறந்து, ஐயோ! அருமையான தவத்தைச்செய்து, நிலையற்ற பெருந்திரவியத்தை விரும்பினேம். செல்வம் பிரயோசனமாமா. அதினுல் இவ்வுடலுக்குச் சுகமுண்டானபோதிலும், அநேகங் கெடுதிகளைவிளைவிக்குமே, என் விரதமெல்லாம் விட்டு நான் வீணுசைப்பட்டேனே என்று தன்னைத்தானே கசிந்துக்கொண்டு, தன்னெதிரில் காட்சியாக நிற்கிற புஷ்பகவிமானனை நோக்கி, சுவாமீ! அடியேன் மடமையினுல் பொருளை ஆசித்துக்கேட்டேன். தேவரீர் அருள்செய்தீர். இப்பொருள் மருளையே விளைக்கும். தெருளே விளங்கும்படியான ஆன்மாவுக்கு லாபத்தைத்தருகின்ற அம்மைப்பொருளே கைகூடும்படி அனுக்கிரகிக்க வேண்டுமென்று வேண்டினுன். நீ நல்லகாரியத்தை நாடினுய், இதுதான் சாஸ்திரவிசாரணை செய்த சாதுக்களின் லட்சணம் என்று அந்ததேவன் வாழ்த்தி தவப்பொருள் சித்திக்கக்கடவதென்று மறைந்துபோனுர். இதனுல் உயிருக்குச் சார்பு தருமம் தவம் என்று நிச்சயித்து, நெடுங்காலம் தபசுபண்ணி அதினுல் அநேகருக்கு அகண்ட சாம்பிராச்சியங்களை அளித்து ஒப்பில்லாத மகாரிஷியென்று எல்லோரும் வாழ்த்தும்படி இருந்தார். அப்பா தருமராசனே! காமத்துக்கும் பொருளுக்கும் பெரிது தருமமென்றறி. அப்பேர்ப்

பட்ட தவத்துக்கு நினைவே முக்கியக்கருவியென்று நினை. இவ்வாறு அறிந்து மேன்மைபெற்ற தபசிகளின்பெருமையைச் சொல்லுகிறேன்கேளும். வேதவேதாந்தங்கள் உபநிடதங்கள் யாவும் நன்குணர்ந்த நாதப்பிரம்மம் என்ற ஒருபிராமணோத்தமர், தன்மனைவியுடன் சாத்துவிகம் ராசதம் தாமசம் ஆகிய திரிகுணதோஷஞ் சாராமல், கொல்லாவிரதம்பூண்டு காட்டிலிருந்து தவஞ்செய்தார். அவருடைய தவம்விருத்தியாகிவருகிறநாளில் வேதத்தில் விளம்பிய பசுபந்தயாகத்துக்குப் பசுவைநீக்கிப்பழவர்க்கங்களைக் கொண்டு செய்ய ஆரம்பித்த இச்சங்கதியை தேவேந்திரன் கேள்விப்பட்டு, பிரமகுலசிரேஷ்டனே! வேதங்கூறிய சகல யாகங்களுக்கும் பசுபந்தனம் பிரதாந்நியமென்று எல்லோரும் நடத்தியிருக்கிறார்கள். நீர் இதற்கு மாறாக பழவர்க்கங்களினால் யக்கியம் பண்ணுவது உமக்குச் செல்லாது, அதினால் வரும்பயனும் இல்லாது, விதிதப்பிநடப்பார்க்கு விதித்திருக்கிற தண்டனை வீணாகுமா! நீர் கொல்லாவிரதம் பூண்டிருந்தாலும் வேதத்தில் கூறியவண்ணம் பண்ணினால், விரதபங்கம் வராது என்று அநேகமாய் புத்திசொன்னார். இந்திரனும் அநேகரிஷிகளும் அவருக்கு எடுத்து உரைத்த மொழிகளையும் தன் பத்தினிசொன்ன வார்த்தைகளையும் கேளாமல், வேதிகையமைத்து யாகத்தை ஆரம்பித்து நடத்தினார். அப்போது அக்கினி பிரபலப்படாமல் அவிழ்ந்துபோயிற்று. கற்பூரம் நெய் சமித்து முதலானவைப்போட்டு அக்கினியை வளர்த்திப் பார்த்தும் அக்கினி சொலிக்கவில்லை. அதைப்பற்றி இவர் சிந்தித்துக்கொண்டிருக்கும்போது, ஒரு மான் வந்து இவரெதிரில் நின்று நீர் செய்கிறயாகம் குசையாகமே யல்லாது தசையாகம் ஆகமாட்டாது. ஓமத்திற்கு வபைஎடுத்து மந்திரசகிதமாய் யாகம்பண்ணினால் புண்ணியபலனுண்டாம். அதினால் யாதொரு பாபமுமில்லையென்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. நீர் அப்படி செய்யாததினால் அக்கினி பிரசன்னமாகவில்லை. நீர் என்னைப் பசுவாகக்கொண்டு, என் வபையை எடுத்து ஓமம்செய்யுமென்று அந்தமான் சொல்லியும் கேட்காததினால், நீர்செய்யும் யாகத்தில் அவிர்ப்பாகம் பெற்றுக்கொள்ளவந்து நிற்கிற தேவர்களைப் பாருமென்று சுட்டிக்காட்டவே அவ்வேதியர் கண்களுக்கு தேவதைகள் தென்பட்டனர். இனி பசுபந்தனஞ் செய்யலாமென்று அவர்மனந் துணிவுகொண்ட அந்தச்சமயத்தில், தருமதேவதை பிரசன்னமாகி, கொல்லாவிரதங்கொண்ட குணக்கியனே! வேதத்தின் உண்மையை வெளியிடுகிறேன் கேளுமென்று யாகஅத்தியாயம் விளம்புகின்ற ஷட்கிரமத்தையும் எழுதாக்கிளவியாகிய ஈசுவர வாக்கியத்தையும் டமரக நாதத்தினால் பிறந்த அக்ஷரஸ்வரூபத்தையும் ஒழுங்காய்ச்சொல்லி மறைந்துபோய்விட்டது. அவ்வேதியன் மனந்துணிந்து வேதமே உன்னை நம்பினேன் என்று வபையினால் ஓமம்பண்ணி தேவதைகளுக்குத் திருப்தி செய்தான். அப்போது திரிமூர்த்திகளும் சந்தோஷப்பட்டார்கள். இனி இதிலும் அதிகமாய் நான் உனக்கு என்னசொல்லுவேன், தருமநந்தனா! வேதமே நமக்கு ஆதாரம் அதைப்படித்து அதிற் கூறுகின்றபடி அவிர்ப்

பாகம் வைத்தால், எல்லாப்பலனும் கைகூடுமென்று பீஷ்மர் சொன்னார். தருமநந்தனர் தங்கியனேனென் என்று பின்னும் பாட்டனாரைப்பணிந்து, ஐயனே! நற்காரியங்களிற் பிரவேசித்தவர்கள் எல்லோரும் பழிக்கும்படியான துன்பங்கள் சம்பவித்துத் துயரப்படுகிறார்களே! இந்த சந்தேகத்தை நிவர்த்திசெய்ய வேண்டுமென, சரண்புகுந்த பௌத்திரனை நோக்கி பீஷ்மர் சாற்றலுற்றார்.

மைந்தனே! கேளும், கைலையங்கிரியில் வசிக்கும் ஈசுவரனிடத்தில் சில ரிஷிகள்வந்து பிரமன் குமாரனாகிய தக்ஷப்பிரம்மாவானவன், தேவரீர் ஒருவரை விலக்கி மற்றையோருடன் சபைகூடி வேள்விசெய்கிறான். எல்லாவற்றிற்குஞ் சோதியாயிருக்கின்ற ஈசனே உம்முடைய சித்தம் எப்படியோ எங்களுக்கு ஒன்றுந் தெரியாதென்று இறைஞ்சி ஸ்தோத்திரித்தார்கள். அவ்வுரைக்கேட்ட ஆதிபகவன் புன்னகைபுரிந்தனர். அவ்வேளையில் அம்மனுக்குக் கோபம்பிறந்து பூலோகத்தில்செய்கின்ற யாகம்போல் நடத்தாமல் அகங்காரத்தினால் அவன்செய்யும் யாகத்தைப்பற்றி தேவரீர் சிந்திக்கவேண்டுமென்று பராபரை மொழிந்தனள். ஈசுவரன் சகல பிரமத கணங்களுடன் வேள்வி யிடத்திற்குவந்து தக்ஷன் தன்னை யவமதித்ததற்காக வீரபத்திரனை உண்டுபண்ணி யாகத்தை அழித்து தக்கனையும் யக்ஷனையும் தலையை வெட்டிவிடச்செய்தார். பிரமதேவர் ஈசனைப் பணிந்து தக்கனுக்குப் புத்திவந்தது, இனி தங்களுக்கு அவிர்ப்பாகங் கொடுப்பதில் சந்தேகமில்லையென்று சொல்லி அவர்களைப்பிழைப்பூட்டிவிடும்படி வேண்டிக்கொண்டார். அதுபோல் அவர் அனுக்கிரகித்து தலைமாறு உடல்மாறாக உயிர்பெற்ற தக்கன் சாஸ்திரோக்தமாக யாகத்தை நடாத்தி ஈசுவரனுக்குந் திருப்திசெய்தான். இதைப்போல நல்லகாரியமா யிருந்தாலும், செய்காரியம் தவிர்காரியம் இரண்டும் அறிந்து ஈசுவரபக்தியுடன் நடாத்துவானாகில் இடையூறின்றி நிறைவேறும், இல்லாவிட்டாற் கெட்டுப்போம் என்று பீஷ்மர் கூறினர். என் குலதெய்வமாகிய பாட்டனே! பார்கவர் என்னும் பெரியவரை சுக்கிரன் என்று உலகத்தார் சொல்லுகிறார்களே, அவருக்கு இந்தப்பெயர்வந்தகாரணம் என்னவென்றுபௌத்திரன்கேட்க, பீஷ்மர் சொல்லுகின்றனர். பூர்வத்தில் பார்கவனானவர் குபேரனிடத்திற்குப்போய் அவரைப் ப்பமுறுத்தினன். அதனால் துயரமடைந்த இருநிதிக்கிழவன் பயந்து தனது தோழமைபூண்ட பரமசிவனிடத்தில் போய்ப் பரிதாபித்தான். சிவபெருமான் குபேரனுக்குப் பரிந்து, பார்க்கவனையெடுத்துவிழுங்கிவிட்டார். அதைக்குறித்துதேவர்களும் ரிஷிகளும் சிவனை அடுத்து பார்க்கவனைத் தரவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அவருக்குக் கிருபையுண்டாகி, விழுங்கிய பார்க்கவனை வீரிய வழியினால் விட்டுவிட்டார். அவன் ஈசுவரனுடைய சுக்கிலமாய் அதோமுகத்தால் வந்தபடியால் அன்றுமுதல் அவன் சுக்கிலன் என்று பெயர்பெற்றான். உலகவழக்கத்தில் சுக்கிரன் என்று பேசுகிறார்கள். தருமர் சந்தோ

ஷப்பட்டு பீஷ்மரை நமஸ்கரித்து வேதவியாசருடைய பிள்ளை சுகப்பிரம் மத்தின் விருத்தாந்தத்தை விரித்தருளுமென்று வினவ, சுத்தபவித்திரரா கிய பீஷ்மர் சொல்லுகின்றார்.

சுகயோகியின் சரித்திரம்.

அச்சுதர்க்கு மைத்துனனே! கேளாய், வேதவியாசமகாமுனிவர் புத் திரவாஞ்சைப்பட்டு பரமேஷ்டியைக் குறித்துத் தவமியற்றுங்கால், அவர் பிரசன்னமாகி வேதவியாசருடைய விருப்பத்தை வினவ, வியாசர் அவ ரைப்பணிந்து ஆத்துமக்கியானமும், பஞ்சபூதசேஷ்டைகளில் அகப்படா மல் மாயை யொழிந்த ஒழிவுமுடைய மைந்தன் ஒருவனைத் தந்தருளுமெ ன்று வேண்டினர். பரமன் அங்ஙனமே ஆகுக என்றருள் புரிந்தனர். இப் பால் வேதவியாசர், இமோத்கிரிச்சார்பில் பன்னகசாலையில் வாசம் பண் ணிவரும்நாளில், மிகவும் சவுந்தரியமுள்ள அரம்பையானவள் அவ்விடம் வந்ததைக்கண்டு சபலித்தார். அவள் இவர்மேல் மையல்கொண்டவள்போ ற்காட்டி அருகில் நின்ற மரத்தில் கிளிவடிவமாக உட்கார்ந்தனள். வியாசு ருக்கு அவள்நினைப்பு மனதிற் பிரபலித்து வீரியம் வெளிப்பட்டதை தம் முடைய கையிலேந்தியபோது, அது அவர் ஏற்படுத்தியிருந்த அக்கினிக் குண்டத்தில் நிரம்பிற்று. இவர் அதை நினையாமல் அக்கினியைக்கடைந் தார். இந்த ஊஷ்ணத்தினல் அக்கினிக்குண்டத்திலிருந்து சுகப்பிரமரிஷி எழுந்தருளினர். தேவர்முதல் யாவரும் பிள்ளையைத்துதித்து மகிழ்ந்தார் கள். அப்பால் சுகப்பிரம்மமானவர் தந்தையைப்பணிந்து, திரிகரண சுத் தியாய் பக்தியுடன் சாஸ்திரபுராணங்கள் ஆகமங்கள்யாவும் உபதேசிக்கப் பெற்று உலகத்தில் சாட்சிபூதமாய் ஒன்றிலுங் கலக்காமல் காரணப்பொ ருள்போல் நிற்க, சிலநாள்சென்று உலகமென்பதும் உலகத்திலுள்ள பே தங்களென்பதும் தாறுமாறான மாயையல்லாது வேறல்ல, பிரமம் ஒன்றே நிச்சயபதார்த்தம், குற்றமற்ற சத்குணனே! இஃது யதார்த்தம், உள்ளும் புறம்புமாக உறைந்து விளையாடுவது பிரமம், அவரையல்லாமல் அணுவும சையாது. அவரே ஸ்வதந்தரர். மற்றவர் மற்றவை பரதந்திரங்கள் என்று சுகருக்கு வியாசர் எடுத்துக்காட்டினர். விதிப்பிரகாரம் வியாசரால் அறி ந்துக்கொண்ட சுகப்பிரமம் பிரமசரிய கிரகஸ்த வானப்பிரஸ்தமென்னப் பட்ட மூன்று ஆசிரமங்களையும் அறிந்து அவைகளில் பிரவேசித்தால் பிர பஞ்சமாயை பிடித்துக்கொள்ளுமாதலின் அப்படிப்பட்ட மாயையை மா ற்றும்படியாகிய ஞானநூலை நவிலுமென்று பிதாவைக்கேட்டார். அவர் நகைத்து மேற்கூறிய மூன்றாசிரமத்திலும் பற்றுவையாமல் பக்தியினல் விலக்கிவிடலாமென்று பார்க்கிறாய், அதை விட்டுவிடப்போமோ! உயர ஏறுகிறவன் முதற்படியில் கால்வைத்து ஏறுகிறதா, அல்லது நாலாம்படி யில் காலைத்தூக்கிவைக்கிறதா, சொல்லாய். திராசின் முள்ளுப்போன்ற மனமுடையரேயாயினும், இந்த ஆசிரமம் மூன்றையுந்தள்ளிப் பிரவேசிப்

பார்களா! மூன்றிலே அனுபவித்து வரும்போது, சகலமும் நாசமாகி சந்நியாசம் கைகூடும் என்றியம்பிய பிதாவைநோக்கிப்பிள்ளைசொல்லுகிறார். ஐயா! நீர் சொன்னதெல்லாம் இப்பிரபஞ்சவாழ்க்கையை ஆசித்துப்பார்ப்போமென்று விரும்புவோர்க்குத்தகும், என்னையும் அதிலே சேர்க்கவேண்டாம். நான் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசைகளைக் காதலித்தவன் அல்ல, நீர் இதை அறிந்துக்கொள்ளும். இந்தப் பிரபஞ்சமானது நல்வினை தீவினையினால் ஏற்பட்டிருப்பதாம். நல்வினையாவது தானதருமம் பரோபகாரங்களே, தீவினையாவது பொய் கொலை களவு காமாதிகளாம். நல்வினைசெய்தவன் இங்கும்அங்கும் வீடுவாசல் முதலிய போகங்களை அனுபவிக்கிறான்; தீவினைசெய்தவன் தரித்திரனாய் நோய்பிடித்து அன்னவஸ்திரங்களுக்கு அலைந்துதிரிகிறான். செல்வத்தினால் சுகமென்ன கண்டது, இல்லாமையால் துக்கப்பட்டதேது, எண்ணிப்பார்க்குமிடத்தில் இதுவும் பாவமே! அதுவும் பாவமே! அறிவுமாத்திரமாய் நிற்பவர்களுக்கு இரண்டும் ஒன்றுதான். அறிவீனர்களுக்கு அதுவேறு இதுவேறு மெய்யே, பேதை மனமானது பிரமாதத்திற் கொண்டுபோய்விட்டது. நினைப்பினால் நெடுந்தூரம்போன இவன் திரும்பிவந்து எப்படிக் கடத்தேறுவான் என்றால், சாஸ்திரத்தைக்கற்று சாதுசங்கப் பழக்கத்தினால் ஓர்ந்து பகுத்தறிந்து அனுபவத்தால் அறிந்த அறிவாளிக்கு சுகதுக்கமான வினையிரண்டும் பிறவிக்கிடமேயாதலின், இரண்டும் விலங்குதான். ஆத்துமா கடைத்தேறும் வழி இஃதல்ல. ஒருபிள்ளை பல்லக்கேறுகிறான். ஒருபிள்ளை சுமக்கிறான். இருவருக்கும் இன்பதுன்பம் ஒன்றே. தாய்தந்தையர் இவ்விருவரையும் பார்த்து சந்தோஷப்படுகிறார்களா இல்லையா. சர்வாத்துமாவாகிய ஈசுவரன் எல்லோரிடத்திலும் இருந்து பார்ப்பது நிச்சயமா அநிச்சயமா. நிச்சயமானால் பிள்ளைகளில் பேதம் வரவேண்டியதென்ன, பெற்றவனுக்குப் பிள்ளைகளெல்லாம் ஒன்றே. சகல ஆத்துமக்கோடிகளும் தன்னைநினைத்து புசிக்கும்படியே ஏற்படுத்தியிருக்கிறார். அந்தப்பொசிப்பு எப்படியும் இவனுக்குக் கிடைக்கக் காத்திருக்கின்றது, பிறப்பு இறப்பு அனுபவம் ஆனந்தம் எல்லாம் இருவினையாளராகிய இருவருக்குஞ் சரியே. இப்படியிருக்க ஈசுவரத்தியானம்பண்ணி விதியை அநுசரித்து நடவாமல் வெகுபேர் கெட்டுப்போகிறார்கள். மனோநிச்சயமில்லாமல் வாடுகிறார்கள். விருதாவாய் பிராந்திகொண்டு மயங்குகிறார்கள். பிராந்தம் தீர்ந்தால் மாறிப்போமல்லவோ, தான் இன்னான் என்றறிந்தால் தெளிவுண்டாகும். ஞானசூக்குமம் அறிந்து ஈசுவர பக்திபண்ணி எந்தவேளையிலும் சிந்தை தெளிந்து களிப்பைமாற்றி கண்டு உணராமல் என் வீணில் கெட்டுப்போகிறார்கள். இவ்வளவு தாரதம்மியம் கண்டு இதை அறியாமல் உயிர்ப்பிராணிகள் நல்வினைவேண்டுமென்று மயங்கி முயங்கி தானதருமம் பண்ணினால் சுகம்பெறலாமென்று சஞ்சலப்பட்டு அலைகிறார்கள். ஆனால் கீர்த்தியும் பெருமையும் பெறலாகும். அன்றியும் பூஷணமும் தூஷணமும் உடலுக்கல்லாது உயிருக்கு ஒன்றுமில்லை. இப்பேர்ப்பட்ட மேம்பாடு எனக்கு வேண்டாம்.

சீக்கிரத்தில் செனனமரணவேதனை யொழிந்து மோக்ஷம் அடையவேண்டும். இதற்குவேண்டிய முக்திசொரூப லக்ஷணங்களை எனக்கு மொழிந்தருளும் ஐயா என்று சுகப்பிரமம் வினவ, வேதநூன் முனிவர் சுகரைநோக்கி ஒரு திருஷ்டாந்தங் காட்டுகிறேன் பாரென்றார்.

ஜனகமகாராசன்சரித்திரம்.

விதேக தேசத்தைச்சேர்ந்த மிதிலாபுரியில் ஜநகமகாராசன் துரைத்தனம் பண்ணிக்கொண்டு புத்திரமித்திராதியருடன் கூடிவாழ்ந்தும், புளியம்பழத்தோடுபோற் பொருந்தி மாயையை வேர்களைந்து அது மறுபடியும் எட்டிப்பாராமல் அழியும்படி விரதாக்கினிகொண்டிருந்தார். அவரே சீவன்முக்தர், உலகத்தோடு ஒத்துவாழ்ந்தவர். அப்பேர்ப்பட்ட பக்குவனிடத்தில், நீபோவையாகில் உன்மனச் சந்தேகங்களை மாற்றிவைப்பார். நீ அவரை நாடிப்போகிறபோது பிரபஞ்சத்துக்கு வேறுபாடாய்ப் போகாமல், ஞானவேடத்தை யொளித்து உலகத்தை யனுசரித்தவன்போல் போய்க்கேள் என்று உரைத்தார். சுகயோகி பிதாவைப்பணிந்து விடைபெற்று பரதகண்டத்திற் பிரவேசித்து மிதிலையில் சென்று ராசகொலுக்கூடத்திற்கு வந்தார். அவ்விடமிருந்த துவாரபாலகர், நில்லென்று அதட்டினார்கள். அதைக்கேட்ட சுகப்பிரமம் அங்கேயே அசைவற்று நின்றுவிட்டார். ஒருவர்வந்து நிற்கிறாரென்று துவாரபாலகர் ஜநகமகாராசனுக்குத் தெரிவித்தனர். மகாநுபாவராகிய சுகப்பிரமமே எழுந்தருளினார் என்கிற சந்தோஷத்தினால் எதிர்போய்க் கண்டு சகல மரியாதைகளுஞ்செய்து, சுவாமீ! தேவரீர் இவ்விடம் எழுந்தருளிய காரணம் யாதோவென்று ராசன் தெண்டனிட்டான். என்தந்தை வேதவியாசர், உம்மிடத்திற்குப் போனால் இறப்பும் பிறப்பும் இல்லாத பேரானந்த ஞானத்தை உம்மால் தெரிந்துக்கொள்ளலாகுமென்று என்னை அனுப்பித்தாரென்றார். இந்த வார்த்தையைக்கேட்ட ஜநகராசன் பயந்து, மகாநுபாவராகிய வேதவியாசர் அறியாததொன்றுண்டோ, என்னிடத்தில் கிருபைவைத்து எனக்கு ஜநநமரண தத்துவங்களைபோதித்து, ஆத்துமதெரிசனமாகும்படி என்னை தந்நியனாக்கிவைத்த சர்வலோகநாயகன் தம்மிடந்தெரிந்துக்கொண்டபொருளை எங்கே மறந்துவிடப் போறேனோவென்று பழயபாடங்கேழ்க்க உம்மைத்தூண்டினாரோ. ஐயா! உலகம்பொய் அநித்தியமென்று உமது தந்தையினிடத்தில் மெய்யாகிய பரமரகசியம் படித்துக்கொண்டு கிருதார்த்தனாயினேன். அவர் எனக்கு உபதேசித்தபடிக்கே, மேலாகிய ஞானபதத்தை உமக்கு உபதேசிக்கிறேன், அதின்கிரமத்தைக் கேட்டருளும். பிராமணாள் ஆசிரமம் நான்கையும் அநுசரிக்கவேண்டும், என்கிற விதியைத்தொடங்கிஅவ்வவ்வாசிரமத்தின் அநுஷ்டானங்களை ஒன்றுவிடாமல்கிரமமாய் போதித்து, இதுதான் ஞானம், இதற்காதாரம் மௌனம், மோனமென்பது ஞானவரம்பு. ஞானவான்கள் தேகத்தை எப்படி வைத்திருப்பார்

கள் என்று நீர் கேட்பீராகில், இப்போதுரைத்த இயற்கையின்படியே தேகாபிமானம் நசித்து உடற்சார்பில்லாமல் தேகம் பிராரத்துவ கர்ம போகத்தைப் புசிப்பதற் கெடுத்ததேயன்றி வேறல்லவென்று பூர்த்தியாய்த் தெரிந்துக்கொண்டு இன்பதுன்ப மில்லாமல் புளியம்பழத்து ஓடு போல ஒட்டியும்ஒட்டாமலும்நின்று, எல்லாவற்றிற்கும் ஆதாரம் உடலென்று காட்டி உண்மைஞானத்தால் நீயாரோ நான் யாரோவென்று விட்டு மீந்திருப்பார்கள். இனிமேல் உமது தந்தையாகிய வியாசரிடத்தில் சென்று தன்னைத்தான் அறியுந்தத்துவத்தை அறிந்துக்கொள்ளுமென்று சநகராசன் சொல்லிச் சரண்புகுந்தார். சுகப்பிரமம் ஆசாரியபக்தி செலுத்தி வேதபகவானிடம் திரும்பிவந்து ஜநகரிடத்திற் கேட்டதையெல்லாம்கூறியபோது, அவர்காருண்ணிய நோக்கமாய்க் கடாட்சித்து நீ ஞானசாஸ்திரங்களை நன்றாய்க் கற்றுக்கொண்டபடியால், என் சிஷ்யர்களாகிய சுமந்தர் பைலவர் வைசம்பாயனர் இவர்களுடன் நீயும் இங்கே இருக்கலாம் என்று செலவுகொடுத்தார். அப்படியே அவர்களுடன்செயல்வேறு சிந்தைவேறு இல்லாதவராய் வேதமோதிக்கொண்டிருந்தார்.

இப்படியிருக்கிற நாளையில் அவருடையசிஷ்யர் மூவரும் ஆசாரியரை பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்து, தங்களிடத்தில் நாங்கள் ஓதியுணர்ந்த வேதசாஸ்திரங்களையெல்லாம் பூலோகத்தில் சொல்லிவைத்தால்லோகோபகாரமாயிருக்கும், தங்களுக்கும் பிரதிஷ்டை யுண்டாகும், அங்ஙனமாக அனுக்கிரகம் பண்ணவேண்டும் ஐயனேயென்று வணங்கவும், வேதமகானவர் நகைத்து உலகத்தோர் கடைத்தேறுவதுமுக்கியமான காரியந்தான்; மேலும் நல்ல நூலைக்கற்றவன் தன்னைப்போல் நல்லவனாகும்படி பலபேர்க்கும் பிரசங்கிக்கவேண்டும், பிரசங்கியாவிட்டால் பயன்படார்கள். மவுனத்திலிருக்கின்ற ரிஷிகள்முதலாய்மோக்ஷமடையும்போது தன்னைச்சூழ்ந்த அனைவரும் கதிபெற வேண்டுமென்று உபதேசித்துப் போகிறார்கள். நீங்களும் அப்படியே போதிப்பது முறைமையென்று மொழிந்தருளிய வேதவியாசரைப்பார்த்து, போதிக்கவேண்டிய தருமம் இருந்தாலும் தங்களுடைய பேரருளைத் துணையாகக்கொண்டால் எங்களுக்குப் பெருமையுண்டாம், ஆதலினாலே விடைதருக வென்றார்கள். வேதவியாசர் மகிழ்ந்து, அன்பர்களே! எல்லா நூலையும் சம்பிரதாயமாய்க்கற்று, நாமேபோய் உலகத்தில் ஓதுவிப்போம் என்கிற வித்தியாகர்வப்படாமல் ஆசாரியருடைய அருளைப்பெற்று அப்பாற் போதிக்கலாமென்கிற அன்புடன் இருந்தீர்களாகையால், நீங்கள் தான் எனக்கு உகந்த பிள்ளைகள். நீங்கள் என்னிடத்தில் கற்றநூலும் கேட்டகேள்வியும் சிறக்கக்கடவதென்று மூவரையும் ஆசீர்வதித்து சுகரைப்பார்க்கிலும் அதிகமென்று சொந்தம்பாராட்டி, மூவரையும் உலகத்துக்கனுப்பிவிட்டு அகந்தையற்றிருக்கும் வேதவியாசர் பரமயோக்கியராகிய தன்குமாரன் சுகருடன் பர்னசாலையில் இருந்தார். ஒருநாள் நாரதமகாமுனிவரர் அங்கேவந்து வேதவியா

சரே! இவ்விடத்தில்எப்போதும்வேதகோஷமாயிருக்கிறவழக்கமாயிற்றே இப்போது மவுனமாயிருக்கவேண்டிய காரியமென்னவென, உலக உபகாரமாக சிஷ்யாளை அனுப்பிவிட்டேன். உமதுகடாட்சத்தினல் நானும் என் பிள்ளை சுகரும் பூமியெல்லாம்திரிந்து வேதங்களை ஓதுவிக்கப்போகிறேம் அப்படிசெய்யாவிடில் வேதம் பரவமாட்டாதென்றுர். சரியென்று ஒப்புக்கொண்டு நாரதர் அங்ஙனமிருந்து நீங்கினர். வியாசர் தம்பிள்ளையுடன் பூமியில் எங்கும்போய் பிள்ளை ஆகாயமார்க்கத்திலும் தான் பூமியிலுமாய் நின்று வேதங்களைப்போதித்து, நான்குவேதமும் சுகயோகிக்குவரும்படி பண்ணி, வேதாந்த ரகசியத்தை விளம்பியபின்னர், ஆகாயகங்கையில் ஸ்நானமாட வேண்டுமென்று, பிள்ளையை நிறுத்திவிட்டுப் போயினர். அவ்வேளையில் நாரதபகவான் சுகரை வந்துபார்த்து, நீ பூர்ணசப்தமாய் தொனியான நாதமாய் கீதலளிதமாய் வேதமோதுவதைக்கேட்டு நான் உன்னைப் பார்க்கவந்தேன், உனக்கு வேண்டியதைக்கேட்டால் தருகிறேனென்றுர். சுவாமீ! என்னை நான் இன்னுன் என்றறிந்து என்னையென்பதும் அறிந்தவன்யார் என்பதும் அறிந்த அறிவு யாதென்பதும் அற்றுச் சுகமுற்றிருக்கும்படி வரங்கொடுக்கவேண்டுமென்று வேண்டினர். கேட்ட நாரதர் இவருக்கு போதிக்கவேண்டுமென்றுநினைத்து வேதமுடிவின் சாரத்தை விளம்பத்தொடங்கினர்.

நாரதர் சுகருக்கு உபதேசம்.

கேளும் சுகயோகியே! பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்பது நான்கு வருணுசிரமம். இது அஞ்ஞானப் போர்வையேயல்லாது உண்மையல்ல. உயர்ந்தசாதி முக்கியம் என்றும் தாழ்ந்தசாதி ஈனமென்றும் இல்லை. அஞ்ஞானம் அகன்ற விஞ்ஞானம் எந்தசாதியில் விளங்குமோ அதுவேபிரதானம். கர்மத்தினல் சாதியேயல்லாதுசென்மத்தினல் இல்லை. சாதியென்பது வெறுமை, உயர்வுதாழ்வு பேசுவதெல்லாம் அஞ்ஞானம், பிரபஞ்சமயக்கம். பிரபஞ்சமாவது, இல்வாழ்வோன் கிரகஸ்த ஆசிரமம் கட்டிக்கொண்டிருப்பதற்கு இது கால்விலங்கு, பிள்ளைகுட்டிகள் சுள்ளாணி. பிரமசரியம் வானப்பிரஸ்தம் இரண்டும் பெருமைப்பட்டதென்று பெரியோர் ஒப்புக்கொள்வதேயன்றி அதிலும் பயன் இல்லை. யதியாசிரமத்தில் தயாரசமும் சத்தியமும் இருந்தால் பயன்படும். இவ்விரண்டுகுணத்திலும் எள்ளத்தனை பிசகினல் மலையத்தனை நரகம்வந்து முன்னிற்கும். தெரியாமல் தவறினவனுக்கும் ஒருபங்கு தண்டனை உண்டாகுமாதலால் வண்டிச்சக்கரம்போல் சுழலும், ஜெனனமரணமானது தீராது. அஃதென்றைக்குத் தீருமென்றுல், அகம்பாவம் நசித்து ஆணவமலம் அகன்றதானல் சகலாத்துமாக்களுந் தானேயாய் விளங்குவான். சமஸ்த்த தேகாதிகளிலும் விபுவாய் விளங்கும் ஆன்மா பரிசுத்தம். அது மாயாமயக்கத்தில் அகப்பட்டு மருண்டுகிடக்கிறது. மாயாசகிதமான உடலுக்கும் களங்

சரகிதமான ஆன்மாவுக்கும் சம்பந்தமில்லையென்றறி. இவ்விரண்டையும் எப்போது வேருகக்காண்பானே அந்த இடமே மோக்ஷம். அப்படி இருளும் வெளிச்சமும் இல்லாத இடத்தில் இருந்துபார்க்கில், சகலமும் எளிதில்தோற்றும். இப்படிப்பட்ட ஞானசொரூபம் தானுகி இருக்க அதைக் கைவிட்டு உலகத்தை தானென்றெடுத்து மேற்போட்டுக்கொண்டு தனக்குரிய ஞானத்தைமறந்து, எத்தனைநாள் திரிகின்ருனே அத்தனை நாள்வரையில் தன்னைத்தான் அறிகிறதெளிவு வரமாட்டாதென்று ஞானேபதேசம் பண்ணிவைத்து அனுபோகமுங் காட்டியபோது, சோதிவிளக்காகிய சுத்தஞான சமுத்திரத்தில் முழுகி பிறவிப் பெருங்கடலைத்தாண்டி எங்குந் தானுய் பிரமஞானந்தோன்றிய சுகப்பிரமாவானவர், உத்தரதிசைக்குப் போகவேண்டுமென்று வியாசரை வந்துபணிந்து செலவுகேட்டார். அப்பாமகனே அடாசுகனே! என்னைப்பிரியமனம் எப்படி வந்ததோவென்று ஆருமைப்பட்டபோது, நாரதருணர்த்திய ஞான நிஷ்கரிஷையை யெடுத்துக்காட்டவும், அதைக்கேட்டு பிரமித்து மகிழ்ந்து, சுகுணமானபிள்ளை தன்னைவிட்டுவிலகுகிருனேயென்கிற கிலேசத்தால்துயரப்படுகிற பிதாவைத்தேற்றி, அதிதீவிரமாய் யோகப்பரியேறி பூலோகத்தைப்பிரிந்து ஆகாயமார்க்கத்திற் போகிறவேளையில், சுகரைக்கண்டதேவர்கள் அனைவரும் ஸ்தோத்திரித்தார்கள். சராசரங்கள்யாவுந் தானுயிருக்கப்பட்ட சுகயோகி பிரசண்டமாருத வேகமாய் வடமுகத்தைநாடிப் போகிறவேளையில், சகல சராசரங்களையும்பார்த்து, உங்களில் ஒருவன் நானென்றுரைத்து, வேதவியாசர் இந்தமார்க்கத்தில்வந்து சுகர் எங்கேயென்று கூப்பிடுவாராகில், நீங்கள் எல்லோரும் ஏன் ஏன் என்று கூறுங்கள் என்றியம்பி, சோதிமயமாய்ச் செல்லும்போது, ஒரு தடாகத்தில் வஸ்திரமில்லாமல் ஸ்நானஞ் செய்துகொண்டிருக்குந் தேவதாஸ்திரீகள் சுகரைப்பார்த்து வெட்கப்படாமல் இருந்தார்கள். சுகப்பிரமம் செல்லுகிற விசையினுல் பர்வதங்கள் விருக்ஷங்கள்யாவும் அசைந்து முறிந்து அகன்றன. இவரோ இமயத்திற்கப்பால் மகாமேருவைக்கடந்து வடபால் உத்தரதிசைக்குட் புகுந்து போய்விட்டார்.

இப்பால் வேதவியாசர் புத்திரனைக் குறித்துத் தேடிவரும்போது, தேவதைகள் இவரைக்கண்டு சுகர்போகும் வேகத்துக்கு நீர் அவரைப் பின்செல்லமாட்டீர், அவரைக்காண்பதும் உமக்கு அரிதாகும். நீர் பூமியைநாடித் திரும்புமென்ருர்கள். அதைக்கேளாமல் பிள்ளையைக்குறித்து காடுமலைகளெல்லாந்திரிந்து வேசாறி ஒருபருவதத்தடியில் தங்கினர். அவ்விடத்தில் நிர்வாணிகளாய் நீரில்விளையாடிக்கொண்டிருக்கும் ஸ்திரீகள் வியாசரைக்கண்டவுடன் வஸ்திரத்தை தரித்துக்கொண்டனர். இவர் அவர்களிடஞ்சென்று இதற்குமுன் இந்தவழியாய் ஒரு ரிஷிபோனதைப் பார்த்தீர்களாவென்றுகேட்க, ஆம் என்ருர்கள். அவர் போகையில் இப்படி வஸ்திரத்தால் மறைத்துக்கொண்டீர்களா இல்லையா என்றதற்கு, இல்லையென்றனர். என்பிள்ளை போனபோது லச்சைப்படாதிருந்த நீங்கள் என்

னைக்கண்டு லச்சைப்படவேண்டியதென்ன, இதைப் பகருங்கள் என அவர்கள் வியாசரைநோக்கி, முன்போனமுனி மாயையை சுத்தமாய்க்க டந்தவர், அதினல் எங்கும் அவராய் இருப்பவரென்று உணர்ந்து, நிர்வா ணிகளாய் ஸ்நானம்பண்ணினேம், எங்களுக்கு அவர்வரம்பு, அவருக்கு நாங்கள் புறம்பு, நீர் அவ்வாறல்ல, பிரபஞ்சமாயையில் முழுகிய பெரிய ஞானி. உம்மைப் பார்க்கையில் வெட்கம்வந்து வஸ்திரத்தை உடுத்திக் கொண்டோம் என்றார்கள். இம்மொழி கேட்ட வேதவியாசருக்குத் தெ ளிவுபிறந்தும் பிள்ளையை நினைத்துப் பெருமூச்செறிந்து பிரிவாற்றாமை யால் பெருங்குரலிட்டு, அப்பாமகனே! ஐயாசுகனேயென்று கூவினர். ஸ்தாவரஜங்கமம்யாவும் ஏன் என்று எதிர்மொழி கொடுத்தது. வியாசர் வெருண்டு நமது புத்திரனைக்கூவினல் பூமிமுதல் எல்லா மகாபூதங்களும் ஏன் என்று கேட்கிறது. இதையோசிக்கு மிடத்தில் யாவும் பரப்பிரமம் ஒன்றாய் நிற்கிறது, அதை நீ தெரிந்துக்கொள்ளாமல் தகப்பனென்றும் பிள்ளையென்றும் பாராட்டுகிறாய். ஆருக்குஆர்பிள்ளை, நீவேறு நான்வேறு என்பதென்ன, நாதப்பிரமம் ஒன்றேயென்று கண்டுக்கொள் என்கிற அறிவுமொழியாகிறதென்று தனக்குள்ளே தெளிந்தும், தெளியாமனத்த ராகி சிறுவனே சிறுவனேயென்று தியங்கியிருந்தார். ஆசாபாசமற்ற வே தவியாசரும் புத்திரபாசத்தால் வருந்தி யிருந்ததைப்பற்றி மும்மூர்த்திக ளும் பிரசன்னமானபோது, அவர்களைக்கண்டுவணங்கி வியாகுலித்து நின் றார். அவர்களில் சிவபெருமான் வியாசரைக்கடாட்சித்து, நீர் பூர்வத்தில் நம்மைக்குறித்து தவமியற்றிய காலத்தில் நாம்வந்துகேட்க, பஞ்சபூதங்க ளையும் செயிக்கத்தக்கபாலகன் வேண்டுமென்றீர். அதுபோல் அனுக்கிர கித்தோம், செனித்தபுத்திரன் பரமஞானத்தைப்பெற்று எவரும் பெறு தற்கரிய பேரைப்பெற்றான். நீர் அறிவீனரைப்போல் துன்புறுவதென்ன. வேதஞ்சுரக்கிற வாக்கினல் மெய்ஞ்ஞான சொரூபங்களையெல்லாம் விள ம்பிவிட்டு பிள்ளையைக்குறித்துப் புலம்புவதுஞாயமோ, இப்பிரபஞ்சத்தி ற்கு விலக்கமானஞானிகள் பிள்ளைப்பூச்சிபோல் இருக்கவேண்டியிருக்க, பரிபூர்ணக்கியானம்பெற்ற பாக்கியனைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று தேடிப்புறப்பட்டது உமக்கு முறைமையோ, அப்படிக்கு நீர்போனலும் அவர் உமக்கு அகப்படுவரோ! இந்த பூமியுள்ளவரையில் உன்பேரும் உன் பிள்ளைபேரும் நிலைநிற்கும்படி கீர்த்தியைத் தேடிக்கொண்ட மைந் தனை மறந்துவிடும், ஆனல் புத்திரவாஞ்சையினல் பிள்ளையைக் காணவே ண்டுமென்று எப்போதுநீஅபேக்ஷிக்கிறாயோ அப்போது உன்பிள்ளையின் சாயை உமதுகண்ணுக்குத் தோன்றும்படி வரங்கொடுத்தோம், நீர் பூவுல கஞ்செல்லுமென்றுபரமன்சொல்லிகயிலைக்கெழுந்தருளினர். பரமேசுவரன் அனுக்கிரகம்பெற்ற வியாசர் தம்முடைய பர்னசாலைக்குவந்து உலகத்தா ருக்கு உண்மை ஞானத்தைத் திறந்துவிடாமல், ஒரு பரியாயமாய்ப் பூட் டகப்படுத்தி, வேதம் நான்கையும் புராணங்களையும் மாத்திரம் தழுவி நட க்கும்படி போதித்து அவ்வாறு நடத்திக்கொண்டு வரும்போது, மெய்ஞ்

ஞானம் விருதாவாய்ப் போய்விடுகிறதென்று தாமே வியசனப்பட்டும், நாரதர் நம்முடைய பிள்ளைக்கு பூட்டகத்தைத் திறந்து காட்டிவிட்டார். அதினுல் நமது சுதன் சுகன் கற்பூர தீபம்போற்கலந்து பரிபூர்ணபாக்கிய னுைன். அதனுல் இனி இகத்தைத்தழுவியே நிற்கும்படியாகிய சாஸ்திரங் களை இதமாய் ஏற்படுத்திவைத்தனர் தருமராசனேயென்று பீஷ்மர் விள ம்பினர். மேலும் நாரதபகவான் பதரிகாசிரமத்திற்குப்போய் அங்கே பேசின சங்கதிகளைச் சொல்லுகிறேன் கேளுமென்று பகர்தலுற்றுர்.

பதரிகாசிரமக்கதை.

ஸ்ரீஜநார்த்தனர் மைத்துனனுகிய சதுரனே கேளும், நாரதபகவான் பூமண்டலமெல்லாம் திரிந்து பதரிகாசிரமத்தின் வழியாய்வந்து அங்கே வசிக்கும் நாராயணமூர்த்தியைக்கண்டு," அடிகளே தேகம் எடுத்ததற்குப் பயன் பரப்பிரமத்தை உள்ளும் புறமும் ஒத்திருக்க ஏகமாய்க்காண்பதே ஆன்மாவுக்கு உறுதியென்பதாய்ப் பெரியோர் செப்பியிருக்கின்றுர்கள். இந்த சூக்ஷத்தை அடியேனுக்கு அருள்செய்யக் கோருகிறேன் என்று வி னவ, நாராயணர் செப்புகின்றுர். நாரதரே! இப்போது நீர் இசைத்தசொ ல்லே உள்ளும் புறம்பும் பார்ப்பதே உண்மைஞானம், உள்ளே எந்த ஆன ந்தத்தைக்கண்டானே அந்த ஆனந்தமாகவே வெளியிலுங் காணவேண் டும், இஃதன்றியும் மகாமேருவுக்கு வடபாரிசத்தில் போகிறபேருக்கெல் லாம் சுத்தமுக்தியென்று சுருதியில் கூறியிருக்கின்றது. அங்குள்ள ரிஷி கள்யாவரும் வெள்ளைமேனியா யிருப்பார்கள், அப்படிக்கு அளவிறந்த பேர்கள் இருக்கிறுர்கள். அவர்களெல்லாம் மகாவிஷ்ணுவை சதாகாலம் நினைத்து சந்திசெப மந்திரமும் அவரேயாகக்கொண்டு சலனமில்லாதிரு ப்பவர்கள். நீரும்போனுல் காணலாமென்று நாராயணர்சொல்ல, நாரதர் அதுபோல் மேருவின் உத்தரபாகத்திற்சென்று, நாராயணர் நவின்றகாட் சிகளையெல்லாம் கண்டு, பூலோகத்துக்குவந்து சகலருக்கும் விளம்பினுர். வசுவென்னும் ராசன் அந்தப் பிரகாச வெளிச்சத்தைக்கண்டு மோக்ஷம டைந்தான். அத்திரிமகாரிஷியும் அந்த வெளிச்சத்தைப்பார்த்து உள்ளந் திருந்தினுர். பிரமாவினுலும் காணுதற்கரிய விஷ்ணுவின் திருமேனிப் பொலிவை யாவராற் காணக்கூடும், கண்டாற்பதவி கைகூடிற்று, அமல மாயிருக்கப்பட்ட சுவேதவனத்து ரிஷிகளேயல்லாமல் மற்றொருவராலுங் காணக்கூடாதென்று பீஷ்மர் விளம்பினுர். சகலசன சமூகங்களுக்கும் பொருந்தும்படியாய் சமமான தருமம் ஒன்று சொல்லவேண்டும், அந்த தருமத்துக்கு ஒன்றும் நிகரில்லாமலிருக்கவேண்டும், என்றென்றைக்கும் நிலைபானகாரியங் கொடுப்பதாயிருக்கவேண்டும், அதை அனுஷ்டிக்கிற தற்கு அது சுளுவாயிருக்கவேண்டும், அப்பேர்ப்பட்ட தருமம் ஒன்றை ஆராய்ந்தெடுத்துச்சொல்லும் ஐயாவென்று தருமராசன் கேட்க விரதசீல வீட்டுமர் வியந்து சொல்லுகின்றுர். முன்பு ஒருக்கால் நாரதர் தேவேந்

திரனிடம்போய் சல்லாபித்துக்கொண்டிருக்கும்போது, இந்திரன் நாரதரைப்பார்த்து, பூமியில் ஏதாகிலும் அற்புதங்கள் உண்டானல் சொல்லுமென்று தூண்டினன். உலகத்தில் கங்கைக்கருகாமையாகிய பதுமநகரமென்கிற பட்டணத்தில் வசிக்கின்ற பிராமணன் ஒருவன் சகலகோடிபிராணிகளையும தன்னுயிர்போல் பார்க்கப்பட்ட தயாளு, இப்பேர்ப்பட்ட மகான் தர்மசாஸ்திரங்களையும் நீதிசாஸ்திரங்களையும் படித்துத்தெளிந்து பரமரகசியத்தையறிய மேலோராகிய அநேகரைக்கேட்டும், ஒருவராலும் தெரிந்துகொள்ளக்கூடாமல் கிரகஸ்த ஆசிரமத்தில் இருந்துவந்தான். ஒருநாள் ஒரு ரிஷீஸ்வரர் வந்தவரைக்கண்டு உபசரித்து, தருமங்களில் மேலான தருமம்யாது அதைத்தெரிவிக்கவேண்டுமென்று சிந்தித்தார். நூல்களில் பலவாருகப் பேசியிருக்கின்றது, உலகத்தில் சிறிதுபேர் சத்தியமென்றும் சிலர் தயாரசம் என்றும் சிலர் கொல்லாமை யென்றும் சிலர் விருந்தினரென்றும் சிலர் உபசாரமென்றும் பலர் வேதவிதியாகிய ஆசிரமங்களிற் செப்பியிருக்கப்பட்ட தர்மங்கள் என்றும், உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உள்ளும்புறம்பும் ஒத்திருக்கின்ற உண்மைப்பொருள் என்றும் பேசுவார்கள். அவைகளில் இன்னது மேலாகிய தருமமென்று விளம்புதற்கு நான் பாத்திரன் அல்ல, ஆனல் நைமிசாரண்ணியத்தின் பக்கத்தில் கோமதியென்னும் தீர்த்தக்கரைக்கு அடுத்த பதுமதடாகமென்னும் நகரத்தில் பதுமன் என்னும்பேர்பூண்ட சர்ப்பராசன் நீதிதவருமல் அரசுசெலுத்தி வருகிருன். அவன் பெருமையை ஒருவராலும் அளவிட்டுச் சொல்லப்படாது, அவர் ரூபம் சர்ப்பமென்று நினையாமல் அவரிடத்தில் போய் உன் சந்தேகத்தை நிவர்த்திபண்ணிக்கொள்ளென்ருர். பிருகுவென்கிற பிராமணனுக்கு அன்புமேலிட்டுப் பதுமன் என்னும் பாக்கியவானைப்பார்க்க அவன் அரண்மனைக்குப்போனன். அவர் வெளியே போயிருந்தமையால் அந்த நாகராசன் பெண்சாதி இவருக்கு சகல மரியாதைகளையும்செய்து, தேவரீர் வந்தகாரியத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று நமஸ்காரஞ் செய்தாள். இந்தப் புண்ணிய குணவதிசெய்த உபசாரத்தினல் இவள் புருஷன் இந்நிலையுடையவனென்றும் இவர்களின் இல்லறதருமம் நல்லறமாமென்றும் நிதானித்து, அம்மணீ சில சந்தேகங்களை உன்நாயகனல் அறிந்துகொள்ளத் தேடிவந்தேனென்ருர். அதுகேட்ட அந்த அம்மை, ஐயரே என் கணவர் சூரியபகவானிடத்திற்குப் போயிருக்கிருர்; அவர்வர எட்டு நாள் செல்லுமென்ருள். அந்த பிராமணன், அவர்வரும் வழியிற்போய் எதிர்பார்த்துக்கொண்டு அவரைக் காணுகிறபரியந்தம் உபவாசமாயிருந்தான். அதை அறிந்த அந்த உத்தமி அந்த பிராமணனிடம் வந்துபணிந்து எங்கள் இடத்தை நாடிவருகிறவர்களுக்கு சோடச உபசாரமுஞ்செய்து அன்னம் அளிக்கும்படி என்புருஷன் ஆக்கியாபித்திருக்கிருர். நீர் உபவாசமாயிருக்கப்போகாது, என் நாயகன் உத்தரவுப்படி நான் உம்மையுபசரிக்காவிட்டால், எங்களுக்கு நரகங்கிடைக்கும், நான் அன்னம் கொண்டு வருகிறேன் புசிக்கவேண்டுமென்று வேண்டினள். அம்மணீ! உன்புரு

ஷனே காணும்பரியந்தம் புசிப்பதில்லையென்று சங்கல்பம் பண்ணிக்கொண்டேன், அந்த விரதங்கெட உன்வார்த்தைக்கு உடன்படேன். இதனல் உங்களுக்கு ஒருபங்கமும் இல்லை, நீபோ என்று சொல்லிவிட்டான்.

சூரியனிடம் போயிருந்த ராஜன் வீட்டிற்கு வந்தபோது அவர் பத்தினி பிராமணன் வந்து காத்திருப்பதை அறிவித்தாள். உடனே அவரிடம்போய்ப் பணிந்து, நாயேனை நாடிவந்த காரியத்தை விளம்பினல் தக்ஷணம் சாக்கிரதை பண்ணுகிறேன் என்றூர். பிருகுமகாரிஷி நாகராசனைப் பார்த்து, நான்வந்த காரியத்தைப் பிற்பாடு பேசுகிறேன், நீர் சூரியமண்டலத்தில் பார்த்துவந்த விநோதங்களை நீர்கண்டபடியே சொல்லவேண்டுமென்று கேட்க நாகராசன் சொல்லுகின்றூர். வேதியரே கேளும்! சூரியமண்டலத்தில் சர்வகேளிவிலாசமாய் உஷாதேவி, பிரதியுஷாதேவி, சாயாதேவிகளுடன் சோதிமணிமயமாய் சூரியபகவான் கொலுவில் இருந்தார்கள். அவ்விடத்தில் ஒருமகாபுருஷன் எதிரில் வந்துநின்றூர். அவரை எல்லாத்தேவரும் புகழ்ந்து கொண்டாடினர்கள். அந்த மகாபுருஷன் சூரியசோதியில் கலந்துபோனர். நான் ஆயிரங்கிரணனைப்பார்த்து உமது சோதியில் ஐக்கியமான அந்த உத்தமர் யாரென்று வினவ, என்னில் கலந்த தேவதைகளில் ஒருத்தர் மிகவும் நல்லவர் பூமியில் இவர்பிராமணன், இவர் செய்துவந்த தருமங்கள் யாவையும் காமிய அபேட்சையில்லாமல் நிராசையாய் செய்துவந்த உத்தமர். உடல் நீங்கியபின் சூக்குமதேகத்தில் பிரவேசித்து என்னுடன்கலந்துபோனர். இதுதான் இடரில்லாதமுத்தி ஆசாபாசத்தில் அகப்பட்டுக் கெட்டலையாமல் அவாவற்றிருக்கிறவன் எவனே அவனே பிறவிவேதனையைக் கடந்தவன். அவனே முக்தாத்துமா, பலனை இச்சித்துச்செய்கின்ற தருமமெல்லாம் பிறவிக்கேதுவாகும், அவை இருக்கிறவரைக்கும் ஜனனமரணம் நீங்காது என்று சூரியன் நேற்றையதினம் எனக்குச் சொன்னர். இதுதான் சூரியமண்டலத்தில் நடந்த அதிசயம் என்றூர். இதைக்கேட்ட பிருகுமகாரிஷி நாம் நினைத்துவந்த கருத்து சங்கையற்று தற்செயலாய் வெளியாயிற்றென்று நாகராசனையுபசரித்து நான் வெகுநாளாய் முடிவானதர்மம் அறியவேண்டுமென்று அநேகம் பெரியோர்களை உசாவினேன். ஒருவருஞ் சொல்லமாட்டாமல் போனர்கள். இன்று உம்மால்தெரிந்து என்சங்கை தீர்ந்ததென்று அவரிடம் செல்வுபெற்று சவுனகமகாரிஷியின் ஆசிரமத்துக்குப்போய் நீர் குறித்துக்காட்டிய நாகராசனிடத்தில் என் சந்தேகத்தை நிவர்த்தித்துக்கொண்டேன் என்று தெரியப்படுத்தி அங்கிருந்து அகன்றதாக பீஷ்மர்சொல்ல, யுதிஷ்டிரர் அவரைவணங்கி, நாங்கள் பூமியில் அவதரித்த அன்றுதொட்டு இன்றுவரையிலும் பாதுகார்த்துவரும் ஸ்ரீபார்த்தசாரதியாகிய பக்தவத்சலன் தங்களுடைய இருதயத்திலிருந்து போதிக்கும் நீதியைவிட வேறு சிலாக்கியம் எங்களுக்கு உண்டோ, ஐயனே! தேவரீர் இவ்வளவுநேரம் இடைவிடாமல் எங்களுக்கு நீதிவசனங்களைச் சொல்லிவருகிறதினல் அதிக சிரமமாயிருக்குமென்று அவரிடம் விடைபெற்று, ஸ்ரீஜனார்த்தனருடன் அஸ்தினபுரம்வந்து சேர்ந்தார்களென்று வைசம்பாயனர் உரைக்க, மறுநாள் நடந்த சரித்திரத்தை திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்ட ஜநமேஜய மகாராஜனுக்கு வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

சாந்திபர்வம் - முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணா சகாயம்.

ஸ்ரீமகாபாரதம்.

பதின்மூன்ருவது

அநுசாசநிகபர்வம்.

விருத்தம்.

முந்திய பிறப்பிற்செய்த நல்வினை முடிந்ததேயோ
பிந்திய பிறப்பின்முன்னேர் பெருந்தவம் பலித்ததேயோ
சந்திர வதனத்தென்ருப் தாமரைச் செல்விமேவும்
சுந்தர வகலத்தானைத் துதிக்கநா வசைந்தவாறே.

கேளும் ஜநமேஜயமகாராசனே! மறுநாள் வருகிறேமென்று விடைபெற்றுப்போன பாண்டவர்கள் உதயத்தில் எழுந்து நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணருடன் வர பீஷ்மர் தருமராசனை நோக்கி, நான் உனக்கு தருமங்களையெல்லாம் உபதேசித்தேன் அல்லவா, இன்னமும் உன் உள்ளத்தில் சந்தேகமுண்டாயிருந்தால் சொல்லலாமென்று கேட்டார். தேவரீரிடத்திலும் மற்றப்பெரியோரிடத்திலும் இதற்கு முன்னும் பின்னுங்கேட்ட நீதிகளையெல்லாம் மறந்து, அண்ணன் தம்பிமுதலாகிய பேர்களை நேசித்துத் தவம்புரியாமல், அவர்களைப் போரில்கொன்றுதொலைத்து, பிணந்தின்னும் பூச்சிபோல் ஆளுகைசெய்ய ஏற்பட்டு வீண்பழிக்காளானேன் இதைப்பார்க்கிலும் இரந்துண்பது உத்தமமல்லவா, அப்படிசெய்யாமல் உங்கள்போதனைக்கு உட்பட்டுப் பெரும்பாவத்தைத் தேடிக்கொண்டேன். அது என்மனச்சாட்சியை வதைத்துக்கொண்டிருக்கிறது, அதை நிவிர்த்திக்கும்பொருட்டு நீதிவாக்கியங்களைப் புகல்வீரென்று அறன்மகன்கேட்க, பாட்டனாராகிய பீஷ்மர்கூறுகின்றார், தருமபுத்திரா! என்ன ஆச்சரியமான வார்த்தையைச் சொல்லவந்தாய், நீயோ புத்திமான், உன்தம்பிகளோ சுத்தவீரர்கள், உங்கள்நேசராகிய கிருஷ்ணபகவானே துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ்செய்ய அவதரித்தவர். இவைகளை நீ சற்றும் விசாரித்தறிந்ததில்லைபோலும், வீண்கலவரப்பட்டுக் கலங்குகிருய். காலதேசவர்த்தமானங்களை முதன்மையாய் ஆராயவேண்டும். நான் நீ அவன் என்னல் உன்னல் அவனல் என்று தன்னையும் பிறரையும்குறித்துசுகதுக்கங்களில் அழுந்தக்கூடாது. எவரெவர்களுடைய வினைக்கீடாய் எந்தெந்தக்காலத்தில் எவரெவரைக்கொண்டு என்னென்ன முயற்சியினலோ இன்பதுன்பங்களைக் கொடுத்தல் தடுத்தல் முதலிய காரியங்களை எல்லாம் வல்ல கடவுள் எப்போதும் இருந்தே செய்விக்கிருர். இந்

தப்பரமரகசியத்தை நீ இதுவரையிலும் யோசித்து திடப்படாமல் அறியாமையாகிய சந்தேகதிசையில்தானே இருக்கின்றாய்; யதார்த்தத்தை யோசிக்குமிடத்தில் உனக்கு யாதொருபாவமும் இல்லை, எப்படியெனில், இதற்குமுன் நடந்த ஒரு கதை சொல்லுகிறேன் ஞாபகமாய்க்கேள்.

கிராதபுஜங்கசம்வாதம்.

நல்ல வாழ்க்கைத்துணையுடன் இருந்த ஒரு பிராமணனுக்கு ஒருகுழந்தை பிறந்து, அந்தப்பிள்ளை விஷப்பரிசத்தினால் மாண்டது. தாய் துக்கித்துக்கொண்டிருக்கும்போது பொருச்சுனன் என்னும் வேடனொருவன் பிள்ளையைக்கடித்த அந்தப்பாம்பை பிடித்துக்கொண்டுவந்து பிள்ளையின் தாயிடத்தில் காண்பித்து, இந்தப்பாம்பை நான் கொல்லப்போகிறேன் என்றான். அந்த அம்மை பச்சாத்தாபப்பட்டு பாம்பைக்கொல்ல வேண்டாமென்று தடுத்தாள். தனக்கு இமிசைசெய்தவனைக் கொல்வதினால் பாவம் இல்லை. இதைக்கொல்லவேண்டும், நீ வீண் பச்சாதாபப்படுகிறாய், யாவனொருவன் தான் செயம்பெறவேண்டுமென்று நினைக்கிறானோ, அவன் சத்துருவைக்கொல்லுவது தருமமே, தேவேந்திரன் தான் செயம் பெறுவதற்கு விருத்திராசுரனை முடித்தான். மகேசுவரன் தன்னைப்பகைத்த தக்கனைக்கொன்றார்.' பகைவரைக்கொல்வதே உறுதி. அதனளவில் தாங்கிப் பார்க்கலாகாது, துஷ்ட நிக்கிரகம் பண்ணுவிட்டால் அக்கிரமம் மேலிட்டுப்போம்,'அம்மணியென்று கிராதன் சொல்ல, அந்த அம்மாள் அதைக்கேட்டும் பாம்பைக் கொல்லவேண்டாம், கொல்லாவிரதமே விரதம், புலைபுங்கொலையுங் களவுந் தவிர்ப்பதே புண்ணியம். இந்தப்பாம்பை விட்டுவிடென்று வாதாடிக்கொண்டிருக்கும்போது அந்தவேடன் கையில் அகப்பட்ட பாம்பானது எல்லாந் தெரிந்த வேடனே! நீ என்னைக்கொல்லுகிறேன் என்று எந்தமுறைமையிற் சொல்கிறாய், நான் உன்னை உபத்திரவித்தேனா, மிருத்யுதேவதை விதிப்படி இந்தப்பிள்ளையைநான்கடித்தேன். அப்படிக்கில்லாமல் என் சுயபுத்தியால் தீண்டியிருப்பேனாகில், நீ என்னைக் கொல்லவேண்டியது நீதியே! செய்தவனொருவனிருக்க பழியையும் பிராணன் போனவழியையும் நான் சுமக்கலானேன். என்னை நீ வருத்த நினைப்பது ஞாயமா? என்று பாம்பு கேட்க, நீ சொல்லுகிற மிருத்யுதேவதையை யார் பார்த்தது, பாம்புகடித்து இறந்தானென்றபழி உன்பேரிற் சுமந்திருக்க, நீசாக்கும்போக்கும் பேசுகிறாய், படுபாவீ! உன்னைக்கொல்வதே வழியென்று பகர்ந்தான். இருவருமிப்படி வாதாடிக்கொண்டிருக்கும்போது,மிருத்யுதேவதைபிரசன்னமாகிகாலன் உத்தாரப்படி காரியம் முடித்தவன் நான், அவன் வைத்தகுறி தப்பாது, நீங்கள் எங்களை நிந்திப்பது சரியல்ல இந்தப் பாம்பைக்கொல்வதில் பலனுமில்லை. அறிவீனர்களைப்போல் பேசுகிறாய், வேடா பெரியகாட்டுக்குரிய ராஜாவாயிருக்கிற நீ விவகாரந்தப்பி ஒருவேலைசெய்யலாமா என்று மிருத்யுதேவதை விளம்

பிற்று. அதைக்கேட்டவேடன், எய்தவனிருக்க அம்பைநோவதெப்படி யென்றமொழி குற்றமில்லை, ஒருவன்மேல் எய்தவன் எதிரில்நிற்கிறபோது அவன் விட்ட பாணங்களை முன்னதாக அறுத்துவிட்டு,அப்பால் எய்தவன் பேரில் தாக்கிறார்கள். அதை நிதானிக்குமிடத்தில் அம்பைப்போன்ற உன்னைக்கொன்றுவிட்டு அப்பால்காலனை முடிப்பது தகுதியல்லவா, பிரத்தியட்சத்தில் இந்தப்பாம்பைக்குறித்துப் பேசவேண்டியதேயல்லாது, மற்றதைப் பேசவேண்டிய விவகாரம் என்னவென்று வேடன் வார்த்தையாடிக்கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் காலனானவன் வேடன் முன்னே பிரசன்னமாகி, இந்தப்பாம்பைப் பிடித்துக்கொல்லலாமா, ஊழ்வினையின்படி நடப்பதைப் பெரியோர், தாம் தாம் செய்த வினையென்று சாற்றுகிறார்களே யல்லாமல் வேறில்லையே. நல்வினை தீவினைப்படி நடத்திவைக்கிறது எங்கள் வேலையென்றான். அப்போது அந்த பிராமணஸ்திரீ நீங்கள் வீண்வாது பேசுவதினால் காரியம் என்ன, வினையைக்கடக்க வல்லவர்கள் ஒருவருமில்லை, இறந்துபோன என்பிள்ளையை புதைத்துப்போட்டு நான் தலைமுழுகவேணும், அப்பா! வேடா பாம்பை விட்டுவிடு உனக்குப் புண்ணியமென்றாள். வேடன் பாம்பை விட்டுவிட்டான். இது முற்காலத்தில் நடந்தகதை. ஒருவரை ஒருவர் கொல்லக்கூடாது, ஒருவனால் ஒருவன் இறந்தானென்று சொல்லப்படாது, எல்லாம் வினையின் செயலேயென்று விசிதமாய் அறிந்துக்கொள்ளும்; தருமராசனே! நீங்கள் கொன்றதாகவும் உங்களால் அவர்கள் இறந்ததாகவும் இன்னமும் உங்களுக்கு பிரமையேன்! ஆயுள் முடிவுவராமல் மசகமும் இறந்திடாது! இதனால் உனக்கு ஒருபாவமும் இல்லையென்று பீஷ்மர் உரைக்க, தருமர் சங்கடம் நீங்கிப் பின்னும் ஒன்று கேட்கின்றார். வல்லவரே! இல்லறதருமத்துடன் இருக்கிறபேர்கள் காலனைவென்றதுண்டா, அப்படி யுண்டானால் அருள்புரியுமென, பீஷ்மர் விளம்புகின்றார்.

காலனை வென்றகதை.

என் அன்பிற்குரிய பேரனே! சுயோதனராசன் என்பவனுடைய நற்செய்கைக்காக நருமதை நதியானது ஸ்திரீரூபமாய் அவனுடன் இல்வாழ்க்கையில் இருந்து அழகிய பெண்ணைப்பெற்றாள். அந்தப்பெண்ணின் மங்கைப்பருவத்தில் அக்கினிபகவானைப் பூசித்துவரும்படி தாய் தந்தையர் கட்டளையிட்டார்கள். அவள் அக்கினிபகவானை ஆராதித்துவரும்போது அவர் இவள்மீது காதல்கொண்டார். மாதா பிதா உத்தரவன்னியில் கலியாணஞ் செய்யக்கூடாதென்று மறுத்ததற்கு அக்கினிபகவான் ஒரு பிராமணவடிவத்துடன் அவள் தகப்பனிடம்வந்து கலியாணத்திற்கு உத்தரவு கேட்க, அவர் மறுவுத்தரங்கொடாமல் மவுனமாய் இருந்தார். அதுமுதல் அக்கினிபகவான் வேள்விகளில் சொலிக்காமல் இருந்ததைப்பற்றி வேதியர்கள் விசாரப்பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில் அக்கினிபகவான்

பிரசன்னமாகி, சுதரிசனையை எனக்குக் கலியாணம் பண்ணிக்கொடுத்தால்தான் உலகத்தில் சொலிப்பேன் என்றார். அதுபோல் பாணிக்கிரகணஞ்செய்து கொடுத்தார்கள். அவள் வயிற்றில் சுதரிசனன் என்கிற பிள்ளையிருந்தான். அவனுடைய பருவகாலத்தில் போகவதியென்னும் ரிஷியின்மகளைமணந்து இல்வாழ்க்கையில் தருமத்தாழ்வும் கருமத்தாழ்வுமில்லாமல், தவம் மேலிட்டு வாழு நாளில், காலனைவெல்ல எண்ணங்கொண்டு பெரியோரிடத்தில் உபதேசம்பெற்று, குருக்ஷேத்திரத்தில் பர்னசாலையேற்படுத்தி மனைவியுடன் தவமிருக்குங்காலத்தில், அந்த சுதரிசனன்என்பவர் தன் ஆசிரமத்திற்கு வரப்பட்ட அதிதிகளுக்கு குறைவில்லாமல் அவாள் இஷ்டப்படி நடத்திவாவென்று இல்லாளுக்குக் கட்டளையிட்டிருந்தான். ஒருநாள் சுதரிசனன் சமுத்துக்காக வெளியிற்போயிருந்தான். அப்போது ஒருபிராமணன் அங்கே வந்தான். அந்தப் பதிவிரதையானவள் அவனை அதிதியாகப்பாவித்து அனேக உபசாரங்களைச்செய்து, வேண்டியதைக் கட்டளையிடுமென்றுவினவ, அந்தப்பிராமணன் உன்மீது காதல் கொண்டேன் என்றான். ஐயா அக்காதலினால் உமது விற்பனமெல்லாம் வீணாய்ப்போம், என்னைப்பற்றி பிரமிக்கவேண்டாம். வேறு பதார்த்தங் கேட்டால் தருகிறேன் என்றாள். பிராமணன் நகைத்து, வேறு பதார்த்தங்களை நான் நீண்டேன், நீ என்னைக் கூடவேண்டும், இல்லாவிட்டால் பிராணன் போகும்போல் இருக்கிறது, இந்தப்பழி உன்னைச்சாரும் என்றான். அதைக்கேட்ட அந்த உத்தமி நமதுநாயகன் அதிதி எதைக்கேட்டாலும் கொடுப்பதே தருமம் என்று மொழிந்து, தானும் இல்லையென்னாமல் எதையுங் கொடுத்துவருகிறாரே, நமதுபுருஷன் கட்டளைப்படி நடக்கிறதே தருமம், அதிதிகளின் மனதுக்குத் திருப்திசெய்கிறதே இல்லறவாழ்க்கையின் இயல்பு. இதைத்தடுத்தால் நமக்குப்பாவம் நேரிடும் என்று ஆலோசித்து அந்தப்பிராமணன் கேட்டபடி யுட்பட்டு ஒரு அறையில் இருவரும் போயிருந்தார்கள்.

அந்தவேளையில் வெளியில்போயிருந்த அவள்புருஷன் திரும்பிவந்து தன் பெண்சாதியைக்காணாமல் கூப்பிட்டான். சத்தங்கேட்ட அந்த அம்மாள் அதிதிமுகத்தைப்பார்த்தாள். நீகடத்தேறுவாய் ஒன்றும்பேசாதே பேசினால் சபிப்பேன் என்றான். அவள் மவுனமாயிருந்தனள். புருஷன் வந்து அறைக்குள் நுழைந்துபார்த்தான். அதிதிபிராமணன், ஒய் வேதியனே மதிமருளாதே, கவலைப்படாதே, மயக்கமுறாதே, உன்மனைவி அதிதிபூசை பண்ணுகிறாள் என்றான். கேட்டபுருஷன் இந்தவார்த்தைக்குச்சந்தோஷங்கொண்டு, ஜென்மசாபல்லியமானேன், அதிதியா யெழுந்தருளிய ஆதியும் அவரே, அறிவும் அவரே, மூர்த்திசொருபமும் அவரே, எனக்கு முன்பிறந்தவரும் அவரே, விவேகமும் அவரே, யாவும் அவரேயென்று ஸ்தோத்திரித்து நான் சொன்னவண்ணம் என்பெண்சாதி அதிதிபூசை பண்ணுகிறாள், மெத்தவுஞ் சந்தோஷம் என்று வெளி வாசலில்போய் நின்றுக்கொண்டான். அப்போது அசரீரிதேவதை அதிதியே இந்தமகாதுபா

வர் சொன்ன வாக்கியம் யாவுஞ் சத்தியமே, அகம் புறம் இரண்டும் ஒத்தவனுக்குக் குற்றமில்லையென்றாள். அதிதியாய் வந்தவன் வேஷமாறி யமதர்மனாகப் பிரத்தியக்ஷமானான். அவரை சுதரிசனன்பணிந்து ஸ்தோத்திரித்தான். தருமதேவதை சதிபுருஷாள் இருவரைப்பார்த்து உங்களைப்போல் ஒருவரையும் கண்டிலேன், உத்தமகுணத்தோரே உங்களுக்கு வேண்டியவரங்களைத் தருகிறேன் என்ன, அடியேனுக்கு யமதண்டனையும் யமவாதனையும் இல்லாதிருக்க வரமருளுமென்றான். நீர் எத்தனைகாலம் இவ்வுலகில் இருக்க இச்சையோ அத்தனைகாலமும் அன்போடிருந்து அதிதிபூசைபுரிந்து பிரபஞ்சத்து ஆசை வெறுத்தபோது, தேவலோகத்திற் போயிருந்து போகபாக்கியங்களை அனுபவிக்கும்படி வரங்கொடுத்தேன். இன்றுமுதல் உங்களுக்கு யமபாதை இல்லையென்று போகவதியைப்பார்த்து, உன்னுடைய தயாள நிதானத்துக்கு மெச்சினேன். இன்றுமுதல் போகவதியென்னும் பேருடன் வேகவதியென்னும் புண்ணியநதியாகி எந்நாளும் வற்றாமல் உன் புருஷனுக்குமாத்திரம் ஸ்திரீயாய்க் காணப்பட்டு மற்றவர்களுக்குச் சகலபாவங்களையும் போக்கடிக்கிற தீர்த்தமாய் வாழக்கடவையென்று வரங்கொடுத்தருளினர். அந்த தருமதேவதை கொடுத்த வரத்தின்படி யமனைசெயித்து இன்பமாகவாழ்ந்திருந்தனர். தருமநந்தனா! இல்லறத்திற்கு ஏற்படுத்திய நெறிமுறை நீதிவழிகளின்படி நடந்தால் காலனைவெல்லலாம், கதியும்பெறலாம் என்று பீஷ்மர் சொல்லினர்: சமஸ்தமானபேருங்கேட்டு அவரைச் சரணஞ்செய்தார்கள்.

கிராதபுஜங்க சம்வாதம் முற்றிற்று.

இந்திரபுஜங்கசம்வாதம்.

க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பிராமணனாகக்
கூடுமா என்ற பிரசினைக்கு

தவசிரேஷ்டனாகிய ஒரு பிராமணனுடைய பிள்ளை சமுத்துகொண்டு வரக் -காட்டுக்குப்போனபோது அம்மார்க்கத்தில் மேய்ந்துநின்ற கோவேறு கழுதைக்குட்டியை அடித்துத்துரத்தினான். அது தன் தாயினிடம் போய் முறையிட்டது. தாயாகிய கோவேறுகழுதை இவன் சண்டாளனானதலால் காரணமின்றி உன்னையடித்தான், அவன்கெட்டான், பிராமணனால் இப்படிசெய்யானென்று பிள்ளைக்குத் தேறுதல் சொல்லிற்று. இதுகேட்ட அந்தப் பிராமணப் பிள்ளையானவன் தாய்க் கழுதையண்டைபோய், என்னைப் புலையன் என்றுகூறிய புதுமையை நான் அறியவேண்டுமென்று கேட்டான். இவனுக்கு பூர்வ புண்ணியவசத்தினால் மிருகபாஷை தெரிந்திருக்கிறதென்று கழுதை நினைத்தி, அவனைப்பார்த்து உன் தாயானவள் காமவிகாரத்தினால் சூத்திரனைப் புணர்ந்தாள். அவனுக்கு நீ பிறந்

தமையால் சண்டாளத்துவம் உனக்கு வந்ததென்று கழுதைசொல்லிற்று. பிராமணப் பிள்ளையானவன் தன்தந்தைக்குத் தெரிவித்து விசனப்பட்டான். இஃது உன்தாயார் குற்றம் நீவருந்தாதே என்று தேற்றினர் திருப்திப்படாமல் தந்தையிடம் விடைபெற்றுக் காட்டுக்குப்போய், இந்திரனைக்குறித்து நூறுண்டு தவம்புரிந்தான். இந்திரன் பிரசன்னமாக பழிப்பில்லாத உயர்ந்த பிராமணனுக வேண்டுமென்று வரங்கேட்க இவ்வுலகத்தில் யாருங்கோராத வரத்தைக்கேட்டாய், இதுபோக வேறேகேள் என்றார். இதுதவிர வேறுவரம் வேண்டாமென்று மறுத்தான். அதற்கு தேவேந்திரன் யாதுஞ்சொல்லாமல் மறைந்துபோனன். அந்த வேதியப் பிள்ளையானவன் மறுபடியும் பிடிவாதமாய் ஆகாரமின்றி நூறுவருஷம் தவத்திலிருந்தான். அதினல் களைத்து பூமியில் சாய்ந்தபோது தேவேந்திரன் இரக்கப்பட்டு, வனுக்கு பிரசன்னமாகி, நீ பிராமணனுகவேண்டுமென்று பிடிவாதஞ்செய்கிருய், எவனெவன் வினைவசத்தால் எந்த செனனம் எடுக்கிருனே, அந்த செனனத்தில் அவன் எத்தனை தபசுபண்ணினுலும் அந்த தவமெல்லாம் ஆத்துமாவுக்குள் மறைந்திருந்து மறுபிறப்பு வந்தபோது முன்னியற்றிய தவப்பலனை அடையச்செய்யும். ராஜா முதல் மூன்று வருணத்தாரும் பிராமணனுகப் போகிறதில்லை. கிட்டாத காரியத்தை நீவிரும்புகிருய்,பிராமணப்பிறப்பு இலேசானதல்ல, அதைப்பற்றிய வரன்முறை சொல்லுகிறேன் கேள்.

சண்டாளன் நூறுசெனனமெடுத்து செனனந்தோறும் அந்தக் குலத்தொழிலே செய்து வேறே பிரவேசிக்காமல், சத்தியநெறியாக நித்திய விரதத்தில் சாக்கிரதையுடன் இருந்தால்,நாலாவதாகிய சூத்திரயோனியிற் பிறப்பான். சூத்திரன் தருமம் தவருமல் கிரமமாக நூறுசெனனம் விரதம் நோன்பு இழைத்தால் மூன்ருஞ்சாதியாகிய வைசியனுவான். வைசியன் தருமந்தவருமல் பொய்யுரையாமல் தேவதாபூசை முதலிய சத்கருமங்களைச்செய்து ஆயிரஞ்செனனம் அருந்தவம் இருப்பானுகில் க்ஷத்திரியனுவான். க்ஷத்திரியன் நெறிபிறழாமல் நீதிவழுவாமல் மன்னுயிரைத் தன்னுயிராய்மதித்து ஆயிரம் பிறப்புப்பிறந்து பிறவிதோறும் அகந்தையை அடக்கி எக்கியங்கள் ஓமங்களை இயற்றி நல்வினையைக்கூட்டிச் சேர்த்துக்குவிப்பானுகில் அவனுக்கு பிராமணசெனனம் கிடைக்கும். பிராமணன் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி ஏகாக்கிர சித்தனுய் ஆசை நீங்கி யாகாதிகள் செய்து வேதப்பொருளையறிந்து, நின்மலசித்தனுக பதினுயிரஞ் செனனமெடுத்தால், ஒரு மகாரிஷியாவான். இப்படியாக பிரம்மசிருஷ்டியில் வரப்பட்ட பெரியசெனனத்தை இந்தப் பிறப்பிலேயே கிடைக்க வேண்டுமென்று எத்தனைகாலந் தவஞ்செய்தாலும் கிடைக்குமோ, இப்போது நான்சொன்ன வரிசைப்படி தவறில்லாமல் நடந்தால் பிராமண ஜெனனமுண்டாகும். அந்தப்பிராமணன் விதிதப்பி நடந்தால் பழையகெதியில் கொண்டுபோய்விடும். நீ இப்போது ஆசையை ஒழி. உன்னை அநேகம் ஸ்திரிகள் பூசிக்கத்தக்கதாய் ஆயுசுகொடுக்கிறேன், சண்டதேவதை

யென்று பேர்பெற்று வாழக்கடவாயென்று ஆசீர்வதித்து இந்திரன் அப்பிரத்தியக்ஷமாயினன். ஆதலால் தருமநந்தனு! மூன்றுவர்ணத்தாரும் என்னபாடுபட்டாலும் பிராமணராகமாட்டார்கள் என்று பீஷ்மர் கூறினர்.

விஸ்வாமித்திரர் பிரம்மரிஷியான காரணம்.

இரண்டு சகோதரிகளில் ஒருத்தி ஒருரிஷியையும் மற்றொருத்தி ஒரு க்ஷத்திரியனையும் விவாகஞ்செய்துகொண்டனர். அவர்கள் இருவரும் புத்திரபாக்கியத்திர்க்காக அந்த ரிஷியைப் பிரார்த்தித்தார்கள். அந்த ரிஷியானவர் நீங்கள் இருவரும் ருதுஸ்நானமான நான்காம்நாள் ஆற்றுக்கு அக்கரையில் இருக்கிற இரண்டு மரத்தைக்காண்பித்து, ஒருத்தி ஒருமரத்தையும் மற்றொருத்தி மற்றொரு மரத்தையும் ஆலிங்கனஞ் செய்துவரும்படி கற்பித்தார். அந்த ஸ்திரீகள் நினைவுதப்பி மரம்மாறித்தழுவினர்கள். அதைப்பார்த்த அந்தரிஷியானவர் நான் சொன்னவண்ணம் நடவாமல் மாறிப்போனபடியால் ரிஷிபத்தினியாகிய உன்வயிற்றில் பிராமணப்பிள்ளையென்று பிறந்தாலும் க்ஷத்திரிய கிருத்தியங்களைச்செய்வான். க்ஷத்திரியன் பத்தினிக்குப் பிறக்கும்பிள்ளை க்ஷத்திரியன் என்றிருந்தாலும், பிராமணநெறிமுறை தப்பாதவனுயிருப்பான் என்று அவர்களுக்கு அருள்புரிந்தார். இவ்விதம் பிறந்த கௌசிகராசன் நெடுங்காலம் தபசுபண்ணிப் படாதபாடும்பட்டு பிரம்மரிஷிக்கு சமானமாய் விசுவாமித்திரர் என்று பெயர்வகித்தார். இது உனக்கு நன்றாய்த்தெரியும், நான்விரித்துச்சொல்லவேண்டிய அவசியமில்லை யென்றார் பீஷ்மர்.

க்ஷத்திரியன் பிராம்மணனுகிய பிரகரணம்.

வீதவ்வியரென்ற வேந்தன் பிரம்மகுலத்தில் சேர்ந்தவகை எப்படியென்ற தருமர் கேள்விக்கு:—வீதவ்வியராஜனுக்கு நூறுபிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் காசிராஜனுடைய பிள்ளைகளைச் சண்டையிட்டுக் கொன்றுபோட்டார்கள். காசிராஜன் வாசரிமுனிவருடைய அனுக்கிரகத்தினுல் ஒருயாகஞ்செய்து அதில் மகாபலவானுகிய ஒருபுத்திரனை உற்பத்திசெய்துகொண்டான். யாகத்திற்பிறந்த அந்தப்பிள்ளை வீதவ்வியருடைய நூறுபிள்ளைகளையுங் கொன்றுவிட்டு வீதவ்வியரைத் தேடிவரும்போது, அவர் பிருகுமகாரிஷியினிடம் அடைக்கலம் புகுந்தார். இந்த எக்கிய குமாரன் பிருகுமகாரிஷியின் ஆசிரமத்திற்போய், வீதவ்வியனைத் தேடினுன். உன்சத்துரு இவ்விடம்வரவில்லை, நீ உள்ளேபோய்த்தேடிப்பாரென்று அவனுக்குச் சொல்லிவிட்டு, சீவகாருண்ணியத்தினுல் அடைக்கலம் புகுந்த அந்த வீதவ்வியனை மற்ற பிராம்மணரிஷிகளுக்கொப்பந்தமாகும்படி நிருமித்தார். காசிராஜபுத்திரன் எங்குந்தேடிக்காணுமல், பிருகுமகாரிஷியினிடம்வந்து அபசாரக்ஷமை கேட்டுக்கொண்டு தன்பட்டணம்

போய்ச்சேர்ந்தான். அன்றுமுதல் பிருகுமகாரிஷிதன்சொல்லுக்குப்பழு தில்லாமல் வீதவ்வியனை பிராமணனாகவே நிலைநாட்டிவிட்டார். அவன் தவம்புரிந்து திரியாக்கினியில் அநேகம்பிள்ளைகளையுண்டாக்கினன் அவர்கள் பிராமண குலமே யாயினர்கள். இதை யோசிக்குமிடத்தில் அந்தப் பிள்ளைகள் அக்கினியிற் பிறந்தபடியால் பிராமணரானார்கள் என்று பீஷ்மர் விடைகொடுத்தருளினர்.

முயற்சி.

ஒவ்வொரு பிரதிக்கினை செய்து தங்கள்தங்கள் எண்ணத்தை நிறை வேற்றிக்கொள்ளுகிறார்களே, அது அவர்கள் வல்லபமா அல்லதுவினைப் பயனா என்ற தருமர் பிரசினைக்கு;—ஒருவர் பிரதிக்கினைபண்ணினல் அது முடிகிறபரியந்தம் அதையே முயர்ச்சிக்கவேண்டும். முயன்றாலும் வினையும் ஒத்திருந்தால் அதுவே எல்லாவற்றையும் முடிப்பதற்கு அனுகூலமாயிருக்கும். தீவினை ஒத்துக்கூடுமாகில் எவ்வளவு பிரயத்தனித்தாலும் நிங்காய்ப்போம். ஆனல் நல்வினை தீவினைதான் இருக்கிறதே யென்று நினைத்து முயற்சிசெய்யாமல் சோம்பி இருக்கப்படாது. முயற்சி இல்லாவிட்டால் நல்வினைக்கு ஆதாரம் இல்லை. நல்வினை எவ்விதமாய்ப்போமென்று கேட்பாயாகில் மேகத்தில் பளிச்சென்றுகாட்டிமறையும் மின்னல்போலேயாகும். ஆகையால் முயற்சியே முக்கியமாகவேண்டும். அவரவர் முயர்ச்சிக்குத் தக்கதாய் இருவினையும் விளையும் என்றறி. முயற்சியாவது காரியம், வினையாவது காரணம் காரணமின்றிக் காரியம் கைகூடாது. எப்படியெனில் நல்லவிரையை நல்லபூமியில் விதைத்தால் ஒன்றுக்குப்பத்துபங்குபலிக்கும் ஊஷரபூமியில் விதைத்தால் விதைமுதலும் அகப்படாது என்றார் பீஷ்மர்.

கஷ்டதிசையிற் கைவிடுதல்.

காசிதேசத்தில் ஒருவேடன் தன் அம்புகளில் விஷம்தவைத்து பட்சிகளையெய்துவந்தான். அந்தக் காட்டின் விருக்ஷங்கள் இலையுதிர்ந்து மொட்டையாயின. ஒரு மரத்தில் விடாமல் வசித்திருந்த ஒருகிளியானது அந்த மரத்தின் பழங்களை தான் புசித்துவந்த நன்றிபாராட்டுநிமித்தியம் மொட்டையாய் நிற்கும் அந்த மரத்தை விட்டு அகலாமல் அதிலேயே உட்கார்ந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது இதை தேவேந்திரன் அறிந்து அந்தக்கிளிக்கு முன்பாக பிரசன்னமாகி வேறுகாடுகளில் பழமுள்ள விருக்ஷங்கள் இருக்க அவைகளில்போய் நீ சஞ்சரித்து சுகம்அனுபவிக்காமல், இந்த மொட்டைமரத்தில் உட்கார்ந்து கஷ்டப்படுவதுசரியா என்று கேட்டபோது, உலகத்தில் ஒருவன் சுகமும் செல்வமும் பெற்றிருக்குங் காலையில், அவனுடன் சுகத்தை அனுபவித்த ஒருவன் அவன் கஷ்டதிசையில் அவனைக் கடன்காரருக்குக் காட்டிவிட்டு, அப்பால் விலகிப்போகிற கயவரைப்போல், நான் இந்த மரத்தின் சுகதிசையில் பழங்களைப் புசித்

தனுபவித்து அதினுடைய இந்த துர்திசையில் அதைவிட்டு அகல்வது தருமமல்ல. அகல்வேனாகில் எனக்கு தோஷமுண்டாம் என்று நீதிநா னுரைத்து, தன்முன்னின்ற பிராமணரூப இந்திரனைப் பார்த்து, சகலவிதி முறையுந் தெரிந்த நீர் இப்படிச் சொல்வீராகில் நீசத்துரோகிகளாகிய நன்றிகேடருக்கு இது ஒரு கொழுகொம்புபோ லாகுமேயென்றது. ஆத லால் உத்தமர்கள் சுகதுக்கங்களுக்கு உடன்பட்டே நேசமாயிருப்பார் கள். அதமர் காலத்துக்குத் தக்கபடி விலகிவிடுவர் என்றார் பீஷ்மர்.

அறிவே பொருள்.

உலகிலுள்ள பொருளில் அறிவே பொருள் என்று பேசுகிறார்களே, அந்த அறிவாவதென்னவென்ற தருமர் கேள்விக்கு:—ஸ்ரீநீலமேக சாம ளவர்ணனாகிய நெடியோன் ஸ்ரீமந்நாராயணன், கோவிந்தகோபால வாசு தேவ கோவர்த்தனதாரியாகிய இந்த கிருஷ்ணமூர்த்தியின் பாதபதுமங் களை பக்திபூர்வமாய்க் காண்பதே பேரறிவாகும். இந்தப் பரவாசுதேவ னுடைய திருவடிகள் எல்லாவற்றிற்கும் மேலான மோக்ஷமாகி விளங்குவ தினால் இனி வேறுபொருள் உண்டென்றுவிளம்பலாமோ! பாபவிநாசன் பரமபதநிவாசன் கயிலையாளி சத்தியலோகவாசன் வைகுண்டநாதன் மயூ ரவாகனன் இன்னும் வேதவேதாந்தங்களில் விளம்பிய பலதேவதைகளும் சுருதி சொரூபமும் தோற்றமும் மாற்றமும் இந்த துவாரகாபுரிவாசனெ ன்று உணர்வதே அறிவினுமுயர்ந்த நுண்ணறிவென்று பீஷ்மர் கூறினர். அவ்விடமிருந்த ரிஷிகள் எதிரிலிருக்கின்ற மேகவண்ணனைப்பார்த்து, இவர் சிலநாளைக்கு முன்னே தேவகிதேவியார் வயிற்றிற் பிறந்தவர். யது குலராஜதிலகமானவர், நம்மில் ஒருவராய் நன்மை தீமைகளுக்குடன்பட் டிருப்பவரை நான்குவேத முதல்வரென்றும் திருநாரணன் என்றும் கொண்டாடுவது யாதென்று வினவ பீஷ்மர் விளம்பலுற்றார்.

ரிஷிகளே கேளீர்! தீபத்திலிருந்து இன்னொரு தீபம் கொளுத்தினால் பிரகாசங் குறையாததுபோல், தருமராஜனுடைய தபோபலத்தினால் முதற்கடவுளாகிய இவர் திருவவதாரஞ்செய்து, பாண்டவர் சகாயனென் றும் பார்த்தசாரதி யென்றும் பேர்வகித்து, பக்தபராதீனராயிருக்கின் றார். இவருடைய அனந்த கல்யாணகுண லீலாவிநோதங்கள் அதிசய அற்புதங்கள், திருக்கூத்துகள் ஆனந்த நடனங்கள் ஆருக்காகிலும் தெரி யுமோ, வேதாகமங்களாலும் அறியத்தக்கதோ என்று அற்புத விசால மாய் ஸ்தோத்திரம் பண்ணினர். அந்த பீஷ்மருடைய பக்திரசத்தைப் பார்த்த ஸ்ரீகிருஷ்ணபகவான் புன்சிரிப்புடனிருக்கவும், வேதவியாசர் பாண்டவர்கள் எல்லோரும் மெய்மறந்து கேசவ நாராயண வாசுதேவ அப்பிரமேய அரிமுகுந்த மாதவ மதுசூதன அரிஅரி யென்று வாழ்த்திப் போற்றினர்கள். தருமராஜன் பாட்டனாராகிய பீஷ்மரை வணங்கினர்.

வாக்குத்தானம்.

சற்பாத்திரமானவர்களுக்கு வாக்களித்து அங்ஙனமே கொடாமற் போனவன் என்னபலன் அடைவானென்ற கேள்விக்கு:—ஒரு குள்ளநரியுடன் வெள்ளைக்குரங்கு கூடி சினேகித்திருக்குநாளில், நரியானது நரமாமிசங்களைத் தின்பதை குரங்கு பார்த்து நீ பூர்வசென்மத்தில் என்ன பாவஞ்செய்தாய் நாயுந் தீண்டாத அழுகின மாமிசத்தை தின்கின்றாயே யென்றதற்கு, நான் முன்பிறப்பில் ஒருபிராமணனுக்கு சில திரவியங்கொடுக்கிறேனென்று ஆசைவார்த்தைசொல்லி மோசம்போக்கினேன், அந்த பாபத்திற்காக இந்தஜெனனம் எடுத்தேன் என்று பூர்வக்கியானத்துடன் சொல்லிற்று. இப்படியா உன் பூர்வோத்தரமென்று குரங்கு போய்விட்டது. சேளும் தருமநந்தனு! ஒருவன் பிராமணர் முதலிய ஏழைகளுக்கு வாக்குதத்தம் பண்ணினதை உடனே கொடுத்துவிடவேண்டும்; இன்றைக்கு நாளைக்கு என்று அலையவைப்பானாகில் அவனுக்கு பிணத்தை பிடுங்கித்தின்னும் ஜெனனம் லபிக்கும் என்று நவின்றார்.

சூத்திரன் வேதமோதல்.

நான்காவது வருணத்தானாகிய சூத்திரன் பிரணவசகிதமாய் வேத மந்திரங்களை செபித்தால் அவன் நற்கதி பெறுவானா துற்கதியடைவானா, என்ற தருமர் பிறசினைக்கு:—கேளாய் தருமநந்தனா! இமவத்கிரி சார்பில் அநேகம் பிராமணாள் தவசு பண்ணிக்கொண்டிருந்ததைப் பார்த்த ஒரு சூத்திரன் அவர்களுடைய ஆசாரியரை அடுத்து அடியேனுக்குப் பிறவித்துன்பம் நீங்கும் வழியாகிய தவத்தின் நிலையை உபதேசித்தருளுமென்று பிரார்த்தித்தான். உனக்கு தவம் எளிதில் கிட்டாது, இவ்விடத்தில் தவம் புரிவோர்க்கு வழிபாடுசெய்து தூயமனத்தினனாகயிருப்பாயாகில் அப்பால் பார்த்துக்கொள்ளலாமென்று அந்த பெரியவர் அனுக்கிரகம்பண்ணி யருளினர். அன்றுமுதல் அந்த சூத்திரன் பெரியோர்கள் உத்தாரப்படிப் பழுதற வழுவற்ற பணிவிடைகள்செய்து அந்த இடத்துக்கப்பால் ஒர்இடத்தில் மகாபயபக்தியுடன் விரதங்கள் செபங்கள் இவைகளில் தவறாமல் தன் சாதிமுறைமை ஆசாரப்படி ஆசையைவெறுத்து கோபத்தைத் தணித்து உத்தமகுணனாய் நடந்துவருகையில், இவனுக்கு உபதேசித்த ஆசாரியர் இவனுடைய நல்லொழுக்கத்தை வியந்து மகா மந்திர மர்மங்களை அவனுக்கு அன்புடன் உபதேசித்தார். ஆசாரியன் வாக்கியப்படி செபதபங்கள் செய்து தன்தேகம் வியோகமானபின்பு ஒரு மகாராஜனுக்கு புத்திரனாகப் பிறந்து கல்வியில் தேர்ந்து பிரபலனானான். அவனுக்குப் பட்டாபிஷேகமானபின்பு, நீதிதவறாமல் அரசாண்டுவருநாளில், இவனுக்கு முன்பு உபதேசித்த ஆசானானவர், இந்த ராஜாவின் அரண்மனைப்புரோகிதருக்குப் பிள்ளையாய்ப் பிறந்து வளர்ந்து ஒருநாள் ராஜாவின் கொலுக்கூடத்துக்குப்போனார். அந்த ராஜனுக்குப்

பூர்வகியானம் விளங்கினபடியால் இவரைக் கண்டமாத்திரம் சிங்காசனத்தை விட்டிறங்கி நகைத்தார். பிராமணப்பிள்ளையானவர் அரசனைக் கிட்டியணுகி, என்னைக் கண்டவுடனே நீர் சிறித்த காரணம் யாதென்று வினவ, ராஜன் அவரைப்பார்த்து, நீர் பூர்வத்தில் இமோற்கிரிச்சாரலில் வெகுபிராமணுளுக்கு ஆசார்யராயிருந்தவர், நான் முன்னே சூத்திரனுயிருந்து உம்மை அடுத்தேன். என்மேற் கிருபைவைத்து வேதமந்திரம் உபதேசித்ததினுலுண்டான உம்முட பாவத்தை யாகாதிகள் மூலமாய்ப் பரிகரித்துக்கொள்ளுமென்று வேண்டிய திரவியங்களை ஈய்ந்து அனுப்பினுன். அந்தப் புரோகிதர் அந்தப்பொருளைக்கொண்டு கிரமப்படி யாகங்களைச்செய்து பாவங்களைப் போக்கிக்கொண்டு முன்போலவே ரிஷிகுலத்தில் அவதரித்தார். ராஜன் நிறைதவருது நின்று அரசுபுரிந்து நற்கதி புகுந்தான். கேளாய் தருமநந்தனு! ரிஷி தர்ம சந்தேகங்களை அரிந்த மகான் நீ! நான் உனக்கு விசேஷித்துச் சொல்லவேண்டியதில்லை. இழிகுலத்தானுகிலும் நன்மனது நற்குணம் நற்செய்கை யுடையவன் மந்திரோபதேசம்பெற்று வழிபட்டால் அவனை மேற்கதியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும், தப்பி நடந்தால் அதோகதியிற் கொண்டுபோய்விடும்; அவனுக்கு உபதேசித்த குருவையும் தாழ்ந்தகெதியில் தள்ளிவிடும். சிஷனுடைய பக்குவத்தை யறிந்து உபதேசிக்கவேண்டும், திரவிய ஆசையினுல் மந்திரத்தை ஒருவனுக்கு உணர்த்தப்போகாது. மந்திரமென்பது இரகசியம்; சகலமும் மந்திரத்தினுலே நடப்பதாம். அதினுல்தான் சிஷ்யருடைய பக்குவம் அறிந்து உபதேசிக்கிறுர்கள் என்றுர்.

தேவேந்திரனுடைய சினேகம் அல்லது விரோதம்.

இந்திரனுடைய சிநேகிதத்தினுல் வரும் பயனும், விரோதத்தினுல் வருங் கெடுதியும் யாதென்ற பிரசினைக்கு:—சிவசங்கரன் என்ற ராஜன் புத்திரனில்லாமல் வருந்தி இந்திரனை யபேக்ஷியாமல் ஒரு யாகஞ்செய்து நூறுபிள்ளைகளைப்பெற்றுன். அந்தப் பிள்ளைகள் மிகவும் பலசாலிகளாக வாழ்ந்துவருங்காளில், ராஜன் அந்தப்பிள்ளைகள்சகிதமாய் காட்டில்வேட்டையாடித் திரிந்து வருகிற வழியில் ஒரு மானை நாடி பின்தொடர்ந்து போகுங்கால், இந்திரன் மின்னலையும் இடியையும் உண்டாக்க, குதிரை மிரண்டு ஒடினதினுல் இராஜன்மெய்மறந்து குதிரையுடன் ஒரு ஆற்றில் விழுந்தான். முழுகி எழுந்த அரசன் பெண்ணுருவாக வெளிப்பட்டு பழையபடி காட்டைநாடிவந்து, தன் பெண்சாதி பிள்ளைகளுக்குத் தான் உருமாறிய சங்கதியைச் சொல்லி, அவர்களை ராச்சியத்திற்கு அனுப்பிவிட்டு ரிஷியாசிரமங்களில் தான்போய் சிசுருஷை செய்து அவர்களில் ஒருவருடன் கலந்து நூறுபிள்ளைகளைப்பெற்று அந்தப்பிள்ளைகளை அழைத்துக்கொண்டு தன்பட்டணத்திற்கு வந்து முந்தினபிள்ளைகளுடன் இவர்களையும் சேர்த்துவிட்டு வாழும் நாளில், தேவேந்திரன் மனந்தாளாமல்

ஒரு பிராமணவுருவமாய்வந்து இந்தப்பிள்ளைகளுக்குள் மித்திரபேதத்தை யுண்டாக்கி ஒருவரையொருவர் அடித்துமாண்டுபோம்படிசெய்வித்தான். இறந்தவர்களுடைய ஸ்திரீகள் பிரலாபித்து அழும்போது ஒருவன் அவர்களெதிரில் வந்து நின்றான். அவனிடம் தங்கள் குறையைச் சொல்லி முறையிட்டார்கள் அதைக்கேட்ட அந்தமனிதன் உன்பிள்ளைகள் இறந்ததற்கு தேவேந்திரன் காரணம். அவனை நீக்கி யக்கியம்பண்ணி பிள்ளைகளை பெற்றபடியால் அவர்கள் இவ்விதமாய் மரித்தார்கள். இராசன் பெண்ணானதும் அவன்கோபந்தானென்று இந்திரன் தன் நிஜரூபத்தைக்காண்பித்தான். எல்லோரும் அவர் பாதத்தில் பணிந்து தங்கள்ராஜனை வரவழைத்து இந்திரன் எதிரேவிட்டார்கள். இராஜன் இந்திரனை வணங்கித் தன்னைக்காப்பாற்றவேண்டுமென்று வேண்டினான். தேவேந்திரன் கோபம் ஆறி, இறந்த இருநூறு பிள்ளைகளில் சிலரைப் பிழைப்பிக்கிறேன் உனக்கிஷ்டமான பிள்ளைகளைச் சொல்லென்றான். பெண்ணாயிருந்து பெற்ற பிள்ளைகளை பிழைப்பூட்டுமென்றுபோற்றினான். நீ இராசாவாயிருந்தபோது பெற்றபிள்ளைகளை நாடாமல் பெண்ணாயிருந்தபோது பெற்றவைகளை ஏன் நாடுகிறாயென்று வச்சிராயுதன்கேட்க, நான் இராசனாயிருக்கும்போது என் பத்தினியுடன் கலந்து பிள்ளைகளைப்பெற்றேன். இப்போது என் வயிறுநோகச்சுமந்துபெற்ற பிள்ளைகளாதலால்சந்ததிப்பிள்ளைகளைப் பார்க்கிலும் இடையில் உண்டான பிள்ளைகளின்பேரில் மிகவும்ஆசையாயிருக்கிறது, அவர்களை எழுப்பித்தாருமென்றான். இந்திரன் மகிழ்ந்து அந்த நூறுபிள்ளைகளையும் பிழைப்பூட்டினது மல்லாமல், பெண்ணுருவாகிய உன்னையும் முன்போல் வேந்தனாக்குகிறேனென்று சொல்ல, அதற்கு ராஜன் இந்திரனை வணங்கி, புருஷனைப்பார்க்கிலும் பெண்ணுக்கு சுகம்அதிகமானதினால் அந்தப் பெண்வடிவமே இருக்கவேண்டுமென்று வேண்டினான். என்றென்றைக்கும் அதுபோல் இவன் இருக்கவேண்டுமென்று ஆசீர்வதித்தான். கேட்டாயோ தருமநந்தனா! இஃது உத்தரமென்று சந்தனு புத்திரர் உரைத்தருளினார்.

ஸ்ரீ கிருஷ்ணருடைய மகாத்துமியம்.

ஸ்ரீ கிருஷ்ணருடைய பிரதாபத்தை தெரிவிக்கும்படி தருமராசன் செய்த பிரசினைக்கு:—அறன் மைந்தனே! கேளாய், பெருமை தங்கிய கருடன் பிறந்து தாயார் சாபத்தை நீக்கும்படி கத்துருவையின் பிள்ளைகளுக்கு தேவாமிர்தங் கொண்டுவர தேவலோகத்துக்குப்போய் எதிர்த்தவர்களைச் செயித்து அமிர்தகலசத்துடன் திரும்பி வருங்காலையில், யானைமீது ஒரு மகாபுருஷனைப்போல் விஷ்ணுவந்து வழிமறித்து நல்ல வார்த்தைகள் நவின்று நல்ல வரமளித்துப்போனார். கருடன் தாயின் சிறையை மீட்டபின்பு தந்தையாகிய காசிபரைப்பணிந்து, அமிர்தங்கொண்டுவருகையில், மகாவிஷ்ணு குறுக்கேவந்து தனக்கு அருளியவரங்களை

யெல்லாம் ஒளியாமல் நவின்ருன். அப்பா மகனே! லோகாராட்டியன், தாயினுங்கிருபாளு சகல ஆத்துமகோடிகளையும் இரக்ஷிக்கப்பட்டவன், பக்தபராதீனன். ஆதிமூலப்பொருளாகிய அவரே உனக்குக் காட்சிகொடுத்தார், ஆனதினுல் வேதங்களாலும் தேடுதற்கரியவரை நீ கண்டதே பெரியபாக்கியம். இவ்வுலகமெல்லாம் அவராதீனம் இப்பவும் அந்த மகாநுபாவர் பதரிகாசிரமத்திலிருப்பார். அவரிடந்தொண்டுபண்ணி பாபரகிதனுயிரு என்று புத்திரனை ஆசீர்வதித்து அனுப்பினர். தந்தையின் மந்திர மொழிப்படி ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைக்கண்டு ஏகசிந்தையாய் தியானித்துநின்ற கருடனை வைகுண்ட நிவாசன் பார்த்து, கருடனே! நீ என்னை நாடிவந்தபடியால் எப்போதும் என்னிடம் இருமென்று கடாட்சித்து, பதரிகாசிரமம் விட்டெழுந்து கருடனுக்குமுன் நடந்தார். சுவாமி எழுந்தருளியபோது கருடனுங்கூட கடுகியோடினன் கயிலையங்கிரியைத்தாண்டி உத்தரதிசையை நாடிச்சென்றபோது, அவ்விடத்தில்ஒருவராலும்உணரக்கூடாத ஜீமூதமான இருட்டுப்பூமி தோன்றவும், கருடனுக்கு வழிதெரியாமல் மயங்கினன். அவ்வேளையில் பக்தனுகிய கெருடனுக்கு சோதி தோன்றும்படி அனுக்கிரகித்தார். சர்வலோகநாயகன் அந்த இருள்வனத்திலும் பூமியிலும் ஆகாயத்திலும் உலாவிப் பலபுவனமும் சராசரங்களும் சிருஷ்டி திதி சங்காரமும் முக்குணமும் மும்மூர்த்திகளும் எல்லா தேவதைகளும் ரிஷிகளும் சக்கிரவாளகிரி பரமபதம் கைலாசம் சத்திய லோகம் மகாமேரு முதலிய சகலத்திலும் இவர்வியாபித்திருப்பதை முழுவதும் பார்க்க கருடன் அசக்தனுகி, சுவாமீ ஆண்டவனே! தேவரீருடைய பூர்ண லீலாவிநோத விபூதியை நான்கண்டு களிக்கமாட்டுவேனே! வேத வேதாந்தங்களாலு மறியக்கூடாத இந்த மகாவிலாச சொரூபத்தை மறையுமென்று நடுநடுங்கி கண்களை மூடிக்கொண்டு கணநேரம் பொறுத்துக் கண்ணைத் திறந்து பார்த்தான். சுவாமியானவர் சாரங்கபாணியாய் தெரிசனம் தந்தார், இதென்னவிந்தை! ஆரிடத்தில் இந்த அதிசயங்களைப் பார்த்தோம், இவரே சர்வஜீவதயாபரரென்று வணங்கிப் போற்றிய கருடனை மகாவிஷ்ணுவானவர் கடாக்ஷித்து, நீ பார்த்த யாவும் என்னுடைய லீலாவிலாசம், இதை அறியத்தக்கபேர் உண்டோவென்று அனுக்கிரகித்தார். அப்பேர்ப்பட்ட ஆண்டவர்தான் இந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி எப்பேர்ப்பட்டவர்க்கும் எட்டாதவர். முக்திக்கு முதற்பொருள் என்று கட்டுணர்ந்த பீஷ்மர்கூற, தருமராஜன் அஞ்சனமேனியானை நெஞ்சில் ஸ்மரித்துச் சந்தோஷித்தார்.

கன்னிகாதானம் வரன் நிதானம்.

தான்பெற்ற பெண்ணை எப்படிப்பட்ட வரனுக்கு கொடுக்கவேண்டுமென்கிற தருமர் பிரசினைக்கு:—கேளும் தருமநந்தனு! ஒரு மகாரிஷியின் அஷ்டவக்கிரன் என்னும் பேருடையகுமாரன், பிரமசாரியொழுக்கம் தவ

றுதலில்லாமல் நடந்து இல்லற தருமத்தில் பிரவேசிக்க நினைத்து வாதாங்கிய ரிஷியின் குமாரி சுப்பிரபாவையை தத்நாதாரம் பண்ணித்தரக்கேட்டான். அந்த வாதாங்கியரிஷியானவர் என்பெண்ணை உமக்குக்கொடுக்க ஆக்ஷேபமில்லை ஆனால் இமயபர்வதம் வரையில் நீபோய்வாருமென்றார். அங்கே போய் நான் செய்யுங்காரியம் யாதென்று வினவ, பர்வதராஜன் புத்திரி பரமேஸ்வரனைக்குறித்துத் தவம் இழைக்கிறாள் அந்த மரகதவல்லியையும் மகாதேவனையும் கண்டு வணங்கி, அவ்விடமிருக்கும் அற்புதங்களைப்பார்த்தபின்னர், அதற்கு வடபாரிசத்திலிருக்கும் அடர்ந்த காட்டுக்குள் புகுந்து அவ்விடத்தில் விநோதமாக கட்டியிருக்கும் வீட்டுக்குள் பிரவேசித்து அதில் வசிக்கும் அழகிய ஸ்திரீயைக்கண்டு, அவளிடம் சிலவார்த்தைபேசி வருவாயாகில், என்மகளைக் கலியாணஞ்செய்து கொடுப்பேன் என்றார். அஷ்டவக்கிரன் என்ற பிரமசாரி மாமனார் கூறியவண்ணம் இமோத்கிரிச்சார்பில் அம்மன் செய்யுந் தவநிலையைக்கண்டு தெரிசித்து வடபுறமிருக்கிற அடவிக்குள் பிரவேசித்தபோது, குபேரன் எதிரில்வந்து இவரை உபசரித்து, ஐயா பிரமசாரியே! நீர் இங்கே சிலநாள் தங்கிபிருந்துபோவென்றான். அதுபோல் அவ்விடத்தில்சிலநாள் தங்கியிருக்குங்கால், அரம்பை முதலிய ஸ்திரீகளின் நடனங்களையும் விளையாட்டுகளையும் பார்த்து மனஞ்சலித்து மறுபடியும் மகாதேவி தவஞ்செய்யும் புண்ணிய க்ஷேத்திரத்தை மூன்றுதரம் வலம்வந்து தண்டஞ்சமர்ப்பித்து திரும்பி காட்டுக்குள் புகுந்து அங்கே கட்டியிருக்கும் வீட்டில் பிரவேசிக்கவே, அங்கே இருந்த தாதியானவள் இவரைத்தன் எஜமானியினிடத்தில் கொண்டுபோய்விட்டாள் அந்த அழகிய நாயகி இவருக்கு அநேகமான உபசாரங்களைச்செய்து, இரவில் தன் சயனத்தில் கூடப்படுக்கவைத்துக் கொண்டாள். படுத்தவர் அவளுடைய காம இச்சைக்கு இடங்கொடாமல் மறுத்தபோது, பெண்ணானவள் புருஷனை விரும்பியும் நீ என்னைக்கூடாமலிருப்பது மிகுந்த ஆச்சரியம நீ என்ன நபுஞ்சகனா! ஆண்மையில்லையா என்று தூஷித்ததற்கு பிரமசாரியானவர் அந்த ஸ்திரீயை நோக்கி நான் கொண்ட பிரமசாரியவிரதம் முடிவாகி, ஒருகன்னிகையை அக்கினிசாட்சியாய் விவாகஞ்செய்வதற்கு முன்னமே ஸ்திரீசம்போகத்துக்கு உடன்படுவதில்லையென்றும் தான்கொண்ட விரதத்தைத் தவிழ்க்கக்கூடாதென்றும் கூறி, என்னை விரும்பாதேயென்றான். பொழுதுவிடிந்தபின்னர் அந்த ஸ்திரீயினிடத்தில் விடைபெற்று வாதாங்கிய மகாரிஷிபிடத்தில் வந்து வணங்கி நின்றான். அவர் தமது ஞானதிருஷ்டியினால் இவனுடைய மனோதிடத்தையும் பரிசுத்தத்தையும் தெரிந்துகொண்டு, கிரமப்படி தன்பெண்ணை அவனுக்கு பாணிக்கிரகணம் செய்துகொடுத்தார். இதுதான்சரியான கன்னிகாதான தர்மம் யுதிஷ்டிரனேயென்று பீஷ்மர் சாற்றினார்.

சூத்திரஸ்திரீயை பிராமணன் மணந்து பெற்றபிள்ளைக்கு சந்ததியுண்டா என்ற பிரசினேக்கு

வேதியர்கள் நான்குவருணத்திலும் விவாகம் செய்யலாம். க்ஷத்திரியர் வேதியர் குலந்தவிர மூன்றுகுலத்திலும் பிரவேசிக்கலாம். வைசியர் பிரம்ம க்ஷத்திரியகுலந்தவிர சூத்திரவர்ணத்தில் மணஞ்செய்யலாம். சூத்திரன் தன் குலந்தவிர வேறே தழுவலாகாது. இந்த நான்குவர்ண ஸ்திரிகளும் முறைப்படி கலந்துபெற்ற பிள்ளைகளுக்கு வர்ணசங்கிரமம் என்றுபெயர். க—உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத்தாய்க்கும் பிறந்த பிள்ளைக்கு அநுலோமன் என்றுபெயர். உ—இழிகுலத்தந்தைக்கும் உயர்குலத் தாய்க்கும் பிறந்தவர்கள் பிரதிலோம ரென்னப்படுவார்கள். ங—அநுலோமத்தகப்பனுக்கும் பிரதிலோமத்தாய்க்கும் பிறந்தபிள்ளை அந்தராளன் என்னப்படுவான். ச—பிரதி லோமனுக்கும் அனுலோமப்பெண்ணுக்கும் பிறந்தோரை விராத்தியர் என்னப்படும். ரு—சாதிதர்மம் விட்டவனுக்கு விரசத்தியென்றுபேர். வானப்பிரஸ்த ஆசிரமமுடைய ரிஷிகளுக்கு எந்தஜாதியில் பிள்ளைபிறந்தாலும் அந்தப்பிள்ளைகள் யாவரும் ரிஷிகளேயாவார்கள். பீஜம் பிரதானமாதலால் எந்த யோனியிற் பிறந்தாலும் பேதமில்லை. ரிஷிகளுக்கு குலம் அக்கறையில்லை. மற்றவர்களுக்குமாத்திரம் மனுவிக்கியானத்தில் விதிகள்ஏற்பட்டிருக்கின்றன. அவ்விதிகளையெல்லாம் நீ நூல்வழியாய்த் தெரிந்து கொள்ளலாம். ரிஷிமூலம் நதிமூலம் விசாரிக்கலாகாது. அதற்கு திருஷ்டாந்தம் அகஸ்தியர் வசிஷ்டர் வியாசர் இவர்கள் பிறந்த வரலாற்றைப் பார்த்துக்கொள். ஐம்புலனை செயிக்கிற உறுதி ஆரிடத்தில் இருக்கிறதோ அவர்கள் யாவரும் குலத்தால் அல்ல, குணத்தால் நற்கதியடைவர் என்றார்.

ஸ்திரீகள் பாபஜென்மமா என்ற பிரசினேக்கு.

மகதியாழ்வல்ல நாரதர் பூமிசஞ்சாரம் செய்துவரும்போது, அவருக்கெதிரில் சவுந்தரியமுடைய ஒருநாயகி யெதிர்ப்பட்டாள். இவர் அவள் மீது காதல்கொண்டார். அந்த அப்சரஸ்திரீயானவள் நாரதரை நோக்கி உமது தந்தை பிரமதேவர் சகல பாபங்களையுந் திரட்டிப் பெண்ணுருவாக்கினர். அந்த மகாபாபிகளுடைய சரித்திரத்தைக் கேட்க தேவரீர் செவிக்கு விருப்பமாயிருக்கிறதோ, நான் அறிந்தமட்டுஞ்சொல்லுகிறேன் கவனமாய்க்கேளும் ஒருவர் ஒருகாரியத்தை சொல்லும்போது, விருப்பமாகக்கேட்டுத் திருப்தியாக உத்தரஞ்சொல்பவன் உத்தமன். மற்றவன் செத்தவன். இதை நீர் யோசித்துக்கொள்ளும். ஐயா! உலகத்தில் உமக்குத் தெரியாத ஒளிப்பிடமில்லை அக்கியான கேவல பாபமே ஸ்திரிகள். அஃதெவ்வாறெனில், விவேகிகளாகிய எப்பேர்ப்பட்டபுருஷரையும் மாய வலையில் வசப்படுத்திக்கொண்டு தாங்களே அவனுக்குச் சகல சுகமுமெ

ன்று தோன்றச்செய்து, எண்சாண் உடம்பிலிருக்கும் புண்காணியை அவன் பார்க்கப்பார்க்க மயங்கி கரும்பின் ருசியிலும் காமம் அதிகமென்று அதரபானஞ்செய்து, அவள் காலடியே கெதியென்று செபம் தவம் விரதம் பந்து மித்திரர் யாவையும் மறந்து, அவள் அடிமைபோல் விழுந்து கிடக்கத்தக்கதாக செய்துகொள்ளுகிறுர்கள். மணலையெண்ணிக் கணக்கிட்டாலுங் கணக்கிடலாம், பெண்கள் கருத்தையும் அவாள் கொண்ட காமப்பெருக்கத்தையும் அளவிடப்படாது. மோனஞானியையும்மோசம் போக்குவார்கள். பாபத்திற்கு இது ஒரு வித்து, நம்பினதால் வந்தவிபத்து, நரகத்துக்கு இஃதொரு மந்திரமாம். [முழுதுயர்ப் பூட்டாற் பூட்டி முடிவில் காமாதியென்னும் புதுமணிவைத்த செப்பாம். பூவையரின்பம் வேண்டேன், இது நரம்பு இது தசை இது நெய்த்தோலென்றெண்ணில், விதுர்முக மாதராசை குரோதமாஞ் சிறிதுநாளில்] என்றதுபோல், நெருப்பைத்தொட்டால் சுடும். இப்பேர்ப்பட்ட பெரும்பாவிகளை நினைத்தாலேசுடும், இவர்களைக் கூடினுல் அந்த பாபம் இவனுக்கு ஏழேழு சென்மத்துக்கும் நீங்காது இவர்களிடத்தில் சேர்வது சுகமென்று எண்ணுகிறதேயொழிய சுகமென்பது எள்ளளவுங்கிடையாது. துக்கமென்பது இவனைவிட்டு அகலாது. எப்படியெனில், நாயானது பசையற்றவெள்ளெலும்பைக் கடித்துப் பசியாறியதுபோல் என்றறியும். இந்த நாரியரிடத்தில் ஆசாபாசமாய் நேசித்தாலும் கோடிகோடியாய்த் திரவியங்கொண்டுபோய்க்குவித்தாலும் அவர்கள் நெஞ்சில் அடங்கிய வஞ்சம் விலகாது. போகத்துக்கு மிஞ்சிய சுகம் வேறில்லையென்று எவனொருவன் எத்தனை காலம் எண்ணுகிறுனே, அதுவரையிலும் பாபத்துக்குள்ளாகி சகல வியாதிகளாலும் பீடிக்கப்பட்டுக் கடைசியில் நரகத்தில் விழுந்து இமிசைப்படுவான். ஆகையால் பெண்களைப் பாபரூபமென்று பகருவர். எவனொருவனுக்கு அதிக துன்பத்தை யடைய முன்செய்த தீவினையுண்டோ, அவன்தான் பெண்ணாசைப் பேய்ப் பிடித்து காமாந்தகாரனய்த் திரிவான். புண்ணியவான்கள் ஞானத்தைக் கருதுவார்களேயல்லாமல் காமத்தை விரும்பார்கள். ஸ்திரீகள் எல்லோரும் பாபிகள் தானேவென்றுல், ஏகதேசத்தில் கடலிற் கல்மிதந்தாப்போல் கற்புடைய பதிவிரதையாய் தன் புருஷனே தெய்வமென்று அவன் சொல்லுக்கு மாறுபேசாத மாதர்கள் சிலர் உண்டாயிருக்கலாம். அப்படிக்கில்லாவிடில், பெண்கள் என்ற வாசனை அற்றுப்போம். எவ்விதமென்றுல், ஒரு திக்கட்டையிலிருந்து செனித்த தீயானது அதிக சுவாலையாகி சேருய்க்கிடக்கும் பூமியை உலரச்செய்வதெப்படியோ அப்படிப்போல் உத்தம ஸ்திரீகளுடைய தெரிசனத்தால் சகலதோஷமும் பாவமும் நசித்துப்போம் அவர்களைக்குறித்து இங்கே பேசத்தக்கதில்லை. அநேகங்கோடி ஆத்துமாக்களில் சுகப்பிரமம் வாமதேவர் என்னப்பட்ட சிறிதுபெரியோர்மாத்திரம் காமக்கடலைத் தாண்டி ஞானவான்களாயிருந்து அவர்களைக் கண்டபேர்கள் எல்லாம் ஜென்மசாகரத்தை யெப்படி கடந்தார்

களோ அப்படிப்போல் அநேகங்கோடி பெண்களுக்குள்ளே ஒவ்வொருத்தி உத்தமியா யிருப்பதுண்டு. அதற்கு திருஷ்டாந்தமாகக் கௌதமர் பெண்சாதி அகலிகையினுலே தேவேந்திரன் எந்நாளும் நீங்காத ஆயிரம்யோனியைக் கண்களாகப் பெற்ருன் திலோத்தமையால் ஒரு முகமாயிருந்த பிரமன் நாலுமுகமாய் நாணமடைந்தார். உடலுமுயிரும் போலிருந்த சுந்தோபசுந்தரர் மேனகையால் அழிந்தார்கள். தானவர் என்னுங் குருபத்தினியால் சந்திரன் வளர்ப்பிறைத் தேய்பிறை யடைந்தான் மூன்றரைக்கோடி வயதுபெற்ற இராவணன் சீதாபிராட்டியால் இறந்தான். இன்னமும் உலகத்திலுள்ள ரிஷிகள் முனிகள் அரசர்கள் தேவதைகள் யாவரும் ஸ்திரீகளாலே அழிந்தார்கள். இவ்வளவுதான் ஐயா பெண்களுடைய சொரூபம் என்று அப்சரஸ்திரீ சொல்லி, நாரதரைவிட்டு அகன்ருள், தருமராசனே யென்ருர்.

ஸ்திரீகளை மணப்புரிவதும் அவர்களைப் பாதுகாப்பதும் எப்படி என்ற தருமர் பிரசினைக்கு:

தருமநந்தனு! ஸ்திரீகளைப் பாதுகாப்பது அரி பிரமாதிகளாலும் முடியாது. மோகமும் மோசமும் தேகமாயிருப்பவர்கள். மானத்துக்குக் கட்டுப்பட்டு நடந்தாலுண்டேயல்லாது மற்றப்படி எவ்வித காபந்து செய்தபோதிலும் அடங்கார்கள். இதினுலே அவர்களைக் கொடுமையாய் நடத்தலாகாது. இதற்கொரு உவமைசொல்லுகிறேன் கேளும். தேவசர்மன் என்கிற முனீஸ்வரருடைய பெண்சாதி உலிசை யென்பவள் மிகவுஞ் சவுந்தரியவதி. ரிஷியானவர் அவளை மகாவிசுவாசத்துடன் ஒருநாளும் பிரியாமல் நேசித்துவந்தார். ஒருநாள் ஒருத்தருக்குப்பாத்தியப்பட்டு யாகஞ்செய்யவேண்டி, தன்சிஷனுகிய விபுலனைத் தான் திரும்பி வரும்வரையில் தன் பத்தினியைப் பார்த்துக்கொள்ளும்படிக்கும், அவள்மேல் ஏற்கனவே காதல்கொண்டிருக்கும் இந்திரன்ஒருவேளை அவ்விடம்வந்தால் அவனைத் தகையும்படிக்கும், கட்டளையிட்டு விலகினுர். சிஷனுனவன் குருபத்தினியைக் காக்கவேண்டி அவளுக்குத்தெரியாமல் பரகாயப்பிரவேசமென்கிற சாகசமந்திரத்தால் குருபத்தினி தேகத்தில் பிரவேசித்து பிராணனேடு பிராணனுய்க் கலந்திருந்தான். இந்த விபரத்தை இந்திரன் அறியாமல் சந்நியாசி ரூபமாய் ஆசிரமத்துக்குள் வந்து, அவளெதிரில் மன்மதரூபமாய் நின்று அவளைக் காதலித்தபோது, அவனைக் கண்ட மங்கையானவள் நீர் என் வீணில் வாணளை மாய்த்துக்கொள்ளுகிறீர், நீர் இந்திரனல்லவா, ஒருவர் மனைவியை ஆசிக்கலாமா, தேவர்கள் உன்னை மதிப்பார்களா, என்று சொல்லிக்கொண்டிருக்கையில், சிஷ்யன் அந்த அம்மன் தேகத்தைவிட்டு வெளிப்பட்டு தேவேந்திரனை மிகவுங் கடிந்துகொண்டான். இந்திரன்வெட்கி சிஷ்யனுக்கு உபசாரஞ்சொல்லி அகன்றுபோனுன். இப்பால் யக்கியம்பண்ணப் போயிருந்த மகாரிஷி திரும்பி வந்தவரிடத்தில் நடந்தவைகளை சிஷன் தெரியப்படுத்தினுன். அவர்

அவனை ஆசிர்வதித்து மகிழ்ந்து இந்திரன் நினைத்த தோஷத்தை பாராட்டாமல் மிகவும் சாந்தமாயிருந்தார். பெண்கள்பேரில் எவ்வளவு ஆசையிருந்தாலும் புருஷன் அவர்கள் விஷயத்தில் மிகவுங் கண்விழிப்பாயிருக்கவேண்டும். முழுதும் நம்பிவிட்டால் மோசமும் நாசமும் வருமென்று சரசயனத்திலிருக்கும் பீஷ்மாசாரியர் யாவருக்கும் ஒப்பவெளிப்படுத்தி மறுபடியும் முரசகேதனனை நோக்கி மேலுங் கூறுகின்றார். ஒருநாள் அப்சரஸ்திரீ ஒருத்தி ககனமார்க்கமாய் போகும்போது, அவள் அணிந்திருந்த பூமாலை ஒன்று, மேற்கூறிய தேவசர்ம ரிஷியின் ஆசிரமத்தில விழுந்தது. அதை ரிஷிபத்தினி எடுத்து சூடிக்கொண்டாள். அன்றைய தினத்தில் இவள் தங்கைபுருஷன் வேட்டைக்காகவந்தவன், இவர்கள் ஆசிரமத்திற்குள் வந்தான். ரிஷிபத்தினி மைத்துனனை உபசரித்தபோது, இவள் அணிந்திருக்கும் பூமாலையைப்போல் இவள் தங்கையாகிய தன் பெண்சாதிக்கும் ஒன்றைத் தருவித்துக்கொடுக்கும்படி வேண்டினன். ரிஷிபத்தினி கோரிக்கைப்படி ரிஷியானவர் தன்சிஷனை அளகாபுரியில் இருக்கும் புஷ்பத்தை கொண்டுவரும்படி அனுப்ப, சிஷன் புஷ்பத்துடன் திரும்பிவரும்போது ஒருபெண்ணும் புருஷனும் மார்க்கத்தில் தோர்ப்புகெலிப்பில்லாமல் சண்டையிட்டிருந்ததையும் மூன்றுபேர் சூதாடி சபதஞ் செய்துகொண்டிருந்ததையும் பார்த்த இவன் நிற்காமல் அவசரமாய்வந்து, குருவினிடத்தில் மாலையைக் கொடுத்தபின்பு, ஒருபுருஷனும் ஸ்திரியும் சண்டையிட்டு அந்தரத்தில் சுழன்றூர்கள். அதற்கிப்பால் சூதாடிக்கொண்டிருந்த மூன்றுபேர்களில் வாக்குவாதமுண்டாகிச் சபதம்பண்ணிக்கொண்டார்கள். அவர்களில் ஒருவன் என்னைப்பார்த்து, இதோ போகிறானே குருத்துரோகி இவன் அடையப்போகிற நரகத்தில் நான் விழக்கடவேன் என்றான். அந்தச் சொல்லைக் கேட்டதுமுதல் என்மனதை மிகவும் வாதிக்கிறது, குருத்துரோகி என்னும்பேர் எனக்குவருவானேன், சுவாமீ! இதை எனக்கு அருள் புரியுமென்று சிஷன் பிரார்த்தித்தான்.

மாணுக்கனே! நீ கவலைப்படாதே, ஆகாயத்திற் சண்டையிட்ட இருவர் இரவும் பகலும் மற்றைமூன்றுபேர் ருதுக்கள். அவர்களில் உன்னைக் கண்டு நீவிழும் நரகத்தில் தான் விழுவேனென்று சபதம் பேசினவன் உன்னிடத்தில் உண்டாயிருந்த தோஷத்தைக்கண்டு சொன்னான். அஃதென்னவென்றால், நீ என் பத்தினிக்குள் பரகாயப்பிரவேசமாயிருந்தது முறைமையல்ல, அதனை என்னிடத்திற் சொல்லாமலும் போனாய், ஆனல் உன்மீது எனக்குச் சந்தேகங்கிடையாது. ஆசாரியன் பத்தினியாகிய அவளுக்கு நீ புத்திரன். நீ நினையாமல்வந்த இந்தப்பாவத்தை நான் க்ஷமித்துவிடுகிறேன் என்று தேவசர்மரிஷி கூறி அவனைத் தவம்புரியச்செய்து தாலும் சிஷனும் பத்தினியும் நற்கதி பெற்றார்கள் என்று பீஷ்மர் சொல்லிமுடித்தார்.

எல்லாரிலும் பெரியவர் யார் என்ற தருமர் கேள்விக்கு.

அறன்குமரா! பூர்வத்தில் இதோயிருக்கின்ற ஸ்ரீகிருஷ்ணபகவான் நாரதரை நோக்கி, நீர் யாரை வணங்குவீரென்று கேட்டார், ஆதிமூலக் கடவுளைப் பணியப்பட்ட அடியார்களுடைய பாதங்களுக்கு நான் அடிமைசெய்து வணங்குவேன். நற்கதிக்கு வழிகாட்டப்பட்ட குருவின் வார்த்தையைக் கடவாத பேரையும் வணங்குவேன் என்றார். இவ்வார்த்தையைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணர் சந்தோஷமாயினர். மேற்கூறியோர்தான் பெரியோர் என்று பீஷ்மர் நவின்றனர்.

கௌசிகராஜன் பிறந்த வரலாறு.

காதிராஜனுடைய தந்தை குசமகாராஜன் தரணியாளும்போது பிருகுமகாரிஷியின்பிள்ளையாகிய சவுனமகாரிஷியானவர் அவரிடம்வந்தார். இராஜன் அந்தரிஷியின் அபீஷ்டம் யாதென்று கேட்க, நீயும் உன் சுற்றத்தாரும் எனக்குப் பணிவிடை செய்வீர்களா என்று கேட்டார். இராஜன் சந்தோஷத்துடன் இணங்கினர். ஒருநாள் சவுனகரிஷி பகல்போசனமானபின் நித்திரை செய்தபோது இராஜன் முதலியோர் கால்பிடித்துக் கொண்டிருந்தார்கள். ரிஷி தூக்கத்திலிருந்து அருண்டு கண்விழித்து என் நித்திரைக்கு பங்கம்வராமல் காலைத்தடவிக்கொடுங்கள் என்று பேசிக் கொண்டே நித்திரைபோனர். இராஜன் முதலியோர் உண்டியுறக்கமில்லாமல் இருபத்தொருநாள் கால்பிடித்தவண்ணமாய் விழித்திருந்தார்கள். இருபத்திரண்டாம்நாள் சவுனகர் எழுந்து இவர்களுடன் பேசாமல் வெளியேபோய் ஒருவர் வீட்டில் திருப்தியாய் போசனஞ்செய்து மறுபடியும் வந்து படுத்துக்கொண்டார். இராஜனும் பத்தினியும் முன்போலவே காலைத்தடவிக்கொண்டிருந்தனர். மறுபடியும இருபத்தொருநாள் கழிந்தது. அப்பால் ஞானமுனிவர் தூக்கம்விட்டெழுந்து நீங்கள் நாற்பத்திரண்டு நாள் ஆகாரம் நித்திரையில்லாமல் பணிவிடைசெய்தது மிகவும் அற்புதம் என்று அவர்கள் சாந்தகுணத்துக்கு வியந்து, உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள் என்றார். வம்மிச விருத்தியாகும்படி உம்மைப்போலொத்த ஒரு புத்திரன் வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதுபோல் அநுக்கிரகித்து இந்தப்பிள்ளைக்குப்பிறக்கிற பிள்ளையானவன் பிரம்மரிஷியாய் எங்களைப்போல் இருப்பான். இப்போது பிறக்கிறபிள்ளை இராஜனயிருப்பான் என்றார். இவன் பெயர் காதி, இவன் பிள்ளைதான் கௌசிகன். இவர்தான் விசுவாமித்திரமகாரிஷியென்று பீஷ்மர் வெளிப்படுத்தினர்.

பாத்திரங்களினுடையவும் பசுக்களினுடையவும் பெருமையையும் பற்றிய பிரசினைக்கு.

சத்தியவிரதனே! சவுனகரிஷியானவர் பாகீரதிக்கங்கையின் முகத்துவாரத்தில்முழுகி பன்னிரண்டுவருஷம் தவம்புரிந்தனர். அப்போது வலையர்கள் மீன்பிடிக்க வீசியவலையில் அகப்பட அவரை இழுத்துக்கரையில் ஏற்றி ரிஷியைப்பார்த்தமாத்திரம் நடுநடுங்கி தாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினார்கள் உங்கள் சாதியாசாரப்படி நீங்கள் செய்தீர்கள். உங்கள் வலையில் அகப்பட்ட என்னை மீனுடன் சேர்த்து விற்றுப் போடுங்கள் என்றார். இச்சேதியை வலையரால் அறிந்துகொண்ட நகுஷமகாராஜன் சௌனகரிடத்தில் வந்து சிற்றறிவுள்ள தீனர்கள் செய்த குற்றத்தை க்ஷமியும் நானும் உம்மைப்பணிந்தேனென்றான். இராஜனே! அவர்கள் சாதியாசாரப்படி வலைவீசிக் காத்திரமானமீன் அகப்பட்டதென்று அவாவுடன் என்னை வெளிப்படுத்தின அவர்கள் ஆசை வீண்போகாமல் என்னை விற்றுப் பொருள் கொள்ளச்சொன்னேன், நீ என்னிடம் வந்து, தயைபுரியக்கேட்பதால் எனக்குள்ள விலையை அவர்களுக்களித்து என்னை மீட்டுக்கொள் என்றார். அரசன் ஆயிரம்பொன் தருகிறேன் இந்த ரிஷியை விடுங்கள் என்று வலைபரைக்கேட்க, ரிஷி கண்விழித்துப் பார்த்து, நீ முறைதப்பிச்சொல்லுகிறாய், நிர்க்குணப்பிரமங்களாகிய எம்போலியரைத் தகுமான விலைகொடுத்து மீட்காமல், ஆயிரம்பொன் கொடுப்பதாய்ச் சொல்லுகிறாய், இவ்வளவுதானா நான்பெறுவேன் என்றார். இலட்சம்பொன் தருகிறேனென்றான். மகாதவமிழைத்த உடல் இந்த விலைதானா பெறும் என்று தன்னை வெறுத்துக்கொண்டு, ராஜனே! நீ உன் பெரியோரிடத்தில் கலந்து ஆலோசித்து அப்பால் நான் இன்னது பெறுவேனென்பதாய்க்கண்டு சொல்லென்ன, அரசன் மிகவும் நடுக்குற்று, தனக்கு மிகவும் உரிய கவிசாதரென்னும் ரிஷியை ஸ்மரித்தான். அவர்பிரசன்னமாகி இவன் முறையைக்கேட்டு, இந்தமகாநுபாவராகிய சௌனகமகாரிஷிக்கு பிரமனும் தேவரும் ஈடாகமாட்டார்கள். பெரியோருக்குச் சரியாக உலகத்திலுள்ள பொருள்களை யெல்லாம் கொடுத்தாலும் போதாது இவர்களுக்குச் சமானமாகிய வஸ்து, பசுவேயாம். பசுவின் பெருமையைச் சொல்லி முடியாது. அதை உத்தமருக்குத் தானஞ்செய்தால் அந்தப் பசுவின் உடலில் இருக்கிற ரோமம் ஒன்றுக்கு ஒவ்வொரு வருஷம் விகிதமாக எத்தனை ரோமமிருக்குதோ அத்தனை வருஷம் மோக்ஷத்திலிருப்பார்கள். அன்றியும் எக்கியம் ஒமம் அக்கினி தேவதைகள் பெரியோர்களாகிய யாவருக்கும் துன்பம் அகற்றி இன்பந்தரப்பட்டவர்கள் பிராமணர், இவர்களே அதற்குப்பாத்திரம்; ஆகையால் தாரதம்மியமறிந்து சௌனகரிஷிக்குப்பதிலாக ஒரு பசுவைக்கொடுத்தால் ஈடாகுமென்று கவிசாதமகாரிஷி அருளினார். நகுஷராஜன் அதுபோல் ஒருகபிலைப் பசுவை வலையருக்குக்கொடுத்தான். சௌனகர் அதுசரியென்று ஒப்புக்கொண்டார். பசுவை தானம்வாங்கின வலையர் எங்களைக் கிருதார்த்தராக்

கும்படி இந்தப்பசுவை தேவரீர் தானமாய் வாங்கிக்கொள்ளுமென்று வேண்டினார்கள். அப்பா வலையரே! நான் இதுவரையிலும் ஒருவரிடத்திலும் ஒன்றும் வாங்கினதில்லை உங்கள் வேண்டுதலுக்காகவும் உங்களை நற்கதியடைவிக்கவும் கோதானம் பெற்றேன், அருள்பெறுவீர்களென்று அனுக்கிரகம் பண்ணினவுடன் வலையர்களும் வலையில் அகப்பட்ட மச்சங்களும் தேவசொரூபம்பெற்று பொன்னுலகடைந்தனர். நகுஷராஜனை நோக்கி உனக்கு வேண்டிய வரத்தைக்கேள் என்றார். நால்வேதமயமாகிய தேவரீர் இவ்விடம் வந்தீர். உமது செந்தாமரைத் திருவடிக்கு சாஸ்திரப்பிரகாரம் மனோதிடமாய் அர்ச்சனைசெய்வதே அடிமைக்குப்போதுமான வரமென்றான். அதைக்கேட்ட ரிஷியானவர் இவன்பக்திக்குமெச்சி நீ இகத்தில் சுகத்தையடைந்து நிர்யாணதிசையில் தேவர்கள் எதிர்கொண்டழைக்க தேவலோகம்போய் இந்திரப்பட்டத்தை அனுபவிக்கக்கடவாயென்று ஆசீர்வதித்தார். பாத்திரமாகிய ஸ்தானபலமும் பசுவின் தானபலனும் இத்தன்மையதென்று அறிந்துகொள். தருமபுத்திரனேயென்று பீஷ்மர் விளம்பினர்.

தானஞ்செய்கிற விவரம்.

இகத்தில் செய்யத்தக்க தருமம் யாது, எந்தத் தானத்தால் என்ன பலன் கிட்டும் என்ற பிரசினைக்கு:—மாற்றுயர்ந்தபொன் வெள்ளி இரத்தினங்கள் வஸ்திரம் யானை குதிரை ஆந்தோளி தேர் கன்னிகை இவைகளை தானஞ்செய்தால் என்னபலன் கிடைக்குமோ, அதற்கு மேலானது கோதானம். அந்தப்பசு சுபலக்ஷணமுள்ளதாயிருந்து முற்றுந்துறந்த ஞானிகளுக்குக் கொடுத்தால், மேற்குறித்த தானங்களாலடையும் பலனைப்பார்க்கிலும் என்றைக்கும் இருளில்லாத ஆனுலகஞ் சேரும்பலனை அடைவார்கள் என்றார்.

பசுலோகம் என்பதுயாது என்ற கேள்விக்கு.

தருமபூபதி! நீ செய்த இந்தப் பிரசினையைப்போல் பூர்வத்தில் தேவேந்திரன் பிரமாவைக்கேட்டான். அவர் சாற்றியவண்ணம் நான் இப்போது உனக்குச் சொல்லுகிறேன் கேள். அண்டகோளகைக்கு அருகாமையில் பசுலோகம் இருக்கிறது. அதிலே பிரமாவாகிய நானும் என் பிள்ளைகளில் உபப்பிரமாக்களில்சிலரும் மானிடரில் சத்தியந்தப்பாமல் வாழ்ந்த ஞானவித்தகரும் வாசம்பண்ணி, அவ்வுலகின் அதிசயங்களை அனுபவிக்கத்தக்கதேயல்லாது, மற்றவர்களால் முடியாது.

உலகத்தையாளும் அரசர்களே யானாலும் பசுவைபோஷித்து அதற்குபூசை செய்து வருபவர்கள், ஆனுலகை யடைவர்கள். பசுவானது திவ்விய மகத்துவமுடையதாகையால் சாம்பவமூர்த்தி அதைக்கொடியாகவும் வாகனமாகவும் அதினுடையசத்தை விபூதியாகவும் தரித்திருக்கிறார்.

என்பதாய்ப் பிரமதேவர் கூறினர் என்று பீஷ்மர் சொல்லி, மேலும் பசுவின் அவயவங்களில் எந்தெந்ததேவதைகள் வசிப்பார்கள் என்றால், முகத்திலே தேவேந்திரன், நாக்கிலே சப்தரிஷிகள், கொம்பிலே காலன், மூக்கிலேவாயு, பாதங்களிலே குபேரன், பிருஷ்டத்திலே சீவன்முத்தர்கள், மோவாய்க்கட்டையிலே சூரியசந்திராள், கண்டத்திலே பரமேசுவரன், வரிமடிப்பிலே பார்வதி, வயிற்றிலே அக்கினி, இடையிலே ஸ்ரீமந் நாராயணன், தவடையிலே வசுக்கள், முசுப்பிலே சாவித்திரி, நெஞ்சிலே பகன் என்னும் தைவதம், வாயிலே தருமதேவதை, மயிரிலே முக்கோடி தேவர்கள், காதிலே காலப்பிரமாண்ட கடவுள், நடுநெற்றியிலேசித்தர்கள், அடிவயிற்றிலே பன்னகாதிபர், மடியிலே அமுதகூபாளர், யோனியிலேஇந்திராணி, இவர்கள் வசிப்பார்கள். இரத்தமானது சந்திரகலை, மாம்சம் சத்தி, மூலையில் சரசுவதி, மூத்திரத்தில் லட்சுமி, சாணத்தில் லட்சுமி; இவ்விதமா யிருப்பதால் பசுவின்பெருமையை ஆரால் பகரலாகும். தெளிவுடைய விவேகிகள் இதினுடைய பொருள் அறிந்து பெருமை தெரிந்து போஷித்துப் பூசிப்பார்கள். பசுவை பிரம்பு தடி முதலிய எதினாலும் அடிக்கப்போகாது. பயிரில் மேய்ந்தபோதிலும் மூன்றுதரம் கைதட்டித் துரத்தவேண்டும். அதிலும் போகாவிட்டால் தருப்பைபுல் வைக்கல்புரி முதலியவைகளால் நோகாமல் தட்டிவிரட்டவேண்டும். இதுதான் தர்மம், இதற்கு விரோதமாகச் செய்வது அதருமம். சுமித்திரன் என்னும் மகாரிஷியானவர் ஒரு பசுவை போஷித்து பூசித்து வந்தார். அந்தப்பசு கர்ப்பமாகி கிடாரிக்கன் ஒன்றை ஈன்றது அதையும் பிரியமாய் வளர்த்தார். இவ்விதம் போஷித்து வந்ததினால் பசு விருத்தியாகி ஒரு மந்தையாச்சுது. ரிஷியானவர் அவைகளின்பேரில் அன்புபாராட்டி வந்தமையால் அவைகள் அவர் எங்கே போனாலும் கூடப்போகிற வழக்கம். ஒவ்வொரு பசுவுக்கும் பேரிட்டு அழைப்பார். இந்தப் பசுக்கூட்டத்தை ஒரு மடுககரையில் மேய்க்குங்காலத்தில், அம்மடுவில் ரூபவதிகளான ஸ்திரிகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். பசுக்கள் அவர்களைப்பார்த்து நீங்கள் யார் என்று வினவ, பூர்வத்தில் நாங்கள் பசுக்கள், இப்போ புனிதமாதர்களாய்ப் பிறந்திருக்கிறோம் எங்கள்குடியிருப்பு ஆனுலகென்றார்கள். அம்மொழியைக்கேட்ட பசுக்கள் எங்களையும் ஆனுலகடைவிக்க மாட்டுவீர்களா என்றுகேழ்க்க, நீங்கள் யாவரும் இந்த அந்திதேவரிஷியினுடைய யக்கியப்பசுக்களாய் உயிர்விட்டீர்களானால் ஆனுலகம் அடைவீர்கள் என்று சாற்றினார்கள். கேட்ட கோவினங்கள் அந்திதேவனுடைய யாகத்தில் பிராணனை விடும்படி நிச்சயித்து நாம் முத்தியடைவது பெரிதல்ல, சம்ரக்ஷித்துவருகிற சுமித்திர முனிவரையுங் கரையேற்றவேண்டும், அவரை நாம் அழைத்தால் வரமாட்டார், அவர் வராவிட்டாலும் பலவந்தம் பண்ணி அவர் பிராணனை மாய்த்துப் பசுலோகங்கொண்டுபோவது பாக்கியம், இதினால் நமக்குப் பாவமில்லையென்று பசுக்கள் ஒன்றுகூடி, சுமித்திரமகாரிஷியின் முன்பாக வந்துநின்று அவர்முகத்தை

யேறெடுத்துப்பார்த்து, அவரைக் கொல்ல முன்பின் யோசனை பண்ணிக் கொண்டிருந்தன.

அந்த ஊரிலிருக்கும் வேறு சில கபிலைப்பசுக்கள் இந்த மந்தைப் பசுக்களைப் பார்த்து, நீங்கள் அவரைக் கொல்லமாட்டீர்கள், நீங்கள் காட்டில் வாசஞ்செய்கிறபடியால் உங்களுக்குத் துணிவு போதாது, நாங்கள் நாட்டில் வாசஞ்செய்கிறபடியால் எங்களுக்கு நானாவித உபாயங்கள் தெரியும். அவரைக் கொல்லவேண்டுமானால் நாங்கள் செய்கிறோம். அவரைக்கொன்றால் எங்களுக்கென்னவரும் என்று கேட்க, எங்களையார் அன்பாக தானம்கொடுக்கிறானோ அந்த கோதானபலனுக்கு நூரத்தனைபலன் உங்களைத் தானம் பண்ணுகிறவனுக்குக் கிடைக்கும்படி வரங்கொடுத்தோம் என்று செப்பி, மந்தைப்பசுக்கள் சுமித்திரரைப்பார்த்து நீர் எங்களை சம்ரக்ஷித்த கடமைக்காக பசுபதங்கொடுக்கிறோம் வருகிறீரா என்றுரைக்க, அவர் அதற்கிசையாமல் முகத்தைச் சுளுக்கினார். உடனே பக்கத்தில் நின்ற கபிலைப்பசுக்கள் அந்த ரிஷியை மாய்த்தன. சகலதேவருங் கொண்டாட அவர் ஆனுலகம் அடைந்தார். நல்லகாரியத்திற் கிடங்கொடாமல் முகத்தைச் சுளுக்கினபடியால் பிராமணாள் முகத்தில் அசுசியாகிய மூதேவிவாசம், அதைப் பிராதக்கால ஸ்நானத்தினாலும் பிரம்மகாயத்திரி முதலிய மந்திரங்களாலும் நாள்தோறும் போக்கிக்கொள்ளுகிறார்கள். மேலும் ஒரு மகாரிஷி முதுகில் வளர்ந்திருந்த ஒருமூங்கிலைக் காமதேனுவானது வாலினால் வீசி அம்மூங்கில்வேர் அறுந்து விழுஞ்சமயத்தில் அந்த ரிஷிக்கு உபத்திரங் கண்டு சீமூதேவியென்று திரும்பிப்பார்த்து உரைத்தார். அதினாலும் மேற்கண்ட மகாரிஷியைக் கொன்ற தோஷத்தினாலும் அன்றுமுதல் பார்ப்பார் முகத்திலும் பசுமுகத்திலும் அசுசம் தங்கி யிருக்கின்றமையால், அவர்கள் முகத்தில் விழிக்கலாகாதென்ற வதந்தி யுண்டாயிற்று. ரிஷி வளர்த்த பசுக்கள் அந்திராசனிடத்தில்போய், மகானுபாவா! நாங்கள்நற்கதி பெறும்படி எங்களையாகப்பசுக்களாக்கி அக்கரைசேர்ப்பியும் என்று வேண்ட, ராசன் திகைத்து இத்தனை பசுக்களையும் எந்த யாகத்தில் முடிக்கிறது. உங்களை நான் கொல்லமாட்டேன் என்றான். ராசனே! நாங்கள் மனப்பூர்வமாய், நல்லகதி யடைய விரும்புகிறோமாதலால் இதை முன்னிட்டு உமக்கும் நற்கதி யுண்டாம், சிந்தியாமல் யாகத்தை நடத்துமென்றன. ராசன் யாகசாலை யேர்ப்படுத்தி ஒரு ஆயிரம்வருஷம் கோமேதம் புரிந்தான். யூபஸ்தம்பத்தில் பசுக்களை தர்ப்பையினால் கட்டுகிறபோது அந்திராசன் பசுவினங்களை நோக்கி, ஒ தருமசொரூபிகளே! உங்கள்பேச்சைநம்பி யாகஞ்செய்கிறேன். உங்களை பலியிடும்போது நிஸ்சஞ்சலமாய் நீங்கள் மகாதேவனை சிந்திக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் துன்புற்றுக் கண்ணீர்விடுவீராகில், தக்ஷணம் யாகத்தைநிறுத்திப்போடுவேன் என்றான். அம்மொழிக்கு ஆவினங்களும் ஒத்துக்கொண்டன. இராசன் அதுபோல் யாகத்தை நடத்தி வரும்போது ஒருநாள் யூபஸ்தம்பத்தில்

ஒரு பசுவைக் கட்டிவைத்தார்கள். அதின் கன்று தாயினிடத்தில் வந்து நிற்க, பசுவானது கன்றின் உடம்பைநக்கி உன்னை இன்றுமுதல் யார் ஆதரிப்பார்களோ! நான் இதோ யாகப்பசுவாய்ப் போகிறேன், பாசபந்தம் ஆசை பொல்லாது என்று கண்ணீர்விட்டது. இராஜன் இதைப்பார்த்தமாத்திரம் அம்மட்டில் யாகத்தை நிறுத்திவிட்டான். மனவுறுதியாய் யாகத்தில் மாண்ட பசுக்கள் எல்லாம் தேவர்கள் கொண்டாட ஆனுலகம் அடைந்தனவாம்.

கபிலைமகிமையுரைத்தகதை.

கேளும் தருமநந்தனு! பசுக்களில் கபிலைப்பசுவென்று வேறே பிழுத்துப் பகர்ந்தமையால், அந்தப் பசுவுக்கு நிறம் குணம் முதலியவை மற்றைப் பசுக்கள்போல் அமைந்திருந்தாலும் காதுங் கண்ணும் மடியும் மூக்கும் கறுப்பாயிருக்கும். இவைகளில் ஒரு குறிப்பிருந்தாலும் அதையும் கபிலை என்று சொல்லுவார்கள். இப்பேர்ப்பட்ட பசுவை யாரேனும்பூசித்து அர்ச்சனைசெய்துதர்மதேவதையென்றுபாவித்துப்போற்றினால், அவர்களுடைய சகல பாவங்களும் நசித்து மேன்மையிற் சிறந்த மேலானகதி பெறுவார்கள். அதைப் பட்டினிபோட்டு சம்ரட்சிக்காமல் இம்சைபண்ணினவர்கள் தீராத நரகத்தில் உழலுவார்கள். கபிலைப்பசுவின்பாலை மனிதர் சாப்பிடப்படாது, அந்தப்பால் சுவாமிகள் அபிஷேகத்துக்கு அருகமாயிருக்கும். கபிலைப்பசுக்களுக்கு இவ்வளவு மாகாத்துமியம் வந்தகாரணம் யாதென்னில், முற்காலத்தில் அக்கினிதேவன் தேவதைகளிடத்தில் மனஸ்தாபப்பட்டு கபிலைப்பசுவின்வயிற்றில் ஒளித்துக்கொண்டான். அந்தஉளவறியாமல் அக்கினிதேவனை எங்குந்தேடியுங்காணுமல்வருந்திஅந்த கபிலைப்பசுவினிடத்துக்குவந்து அக்கினிதேவன் எங்கே மறைந்திருக்கிறுனென்று கேட்டதற்கு, என் உடலில் இருக்கிறுனென்று மெய்மை கூறிற்று. உடனே அக்கினிதேவன் வெளிப்பட்டான். தேவர்கள் அவனை சமாதானப்படுத்தி அழைத்துப்போனுர்கள். அந்த நாளில் தேவதைகள் கபிலைப் பசுவைப் புகழ்ந்து உலகில் உங்களைப் பூசித்தபேர்களுக்கு பூர்ண பதவி கிடைக்குமென்று அருளினர்கள். அதுமுதல் கபிலைகளுக்குப் பரிசுத்த மாகாத்துமியம் உண்டாயிற்றென்று பீஷ்மர் விளம்பினுர்.

சிராத்தவிதி.

இவ்வுலகத்தாருக்குப் பிதிர்தேவதைகள் முக்கியம். தேவர்களுக்கு யக்கியத்தினுல் திருப்தி செய்வதுபோல் பிதிர்தேவதைகளுக்கு அன்னம் தர்ப்பணம் முதலிய சிராத்தங்கள் யக்கியம் என்றறி. பிராமணுளுக்கு அன்னம் பகிர்தல், எள்ளுடன் தண்ணீர் கலந்து விடுகிறது, பிண்டம் பிண்டமாய்ப் பிடித்து பிதிர்களை உத்தேசித்துக்கொடுக்கிறது. விலங்கினத்தைவிட்டு விதித்திருப்பதைச் சேர்த்து வேதவித்தாகிய வேதியனை வைத்துக்கொண்டு சாஸ்திரவிதிப்பிரகாரம் திதிகொடுப்பாராகில், பிதிர்

கள் நற்கதி பெறுவார்கள். முக்கியமாய் செப்பியிருக்கின்ற .யக்கியம் ஐந்தில் பிதிர்க்கருமம் பிராதாந்நியம். இந்தப் பிதிர்கருமத்தைப் பெரியோரைக் காணும்போதுஞ் செய்யலாம், புண்ணியதீர்த்தங்களைக் கண்டபோதுஞ் செய்யலாம், அல்லது பிதிர்த்தினம் வந்தபோதுந் தப்பாமல் செய்யவேண்டும். அப்படிக்கு செய்யாவிட்டால் அந்தவம்மிசம் நசித்து மீளாநரகத்தில் வீழ்வான். விஜ்ஞாநேஸ்வரீயமென்ற மானவ சாஸ்திரத்தைப்பார்த்தால் இதின்விவரங்கள் விளங்குமென்ருர்.

விரதமகிமை.

தபசு செய்கிற ரிஷிகள் உபவாசமிருப்பார்கள். இல்லறத்தாருக்கு ஏதாகிலும் காரியத்தாழ்ச்சி வந்தால் அக்காரியங் கைகூடும்வரையில் இத்தனைநாள்என்று குறித்து விரதமிருப்பார்கள். இவைகளில் பெரியவிரதம் ஒன்று உண்டு. அதாவது இல்லறத்தான் அவனவன் குலாசாரம் தப்பாமல் நடப்பது மேலானவிரதம்.

தானத்துக்கு தக்ஷிணை திரவியம் இல்லாமல் செய்யலாகாதா என்ற தருமர் வினவுதலுக்கு:

முற்காலத்தில் பரமேசுவரன் தன் வீரியத்தை அக்கினிபகலானிடத்துவைத்துவைத்தார். அக்கினிதேவன் அதை நிர்வகிக்கமாட்டாமல் தத்தளிக்கும்போது, கொஞ்சம் பூமியில் சிந்த, அது உடனே சொர்ண்மாயிற்று. அந்தத் தங்கத்தை எந்தத்தானஞ்செய்தாலும் அதை கூட வைத்துக் கொடுக்கவேண்டியது அவசியம். இல்லாவிட்டால் பலன் இல்லையென்று விதித்திருக்கிருர்கள். ஆனதால் சொர்ணம் எல்லாப்பொருளுக்கும் மேலானது, பாபவினையைப்போக்குவது. அயோக்கியன் யோக்கியனுகிறதுமுதலிய எல்லாம் இதனுல் உண்டாகும், எந்தக்காரியமும் ஈஸ்வரசகிதமான இரண்ணியத்துடன் நடத்தப்படுமென்ருர்.

கபிலையின் கோமயம் விசேஷமென்றமையால் அதன் விவரத்தை அருளிச்செய்யுமென்ற பிரசினைக்கு:

பூர்வம் மகாலட்சுமியானவள் கபிலைப் பசுக்களிடம் போய், நான் உங்களிடம்வசிக்க அபேக்ஷிக்கிறேன். நீங்கள் என்னிஷ்டப்படி வரங்கொடுக்கவேண்டுமென்ன, இலட்சுமீ நீ எங்குந் தங்குவதில்லை, நிலையில்லாதவள், நீ போனபிற்பாடு உன்னை நினைத்துக் கிலேசப்படவேண்டியிருக்கும், நீ எங்களிடம் இருக்கவேண்டாமென்று வெறுத்தன. கோவினங்களே! நான் உண்மையில் ஒருவரிடத்தில் தரிக்கிறதில்லை, எனெனில் தூய்மை இல்லாதாரிடத்தில் நான் தங்கமாட்டேன். நீங்கள் புனிதர்கள். யக்கியத்துக்குயோக்கியாள். உங்களிடத்தில் வாசமாயிருக்க எனக்கு இஷ்டம்

நீங்கள் என்னைப் புறக்கணித்தால் என் பெருமையை யார் கொண்டாடு வார்கள் என்று மகாலட்சுமி கபிலைகளுக்கு இனியவசனங்கூற, அப்படியானால் நீ எங்கள்சாணத்தில் வாசமாயிரு. அந்தச்சாணம் கோமயம் இவைகளினால் சகல அசுசிகளும் போக்கி புனிதங்களாக்கும் என்றது, அது முதல் மகாலட்சுமி சாணத்திலும் கீர்த்திலட்சுமி கோமயத்திலும் வாசமாயிருக்கிறார்கள் என்றார்.

சந்தேகவழிகளால் சம்பாதிக்கும் பொருளை தானமாகக் கொடுக்கப் பட்டவர்களுக்கு எந்தகெதி கிடைக்கும் என்ற தருமர் பிரஸ்னைக்கு:—

பின்வருங் கதையை உதகரிக்கிறேன் கவனமாய்க் கேளும்.

சப்தரிஷிகள் கதை

அத்திரி, வசிஷ்டர், சமதக்கினி, கௌசிகர், பாரத்துவாசர், கௌதமர், காசிபர், இவ்வேழு ரிஷிகளும் ஈரேழுலோகமும் துதிக்கப்பெற்ற பெரியோர். அருந்ததி வசிஷ்டரை விட்டுப்பிரியாதவள். சண்டலியென்பவளும் அவள்நாயகன் பசுசகரிஷியும் ஆக இன்னோர் பதின்மரும் தவசு பண்ணிப் பூலோகத்தில் சஞ்சரிக்கும் நாளில் மழையில்லாமல் க்ஷாமமுண்டாகி, இந்த மகாநுபாவர்களுக்கு கந்தமூலபலாதிகள் அகப்படாமல் பசியினால் வருந்தி செத்தபிரேதத்தைப் புசிக்க எத்தனப்பட்டபோது, வேட்டைக்கு வந்த விடதருவன் என்கிற ராஜன் இவர்கள் இருக்கும் நிலையைப் பார்த்து ரிஷிகளாகிய நீங்கள் உங்கள் பசிக்காக பிணத்தைப் புசிக்க வந்தீர்களே. நான் வேண்டுந் திரவியத்தையும் பலதானியங்களையும் அளிக்கிறேன் பெற்றுக்கொள்ளுங்கள் என்றான். இப்போது உடலாசைஎங்களுக்கில்லை. பிணத்தைத் தின்றுவது க்ஷுத்பாதையைத் தீர்த்துக்கொள்வதே இவ்வேளைக்குத்தகுதி. ஒருவரிடத்தில் குறைகூறி வாங்கக்கூடாது. அல்லவென்று வாங்கினாலும் தர்மத்தின்வழியில் சம்பாதித்த பொருளை வாங்க வேண்டும். கெட்டசொத்து கொடுங்கோன்மன்னர் பொருள், அப்படிப் பட்ட பொருளை நாங்கள் உன்னிடத்தில் பெற்றுக்கொள்ளமாட்டோமென்றார்கள். இராசன் மனத்துயரமடைந்து ஊருக்குத் திரும்பி வந்து, அறிவாளிகளிடத்திலும் மந்திரிகளிடத்திலும் இழிதர்மவழியில் தேடிய பொருள் விஸ்தாரமாயிருந்தாலும் தானத்துக்கு அயோக்கியமென்றும் அறத்தின்வழியில் வந்தபொருள் தானயோக்கியமென்றும் சப்தரிஷிகள் மொழிந்ததைத் தெரியப்படுத்தி, அரசனும் மந்திரியும் ஆலோசித்து, காய்கனிகளுக்குள் திரவியங்களை வைத்து மறைத்து மந்திரிமூலமாய் சப்தரிஷிகளுக்கு அனுப்பிவைத்தான். அந்த சூக்ஷ்மத்தை அறிந்துகொண்ட ரிஷிகள் அதை மறுத்துத் திருப்பிவிட்டார்கள். மந்திரி ராசனுக்குத் தெரிவித்தபோது ராசனனவன் ரிஷிகளைச் சதிசெய்யக்கருதி ஒரு யாகத்தைச்செய்து அதிலிருந்து புறப்பட்ட ராக்ஷசியை ரிஷிகள்பேரில் ஏவினன். நிஷ்டைதெளிந்தெழுந்த ரிஷிகளும் பத்தினிமார்களும் பசியாறிக்

கொள்ள ஒரு பொய்கையில் தாமரைகளைத் தின்ன வந்தபோது அந்த ராக்ஷசி அவர்களெதிரில் நின்று, நீங்கள் யார் ஏன் இந்தத் தடாகத்தில் வந்தீர்கள் என்று உறுக்கினள். நீயார் அரக்கி உன் பூர்வோத்தரமென்ன வென்று ரிஷிகள் கேட்க, இந்தத்தடாகநீரை ஒருவருந் தொடாமலும், எவருக்கும் உதவியாகவொட்டாமலும் காவற்காக்கப்பட்டவள் என்றாள். நாங்கள் இந்தக் குளத்திலிருக்குந் தாமரையைத் தின்று பசியாறி தவத் துக்குப் போகவந்தோம் என்றனர் உங்கள்பெரை சொல்லுங்கள் என்று அளள் பிடிவாதம் பண்ணினபோது இவள் அரக்கி என்றும் இவளைத் தங்கள்மீதேவினவன் இராசன் என்றும் தெரிந்துகொண்டு, தங்கள் சொந் தப்பேரைச்சொல்லாமல் மாறுபேரைச் சொன்னார்கள். இப்படி யிருக் குந் தருவாயில் அகஸ்மாத்தாய் வேறொரு ரிஷி அவ்விடம் வந்து இவர்க ளைக் கண்டு வசனிக்கும்போது, இந்த அரக்கியானவள் ஓடிவந்து, ஓய் புதியவரே! உம்முட பேரென்ன வென்றாள். அந்த மகாரிஷி தன்பேரைச் சொல்லினர். பின்னும் ஒருவிசைக்கேட்டாள், மறுபடியுஞ் சொன்னர். அப்பெயரின் அர்த்தம் அவளுக்கு விளங்காமையால் மேலு மேலும் கேட்டாள். அதனல் ரிஷிக்கு கோபஞ்செனித்து கையில் பிடித்திருந்த தண்டத்தை சுழட்டி அவள்மேல் எறிந்து தலையை துண்டித்தார். அவரு டைய கோபாக்கினியானது அவள் தேகத்தை பஸ்மீகரம் பண்ணிப்போ ட்டது. சப்தரிஷிகள் சந்தோஷப்பட்டு அந்த ரிஷியையும் அழைத்துக் கொண்டு தடாகத்தில் நீராடி தாமரைத்தண்டு இலை பூ காய்களைப் பிடுங் கிப் பெரியசுமையாய்க் கட்டிக் கரையில் வைத்துவிட்டு யாவருஞ் செபத் திலிருந்து, கண்விழித்துப் பார்த்தபோது கட்டிவைத்திருந்த சுமை கா ணுமல் போனத்தினல், நீங்கள் யாராவது எடுத்தீர்களா என்று கேட்ட தற்கு ஒருவரும் அறியோம் என்றனர். பிரமாணம் பண்ணுங்கள். கனக ரிஷியே! நாங்கள் கூறும் பிரமாணத்துக்கு நீர் சாட்சியாயிரும் என்று ஒவ்வொருவருஞ் சொல்ல ஆரம்பித்தார்கள். அத்திரி ரிஷியின் பிரமா ணம்: நான் அந்தச்சுமையை எடுத்ததில்லை எடுத்தபேரைப் பார்த்ததுமில் லை. எடுத்திருந்தாலும் பார்த்திருந்தாலும் பசுவை உதைத்து அடித்தவர், சந்திரசூரியருக்கெதிரில் மலமூத்திரம் விடுத்தவர், வேதவிதிதப்பி நடந்த வேதியர், வேள்விகளில் மந்திரக்குறைவு பண்ணினவர், இவர்கள் அடை யும் பாவத்தில் நான் போகக்கடவேன் என்றார். வசிஷ்டர் பண்ணின பிர மாணம்: வேதம் படியாத வேதியன்; துறவியாகி பெண்போகம் விரும்பி னவன், ஆளைக்கடிக்கும் நாயைக் கூடக்கொண்டுதிரிபவன், அடுத்தாரைக் கெடுப்பவன், ஆசாரநெறி தப்பினவன், அன்னமிடாமல் உண்டவன், இவர்கள் அடையும் கெதியில் நான் செல்லக்கடவேன் என்றார்.

காசிபர் கூறிய பிரமாணம்: பெற்ற பிள்ளையை விற்று உண்ட வன், சரணமடைந்தவனைத்தள்ளி இகழ்ந்தவன், திரவிய மிருந்தும் தீனர் களை இரட்சியாதவன், பெரியோரை நிந்தித்தவன், பொய்சாட்சி புகன்ற வன், கர்மமாகிய தானங்களை ஒருநாளில் இரண்டுதரம் வாங்கினவன்,

எடுக்கப்படாத சுமையை எருதின்பேரில் ஏற்றினவன். எருது மூக்கி யிழுத்துச் சம்பாதித்ததைக்கொண்டு சீவனம் பண்ணுகிறவன், பசுவைக் காப்பாற்றாதவன், இவர்கள் போகிற போக்கில் நான் போகக்கடவேன் என்றார். பாரத்துவாசர் பண்ணிய சத்தியம்: ஞானிகளை வஞ்சித்தவன், ஞானிகளை இரக்ஷியாதவன், பசுக்களை விற்றுப் புசிப்பவன், ஐயமிட்டுண் ணாதவன், தெய்வாலயம் தருமசத்திரம் இத்தியாதிகளை இடித்தவன், வழி யை யடைத்தவன், இவர்கள் கெதியே என்கெதியும் ஆகட்டுமென்றார். ஜமதக்கினி சாற்றியப்பிரமாணம்: வீடுதூரஸ்திரீயுடன் மேவினவன், தீர் த்தங்களில் மலஞ்சலம் விட்டவன், பெண்களைக் கூட்டிக்கொடுத்து சீவ னம் பண்ணுகிறவன், கொண்டவள்மனசு குன்றச்செய்தவன், இவாள் அடையும் நரகம் எனக்கு லபிக்கட்டுமென்றார். கௌதமர் பிரமாணவாக் கியம்: பெரியோரை மனமுறியப் பேசினவன், அகந்தை படைத்தவன், தான்செய்த தர்மத்தை நடுவில் விட்டு விலைக்குக் கொடுத்தவன், நித்திய அக்கினிஹோத்திரத்தை நீக்கினவன், அவித்தியன், ஆத்துமக்கியானமற் று தன் தாரத்தைவிட்டுப் பிறர்மனையாளைப் புணர்பவன், சோரஸ்திரீயிட த்தில் அன்னம் வாங்கிச் சாப்பிட்டவன், பெரியோருக்குப்பொருளுதவா மல் வழக்காடிக் கெட்டவன், நல்லோரை நிந்திப்பவன், பின்புறணி பேசு வோன், இவர்கள்அடையப்போகிறகதி என்கெதி யாகட்டுமென்றார். விசு வாமித்திரர் இட்டஆணை: சதுரங்க சேனைகளைக் காப்பாற்றாத ராசாக்கள், வேலைக்காரரைக் கடுகடுத்துப் பேசுவோன், குடிகளை வருத்தி வரியிறை வாங்குவோன், அநியாயத்தீர்வை அநியாய தண்டனை விதிப்பவன், தீர விசாரியாதவன், பட்சபாதம் பேசுவோன், நோயாளிகளைக் காப்பாற்றாத வன், மறுவிக்கியானம் படியாதவன், மந்திரிமார் மாற்றார் வார்த்தையை நம்பினவன், இத்தியாதியோர் கட்டும் பாபமூட்டை என்மூட்டை யாகு மென்றார். இந்த எழு ரிஷிகளும் சொன்னதை சுனகரிஷி கேட்டு, அருந் ததியை நோக்கி நீயும் பிரமாணம் பண்ணவேண்டுமென்றார். அருந்ததி வாக்கியம்: மாமன் மாமிபேரில் அன்பில்லாமல் நிந்தைசெய்பவள், சண் டையிட்டுத் திட்டுகிறவள், தன்புருஷனுடன் தாறுமாறாய்ப் பேசுபவள், புருஷன் குறையைப் பிறரிடத்தில் சொல்லுபவள், புருஷன் போசிப்பெ டுக்குமுன்னே தான்புசிப்பவள், பிள்ளையை வஞ்சித்தவள், கருவழித்த வள், அதிகாலையில் எழுந்திருக்காதவள், இவர்கள் புகுங்கதிக்கு அடியாள் பாத்திரம் என்றாள்.

அருந்ததியின் தோழிப்பெண் சொன்னதாவது:—சமையல்செய்து காலமறிந்து தன் புருஷனுக்கிடாதவள், வீட்டுவேலைசெய்ய மனமில்லாத வள், பொய்பேசுகிறவள், விலைக்கு வாங்கிய பெண்ணை கிரமமாய்க் கலியா ணஞ் செய்துகொடாமல் தன்புருஷன் முதலியபேர்களுக்குக் கூட்டிவை த்துத் தன்கருத்தை முடித்துக்கொள்ளுகிறவள், பிச்சையிடாதவள், இவர் கள் எந்தக்கெதி பெறுவார்களோ அந்தக்கெதியை யான் பெறுவே னென்றாள். பசுசகர் பாசுரம்: நான் அந்தத் தாமரைச் சுமையை

எடுத்திருந்தால், வேசிப் பிள்ளையாயும் ஒருவனுக்கு அடிமையாயும் போவேன் என்றார். இவர்கள் எல்லோரும் சுனகரைப் பார்த்து, உம்முடைய செய்தி என்னவென்றதற்கு, சுனகர் வாக்கியம்: நான் அந்த கிழங்குமூட்டையை எடுத்திருப்பேனாகில், வேதப்பிராமணருக்கானாலும் ரிஷிகளுக்கானாலும் ஒருவன் பெற்றபெண்ணை சகல அலங்காரத்துடன் கன்னிகாதானங் கொடுப்பதினால் வரும்பலன் எதுவோ அப்பலனை நான் அடைவேன் என்றார். இவர் செய்த சத்தியமானது இவரே எடுத்தவரென்று அர்த்தமானவுடனே, மூட்டையைத் தாருமென்று கேட்டார்கள். சுனகரிஷியாயிருந்தவர் உடனே தேவேந்திரன் ரூபமாகி நான் உங்களுக்குப் பண்ணின அபசாரத்தை க்ஷமியுங்கள், மாயாரூபமாய் வந்த ராக்ஷச ஸ்திரீயைக் கொல்லவும் உங்கள் வாக்கினால் தருமசபதங்களைக்கேட்கவும், தாமரைக்கிழங்குமூட்டையை நான்தான் மறைத்தேன். நீங்கள் வைத்தயிடத்தில் இதோ இருக்கிறது. பசியாருங்கள், இனி மழை வருஷிக்குமென்று அப்பிரத்தியக்ஷமாயினர். அப்பால் மழை வருஷித்து பூமி செழித்தது, ரிஷிகளைச் சதி செய்த அந்த ராஜன் இவர்களிடம் வந்து பணிந்து பொறுமைக் கேட்டுக்கொண்டான். தருமநந்தனா! மேற்கூறிய வண்ணங்களில் பொருளைத்தேடாமல் சுத்த தர்மவழியில் சம்பாதித்தால் இவ்வுலகில் சுகத்தை அனுபவித்துப் பரகதி பெறுவான் என்றார்.

ஐயா பெரியவரே, பாதரட்சையும் குடையும் தகப்பன் திதியில் தானங் கொடுத்தால் என்னபலன் பெறலாம் என்ற வினாவுக்கு.

பீஷ்மர் விளம்புகின்றனர்: பூர்வத்தில் சூரியனுக்கும் ஜமதக்கினிக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று எப்படியெனில் ஜமதக்கினி ரிஷியானவர் தன் பத்தினி ரேணுகாதேவியுடன் ஒருவெளியில் நின்றுகொண்டு, தமதுவில்லில் அம்பைவைத்தெய்து விளையாடிக்கொண்டிருந்தார். விடுகிறஅம்பு ஒவ்வொன்றையும் ரேணுகாதேவி ஓடி ஓடி எடுத்துவந்து கொடுத்து ஒருதடவை சற்றுமெதுவாய் வந்ததைப்பற்றி ரிஷியானவர் பெண்சாதியைக் காரணங் கேட்டார். சூரியவெப்பத்தினால் மரத்து நிழலில் தங்கிவந்தேனென்றாள். தன் பெண்சாதியை வருத்தினத்தினால் சூரியனை பஸ்மீகரம் பண்ணுகிறேனென்று கோபப்படுஞ் சமயத்தில், சூரியபகவான் ஒரு வேதியரூபமாய் ரிஷிக்கெதிரில் வந்து, சூரியன்மீதில் நீர்கோபிக்கலாமா, அவர் உலக உபகாரி, அவர் இல்லாவிடில் உலகமே,கிடையாது. நீர் ஆத்துமக்கியானி! க்ஷமியுமென்று தன் நிஜரூபத்தைக் காட்டினார். ஜமதக்கினி சூரியனை மிகவும் உபசரித்து வாழ்த்தினார். சூரியன் தன் வெப்பம் படாதிருக்க அவருக்குப் பாதரட்சையும் குடையும் அளித்துக் குடையுஞ் செருப்பும் பெரியோருக்குத் தானம் ஈய்ந்தோர் நற்கதி

யடைவார்கள் என்று வரமளித்து மறைந்தனன். ஆகையால் தருமநந்தனு! தகப்பன்திதியில் பெரியோர்களுக்குச் செருப்புக்குடையுந் தானஞ் செய்தால் சூரியமண்டலவாசங் கிடைக்குமென்றார்.

சவுசவிதியைப்பற்றிய கேள்வி.

கேளாய் யுதிஷ்டிரனே! இரவினும் பகலினும் மலஞ்சலங் கழிக்கும்போது தெற்கே முகமும் வடக்கே பிருஷ்டமுமாய் உட்காரவேண்டும். காலமூன்றினும் மலபாதைக்குப் போகும்போது தலையைமூடி ஒருவர் கண்ணினும் படாமல் பூமியைப் பார்த்தபடி மூன்றுதரங் கைதட்டி உட்கார்ந்து மலங்கழித்து இடதுகரத்தில் மிருத்திகையும் வலதுகரத்தில் சலமுங்கொண்டு குதத்தைச் சுத்திசெய்து இருகரத்தையுஞ் சேர்த்துத் தேய்த்து இரண்டு முழங்கால்மட்டும் மண்ணினுல் கழுவி பலதரம் வாய்கொப்புளித்து ஆசமனஞ்செய்து பூணூலைச் சவ்வியமாய் அணிவது இல்லறந் துறவறமாகிய இருநெறியாளர்க்கும் ஆசாரமாம். பின்குலமானபேர்கள் தனக்கு முன்குலத்தார் சொல்லிய காரியங்களைச்செய்து இருடியரை வழிபடுகிறதே காரியம். சூத்திரன் தன்னுட மனத்தூய்மைக்கு அரிதான ஆசாரத்தில் இருந்து வேதியருக்கும் ரிஷிகளுக்கும் வழிபட்டு நடந்தானேயாகில் யாவற்றினும் மேலான பதவியைப் பெருவானென்று அறிந்துகொள் என்றார்.

க. காட்சிப்பிரமாணம்.

கிரியாணக்குறிப்பைப்பற்றின பிரஸ்னைக்கு:—மரணக்குறி அறியுந்தன்மை:—க. தெற்கிருந்து வடக்கும் வடக்கிருந்து தெற்கும் போகிறவர்களைப்பார்த்தால் திசை மாறுபாடாய்க் கண்ணுக்குத் தோன்றுதல். உ. பிங்கலையில் சரமானது ஒருபகல் எட்டு முகூர்த்தம் மாருமல் ஒதுங்கியே யோடுதல். ௩. ஜென்மலக்கினத்தில் சூரியன் வருகையில் சந்திரன் ஏழாம் இடத்தில் சூரியனுடன் கூடின உஷ்ணகாலத்தில் தன் உயரத்துக்குச்சரியாய் கறுத்த உருவம் தோற்றுதல்.—இக்குறிகளுக்கு மூன்று வருஷம் கெடுவு ச. சூரியமண்டலம் கண்ணுக்குக் காணுமலும், கண்ணை மூடிப் பார்க்கையில், சூரிய கிரணங்கள் தோன்றுமலும் போகுதல். ரு. பிங்கலையில் சுவாசம் இரண்டுபகல் ஒதுங்கியோடுதல். சு. தன் உடற்சாயலானது வெயிலில் தோன்றுமை, அல்லது தோன்றும்போது தொண்டியாய்க் காணுதல் எ. சுவாசமானது மூன்றுநாள் ஒரேபுறமாய் ஒதுங்கி யோடுதல்.—இக்குறிகட்கு ஒரு வருஷம் கெடுவு. அ. தேகத்தின் நிழல் பலபலரூபமாய் மாறிக் காணுதல். கூ வாயில் சலத்தை விட்டு வெயிலுக்கெதிரில் கொப்புளித்து உமிழ்ந்தால், இந்திரதனுசு காணுமற்போகுதல் க0. உதடும் நாவும் பல்லும் கறுத்துப்போகுதல்.

௧௧. இருதயஸ்தானம் கை கால் இவை ஸ்நானம் பண்ணும்போது நனை யாமற்போகுதல். ௧௨. மெய் வாய் கண் மூக்கு செவிகள் ஐந்தும் முறையே கெட்டுப்போகுதல்.—இவைகண்ட குறிகளுக்கு ஆறுமாதம் கெடுவு. ௧௩. நாக்கு நுனியால் மூக்குமுனையைத் தொட்டு அப்பியாசித்தவனுக்கு எப்போதாகிலும் நாக்குநுனி மூக்குமுனையைத் தொடக்கூடாமற் போகுதல்.—இதற்கு அஞ்சுமாதம் கெடுவு. ௧௪. அவரவர் கையினல் இரண்டு காதையும் மூடிக்கொண்டு பார்க்கையில் ஓங்காரத்தொனி கேளாமற்போகுதல். ௧௫. கண்ணடியில் தலைதெரியாமல் உடல் தோன்றுதல். ௧௬. பருத்ததேகம் திடீரென்று இளைக்குதல், இளைத்ததேகம் திடீரென்று பெருக்குதல்.—இவைகண்ட குறிகளுக்கு ஒருமாதம் கெடுவு. ௧௭. அடிவைத்த இடத்தில் அடிச்சுவடு சிதைந்து காணுதல் ௧௮. சூரியனைப்பார்க்குமிடத்தில் இரண்டாய்ப் பிரிந்து தோன்றுதல். ௧௯. நட்சத்திரம் பட்டம்பகலில் கண்டு இரவில் தெரியாமற்போகுதல். ௨0. பூரணச்சந்திரனைப் பார்க்கையில் புகைபோற் காணுதல். ௨௧. துருவனிலை தெரியாமற் போகுதல்.—இக்குறிகளுக்கு சிலநாள்தான் கெடுவு. ௨௨. காதிலும் நாசியிலும் நடுக்கங்கண்டு இரண்டு கருவிழியுங் கரிந்து காணுதல். ௨௩. தன் நிழல் தென்பாரிசத்தில் தோற்றுதல். ௨௪. மலம் மூத்திரம் வீரியம் சுபாவங்கெட்டு மாறி வெளிப்படுதல், குறைதல். ௨௫. ஆகாயத்தைப் பார்க்கும்போது கறுப்பாய் யானைபோல் தோன்றல். ௨௬. தன் நிழற்சாயை அலைந்து காட்டுதல். ௨௭. பின்பக்கத்திலும் பிடரியிலும் தலைமேலும் பச்சை ஒணான் விழுதல்.—இக்குறிகளுக்கு உடனே மரணம். ௨௮. நெய் எண்ணெய் பால் இவைகளில் பார்க்கும்போது, தலை முகம் தெரியாமற் போகுதல்.—இக்குறிக்குப் பதினைந்துநாள்.

௨. சொப்பனப் பிரமாணம்.

௨௯. பேய் பூதம் நரி நாய் கழுதை அவுணர் இராட்சதர் அண்டங்காக்கை பருந்து குரங்கு புலிசெந்நாய் இவைகளைச்சமைத்து தின்னுகிறப்போல் கனவுகாணுதல். ௩0. எண்ணெய் நெய் தேய்த்துக்கொள்ளுகிறப்போலும், தலைமயிரை ஒருவன் பிடித்திழுக்கிறப்போலும், தன் பிடரியில் குத்தினல்போலும், தன்மேல் குதித்தேறினற்போலும், உலர்ந்த புல்லுச் சுமையை சுமக்கிறப்போலும், தென்திசைக்குப் பயணம் போகிறப்போலும், மரித்துப்போன தங்களுரியோர் தென்புறத்தில் நின்று சேதி சொல்லிக் கைகாட்டி அழைக்கிறப்போலும், குரங்கு ஒன்றைச் சங்கரித்து கிழக்குமுகமாய்க் கொண்டுபோகிறப்போலும் கனவுகண்டால்:—இக்குறிகளுக்குப் பதினைந்துநாள் கெடுவு. ௩௧. பெருங்குரலுடைய ஸ்திரீ தன்னைக் கட்டிக்கொண்டு அழுகிறப்போலும், கறுத்த உருவமாய்க் கரிக்கட்டைபோல் சொரூபமும் கையில்கெதையும் கறுப்புத்துணி போர்வையுமாகக் கனவு கண்டால், உடனே மரணம்.

௲. மானசப்பிரமாணம்.

௲௨. கேட்பவருக்கு இல்லையென்னமற் கொடுத்துவருகிறவன் மனச்சலிப்புப்பட்டு என்னத்திற்குக் கொடுக்கிறதென்று வெறுப்புக்காணுதல். ௲௩. ஒருநாளுங் கொடாதவன் கடைசிக்காலத்தில் எல்லோரும் ஆச்சரியப்படும்படியான தானதருமங்களுக்கு ஆரம்பித்தல்.—இக்குறிகளுக்கு சிலநாளிலே மரணங்காணும். இவ்வாறு இன்னம் அநேகம் குறிகளுண்டு. எல்லோருக்கும் இவை பொதுவென்னப்படாது. வாதம் பித்தம் சிலேஷ்மம் உவர்ப்பு கரகரப்பு இவை மேற்பட்ட தேகிகள், மேற்கூறிய குறிகளைக் குறிப்பாய்ப் பரிக்ஷிப்பாராகில் அவர்களுக்கு ஏதேனும் ஒரு குறி தட்டுப்படும் தட்டுப்பட்டால் மண் பெண் பொன் ஆசைகளை வெறுத்து தன் நிரியாண காலத்தை அறிவித்து தானும் நிஷ்டை கூடினவனுகி பிராணன் விடும்போது, கர்ப்பூரதீபம் காட்டும்படி செய்து ஆவியை விடுவானுகில், இகத்திற் பெரியவனென்று எண்ணப்பட்டு நற்கதியும் பெறலாமென்று பீஷ்மர் விளம்பினர்.

மானிடரில் தேவர்களுந் தொழப்பட்ட சிலர் உண்டா என்ற தருமர் பிரஸ்னைக்கு:—தருமார்த்த காமந்தவருமல் குற்றங்களை அகற்றி ஸ்திரீயை வெறுத்து அகந்தை மமதையற்றிருக்கிறவர்களையும், சத்தியமே பூஷணமாய்ப் பூண்டவர்களையும், ஒருவரும் அறியாமல் தருமஞ்செய்கிறவர்களையும் நான் ஆராதிக்கிறேன் என்று இந்திரன் தன்சாரதி மாதலிக்கு எடுத்துக் கூறினனென்று பீஷ்மர் விடைகொடுத்தனர்.

தடாகம் குளம் ஏர்ப்படுத்துகிறவனுக்கு என்னபலன் தருமென்ற தருமர் பிரஸ்னைக்கு:—தருமங்களில் அநேகம் உண்டு: அவைகளில் மேம்பாடானது தடாகப்பிரதிஷ்டை. தடாகத்தைச்சுற்றி தென்னந்தோப்பு முதலியவைகளை எற்படுத்துதலும் தருமந்தான். நாலாவது வருணத்தான் இப்படி செய்வானுகில் யக்கியம் பண்ணினபலன் அவனுக்குக் கைகூடும். நரகத்தில் ஆழ்ந்த அவன் முன்னேரும் நற்கதி பெறுவார்கள் என்றூர்.

பூஜாவிதி ஆசாரமுறை உரைத்தல்.

புஷ்பத்தின் பெருமை.—பரிமளமான வெள்ளைப் புஷ்பங்களால் கடவுளை அருச்சித்தால் தைரியம் வீரியம் விஜயம் சம்பத்து ஆயிசு அரோகதிடம் உடையவனுயிருந்து நற்கதி யடைவான். புஷ்பங்களில் கோட்டுப்பூ கொடிப்பூ நிலப்பூ நீர்ப்பூ என நான்குவகை. இவைகளில் உத்கிருஷ்டமான புஷ்பங்களினுலும் பத்திரங்களினுலும் அர்ச்சித்தால், கல்வி ஞானம் செல்வம் போகம் எய்தி பிறவிக்கடலைக் கடப்பதற்கு ஓடமாகும். சிவப்புப்பூவினுல் அருச்சனை புரிந்தால் நினைத்த போகபாக்கியமெல்லாம் கைகூடும், சத்துருஜெயமும் உண்டாம், நித்தியபதவி பெறலாகும். மஞ்சள் புஷ்பத்தினுல் அருச்சித்தால் மைந்தர் மனை வாழ்க்கை மாடு கன்று நிலபலம் குலம் தலம் இதெல்லாம் பெருமை யடைந்து தங்யனுவான். கறுப்புப் புஷ்பங்களை அருச்சனை பண்ணினுல் பாபரகிதனுகி வியாபார

மூலத்தில் பொருளுடையவனுகி முந்தி அஞ்ஞானத்துக் காளாயிருந்து, அப்பால் விஞ்ஞானம் மேலிட்டு மேலுலகம் அடைவான். பலபல நிற மான புஷ்பங்களை அருச்சிப்பதினுல் பெரும்புகழைப் பெறுவார்கள்.

சந்தனத்தின் மகிமை.

பொதிகை மலையில் வளர்ந்த சந்தணமரத்தின் கட்டையை இழைத் துச் சுவாமிக்குச் சாத்தினுல், தீராதபாவங்கள் தீரும். பரிமள தூபத்தி னுல் பிரமஹத்திதோஷம் நீங்கும். தருமத்துக்கும் நிதிக்கும் இருப்பிட மாவார்கள். அகில்சந்தனம் அரிச்சந்தனம் சாத்தினுல் போகசுகமும், வச்சிரதேகமும் புகழும் பெறுவார்கள். சாம்பிராணிப் புகையிட்டால் சிவன்முத்தர் தெரிசனங் கிடைக்கும். கர்ப்பூரதீபம் ஏற்றிவைத்தால் கயிலையில் வீற்றிருப்பார்கள்.

தீபப்பெருமை.

தீபங்களில் உத்தமமானது திருவிளக்கில் நெய்விட்டுப் பருத்திப் பஞ்சு அல்லது தாமரைநூல் வர்த்தியிட்டு ஏற்றினுல், சகல தீவினைகளுந் தீர்ந்து ஐசுவரியம் பெருகி அந்தியகாலத்தில் மோக்ஷம் பெறுவார்கள். தீபங்கள் ஏற்றிவைத்தால் அவர்களைச்சேர்ந்த புத்திர மித்திராதியோர் க்ஷேமமடைந்து புண்ணிய பூமியின்கண் அமர்வார்கள்.

நைவேத்திய நலம்.

கல்நெல் உமி மண் முதலாகிய அசுத்தமில்லாமல் நல்ல அன்ன மாய் பதார்த்தங்களுடன் நிவேதனம் பண்ணினவர்கள் அடையுந் தவத் திற்கு ஈடில்லை. பூசைமுகத்தில் அர்ச்சனை நைவேத்தியமில்லாதபோச னம் தேவாமிர்தமானுலும் பெரியோர் அங்கிகாரம் பண்ணமாட்டார் கள். அந்த அன்னம் விஷத்துக்குச் சமானம். பிச்சையிட்டு உண்ணுத அன்னம் புழுவுக்குச்சமானம். இப்பேர்ப்பட்டவர்களுடைய இல்வாழ்க் கையில் சாப்பிடவும்படாது. பூசைக்கும் நைவேத்திய போசனத்துக்கும் சமானமில்லையென்று தேவர்கள்முதல் யாவரும் போற்றியிருக்கிறுர்கள். காமியத்தை விரும்பிப் பூசித்தால் மேற்கதிக்கு இடந்திறக்கும்.

பிராமணன் சொத்தைக் கவர்வதினுல் வரும் பலன் யாது என்ற தருமர் பிரசினைக்கு:

அரசபந்துவென்னும் கிரீடாதிபதி ஒருவன் தன் பட்டணத்தில் நகர் சோதனைக்கு வரும்போது, நீசன் ஒருவன் அக்கிரார வீதியில் வந்தான். அவ்வேளையில் ஒரு சுழற்காற்றினுல் செந்தூளி பறந்தது. அந்தத்தூளி தன்மேற்படாமல் விலகிந்து ஒதுங்கி ஒடினுன். அதைக்கண்ட மாறுவே ஷம்பூண்ட ராஜன் அந்தப் புலையனைக் கூப்பிட்டு ஏன் ஒதுங்கிப் போனுய்

என்று வினவ, மகாராசனே ! என் தவத்தின் மகிமையினல் பூர்வக்கியானம் எனக்குத் தெரியும், நாள்தோறும் பிச்சையெடுத்துச் சாப்பிடப்பட்டவன், ஒருநாள் பலவீடுகளில் பிச்சையெடுத்து ஒரு அக்கிரகாரத் திண்ணையில் கொண்டுவந்துவைத்துப் புசிக்கப்போகிறவேளையில் ஒரு பார்ப்பினி திண்ணையைக் கூட்டினுள், அதில் எழும்பியதூளி என் பிச்சை அன்னத்தில் படிந்தது. அதைச் சட்டைபண்ணுமல் சாப்பிட்டேன், இது தான் என்னை அடைந்த பிராமணுள் சொத்து. மனதினுல் நான் ஆசித்தவனுமல்ல, அந்த தூளியைச் சேர்த்துச் சாப்பிட்ட தோஷமானது இந்த ஜென்மத்தில் நீசனுய்ப்பிறந்தேன். இன்னம் என்னகதி வருமோ என்று பயந்து பார்ப்பாரத்தெருவின் தூளி என்மேற்படாதபடி ஒதுங்கிப்போனேன், இந்த சண்டாள ஜென்மம் வந்ததை முன்னிட்டு நேற்றிராத்திரி ஈஸ்வரனைக்குறித்து தியானம் பண்ணிக்கொண்டு நித்திரை போகும்போது, ஒரு திவ்விய புருஷன் என்கனவில வந்து நீ கிலேசப்படவேண்டாம். நாளையதினம் அக்கிரார வீதியில் ஒருராஜன் உன்னைப்பார்த்து உன்னிடத்தில் ஒரு அதிசயங்கண்டு காரணம் என்னவென்று கேட்பான். உன் பூர்வ விருத்தாந்தத்தைச் சொன்னவுடனே இந்தப்பிறவியற்று நற்கதிபெறுவாயென்று சொல்லிப்போனுர். விழித்து மிகுந்த ஆசைகொண்டு இவிடம் வந்தேன், சொற்பனத்திற் கண்டபடி மகாநுபாவராகிய உம்மைக் கண்டேன், இதோ நான்போகிறேனென்று அப்பாலேவிலகி நீச்சதேகத்தைவிட்டு பிராமண தேகம்பெற்று மேலுலகமடைந்தான். இதை திருஷ்டாந்தமாகப் பார்த்தராஜன் மகாபயபத்தியுடன் அன்றுமுதல்பிராமணுள் வீதியில் அடிவைக்க அஞ்சித் தானும் தன் அரைசின் குடிகளும் வேதியர் பொருளை இச்சியாமலும் அவர்களுக்கு வேண்டுவன கொடுத்து நடத்தி வந்து சாய்ந்தகாலத்தில் நற்கதியடைந்தார்கள். தருமநந்தன என்று தீவினைவென்ற சிமான் உரைக்க, கோவினம் புரக்கும் கோமான் கேட்டுக்களித்தார்.

மோக்ஷ பூமியின் பெருமை.

கேளாய் தருமநந்தனு! சகல சாஸ்திர மகாபண்டிதராகிய கௌதம மகாரிஷி ஒருவனத்தில் வரும்போது, கறுத்தயானை ஒன்று குட்டிபோட்டவுடனே தாய் இறந்துவிட்டது. குட்டியானைவருந்தியழும்போது ரிஷியானவர்பரிதாபப்பட்டு அந்தக்குட்டியைத்தாம்கொண்டுபோய்ப்பிரியமாய் வளர்த்துவந்தார். அது நாளுக்குநாள் வளர்ந்து வருகையில் ஒரு சிஷனுக்கொப்பந்தம் சிலபணிவிடைகளைச் செய்தது. அதினுல் ரிஷியானவர் மேலுமேலும் அதின்மீது பிரீதிவைத்துவந்தார். அப்போது தேவேந்திரன் திரிதராஷ்டிர மகாராஜனைப்போல்வேடங்கொண்டு அந்த ரிஷியினிடத்தில்வந்து அந்த யானைக்குட்டியைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டான். தாயைப்பறிகொடுத்த அந்த யானைக்குட்டியை நான் பரிவுடன் வளர்த்தபடியால் அதைக் கொடுக்கத்தக்கதில்லையென்றுர். பஞ்சேந்திரி

யங்களையும் நிக்கிரகித்த தேவரீருக்கு இந்தயானை ஒருபெரிதா? உமக்கு ஒருவருடைய உதவியுங் காவலும் வேண்டியதோ? உம்மிடத்தில் தேகியென்று கேட்கிறவர்களுக்கு இல்லையென்கிற லோபகுண மிருக்கப்போமா? தேவரீர் சிருஷ்டிக்கிறபோதே யானை குதிரை முதலிய ஆடம்பரங்களை அரசருக்குரியவையென்று அமைத்துப்போட்டு இப்போது மொழி மாறிப்பேசுகிறது முறைமையோ என்று பலதருமங்களையெடுத்துக்கூறினான். அதின்பேரில் ரிஷியானவர் அரசன் விரும்பிய சொத்தை வைக்கலாகாது, உனக்கிந்த யானைவேண்டுமானால் நான்குறிக்கும் இடத்துக்குப் போய்வந்தால் தருவேனென்றார்.

க-வது. சுத்தஞானிகள் வாசம்பண்ணப்பட்ட சபைக்குப்போய் வந்தால் யானையை தருகிறேன் என்றார். ராஜன் மறுமொழி. அளவில்லாத் தவஞ்செய்தபேர் போகத்தக்க இடம் அது, அங்கே நான் போகத்தக்கதில்லை. உ-வது பூமியில் புண்ணியஞ்செய்தவர்கள் அடைந்திருக்கிற லோகத்திற்குப் போய்வா என்றார். ராஜன் மறு. அகதை மமதை யடங்கிய பேர்கள் அந்த லோகத்துக்குப் போய்வரலாமே யல்லாது, சத்துருக்களின் மாமிச ரத்தங்களைச் சிந்தும் மன்னவர்கள் போகக்கூடாதே? ௩-வது. வரப்பிரசாதங்களிற் சிறந்த மந்தாகினியானது, சிந்தாமணியிலும் ஆகாயகங்கையிலுஞ் சிறந்தது. அதினிடத்திலாகிலும் போய்வாருமென்றார். ராஜன் மறு. அக்கினி முன்னிலைபாய் எக்கியங்களைச்செய்து உயர்ந்த மகாத்துமாக்களுக்கு அதிதிபூசை புரிந்து அவர்களுடைய சேஷத்தைப் புசித்தபேர்களும் தென்புலத்தார்க்கு நீர்க்கடன்செய்த புண்ணியபுருஷாளும் வசிக்கின்ற மந்தாகினி லோகத்துக்கு நான்போகிறது சரியல்ல. ச-வது, இவ்வுலகத்துக்கு அச்சாணியா யிருக்கிற மகாமேருவுக்காகிலும்போய்வரலாமே என்றார். ராஜன் மறு. சத்தியவிரதம் அன்புடைமை சீவகாருண்ணியம் இத்தியாதி குணமுடையோர்வசிக்கும் இடம் அது, அங்கே நான் போகேன். ரு-வது, மகதியாழில் வீணைகானஞ்செய்யும் நாரதமகாமுனிவரிடத்துக்காகிலும் போய்வா என்றார். ராஜன் மறு. அநேகம் தீர்த்தங்களில் ஸ்நானமாடி தேவதா தெரிசனை புரிந்து சப்தசுரம் சுதி தாளம் சங்கீதம் சாமவேதம் இவைகளைக் கற்றுத் திறமுடைய வல்லவராகிய நாரதர் வாசம்பண்ணப்பட்ட இடத்துக்கு நான் போவேனு? சு-வது, மகாமேருவிற்கு வடக்காகிய மயக்கமற்ற குருபூமிக்குப் போய்வா என்றார். ராஜன் மறு: சொல் தவறாமலும் அகவிலை குறைக்காமலும் புகழ்பெற்றபேர்கள் போகப்பட்ட அந்த இடத்துக்கு நான் செல்லேன். எ வது, வசிஷ்டர் முதலிய சப்தரிஷிகள் வாசம் பண்ணப்பட்ட லோகத்துக்குப் போய்வா என்றார். ராஜன் மறு. அன்னதானம் சொர்னதானம் கோதானம் முதலிய் தானாதிகள் கொடுத்து நிதானங்கெடாமலிருப்பவர்கள் சேர்ந்திருக்கும உலகத்துக்கு நான் எப்படிப் போகக்கூடும். அ-வது, சூரியலோகமாகிலும் போய்வா என்றார். ராஜன் மறு. வீரத்திற் சிறந்து வேதங்களில் பயின்று தவத்தில் முயன்று சகல

மும் நசித்த சந்நியாசிகள் போயிருக்கும் இடத்துக்கா நான்போகிறது. கூவது, வருணலோகம் போய்வா என்றூர். ராஜன் மறு. பாபரகிதர் ஆசாரம் நிஷ்டை கைவிடாதபேர் திரியாக்கினி வளர்ப்பவர், சீவகாருண்ணியர் சேருகிற இடம் என்னுல் முடியாது. க௦-வது, இந்திரலோகத்துக்குப் போய்வா என்றூர் ராஜன் மறு. யுத்தமுனையில் சத்துருவை செயித்து நூறு அசுவமேதங்களின் யாகபலனைப் பெற்றவன், கோதானமீய்ந்தவன், குரு முதலிய பெரியோரைத் தாழ்ந்தவன், இப்பேர்ப்பட்டவர் அடைந்திருக்கும் லோகத்துக்கு நான் போகமாட்டேன். கக-வது, வியாழ பகவானுடைய லோகத்துக்குப் போய்வா என்றூர். ராஜன் மறு. அக்கினிஷ்டோமம், பவுண்டரீகம், வாசபேயம், அசுவமேதம், இந்த எக்கியங்களைச் செய்தபேர்கள் எய்தியிருக்கும் இடத்துக்கு நான்செல்லேன். பனிரண்டாவது, பசுலோகம் போய்வா என்றூர். ராஜன் மறு. கபிலைமுதலிய பசுக்களை உத்தமருக்கு தானஞ் செய்தவர்களுக்கும் நீதியாக அரசுபுரிந்த வேந்தருக்கும் தபசுபுரிந்த சீவன்முத்தருக்கும் காணியாட்சியாயிருக்கும் பூமிக்கு நான் அருகன் அல்ல. பதின்முன்றூவது, சத்தியலோகம் போய்வா என்றூர். ராஜன் மறு. நல்வழியிற் சேகரித்த பொருளை சாதுக்களுக்குக் கொடுத்தபேர்களும் நரமேத : ராஜசூயம் முதலிய யாகாதிகளை நடத்தினவர்களும் பிரமஞானத்தை போதித்து வைத்தவர்களும் மிகவும் அரிதாய்ப் பிரவேசிக்கும் அந்தபூமிக்கு நான் எளிதில் போய்வர முடியாதென்றூன். ரிஷியானவர் இவைகளைக்கேட்டு நகைத்துஓய்ராஜனே! நீ உருமாறிவந்திருக்கிறுய், நீயோ தேவேந்திரன். உன்னை நான் கண்டுகொண்டேன். என் யானையை வாங்கிக்கொள் என்றூர். தக்ஷணம் திரிதராஷ்டிரன் ரூபத்தை நீக்கி தேவேந்திர சுரூபத்துடன் கௌதமரிஷியைப் பணிந்து, சுவாமீ! இந்த யானை உம்முட கட்டளைப்படி பயந்து நடக்கும் விந்தையைப்பார்த்து தேவரீர் சிந்தை மகிழும்படி இந்த ரூபத்துடன் வந்தேனேயல்லாது தமது ஆசிரமத்தைப் பாதுகாக்கும் அந்த யானையைக் கைப்பற்ற வந்தவனல்ல, நான் தங்களுக்குச்செய்த இந்த தொந்தரவை க்ஷமிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்ன, இந்திரனே! இந்தயானை மிகவும் பேரறிவுடையது பிரதாபம்பெற்றது, அதை உனக்குத் தருகிறேன், நீர் பெற்றுக்கொள்ளும் என்றூர். சுவாமீ! நீர் யானையை மாத்திரம் கொடுத்தால் நான் ஒப்பமாட்டேன், தேவரீரும் என்னுடன்கூட தேவலோகத்துக்கு வரவேண்டுமென்று இந்திரன் வேண்டினுன். கௌதமரிஷி அதற்கிசைந்து இந்திரனுடன் தேவலோகம் போனூர். இந்திரன் தான் பெற்றுவந்த யானையை தேவராணிக்குக் காண்பித்து சிலாகித்ததுமன்றி ரிஷியாரையும் அநேகமாய் உபசரித்து பூசித்தான். அவர் தேவேந்திரனிடம் விடைபெற்று தமது ஆசிரமந் திரும்பினர். இங்ஙனம் பீஷ்மர் தருமருக்கு விளம்பியவாறு.

தபசைப்பார்க்கினும் நல்வழியில் ஈட்டியபொருளை சத்விஷயங்களில் செலவிடுதலால் வரும் பலனைப்பற்றிய பிரஸ்னைக்கு:—கேளாய் யுதிஷ்டி

ரனே! சூரியகுலத்தில் உதித்த பகிரதமகாராஜன் இராச்சியபாரம் புரியும் போது, திசைமுகன் வாழும் சத்தியலோகத்தில் சென்று பிரமாவை பிரதக்ஷண நமஸ்காராதிகளுடன் வணங்கி கைகூப்பி ஸ்துதித்து நின்றான். மண்பொதுத்தந்தை அவனுக்கு ஆசனமளிக்கச்செய்து நான் இருக்கின்ற சத்தியலோகத்துக்கு பிராகிருத சரீரத்துடன் வந்தது பெரிய ஆச்சரியமென்றார். சுவாமீ பங்கயாசனனே! அடிமை கடைத்தேற வெகுநாள் தவம்புரிந்து யக்கியயாகாதிகளை வழுவின்றிச்செய்தும், உம்முடலோகத்துக்குவர உபாயந்தெரியாமல், பிராமணர் எங்கெங்கே தவமிழைக்கிறார்களோ அங்கெல்லாம் சென்று அவர்களுடைய யாகாதி கிரியைகளுக்கு உதவிசெய்து நிர்விக்கினமாக அவைகளை நிறைவேற்றிவந்தேன், அதினால் அவர்கள் என்மீது கருணைகூர்ந்து பிராகிருத சரீரத்துடன் உம்முட அப்பிராகிருதலோகத்தைப் போய்ப்பார்த்துவர அனுக்கிரகம் பண்ணினார்கள். அந்த ஆசீர்வாதபலத்தினால் உம்மை தெரிசித்தேன் என்றான். பிரம்மதேவர் சந்தோஷப்பட்டு, பகிரதராசனே! நீ பெரியவர்களுக்கும் தேவதைகளுக்கும் யாகங்களுக்கும் உபகாரியா யிருந்தபடியால் அவர்கள் மகிழ்ந்து ஸ்தூலதேகத்துடன் உம்மைஎன்உலகத்துக்கு அனுப்புவித்தார்கள். நூறுயாகங்கள் செய்வதைப்பார்க்கினும், தவம்பண்ணுவதைப் பார்க்கினும் பாவமில்லாமற் சேகரித்தபொருளை சத்துவிஷயங்களில் உபயோகிப்பதும் பெரியோர் கிருபை பெறுவதும் மேலான தருமமென்று பிரமதேவர் பகர்தலுற்றார் என கங்கைமைந்தன் மொழிந்தனர்.

மனிதர் நீண்டாயிசும் அல்ப்பாயிசும் தாங்களே தேடிக்கொள்ளுகிறார்களா என்கிற பிரஸ்னைக்கு:—சத்தியவந்தனே! கேளாய், உலகத்தார் தங்கள் தங்கள் ஆசார ஒழுக்கநெறிதவறாமல் முறைப்படி நடந்தால் அவர்களுக்கு ஆயிசும் புகழும் லக்ஷ்மீகரமும் உண்டாகும் ஆசாரியவார்த்தை தவறினோரும் வேதவிதி பிறழ்ந்தோரும் உலகத்துக்குக் குற்றம்வரும்படி நடந்தவர்களும் இன்னும் அனந்த துஷ்கிருத்திய கர்த்தாக்களும் ஆயிசு குன்றிப்போவார்கள். பரஸ்திரீகமனஞ் செய்கிறவர்கள், அடைக்கலப் பொருளை அபகரிக்கிறவர்கள், சலத்தில் நின்று மலமூத்திராதி கழிப்பவர்கள், அடிக்கடி ஜாதகத்தைப் பிரட்டிப் பிரட்டிப் பார்ப்பவர்கள், இன்னம் எனக்கு ஆயிசு இருபதுவருஷம் உண்டென்று சொல்லிக்கொண்டு திரிபவர்கள், மூக்கில் வெயர்த்த வேர்வை நாக்கிற்பட அன்னம் புசிக்கிறவர்கள், நல்லபதார்த்தங்கிடைத்ததை நாலுபேருக்குக் கொடுத்துப் புசியாமல் தானே பொசிப்போரும, இராத்திரியில் மோரும் பகலில் பாலுமாக அன்னத்தில் கலந்து சாப்பிடுவோரும், இச்செய்கைகள் மேலிட்டோருக்கு பாபம் நேரிட்டு ஆயிசு குன்றிப்போவார்கள் என்று பீஷ்மர் உரைத்தார்.

பிரம்ம க்ஷத்திரியாளாகிய இருகுலத்தாருக்கே விரத அனுஷ்டிப்பு என்று செப்பியிருக்கின்றதே? ஏனைய இரண்டு வருணத்தாரும் அனுஷ்

டிக்க வேண்டியவிதி என்னவென்ற தருமர் பிரஸ்னைக்கு:—பீஷ்மர் சொல்லுகிறார் வேதியர் சாந்திராயணம் முதலிய விரதங்களை சலபானமுதலாய் இல்லாமல், மூன்றுவருஷம் முறை முறையாய் இருக்கலாம் க்ஷத்திரியர் பதினைந்துநாள் ஒருவாரம் இம்மட்டும் உபவாசமாயிருந்து விரதங்காக்கலாம். வைசியர் சூத்திரர் விரதமிருக்கவேண்டுமாகில் நான்கு அல்லது மூன்றுநாள் உபவாசஞ் செய்யலாம் இதற்கு மேற்பட்டிருந்தால் அவர்களுக்குக் குற்றமுண்டாகும். இந்தக் கிரமப்படி நான்கு வருணத்தாரும் விரதங்களை அனுஷ்டித்துவந்தால் இருளைச் சூரியன் துலக்குவதுபோல் அஞ்ஞானம் நீங்கி புண்ணியம் பெறுவார்கள் என்றார்.

மானிடர்க்கு தீவினையினால் மானிட சென்மம்போய் மிருகசென்மம் வருமென்கிறார்களே? அதின் விவரம் யாதென்ற தருமர் பிரஸ்னைக்கு:—கேளும் தருமபுத்திரரே! தாய் தந்தை குரு தெய்வம் இவர்களுக்கு வழிபாடு செய்யாதவர்களைப்பார்த்தால் திசைமுகனும் பயப்படுவான். ஒருவேளை அப்படி பிசகி நடந்தவர்கள் ஆசாரியனை அடுத்து அந்தப் பாபத்தைப் பரிகரித்துக்கொள்ளவேண்டும். மடம் சத்திரம் கோவில் குளம் நிழல்கொடுக்கும் மரங்கள் இவைகளைக் கெடுத்தால் தேகந்தடித்து வெடித்து ஆன்மாநீங்கும் மறுபிறப்பில் எலி பெருச்சாளிமுதலிய தேகங்கள் சம்பவிக்கும். இதுதான் அதற்குக்காரணம் நான் அறிந்தமட்டும் சொன்னேன் இன்னம் அநேகமுண்டு, தர்மசாஸ்திரங்களைப்பார்த்து அறிந்துகொள்ளும் என்றார்.

மாமிசம் புசிக்கலாம் என்று சில நூலோரும் புசிக்கவேண்டாமென்று சில நூலோரும் விதிக்கின்றார்களே? உண்மை யாது என்ற தருமர் பிரஸ்னைக்கு:—யாகத்தில் பசுபந்தனஞ் செய்வதொன்று நீங்கலாக மற்ற எந்தக்காரியத்திலும் சீவ இமிசை பண்ணப்படாது, மாமிசம் பொசிக்கவேபடாது. தன்னுயிர்போல் மன்னுயிரைக் கருதுவோர்க்கு இது முறைமையாகாது "கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந்தொழும். முள்குத்தி நொந்தறியாதான் வாழ்க்கை உள்குத்தி ஊன் தின்பவர்க்கு. விலங்கினர்க்குச் சுடுகாடாம் புலங்கெட்ட புல்லறிவாளர் வயிறு." ஆதலின் மாமிசபட்சணம் பரிச்சேதம் ஆகாது. போகத்தை இச்சித்துத் தின்று கொழுக்க மாமிசத்தை தேடுகிறான். மோக்ஷபூமியை விரும்பிய புத்திமான் மாமிசத்தை இச்சியான். மாமிசத்தைப் புசித்துப்பழகிய ஒருவன் அதை நீக்கிக்கொள்ள அசாத்தியமாயிருந்தாலும் தன்கால்வழிப் பிள்ளைகளுக்காவது மாமிசத்தை நீக்கி வழக்கப்படுத்துவானாகில் அவர்களுடைய சீலத்தினால் இவன் நற்கதிபெறுவான். ஒவ்வொரு வருஷத்தில் புரட்டாசி கார்த்திகை தை சித்திரை இந்த நான்கு மாதங்களிலாகிலும் மாமிசத்தை புசியாமல் அனுஷ்டித்துவந்தால் நல்ல கதி பெறலாம். புசிப்பதும் போகிப்பதும் பிரதானமென்று எண்ணுகிற பேர்கள் நரகத்துக்கே ஆளாவார்கள் என்றார்.

உயுத்தத்தில் ஒருத்தரை ஒருத்தர் கொல்லுகிறார்களே, அதினால் பாவம் விளையாதா என்ற பிரஸ்னைக்கு:—நமது வேதவியாசர் ஒரு ஆரண்ணியத்தில் தவசு பண்ணிக்கொண்டிருக்கும்போது, ஒரு புழுவானது ஊர்ந்துவந்து அவரைப் பார்த்தமாத்திரம் சீக்கிரம் ஒதுங்கியோடிற்று. வேதவியாசர் புன்சிரிப்புக்கொண்டு அந்தப் புழுவை நோக்கி இன்பதுன் பத்துக்கேதுவான உடம்பெடுத்தோமே, இந்த உடலைக் கொன்று போட்டால் போகட்டுமென்றெண்ணாமல் நடுங்கி யோடுகிறாயே, அதினால் என்னலாபம் அடையப்போகிறாய். இந்தத் துன்பமான உடல்போய்விட்டால், இன்னம் வேறு எந்த தேகமாகிலும் வருமென்றெண்ணாமல், இதை ஏன் இவ்வளவு கெட்டியாய்ப் பார்க்கிறாய் என்று கேட்டார். அளவிறந்த ஆன்மாக்களில் தேகம் பெரியதாயும் சிறியதுமாயிருக்கின்றது பெரிய தேகத்துக்கு சிறியஉடல் பயப்படவேண்டும். அதினால் உம்மைக் கண்டு ஒதுங்கினேன், பூதஉடலுக்கு துக்கம் பொறுக்கமுடியாமலிருந்தாலும் இன்னம் இருக்கவேண்டுமென்கிற ஆசையும் இறக்கும்போது ஆரு மையும் துன்பமும் உண்டாம். அப்படிப்பட்ட தேகத்தை விடாமலிருப் பது சுகமென்று என்புத்தியிற்பட்டு இடைந்தேன் என்றது. வேதவியாசர் கிருபை புரிந்து நீ அருமையான வார்த்தை உரைத்தமையால் இனிப் பெரியசெந்துக்கள் எதிர்ப்பட்டாலும் சிறியஜெந்துவாகியஉனக்கு அவைகளால் கேடுவராதபடி வரங்கொடுத்தேன் என்றார். மகானுபாவரே! தெய்வமுனிவர்களுடனிருப்பது சுகமென்று தெரியாமல் சிற்றறிவுள்ள நான் இந்த தேகத்துடன் இருப்பது சுகமென்று உரைத்தேன் சுவாமீ! உடலுக்குத் தக்க உயிர், உயிருக்குத் தக்க உணர்வு, உணர்வுக்குத் தக்க குலம், குலத்துக்குத் தக்க குணம். இக்குணங்கொண்டிசைத்த என்மொழியைக்கொண்டு, பகையற்று சுகம்பெற்றிருக்க வரங்கொடுத்தருளினீர். ஏனும்பில்லாமல் யாக்கையெடுத்த என்னுடலுக்கு என்னசுகமிருக்கிறது, துன்பமில்லாமல் இன்பம் கிடையாது, இதுதான் சுகமென்றுநம்பி, அநேகர் துன்பத்தில் அகப்பட்டு அழிந்தவன் அணுவத்தனை தேனைச்சப்பி ஆனந்தமுற்றாற்போல், பிரபஞ்சவாழ்க்கையை ஊணிப்பார்க்கில் ஒன்றும் இராது என்று உபசரித்துச் சொல்லிற்று. ஓகோற்புழுவே! இந்தக் கீடகஜெனனமெடுப்பதற்கு பூர்வத்தில் என்ன பாபம் பண்ணினையென்று கேட்டதற்கு, நான் பூர்வத்தில் சூத்திரன். கொலை களவு முதலிய பாதகங்கள்செய்தவன். யாதொரு தருமத்தையுஞ் செய்யாதவன். இப்படியெல்லாம் நான் நடந்திருந்தாலும் என்னைப் பெற்ற தாய் தந்தையரை பூசித்துவந்தேன். சிலநாள் சென்றபின்பு பேரறிவுடைய் ஒருபிராமணனுக்கு மார்க்கத்தில் நான் துணைப்பட்டு சகாயமாய்ப் போனதற்காக, அந்ததேகம் நீங்கி சிலநாள் நரகத்தில் கிடந்து இப்போது புழுதேகம் எடுத்தேன். முன்பண்ணின பாபங்களையெல்லாம் நினைத்து ஒடுங்கி நிற்கிறேன், புண்ணியமாதவனே யென்று புழுவானது விசனப்பட்டது. பிரமாவுக்குச் சமமாகிய வியாசர் பரிதாபப்பட்டு உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்

தருகிறேனென்றார். புழுவானது அவரைப் பிரதக்ஷணஞ்செய்து, அடியேன் இந்த தேகத்தைவிட்டு புனிதக்கியான தேகமெடுத்து கர்மபூமியில் புண்ணியங்களைச்செய்து நற்கதி பெறும்படி அனுக்கிரகித்து ஆண்டருளுமென்று வேண்டிக்கொண்டது. உடனே வியாசர் கிருபைபுரிந்து நீ இந்தப் புழுத்தேகத்தைவிட்டுப் புலைத்தேகம் எடுத்துப் பயிரிட்டுக் கிருஷி தொழில் செய்து மரித்தபின்பு, சூத்திரனாய்ப்பிறந்து சத்திய சௌசத்தில் நின்று அந்த தேகத்தைவிட்டு வைசியவர்ணத்தில் உதித்து பொறுமை விரதம் நோன்பு மாதவம் பயின்று, அதுநீங்கி சத்திரியப்பிறப்பில் வந்து சோடசமகாதானங்களைச்செய்து நற்கதி புகுவாய் என்றும், நீ எடுக்கும் இந்த ஜனனங்கள் தோறும் உனக்குப் பூர்வக்கியானம் தோன்றக்கடவதென்று அருள் சுறந்தார். புழுவானது அவர் திருவடிகளை வணங்கி, சுவாமீ! அடியேன் கரைதெரியாமல் துக்கசாகரத்தில்முழுகிப்போனேன், என்னைக் கைகொடுத்து கரையேற்றிவிடும் கர்த்தனே என்று கண்ணீர் சொரிந்தது. உடனே புழுவாகிய புல்லுடல்மாறிப் புலைக்குடியிற்பிறந்து பூர்வக்கியானத்துடன் நன்மைகளை நாடிக் கண்மூடி சூத்திரன் வீட்டிற் பிறந்து ஞானத்துடன் இருந்து அப்பால் மரித்து, வைசிய குலத்திலுதித்து ஞானப்பிரபக்தியாய் வளர்ந்து வாணிபம்புரிந்து திரவியந்தேடி அறிவுள்ள பேருக்குத் தாழ்ச்சியில்லாமல் வழங்கி அவ்வுடலை மாற்றி அரசனாகப்பிறந்து அநேக யக்கியாதிகளைச்செய்து ஒருநாள் வேதவியாசருடைய ஆசிரமத்தில் வந்து அவரை வணங்கி தேவரீருடைய அருட்கண் பார்வையால், இந்த நிலைமையில் வந்திருக்கிறேன் என்று ஸ்துதித்தான். வியாசர் அவன்மீது சந்தோஷப்பட்டு அவனை ஏகாந்தத்தில் வைத்துக்கொண்டு, இனி உனக்குப் பிறவிவராது, ஒருவேளை வந்தால் இறவாமல் இருப்பதற்கு உபாயம் வேதரகசியத்தில் விளம்புவது யாதெனில், பிராமணர் பொருட்டினாலும் பசுக்கள் நிமித்தத்தினாலும் உயுத்தத்திலும் சீவனை விடுவானாகில் அவனே உத்தமஜென்மம். இதுதான் புருஷஜென்மத்தில் பிரதானம். இந்தவழியறிந்து மேற்சொல்லிய மூவகையில் ஒருவகையிலாகிலும் உதவி செய்வானாகில், பிராமண குலத்திற் பிறந்து வேதசாஸ்திர சம்பன்னனாகி முக்காலமும் உணர்ந்த முதல்வனாய் எக்காலமும் எம்மைப் போலிருப்பான், ஆதலால் நீ இவ்வாறு அனுஷ்டித்து உயர்ந்த குலத்தில் பிறந்து மேன்மை பெறுவாயென்று மந்திரம் ஒன்றை அனுக்கிரகம் பண்ணினார். இராஜன் அவரை அனேகமாய் ஸ்தோத்தரித்து தன்பட்டணம் போய்ச்சேர்ந்து, வியாசர் சொல்லிய மூன்றுவிதங்களில் எந்தவிதத்தில் உயிர்விடலாமென்று யோசித்துக்கொண்டிருக்கும்போது, பிரபல யுத்தம் ஒன்று நேரிட்டது. ராஜன் அதில் எதிர்த்துச் சண்டைசெய்து சுத்த வீரன் கைபால் மாண்டு, அப்பால் பார்ப்பார் குலத்தில் பிறந்து நெடுங்காலம் தவமியற்றி மகாரிஷியென்கிற அரும்பேர்பெற்று மகாமூர்த்திகளில் ஒருவனாக வாசம்பண்ணிக்கொண்டிருக்கிறான். ஆகையால் சண்டையில் முன்வைத்தகாலைப் பின்வாங்காமல் உயிரைக் கொடுக்கிறவன் வீர

சொற்கம் அடைவான். நீ செய்த பதினெட்டுநாள் யுத்தத்தில் மாண்ட பேர்கள் வீரசொற்கம் பெற்றிருக்கிறார்கள் என்று யுத்தத்தில் வெற்றி பெற்றுயர்ந்த பீஷ்மாச்சாரியர் விளம்பினர்.

பூமியில் கல்விகற்றவன் தவமிருந்தவன் தானங்கொடுத்தவன், இம் மூவரில் யார் உயர்ந்தவர்கள் என்ற பிரஸ்னைக்கு:—அப்பா என்பேரனே! முற்காலத்தில் மைத்திரேய மகாமுனிவர் நீ இப்போது கேட்ட கேள்வியைப்போல், வேதவியாசரைக் கேட்டார். அவர் கூறியவண்ணம் நான் உனக்கு இங்ஙனம் சொல்லுகிறேன்கேள். இந்த மூன்றுபேருக்குந் தாரதம்மியம் உண்டு. எப்படியெனில், மிகவும் பிரயாசைப்பட்டு வித்தை கற்கவேண்டும். தவமும் அருமையாய் செய்யவேண்டும். பாவமில்லாமல் சம்பாதிக்கவேண்டும். அந்தப் பொருளைத் தானஞ்செய்யவேண்டும். இதனுல் ஒருவன் கடைத்தேறலாம் தானங்களில் உத்கிருஷ்டமானது அன்னதானம். அதை வழங்கினவனும் வாங்கிப் புசிப்பவனும் இருவரும் மனத்திருப்தியாயிருக்கவேண்டும், இல்லாவிட்டால் பிரயோசனமில்லை. உலகம் மெச்சப் பிச்சையிடாமல் மனப்பூர்வமாய் கர்த்தாவுக்குச் செய்கிறுப்போல் செய்யப்படுவதே இகத்துக்கும் பரத்துக்கும் சுகிர்தமுண்டென்றுரைத்தார்.

ஸ்திரீகள் செய்யுங் கடமைகள் யாது, அவர்கள் எந்த இடத்தில் கதி பெறுவார்கள் என்ற தருமர் பிரஸ்னைக்கு:—பீஷ்மர் நவிலுகின்றார், தேவலோகத்தில் வீற்றிருக்கும் சாந்திலையென்னும் பதிவிரதையானவளை பூமியில் வாசம்பண்ணுகிற கைகேசியென்னும் கற்புடைய ஸ்திரீகண்டு வணங்கி அம்மா! நீ புண்ணிய லோகம்வந்து க்ஷேமமாயிருப்பது என்னத்தினுலே, இந்த விபரத்தைச் சொல்லென்று வினவ, சாந்திலை சாற்றலுற்றாள்.

ஸ்திரீகள் நடக்கவேண்டிய நல்லொழுக்கம்.

ஒரு மங்கிலியஸ்திரீயானவள் தன்மாமனுருக்கும் மாமியாருக்கும் வழிபட்டு அன்பு பாராட்டி தெய்வத்தைப்போல் அவர்களை நாள்தோறும் ஆராதித்து அவர்கள் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டும். காலையில் எழுந்து தன்னை சுசிசெய்துகொண்டு வீடுவாசலைச் சுத்தப்படுத்தி புருஷனுக்கு உபசாரங்களைச்செய்து வீண்பேச்சுக்கும் வாக்குவாதங்களுக்கும் உட்படாமல், அண்டைவீடு எதிர்வீடுகளுக்குப்போய் வீண்காலக்ஷேபம் பண்ணுமல், அதிதிகளுக்கு அன்னமிட்டு சண்டைசச்சரவு எதிர்ப்பேச்சுக்கள் செய்யாமல் நல்லொழுக்கத்தில் எப்போதும் ஒருசீராய் நிற்கவேண்டும். தன்புருஷனைக் கைவிட்டு பரபுருஷனை இச்சித்து நடந்தால் துற்கதிக்காளாவார்கள்.

சாரஸ்திரிகளுக்குவரும் யமதண்டனை.

காமம் பெரிதென்றெண்ணிக் கணவனை வஞ்சனைசெய்து நடப்பவர்களை யமன் நரகத்தில் தள்ளி சூலாயுதத்தினால் வாதிப்பான். அவர்களுக்கு இவ்வுலகத்தில் அபகீர்த்தியும் இழிவும் மறுமையில் நரகவாதனையும் கிடைக்குமென்றார்.

புருஷன் செய்யவேண்டிய பக்தி ஆசாரம் கடமைகளைக் குறித்த பிரஸ்னைக்கு:—புருஷன் உதயத்திலெழுந்து உபாதிகழித்து ஸ்நானம் செபதபம் சந்தி அனுஷ்டானங்களைச்செய்து எங்குந்தானாகிய பரிபூரணனை, ஆதிமூலப்பொருளைத், திருநாரணனை வாழ்த்தி வணங்கி ஸ்தோத்திரம்பண்ணி இரவும் பகலும் இஷ்டகாமியங்களை விரும்பி, நித்தனை, நிராமயனை, நின்மலனை, நிர்க்குணனை, சகுணனை, மூவர் முதல்வனை, முக்குணனை, முக்கண்ணனை, வேதவேதாந்த வேதியனை, நிஷ்களனை, சகளனை, முத்தனை, கர்த்தனை, சித்தனை, கருணைக்கடலை, முத்தொழிற்கும் வித்தானவனை, விநோதனை, லீலாவிபூதியனை, மோக்ஷகாமியத்தைக் குறித்து வணங்கி இந்தப்பிரகாரம் முக்காலமும் ஆராதித்து வருவானாகில், நாளுக்குநாள் அறிந்தும் அறியாமற்செய்த பாவங்களெல்லாம் நசித்துப்போம். விஷ்ணுநாமம் சிவநாமம் இதை ஒருக்காற் சொன்னமாத்திரத்தில், மகாபாதகங்களும் வதங்கி வாடிப்போம். புகழும் புண்ணியமும் ஆயிசும் செல்வமும் உண்டாம் என்றார்.

தானங்கொடுப்பதிலும் இன்சொற் சொல்லுதலிலும், எதிலே அதிகப்பலன் உண்டாகுமென்ற பிரஸ்னைக்கு:—தானம் என்பது ஒருவருக்கு ஒருவர் மனப்பூர்வமாய் ஈவதே கொடையாம். கொடுப்பவனுக்குக் குலசம்பந்தத்தால் குணம் மிகும். குணம் எவ்வளவு அதிகரிக்கிறதோ அவ்வளவு கல்வியுண்டாம். கல்வி எம்மாத்திரங் கற்றானோ அம்மாத்திரம் பேரறிவு. பேறறிவு எம்மட்டோ அம்மட்டுந்தெளிவு. தெளிவுக்குத் தக்கபடி சேர்க்கை. சேர்க்கைக்கு தக்கபடி ஈகை. ஈகைக்குத்தக்கபடி கியானம். கியானத்துக்குத் தக்கபடி பலன் அனுபவிப்பான். மேலும் தானத்தைப் பார்க்கிலும் வருகிறவர்களை உபசரித்து இனியவசனம் பிரியவார்த்தை கூறுவதே பெரியதிதானம் சத்துச் சித்தானந்தமென்று மூன்று உண்டு. அதிலே சத்தாகியது சாத்துவிககுணம். இந்த குணம் சும்மாபிறக்காது. மனங்குவிந்து ஆங்காரம் அடங்கி, அவா அற்று நான் என்பதை விட்டு பெண்டுபிள்ளைகள் பண்டுபதார்த்தங்களை அநித்தியமென்றெண்ணி சர்வபூதாதிகளிடத்திலும் தயைவைத்து அருளுடன் இருப்பது சத்குணம். இக்குணமுள்ளவர்கள் சித்தாகிய பிரம்ம விசாலத்தைக்கண்டு ஆனந்தத்தையும் மோனானந்தத்தையும் அடைவார்கள், அவர்கள்தான் பிரபஞ்ச விசாரத்தை நீத்தவர்கள். சாத்துவிகனாகிய ஒரு பிராமணர் வனத்தில் சஞ்சரிக்கும்போது, தாருகன் என்கிற ராக்ஷதன் பெரும்பசியால் ஆகாரந்தேடிவந்தவன் கண்ணுக்கு இவர் எதிர்ப்பட்டார். அவரைக் கையினால்

கட்டிப்பிடித்துக்கொண்டான். வேதியர் முகமலர்ச்சியுடன் மரணத்துக்கு பயப்படாமல் கோபிக்காமல் மகிழ்வுடன் நிர்விசாரமாய் நின்றார். அந்த ராட்சதன் இவரைப்பார்த்து மதிமயங்கி இவர் எப்படிப்பட்ட பெரியவரோ என்று ஐயப்பட்டு, அவரை பிடித்தபிடியை விட்டுவிட்டுப் பசிநோய் வரவேண்டிய காரணம்யாது, இதற்குச் சரியான முகாந்தரஞ் சொல்லாவிடில் உம்மைக்கொல்லுவேன் என்றான். பிராமணன் புந்நகை செய்து, இராக்கதனே! தேகம் உலர்ந்துபோவது காசிரோகம் என்கிற வியாதியின் குணம், உடல்வெளுத்து மெலிந்து காட்டுவது பாண்டுரோகத்தின் குணம். இந்த ரோகங்கள் உண்டாவதற்குக்காரணம் தங்கள் தங்கள் சுற்றத்தார் மித்திரர் தரித்திரர் முதலிய பேர்களைக் கடித்துப் புசித்தாலும் கடூரவார்த்தைகளைப் பேசினாலும் தாய்தந்தையரை நிந்தித்தாலும் தெய்வத்தை தூஷித்தாலும் ஆபத்துக்காலத்தில் உதவிசெய்யாதிருந்தாலும் தேடியபொருளை அவத்திலே செலவழித்தாலும் ஒருவர் செல்வத்தைக்கண்டு பொறாமைப்பட்டாலும் பெரியோரை நிந்தித்தாலும் மகாபாபமாகிய பசி இளைப்பு நோய் இவைகள் உண்டாகுமென்று சொன்னார். அதைக்கேட்ட ராக்ஷதன் வேதியருடைய இன்சொல்லுக்கு இளகி அவரை உயிர்வதை செய்யாமல் விட்டான் என்றார் பீஷ்மர்.

புத்திரருள் அநேகபேதம் சொல்லப்படுகிறதே, அதனை விரித்தருளுமென்ற தருமர் பிரஸ்னைக்கு:—தனக்கும் மங்கிலிய ஸ்திரீக்கும் பிறந்த பிள்ளை ஜேஷ்டபுத்திரன். தன் பெண்வயிற்றிற் பிறந்தபிள்ளை முதற்பிள்ளைக்குச் சமானமான இரண்டாவதுபிள்ளை. தன் பெண்சாதி தன்னையறியாமல் மற்றொரு விதத்தினால் பெற்றபிள்ளை மூன்றாவதுபிள்ளை. இன்னொருத்தருடைய பிள்ளையை எடுத்துக்கொள்வது தத்துபுத்திரன் அல்லது மஞ்சணீர்ப்பிள்ளை இவன் நான்காவதாம். திக்கில்லாதபிள்ளை அடைக்கலப்பிள்ளை ஐந்தாவதாம். பெண்சாதி சாரத்துவத்தில் பலபேருடன்கூடிப் பெற்றபிள்ளை இன்னார்வித்தென்று தெரியாமையால் ஆறாவதுபிள்ளை. அன்னையும் பிதாவும் அடித்துத்துரத்தி ஒருவரிடம் அண்டினபிள்ளை சேர்ப்பு ஏழாவதாம். கன்னிகைப்பருவத்தில் இரகசியமாய்ப் பெற்றபிள்ளை அவளை அப்பால் கலியாணம் பண்ணினவனுக்கு எட்டாவது பிள்ளையாம். ஸ்திரீயின் வயிற்றில் கர்ப்பமிருப்பது தெரியாமல் கலியாணம் பண்ணிக்கொண்டால் அந்தப்பிள்ளை தாலிகட்டினவனுக்கு ஒன்பதாவது பிள்ளையாம். தன்மனைவியைக் கோபத்தினால் துரத்திவிட்டு, அவள் மறுபடியும் புருஷனுடன்கூட முயற்சித்தும் பயன்படாமல் தன் குற்றத்தை நிவாரித்துக்கொண்டு வேறொருவனுக்குப் பெற்றபிள்ளை கலியாணப் புருஷனுக்குப் பத்தாவதுபிள்ளை. புருஷனும் பெண்சாதியும் விலைகொடுத்து வாங்கிக்கொண்டால் பதினோராவதுபிள்ளை. வைப்பாட்டியிடத்தில் எல்லோரும் அறிய இவனுக்கே பிறந்தபிள்ளை பனிரண்டாவதாம் இங்ஙனம் மனுநீதியில் செப்பியிருக்கின்றது தருமநந்தன என்றார்.

கங்காநதியின் பெருமையைப் பற்றிய பிரஸ்னைக்கு:—கேளாய் தருமநந்தனா! சூரியன் இல்லாத பகலும் சந்திரன் இல்லாத இரவும் கங்கையில்லாத நாடும் பாழ் என்றறி. தேவர்களுக்கு தேவேந்திரன் எப்படி உச்சிதமோ அப்படி சகலபாவங்களையும் போக்கத்தக்க கங்கையானது மகா முக்கியப்பட்டது. அதிலே ஸ்நானமாடினபேர்க்குப் பாபம் நசிந்து இம்மையில் செல்வம்மிகுந்து மறுமையில் நற்பதவி கிடைக்கும். கங்கைக்குச்சமானம் வேறொன்றில்லை. கங்கையில்முழுகவேண்டுமென்று ஒருதரம் சொன்னால் மகாபுண்ணியமும் புனிதமும் உண்டாம். கங்காஸ்நானத்துக்குப் போகிறேனென்று ஒரு அடி பெயர்த்து வைத்தாலும் அவர்களுக்கு மேலுலகச் சுதந்தரம் உண்டாம். அதின் மகாத்துமியத்தை வகுத்துக்கூற என்னால் முடியாதென்றார்.

உமாமகேசுவர சம்வாதம்.

முன்பு ஒருயுகத்தில் துவாரகையில் வீற்றிருந்த இந்த ஸ்ரீகிருஷ்ண மூர்த்திக்குப் பெருமைதங்கிய நாரதமகாமுனிவர் சொல்லியருளியபடி அவர் எனக்கு விளம்பிய வேதசாரத்தை இப்போது உனக்குச்சொல்லுகிறேன். இதோ எழுந்தருளியிருக்கிற ஸ்ரீகிருஷ்ணதேவர் ருக்குமணி சமேதராய் ஒருபருவதச்சாரலில் பனிரண்டுவருஷம் பிள்ளையைவேண்டி ஒரே நிலையாய் தவம்பண்ணினர். அப்போது சகல ரிஷீசுராளும் ஒரேமொத்தமாய்க் கூடிவந்து இவருடைய நிலையைக்கண்டு பரவசமாகி நின்றார்கள். அப்போது ஸ்ரீபகவானுடைய வாயிலிருந்து ஒருசோதிபிறந்து இவர்களுக்குப் பார்க்கயிடங்கொடாமல் விஸ்தாரமாகி ஆகாயமட்டும் வளர்ந்து மறுபடியும் அவர் வாய்க்குள் வந்து அடங்கிற்று, அந்த விந்தையைப்பார்த்த முனிவர்கள் தேவரீர் திருவாக்கிலிருந்து ஒரு தேஜஸ் வெளிப்பட்டு மறுபடியும் தேவரீரிடத்தில் ஐக்கியமான அற்புதம் யாதென்று ரிஷிகள் வினவ, வாசுதேவன் மகிழ்ந்து, வாரீர் ரிஷிகளே! அதின் வரலாற்றை சொல்லுகிறேன், பெரியமலைச்சார்பிலிருந்த ஒரு ராக்ஷசன் தேவதைகளுக்கு இடுக்கண்செய்து பூமியில் உயிர்வதை செய்துவந்தான். அவனைக் கொல்லவேண்டுமென்று ஒருதபாக்கினியை என்வாயினின்றும் பிறப்பித்தேன். அது அவனைப் போக்கிவிட்டு பிரம்மலோகம் போயிற்று. பிரமமாவானவர் மன்மதனை அந்த அக்கினியுடன் கூட்டி எனக்குப் பிள்ளையாகப் பிறக்கும்படி யனுப்பினர். அந்த சோதி என்னுள்வந்தடங்கிற்று. என்று கேசவன் விளக்க, ரிஷிகள் எல்லாரும் சங்கை தீர்ந்து உம்மை எளிதில யார் அறிவர் கர்த்தனேயென்று வணங்கினர். ரிஷிகளே! நான் இந்த அவதாரஞ்செய்து துவாரகைக்கு ராஜனாகி பலகோடி ராக்ஷத குலங்களைப் பாழாக்கி தேவர்களுக்குத் திருப்திபண்ணிவைத்தேன், ராக்ஷதாளைக் கொன்ற பாபம் என்னைத் தொடாதிருக்க நீங்கள் யாவரும் புனிதமாகிய இதிகாசங்களை என்காதில் பொழியுங்கள் என்று கண்ணபிரான்

வேண்ட, அந்த முனீசுரர்கள் தபசாகிய அமிர்தம் சாப்பிட்ட தைரியத்தினால் சந்தோஷமாய்ச் சொல்லத்தொடங்கினார்கள். தேவாதிதேவா! சகல ஆத்துமகோடிகளையும் உண்டாக்கி ரட்சிக்கப்பட்டகோவே! எவராலும் எம்மாலும் அறியப்படாத அற்புதசோதியே! தேவரீருடைய லீலாவிபூதியை அறிந்துகொண்டு நாத்தழும்பேற ஸ்தோத்திரம் பண்ணும் பேர்களுக்கு வாய்ப்பவன், நீ மற்றப்பேருக்கு எட்டாத கற்பகமே! நாங்கள் எந்தக்கதையைச் சொல்லப்போறோமென்றார்கள். பகவான் சிறுநகைசெய்து நான்குலோகத்தில் மானிடஅவதாரமெடுத்து மாடு கன்று மேய்த்து அழுவாருடன் அழுது தொழுவாருடன் தொழுது விளையாடிய படியால் நான் உங்களைத்தொழுது போற்றவும் நீங்கள் என்னைப் பெருமைப்படுத்தவும் பெற்றிருக்கின்றீர்கள். பிரபஞ்ச சம்பந்தம் உங்களுக்கு நிமித்தம் இல்லை. நீங்கள் பிரம்மமே பிரதானமாகத் தவம்புரிவோராகையால் உங்களைவிட மிஞ்சினபேர் தேவதைகளிலுமில்லை. ஆனதுகொண்டு உங்கள் வாக்கினால் இதிகாசங்களைச் சொல்லும்படி கேட்டேன். என் இச்சை நிறைவேறும்படியாக பரிபூர்ண கிருபைவைத்துப் பகரவேண்டுமென்றார். ரிஷிகள் நாரதரைநோக்கி நீர் எங்களுக்குள் சிரேஷ்டராதலால் நீரே ஸ்ரீகிருஷ்ணபகவான் கோறிக்கையை நிறைவேற்றுமென்றார்கள்.

மகதியாழ் வல்லவராகிய நாரதமகாமுனிவர் சொல்லத்தொடங்கினார்:—நான் கங்கை முதலிய தீர்த்தங்களில் ஸ்நானமாடி அனேகஸ்தல தரிசனங்கள் செய்து கையிலையங்கிரிக்குச்சென்று அவ்விடத்தில் விளங்கும் மகத்துவத்தினால் தேவர்முதல் ரிஷிகள் யாவரும் ஈசனை வாழ்த்திப் போற்றிக்கொண்டிருக்கும் ஆனந்தபரவசத்தைப் பார்த்த நானும் பரவசனாகி பரமேசுரனைத் தொழுது கைகுவித்து நின்றேன். அப்போது உமாமகேஸ்வரி ஈசனைநோக்கி, கண்ணுதன் மூர்த்தியே! பலகோடி யண்டங்களிலேயும் இருக்கப்பட்ட சகல ஆத்துமகோடிகளையும் உற்பத்திபண்ணி அவைகளைக் காப்பாற்றி அழிப்பவர் யாவர், சூரியன் சந்திரன் நவக்கிரகாதிகள் எப்படி உற்பவமாயிற்று, இந்தச் சந்தேகத்தை எனக்கு நிவாரித்தருளும் ஐயனே என்று வேண்டினாள். கேளாய் பராபராய், பிருதிவு அப்பு தேயு வாயு ஆகாயமாகிய பலகோடி அண்டங்களையும் படைத்து அவைகளுக்கு உதவியாக சூரிய சந்திராதி கிரகங்கள் நட்சத்திரங்கள் யாவையும் ஏற்படுத்தி நான்கு லக்ஷம் யோனி பேதமான சீவராசிகளை உண்டுபண்ணி விரிந்த ஆத்துமாக்கடோறும் நீங்காமற் குடியிருந்தும் பிடிபடாமல் இருப்பவன் யானே, என்னுடைய சரீரமானது பிரம்மாண்டத்தெல்லைக் கடங்காததாய் சோதிமயமாய் பஞ்சபூத தத்துவமாய் தனிமுதலாய் சிற்சொரூபமாய் இருப்பவனும் யானே, ஒருவராலுமென்னை யுணரப்படாது, ஊனக்கண்களால் காணக்கூடாது, ஏகமாய் நிஷ்களசொரூபமாய் இருப்பவனும் யானே, ஒரு காலத்தில் திருவிளையாடல் புரியும்பொருட்டாக வெட்டவெளியில் நின்று அலையிலெழுந்த குமிழிபோலும் மேகங்காட்டிய மின்னலைப்போ

னும் உலையினுருக்கிக் கண்விட்டாடியபொன்போலும் மூவராய்ப்பிரிந்து, உலகைச் சிருஷ்டித்து ஓரிடமில்லாமல்திரிந்து, உடலுயிரென்று வளர்ந்து திதி சங்காரங்களை நிறைவேற்றியது என் லீலா விபூதியே, பிரபஞ்சம் யாவும் நானே, தானும் பிரம்மம் தனிப்பிரம்மம், தான் தானே பிரம்மம் எல்லாம் நானே, என்னையே பரமபத நாதனென்று உணரக்கடவை என்றார். இப்பேர்ப்பட்ட அகண்ட சுபாவமூர்த்தமாகிய தேவரீருக்கு இந்த சாக்ஷாத்காரரூபம் ஏதென்று வினவினள். இந்தமூர்த்தம் எனக்கு சகஜம், இதனிடமாய் வருபவர் மூவர். அவர்களை சிஷ்டிதிதி சங்காரம் என்று ஓதுவார்கள், சிஷ்டியில் மண்பொதுத் தந்தையென்றும் திதியில் ரக்ஷகன் என்றும் சங்காரத்தில் ருத்திரனென்றும் பொருந்துவார்கள். இம்மூன்றிலும் பிரவேசித்திருப்பவன் யானே. சூரியன் சந்திரன் அக்கினி என் கண்கள். என் சுவாசமே வாயு, என் பாதமே பாதாளங்கள், என் திருமுகமண்டலமே அகண்டா அகண்டம், என்னுடைய உடலம் மத்தியம கண்டங்கள். என் திருவாய்மலர்ச்சியே வேதம். என்னை நினைப்பவர்க்கு நான் சமீபம், நினையாதபேருக்கு தூரம். என்னுட மானசத்தால் அநேகங்கோடி சிவகணங்கள் பிறந்தன. மகாவிஷ்ணுவின் திருநாபிக்கமலத்தில் செனித்த பிரமன் என் ஆக்கினைப்படி பிராணிகளைப்படைக்கிறார். சராசரங்களைக் காப்பாற்றி ரக்ஷிக்கிறவர் மகாவிஷ்ணு, அவ்வுயிர்களை அழிப்பவன் ருத்திரமூர்த்தி, அழிந்துபோகின்ற ஆன்மா பக்தி வைராக்கியங்கொண்டிருப்பதற்கு பிறவித்துன்பம் வராமற் காக்கவேண்டிய நிமித்தமாய் நான் இந்த உருவங்கொண்டிருக்கிறேன், இப்படிக்கிருந்தபோதிலும் சத்தி சிவம் நாதம் விந்து கூடாமல் எதுவும் நடவாது. ஆனது பற்றி பிரபஞ்சநிமித்தமாக எனக்குள்ளே மகாவிஷ்ணுவும் மகாவிஷ்ணுவுக்குள்ளே நானுமாக இருந்தால் மாத்திரம் உலகம் பலிக்கும். இல்லாவிட்டால் பலியாது. இந்தரகசியம் ஒருவருக்குந் தெரியாது. அருமையான பேர்களுக்குத் தெரிந்தாலும் புரியாது, அஞ்ஞானத்தால் யான் வேறு விஷ்ணுவேறு என்று பேசுவார்கள். துஷ்டாள் வாதிப்பார்கள். தூஷிப்பார்கள், இஷ்டாள் பூசிப்பார்கள். விவேகிகள் யோசிப்பார்கள். என்னை உயர்ந்தவன் என்று சிலரும், விஷ்ணு உயர்ந்தவன் என்றுபலரும் சொல்லுவார்கள். நாங்கள் இருவருமில்லாமல் எதுவுமில்லை. நாங்கள் இருவரும் அபின்ன பதார்த்தமென்றறியாமல், சிற்றறிவால் கொன்னிக்கொன்னிப்பேசி மர்மந்தெரியா மனத்தர் பிதற்றுவார்கள். எங்கள் மகிமையறிந்த மகான்கள் இரண்டும் ஒன்றென்று எண்ணித் தவம்பண்ணுவார்கள். இதோ நம்மை தெரிசித்துக்கொண்டிருக்கிற நாரதர் முதலிய இவர்கள் பேதப்படாத பேறிவுடையவர்கள் புண்ணியதேகிகள் என்று பூதநாதன் புகன்றார். சோமசூரியாக்கினி மூன்றும் தேவரீருடைய திருக்கண்கள் என்றீரே, இக்கண்ணை மூடினால் மூன்றும் பிரகாசிக்காதோ என்றாள். ஆம் இருண்டுபோமென்றார். பார்வதியார் அதைப் பரிக்ஷிப்போமென்று சுவாமியின் கண்களைமூடினாள். உடனே சூரியன் சந்திரன்

அக்கினி யாவும் மறைந்து காலகதி யாவுந்தப்பி உலகம் இருண்டு தாறு மாறுயிற்று. எம்பிரானுகிய கர்த்தன் உலகம் இருள் மூடியதை அறிந்து நெற்றிக்கண்ணைத் திறந்தார். உடனே அந்தகாரம் நீங்கி வெளிச்சமாகி பிரபஞ்சம் பழையபடி விளங்கிற்று. இதைப் பார்த்த பரமேஸ்வரி கண் மூடிய தன் கைகளை உடனே விட்டு விட்டு ஈசனை மன்னிப்புக்கேட்டுக் கொண்டு, இன்னும் ஒன்று வினவத்தொடங்கினள். பராபரா! உமக்கு சந்திரகலை விளங்கும் ஒரு சிரசிருக்க, மற்றநான்கு சிரங்கள் விளங்குங் காரணம் யாது? மறுமொழி: ஒருவரால் சாக்காடில்லாமலும் தங்களுக் குள் தாங்களே மடிகிறதென்றும் விசேஷ வரம்பெற்ற சுந்தோபசுந்தர் என்னும் இருவர் நடத்திவந்த அக்கிரமங்கள் சகியாமல் அவர்களை அழிக்கும் நிமித்தியம் பிரம்மதேவரால் சிருஷ்டிக்கப்பட்ட திலோத்த மையை என்னிடம் கொண்டுவந்து காண்பித்தபோது, என்னைச் சுற்றிப் பிரதக்ஷிணம் வந்த அவளை நான்குபுரத்திலும் திரும்பிப் பார்க்கும்பொ ருட்டு நான்கு சிரசுகளை அமைத்துக்கொண்டோம். அன்றுமுதல் ஐந் துதலையாகவே இருக்கிறோம். அவைகளாவன, ஈசானம் தற்புருஷம் அகோரம் வாமம் சத்தியோசாதம். இவற்றுள் ஆக்கல் அளித்தல் அழித் தல் விளங்கல் மறைதல், இவ்வைந்துமுடையது ஐந்துமுகமென்றார்.

கண்டத்தில் கரையாகிய காரணம் யாதென்ற உமாபதி கேள்விக்கு: மறுமொழி.—தூர்வாசர் சாபம்பெற்ற தேவேந்திரன் செல்வங் குன்றிப் போய் மகாவிஷ்ணுவைப் பணிந்தபோது அவன் நிமித்தியம் திருமால் பாற்கடலைக்கடைந்த காலத்தில் வாசுகி கக்கிய விஷமானது நான்காய்ப் பிறிந்து யாவற்றையும் தகிக்கும்போது தேவதைகள் அதைச் சகிக்க மாட்டாமல் என்னைத் துதித்தார்கள். நான் அந்தவிஷத்தைப் புசித்தேன். அதை என் கண்டத்தில் தாங்கியிருக்க தேவதைகள் வேண்டினர்கள். அதுபோல், தாங்கியிருக்கிறேன். அதுமுதல் எனக்கு நீலகண்டனென்று பேரிட்டார்கள்

பிநாகம் என்கிற வில்லை ஏன்பிடித்திருக்கிறீர் என்ற பிரஸ்னைக்கு:— மறுமொழி: பிரம்மகுலத்திலுதித்த கண்ணுவரிஷி ஆசையற்று நெடு நாளாய் தவம்புரிந்தார். அவர்மீது மண்புற்று மூடிற்று. அதில் முளைத்த மூங்கில் ஆகாயத்தை அளாவி சந்திர சூரியர்களுக்குத் தடுக்கிடையான போது, பிரம்மா அதைவெட்டி மூன்று துண்டாக்கி கடைக்கண்டத்தி னுற் செய்த வில்லுக்கு காண்டீபமென்று பேரிட்டுத் தாமெடுத்துக்கொ ண்டு, நடுக்கண்டத்தி லேற்படுத்திய வில்லை சார்ங்கமென்று பேரிட்டு மகாவிஷ்ணுவுக்குக் கொடுத்துவிட்டு அடிக்கண்டத்திற் செய்த வில்லை பிநாகமென்று பேரிட்டு எனக்குக்கொடுத்தார். அதினுல் எனக்குப் பிநா கபாணியென்று பேர்வந்தது.

ரிஷபம் தேவரீருக்கு வாகனமாயின காரணம் யாதென்ற சங்கை க்கு:—நந்தியென்பது சத்தியம் தருமம் புனிதம் இம்மூன்றும் பொருந்

திய தன்மையால் அதை விடையாகக் கொண்டேன். மேலும் இவ்வுலகம் சுகம்பெறவேண்டி ஒரு பன்னகசாலையில் நான்யோகத்தில் இருந்தபோது ஒருரிஷபம் தினந்தப்பாமல் என்னை தெரிசித்து தன் நாவினாலும், கொம்பினாலும், வாலினாலும் என்னைத்தடவி அன்புபாராட்டி வந்தது அதின் கருத்தை நான் அறிந்து அதினிடத்தில் உள்ளன்புவைத்து வெளிக்குக் கோபமாகக் காட்டினேன். அதைக்குறித்து பிரம்மா முதலிய தேவர்கள் என்னைவணங்கி அந்த நந்திபேரில் தயவாயிருக்கும்படி வேண்டினார்கள். அவர்கள் கோரிக்கைப்படி ரிஷபத்தை என் வாகனமாகவும் கொடியாகவும் ஒப்புக்கொண்டேனென்றார்.

மயானவாசம் செய்யுங்காரணம்யாதென்ற உமையின் கேள்விக்கு:— இருவினையொப்பு மலபரிபாகங்கண்ட முக்தாத்துமாக்களுடைய வினை தீர்ந்த மனதில் வாசமாயிருக்கும் நான், சம்பந்தமொன்றுந் தொடராமற் கடந்த சூனியமாகிய இடம் அந்தமயானம், எல்லாம் தானென்றிருந்து முடிவில் உயிர்விடும்போது ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் விட்டுவிட்டு, பிரத்தியக்ஷமாய் நான் என்றிருந்த தேகத்தைத் தணலில் இட்டுச் சாரமற்றுப்போன எலும்பை சலத்தில் வாரிக்கொட்டி நேற்றிருந்தார் இன்றில்லையென்று முறையிட்டு முற்றிப்பெற்றது நித்திய மயானம், சீவன் முத்தராகிய பிறப்பற்றபேருக்கு நினைப்பும் மறப்புமில்லாத சின்மய மயானம், அதுவே நிராகாரவெளி, அதுதான் எனக்கு இருப்பிடம், அதனால் என்னை மயானவாசியென்று உரைப்பார்கள். ஞானசூனியாள் அதை அசுசிஸ்தானமென்பார்கள் என்றார். தேவரீர் நீறணிந்ததும் எலும்பைப் பூண்டதும், பாம்பை அணிந்ததும், சூலந்தாங்கியதும், பிறைசூடியதும், பெருஞ்சோதியானதும், எப்படியென்ற வினாவிற்கு: சர்வ சங்காரகாலத்தில் நாமரூபமாவதெல்லாம் நசித்துப்போய், நான் ஒருவனாயிருக்கும்போது சகல சராசரங்களும் வெந்தெரிந்த நீற்றையெடுத்து ஆத்துமாக்கள் மறுபடியும் தழைக்கும்பொருட்டு என் திருமேனியில் பூசிக்கொள்வேன். சிருஷ்டிக்கும்போது முன் பசுவை ஏற்படுத்தி அதின் பஞ்சகவ்வியத்தினால் பூமியை பரிசுத்தமாக்கி புல்லுகளை முளைப்பித்து பசுவுக்கு ஆகாரமாக்கி அதுகழிக்கும் மலத்தைச்சுட்டு நீறாக்கி மந்திரார்த்தங்களினால் வாரிப்பூசிக்கொள்வேன். அதினால் சிவாத்துமாக்கள் உண்டாகுவார்கள். எலும்பையும் பாம்பையும் எவர்களும் அணியார்கள் எனக்கு எல்லாஞ்சரியே யென்ற அடையாளமாக அவைகளைத் தரித்துக் கொண்டேன். பெருக்கங் காட்டாமல் சுருக்கமா யிருப்பது பெருந்தன்மை. சூலப்படையைக்கொண்டு மூவரும் ஒன்றென்பதை தெரிவிக்கவேண்டி அதனை என்கையிற் பிடித்தேன். அக்கினிமேனி எனக்குவந்த வரலாறு: நித்தியானந்தக்கடலில் முழுகிய புத்திமான்கள் மதிக்கவேண்டி, சீதோஷ்ணமென்று இரண்டு பிரிவாயிற்று, இவ்விரண்டும் இல்லாவிட்டால் எந்த வஸ்துவும் வளராது, சீதளத்தை விஷ்ணுவுக்குக் கொடுத்து அக்கினியை நான் தரித்துக்கொண்டேன்.

கங்கையைச் சடையில் வைத்ததற்குக் காரணம்:—ஒரு பத்தினியின் நிமித்தியமும் நெற்றிக்கண்ணின் நிமித்தியமும் தரித்துக் கொண்டேன் என்றார்.

மூன்றாம்பிறை சூடியதற்குக் காரணம்:—தக்கன் செய்த அக்கிரமயாகத்தில் வீரபத்திரனால் அடிபட்டுத்தேய்ந்துபோன கலைகள்போக ஒரு கலையுடன்மீந்த சந்திரன் என்னை அபயம்புகுந்தான். அவனை ஆதரித்து அவனுக்குக் கலைவளரும்படி அனுக்கிரகம்பண்ணி அதுவிளங்கும் அடையாளத்திற்காக பிறையைத் தரித்துக்கொண்டேன். இதினால் தேவர்கள் சந்திரசேகரனென்று எனக்கு நாமஞ்சூட்டினார்கள்.

உடலுமுயிரு மொன்றாயிருக்க சாதிகள் பலபல வகுப்பான காரணம் யாது என்றகேள்விக்கு:—பாபம் மிகுந்த ஆத்துமாக்கள் மிருகாதி முதலிய பட்சிகளில் பிறக்கும், அதிலும் ஞானமமிகுந்தால் மேன்மைபெறும். இல்லாவிட்டால் சிறுமையடையும். நல்வினைதீவினை சேர்ந்த உடலில் நல்வினை இன்னதென்றும், தீவினை யின்னதென்றும் நாடி நன்மையைத் தேடினால் மானிடயோனியில் வரலாகும். அப்படி செனித்தபோதிலும் நல்வினையே மேலிட்டால் தேவராவார்கள். வருணம் நான்குவந்த முகாந்தரம் சிருஷ்டிகர்த்தாவின் காலில் துடையில் மார்பில் முகத்தில் நான்குபேர் பிறந்தார்கள். எந்தெந்த இடத்தில் எவர் எவர் பிறந்தாரோ அந்தந்த இடத்துக்குரிய சுபாவத்தால் சாதி நான்கென்று வழங்கிற்று. பாதத்திற் செனித்தவன் சூத்திரனென்றும் துடையிலும் நாபியிலும் உதித்தவன் வைசியனென்றும், தோளிலும் மார்பிலும் தோன்றியவன் க்ஷத்திரியனென்றும், முகத்தில் வந்தவன் பிராமணனென்றும் கொள்ளப்படும். இவனே மற்ற மூன்று பிரிவாருக்கும் கிரியைகளைக்காட்டி நடத்தேற்றி வைப்பவன். தேவதைகள் சுகபோசனங் கொள்ளும்படிக்கு அவிர்ப்பாகங்கொடுத்து வேதத்தைவிடாமல் அனுசரித்து நல்லொழுக்கத்தில் நடக்க வேண்டியது வேதியன். மாறுபட்டு நடக்கிறவன் உயர்குலத்திற் பிறந்தாலும் இழிகுலத்தான் என்றியம்பப்படுவான். வேதங் குன்றினாலும் குலாசாரம் குறையாமலிருக்கவேண்டும். தன் ஆசாரத்துக்கு விதித்திருப்பது நியாயமானாலும் நியாயமல்லாமற் போனாலும் உலகத்தோடொத்து வாழ்ந்தால் பெரியோர்கள் சபிக்கமாட்டார்கள். ஒருகுலத்திற் பிறந்தவன் மற்றொரு குலத்திற் பிரவேசித்து சமயந்தப்பி நடப்பானாகில் அவன் குலப்பிரஷ்டனாவான். ஒருவேளை இதரவர்ணம் தப்பிப்போமாகில் பிராமணனைக்கொண்டு வேதவிதியின்படி பிராயச்சித்தமுண்டு, பிராமணன் தப்பிப்போவானாகில் பிராயச்சித்தமில்லை.

க்ஷத்திரியர் ஆசாரம்.

இராசாக்கள் தங்களிடத்தில் இருக்கிற மந்திரி பிரதானிகளுடைய வார்த்தையைக்கேட்டு தன்னால் ஆராய்ந்துபார்த்து சகலகாரியங்களையும்

நடத்தி வேதியருக்கு நித்திய கர்மாநுஷ்டானம் தவறாமல் நடக்கும்படியாகிய முயற்சிகளைச்செய்து வரவேண்டும்.

வைசியர் ஆசாரம்.

பூமிக்குரியவர்களாயிருத்தல், திரண்ட திரவியங்தேடுதல், கலியாண முதலிய சுபகாரியங்களுக்கு லோபத்துவமில்லாமல் செலவுசெய்தல், ஆதுலருக்கீய்தல் முதலியவை செய்யவேண்டும்.

சூத்திரர் ஆசாரம்.

தனக்கு மேலான மூன்றுகுலத்தாருக்கும் ஊழியம்பண்ணி பூமிக்குரியவர்களுக்குஉழுதுபயிரிட்டு தானதருமங்களைச்செய்து சத்தியதர்மத்துடன் ஆசாரமாய் நடக்கவேண்டும். இனிமறையாசிரம முறையை வகுக்கின்றேன் கேள். பிரமசாரியானவன் ஆசாரியனிடத்தில் ஓதி விரதங்காத்து விவாகமின்றி இருப்போன். வானப்பிரஸ்தன் இல்லறந்துறந்து இல்லாளோடாயினும் தனித்தாயினும் வனத்தில் தவஞ்செய்வோன். சந்நியாசி முற்றத்துறந்தோன். இம்மூன்று ஆசிரமத்திலும் இல்லற தர்மமேமுக்கியம். இல்லறத்தான் தருமவழியிற் பொருளைத்தேடி நல்மனையாளுடன் கூடி வாழ்ந்து தாய் தந்தையரைப் பூசித்து ஆதுலருக்கீய்ந்து அகங்காரமடங்கி சத்பாத்திரங்களுக்கீய்ந்து விரதங்கள் நோன்புகள் காத்து நன்னெறியில் நடப்பானாகில் மேற்கூறிய மூன்றாசிரமங்களாலும் அடையத்தக்க பலனை இவன் அடைவான். விரதங்களில் கொல்லாவிரதம் முக்கியம். ஆனால் சிலர் கொல்லா விரதியரென்று பேசுவர் அது சரியல்ல. நடக்கும்போதும் படுக்கும்போதும் கொசு எறும்பு முதலிய சீவன்கள் மாண்டுபோம். அதினால் தோஷம் வரும். நல்வினை தீவினை சீதோஷ்ணங்களை சமமாக எண்ணுகிறவன் எவனோ அவன் யாவையும் சமமாய் பாவிக்கிறவனாபடியால் அவனுக்கு இந்ததோஷமில்லை. இராஜதம் தாமசம் என்று இரண்டுபேர் உண்டு அதில் தாமசம் பெண்மை. இராசதம் ஆண்மை. சாத்துவீகமானது இராஜச தாமசங்களிற் சார்ந்தால் ஆண்பிள்ளையாகப் பிறக்கும். அவன் சாத்துவிக குணத்தைச் சார்வானாகில் அவனுக்குப் பிறப்பில்லை. இந்த உடலானது நான்குவகையாய் உதிக்கப்பட்டது, அதாவது, யோநிஜம் அண்டஜம் சுவேதஜம் உத்பிஜம். முந்தின இரண்டும் கற்ப உற்பத்தி. மற்றிரண்டும் புழுத்து வளரும். இதில் மானிட ஜென்மம் உத்தமம், அதிலும் கூன் குருடு இல்லாமல் பிறப்பதே நலம். அதிலும் கல்வி கேள்வி சாதுசங்கம் கூடியிருந்தால் மேன்மை. அதிலும் ஞானம் தானம் தருமம் சீவகாருண்ணியம் தற்போதம், இவை கைகூடினால் மோக்ஷம். இல்லாவிட்டால் மிருகாதிகளுக்குச்சமானம். ஆதியில் பிரமா தமது தபோமகிமையால் மானிடரை சிருஷ்டித்து அவர்களை அக்

கியானம் பீடிக்க ஒட்டாமல் வைத்துப் பார்த்தும் தன்னுல் முடியாமல், சிறுவயதில் கல்வியைக் கற்று கற்றவர்களிடத்தில் கேட்டு புத்திபூர்வத்தால் தீமையைப் போக்கடித்துக்கொண்டால் உண்டு. இல்லாவிட்டால் அது போகாதென்று, சிரவணம் மனனம் செய்யும்படி திட்டப்படுத்தினுர். சிரவணமாவது கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னப்படும். மனனமாவது சிந்தை வேறுபடாமல் ஒரேநிலையாய் என்னையே தியானம் பண்ணுதல். தீவினையானது மூன்றுவிதத்தினுல் வரும். அது என்னவெனில், மனம் வாக்குக் காயம். இவற்றுள் மனதினுல் வருவது மயக்கம். வாக்கினுல் வருவது பொய் குறளை கொடுஞ்சொல். காயத்தினுல் வருவது கொலை களவு முதலியவை. இம்மூன்றும் ஒருவாரிருக்க இதில் பொய்யைப் பார்க்கிலும் கள்ளுண்டல். இது பாவத்துக்கெல்லாம் பதியாயிருப்பது அதினுல் கல்வி ஞானம் அறிவு நன்னெறி தேஜஸ் தருமம் குலாசாரம் கோத்திரதோஷம் பிதிர்தேவதை சாபம் தாய்தந்தை பந்துமுதலியவர்களுக்கு மனத்துன்பம் இத்தியாதிகளை இம்மையில் உண்டாக்கி மறுமையில் நரகத்தில் மடங்கிக் கிடக்கப்பண்ணும். ஆனுல் மதுபானம் பண்ணப்படாதோவென்றுல் ஒருதெய்வத்தின் முன்னிலையில் அல்லது தேசிகன்பொருட்டில் மந்திரஞ்செபித்து யாவருக்குந் தெரிய உட்கொண்டாலும், மெய்வழியில் நின்று விரதஞ் செலுத்தினுலும் பலன் உண்டு. இப்படிச் செய்யாமல் மதுவையுண்டு ஐம்பொறிகளை அதின் வசத்தாக்கினுல் கொடிய நரகத்துக்காளாவான். இப்பேர்ப்பட்டவர்களுடைய உறவு எத்தனை லாபத்தைக் கொடுத்தாலும் கொடுப்பதா யிருந்தாலும் உடனே அதனை விட்டுவிட்டு மறுவேலை பார்க்கவேண்டும். எத்தனை பாவம் பண்ணினுலும் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். கள்ளுண்ணுவதினுல் வரும் பாவத்திற்குப் பரிகரிப்புக் கிடையாது. இஃதிப்படியிருக்க இன்னெரு ரகசியமுண்டு. அமராவதியாகிய பொன்னுலகத்தில் மானிடர் யாவரும் சம்பிரமத்துடன்கூடியிருந்தார்கள், சொற்கலோகத்தில் இடம்போதாமற் போயிற்று. தேவேந்திரன் முதலிய தேவர்கள் பிரமனிடத்தில் முறையிட்டபோது அதைப்பற்றி பிரம்மதேவர் இந்த ஆத்துமாக்களுக்கெல்லாம் பூர்வக்கியானம் தோன்ருமற்போகும்படி மயக்கம் மறதி கெர்வம் இம்மூன்றையும் உண்டாக்கினுர். அன்றுமுதல் மானிடர்கள் ஒன்றுந்தோன்ருமல் பிறப்பிலே முழுகி மனம்போனபடிக்கெல்லாம் நடந்துவழிதப்பிப்போனுர்கள். அப்பால் நல்வினைப் பயன்பெற்ற சிலர் சாஸ்திரங்களைக் கற்று சாதுசங்கப் பழக்கத்தால் பூர்வக்கியான முணர்ந்து கடேறிவந்தார்கள். அதைப் பிரமன் அறிந்து அதற்கு இடையூருக வேசிகள் கள்ளு சூது இப்பேர்ப்பட்ட வகைகளை உண்டுபண்ணி சாஸ்திரமூலமாய் வந்த கியானத்தை தட்டழியப்பண்ணினுர். இதற்கு தப்பித்துக்கொண்டபேர்கள் நற்கதியின் கரையைக்காண்பார்கள். மற்றவர்கள் பிறந்திறந்துழல்வார்கள், இது பிரம்மசூழ்ச்சி. இந்த சூக்ஷமம் அறிந்த புத்திமான்கள் மலைகலங்கினுலும் மனது கலங்காமல் திடச்சித்தவிருத்தி யுடையவராய்

உன்னையும் என்னையும் பணிந்து நடந்தேறுவார்கள் என்று பரமேசுரன் பகர்ந்தார்.

நல்வினை வருவது எவ்விதம் என்று மகேஸ்வரிவினவ, பரமேசுவரன் பகர்கின்றார்.—ஒருவன் நல்லபுத்தியும்இரக்கமும் உடையவனாயிருந்தால் நன்மைகிடைக்கும். ஒருவனுடைய ஆபத்தைக் காப்பாற்றும் நிமித்தம் பொய்யாவது சொல்லி, உபாதி தீர்த்துவைத்தால் இது சத்தியத்திலும் அற்புதமானதாயிருக்கும். இதுவாக்கின் நல்வினை. யக்கியத்தின்வகை ஐந்து.—தெய்வம், தென்புலம், விருந்து, சுற்றத்தார், தான். தேவதைகளுக்குச் செய்யப்பட்ட யக்கியம் இருவகை, அஃதாவது, தக்ஷணாக்கினீயம் காருகபத்தியம் ஆகவநீயம் இம்மூன்றும் அக்கினியையும் வளர்த்து தேவதைகளுக்கு அவிர்ப்பாகங் கொடுத்து பூசிப்பது ஒருவிதம். இன்னொருவிதமாவது, ஆலயம் கோவில் குளம் சத்திரங்கட்டி உன்னையும் என்னையும் பஞ்சலோகத்தால் வார்ப்பித்து நித்தியபூசை உற்சவாதிகளால் ஆராதிப்பது மற்றொருவிதம். பிதிர் தேவதைகளுக்குறிய யாகமாவது, தர்ப்பணம் பிண்டம் அன்னதானம் பிராமணருக்கு ஈதல்இவைகள் பூதயாகமெனப்படும். விருந்தினர் வேள்வி பந்துக்கள் அரதேசிகள் பரதேசிகள் அதிதிகள் முதலியோரை உபசரித்து அன்ன வஸ்திரங்கள் கொடுத்து தன் சரீரத்தை பத்திரமாய் போஷித்து மனையாளைத் திருத்தி இல்லறதர்மத்துக்கு இடையூறு வராமல் நடத்திக்கொள்வதே முக்கியம் என்று திருவாய்மலர்ந்தருளினர். தேவரீர் ஐந்துயாகங்களில் பிதிர்யாகம் ஒன்று செப்பினீரே, இறந்துபோனவர்கள் எழுவகைத்தோற்றத்தில் பிரவேசித்துவிடுகிறார்களென்று தேவரீரே சொல்லியிருக்க, அவர்களை உத்தேசித்து திதிகொடுத்தால் அவர்கள் எப்படி வாங்குகிறது. இறந்துபோன தாய் தகப்பனைக்குறித்து தர்ப்பணம் பண்ணினால் யாதனாசரீரத்தில் அகப்பட்டு வாதைப்படுவதாயிருந்தாலும் உடனே நீங்கும். சூக்ஷ்மதேகத்தில் இருந்து சுகம்பெற்றிருந்தாலும் இன்னம் மேலான பதவிகிடைக்கும். உலகில் மானிடர் எந்ததர்மத்தை மறந்தாலும் பிதிர்தினத்தை மறக்கலாகாது. மறப்பானாகில் குடும்பம் நசித்துப்போம்.

முக்தியின் விவரம்.

அஷ்டாங்கயோகத்தில் யாதேனும் ஒன்றில் நின்று மோக்ஷத்தையடையலாம். முக்தியின் விவரமாவது: பிருதிவு அப்பு தேயு வாயு ஆகாயம் இவை பஞ்சபூதம். வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம் இவை கர்மேந்திரியம். சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் இவை ஐம்புலன். மெய் வாய் கண் மூக்கு செவி இவை ஐம்பொறி. மனம் புத்தி சித்தம் ஆங்காரம் இந்நான்கும் அந்தக்கரணம் பிரகிருதி ஒன்று. இந்தத்தத்துவங்களே மோக்ஷமாம். ஆத்துமதத்துவம் இருபத்துநான்குடனே அளாவிக்கொண்டு அவியக்த்தனென அநாதி ஆன்மா பிரகிருதியென்கிற பெயர் பெற்று மயங்கி மாயையில் சிக்கிக் கெட்டுப்போகிறது. அதைநீங்கிப் பிரகிருதியும் மாயை

யும் வேறாகி தான் சுயம்பாயிருந்துதானால் உடலெடுக்காது இது முக்தி யின் நிலை. சுத்தஞானிகள் உமது ரூபமாய் சாயுஜ்யமடைவார்கள் என்று கேட்டிருக்கிறேன். அதின் விவரத்தை அடியாளுக்கு அருளிச்செய்யுமென்றாள். மறைகளாலும் அறியப்படாத சித்பரப் பொருள்யான். எனக்கு நிஷ்களம், சகளம் என்று இரண்டுவிலாசம் உண்டு. அவைகளில் நிஷ்களமாவது பரிபூர்ணமாய் எங்குந்தானாயிருக்கப்பட்டது. சுத்த ஞானிகள் நிஷ்கள விலாசத்தை அடைவார்கள். இதோ நான் இருப்பது சகளவிலாசம். யோகீசுராள் யாவரும் சகளீகரித்த சாமீப்பியம் பெறுவார்கள் பந்தம் அற்று என்னை உருவாய்ப்பாவித்து அந்தர்யாமியாய்க் கொண்ட பக்திமான்களும் சாயுஜ்யம் பெறுவார்கள். சிவலிங்கப் பிரதிஷ்டைபண்ணி கோவில் குளம் அன்னதானங்கள் செய்தபேர் சாரூபபதம் அடைவர். சரிதை யென்னப்பட்ட முறைமைப்படிநடந்து அன்புமிஞ்சிய பேர்களுக்கு தேவதைகள் கொண்டாடப்பட்ட சாலோகபதவிகிடைக்கும். இவைகளைக்கேட்ட பார்வதியம்மனும் ரிஷீசுராளும் நாரதரும் ஈசனைப் புகழ்ந்து துதித்தார்கள். அவ்வேளையில் பரமசிவம் அபிராமியைப் பார்த்து, நாராயணீ; அநேகம் பெண்கள் நம்மைச் சேவிக்கவும் சிலதர்மங்கள் கேட்கவும் வந்திருக்கிறார்கள். நீ பெண்ணாகையால் உன்வாக்கினால் அவர்களுண்டாயிருக்கிற சங்கையைத் தீர்த்தருள்வாயென்றார் சுவாமீ, அற்புதகுணசீலராகிய பரஞ்சுடரே வேதங்களாலும் விள்ளுதற்கரிய இரகசியங்களை அடியாளுக்கு விளம்பினீர். என்னால் என்ன சொல்லக்கூடும். தேவரீரே திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று மகேஸ்வரி சொல்ல, மகாதேவன் நகைத்து, உன் வாக்கினால் கேட்க விருப்பங்கொண்டு வந்தவர்களுக்கு நீயே சொல்லவேண்டும். அதைக்கேட்க எனக்கும் விருப்பமாயிருக்குதென்றார். சண்முகனைப் பெற்ற உண்ணாமுலை உரைப்பாளாயினள். பெண்களுக்கு திரிகாலத்திலும் சுதந்தரமில்லை, தாய்தந்தையர் கட்டளைப்படி சிலகாலம், புருஷன் கட்டளைப்படி சிலகாலம், பிள்ளையின் சொல் மாறுபடாமல் சிலகாலம், இதற்குள்ளாக அவள் காலம் முடியும். இஃதொருவிதி. ஸ்திரீகளுக்கு யாதொரு அதிகாரம் இல்லை. தாய் தகப்பன் அண்ணன் தம்பி இவர்கள் இவளை ஒருவனுக்கு அக்கினிசாட்சியாய் தத்தம்பண்ணிக் கொடுத்துவிட்டால், அந்த தத்தம் வாங்கினவன் இவளுக்கு முதல்வன், அவனுடைய அபிமதப்படி நடந்து, தென்புலத்தார் அதிதி முதலியபேர்களுக்குச் செய்யவேண்டிய கடன்முதலிய பூசைகளைசெய்து, மனம் வாக்குக் காயம் மூன்றும் ஒன்றாயொத்து அறுசுவை பன்னங்களுடன் ஊட்டிவைத்து இரவும் பகலும் பணிவிடையில் பால்மாறாமல் குளிர்ந்தசொல்லும் ஆசாரமும் அறிவும் உடையவள் மகா பதிவிரதை. கைம்பெண்ணான பிற்பாடு ஆபரணங்களையும் நல்லாடைகளையும் விசர்ச்சித்து ஆகாரத்தைக் குறைத்து இறந்த தன் கணவனையே எப்போதும் நினைத்து தெய்வமாய் பூசித்துவருவாளாகில் நற்கதி பெறுவாள் என்று அம்மன் சாற்ற, வந்திருந்த தேவஸ்திரிகள் அகமகிழ்ந்தனர். ஆதிமத்

யாந்த ரகிதராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு நாரதர் இங்ஙனம் சொல்லக் கேட்டு சிரவணானந்தம் அடைந்து ஈசுரனைச்சிலாகித்து தமது துவாரகாபதிக்குச் சென்றனர் என்று பீஷ்மர் தருமபுத்திரருக்கு விளம்பியருளினர்.

இப்பால் புருஷோத்தமன் மகிமையுரைத்த சருக்கம்.

தருமநந்தன! நான் உரைக்கும் பரமரகசியத்தை சற்று ஞாபகமாய்க்கேள் என்று பீஷ்மர் தொடங்கினர். பாண்டவசகாயன் என்று வந்த பரம்பொருள் பத்து அவதாரங்கள் எடுத்து தருமங்களை நிலைநிறுத்தி சிஷ்டாசாரத்தை தெரிவித்து சோதிசுரூபமாய் எண்பத்துநாலு யோனிபேதமாகிய ஆத்துமகோடிகளை ரட்சித்து தம்முடைய மாயாவலையைவீசி முக்தாத்துமாக்களுக்கு மோக்ஷமளித்து ஆபத்பாந்தவனயிருந்து காக்கப்பட்ட ஐயன், இதோ இருக்கிற ஸ்ரீகிருஷ்ணபகவான் என்று அறிந்துக் கொள்ளும். இவருக்கு உள்ளும் புறம்பும் ஒத்து அவர் பாததாமரையைத் தொழுது தொழும்புசெய்யும் வேலைகளை மறவாதிரு, நீ அநேகம் புண்ணியங்களைப் பண்ணியபடியால் பிரமன்முதலிய பேர்களுக்குக்கிட்டாத பதுமநாபன் உன்னைவிட்டு நீங்காதிருக்கப்பெற்றாய். இலக்ஷ்மீகடாட்சம் பெறவேண்டுமானல், ஸ்ரீயப்பதியாகிய மகாவிஷ்ணுவின் கிருபை பெறவேண்டும். சகலகோடி சீவராசிகளும் ஸ்ரீமந்நாராயணன்திருவடிகளை ஸ்தோத்திரம் செய்யவேண்டும் திருமாலுக் கடிமைசெய்யாதபேர்கள் மேம்பாடான செல்வம் பெறார்கள். மோக்ஷமடைய வேண்டுமென்றால், கேசவனல்லாது வேறுண்டோ. அவருடைய வீக்ஷணமில்லாமல் கதிகிடைக்க மாட்டாது. அவருடைய மகாத்துமியம் மனதுக்கும் வாக்குக்கும் எட்டாதது. சராசரப் பொருளுக்கெல்லாம் தாயாகிய ஆதிமூலம். ஆதிமூலத்துக் கிருப்பிடமாகிய இந்த மூலகாரண காரியமானவரும் காலாதீதமானவரும், கர்த்தாவானவரும், துளிரானவரும், அரும்பானவரும், கரும்பானவரும், உருவானவரும், அருவானவரும், தருமமானவரும், கருமமானவரும், தருமங்காப்பவரும், கருமம் வாய்ப்பவரும், தானவரானவரும், வானவரானவரும், மானிடரானவரும், எல்லாந்தானனவரும், தான் அல்லாத நான் ஆனவரும், வேதரூபமானவரும்; பிரபஞ்ச ரூபமானவரும், பரமசிவமானவரும் சத்கிருத்தியங்களானவரும், யக்கியமுக்கிய மானவரும், சந்திர சூரியாதிசோதிகளாயிருக்கப்பட்டவரும், முக்தனானவரும், சமயமானவரும், அவ்வச்சமயக் கடவுளரானவரும், சமயாதீதமானவரும், சமயசமரசரும், யாவருள்ளும் தான் ஒருத்தனேயானவரும், ஒன்றுமுணராதார்போ லிருப்பவருமா யிராநின்ற இவர் துவாரகாபுரிவாசன். இவைகள் எல்லாம் இவர் லீலாவிபூதி, இவர் எக்காலமும் எப்போதும் எங்கும் மறைப்பில்லாதிருக்கின்ற அன்பரிடத்தில் வசிப்பவர். கிருபாநிதி இவர் திருவடியை முடியிலும் மடியிலும் உள்ளத்திலும் இருத்தி ஒருகணப்போதாவது ஏமாறாமல் சிந்திக்கக்கடவை தருமநந்தனவென்று பெரியவராகிய பீஷ்மர்சொல்ல, தருமர் வணங்கினர்.

பூமியில் பூசைக்குரியவர்களும் பூசைபண்ண யோக்கியர்களும் யாரென்ற பிரஸ்னேக்கு:—ஞானவல்லமை யுடையவர்கள் எவர்களோ அவர்களே பெரியவர்கள். அவர்கள் எந்தக்குலமானுலும் அவர்களை வணங்கி அன்புடன் பூசை செய்யவேண்டும் தேவதைகளுக்கும் திரிமூர்த்திகளுக்கும் ஆராதனை செய்வதைப்பார்க்கிலும் அவர்களடியாருக்குச் செய்வதால் அதிகபலனுண்டாகும். அவனவன் ஆசாரத்துக்குரிய தேவதைகளின் பிரதாபத்தை, வேதசாஸ்திரங்களை நன்ருய்க் கற்றுணர்ந்த தேசிகனல் தெரிந்துக்கொள்ளவேண்டும். அவைகள் இவன் நாவில் சதா ஊறிக்கொண்டிருக்க வேண்டியது. சகல தேவதைகளும் ஆசான் நாவில் குடியிருப்பார்கள். அப்பேர்ப்பட்ட உத்தமரைப் பணியலாம். அவர்கள் மனங்கோணுமல் நடந்தபேர்களுக்கு பூமியில் ஒருகவலையும் இராது. கடைசியில் ஒருத்தரும் பெறக்கூடாத பேறைப்பெறுவார்கள். ஆசாரியருக்கு ஆசைவார்த்தை சொல்லி மோசம்போக்கினுலும் நிந்தித்தாலும் மகாபாபிகளாய் நரகவேதனைக் குட்படுவார்கள். இதற்கொரு திருஷ்டாந்தரம். முற்காலத்தில் ஒரு வேசியானவள் ஈனக்கிருத்தியத்தில் பொருளை சேகரித்து வாழ்ந்துவரும்போது, ஒருநாள் ஒருபெரியவர் அந்த தாசிவீட்டுக்கு வந்தார். அவள் அவரை உபசரித்து அவர் விரும்பி கேட்ட பொருளைக் கொடுத்தனுப்பிவிட்டாள். இவள் ஆத்துமாபிரிந்தவுடன், யமதர்மராஜன் இவளுடைய பாபபுண்ணியங்களை கணக்கிட்டுப் பார்க்கும்போது பாபமே அதிகப்பட்டிருந்தாலும் ஒரு பெரியவருக்கு இவள் மனசார ஈய்ந்த அந்த நற்செய்கைக்காக பூமியில் பிராமணகுலத்தில் நற்குணப் பெண்ணய்ப் பிறந்து சகல வைபவங்களையும் அனுபவிக்கப்பண்ணினர். இதைப் பார்க்கிலும் வேறு திருஷ்டாந்தம் வேண்டுமோ தருமநந்தன என்ருர்.

தன்னைவிட்டகலாத தரித்திரத்தை நீக்கிக்கொள்ளுகிறதற்கு ஒருபாயம் யாதென்ற பிரஸ்னேக்கு.

பேரனே! உதயமாகுமுன் எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு ஆண்டவனைத் தியானித்து வேதப்பிராமணுளை பூசித்து தருமமாய் நடந்துவந்தால் அவனைத் தரித்திரம் பீடிக்காது, சகல சம்பத்தும் உண்டாகும். இதற்கு மனமே காரணம். மனவுறுதி கெட்டியாயிருக்கவேண்டும். மேலும் ஸ்ரீமந் நாராயணனை வாசுதேவனை பரந்தாமனை கேசவனை வாசவனை அமலனை விமலனை கமலனைத்தந்த திருநாபனை விண்டுவை கொண்டலை துளசியந்தாமனை அழகனை முண்டகாசனனை கேள்வனை நராரியை முராரியை ராவணகண்டனை கோதண்டநாதனை விடாமல் சிந்தித்துக்கொண்டிருக்கவேண்டும். கோவிந்தன் கோபாலன் கோபிகாநாதன் அஷ்ட

லட்சுமி வாசன் ஆதிமத்தியாந்தரகிதன் தாமோதரன் ஜநார்த்தனன் ராமன் காகுத்தன் அச்சுதன் திருமால் இங்ஙனம் சகஸ்திர நாமார்ச்சனை செய்தால், பரமபதம் அடையலாம் என்றார்.

பூசையை ஏற்றுக்கொள்ளுதற்கும் அன்னங் கொடுப்பதற்கும் பாத்திரம் யார் என்ற பிரஸ்னைக்கு.

வேதங்கள் யாகங்கள் ஆசிரமதர்மம் தானமேற்றல் ஈய்தல் எல்லாம் பிராமணருக்கு உரித்தேயல்லாமல் மற்ற வருணத்தாருக்கு அதிகாரமில்லை. இவர்கள் கியானவல்லவரான பிராமணர்களையே பூசிக்கவேண்டும். எதாகிலும் கிஞ்சித்துக்கொடுத்து உதவிபுரியவேண்டும். அவர்கள்தான் பெறுகிறதற்கு யோக்கியாள் என்றார்.

பிராமணனுக்கு மாத்திரம் இவ்வளவு பூசிதை வந்தகாரணம் யாதென்ற பிரஸ்னைக்கு.

உன் சகோதரன் அர்ச்சுனனுக்கு பவன் என்கிற பெரியவர் பிராமணனுடைய யோக்கியதையைப் பகர்ந்திருக்கிறார். அதை உனக்கு விவரிக்கிறேன் கேளும்.

பூதேவர் மகிமை.

உனது சகோதரன் விஜயன் தனக்கு இணையானவன் இல்லையென்கிற பிரக்கியாதிக்கு மகிழ்ந்திருந்தவனை, அக்கினி மத்தியிலிருந்து ஒருபூதம் புறப்பட்டுவந்து உன்னுடைய புஜபலத்தை மதித்து, ஆரும் எதிரில்லை என்று மகிழ்ந்திருக்கிறாய், அது சரியல்ல உன்னிலும் உயர்ந்தோர் அநேகருண்டு. அதிலும் பிராமணர் மிகவுஞ் சிறந்தவர்கள் என்று சொல்லிற்று. அதைக்கேட்ட அர்ச்சுனன், பூதமே என் ஆக்கினைக்குள் அடங்கி என்னிடத்தில் யாசித்து வாங்கிச் சாப்பிடும் பஞ்சை வேதியர்களை என்னிலும் அதிகமென்று சொன்னாய். நீ இன்னொருக்கால் இப்படி சொல்லுவையாகில் உன்னை என்பாணத்துக் கிரையாக்குவேன் என்றான். அவனுடைய உக்கிரத்தைப் பார்த்த அந்த விக்கிரமபூதம் திகிலடைந்து மறைந்துபோய் விட்டது. அதுமுதல் இவன் மிகவும் மமதையடைந்திருந்தான். அப்போது அர்ச்சுனன் பூதத்தை மிரட்டிய வார்த்தையைச் சகியாத பவன் என்கிறதேவன், அர்ச்சுனனுக்கு நேரில்வந்து தன்னை இன்னான்

என்று தெரிவித்து, நீ உன்னைத்தானே வியந்து சந்தோஷப்படுகிறாய். பிராமணரை இகழ்ச்சியாய்ப் பேசினாய். அவர்கள் அப்படி குறைந்துப் போவார்களாகில் தாய்தந்தைக்குப் பலமில்லாமல் மெலிந்து அவர்களால் பிறந்தபிள்ளை பலப்படுமா. வேதியருடைய மகிமையை நீ அறிந்திருந்தும் அறியாதவனைப்போல் பேசினாய். மறையவர்களுடைய தபஞ்செபம் முதலிய மகிமையினால் அல்லவா ராஜாக்கள் செங்கோல் செலுத்துவது. அவர்களுடைய தபோமகிமையால் அல்லவா உலகம் நிலைத்திருப்பது. முதற்சாதியாகிய முனிவர்களை நீ நிந்திக்காதே. தேவேந்திரன்கூட கௌதமரிஷியால் மகாபாடுபட்டான். அகஸ்தியமகாரிஷி சமுத்திரத்தை அங்கையில் அடக்கிப்பருகினார். பிருகுமாரிஷியின் சாபத்தினால் அக்கினிதேவன் பிதறிப்போனான். ஒருகாலத்தில்தேவதைகள் அடிபட்டோடுகிறதை வசிஷ்டமுனிவர்கண்டு ராட்சதரைத் தன் நேத்திராக்கினியினால் எரித்து அண்டருக்கு செயமளித்தார். இப்படி மேம்பாடுடைய வெகுகோடி வேதியர்களுண்டு. அவர்கள் சரிதை மிகவும் அற்புதமானது. நீ அவர்களை தூஷிப்பது சரியல்லவென்றார். விஜயன் ஒன்றும் பேசாமல் மவுனமாயிருந்தான். அதை யுணர்ந்த பவனன் என்கிற வாயுதேவன் அர்ச்சுனனை மதிக்காமல், விஜயா! உங்களுக்கு இந்த நலமெல்லாம் வந்தவாறு நான் அறியேனோ, நீங்கள் பூர்வத்தில் தத்தாத்திரேயர் பாதத்தில் விழுந்து வேண்டிக்கொண்டபடியால் உங்களுக்கு இத்தனை அருமை பெருமை மமதைகளும் வந்தது என்றார். விஜயனுக்கு புத்தி உண்டாகி இனி பிராமணருக்கு நல்லவனாய் வழிப்பட்டு நடக்கவேண்டும் என்று சிந்தை வந்தபோது, அந்த வாயுதேவன் இன்றுமுதல் அந்தணரைப்பணிந்து நடப்பாயாகில் ஆயுசு விருத்தியும் ஐசுவரிய சித்தியும் சத்துருசெயமும் பெற்று சுகப்படுவாய் என்று சொல்லி மறைந்தனர் என பீஷ்மர் மொழிந்தார். பிராமணர் சரிதையைக் கேட்கக்கேட்க விநோதமும் பெருமையும் புண்ணியமுமாயிருக்கிறது. தேவரீர் இன்னமும் இதனை எடுத்துக் கூறவேண்டுமென்று பாட்டனாரைத் தருமர் கேட்டார். என்பேரனே! எனக்கு நினைப்புத்தடுமாறி ஆயாசமாயிருக்கிறது, ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுவார். அவரால் நீ அறிந்துக்கொள்வாயென்றார். தருமர் கோரிக்கைப்படி ஸ்ரீகிருஷ்ணபகவான் வேதியர்மகாத்துமியத்தை விளம்பத்தொடங்கினார்.

ஐசுவரியம் ஆண்மை கல்வி ஞானம் ஆயிசு போகபோக்கியம் மோக்ஷம் இத்தியாதி வேண்டியபேர்கள் பிரம்மக்கியானமுள்ள பிராமணரை வணங்கிப் பூசித்துத் தொழுவார்கள். தீவினைவசத்தால் மகாபாதகம் பண்ணவேண்டுமென்று விரும்பினவர்கள் மறையவரையிகழ்வர். முன்னொருக்கால், தூர்வாசமகாமுனிவர் என்னிடத்திற்கு வந்தார். இவ்வளவுதூரம் எழுந்தருளியதேதென்று கேட்டேன். உம்முடைய கிரகத்தில் சிலநாள் வசிக்கவந்தேன் என்றார். அவரிஷ்டப்படி நானும் ருக்குமணியும் மனம் வாக்குக் காயமொத்து அவர் மனங்கோணாமல் போனவழிக்கெல்லாம்

பணிவிடை பண்ணிவந்தோம். ஒருநாள் பால் அன்னம் வேண்டுமென்றார் அப்படியே தருவித்து வைத்தேன். அதில் ஒருபாகத்தை புசித்தபின், மற்றதையெடுத்துத் தமது தேகத்தில் பூசுங்கள் என்றார். அப்படியே பூசினோம், மூலஸ்தானத்துக்கும் பூசச்சொல்லி ஆண் பெண் என்றறியாமல் உன்மத்தன்போல் வீதியில் புறப்பட்டார், நாங்களுங் கூடவேவந்தோம். ஒரு திவ்வியரதம் கொண்டுவரச்சொன்னார், அதையுங்கொண்டுவந்து நிறுத்தினோம், அதின்பேரில் ஏறிக்கொண்டு என்னையும் ருக்குமணியையும் இழுக்கச்சொன்னார், அவ்வாறே இழுத்தோம். மேடு பள்ளம் வீதி சந்து பொந்து எங்கும் இழுக்கச்சொல்லி யடித்தார். பெண்பிள்ளை ருக்குமணி களைத்துப்போனாள். அதைப்பார்த்த தூர்வாசர் கீழே இறங்கிவந்து தன் மேனியில் அணிந்திருந்த் விபூதியை வழித்து அவள்மீது தடவினார். அது பட்டவுடனே ருக்குமணி களைதெளிந்து எழுந்தாள். மேலும் தேரை இழுக்கச்சொல்லி எங்களை விரட்டினார். அதுபோலும் நடத்தினோம், நாங்கள் படும் அவஸ்தையைப்பார்த்த ஊர்ச்சனங்கள் தூர்வாசர்மேல் சண்டைபிட வந்தார்கள். நான் அவர்களைக் கையமர்த்தி விலக்கிப்போட்டேன். அப்பால் ரதத்துடன் அரண்மனைவந்து சிங்காதனத்தில் எழுந்தருளினார். நாங்கள் இருவரும் அவரைப்பணிந்து இன்னமும் கட்டளை என்னவென்று வேண்டினோம். மகாரிஷி சந்தோஷப்பட்டு, இத்தனைநாள் நான் உங்களை வருத்திய இடருக்கெல்லாம் மனங்கோணாமல் உபசரித்தீர்களே, புருஷன் பெண்சாதி மனம் இப்படி ஒருமைப்படுவது மிகவும் அரிதென்று ருக்குமணிதேவியை சிலாகித்துக் கடல்சூழ்ந்த காசினியெல்லாம் உனக்குத் தாழ்ந்ததேயல்லாது மேற்பட்டதல்ல, இன்னஞ் சிலநாள் இகத்திலிருந்து அப்பால் பரந்தாமனுடைய பதவியைச் சேர்வாய். கிருஷ்ணா! நீயும் ருக்குமணியும் என் திருமேனியில் பாலும் அன்னமுந் தடவினீர்கள், உள்ளங்காலில் பூசவில்லை. அதினால் உனக்கு உயிர்நிலை உள்ளங்காலில் வந்து விடியும் உன் உடம்பில் மற்றெங்கே எந்த அஸ்திரம் பட்டாலும் நீ சாகமாட்டாய். நீ பிராமணாள் பேரில் எப்போதும் விசுவாசம் வைக்கவேண்டும் திதிக்கிட்ட பிண்டபலன் உன்னை வந்தடையுமென்று சொல்லி அந்தர்த்தானமாயினார். அன்றுமுதல் அந்தமகானுபாவருடைய அனுக்கிரகத்தினால் நாளுக்குநாள் புத்திரமித்திர களத்திராதியருடன் விருத்தியா யிருக்கிறேனென்றார்.

தூர்வாசமகாமுனிவரை கைலாசபதியின் சொரூபமென்கிறார்களே அதனை விளக்கி யருள்கவென்ற தருமர் பிரஸ்னைக்கு.

சிவபெருமானுடைய மகிமையை எடுத்துப்பேச பிரம்மாதி தேவராலும் முடியாது. நான் அவரை பூசித்தபலத்தினால் தெரிந்தமட்டுஞ் சொல்

னுகிறேன். உருத்திரசெபம் நூறுதரம் அன்புடன் செபித்தால் சாலோக சாமீப சாரூப மூன்று பதவிகளையுங் கடந்து சாயுஜ்யம் பெறுவான். அவரைத் தாமசகுணனென்று தெரியாதவர்கள் சாற்றுவார்கள். அவர் கருமிகளுக்குத் தாமசகுணத்தர் தான், ஞானிகளுக்கு சாத்துவிக குண மானவர், அவரையல்லாமல் அணுவுமசையாது, தக்கனை எக்கியபங்கம் செய்த காலத்தில் நகைத்தபோது சிகையிலே குழந்தையாய்க் கிளைத்த பிள்ளையைப்பார்த்து தேவர்கள் இவர் யார் என்று கேட்க தூர்வாசர் என்றுசொல்லி, அநசூயாதேவிகையில் வளர்க்கும்படி கொடுத்தருளினர் இவருடைய பிரபாவத்தைச்சொல்லி முடியாதென்றார்.

சாஸ்திரங்கற்றபேர் தெய்வம் இரண்டென்று மத பேதம் பேசுகிறார்களே இதின் நுட்பத்தை அறியாமல் வாக்குவாதம் பண்ணுங் காரணம் யாதென்ற தருமர் பிரஸ்னைக்கு.

புண்ணியனே! இராசதம் தாமசம் இக்குணமுடையார் சாஸ்திர விரோதியர், சமரசப்பகைஞர், சாத்துவிக குணமுடையபேர் சாஸ்திரங் களை நம்பி நிர்த்தியாசனஞ் செய்வார்கள். அவர்களுக்கு பேதாபேதம் தோற்றாது அபேதக்கடவுள் அவர்களுக்கு அனுக்கிரகம் பண்ணுவார், வஸ்துபேதம் அற்றவர்களுக்கு மரணவேதனை வராது, வாதாடிக் கெட்ட பேர்கள் பூலோகமெய்ச்சும் புகழுக்கு ஆசைப்பட்டு பழி பாவங்களுக்கு ஆளாவார்கள். பொருளைப் படைத்தோர் பிறருக்குத் தெரியாமல் எப்படிக் காப்பார்களோ அப்படிக்கே அருளுடையவர்கள் மௌனத்திலிருந்து ஆராய்ந்துதேறி மாறாத மோக்ஷத்தை யடைவார் கள். உலகம் மெச்சப் பேசுகிறவன் அற்பனென்று அறிந்துகொள், கர்ம சாது தர்மசாது என்று இரண்டு உண்டு, கர்மசாதுயாரென்றால், கோபம் பாவம் இல்லாமல் ஒருத்தர்சொன்னாலும் தெரியாமல் சும்மாயிருப்பவன். அவன் பூர்வத்திலும் இப்பவும் மனிதசென்மம். தர்மசாது யாரென்றால், தேவதைகள் சில காரியார்த்தமாய் பூமியில் மனுஷசென்ம மெடுத்து ச்சகல சாஸ்திரவிசாரமுஞ்செய்து பொய்யைத்தள்ளி மெய்யைக்கண்டு ஞானபதத்தை நாடி ஈஸ்வரத்தியானமாய் இருப்பவர்கள் என்றார். தருமராசன் முதலிய தம்பிமார் பீஷ்மாசாரியரை வணங்கிஇனிக் கேட்க வேண்டியதொன்றுமில்லை. வேறேதேனுமுண்டானால் கிருபைகூருமென்று பிரார்த்தித்தார்கள். அப்போது வியாசமுனிவர் கிருஷ்ணரைப் பார்த் து தருமராஜன் திரிதராஷ்டிரனுடன் கூடி வாழ்ந்திருக்கச் சிந்திக்கிறுப்

போற்காண்கிறது. அவர்களுக்குக்கிருபையுடன் செல்வு கொடுத்தனுப்புமென்ருர். ஸ்ரீகிருஷ்ணதேவர் தருமனைநோக்கி நீ கிரகஸ்த ஆசிரமத்திலிருந்து குறைவற்ற வாழ்வைப்பெற்று சுகத்தில் இருக்கக்கடவாயென்று அநுக்கிரகித்தருளினர். அப்பால் பாண்டவர்கள் பீஷ்மாசாரியரிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியுடன் அஸ்தினபுரம் வந்து சேர்ந்தார்கள்.

பீஷ்மாசாரியர் மோக்ஷமடைந்த சருக்கம்.

பீஷ்மரிடம் விடைபெற்றேகின பாண்டுவின் ஜேஷ்ட்ட மைந்தனுகிய தருமநந்தனர், சர்வசாஸ்திர பண்டிதர்களாகிய மகான்கள் சூழ கிருபாசாரியர் சஞ்சயர் உயுச்சன் விதுரர் குந்திதேவி காந்தாரி திரிதராஷ்டிரன் முதலிய பந்துக்களும் சகோதராளும் மிகுந்த கெம்பீரங்கொள்ள அகண்டமண்டலேசுவரனுய் செங்கோல் கோணுமல் ராச்சியபாரஞ் செய்து வரும் நாளில், விவேகத்திற் சிறந்த பாட்டனுராகிய பீஷ்மரைப் போய்க் காணவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணருடன் பிரயாணப்பட்டுப்போய், காங்கேயரைத்தொழுது தமது தெரிசனத்துக்குப் பெரியதந்தை முதலிய பேர்களும் வந்திருக்கிருர்கள் என்று சொல்லிய உரத்தசத்தத்தினுல் அவரைக்கண்விழித்துப் பார்க்கும்படிசெய்து அவரைஸ்தோத்திரித்தார்கள். பீஷ்மாசாரியர் அவர்களுக்கு மங்களாசாசனங்கூறி, ஸ்ரீபரந்தாமன் திருவடியை ஸ்மரித்து மகரத்தில் சூரியன்வந்த உத்தராயண புண்ணியகாலம் நேரிட்டபடியால், ஓ மகாதேவா! எனக்கு நல்லகதியைக் கடாக்ஷித்தருளுமென்று வேண்டினர். அவ்வாறே இனி எப்போதும் பிறவியற்றவனுய் எட்டாம்வசுவின் பதத்தைப் பெறுவாயென்று கண்ணபிரான் ஆசீர்வதித்தார். ரிஷீசுரர்கள் சதாஸ்து என்று வாழ்த்தினர்கள், அப்போது தருமராசனை அருகேயழைத்து அனேக புத்திமதிகளைச்சொல்லி அங்கே வந்திருந்தவர்களிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு தமது பிரபாசன வசுதேகத்துடன் லலாடஸ்தானத்தினின்றும் அம்பரத்தில் பிரவேசித்து தேஜோன்மய ஸ்வரூபமாய் சகலதேவரும் புகழ யாவரும் மகிழ தனது பதத்தில் சேர்ந்தனர். பூமியில் கிடக்கும் ஸ்தூலதேகத்தின்மீது யாவரும் விழுந்தழுது தேறி அவர்தேகத்தை கிரமப்படி தகனஞ்செய்து அன்று முதல் பனிரண்டுநாள்வரையில் கங்கைக்கரையில் இருந்து ஈமக்கிரியைகளை முடித்தார்கள். தகனஞ்செய்த அவ்வேளையில் கங்காதேவி சங்கதி அறிந்து ஸ்திரீரூபமாய் வெளிப்பட்டுவந்து மகன்பேரில் விழுந்தழுது பிரலாபித்து அவர் பிரபாவங்களை எடுத்துக்கூறினுள். மேலாகிய பதவியைச்சேர்ந்த உன் புத்திரனுக்கு யாதொரு குறைவும் இல்லை. சிகண்டியால் இறந்தானென்பதும் வீண்வார்த்தை. எதிரியின் பாணத்தால் இறந்

தான் என்று நீயோசிக்கவேண்டாம். இந்த அநித்திய சடலத்தைக்குறித்து யான் விசேஷித்துச் சொல்லவேண்டியதில்லையென்று புருஷோத்தமன் சொல்ல கங்காதேவி கேட்டு மகிழ்ந்து அப்பிரத்தியக்ஷமாயினள். இப்பால் தருமராசன் ஸ்ரீகிருஷ்ணபகவான் அனுக்கிரகத்தைப் பெற்றுத் தம்பிமாருடன் அஸ்தினபுரம் வந்துசேர்ந்து சர்வவைபவத்துடன் இராச்சிய பரிபாலனம் பண்ணிக்கொண்டு வந்தாரென்று ஜனமேஜயராசனுக்கு வைசம்பாயனர் சொன்னவாறே, நைமிசாரண்ணியமுனிவர்களுக்கு சூதபுராணிகர் அருளிச்செய்தார். ஆகையால் ஐந்தாம் வேதமாகிய ஸ்ரீமகாபாரதத்தை கற்றோர் கேட்டோர் கற்பித்தோர் எந்நாளும் ஸ்ரீகண்ணபிரான் அருளால் வாழி வாழி வாழி வாழியவே.

அநுசாசநிகப்ர்வம் முற்றிற்று.

துரோணபர்வம் முதல் அனுசாசநிகபர்வம் வரையில், சென்னை ஸ்ரீபத்மநாப்விலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது:—1917.

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ண சகாயம்.

ஸ்ரீ மகாபாரதம்.

பதினுன்காவது

அசுவமேதபர்வம்.

கண்ணன் துதி.

விருத்தம்.

பற்றறுப்பவர்பற்றியபற்றினைப்பதத்தின்
குற்றமற்றவர்கூடியவின்பத்தைக்குறித்து
கற்றகல்வியாற்காண்பதிற்காணுணுக்கருத்தை
முற்றுமாயதையென்கொலோயாமொழிவதுவே.

அசுவமேதத்திற்கு வியாச பகவான் ஆலோசனை.

ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியும் தருமராசன் முதலான பேர்களும் பீஷ்மருடைய தகன சம்ஸ்காரத்திற்குப்பின் கங்கைக்கரையில் வசித்திருந்தார்களென்று அநுசாசனிக பர்வத்தின் அந்தத்தில் சொல்லினேமல்லவா என்று வைசம்பாயன மகாமுனிவர் சொல்லிவரும்போது, தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய ஐந்தாம் வேதமென்கிற இந்த இதிகாசத்தை நான் கேட்டுப் புனிதனுனேன், மெய்விரதர்களாகிய பாண்டவாள் அசுவமேதம் புரிந்த அற்புதத்தையும் அருளிச்செய்ய வேண்டுமென்று ஜநமேஜய மகாராசன் அடிபணிந்து வேண்ட வியாச சிஷ்யர் விளம்பலுற்ருர்.

தேவாதிதேவனுகிய ஸ்ரீகிருஷ்ண பகவான் தருமராசன்மீது கருணை கூர்ந்து, இனி அஸ்தினுபுரத்திற்குப் போகலாமென்று சொல்ல அதற்கு தருமராசன் எனக்கு அஸ்தினுபுரமும் அரசும் இந்த சரீரமும் வேண்டாம், இவ்வுலகில் இருப்பதில் எனக்கு யாதொரு சந்தோஷமுமில்லை, பீஷ்மர் முதலிய பெரியோர்களைப் போக்கிய பின்னர், நான் இனி அனுபவிக்கப்போகிற சுகம் துன்பமேயல்லாது இன்பமல்லவென்று பெருமூச்செறிந்து மூர்ச்சித்தார். அப்போது வேதவியாசர் பிரசன்னமாகி துயரத்தில் அழுந்தின தருமராசனைத் தேறுதற்படுத்திப்பார்த்தும், அவர் மனதுக்குத் திடம்பிறவாமல், பெரியோரைச் சண்டையில் கொன்றதினுல் தனக்குப் பழியும் பாவமும் வசையும் வந்துற்றதே யென்று சோபத்திலாழ்ந்தார். உமது பாவமும் பழியும் வியாகுலமும் தீர அசுவமேதம் புரிந்தால் மிகவும் நன்று, ஆனுல் அசுவ

மேதம் புரிவது மிகவும் அரிதானகாரியம் அதை வேதவிதிதப்பாமல் நடத்தவேண்டும், அங்ஙனம் நிர்விக்கினமாய் நடந்தால் பூர்வஜெனனம் இந்த ஜெனனம் இனி எடுக்கவேண்டியிருந்தால் அந்த ஜெனனம் இம்மூன்றையும் போக்கி மேலானகதியில் அடைவிக்கும். இங்ஙனம் பதினெட்டுநாள் யுத்தத்தில் இறந்தவர்களால் உனக்குண்டாகிய தோஷத்தைப் போக்கடித்துக் கொள்ளென்று புகன்றனர்.

தருமராசனுக்கு இதனால் சந்தோஷம் பிறந்து ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைக் கிட்டியணுகி, அசுவமேதம்செய்வதற்கு விஸ்தாரம் திரவியம் வேண்டியிருக்குமே, அதற்கு வகையென்னவென்று கேட்டார். கோபாலகிருஷ்ணன் நகைத்து வியாசரைப் பார்த்து, இந்த உலகை ஆளப்பட்ட உத்தமன் திரவியம் இல்லை யென்றால் நான் செய்வதென்ன முனிசிரேஷ்டரே என்றார்.

சுவாமி முனிவரேகேளும், துரியோதனன் எங்களை செயிக்கவேண்டி ஐம்பத்தாறு தேசத்து அரசர்களுக்கும் கப்பணத்தை நிந்தஞ் செய்துவிட்டு பொக்கிஷத்திலிருந்த திரவியத்தையும் யுத்தத்தத்தில் செலவிட்டுப் போட்டான். நாங்களும் அதுபோல் எங்களுக்குத்துணைவந்த ராஜாக்களுக்கு இறைவரி நிந்தஞ்செய்யலாயினோம். இனி எங்களிடத்தில் திரவியம் இல்லை. இராச்சியங்களில் அரசர்கள் இந்தச் சண்டையில் மாண்டுபோய் அரசாட்சி ஸ்திரப்படாமல் அலங்கோலமாய் கிடக்கிறது. நாங்கள் எந்த ராஜாவினிடத்தில் திரவியங் கடன்கேட்கிறது என்று தருமர் கூறினதற்கு, சூரியவம்மிசத்தில் உதித்த மருத்து மகாராசன் பெருத்த தனங்களைச்சேர்த்து அநேகம் யாகாதிகளைநடத்தி மிகுதி திரவியத்தை பூமியிற்பந்தனஞ்செய்து சொத்துக்குரியவர்கள் யாரோ அவர்கட்கு இது லபிக்குமென்று இறந்துபோயினன். அந்த தனம் கிடைக்கும், நீர்போய் வெட்டிப்பாரும், உமக்கு அது உரித்தாயிருக்குமாகில் சுளுவில் லபிக்குமென்றார். இதைக்கேட்ட தருமராசன் அந்த மருத்து மகாராசனுடைய சரிதையைத் திருவாய் மலர்ந்தருளுமென்று வினவ, வியாசர் சொல்லத் தொடங்கினர்.

ஆதித்தன் வம்மிசத்தில் மனுவென்பவர் தோன்றினர். அவர் பிரதானிகன் என்னும் பிள்ளையைப் பாலித்தார். அவருக்கு இக்குவென்பவர் பிறந்தார். இவரிடத்தில் இக்ஷ்வாகுபிறந்து அவர் நூறுபிள்ளைகளைப் பாலித்தார். அவர்களில் விம்சுவென்ற மூத்த பிள்ளைக்கு விபிசன் என்பவர் பிறந்தார். அவருக்குப் பஞ்சதர் என்று ஐம்பதுபிள்ளைகள் தோன்றினர்கள். அவர்களில் ஜேஷ்டனான பலியென்பவன் மகா பாபியாய் ராச்சியபாரம் பண்ணிவரும்போது அவனுக்கு ஒரு குமாரன் பிறந்தான். அவன்பேர் கரந்தன், அவன் நீதியுடன் செங்கோல் நடத்திவரும்போது வரவுக்குமிஞ்சிய செலவைச்செய்து கையிளைத்த சமயத்தில், எதிரியரசன் இவன் பட்டணத்தைப் பிடுங்கிக்கொண்டான். கையிளைத்த ராஜன் காட்டுக்குப்போய் அலைந்து திரிவதை ரிஷீசுரர்கண்டு, இவன்மிகவும் தர்மிஷ்டனாயிற்றே, இவனுக்கு உதவி செய்யவேண்டுமென்று மனங்கசிந்து, நீ இன்று முதல் குபேரனைக்குறித்து தவமிருவென்று மந்திரோபதேசம் பண்ணினர்.

தவமிழைத்த அரசன் முன்னுக்கு குபேரன் பிரசன்னமாகி சகலபத்து முண்டாகுகவென்று அனுக்கிரகித்தார். உடனே கரந்தனுக்குச் சகல ஐசுவரியங்களும் உண்டாகிப் பழையபடி தன் ராஜாங்கத்துக்குவந்துசேர்ந்தான். பிரம்மாவின் பிள்ளையாகிய ஆங்கிரசன் என்பவர் இந்தக் கரந்தனுக்கு அதிக நேசரா யிருந்ததினல், அசுவமேதம் முதலிய யாகங்களைச்செய்ய கரந்தன் சிவலோகம் சேர்ந்தான்.

அவன் பிள்ளை ஆவிதிட்சன் என்பவன் அநேகம் ஓமங்களைச்செய்து பூமியை யாண்டு சொர்க்கபதவியைப்பெற்றான். அவன் குமாரன் மருத்து மகாராஜன் ஒரு யாகஞ்செய்யவேண்டுமென்றெண்ணி தன் பாட்டனுக்கு இனியராகிய ஆங்கீரசமகாத்துமாவை வரவழைத்து, உம்முட மூத்தகுமாரன் பிரகஸ்பதி பகவானைக்கொண்டு தான் கோரிய யாகத்தை நடத்திவைக்கும்படி வேண்டிக்கொண்டான். இதையறிந்த தேவேந்திரன் தேவ குருவை அந்த யாகத்தை நடத்தவேண்டாமென்று தடுத்துவிட்டான். மருத்து மகாராஜன் தேவகுருவை யடுத்துத்தொழுது கேட்டும் அவர் மறுத்துப்போட்டார். மருத்துராஜன் விசனத்துடன் திரும்பிவரும்போது நாரதமுனிவர் எதிர்ப்பட்டார். அவரைக் கண்டு வணங்கி தன் மனக்குறையைத் தெரிவித்தான். நீ மனத்தாங்கல் அடையவேண்டாம், அந்த பிரகஸ்பதிக்குத் தம்பியான சம்வர்த்தனர் என்றொரு மகாஞானியிருக்கிறார், அவரை நீ தெரிந்துக்கொண்டால் உன்யாகம் நிறைவேறுமென்று நாரதர் ஆக்கியாபித்தார். அந்த சம்வர்த்தனரை நான் எவ்விதமாய்க் கண்டுபிடிக்கிறதென்று மருத்துராஜன் கேட்டதற்கு, அந்த ரிஷியானவர் உன்மத்தம் பிடித்தவன்போல் திரிவார், அவரைக் காண்பதற்குபாயம் காசியிற் கங்கைகரையில் செத்துக்கிடக்கும் பிரேதத்தை உன் முதுகின்மேல் போட்டுக்கொண்டு அவ்விடத்தில் காத்திருப்பாயாகில் அவர்நேரிட்டு உன்முதுகிலிருக்கிற பிணத்தைப்பார்த்து நாகம்போல் சிறிக்கோபித்து மிரண்டோடுவார். நீ அவரைவிடாமல் பின்தொடர்ந்து போவையாகில் உனக்கு வசப்படுவார். இந்த சூழ்ச்சியை உனக்குச் சொன்னவர் யாரென்று கேட்டால் நாரதமுனிவர்சொல்லி நெருப்பில் விழுந்திறந்துபோனர் என்று உரையென்றார்.

அதுபோல் மருத்துராஜன் கங்கையோரத்தில் காத்திருந்தான். சம்வர்த்தன மகாரிஷி உன்மத்தனைப்போல் அவ்விடம் வந்து இவரைப் பார்த்த மாத்திரம் வெகுளிமேற்கொண்டு ஓடத்தொடங்கினர். ராஜன் அவரைவிடாமல் பின்பற்றி ஓடினன். அவர் அவனை அநேகமாய்ச் சினந்து பார்த்தும் அவன் பக்தி வைராக்கியமாய் அவரையே தாவினபடியால், மாசிலாமணியாகிய சம்வர்த்தனர் இந்த சூட்சியை உனக்குச் சொன்னவர் யாரென்று கேட்க, நாரதமுனிவர் உரைத்து நெருப்பில் விழுந்தாரென்றான்.

சம்வர்த்தனர் மனமிரங்கி நீ என்னை நாடியகாரியம் யாதென்றுகேட்க, தேவரீர் என் யாகத்தை நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று வேண்டினன். தேவகுருவை கேட்டுக்கொள் என்றார். தேவகுருவானவர் என் வின்

ணப்பத்தை தள்ளிவிட்டாராகையால், தேவரீரே என்னை ரட்சிக்கவேண்டு மென்றான். சம்வர்த்தனர் நல்லதென்று ஒப்பி நான் உனக்கு தலைமையாக ஏற்பட்ட பின்பு நீ வேறொருவரை ஏற்றுக்கொள்ளக்கூடாது, இதற்கு நீ உறுதி கூறுவாயாகில் நான் யாகத்தைத் தொடங்குகிறேன் என்று சொல்ல ராஜனும் உறுதிமொழி கூறினான்.

சம்வர்த்தனர் யாகத்துக்குப் பொருள் வேண்டியதற்காக இமயகிரியின் வட புறத்தில் மூஞ்சுவாதபர்வதத்தில் வசிக்கும் சாம்பமூர்த்தி யிடத்திற்கு உன்னை யழைத்துப் போகிறேனென்று தன் தமயன் பிரகஸ்பதி யிடத்தில் கற்ற மந்திரத்தை செபித்தார். மந்திரமானது இவர்களை அங்கே கொண்டு போய்ச் சேர்த்தது. சம்வர்த்தனர் சிவபிரானை சாஷ்டாங்க தெண்டனிட்டு தாம் வந்த காரியத்தை விண்ணப்பம் பண்ணிக் கொண்டனர். அது கேட்ட ஈசன் உமக்கு வேண்டிய பொருளை எடுத்துக் கொள்ளுமென்று கட்டளை யிட்டார். இந்த வசனத்தைக் கேட்டாயாவென்று மருத்துராசனை சம்வர்த்தனர் கேட்டதற்கு, அசரீரிவாக்குப் போல் கேட்ட னென்றான். ரிஷியானவர் தமது தபோ மகிமையால் யானை குதிரை ஒட்டகங்களை சிருஷ்டித்து அவைகளின்மேல் வேண்டிய திரவியங்களை யெடுத்து வந்தார்கள்.

அப்பால் யாகத்துக்கு வேண்டியவைகளைச் சேகரித்து யாகந்தொடங்கியபோது பிரகஸ்பதி இது கேள்விப்பட்டு விசனம் அடைந்து தேகம் மெலிந்தார். இச்சங்கதியை தேவேந்திரன் அறிந்து, ஐயா நீர் விசனப்பட வேண்டாம். அந்த மருத்துராஜனைக் கொண்டும் உம்மை அழைப்பிக்கும்படி செய்கிறேன், நீர் பயப்படாதீர் என்று தேற்றி, அக்கினி தேவனையழைத்து, நீ போய் மருத்துராசனைக் கண்டு தேவ குருவை அழைக்கும்படி செய்து வாவெனக் கட்டளை யிட்டான். அக்கினி பகவான் அது போல் மருத்துராஜனிடம் பேசியும், அவன் ஒப்பவில்லை இதைக்கேட்ட தேவராசன் ஒரு யக்ஷனை தூதனுப்பினான், அதற்கும் மருத்துராஜன் உடன்படவில்லை. இதனால் இந்திரனுக்குக் கோபம் பிறந்து மருத்துராஜன் மீது வச்சிராயுதத்தை பிரயோகித்தான்.

அது வரும் வேகத்தைக் கண்ட மருத்துராஜன் சம்வர்த்தனரிடன் அபயமிட்டான். அவர் தமது மந்திர சக்தியினால் வச்சிராயுதத்தைத் தடுத்துவிட்டார். வச்சிராயுதம் திரும்பி தேவேந்திரன் பால் அடைந்தது. சம்வர்த்தனர் ராஜனைப்பார்த்து உனக்கு வேண்டிய வரங்கேள் என்றனர். ரிஷிதுல்யரே தேவேந்திரன் முதலிய தேவர்கள் கோபங் கொண்டிருப்பதால் என் யாகத்துக்கு வர மாட்டார்களே, அவர்கள் சந்தோஷத்துடன் வந்து ஆகுதி பெற்றுக் கொள்ளும்படியாக வரம் அருளு மென்றான்.

பின்பு ஆகாயத்தில் நின்ற முப்பத்து முக்கோடி தேவதைகளும் யாகசாலையில் வரும்படிக்கு ஒரு மந்திரத்தை செபித்தார். அம்மந்திர பலமானது யாவரையும் பந்து போல் சுருட்டி இழுத்து வந்து விட்டது. அந்த விந்தையை மருத்துராஜன் கண்டு இந்திராதி தேவர்களுக்கு வந்தனை செய்து

அவர்களுக்கு ஆசனமளித்தான். அதின் பேரில் சம்வர்த்தன மகாரிஷியுந் தேவதைகளும் சமாதானமாகி எல்லோரும் மனமொத்து வேள்வியை நடத்திப் பூர்த்தி பண்ணினார்கள். அந்த ராஜன் அப்போது செலவழித்த திரவியம் போக மிச்சமானது அங்கே கிடக்கிறது, அஃது உமது கண்ணுக்குத் தோன்றும், நீர் அதை எடுத்து அசுவமேகத்தை நிறைவேற்றுமென்றார்.

தருமராசன் அந்த திரவியத்தைப் பார்த்து இச்சையில்லாதவராய் ஸ்ரீ கிருஷ்ணரை நோக்கி மேல் நடத்த வேண்டியதென்னவென்று வினவ, தருமர் மனசில் குடிகொண்டிருக்கும் விசனத்தை நிவர்த்திக்கும் பொருட்டு கண்ணன் திருவாய் மலர்ந்தருளத் தொடங்கினார்.

கிருஷ்ணார்ச்சுன சம்வாதச் சருக்கம்.

ஸ்ரீ கிருஷ்ணர் முரசக்கொடி முதல்வனைப் பார்த்து, தருமநந்தன! பூர்வவிதிப் பிரகாரம் நடப்பதை அனுபவித்து அநேக அரசர்கள் மாண்டார்கள். ஒருவர் கொல்லவும் அதினால் ஒருவன் இறந்தானென்று சொல்லவும் நமக்கு வல்லமையில்லை: இது வீண் அனுமானம். அறிவில்லாத மூடர்கள் சொல்லும் வசனமேயன்றி வேறல்ல. சர்வாத்துமாக்களிலேயும் வியாபித்திருக்கின்ற தேவாதிதேவனாலே சிருஷ்டித் திருக்கப்பட்ட மூன்று லோகத்தையும் நான் செயிக்கிறேன் நான் கொல்லுகிறேன் என்று யார் சொல்லுகிறார்களோ அவர்களை பழியும் பாவமும் விடாது. இப்படிப்பட்ட பழி பாவங்களுக்கு எமதருமராஜன் என்றும் மிருத்தியு தேவதை யென்றும் அநேக வியாதிகள் என்றும் ஆயுட்பிரமாண மென்றும் இன்னத்தினால் இறந்தான் என்றும் பழிபோட்டு ஈசுவரன்பேரில் பழிசாராமல் ஒரு முன்னிலைச் சூட்டாய் நடக்கின்றது. இவைகள் தெரிந்தும் நீர் வீண்கவலைகொண்டு மயங்குவானேன். நானே கொன்றேனென்று விருதாவில் பழியை மேற்போட்டுக் கொள்ளுகிறாய். ஒருவன் மேற்போகிற சுமையை நீயேன் சுமக்கிறாய். பீஷ்மாசாரியர் உங்களாலே சாகத்தக்கவரா? விருத்திரா சூரனுடன் போராடின இந்திரன் அபஜயப்பட்டு விஷ்ணுவினிடத்தில் முறையிட அவர் ஒரு துரும்பைக் கிள்ளி இந்திரனிடங் கொடுத்தார், அவன் அதைப் பிரயோகித்து விருத்திராசூரனைக் கொன்றான். பின்பு தேவராசன் நான் கொன்றேனென்று கெறுவத்தினாலே வசனிக்க, உடனே பிரமஹத்தி இவனைத் தொடற நானாவித கஷ்டப்பட்டு பின் தெய்வபலத்தினால் சுகப்பட்டான்.

பெரியோர்கள் தங்களாலே ஒரு காரியம் நடக்கிறதென்று எண்ணார்கள்; வாக்கினாலுஞ் சொல்லார்கள். நீர் மயங்காதீர். அசுவமேத யாகத்தைப் பண்ணுமென்று மாயவன் உபாயமாய்ச் சொல்ல, ரிஷீசுரர்களும் அப்படியே சொல்லி தருமருடைய சஞ்சலத்தை மாற்றினார்கள். அப்பால் தரு

மாரசன், வந்திருந்த ரிஷிகளுக்கு மரியாதை செய்து அனுப்பிவிட்டு இன்னஞ் சிலநாள் கங்கைக் கரையில் இருந்து அஸ்தினபுரம் போனபிறகு யாகந் தொடங்கும்போது வரவழைக்கிறேனென்று வியாச பகவானுக்கும் விடை கொடுத் தனுப்பினர்.

கங்கைக் கரையில் சிலநாள் வசித்த பின்னர் தருமராசன் குடும்பசமேதராய் பட்டணம் பிரவேசித்து நீதியரசும் தர்மராசாங்கமும் செய்து வந்தார், என்று வைசம்பாயனர் ஜனமேஜயராசனுக்குச் சொல்லிவரும் போது கோபால கிருஷ்ணரும் அர்ச்சுனனும் எங்கே போனர்கள், எங்கே இருந்தார்கள் இந்த விஷயத்தைச் சொல்லுமென்று கேட்க, வைசம் பாயனர் வருக்கின்றார்.

அஸ்தின புரத்தில் தருமராசனுடன் சிலநாள் இருந்து, அப்பால் அர்ச்சுனனும் ஸ்ரீ கிருஷ்ணரும் ஸ்திரீசனங்களுடன் துவாரகைக்குப் பிரயாணப்பட்டு வரும்போது, அர்ச்சுனன் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியைத் தெண்டனிட்டு, பாரதயுத்தம் ஆரம்பத்தில் சுற்றத்தாரை எப்படி மாய்ப்பதென்று தியங்கிய எனக்கு ஞானதத்துவமான பகவத்கீதையை உபதேசம் பண்ணி அனுபோகமுங் காட்டி பதின் மூன்றாம் நாள் யுத்தத்தில் அபிமந்யு இறந்த துக்கத்தினல் மயங்கிய எனக்கு ஞானபக்குவத்தை உபதேசித்தருளிய பரந்தாமா, இன்னம் ஒருதரம் அந்தரகசியத்தை சொல்லியருளுமென்று பணிய, கன்னங் கறுத்த கண்ணபிரான் சொல்லத் தொடங்கினர்.

அர்ச்சுன, அன்றுரைத்தபடி இன்றுரைத்தால் பூர்வங் கேட்டது தானேயென்று நீ இலேசாய் நினைக்கப்போகாது. அது உனக்கு சுளுவாய் தோற்றுது, நீ எளிதிலுணர மாட்டாய், நீ மதோங்மத்தன். ஒரு கதை சொல்லுகிறேன், நுட்பத்தை அறிந்துகொள் என்று பச்சைமால் இச்சையுடன் சொல்லத் தொடங்கினதாவது:

முன் நாளில் காசிபரிஷி என்னிடத்திற்கு வந்தார். அவரை வந்தித்துத் தத்துவ நிச்சயத்தைச் சாற்றுமென்று கேட்டேன். அவர் அந்த நிச்சயத்தைச் சொன்னர், அதே பிரகாரம் உனக்குச் செப்புகிறேன், அந்தக் காசிபரிஷி ஒரு பர்வதச்சாரலில் போய் நின்றார். அவ்விடத்தில் மகா தேவனைப்போல் வடிவுடைய ஒரு சித்தர்வர அவரை இவர்பணிந்து ஆண்டவனே, தத்துவம் என்பதென்னவென்று கேட்க, அந்த மகாநுபாவர் தமது திருவாய் மலர்ந்தருளுகின்றார்.

காசிபருக்குச் சொல்லிய சித்தர் வாக்கியம்.

மானிடர் உலகத்தில் வினையைச் செய்து புத்திமுத்தி யடைகிறதினும் அந்த வினையினலேதானே அடையாற் போகிறதினலும் நல்வினை செய்வதிற் பிரயோசன மில்லையென்று வெறுத்து, தபசுபண்ணி நிரந்தர பதவி பெறவேண்டுமென்று இந்த மலைச்சார்புக்கு வந்தேன். இவ்விடத்தில் என்

பங்குக்கு தெய்வம்போல் மகாசித்தராகிய நீர் எதிர்ப்பட்டீர். அடியேனு டைய பிராரத்துவ கர்மங்கள் தொலையும் படிக்கு தத்துவபோதத்தை அரு ளவேண்டுமென்று யான் வேண்டினேன், அந்த மகான் தயைபுரிந் தருளின தாவது :

வித்தகபுருஷன் அல்லது ஞானவான் எத்தனைகாலம் வினையைச்செய்தா லும் முத்தியடையமாட்டான். அவன் செய்த நல்வினைகள் வீண்போக மாட் டாது, உலகத்தில் தீவினையாளருக்கு இரும்பினால் விலங்கும் நல்வினையாளரு க்குப் பொன்னினால் விலங்கும் பூட்டுவதுபோலாம். இதினால் நல்வினைக்குடை யவன் மறு ஜெனனத்தில் போகபாக்கியங்களை அனுபவிக்கக் கூடியதாகும், முத்திக்கு வழிகாட்ட மாட்டது. இவ்வுலகத்தில் நல்வினை யென்ப தெவ்வ ளவோ அவ்வளவுஞ் செய்தேன். அதினால் இந்திரலோகத்திலும் பிரம்ம லோகத்திலுஞ் சிலநாள் சஞ்சரித்துப் பின்பு பூமியில் பிறப்பென்னும் பெருங் கடலில் ஆழ்ந்தேன், அவ்விதமாய் எத்தனை ஜெனனமோ எடுத்துழன் டேன். கடைசியாக இப்பிரபஞ்ச மயக்கத்தைவிட்டு கடைத்தேற வேண்டி காட்டில் தபசுபண்ணி லோகவாசனைகளை ஒழித்து ஆசாபாசங்களை அகற்றி, சூரியன் முன் நீங்கிய பனிபோல் இப்பிறவித் துன்பத்தைக் கடந்தேன். இனி எனக்கு ஜெனன மரணமில்லை. முத்தியென்னும் மோட்ச வீட்டிற் குடியானேன். இந்தப் பக்குவம் எனக்கு எப்படி கிடைத்த தென்றால் ஆசா ரிய கடாட்சத்தால் அமைந்தது. இது இப்படிப்பட்ட தத்துவமுத்தி காசி பரே, நீர் நம்மை நேசித்துக் கேட்டபடியால் உமக்கு இந்த தத்துவார்த் தங் களைச் சொன்னேன். நீர் நல்வினைகளைவிட்டு தத்துவ நிலையில் தபசிருந்து முத்தியடையும். இந்த தத்துவத்தின் முடிவு தன்னைத்தான் அறிவது இதை யேதற்போதம் என்றும் ஆத்தும ஞானமென்றும் பகர்வார். சித்த சாந்தி பெற்று மனது கலையாமல் பரமாத்துமாவைத் துதித்து ஆனந்த மடையும் மெஞ்ஞானிகளுக்கு வேறே நினைப்புமில்லை பிறப்புமில்லை நீ நான் என்ப தில்லை, பகல் இல்லை இரவில்லை, இன்பமில்லை துன்பமில்லை என்று சித்தர் கூறிய வேதார்த்தத்தை காசிபர் உரைத்த வண்ணமே பகர்ந்தேன். இதை பிரம்மவித்தை என்றும் பெரும்பதம் என்றும் மகா வாக்கிய மென்றும் பரமரகசியமென்றும் அத்தியாத்துமஞானம் என்றும் உன்மனசில் அறிந்து கொள்வாய் அர்ச்சுனனென்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் அருளிச் செய்து, மேலுஞ் சொல்லுகின்றார்.

நல்வினைகளைச் செய்தாலும் முத்தி எய்த மாட்டாது. தத்துவ முடிவில் நின்று பரமாத்துவை காணப்பெற்றால் மாத்திரம் முத்தியுண்டாம் அஃதெங் ஙனமெனில், சூரியன் அழகிய பதார்த்தங்களில் முதன்மை. அக்கினி காரண பூதங்களில் சிறந்தது, வேதம் வித்தையில் பெரிது, மானிட ஜென் மம் பிறவிகளில் பெரியது. காயத்திரி மந்திரங்களில் பெரிது. பசு நாலுகாற் பிறவிகளில் சிறந்தது. கருடன் பறவைகளில் உயர்ந்தது. கிருதயுகம் நான் கினிற் பெரிது. இராஜசூயம் யாகங்களிற் பெரியது. தானத்துக்கு யோக்கி யம் செம்பொன். மானம் தேகத்துக்குரியது. அன்னம் சாப்பிடும் வஸ்துக்

களில் உயர்ந்தது. தண்ணீர் குடிக்கும் திரவியங்களில் உயர்ந்தது. கைலயங்கிரி மலைகளிற் சிறந்தது. கங்கை நதிகளில் முக்கியம். சமுத்திரம் சரசுகளில் பிரதானம். ஊர்த்துவதிசை திக்குகளில் முக்கியம். பிரம்மா தேவர்களில் பெரியவர். விஷ்ணு பிரமனிற் பெரியவர். ஈசன் எவரிலும் பெரியவர். இம்மூவரும் ஒருவரினொருவர் பேதமில்லாதார். பேதமில்லாப் பெருந்தகையைப் பேத முண்டென்று பேசுவோர் அக்கியானிகள். மூவருமொன்றென்று பேரறிவால் உணர்ந்தவர்கள் புண்ணியவான்கள். பேரறிவுடையோர் யாரென்னில் புருஷார்த்தங்களும் வேதாகம புராணங்களும் தெரிந்தோர். அவர்கள்தான் முக்குணத் திறைவனை ஏகமாய் மதிக்கப்பட்டவர்கள். இதைவிட்டு இம்மூவரில் வித்தியாசம் இருக்கிறதென்று மதத்துவேஷிகளாய் வாதிப்பவர்கள் கருமிகள். முத்திவழிக்கு முள்ளைப் போட்டு அடைத்துக் கொள்ளுகிறவர்கள், நல்லகதிக்கு அருகராக மாட்டார்கள். ஆசையை அகற்றி நிராசையைக் கொண்டால் மாத்திரம் முத்திக்கு வித்தாவான், இதை நீ அறிந்துகொள் அர்ச்சுனனென்று வாரிசநாபன் அருளிச்செய்ய, விஜயன் கேட்டு தேகபரவசனாகி ஆடிப்பாடி ஆதிமத்தியாந்த ரகிதனுடைய திருவடியை சிந்தையிற் சூடி அவருடன் குலாவிப் பேசிக்கொண்டிருந்தான் என்று வைசம்பாயனர் ஜநமேஜயராசனுக்குச்சொல்ல, ஐயனே! அர்ச்சுனனும் ஸ்ரீகிருஷ்ணரும் பின்பு இந்திரப் பிரஸ்தத்தில் என்ன செய்துகொண்டிருந்தார்கள், அதைச் சொல்லியருளுமென ஸ்ரீ வேதவியாசரைத் தியானித்து வைசம்பாயனர் கூறுகின்றார்.

கிருஷ்ணருக்கும் உதங்கருக்கும் சம்வாதம்.

துவாரகாபுரிவாசனும் அர்ச்சுனனும் இந்திரப் பிரஸ்தத்தில் சிலநாள் தங்கிதுவாரகைக்குப் போக எண்ணி தருமராசன் முதலியவரிடத்தில் விடைகேட்கும்போது, இவரைப் பிரிந்துவிடப் பிரியப்படாமல், ஆராமையாகி வெகுகஷ்டத்துடன் ஒருவருக்கொருவர் விடை பெற்றேகினர். அர்ச்சுனன் மாத்திரம் சுவாமி பின்னோடு வெகு தூரம் தொடர்ந்து வந்து பிரியக்கூடாமல் தயங்கி நின்றுபின் அதிக துக்கத்துடன் தன் ஊர் திரும்பினான். ஸ்ரீ கிருஷ்ண பகவானும் சாத்தகியும் சுபத்திரா தேவியும் ரதங்களிலேறி துவாரகையை நோக்கிவரும்போது, உதங்க மகாரிஷியைக் கண்டவுடன் கிருஷ்ணதேவர் இறங்கி வந்தனம் செய்தனர். ரிஷியானவர் அவரைத் தன் ஆசிரமத்தில் அழைத்துப் போய் உபசரித்து வார்த்தையாடிக்கொண்டிருக்கையில், உதங்கர் சொல்லுகின்றார். பாண்டவரும் துரியோதனாதியரும் ஜீவாந்தராய் ராஜ்ய பரிபாலனம் பண்ணவும் ராஜாக்கள் தங்கள் தங்கள் அரசுகுறையாமல் ஆளவும் பூமியிலுள்ள சனங்கள் ஆயுளுடன் சுகமாய் விருத்தியடையவும் செய்துவிட்டு, சுவாமிகள் சத்திய விரதத்துடன் எழுந்து துவாரகைக்குப்போய்வரப் போகிறதோ, உறவும் பகையும் சமமாய்

நடத்தி பட்சபாத மில்லாமல் சீராய் நடப்பிக்கப் பட்டவரென்று பெரியோரால் கேள்விப்பட்டிருக்கிறேன், வெகுசனங்கள் துக்கப்படாமல் சந்தோஷப்படச் செய்துவைத்தீரென்று வெகுபேர் உம்மைக் கொண்டாடப் பார்த்தேன், ரணக்களத்தில் ஒருவரும் மடியாமல் உலகத்தைச் சுகப்படுத்தினதையும் போதுமான மட்டுங் கேள்விப்பட்டேன். இஃதெல்லாம் உள்ளது தானே வள்ளலே என்று இடக்காய்க் கேட்டார். பக்தருக்குக் கர்த்தாவானவர் கலீரென்று நகைத்து, உத்தமரே, நீர் நம்மைப் பெருமையாகச் சொல்லி அக்கினி மூண்டெரியும் படியாகப் பேசினீர், நமக்குத் தெரிய வந்தது. நல்லதையா, பூமியில் வந்து மறந்து பிறந்தவர்களும் இறந்து சிறந்தவர்களு முண்டோ, அல்லவென்று பிறப்பிக்கிறவனும் இறப்பிக்கிறவனும் வேறொருவன் உண்டோ. இதை நீர் அறியீரோ. இப்படித்தான் என்று தெரிந்தும் தப்புப் பேசுவானேன், முன்னே நான் அஸ்தினபுரத்துக்குத் தூதுபோயிருக்கையில், நாரதர் கண்ணுவர் சமதக்கினி மூவரும் என்னுடன் கூட விருக்கும்போது, பீஷ்மர் துரோணர்முதலிய பெரியோர் துரியனுக்கு எத்தனையோ புத்திமதிகள் சொல்லியும் கேளாமல் உலகிலுள்ளோரையெல்லாம் ஒரு மிக்கக் கூட்டிக்கொண்டு வீரசொற்கம்போய் சேர்ந்தான்; எங்கள் வார்த்தைக்கு அடங்கியிருந்த பாண்டவர்கள் ராச்சியத்தைப் பட்டங் கட்டிக்கொண்டு சுகத்தில் இருக்கிறார்கள். வினையின் செயல் எப்படியோ அப்படி முடியும். நம்மால் ஆவது என்ன, நீர்கூட இப்படி நினைக்கப்போமோ உதங்கமகா ரிஷியே என்றார். ஸ்ரீ கிருஷ்ணரே! நீர் வேண்டுமென்று நினைத்தால் தப்பமாட்டார்களா? நீர் இப்போது தன்னைத் தப்பித்துக்கொண்டு பேசுகிறீர். ஊரையழித்தவர் நீர்தான், நீர் நினைத்தால் பதினெட்டு அக்குரோணி சேனைகளும் இன்னுமுண்டான உயிர்களும் அழியப்போகிறதேயில்லை. ஆகையால் உம்மை சபித்துவிடும்படி எனக்குக் கடன் இருக்கின்றது, இதோ சபிக்கிறேன் பாரென்று கூற, கிருபா நிதியாகிய பகவான் உதங்கமகாரிஷியே நீர் ஏன் கோபிக்கிறீர்? நாம் சிலவசனங்களைச் சொல்லுகிறோம் பின்பு உமக் கிஷ்டமானபடி செய்யும் என்று சொல்லத் தொடங்கினார். பூமியில் தாமசகுணத்தை யுடையவர்கள் கொஞ்சந் தபசுபண்ணி அந்தத் தபோபலத்தினால் வெகுளியும் விருப்பும் பிறந்து தங்களுக்கு எல்லோரும் பயப்படவேண்டுமென்று சபித்துக்கொண்டே திரிகிறதுண்டு.

சாத்துவிக குணமுடையோன், பூர்ணமாய்த் தவசுபண்ணிப் பொறுமை மேற்கொண்டு மதங்கள் அடங்கி, சபிப்பேன் என்கிற இறுமாப்பு வார்த்தை வராமல் சாதுவாயிருப்பான். ஆனதால் நீர் தெரிந்தவர், தெரியாதார் சபிப்பேன் என்றாலும் உம்மைப் போன்றவர்கள் பொறுமை சொல்ல வேண்டும், தெரிந்த நீர்தானே கோபிப்பீராகில் நான் என்ன செய்யலாம். வருகிறது வரட்டும் அதற்கு நான் பயப்படுகிறவனல்ல. விஸ்தாரமான செத்தைகளைப் போட்டுக் கொளுத்தினாலும் ஒரு விளக்குக்குச் சமானமாக மாட்டாது. அப்படிப் போல் நான் தெரிந்து பாபவழிகளைத் தள்ளி மேலான வழிக்கு உபகிருத்தியங்கள் தேடி நடப்பித்தவனும் நித்தியப்பிரம்ம சாரியாயிருந்து சத்

தியந்தப்பாமல் துஷ்ட நிக்கிர சிஷ்டபரிபாலனம் பண்ணினவனும் நான் தான், என்னைநீர் சபித்தாலும் அந்தச் சாபம் என்னைத் தொடாது அதைப் பரிக்ஷை பார்க்க வேண்டுமானால் சபித்துப்பாரும் என்று மேக வண்ணன் பின்னும் விளம்புகின்றார்.

சிருஷ்டிஸ்திதி சங்காரகர்த்தாவும் தேவேந்திரன்முதலிய தேவர்களும் நான்தான், தருமம் அதர்மம் செல்வம் தரித்திரம் கசப்பு தித்திப்பு மனிதர் மிருகங்கள் நல்லோர் பொல்லார் எல்லாம் நான்தான். இவர்களுக்கும் இவை களுக்கும் உற்றதுணையானவனும் நான்தான். துஷ்டருக்குச் சத்துருவாகிற வனும் நான்தான். இஷ்டருக்கு மித்துருவாகிறவனும் நான்தான். இதற்கு சாட்சி உமக்கே தெரியும். ரட்சசாளைப்போக்கி இந்திராதிதேவர்களை காக்கிறதை நீர் அறிவீரே, பரதகுலத்தில் துரியோதனனும் பாண்டவர்களும் பிறந்தார்கள். அதிலே துஷ்டர்கள் யாவரும் துரியோதனனைச்சேர்ந்து இறந்து சிஷ்டராகிய பாண்டவர்கள் தீவினைமறந்து என்னிற் கலந்திருக்கிறார்கள். பூமியில் உதிக்கும் ஆத்துமகோடிகள் எல்லாம் ஆயுள்முடியாமல் மடிவதில்லை. ஆயுள் இருக்கும்போது ஒருவருஞ் சாகார்கள். இறக்கிறவர்களை இருக்கச்செய்பவனும், இருக்கிறவர்களை இறக்கச்செய்கிறவனும் எவ்வுலகிலும் இல்லை. இதுவே சித்தாந்தம். அப்பால் உமதிஷ்டப்படி செய்யுமென்றார். உதங்கர் சந்தோஷித்து தேவகிபாலா, நீர் நடத்தியதெல்லாம் அடியேனுக்குச் தெரியவரும், இப்போது தேவரீருடன் மாறுபாடாய் வசனித்ததும் சபிக்கிறேனென்றதும் என் சித்தத்தால் வந்ததல்ல, அதுவுந் தேவர்செயலே; இஃதன்றியும் அடியேனுக்கொரு ஆசையிருக்கிறது. அஃதாவது தேவரீருடைய விசுவரூப தெரிசனத்தைக்காண இச்சித்து இப்படிக்கு வாதிட்டேன். பாரதயுத்த முதல்நாளில் அர்ச்சுனனுக்குக் காண்பித்த விஸ்வரூபத்தை எனக்குக்காட்டி தீவினை யிருட்டைப்போக்கி அடியேனைக் கிருதார்த்தனுக்குமென்றார்.

லட்சுமி நாயகனாகிய புருஷோத்தமன் தக்ஷணத்தில் விராட்ஸ்வரூபத்தைக் காட்டி உலகமெல்லாம் தானேயாகி நின்றனர். அவ்வுருவத்தை உதங்கரிஷி தெரிசித்துப் பயந்து அயர்ந்திருக்கும் வேளையில், முப்பத்துமுக்கோடி தேவர்முதல் யாவரும் வேதமந்திரங்களினால் ஸ்தோத்திரம்பண்ணி சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு எங்களை யாளப்பட்ட எந்தையே, கர்த்தனே கடவுளே, தேவரீர்பெருமையைக் காண்பதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றதை உதங்கர்கண்டு நடுநடுங்கி, சுவாமியின்திருப்பாதத்திற்பணிந்து க்ஷமை கேட்டுக்கொண்டார். தக்ஷணம் விசுவரூபம் ரூவிந்து எப்போதும்போல் எதிரில் விளங்கினர். மெய்யன்பாய் ஸ்துதிக்கும் உதங்கரைப்பார்த்து உமக்குவேண்டிய வரத்தைக் கேளுமென்றதற்கு, தேவரீர் திவ்விய திருவடி தெரிசனங்கண்டு களித்ததே போதுமென்ன பரவாசுதேவன் வசனிக்கின்றார். உதங்கமுனிவரே! என் விசுவரூப தெரிசனம் பெற்ற நீர் மேலான வரத்தைப் பெற்றதுப்போலாம். ஆயினும் நீர் யாதேனும் கேட்டுக்கொள்ளுமென்றார். அப்படிக்கானால் கர்த்தனே, இரவும் பகலும் ஓழியாமல் உம்

மைக்கண்டுகளித்து தெரிசிக்கும்படிக்கு அனுகிரகம் பண்ணவேண்டுமென்று இரந்தனர். அங்ஙனமே அருள்புரிந்து துவாரகையை நோக்கி வரும்போது, தம்பி சாத்தகி அண்ணனைப்பார்த்து, இந்த உதங்கரிஷி தேவரீரைக்கோபித்துப்பேச இவ்வளவு அதிகார மமதை அவருக்கு எப்படியுண்டாயிற்று அதை அடியேனுக்கு விவரமாய்ச் சொல்லவேண்டுமென்றார். அவருடைய சரித்திரத்தைச் சாத்தகிக்குச் சொல்லத் துடங்கினர்.

உதங்கர் வரலாறு.

உதங்கமகாரிஷி குருபக்தி விசுவாசங்களில் மெத்தவுஞ் சிறந்தவரா யிருக்க இவருடைய நன்னடக்கைக்காக குருவாகிய பயிலவமுனிவர்மகிழ்ந்து தன்மகளை அவருக்குப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொடுக்க விரும்பினர். அந்தப் பெண்ணானவள் தகப்பனுடைய தபோபலத்தினால் தன் சரீரத்தை விட்டு வேறு சரீரமெடுத்து உதங்கரைக் கலியாணம் பண்ணிக்கொண்டாள். உதங்கர் குருதக்ஷிணை கொடுக்கவேண்டி குருவின்பத்தினியார் அபீஷ்டப்படி சாபத்தினால் நாள்தோறும் ஒரு நரனைப் புசித்துவரும் பவிஷிய மகாராஜ னிடஞ்சென்று, அவன் வாய்க்கு இரையாகாமல், தன்னையுந் தப்பித்துக் கொண்டு அவன் அனுபவித்த சாபத்தையும் போக்கடித்து, அவன் பத்தினி யாரிடத்தில் குண்டலத்தை வாங்கிவந்துகொடுத்த அப்பேர்ப்பட்டஆசாரியப் பக்தியின் மகாத்துமியத்தினாலேயே என்மீது கோபிக்கத்துணிந்தார்.

உதங்கருடைய மற்றச் சரிதைகளை ஆதிபர்வம் முதற்கதையில் சவிஸ்தாரமாய்க் கண்டு கொள்க.

யாகத்துக்குத் தனம் கொண்டுவரும் சரித்திரம்.

அஸ்தினபுரத்தில் அரசுபுரிந்த பாண்டவர்களும் துரோபதாதேவியும் இறந்துபோன பிள்ளைகளில் சிறந்தவனாகிய அபிமந்யுவை நினைத்து வாடி விசனப்படும்போது, வேதவியாசர் வந்து எல்லாருடைய துயரங்களையும் போக்கி அசுவமேதயாகம் பண்ணும்படி ஆக்கியாபித்து விலகினர். தருமராசன் யாகந் தொடங்குவதற்குப் பொருள் இருக்கும் இடத்தை யோசிக்கும்போது, வியாசர் முன்னங்கூறிய மருத்து மகாராஜனுடைய திரவியத்தை எடுத்துவர பரமேஸ்வரன் பாதங்களைத் தெரிசித்தால் அப்பொருளை அடையலாமென்று பீமசேனன் புகன்றான். ஐவரும் பிரயாணப்பட்டு காட்டுமார்க்கமாய் மலைச் சாரலில் சென்று வேதவியாசரை ஸ்மரித்தார்கள், அவர் பிரசன்னமாகி மந்திரத்தை உபதேசித்தார். அதினால் ஐவரும் சிலகாலந் தவமிருந்து பரமனுடைய அருள்பெற்று மருத்துமகாராஜன் புதைத்துவைத்த இடத்தைக்கண்டு பிடித்து அளவில்லாமல் கிடக்குந்தனங்களை யானை ஒட்டை குதிரை எருதுகள்மேல் வாரிவாரியனுப்பி அவைகள் திரும்பிவர மேலும்மேலும் அனுப்பிக்கொண்டே யிருந்தார்கள். அஸ்தினபுரத்தில் திரவியங்கொட்ட இடமில்லாமல் மலைமலையாய்க் குவிந்து வருவதை அறிந்த திரிதராஷ்டிர மகாராஜன் கோபாலகிருஷ்ணரை வரவழைக்கத் தூதனுப்பினன். இச்செய்தி வரப்

பெற்ற கிருஷ்ணபகவான் வசுதேவர் தேவகிதேவியாரிடம் உத்தரம்பெற்று தம்பிமார் முதலிய குடும்பசகிதராய் அஸ்தினபுரம் வந்து, தர்மராசன் அரண்மனையில் இறங்கி தன்வரவை பாண்டவர்களுக்கு தெரியப்படுத்தும்படி தூதனை அனுப்பிவிட்டு அவ்விடத்தில் வசித்திருந்தார்.

பரிச்சித்து மகாராஜன் உற்பவம்.

இப்படி யிருக்கையில், ஒருநாள் உத்தராதேவி பிரசவவேதனைப்பட்டு ஒரு புத்திரனைப் பெற்றாள். ஸ்திரீ ஜனங்கள் அதைப்பார்த்தபோது கர்ப்பத்தில்தானே இறந்து பிறந்ததாகக்கண்டு எல்லாரும் மிகவும் கண்ணீர் விட்டழுதார்கள். அப்போது குந்திதேவி முதலிய ராஜஸ்திரீகள் வந்து இருடிகேசவன் பாதத்தில் விழுந்து வணங்கி, இந்தப் பிள்ளையைப் பிழைப்பூட்டிக் கொடுக்க வேண்டினார்கள். செத்துப்போனதைப் பிழைப்பிக்க என்னாலாகுமா, நீங்கள் துன்பப்படாதீர்கள் என்று தேற்றியபோது, குந்திதேவியார் பகவானைநோக்கி, மருமகனே பாண்டவர்களுடைய பிள்ளைகள் யாவரும் யுத்தத்தில் மடிந்து பேர்சொல்லப் பிள்ளையில்லாமற் போயிற்றே. இந்தப் பேரப் பிள்ளை ஒருவனாகிலும் இருந்தால் குலம் விளங்கும். இந்தப் பிள்ளையின் துர்திசையைக் கேட்டால் ஐவர் உயிர் வைத்திருப்பார்களா, உலகங்களை ஆக்கியளித்து அழிக்க வல்லமையுள்ள உனக்கு இந்தப் பிள்ளையைப் பிழைப்பூட்ட அரிதோ, அசுவத்தாமன் இந்தக் கருவை யழிக்கிறேன் என்றபோது, நீ அழித்தபோதும் நான் அதைப் பிள்ளையாய்ப் பிறக்கச்செய்வேன் என்று சொல்லிய உன்வாக்குப்பொய்க்கலாமா. நீ சிறுவயதில் காண்பித்த அற்புதங்கள்அனந்தமுண்டே, இப்போது எங்களைக்கைவிட்டுவிடுவது கருணையாஎன்று பிரார்த்தித்தாள். அப்படியே துரோபதை சுபத்திரை முதலிய தேவிமாரும் ஆறுமைப்பட்டு அந்தப்பிள்ளை பிழைக்காவிட்டால் தாங்கள் உயிர்விடுவதாகப் பிடிவாதம் பண்ணினார்கள்.

ஸ்ரீகண்ணபிரான் அவர்கள்செய்த கட்டாயத்தின்பேரில் சபையைவிட்டெழுந்து திரிதராஷ்டிரன் விதுரன் முதலிய பந்துக்களுடன் சூசிகாகிரகத்துக்கேகினர். அவ்விடத்தில் செத்த பிள்ளையைக் கட்டியணைத்து அழுதுக் கொண்டிருக்கும் உத்தரையானவள் சுவாமியின் வரவை அறிந்தவுடன் அவர் பாதத்தில் விழுந்தழுது, பிள்ளையை எதிரில்போட்டு, சராசரங்களை ஈன்ற தந்தைக்குத் தந்தையாகிய உங்கள் பாட்டன் இதோ உன்னுடன் பேசவந்திருக்கிறார், ஏன் ஐயா என்றுகேள், சாஷ்டாங்கதெண்டனிடு, உனக்கு தீர்க்காயுள் உண்டாகும், இதோ உங்கள் பாட்டன்மாரைப்பெற்ற பாட்டிமார், நீ எப்போது வாய்திறப்பாயென்று காத்துக்கொண்டிருக்கிறார்கள், நீபேசாமல் இருக்கிற பெருமை என்னடாபிள்ளாய் என்று சிரமேற் கைகள்கூப்பி அலறியழுதாள். அவளைநோக்கிஅழாதேயென்று ஸ்ரீபகவான்கையமர்த்திஉன்மகன் பிழைப்பான், முகத்தில் களை இருக்கிறது என்று தைரியஞ்சொல்லி, சுத்த சலம் வரவழைத்து தன் கைகால்களை சுத்திசெய்துக்கொண்டு, ஆசனத்தில்

இருந்து சற்று செபித்தபின்னர், இந்த உத்தரையின் புத்திரனை பிழைப்பிக்கிறேன் பாருங்கள் என்று ஒருவசனங்கூறுகின்றார்.

இவ்வுலகத்தில் எனக்குச் சத்துரு மித்திரு என்ற பேதமில்லை, நான் வித்தியாசமில்லாமல் சமமாய் நடப்பித்தேன், ஒருவரைக்கெடுத்து ஒருவரை ரக்ஷிக்க வில்லை. மனமறிந்து ஒரு துரோகமும் செய்தறியேன். சந்திரவம்மிசத்திற் பிரிந்த யதுகுலத்தில் பிறந்து சத்திரியகுலாசார தர்மந்தப்பாமல் ராஜாக்களுடன் நேசமுள்ளவனுக இருந்தேன். அர்ச்சுனனும் நானும் யுத்தரங்கத்திலும் மற்றெந்த இடத்திலும் ஒரே பேச்சும் ஒரே பிராணனும் ஒரேமனதுமா யிருந்தோம், வஞ்சகர்களாகிய சகடாசுரன் சிசுபாலன் தந்தவக்கிரன் இன்னும் பல துஷ்டர்களையும் நான் கொன்றதும் கொல்வித்ததும் தேவதைகள் ரிஷீசுராள் முதலியவர்களுக்கு தருமமென்று நிச்சயமாய்த் தோன்றுமாகில், அந்த தருமமும் சத்தியமும் இரண்டும் எனக்கு நேத்திரமாகி நித்தியப் பிரம்மசாரி விரதத்தை நான் பூண்டிருப்பது நிசமேயானல், இந்தச் சிசுவானது பிழைக்கக் கடவதென்று ஆகாயத்தைப் பார்த்து கையெடுத்துச் சொல்லி அந்தக் குழந்தையின் உடம்பைத்தடவினர். கட்டைபோற் கிடந்த அந்தப் பிண்டம் அலண்டு பிரண்டு வீர் என்று அழ ஆரம்பித்தது, அந்த அற்புதக் கிரியைக்கண்ட யாவரும் ஆண்டவனை ஸ்துதித்தார்கள். உயிர்த்தெழுந்த அந்தப் பிள்ளைக்குப் பரிச்சித்தென்று நாமகரணஞ் செய்து நகரத்திலும் நாடுகளிலும் பெருந் திருவிழாக் கொண்டாடினர்கள். இவ்விதமாய் பரிச்சித்து மகாராஜனுக்கு ஒருமாதம் வயதாயிற்று. இமயமலைச் சார்பில் புதையல் வாரியனுப்பிக்கொண்டிருந்த ஐவர்கள் அரண்மனை வந்து சேர்ந்த பின்பு, குழந்தையை உயிர்த்தெழுப்பிய இந்த ஸ்ரீ பகவானுடைய மாகாத்து மியத்தை விதுரர் அனேகமாய்ச் சொல்லி ஸ்தோத்திரித்தார். பாண்டவர்களும் தேவர் தேவனைப்போற்றி, அநேகமாய் அவரை வந்தித்தார்கள். அவ்வேளையில் வியாசப்பிரம்மம் சபையில் வந்தெழுந்தருளி தருமநந்தனரைப் பார்த்து, அசுவத்தாமாவின் அஸ்திரத்தினல் தகிக்கப்பட்டுப்போன உத்தரையின் பிண்டமானது பூமியில் சனித்த பின்பு, சித்தஜனைப்பெற்ற புருஷோத்தமன் பிராணப் பிரதிஷ்டை பண்ணி தம்து செந்தாமரைக் கரத்தால் தடவிப் பரிச்சித்தென்றும் பேரிட்ட செய்தி கேட்டுச் சந்தோஷ மடைந்தேன். இப்பேர்ப்பட்ட பகவான் உங்களுக்குத் துணை நிற்கும் போது, பிறவிக்கடலை கடந்தவர்களானீர்கள். நீங்களே கொடுத்துவைத்த பாக்கியசாலிகள் என்றார். ஐயா தேவமுனிவரே! உலகளந்த பரந்தாமனுடைய கிருபாகடாட்சமும் தேவரீர் திருவருளும் எங்களுக் குண்டாயிருக்கும் போது என்ன குறைச்சல், திரவியஞ் சேகரித்துக் கொடுத்தது போல் அசுவமேதத்தையும் முடிப்பித்து எங்களை ரக்ஷிக்கக் கடவீரென்று எல்லோரும் போற்றி செய்தனர்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் வியாசரை நோக்கி தேவரீர் ஈசுவர சொரூபமாகையால் அசுவமேதயாகத்திற்கு தலைமையாயிருந்து முடிக்கக்கடவீர். அப்படிக்கானல் அசுவமேத யாகத்துக்கு தீக்ஷை வகிக்க வேண்டும், தீக்ஷை

யாவது யாதென்னில், சித்திரை மாதபவுர்ணிமி முதற்கொண்டு பனிரண்டு பர்வம் அளவும் பெரியோருடன் விரதம் அனுஷ்டித்துப் பக்குவமாயிருக்க வேண்டும். சித்திராபர்வத்தில் பஞ்சலக்ஷணமுள்ள குதிரையை பூசைபண்ணி தேசத்தின் பேரில் விடவேண்டும். அது தேசமெல்லாந் திரிந்து பனிரண்டாவது பர்வத்துக்கு முதல்நாள் யாகசாலை வந்து சேரவேண்டும். அந்த அசுவத்தின் பின்னே வீரமுடைய அரசர்கள் துணைபோக வேண்டும். குதிரை வந்து சேர்ந்த பிற்பாடு யாகந் தொடங்க வேண்டும். ஓமத்துக்குத் தகுந்த சாமக்கிரிகளும் அன்னதானம் முதலியதும் தாழ்ச்சியில்லாமல் நடத்தவேண்டும். கங்கைக்கரையில் யாகசாலை அமைக்க வேண்டும். இத்தியாதி காரியங்களும் கைகூடின பின்பு வேள்வி ஆரம்பிக்கலாமென்று விளம்பிய வேதவியாசரை தருமராஜன் தொழுது ஸ்ரீபகவான் முகத்தை நோக்கி இவ்வாறு செய்வதற்கு திருப்பதினுவென்று கேட்க, யதுகுல சிரோமணி சரிதானென்முர். உடனே வியாசர் எழுந்து ஸ்ரீ கிருஷ்ணர் முதலிய பேருடன் குதிரைச் சாலைக்குள் புகுந்து, சுபலக்ஷணம் பொருந்திய ஒரு அசுவத்தை தெரிந்தெடுத்து தருமரைக் கொண்டு அந்தக் குதிரைக்கு சாஸ்திரோக்கமாய் பூசைகளைச் செய்துவைத்து, குதிரை நெற்றியில் வீரபட்டங்கட்டி நல்ல சுப முகூர்த்தத்தில் வெளியேவிட்டு குதிரை நடக்கும் போது அது காலடிவைக்கும் இடங்களில் ஓமங்கள் செய்து, தேகம் உதறிய இடத்தில் நாகப்பிரதிஷ்டை பண்ணி, நீர்விட்ட இடத்தில் குளம் எடுப்பித்து, படுத்த இடத்தில் கோவில்கட்டி, தும்மி விம்மி இருமிய இடத்தில் சுமைதாங்கி சத்திரஞ் சாவடி ஏற்படுத்தி வைக்கும்படி, வேண்டிய திரவியமுஞ் சாமக்கிரிகளையுங் கொடுத்து அதைப் பாதுகாத்து வரத்தகுந்த வீரன் யாரென்று பகவானைக் கேட்டதற்கு அர்ச்சுனனை நேமித்தார். அர்ச்சுனன் இந்த வசனங் காதிற் படாததற்கு முன்னமே, ஆயுதபாணியாகி ஸ்ரீ கிருஷ்ணபகவான் முதலிய பந்துக்களிடத்தில் விடைபெற்று வெளிப்படுஞ் சமயத்தில், தருமராஜன் தம்பியை ஆலிங்கனஞ்செய்து, அப்பனே! பதினெட்டு நாள் யுத்தத்தில் உலகின் அரசர்களையுஞ் சேனைகளையும் கருவறுத்துப்போட்டோம். அதில் யாராகிலும் சிலருடைய பிள்ளைகள் தப்பியிருப்பார்கள், அவர்கள் குதிரையைப் பிடித்துக்கொண்டு உன்னை யெதிர்த்தாலும் நீ அவர்களிடத்தில் நன்மையாய் பேசி சண்டை செய்யாமல் சமாதானமாய் நடத்திவாவென்று புத்திமதி சொல்லி அனுப்பிவைத்தார்.

அசுவம் பூவலம் வந்த சருக்கம்.

கேளும் ஜனமேஜய மகாராஜனே! சுவேதவாகனன் குதிரையை முன்னேவிட்டு சேனைகளுடன் பின் செல்லும் போது, அந்தக் குதிரை வடக்கு முகமாய்த் திரும்பி அநேகங்காடு மலைகளைத்தாண்டி திரிகர்த்த தேசத்துக்குள் சென்றது. பாரதயுதத்தில் மாண்ட திரிகர்த்தராஜனுடைய பிள்ளைகள் அர்ச்சுனனைச் சினந்து அசுவத்தை மடக்கினர். இவன் அவர்களுடன் தன் தமையன் கூறிய வண்ணமே சமாதானமாய்ப் பேசியும் அவர்கள் ஒப்பாமல் சண்டைக்காரம்பித்து திரிகர்த்தனுடைய ஜேஷ்டகுமாரன் சூரியவன்மன்

விஜயன் மீது பாணங்களைத் தொடுத்தான். விஜயன் காண்டீபத்தை வளைத்து எதிர்பாணங்களை விட்டு எதிரியைப் பின்னிடையச் செய்தான். அவன் தம்பி சூரியவீரியன் என்பவன் விஜயனுடன் அமராடி களைத்து மூர்ச்சை யடைந்தான். அவனுக்கிளைய சூரியகேதுவானவன் கிரீடியுடன் சண்டையிட்டு அஸ்திரத்தின் அடிதாங்காமல் அவனும் பின்னிட்டான், இவனுக் கிளைய சூரிய சண்ட விக்கிரமன் தேவதாஸ்திரங்களை அர்ச்சுனன் மீது விட்டு உபத்திரவித்ததினுல் காண்டீபன் தன்னை மறந்து பூமியில் விழுந்தான். அதைப்பார்த்த திரிகர்த்தனுடைய பூர்வ மந்திரிமார்கள் சூரிய சண்ட விக்கிரமனைத் தடுத்து அர்ச்சுனனுடைய பிரதாபங்களைப் போற்றி, உன்னுடன் அவன் நிசத்தில் சண்டை செய்திருந்தால் நீங்கள் நால்வரும் இந்நேரம் இறந்திருப்பீர்கள், சிறு பிள்ளைத்தனமாய் நடத்தாதீர்கள் என்று புத்தி சொல்லிக்கொண்டிருக்கையில் அர்ச்சுனன் மூர்ச்சை தெளிந் தெழுந்தான். அவனிடத்தில் அவர்கள் வந்து சினேகமாகி பரியை விட்டு விட்டுக் கப்பணங் கொடுத்தார்கள். இப்பால் அந்தப் புரவியானது மகததேசத்தை நாடி வந்தது. பகதத்தன் பிள்ளை வைரதத்தன் பரியினைக் கைப்பற்றிப் போர் கொடுத்தான். அவனை விஜயன் எதிர்த்து சாடிக்கவே பிராண மூர்ச்சையாகி பூமியில் விழுந் தெழுந்தான். என் தமயனுத்தரவுப்படி உன்னை லகுவாய் விட்டேன். இன்னமுஞ் சண்டை செய்யப் பிரிய மிருந்தால் எதிர்த்துவா இல்லா விட்டால் சமாதானத்துக்கு வாவென்றதற்கு அவன் அங்ஙனமே இசைந்து காணிக்கை செலுத்தினுன்.

அப்பால் வாசியானது சில காடு மலைகளைத் தாண்டி சிந்துதேசஞ் சென்றது, சிந்து ராஜன் குமாரனும் பேரன்மார்களுஞ் சேர்ந்து அர்ச்சுனனை யெதிர்த்துச் சண்டையிட்டு வெகுசனம் மாண்டது. அவர்கள் புறமுது கிட்டோடி மறுபடியுஞ் சண்டைக்கு வர யத்தனப்பட்ட போது, தருமராசன் சொல்லிய சமாதான வார்த்தைகளை பற்குணன் அவர்களுக்கு போதித்ததினுல், சைந்தவன் கைம்பெண்ணுகிய காந்தாரியின் குமாரத்தி துச்சளை அண்ணே! என் கழுத்து இப்படியாயிற்று என்று காலில் விழுந்தழுதாள். தன் தங்கையை தூக்கிவிட்டு பரிவாகப்பேசி நீங்கள் யாவரும் அசுவமேதயாகத்துக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டான். துச்சளையானவள் தன் அரண்மனைக்கு வரச்சொல்லி வேண்டினுள். தீக்ஷைவகித்த நான் பட்டணத்துக்கு வரக்கூடாதென்று சமாதானஞ் சொல்லி அவர்களிடத்தில் சில திரவியங்களைப் பெற்றுக்கொண்டு வெளிப்பட்டான்.

கொய்யுளையானது அங்கிருந்து தக்ஷணமுகமாய்த் திரும்பிக்கலிங்கம் குலிங்கம் புலிங்கம் தெலுங்கம் ஒட்டியம் கன்னடம் மாடம் குகுதம் இத்தியாதி தேசங்களில் சென்றது. அவ்வவ் விடங்களிலுள்ள அரசரைக் கண்டு சமாதானமாய் கப்பணம் வாங்கிக்கொண்டு விந்தகிரிமுதலிய பர்வதங்களைத் தாண்டி விந்திய தேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அந்த தேசத்தின் நீல மகாராஜனுடைய மூத்தகுமாரன் பிரவீரநீலன் அவன் தம்பி நீலத்துவசன் இவர்கள் இருவரும் வர்மத்துடன் அர்ச்சுனனையெதிர்த்துப் போரிட்டார்கள்.

அதினால் இவன் மூர்ச்சித்து எழுந்து மறுபடியும் தன் காண்டீபத்திலிருந்து சிலகணைகளை எதிரிகள்மீது ஏவ, நீலன்மகன் நொந்திளைத்துத் தன் அரமனைக்குச்சென்று தன்மருமகனாகிய அக்கினிதேவனைத் துணைவர அழைத்தான். அக்கினிதேவன் விஜயனுடைய பிரதாபங்களை எடுத்துக் கூறி அவனுடன் போர்செய்ய உன்னால்மாளாது, சமாதானமாய்ப்போவது நலமென்று புத்திபோதித்து அவனை அர்ச்சுனனுடன் சமாதானப்படுத்திவைத்து காணிக்கைகளைக் கொடுத்தனுப்பிவிட்டான். அசுவமானது அங்கிருந்து புறப்பட்டு ஆலவாய் என்னும் மதுரைக்கு வந்தது. அவ்விடத்திய அரசன் பப்பரவாகனன் தனக்குரிய தந்தை வந்தாரென்று அறிந்து எதிர் கொண்டுவந்து கண்டான். விஜயன் அவனை வெகுண்டு ராசகுமாரனை நீ வெறுங்கை வீணனைப் போல் வந்து பேசுகிறாய், இது க்ஷத்திரிய தர்மமல்லவென்றான். அதைப் பப்பரவாகனன்கேட்டு மனத்தாங்கலடைந்து தன் அரமனைக்குத் திரும்பிப் போய் தகப்பனுடன் யுத்தம் புரிவது தர்மமல்லவேயென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, நாகலோகத்தில் வசிக்கும் உலூபியென்ற இவன் பெரிய தாயார் பிரசன்னமாகி, நீ ஏன் அனுமானப்படுகிறாய், தந்தைசொல் மந்திரமாதலால் நீ கற்ற வில்வித்தையை அவருடன் கைபழகிக் காட்டென்று ஏவினாள். அந்த வார்த்தைக்கு பப்பரவாகனன் உடன்பட்டு அர்ச்சுனன்மீது எதிர்த்துச்சண்டையிட்டான். அர்ச்சுனனும் சளையாமல் அஸ்திரப்பிரயோகஞ் செய்துவரும்போது, பப்பரவாகனன் மேற்கொண்டு விஜயன் தேகத்தை பாணங்களால் தொளைத்து மூர்ச்சிக்கச்செய்தான். மூர்ச்சை தெளிந்தெழுந்த காண்டீபன் மறுபடியும் போரிட்டான். பப்பரவாகனன் சில தேவதாஸ்திரங்களை விஜயன்மீது பிரயோகித்து அவனை பூமியில் சாகடித்து வீழ்த்தினதினால் பூமியில் விஜயன் மரித்துவிழுந்தான் என்று பப்பரவாகனன் அறிந்த உடனே விஜயனிடம் வந்து தேகத்தில் பட்டிருக்குங் காயங்களைப்பார்த்துப் பிரலாபித்தழுது தானும் மூர்ச்சையாகி தரையில் விழுந்தான். இச்செய்திகேட்ட சித்திராங்கதை வேகமாய் ஓடிவந்து பூமியில் கிடக்கும் தன் பிள்ளையையும் புருஷனையும் பார்த்து ஆறாத்துயரமடைந்து, உடனே நாகலோகத்துக்குப்போய் உலூபியை அழைத்துவந்து பூமியிற்கிடக்கும் இருவரையுங் காண்பித்து நமது புருஷன் மீது கொஞ்சமேனும் பிரீதியில்லாமல் சும்மா இருந்த என் மகனை சண்டைக்கு முடுக்கிவிட்டாய். அதினால் அந்தச் சிறுவன் பிதாவைக் கொன்ற பிதுர்துரோகியானான், இனி நான் என்பிராணனை வைத்துக்கொள்வதில்லையென்றாள்.

உலூபியானவள் தன் தகப்பன் நாகராசனுக்குச் செய்தியனுப்பி வைத்து அவனிட மிருந்துவந்த மிருதசஞ்சீவியாகிய சிந்தாமணி யென்கிற ஜீவரத்தினத்தை பப்பரவாகனன் கையிற் கொடுத்து விஜயன் தேகத்தில் தடவச்சொன்னாள். உடனே விஜயன் எழுந்து உட்கார்ந்து இவர்கள் யாவரையும் பார்த்து சந்தோஷித்தான். உலூபியானவள் அர்ச்சுனனுக்கு அவன் மகனால் நேரிட்ட மரணத்தை தெரிவித்தாள். அப்படி சம்பவிக்கும்படி நேர்ந்த காரணம் யாதென்று வினவ, உலூபி உரைக்கலுற்றாள். கேளீர் என்

பிராணவல்லபா ! ஒருநாள் கங்கைக்கரையில் நான் தீர்த்தமாடிக் கொண்டிருக்கும்போது, வசுதேவதைகளில் ஏழுபேர் தேவவிமானத்துடன் அங்கே வந்திறங்கினார்கள். கங்காதேவியம்மன் அவர்களுக்கெதிரில் பிரசன்னமானாள்; அவளை இவர்கள் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அம்மணி! நாங்கள் எண்மரில் ஏழுபேர் உன் வயிற்றிற் பிறந்திறந்தோம், எங்களுக்கு முதல் வசுவாகிய பிரபாசனர் என்ற உமது பிள்ளை பீஷ்மரை, சிகண்டி கொன்றானென்று பேர்வைத்து அர்ச்சுனன் வேலை முடித்துவிட்டான் என்று, எல்லோரும் பேசிக்கொள்ளுகிறார்கள். பாட்டனைக் கொல்வதற்கு அவனுக்கு எப்படி மனந்துணிந்ததோ, அப்பேர்ப்பட்டவன் மீது நீ கோபிக்காமல் சும்மாயிருக்கிறாயே? எங்களுக்கு உத்திரவுகொடு நாங்கள் சபிக்கிறோமென்று பேசிக்கொண்டிருந்தனர்.

இந்த வசனம் என் காதிற்பட்டமாத்திரம் வெகுவிரைவில் என் அரண்மனைக்குப்போய் எனது தகப்பன் நாகராசனை அவர்களை சமாதானப்படுத்த அனுப்பிவைத்தேன். அவர் அவர்களிடம்வந்து, பீஷ்மர் பிறக்கவும் யுத்தத்தில் இன்னார்கையால் இறப்பாரென்றும் ஏற்கெனவே ஏற்பட்டிருந்த அமைப்பின்படி நடந்தது, இப்போது அவனைச் சபிக்கிறத்தினால் உங்களுக்கு என்னபலன் என்று தயவாய்க் கேட்டுக்கொண்டார். ஆகிலும் அர்ச்சுனன் தான்பெற்ற பிள்ளையைப் பகைத்துச் சண்டைவிளைத்து அவன்கையால் மரணமடைவானென்றார்கள், இப்பேர்ப்பட்ட அபாயம் அவனுக்கு நேரிடுமாகில் மறுபடியும் அவன் பிழைப்பதெப்படி யென்று என்பிதா வினவ, நீ இதைக் கேள்விப்பட்ட மாத்திரம் சீவசிந்தாமணியை அனுப்புவையாகில், அதின் பரிசம் பட்டமாத்திரத்தில் அவன் பிழைப்பானென்று கூறி, இவ்வளவு வருத்தத்தை அந்த விஜயன் அனுபவிக்காவிட்டால், பீஷ்மாசாரியரைக் கொன்ற பாவம் அவனைவிடாது என்றார்கள். இந்த விபரத்தை என் தகப்பனால் அறிந்து அதுமுதல் மிகவும் ஏக்கங்கொண்டிருந்தேன். இப்போது அசுவத்துடன் நீர் மதுரைக்கு வந்தபடியால் பப்பரவாகனனைச் சண்டைக் கேவினேன், அவனால் இறந்து மறுபடியும் பிழைத்தீரென்று உலூபி சொன்னாள். இதுகேட்ட விஜயன் உலூபியையும் சித்திராங்கதையையும் பப்பரவாகனனையும் பரிவாக அணைத்துப்பேசி, பட்டணத்துக்குள் தான் பிரவேசிக்கக்கூடாத விரதத்தைசொல்லி அவர்கள் அனைவரையும் அவசியம் யாகத்துக்குவரும்படி உத்தரவு கொடுத்தான். பப்பரவாகனன் விலையுயர்ந்த அநேகம் பாரம் சந்தனக்கட்டைகளை காணிக்கையாக சமர்ப்பித்தான்.

பின்பு மகததேசத்துக்கு வந்தார்கள். ஜராசந்தன் மகன் சகாதேவன், அவன்குமாரன் ஏகசந்தி, இருவரும் அர்ச்சுனனை யெதிர்த்துச் சமரிட்டார்கள். காண்டீபன் அவர்களுடைய தேர் குதிரை சாரதிகளை அடித்துச்சாடிவிட்டான். அதினால் அவர்கள் சமாதானமாகிக் காணிக்கை செலுத்தினார்கள். அப்பால் சேதிதேசத்துக்கு வந்தார்கள் சிசுபாலன் குமாரன் சரபன் என்பவன் குதிரையை மடக்க அவனுடன் போர் புரிந்து பின்பு சமாதா

னப்பட்டு கப்பணமுங் கைக்கொண்டு வெளிப்பட்டான். இப்பால் கிராதர்கள் வாசம்பண்ணும் தேசங்களைக் கடந்து கோசல தேசத்துக்குப்போய் அங்கிருந்து அயோத்தி வடமதுரை காசி முதலிய பட்டணங்களுக்கு வந்து, அந்தந்த ராஜாக்கள் கொடுத்த கப்பணங்களை வாங்கிக்கொண்டு அங்கிருந்து தசார்ணவ நாட்டுக்குப்போகும்போது சித்திராங்கதனிடம் சக்கியமாகி சால்வை முதலிய சரிகை பட்டு பட்டா வாளிகளை வாங்கிக்கொண்டு வெளிப்பட்டான். யாகப்பரியானது நிடதநாட்டில் வந்து சேர்ந்தது. அந்நாட்டிறைவன் படையெடுத்துவந்து சுவேதவாகனனுக்குத் தோற்ருேடுவதைப்பார்த்திருந்த ஒரு கனவான் இருவரையும் சமாதானப்படுத்தி வைக்க அவ்விடம் விட்டு விந்தகிரிக்குத் தென்பாரிசத்தில் ஆரியம் சௌராஷ்டிரம் மலையாளம் ஆட்சி கொச்சி எங்ஙனம் சென்று திரும்பினுர்கள். இப்பால் யாதவாள் நிறைந்த துவாரகைக்கு வந்தபோது அவ்விடத்திலுள்ள பேர்கள் இவனை உபசரித்துக் காணிக்கையுடன் அனுப்பினுர்கள். அதைவிட்டு காந்தாரதேசத்துக்கு வந்து வைஷம்மியமுடைய சகுனியின் பிள்ளைகளுடன் விஜயன் சமாதானமாக வார்த்தை ஆடியும் கேளாமல் சண்டையிட்டார்கள். அர்ச்சுனன் கணையால் எதிரிகள் மூச்சித்துக் கீழேவிழ அவகள் தாயார் ஓடி வந்து அர்ச்சுனனிடத்தில் அபயம்புகுந்தாள். மூர்ச்சை தெளிந்தெழுந்த சித்திரவிஜயன் கிரீடியுடன் சமாதானமாகி காணிக்கை ஈய்ந்தான். அப்பால் அதையடுத்த பட்டணங்களைச் சுற்றிக்கொண்டு அசுவத்துடன் அத்திளுபுரத்துக்குச் சமீபமாய் வருகிறபோது, தருமராசன் கேள்விப்பட்டு ராஜ ராஜாக்கள் பிராமணுள் ரிஷிகள் முதலிய மகான்களை வரவழைக்கவும் யாக சாமக்கிரிகளை சேகரிக்கவும் பீமசேனனுக்கு ஆக்கியாபித்தார்.

யாகச்சருக்கம்.

கேளும் ஜநமேஜய மகாராஜனே! பீமசேனராசன் தமயன் சொற்படி அநேக மன்னர் மன்னர்களையும் ரிஷிசுராளையும் அழைத்துவர தூதர்களை அனுப்பிவிட்டு, யாகமண்டபமும் அன்னதானச் சாலையும் வெவ்வேருக அமைத்து சுவர்ண பாத்திரங்கள் நவரத்தின தாம்பாளங்கள் கலசங்கள் யாவையுஞ் சேகரித்து வைத்தான். ஸ்ரீகிருஷ்ணபகவான் தருமரைநோக்கி குதிரையுடன் அர்ச்சுனன் வந்துவிட்டான், உம்முடைய தம்பி துவாரகைக்கு வந்தபோது விஷ்ணுதேவப் பிராமணனிடத்தில் எனக்கு ஒரு சேதிசொல்லி அனுப்பிவைத்தான். அதாவது, தேசதேசத்து மன்னவர்களையெல்லாம் சமாதானப்படுத்தி யாகத்துக்குவரும்படி சொல்லியிருக்கிறேன், அவரவர் தப்பாமல் வருவார்கள், வந்தால் பழையபகைகளைப் பாராட்டாமல் சர்வமரியாதைகளுடன் திருப்திபண்ணி வைக்கவேண்டுமென்றும், பாண்டிய நாட்டிலிருந்து சித்திராங்கதையின் புத்திரன் பப்பரவாகனன் உம்மை தெரிசிக்கும்படியாய் தன் தாய்மாருடன் வருவான், அவர்களையும் ஆதரிக்கும்படி சொன்னுன். அதை உமக்குத் தெரிவிக்கிறேனென்ருர். பலராமர் முதலிய கிரீடாதிபதி

களும் மற்றுமுள்ள மன்னவர்களும் வந்து சேர்ந்துகொண்டிருந்தார்கள். இப்படியிருக்கையில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தருமராசனை நோக்கி அர்ச்சுனனுடைய வல்லபத்தைச்சொல்ல யாரால்முடியும். அவனுக்கு வலது துடையில் சிகப்பு மச்சம் ஒன்று இருக்கிறது, அதினால் இவ்வளவு தூரம் வெற்றியை அடைந்தானே என்று கூறினர். இதைக் கேட்டுக்கொண்டிருந்த துரோபதாதேவி, ஸ்ரீகிருஷ்ணபகவானை திஷ்டிகழித்து, இரகசிய ஸ்தானத்திலிருக்கிற மச்சத்தை எல்லோரும் அறிய வாசுதேவன்சொல்லிவிட்டாரே யென்று நகைத்து, சுயஜனங்களை விசாரிக்கும் வேலையை வகித்திருந்தாள்.

இப்பால் நாரதர் வசிஷ்டர் காசிபர் பிருகு அகஸ்தியர் தூர்வாசர் கௌதமர் உதங்கர் ஜநற்குமாரர் கண்ணுவர் மார்க்கண்டேயர் தௌமியர் வியாசர் வைசம்பாயனர் ஜயிமினி பரதர் முதலிய தபோநிதிகள் வந்துசேர்ந்தார்கள். அவர்களைத் தருமராஜன் வந்தித்து ஆசனங்களில் எழுந்தருளப் பண்ணினர், அநேகம் பிராமண ஸ்திரிகள் ரிஷிபத்தினிமார் யக்ஷ ஸ்திரீகள் முதலிய யாவரும் யாகசாலையில் வந்து கூடினார்கள். அவ்வேளையில் காண்டீபன் பரியுடன் அபஜயமில்லாமல் நமது அஸ்தினபுரத்துக்குச் சமீபத்தில் வந்து தங்கியிருக்கிறரென்றும் அவ்விடத்தில் அசுவாலயம் ஒன்றும் ஈசுவராலயம் ஒன்றும் கட்டிவிட்டு நாளைய காலையில் தங்கள் தெரிசனத்துக்கு வருவாரென்றும் ஒரு அரசன் அறிவித்தான். மறுநாட்காலையில் ரிஷீசுராள் விஜயனையும் அசுவத்தையும் எதிர்கொண்டுபோய் அழைத்து வந்தார்கள். அப்புறம் பாண்டிய நாட்டுக்குடைய பப்பரவாகனன் தருமரைக் கண்டு வணங்கி திரிதராஷ்டிரனைத் தெண்டனிட்டான். யாவரும் அவனை வாழ்த்தினார்கள். உடனே அவன் அந்தப்புரத்துக்குட்சென்று தாய்மாரையும் பாட்டிமாரையும் சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணிக்கொண்டான். ராஜபத்தினிகள் உலூபியையும் சித்தராங்கதையையும் பிரியத்துடன் ஒப்புக்கொண்டார்கள்.

யாகம் ஆரம்பம்.

வேதங்களில் விளங்கிய வண்ணம் நாலுகாற்சிவன் இருகாற்சிவன் இவைகளில் மும்முறை தர்ப்பைப் புல்லினல் பந்தித்து, யாககுண்டங்கள் அமைத்து நவரத்தினங்களைப்பரப்பி தங்கக்கலசம் வெள்ளிக்கலசம் தாம்பிரக்கலசங்கள் அந்தந்த ஸ்தானங்களில் இருத்தி யாவுஞ் சித்தமாயினவுடனே, வியாசமுனிவர் தருமராஜனுக்கு ஸ்நானம் பண்ணுவிக்கச்செய்து ஆசாரத்துடன் யாகசாலைக்கு வரும்படி ஆக்கியாபித்தார். அதுபோல் தருமராசன் யாகசாலையில் பிரவேசித்து, தம்பிமார் இருபக்கங்களிலும் நிற்க, கருணாநிதியாகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் எதிரில் விளங்க ஆசனத்தில் வீற்றிருந்தார். வியாசர் தௌமியர் யாகபிராதாக்களாகவும், ஜயிமினி வசிஷ்டர் வைசம்பாயனர் பரதமுனி இவர்கள் வக்தாசுரோதாக்களாகவும், நாரதர் முதலிய ரிஷிகள் உபாத்தியாயாகளாகவும் இருந்து திரியாக்கினியையும் வளர்த்து ஓமங்கள் மந்திராகுதிகள் செய்து, அசுவத்தை யூபஸ்தம்பத்திற்

பிணைத்து வபையெடுத்து ஆகுதிகொடுத்துத் திருப்தி பண்ணினுர்கள். பீம சேனன் யாகசாலைக்கு வெளியில் வந்து நானு பிரதேசங்களிலுமிருந்து இவ்விடம் வந்திருக்கிற ரிஷிகள் அரசர் முதலிய யாவர்களும் அவரவர்களுக்கு வேண்டிய தனங்களை தடையில்லாமல் விரும்பியமட்டும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று உரத்திக் கூவினுன். வந்திருந்தவர்கள் மிகவும் சிலாகித்தார்கள். அப்போதுகொடுத்த தனத்தின் மிகுதியைச் சொல்லிமுடியாது. யாகத்துக்கு வராதவர்கள் மாத்திரம் தரித்திரரே யல்லாமல், வந்தவர்களுக்குத் தரித்திரமென்கிற ஞாபகமே இல்லாமல் போக்கடித்தார்கள். அசுவமேதத்தை குறைவற நிறைவேற்றி இஷ்டஜன பந்துக்களுடன் தருமராசன் சபாமண்டபத்தில் வீற்றிருக்கும்போது, பாதிசரீரம் பொன்னிறமாகவும் பாதி பச்சையாகவுமுள்ள ஒரு கீரிப்பிள்ளை சபையில் வந்து ரிஷி முதலியவர்களை ஏறெடுத்துப் பார்த்து நீங்கள் முகதாக்ஷிண்ணியத்தினுல் தருமராசனுடைய யாகத்தை வியப்பாய்ப் பேசினீர்கள். நான் அதைப் புகழேன். இது ஒரு அற்பயாகமே என்று இகழ்ச்சியாய்ச் சொல்லிற்று. யாகத்தை முடித்துவைத்த ரிஷிகள் திடுக்கிட்டு நீ இந்த யாகத்தை நிந்தனைசொன்னுயே இதன் காரணம் யாதென்று வினவியபோது நகுலமென்கிற அந்த கீரிப்பிள்ளை ஒருகதை சொல்லத்தொடங்கிற்று.

சபையில் வந்த கீரிப்பிள்ளையானது ரிஷிகளை நோக்கி, புனிதமாகிய குருக்ஷேத்திரத்தில் சத்துப்பிருத்தன் என்கிற ஒரு ரிஷி துல்லியன் கற்புடைய மனையாள் பிள்ளை மருமகள் ஆக நால்வரும் இல்லறத்தில் தருமம் வழுவாமல் நடத்தி வரும்போது, மழையில்லாமல் க்ஷாமம்நேரிட்டு அன்னபானுதிகளுக்கு வருந்தி, இந்நால்வரும் ஆகாரந்தேட வெளிப்பட்டு எங்குந் திரியும்போது, ஒரு வயலில் உதிர்ந்துகிடந்த நெல்லை நாலுபேரும் ஒவ்வொன்ருய்ப் பொறுக்கிச்சேர்த்து ஞானமனத்துடன் வீட்டுக்கு வந்து அந்த நெல்லைக்குத்தி அரிசியைப் பொரிமாவாக்கி நான்கு பங்காய்ப்பிரித்து புசிக்கப்போகிற சமயத்தில், வேதியர் ஒருவர்வந்து க்ஷுத்பாதையா யிருக்கிறதென்ருர். சத்துப்பிருத்ரிஷி வந்த விருந்தாளியை பிரியத்துடன் ஒப்புக்கொண்டு தன்பாகமாவை அவருக்குக்கொடுத்தார். அதை அவர் சாப்பிட்டும் பசிதீரவேயில்லையென்று முகத்தைச்சுளுக்கினுர். இதைப்பார்த்த அவர்பெண்சாதி தன்பாகத்தையும் அதிதிக்குக்கொடுக்கும்படி கைநீட்டினுள். பூமியில் எறும்பு முதல் யாவும், இரையைத் தேடிக்கொண்டு வந்து ஆசையுடன் பெண்சாதி பிள்ளைகளுக்கு ஊட்டிவைக்கிறது; அதுபோல் நான் உங்களைக்காப்பாற்றி ரக்ஷிக்கிறதைவிட்டுப் புறத்தியார் நிமித்தம் உன் ஆகாரத்தைவாங்கி ஈவது தருமம் அல்லவென்ருர். ஒருவருக்கு அன்னம்வைத்தால் திருப்தியாய் கொடுக்க வேண்டும்; அப்படிக்கில்லாவிடில் கொடுத்தவனுக்கு எரிகுன்மம் என்கிற வியாதியுண்டாகி இகபர சுகங்கிட்டாது, ஸ்திரீகளுக்குத் தெய்வம் புருஷன், நீர் பசியாயிருக்க நான் புசிக்கக்கூடாது, கிருபைபண்ணி என்பங்கை அவருக்குக் கொடுமென்ருள். அதையும் வாங்கி அதிதிக்குக்கொடுத்தார். அதையுஞ் சாப்பிட்டுப் பசி தீரவில்லையென்ருர். தாய் தந்தையரை ரக்ஷிப்பது புத்

திரன்கடமை, நீங்கள் இருவரும் பசியினுல் வருந்த நான் புசிக்கலாகாது, என் பங்கை விருந்தினற்கு இடுமென்முன். அதையும் வாங்கிக் கொடுத்தார், அதிலும் அவருக்குப் பசிதீரவில்லே. மாமனுர் மாமியார் புருஷன் இவர்கள் உபவாசமாயிருக்க நான் சாப்பிடலாகாது என்று மருமகளும் தன் பங்கைக் கொடுத்தாள். அதை வாங்கிப் புசித்த பின்பு திருப்தியாகி அவர்களே ஆசீர் வதித்து மறைந்துபோனுர்.

அப்பால் தருமதேவதை பிரசன்னமாகி இவர்களுடைய இல்லற தருமத்தை சிலாகித்து பூமியிலுள்ளோர் நற்கதி பெறவேண்டுமாகில் அதிதி பூசை புரியத்தக்கதென்று யாவருக்குந் தெரியுமாறு நீ விருந்திட்டாய், உனக்கொப்பாக ஒருவரும் இல்லே. நீங்கள் பிரம்மபதவி யடையும்பொருட்டு நான்முகன் என்னே யனுப்பினுர் என்று சொல்லுமுன்னமே விமானம் வந்தது, அதில் நால்வரும் எழுந்தருளி பிரம்மபதம்போய்ச் சேர்ந்தனர். இந்த அதிசயத்தைக்கண்ட கீரியாகிய நான் அதிதிகளிடத்தில் பயபக்தியுடன் சிசுருஷை செய்துவந்தேன். சிலநாள் சென்று என்தேகத்திற்பாதி சுவர்ணநிறமாயிற்று, மற்றப்பாதி சொர்ணநிறமாகவேண்டி அநேகம் பெரியோரை தெரிசித்தும் பயன்படாமல், இந்த அசுவமேதத்துக்கும் வந்துபார்த்தேன், இங்கேயும் என் மறுபாதிதேகம் பொன்னிறமாகவில்லே. பொரிமாக்கொடுத்த அந்த மகானுபவனுடைய தவத்திற்குச் சமானமாய்ச் சொல்வதற்கு எந்த விதமான நற்கருமங்களேயுங் காணேன். அதினுல் இந்த யாகத்தை சிலாகித்துச் சொல்லக்கூடாது என்று ஒரு பிலத்துவாரத்தில் போய் நுழைந்து விட்டது. இதைக்கேட்ட தருமராஜன் வெட்கப்பட்டுத் தீவினேநீத்த பெரியோர்கள் செய்கின்ற யாகத்திற்கீடாக ஏழையோம் செய்யக்கூடுமோ, செய்தாலும் அப்படிமுடியுமோ என்ருர். முனிவர்கள் தருமராசனே ஆசீர்வதித்து விடைபெற்றுச்சென்றனர். கேளும் ஜநமேஜயராசனே, அறன்மகன் செய்த யாகம்போல் ஒருவருஞ்செய்ததில்லே. ஆனுல் அதிக்குப் பொரிமாவளித்த தருமத்துக்கு இது ஈடல்லத்தான். தருமத்தின்பிரிவை ஸ்தூலமென்றும் சூக்ஷமமென்றும் சொல்லப்படும், ஸ்தூலமென்பது நல்வினேகளே காலத்துக்குத் தக்கபடி செய்யவேண்டும். சூக்ஷமமானது தருமத்தைக் கண்டறிந்த பெரியோர்க்குத் தெரியுமென்று வைசம்பாயனர் கூற, கீரிப்பிள்ளேயின் பூர்வோத்தரம் யாதென்ற ஜனமேஜயன் வினுவிற்கு, அதின்விருத்தாந்தத்தை நவிலத்தொடங்கினுர்.

கீரிப்பிள்ளே வரலாறு.

ஜமதக்கினி மகாமுனிவர் பிதுர்தேவதைகளுக்கு சிரார்த்தம் பண்ணவேண்டி நூதனபாத்திரத்தில் காமதேனுவின் பாலேக்கறந்துவைத்தார். குரோதமென்னுந் தெய்வம் அந்தபாலேக் கவிழ்த்துவிட்டது. முனிவர் கோபங்கொண்டு மறுபடியுந் தணிந்து குன்றிப்போயிருந்தார். குரோததெய்வம் பிரசன்னமாகி, உனக்கு வெகுளிமேற்கொண்டு தணிந்துபோவதைக்

காணும்பொருட்டு நான் பாலைக்கவிழ்த்தேன். நீர் அதைப் பொறுத்துக் கொள்ளுமென்று வேண்டிற்று. குரோததெய்வமே! ஆசாபாசங்களையொழித்து தருமத்தின் வழிநிற்கும் பெரியோர்கள் எப்பேர்ப்பட்ட காரியங்களும் ஈஸ்வரச்செயலால் நடப்பதென்று உணர்வார்கள். அந்தக் குணத்தையுடைய நான் தென்புலத்தாருக்கு திதிகொடுக்க வைத்த பாலை எனக்கிடர்செய்து கவிழ்த்தாய். அதினால் பிதுர்வேதைகளுக்கு இடையூறும் எனக்கோர் குற்றத்தையும் நேரிடப்பண்ணினாய். உன்னைக்கோபிப்பதிலும் பயன் இல்லை, பொறுமையாயிருப்பதிலும் பயன் இல்லை. நீ உன்காரியத்தைப்பார் என்று அனுப்பிவிட்டார். பிறகு இவருடைய கிருகத்தில் பிதுர்தேவதைகள் நேரில் பிரசன்னமாகி, உன் பிதுர்களுக்காக நேமித்துவைத்தபாலைக் கவிழ்த்துப் போட்டவனைக் குறித்து யாதொரு தண்டனையுஞ் செய்யாமல் பிதுர் பூசையை நீ பெரிதல்லவென்று நினைத்துச் சகிப்பாய் இருந்து விட்டாற்போற் காண்கிறது. இதைவிடப் பாபம் வேறொன்றில்லை. நீ அந்ததேவனை வெறுக்காமையால் கீரிப்பிள்ளையாய் ஜெனனமெடுத்துத் திரிவாயென்று சபித்தார்கள். இந்தசாபத்துக்கு விமோசனம் எப்படியென்று கேட்டதற்கு சத்தியமுள்ள ஒருவன் அசுவமேத யாகம் புரிந்து பூர்ண ஆகுதிகொடுத்து புனித மாதவருடன் சிம்மாதனத்தில் இருக்கும்போது சொல்லாவிரதம்பெற்று இல்லற தருமத்தை மெய்விரத மாகக்கொண்ட முனிவர்களின் விரதசீல மேன்மையை நீ எடுத்துப்பேசி பின்பு தவம்புரிந்து சகத்தின் ஆசையை ஒழித்து எங்களைநினைத்து முனிபுங்கவர் அருளிய மந்திரத்தினால் தேவர்களுக்கு அவிர்ப்பாகங் கொடுப்பாயாகில் உன்னுடைய யதாரூபம் வருமென்று கூறி மறைந்துபோனார்கள்.

கீரிப்பிள்ளையாயின ஜமதக்கினியானவர் சிலநாள் தவமிருந்து சிவாலயப் பிரதிஷ்டைசெய்து குருக்ஷேத்திரத்தில் நடந்த யாகத்தைப்பார்த்து வியந்து முனீசுரர்களிடத்தில்போய் யாகத்தின் பெருமையைப் புகழ்ந்து பேசினார். உடனே சாபம் நீங்கிற்று என்று வைசம்பாசனர் உரைத்தார். அதற்கு ஜனமேஜயராஜன் வைசம்பாயனரைநோக்கி, சிரார்த்தகாலத்தில், சத்தியகுணனாகிய ராசன்செய்யும் வேள்வியையும் முனீசுரருடைய பெருமையையும் விரதசீலத்தையும் வழுத்தென்று தென்புலத்தார் கூறியதாக தேவரீர் பிரசாதித்தீரே, அதின்கருத்தை எனக்குச்சொல்லுமென்று வணங்க வைசம்பாயனர் அந்த ரகசியத்தை விளம்பலுற்றார். கேளும்ராசனே, தேவேந்திரன் பனிரண்டு வருஷகாலம் யாகம் நடப்பித்துவரும்போது ஒருதினத்தில் பலபசுக்களைக் கொண்டுவந்து சேர்த்தான். இதைப்பார்த்து முனீசுரர்கள் திடுக்கிட்டு உயிர்வதைசெய்து அடையத்தக்க வேள்வியைப்பார்க்கிலும் உயிர்வதையில்லாமல் பெரும் பிரயோசனத்தைப் பெறும்படியான இயற்கையொன்று இருக்கிறது அதைச்சொல்கிறோம் கேளும் புரந்தரனே! யாகத்தில் பசுக்களைவதைக்காமல் அசம் என்கிறபெயருடைய மூன்றுவருஷத்து நெல்லை அவிர்ப்பாகம் கொடுத்தால் விரும்பியபொருள் கைகூடும். அதைவிட்டுக் கொடுமையான ஜீவவதை செய்யாதீர். இந்த திரேதாயுகத்தில் கொலைத்

தொழிலிற் பிரவேசிப்பது நல்லதல்ல என்றார்கள். அந்த வார்த்தைகளை தேவதைகள் மறுத்துவிட்டு தேவேந்திரனைப் பார்த்து வேதங்களிற்சொல்லிய விபரப்படி யாகத்தைச்செய்தால் இந்த முனிகள் சிலவிக்கினஞ் சொல்லி மக்கிப்போன நெல்லைப் படைக்கச் சொல்லுகிறார்களே என்று கட்சி பேசிக்கொண்டு, இரு திறத்தாரும் உபச்சரன் என்பவனிடத்தில் போய் உரைத்தார்கள். அவன் தேவேந்திரன் விருப்பப்படி பெலியிடச் சொன்னான். நடுவுநிலை நிதானிக்காமலுரைத்த உபச்சரன் தீராநகரத்துக்காளாயினான்.

இந்த இருவகை வேள்வியில் பசுவதை செய்வது தேவர்களுக்கும், அஜம்படைப்பது முனிவர்களுக்கும் என்று விதியேற்பட்டு வெகுநாளாய் நடந்துவந்தது. அகஸ்தியமுனிவர் பொதியமலையில் யாகஞ்செய்ய ரிஷீசுரர்களை வரவழைத்துப் பன்னிரண்டு வருஷமாய்ச் சருகைத்தாங்கி ஓமாக்கினிவளர்த்து யாகத்தை நடத்தினார். இந்திரன் முதலியதேவர் இதைப்பற்றி ஈசனிடம் கேட்க, தேவர்கள் பசுயாகமும் முனிவர்கள் அஜயாகமும் என்கிற விதிப்படி அகஸ்தியர் செய்கிறார், இதைக்குறித்து தேவர்கள் அதை ஒப்புக்கொள்ளப் பின்வாங்குகிறார்கள் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது, அகஸ்தியர் திரிமூர்த்திகளுக்கு அவிர்பபாகங்கொடுத்து மற்றத்தேவர்களுக்கு கொடாமல் நிறுத்திவிட வேண்டுமென்று எண்ணி பத்தினியுடன் யாகத்தைச் செய்துவருகையில், தேவர்கள் மழையைத்தடுத்து உலகத்துக்கு பஞ்சத்தை வருவித்தார்கள். முனிவர்கள் பசியினால்வருந்தி அகஸ்தியருக்குத் தெரிவித்தபோது, உத்தரகுருதலத்தில் சுபேஷ்டமாயிருக்கிறது, அந்தப்பலனைத் தருவித்துக்கொடுக்க பிரயத்தனப் பட்டபோது தேவர்கள் அகஸ்தியரிடம் வந்து கோபத்தை க்ஷமியும், தேவரீர் எண்ணிய வண்ணம் யாகத்தை நடத்தியபின்பு, பூர்வீகமாக நடந்த பசுமேதம்போல் இனி நடக்க வரங்கொடுமென்று வேண்டினார்கள், அகஸ்தியர் அதுபோல் கிருபைசெய்தார். சீவ வதையில்லாமல் செய்யும் யாகம் விசேஷமென்று வைசம்பாயனர் அன்புடன் கூறினர்.

தருமமே ஜெயம் கருமமே பயம்.

வேள்வியானது மூவகைப்பட்டது. இம்மூன்றில் பசுயாகத்தை அரசர் நடத்தலாம். பிதுர்யாகத்தை உயிர்கொலையில்லாமல் சகல பதார்த்தங்களுடன் பிராமணனுக்குச் சமர்ப்பிக்கலாம். விருந்தாளிகளுக்கு உபசரித்து அன்னமிட்டு வந்தனைசெய்யவேண்டும். இதனால் இகத்திற் கீர்த்தியும் பரத்தில் மோக்ஷமும் அடைவார்கள். இல்லறதருமத்தில் நின்று திடச்சித்தமாய் முயற்சிப்பானாகில் சந்தேகமில்லாமல் நல்லபதத்தையடைவான், சூரியன் உச்சிக்குவருகிற மத்தியானத்தில் அதிதிகள் வந்தால் முகங்கோணாமல் ஒப்புக்கொண்டு உபசாரஞ்செய்யவேண்டும். உன் மூதாதைகள் செய்த

அசுவமேதம் இதுபோலொத்ததாம் என்றூர். ஜநமேஜயமகாராஜன் வபுஷ்டாதேவியுடன் வைசம்பாயனரை வந்தித்து அசுவமேதயாகஞ் செய்தபின்பு பாண்டவர்கள் நடத்திய சுபவிசேஷங்களை அருளிச்செய்ய வேண்டுமென்று வேண்ட முனிவர் மொழியத் தொடங்கினர்.

அசுவமேதபர்வம்.

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்

ஸ்ரீமகாபாரதம்.

பதினைந்தாவது

ஆசிரமவாசபர்வம்.

கண்ணன் துதி.

விருத்தம்.

விசும்பினையாதியூாய் விரியும்பூதவித்
தசும்புளவாழ்க்கையிற் சார்வரேகொலாம்
வசும்பிளமுலையலர் மங்கையாள்பவன்
பசும்புயல்வண்ணமே பரவும்பற்றினேர்.

முறைபுரிச்சருக்கம்.

கேளும் ஜநமேஜய மகாராஜனே! யாகத்துக்கு வந்த அரசர்கள் ரிஷீசுரர்கள் முதலானோர் தருமராசனுக்கு வேண்டிய அபூர்வவஸ்துக்களை வெகுமதியாகக்கொடுத்து, அவர் பதிலுக்கு ஈய்ந்த இரத்தினாபரணங்களை பிரியத்துடன் அங்கிகரித்து தங்கள் தங்கள் நாடுகளுக்கு சென்றார்கள். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தமது ஸ்திரீஜனங்களுடன் தருமராசனிடம் விடைபெற்று துவாரகாபுரிக்கேகினர். தருமராஜனுக்குப் பட்டாபிஷேகமாயின நாள்முதல், தம்பிருடன் உதயத்திலெழுந்து காலகடமைகளை முடித்துக்கொண்டு, நாள்தோறும் திரிதராஷ்டிர மகாராஜனையும் காந்தாரியம்மனையும் தெய்வம்போல் பயபக்தியுடன்பூசித்து, பெரிய ராஜனை சிம்மாசனத்தில் வீற்றிருக்கச்செய்து விதுரர் சஞ்சயர் முதலிய மந்திரிமாருடன் தருமராசன் பக்கத்திலிருந்து ராஜ்ஜியகாரியங்களை பெரிய தந்தைக்குத் தெரிவித்து அவர் இடுங் கட்டளைப் பிரகாரம் நடத்திவந்தார். ஒருநாள் திரிதராஷ்டிர மகாராஜன் தருமராசனை அழைத்து இறந்துபோன துரியோதனாதியர் பேரால் அக்கிரஹாரம் சத்திரம் கோவில் குளம் நந்தவனம் முதலிய தர்மங்களை ஏற்படுத்தச்சொல்லி தானே அதற்கு நித்தியவிசாரணை செய்துகொண்டு அவர்களுடைய வருஷாந்தரத் திதிகளில் சோடசமகாதானங்கள் புரிந்துவந்தார். தருமராசன் பெரிய தந்தையின் வார்த்தைக்கு எதிரில்லாமல் அவர் மனம்போனவாறெல்லாம் திரவியலோபமின்றி நடத்தி வந்ததுந்தவிர, பீஷ்மர் துரோணர் கர்ணன் முதலியோருடைய திதிகளை தானே விரதமிருந்து சிலநாள் ஒருவேளை அன்னம் உண்டு சிலநாள் முழுதும் உபவாசமிருந்தும் விசுவாசமாய் நடத்தியும் வந்தார்.

இவைகளைப்பார்த்துவந்த பீமசேனன் தன்தமயன் தருமராஜனைநோக்கி துரியோனுதியருக்கும் நமக்கும் நடந்த வைஷம்மியங்களும் பண்ணின சபதங்களும் முடிந்தகதியும் எல்லாம் ஒரு பக்கம் இருக்க, அந்த துஷ்டனைப் பெற்ற இந்தக் கெட்டவன் ஏற்பட்டு, நம்மைத் தலையெடுக்க வொட்டாமல் தலையைத்தடவி மூளையையுறிஞ்சுபவர்போல் சந்தோஷமாய் உம்மை மேன்மைப்படுத்துகின்ருன். தேவரீர் அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் ஒன்ருய் இருக்கிறீர் அண்ணுவே! நான் வயிறெரிந்து முன்பேசினுல் சிசுஹத்தி, இடையில் பேசினுல் பிராமணஹத்தி வருமென்று இப்படியாக கஷ்டப்படுகிறேன். என் சத்தம் கேட்குந்தோறும் பெரியவரும் அவர் பெண்சாதியும் நூறுபேரையும் முடித்தவனென்கிற ஞாபகத்தினுல் பெருமூச்செறிந்து என்னை ஒரேபிடியாய் பிடித்துக்கடித்து தின்றுவிட வேண்டுமென்று எண்ணியிருக்கிருர்கள். நான் அவர்கள் வாய்க்கு அடங்குகிறவனுக இல்லை, அதினுல் இதுவரையிலும் பிழைத்திருக்கிறேனென்ருன். அப்பா பீமசேனு! இப்போது சொன்னதுபோல் இனிச்சொல்லாதே? அவர்கள் மிகவும் கசிந்துபோயிருக்கிருர்கள். அந்த விசனங்களை நாம் தானே ஆற்றவேண்டுமென்பதாக, தான் எப்படி நடந்து வருகிருரோ அதுபோல் அவர்களையும் நடக்கும்படி கட்டளை பண்ணிவைத்தார். இதினுல் பீமசேனனுக்குக் கோபம்பிறந்து திரிதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் கேட்கத்தக்கதாக, இவ்வுலகத்தில் ராஜாதிராஜர்களைகெட்டழியும்படிசெய்தது என்கதாயுதமல்லவா, துரியோதனுதியரை மாளவைத்தது இந்தக் கெதையல்லவா, இதைவிட எனக்கு வேறுதுணையில்லையென்று கதையைச்சுழட்டி ஆகாயத்திலெறிந்து மறுபடியுங் கையிற்பிடித்துக்கொண்டு நகுல சகாதேவர்களைப்பார்த்து தம்பிமாரே! இப்பவுந்தானென்ன எனக்கெதிரி ஒருவருமில்லை. உண்டென்று வந்தால் சண்டனுலகத்திற்கு அனுப்பிவிடுவேனென்று இரைந்தான். இந்த வசனங்கேட்ட பெரிய தந்தையுந் தாயும், இவன் என்றைக்கும் முரடன், இவன் முன்பின் எண்ணிப்பேசான். இவனுல் நமக்கு ஆகவேண்டியதென்ன, எவற்றிற்கும் தருமராஜன் இருக்கிருன் என்று மௌனமாயிருந்து, ஒரு நாள் தருமராஜனை அழைத்து, உன் தம்பிமார் இறந்துபோய் பதினைந்து வருஷமாயிற்று, இதுவரையிலும் எங்கள் இஷ்டம்போல் நீ நடத்தி வந்தாய், எங்கள் பிள்ளைகள் உயிருடனிருந்தாலும் நாங்கள் இவ்வளவு சவுக்கியம்பெற மாட்டோம். இன்றைக்கு நான் கொலுக்கூடம்பார்க்க வருகிறேன் என்ருர். உடனே விதுரர் முதலிய மந்திரிமார் யாவரையும் சபையில் சித்தப்படுத்தி வைத்துக்கொண்டு தருமராஜன் காத்திருந்தார். அதுபோல் பெரியராஜனும் சபைக்கு வந்து சேர்ந்தார்.

திரிதராட்டிரன் துறவேய்திய சருக்கம்.

கேளும் ஜநமேஜயமகாராஜனே! திரிதராஷ்டிரபூபதி சபைக்குவந்த பின்னர், தருமராஜனையழைத்து, புருஷாதீரனே! நான் உரைக்கும் வார்த்தைகளைக் கவனமாய்க்கேள். அரசர்கள் இம்மைப்பயனை அனுபவித்தது போது

மென்று திருப்திகொண்டு மறுமைப் பிரயோசனத்தைப் பெறவேண்டி மகா தவம் புரிந்து முக்தி பெற்றுர்கள். மண்ணுசை பெண்ணுசை வெறுக்காத அரசர்கள் பாசத்திற்கட்டுண்டு யமவாதைக்குட்பட்டும் மறுபடியுஞ் சென்ன மெடுக்கிறுர்கள். இறப்பும் பிறப்பும் இல்லாமல் செய்துகொள்வதற்கு,துறவு என்பதே திறவிகோல். எனது பிள்ளைகள் உங்களுடன் பகைத்து அவர்கள் போனவழிக்கெல்லாம் நானும் உடன்பட இதினுல் பெருந்துக்கத்துக் காளா னேன். இம்மட்டும் இந்த ஆசையைவெறுத்து பரத்தாசையை விரும்பாமல் போனுல் மகாபாபம் என்னைப் பீடிக்கும்; உன்னைப் பிள்ளையாகப் பெற்ற நான் கொடுநரகத்தில் ஆழ்வது குணமோ, நம்முட பிதிர்பிதாமகர் யாவரும் மோக்ஷமே முக்கியமென்று, சொற்கம்போய் நிலைபெற்றுர்கள். உன்னைவிட எனக்கு வேறு பிள்ளைகள் இல்லை, நான் நாட்டைவிட்டுக் காட்டிற்சென்று இறந்தாலும் உன்பெருமை அருமை நற்குணம் இவைகளை நான் மறக்கமாட் டேன். சுருதி குரு சுவானுபவம், என்கிற மூன்றில் முதல் இரண்டும் முன் னமே உணர்ந்தேன். அனுபவமென்பதை உன்னுல் அறிந்தேன். நான் துற வுக்கு ஏகிறேன், நீ சுகமாய் ராஜ்ஜியபாரம் செய் எனக்கு விடைதருவாய் என்றுர். இதைக்கேட்ட தருமராசன் மிகவும் ஆலோசித்து எங்களால் ஏதே னும் குறைவு நேரிட்டிருக்குமா, அல்லது இதரமானவர்களால் குறை நேர்ந் திருக்குமா. தேவரீருடைய மனம் இப்படி வெறுத்தது யாது, நாங்கள் சிறு வயதாயிருந்தகாலத்தில் எங்களை ஆதரணைசெய்து சகலத்தையும் அனுபவிக் கும்படி செய்த நீர், காட்டுக்குப்போகிறேனென்பது சரியோ, என்று சாஷ் டாங்கமாய் நமஸ்கரித்தார். பீமசேனன் முதலியவர்களும் வணங்கினுர்கள்.

வணங்கி நிற்கும் பிள்ளைகளை பெரியராஜன் எடுத்தணைத்து முத்தமிட்டு, உங்கள்பேரில் யாதொரு குறையுமில்லை மனஸ்த்தாபமும் இல்லை உறுதியாய் நம்பும், எல்லாப்பிறவியிலும் மானிடஜென்மம் அரிது, அதில் பத்தினி புத் திராளுடன் கூடிவாழ்வது துக்கம், அதை ஒழித்துத் தவம்புரிந்தால் அவர் களுக்கு சொர்க்கம் கிடைக்கும். அவாவறுத்தல் என்னுந் தருமத்தைநோக்கி காட்டுக்குப் போகிறேன் என்றுர். தருமராஜன் இரண்டுகரத்தையுஞ் சிரமேற் குவித்து தாரைதாரையாய்க் கண்ணீர்விட்டு, ராசாக்கள் மனம்வாக்குக் காய மொத்து அரசுபுரிந்தால் தவம்பண்ணுவதைப்பார்க்கிலும் மேலானபதத்தை யடைவார்கள்; அப்படிக்குச் செய்யாமல் துறவெய்து மேற்கதி பெறுகிற தென்று வழக்கமாய்ப் போயினபடியால், தேவரீரும் அப்படியே நினைத்தீர் அதை வேண்டாமென்று மறுக்க அடியேன் அருகன் அல்லேன். எனக்கு ஒருவரங்கொடும், அதாவது நான் உம்முடன் கூடவந்து பணிவிடைசெய்கி றேன்..அதினுல் எங்கள் தீராவினைகள் தீர்ந்துபோய்விடும் உம்மைவிட்டுப் பிரிந்திரேன் என்றுர். ஓ சேயனே! நீ சொல்லியது தாகதவார்த்தை, எல் லாம் அனுபவித்துக் கிழமாய்ப்போன நான் துறப்பது எளிது, பிறந்தநாள் முதல் இதுவரையில் நல்ல சௌக்கியம் அனுபவிக்காமல் இப்போது அரசு புரிந்து வருகின்றீர்கள். நீங்கள் வாழ்வைவெறுத்து, எனக்குமுன்னே காட் டுக்குப் போகிறேனென்கிறதை உடனேமறந்துவிடுங்கள். நீ என் ஆசையைக்

கெடுக்காதே என்றார். கூட விருந்த தம்பிமார் முதலானபேர் தடுத்துப்போக வேண்டாமென்று சொன்னத்தின்பேரில் பெரியராஜன் மூர்ச்சித்து, ஆயாசந் தெளிந்தபின்னர் காந்தாரியுடன் கலந்துபேசி தருமரை சமாதானப்படுத்தி வைக்க திட்டம் செய்தார்.

காந்தாரி அம்மன் தருமனைநோக்கி, உன் தந்தையானவர் நாட்டைவிட்டுக் காட்டுக்குப்போய் நிஷ்டைகூடி யிருப்பதற்கு எண்ணுகிறார். அவர் பெரியவயதுடையவர், அவர் எண்ணுகிறதுஞ்சரியே, நான் கூடப்போயிருந்து அவருக்கு உபசாரஞ் செய்கிறேன், நீங்கள் சுகமே ராச்சியபரிபாலனம் பண்ணுங்கள், தந்தைசொல் கடவாத மைந்தர்களே! தடைசொல்லாமல் விடைகொடுங்கள் என்றாள். நாளையதினம் யோசித்துச் சொல்லுகிறேன், நீர் போசனசாலைக்குப் போமென்று தருமராஜன் புகன்றும் திரிதராஷ்டிரன் அந்தச்சொல்லை யேற்காமல், நாளையென்பது நம்முடநாளோ அல்லது நமனுட நாளோஇன்றைக்கே செலவுதரவேண்டும் இல்லாவிடில் சாப்பிடேனென்றார். அந்த வேளையில் வேதவியாசர் எழுந்தருளி திரிதராஷ்டிரன் மொழியைக்கேட்டு, தவம்பண்ணப் போகிறவர்களைத் தடுக்கப்படாது, அவர்களுக்குச்செலவுகொடுத்தனுப்பி விடவேண்டுமென்றார். தருமராஜன் சரிதானென்று ஒப்புக்கொண்டவுடன், வியாசர் அவர்களைவிட்டு நீங்கினார். திரிதராஷ்டிரன் சந்தோஷத்துடன் அரண்மனைக்குப்போய், மறுநாட் காலையில் எழுந்து நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு, சபைக்குவந்து, தருமராசனை சமீபத்தில் அழைத்து ராச்சியபரிபாலனஞ் செய்யும் ராசதந்திர விஷயங்களைச் சிறிது கூறினார். அவையாவன நீ ஆண்டுவரும் நாடுகளில் தருமம் தாழாமலும், உன்னை உத்தமன் என்றுசொல்லவும் நற்கருமங்கள் பிராமண விசுவாசம் பெரியவர்கள்நேசம் மன்னுயிரைத் தன்னுயிர்போற்கருதல் என்னும் பலவாக்கியங்களையும் உபதேசித்தார். தருமராசன் சரீரம்புளகித்து தகப்பனாரை வணங்கி தேவரீர் இயம்பியவண்ணம் தெரிந்துநடக்கிறேன் என்று அவர் திருவடியைத்தொழுது விசனப்பட்டுக்கொண்டார். அவரை முத்தமிட்டு மகனே! எனக்கும் உன்னைவிட்டுப்பிரிய மனம் வரவில்லை, என்னசெயலாம் மேலானபதவியை விரும்பினால் எனக்கும் உனக்குந்துணையாகும். இப்பிறப்பில் ஊழ் என்பதும் பூர்வக்கியானம் என்பதும் இதுதான் என்று தன் இருகர முங்கூப்பி சபையாரை உத்தரவு கேட்டார். எல்லோரும் பிரிவாற்றாமையினால் கோவென்றழுதவர்களைக் கையமர்த்தி, தருமராஜன் உங்களைப் பாதுகாப்பான் என்று சமாதானஞ் சொல்லி அரண்மனைக்குப்போய் விதுரரிடத்திலே ஒருசேதிசொல்லி அனுப்பி வைத்தார்.

அஃதாவது: யுத்தத்தில் இறந்தபேர்களுக் கெல்லாம் நாளைக் கார்த்திகை பர்வம் வருகிறவரையில் சிரார்த்தங்களும் அன்னதானங்களும் நடத்தும்படி தருமருக்குச்சொல்லச் சொன்னதற்கு தருமரும் அர்ச்சுனனும் அதற்குடம்பட்டார்கள், பீமன் வெறுத்துப்பேசினான், விதுரர் திருதராஷ்டிரனிடம் போய் உம்முட விருப்பப்படி நடக்குமென்றுசொல்லித் தன் அரண்மனைக்குப் போய்விட்டார், காட்டுக்குப்போக ஆயத்தப்பட்ட திரிதராஷ்டிரன்

காந்தாரி இருவரும், கார்த்திகைமாதப்பிறப்பு நாள்முதல் தானதருமங்கள் வழங்கி பருவங் கழித்த மறுநாள் உதயத்தில் ஸ்நானஞ் செய்து ஆதுலர்க்கியந்து சகல ஆடையாபரணங்களும் வர்ச்சித்து மரவுரியணிந்து வீதியில் வரும்போது குந்திதேவியும் விதுரமகாராஜனும் வந்து கலந்தார்கள்.

நகர் நீங்கிய சருக்கம்.

துறவறம்பூண்டு வெளிப்பட்ட குந்திதேவியார் தன் மைந்தரைநோக்கி உங்கள் தந்தை இறந்தபோது மாத்திராதேவி மடிந்துபோனதுபோல், நானுங்கூட மாளவேண்டியது. அப்போது பாலியராயிருந்த உங்களை சம்ரக்ஷிக்கவேண்டி என் உடலைச்சுமந்தேன். அப்படி யிருக்குங்காலத்தில் துரியோதனுதியருக்கும் உங்களுக்கும் பகைநேரிட்டது, அந்தக் கலகம் எப்படி முடியுமோவென்று இருந்தேன். அந்தவிரதம் பதினெட்டாம் நாள் போரோடே தீர்ந்தது என் முதற்பிள்ளை கர்னமகாராஜனையும் காப்பாற்ருத பெரும்பாவியானேன். நான் இன்னம் சிலநாள் இங்கே யிருப்பதில் என்னபலன், உங்கள் பெரியதகப்பனுடன் தவத்துக்குப்போய் விரதம் அனுஷ்டிப்பது மேன்மையென்றெண்ணுகிறேன், என்சொல்லை மறுக்காதீர்கள் என்ருள். தருமராஜன் முதலிய பிள்ளைகள் தாயைப் பிரிவதற்கு மனம்வராமல் வருந்தி பல விதங்களில் உபசாரஞ்சொல்லிக் கேட்டுக்கொண்டும், அவள் சம்மதியாமல் இந்தக்கர்மபூமியில் இருந்து காணுதுங்கண்டேன், கேளாதுங்கேட்டேன், உன் தந்தையை நீக்கி வெகுநாளாயிற்று, நானும்போய் அவருடன்சேர்ந்து உங்கள் நன்மைகளையெல்லாம் எடுத்துப் பேசுகிறேன். காட்டில் தவம்பண்ணும் ரிஷிகளுக்குத் தொண்டுசெய்து இந்தப்பொய்யான உடலை ஒழித்துப்போடுகிறேன். நாட்டிலும் அரண்மனையிலும் இருந்து என் உயிர் பிரியலாகாது என்று பிடிவாதமாய் உறுத்திப்பேசினுள். துரோபதாதேவி முதலிய மருமக்கள்மார் அழுது தடுத்துப்பார்த்தும் கேளாமல் தன் ராஜவஸ்திரங்களை நீக்கி மரவுரி உடுத்திக்கொண்டு தர்மராஜனைப்பார்த்து எல்லாந்தெரிந்த நீயும் இவர்களுடன் கலங்கப்போமா, சகாதேவனை நான் மிகவும் அன்பாகவளர்த்தேன் அவனை பத்திரமாய்க் காப்பாற்று. என் மருமக்கள் யாவரும் மிகவும் உத்தமிகள், அவர்களை கண்கலக்கப்படுத்தாமல் பார்த்துக்கொள். கர்ணன் மகன் அச்சுவசேனனைக் காப்பாற்றிக்கொள், ஸ்ரீகிருஷ்ண தேவருடைய சொல்லின்படி நட, வேதவியாசரை மறவாமல் பூசியுங்கள், உங்கள் ஏவலாளரையும் எளியோரையும் பகைக்காதீர்கள், சத்தியவிரதம் தப்பாத உத்தமராயிருங்கள் என்று ஆசீர்வதித்து காந்தாரியம்மனுடன் கலந்துகொண்டாள். இவைகளை திரிதராஷ்டிரன் அறிந்து சந்தோஷப்பட்டு மந்திரிமுதலான சனங்களுடன் அஸ்தினபுரத்து வீதியில் வரும்போது, துரியோதனன் முதலியோர் அரண்மனையிலிருந்த ஸ்திரீஜனங்கள் மனம்வெறுத்துக் காட்டுக்கு வெளிப்பட்டார்கள், அவர்களையும் அழைத்துக்கொண்டு நடக்கும்போது துறவுவேடம்தரித்த சஞ்சயரும் விதுரரும் வந்து கூடினர்கள். தருமராஜன்

இவர்களைப் பார்த்தமாத்திரம் வியாகுலித்து தன் ஆடை ஆபரணங்களைக் கழட்டித் தம்பிமாரிடங் கொடுத்தார். இதை அறிந்த சஞ்சயரும் விதுரரும் முரசக்கொடி முதல்வனைநோக்கி நீ காட்டுக்குப்போய் தந்தையருக்குப் பணிவிடை செய்ய வேண்டுமென்று நினைத்தாயல்லவா, உனக்குப்பதிலாய் நாங்கள் போயிருந்து பணிவிடைசெய்து தினந்தோறும் உனக்குச் செய்தி அனுப்புகிறோமென்று தருமருக்குத் திருப்திசெய்து திருதராஷ்டிரன் பக்கவில் அணுகினின்றார்கள். விதுரரும் சஞ்சயரும் முன்பின்யோசியாமல் வெளிப்பட்டதைக்குறித்து திரிதராஷ்டிரன் யோசித்துக்கொண்டிருக்கையில்,கிருபாசாரியரும் யுயுச்சசனும் வந்துகண்டு நாங்களும் துறவுபூண்டு வருகிறோமென்றார்கள். அவர்களைப் பரிவுடன் ஆதரித்து தருமராஜனிடத்தில் இருந்து மனுநீதி தவறாமல் அரசுபுரியக் கடவீர்கள் என்று கையமர்த்தி, அப்பால் நடக்கும்போது அஸ்தினபுரத்து சனங்கள் பின்தொடர்ந்து திரிதராஸ்டிரனுடைய நன்மை தீமைகளை யெடுத்துப்பேசி வியாகுலித்துத் திரும்பினார்கள். தருமராஜன் தன் தாயாரைவிட்டுப் பிரிய விசனப்பட்டார். இதோ என்மருமகன் ஸ்ரீகிருஷ்ணன் இருக்கிறார், எல்லாம் அவருக்குத்தெரியும், நீங்கள் கலங்காதிர்கள். இந்தப் பரிச்சித்துவினால் நமது குலம் தழைக்கும், இவன் பிரபலனாயிருப்பான். நீங்கள் தீர்க்காயுளா யிருங்கள் என்று விடைபெற்றுக் கொண்டு, உங்கள்வீடு இவ்வுலகத்தில் இனி எங்கள்வீடு அவ்வுலகத்தில், இதோ அங்கே போகிறோமென்று நடந்தார்கள். தருமர்முதல் வெகுசனங்களும் அவர்களைத்தொழுது திரும்பி நரகம் வந்துற்றனர்.

வனம்புகு சருக்கம்.

கேளும் ஜநமேஜயமகாராஜனே! துறவறம்பூண்ட கண்ணில்லாத திரிதராஷ்டிரனைக் காந்தாரியம்மன் கையைப் பிடித்துக்கொண்டுபோக,குந்திதேவி கல்லு முள்ளுமேடு பள்ளம்பார்த்துச் சொல்லி உபசரித்துவர, மற்றப்பெண்டுகள் சூழ்ந்து நடக்கவும், விதுரரும் சஞ்சயரும் எல்லோர்க்கும் முன்னே வழிகாட்டிச் செல்லவுமாக வெகுதூரம் காடு மலைதாண்டி குருநாட்டு எல்லையைக்கடந்து, அன்றிராத்திரி அவ்விடத்தில் தர்ப்பையை விரித்து அதின் மீது சயனித்திருந்தார்கள். உதயத்திலெழுந்து ஸ்நானஞ்செய்து நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு சிவமந்தபஞ்சகத்தில் இரண்டு நாள்வசித்து மூன்றும் நாள் மலைகளைத்தாண்டி வெகுதூரஞ் சென்று, தபசு பண்ணிக் கொண்டிருக்கும் கேகயராசனைக் கண்டு சினேகமாகி, அவ்விடத்தில் தாங்களும் வசிக்கவிரும்பி பர்னசாலைகள் விதுரர் மூலமாக ஏற்படுத்திக்கொண்டு தவத்தில் இருந்தார்கள். விதுரருஞ் சஞ்சயரும் நாள்தோறும் கந்தமூலபதாதிகளை சவதரித்துக்கொடுத்து வந்தார்கள். திரிதராஷ்டிராஜன் ஒரு நாள் விட்டொருநாள் புசிக்கவும் அப்பால் வாரத்துக்கொரு தடவையும் அப்பால் மாதமொருதரம் அருந்தவும் கந்தமூலங்களை விட்டு சருகுபொசிக்கவும் இப்படி கடுந்தவஞ்செய்துவந்தார். அப்போது அங்கே முனிக்குழாங்களு

டன் நாரதமுனிவர் வந்து இவர்களை ஆசீர்வதித்து தவம்பண்ணும் கேகயராசனுகிய சதயூபன் என்பவர் மிகுந்தபக்குவப்பட்டவர், இவ்விடத்திலிருந்து தவஞ்செய்து சுவர்க்கம் பெற்றவர்கள் வெகுபேருண்டு,இதுநல்ல சித்தியான இடம், இந்த தீர்த்தத்துக்குச் சமானம் எதுவுமில்லை. உங்களுக்கு வேதவியாசருடைய கிருபை இருப்பதால் நீங்கள் முக்தியடையலாமென்று ஆசிர்வதித்தருளினர்.

நாரதபகவானைநோக்கி, ஆண்டவனே என்னைச் சேர்ந்தபேருக்கு என்னகெதி கிடைக்கும் என்று திரிதராஷ்டிரன் கேட்டதற்கு, மறுமையில் நீ குபேரன்பட்டணத்தில் யக்ஷனுயிருப்பாய், உமது பெண்சாதி உம்மைவிட்டகலாமல் இருப்பாள், குந்திதேவி இந்திரலோகத்தில் இருக்கிற பாண்டுவுடன் கூடியிருப்பாள். விதுரனும் தருமராஜனும் யமதர்மராஜனுடன் கலந்து போவார்கள். சஞ்சயன் நாகலோகஞ் சேர்வான். அவரவர் பத்தினிமார்கள் தவமிருந்து அவரவர் புருஷரையடைவர். இந்தஸ்தூலதேகங்களை விட்டு சூக்ஷ்மதேகத்திற் பிரவேசித்தால் மோக்ஷங் கிடைக்குமென்று இயம்பினர். தபசுசெய்யும்பேர்கள் சரீரத்தை யொழித்து மோக்ஷம் அடையுமார்க்கமெப்படியென்று திரிதராஷ்டிரன்நாரதமுனிவரைக் கேட்டதற்கு, ஒருநாள் தேவேந்திரன் சபைக்கு நான்போயிருந்தேன். அங்கேவந்த சிலரிஷிகள் திரிதராஷ்டிரராஜன் பெண்டு பிள்ளைகளுடன் தபம்பண்ணுகிறன் என்றியம்பினர்கள். தவம்பண்ணும் திரிதராஷ்டிரன் முதலியோர் தவத்தின்வல்லமையால் இன்னின்னர் இன்னின்ன பதவியடைவார்கள் என்று தேவராஜன் உரைத்தார். அதை நான் கேட்டுவந்தேன், அதேபிரகாரம் உங்களுக்குப் பதவிகிடைக்கு மென்றர்.

தருமராஜன் தவத்துக்குப்போன தாய் தந்தையரைப் பார்க்க விரும்பி இராஜ்ஜிய பரிபாலனத்தை நடத்த கிருபாசாரியரையும் உயுச்சசனையும் ஏற்படுத்திவிட்டு அங்கேவந்துசேர்ந்தார்! அங்கிருந்த ரிஷிகள் அறன் குமாரனே உங்கள் தந்தை யமுனைக்கரைபோயிருக்கிறர், இதோ வருவாரென்றர்கள். தருமர் அவர்கள் வரும்வழியை நோக்கிப் போகும்போது, ஸ்நானமாடிவருகிற திரிதராஷ்டிரன் முதலியவர்களைக் கண்டு பணிந்தார். அவர்கள் இவரை அழைத்துக்கொண்டு தவச்சூழலுக்கு வந்தார்கள். விதுரமகாராஜனுகிய எங்கள் சிற்றப்பன் எங்கேயென்றதற்கு, எங்களுடன் ஒரு வருஷம் இருந்து அப்பால் அவர் எங்கேயோ தவத்துக்குப்போய்விட்டார் என்றர். தருமராஜன் விசனப்பட்டதைப்பற்றி அந்த விதுரன் இந்தவெளியில் தான் இருப்பான், போய்ப்பாருங்கள் என்று திரிதராஷ்டிரன் சொல்லிக்கொண்டிருக்கும்போதே விதுரர் வந்துற்றனர். தருமன் அவரைப்பணிந்து உம்முடைய திருவடியே சதமென்று போற்றி நிற்கையில், அவர் திகம்பரமாக ஓடினர். தருமராஜன்மாத்திரம் ஓண்டியாய்ப் பின்துடர்ந்துவருவதை விதுரர்பார்த்து, ஒரு மரத்தடியில் இருகண்களையும் மூடிக்கொண்டு நின்றர். உன்திருவடியே சதமென்று தருமர் மறுபடியுந்தொழுதார். அவர் தன்கண்களை திறந்து தன் ஆவியைத் தருமர் தேகத்தில் ஐக்கியமாகும்படி அனுக்கிரகம் பண்ணினர்.

உடனே தருமராஜனுக்கு பிரம்மதேஜசும் பேரறிவும் பிறந்தது. விதுரர் சமாதிநிலையில் அசைவற்று இருந்துவிட்டார். தருமராஜர் அவர்தேகத்தை தகனம்பண்ண நினைத்தபோது, ஓ தருமநந்தனா! இந்த விதுரன் தேகத்தை தகிப்பதற்கு அக்கினிதேவனால் முடியாது, நீ இந்த நினைப்புக்கொள்ளாதே யென்று ஆகாயத்திலிருந்து ஒரு சத்தம் பிறந்தது. தருமர் பயந்து அவ்விடமிருந்து திரும்பி திரிதராஷ்டிரனிடம் வந்து நடந்த அற்புதத்தைத் தெரிவித்தார். திரிதராஷ்டிரன் விதுரரை மிகவும் சிலாகித்து, தருமநந்தனா! நீ சத்தியவானாகையால் உத்தமனாகிய விதுரனால் சுளுவில் சித்திபெற்றனை, எங்கிருந்தாலும் எய்தவேண்டிய இன்பம் எப்படியுங் கிடைக்குமென்று சொல்லி யாவரும் அங்கே தங்கியிருந்தார்கள். அப்போது சதயூபர்வந்து தருமராஜனை அங்கே சிலநாள் இருக்கும்படி உபசரித்தார். அவ்விடத்தில் ஒருமாதம் தங்கினார்கள். முப்பத்தோராம் நாள் உதயத்தில் கங்கையில் போய் ஸ்நானமாடி தாய் தந்தையருடன் திரும்பி ஆசிரமத்துக்குவந்து சுகித்திருந்தார்கள் என்று வைசம்பாயனமஹாமுனி சொல்லினர்.

புத்திரசோபம் தீர்த்த சருக்கம்.

கேளும் ஜநமேஜயமகாராஜனே! காட்டில் தவமிருக்கும் திரிதராஷ்டிரனிடத்துக்கு ஸ்ரீவேதவியாசர் வந்து, திரிதராஷ்டிரனை நோக்கி உன் விருத்தாப்பியதிசையில் பூர்வ பாவங்களைப் போக்கடித்துக்கொள்ள ஆசைப்பட்டுத் தவம்பண்ணவந்தாயோ, இனி பிறவிக்கிடமில்லாத காலம் நேரிடப்போகிறபடியால் நற்காரியத்தை உன்மனம் மேற்கொண்டது மிகவும் பாக்கியந்தான். நீ ஜென்மாந்தரத்தில் சுசிர்தவஞ்செய்தவன். உன்னுடைய பிள்ளைகள் பண்ணினதெல்லாம் புண்ணியவிரோதம், அதற்குச்சாட்சி குருக்ஷேத்திரந்தான். இந்தப்பாண்டவர்கள் உன் வயோதிகதிசையில் உதவினார்கள். இப்பேர்ப்பட்ட நல்லகாலத்தில் உன்னுடைய துஷ்ட பிள்ளைகளை நினைக்கவேண்டாம். இந்த பாண்டவர்களே உன்பிள்ளைகள் என்று எண்ணியிரு, உன்பிள்ளைகளை மறந்தாயா இல்லையா, சொல்லப்பா, நீமறவாதிருந்தால் காந்தாரியும் மறக்கமாட்டாள். இதனால் தபசுக்கு விக்கினமுண்டாகும், இனிப் புத்திரசோபத்தை விட்டுவிடு என்றார். சுவாமி எனக்கென்ன கெதிவருமோ தெரியவில்லை, இருக்கிறவர்கள் என்பிள்ளைகள் என்றும் இறந்தவர்கள் என் சத்துருவின் பிள்ளைகள் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிறேன், சத்தியமாய்ச்சொல்லுகிறேன். இந்த தருமராஜன் ஆரோக்கிய திடகாத்திர தேகியா யிருக்கவேணுமென்று கோருகிறேன். உன்பாதமே தஞ்சமென்று நம்பியிருக்கிறேன். முப்பத்து முக்கோடி தேவராலும் மூவராலும் முடியாதகாரியம் தேவரீராலே முடியுமென்றும், நல்வினை தீவினைக் கிடமாகிய ஜெனன மரணங்கள் வாராமற் காக்குங்கடன் தேவரீர் அநுக்கிரகமென்றும் தமது திருவடியை என்மனத்தில் குடிவைத்திருக்கிறேன். பண்ணியபயிரில் புண்ணியந் தெரியுமென்கிறபழமொழிக்கிணங்க எனக்குப்பிறந்தநூறுபிள்ளைகளும் பாபிகளாய்ப்

பிரிந்து போனுர்கள். இதினாலே புண்ணியவான்கள் யார் பாபிகள் யார் அவர்களுக்கு சம்பவிக்கும் கதியாது, பாபிகளுடன் சம்பந்தப் பட்டவர்கள் என்னபலன் பெறுவார்கள் என்றும் கேட்ட திரிதராஷ்டிரன் கருத்தை உணர்ந்து காந்தாரிதேவி வியாசரிடம் ஒருவசனம் சொல்லத் துடங்கினுள். ஐயா மகாரிஷியே! மன்னவர் பெற்ற மாதர்கள் என் புத்திரரை விவாகம் பண்ணி அவர்கள் மடியவும் இவர்கள் விதவைகளாகித் துக்கப்படவும் ஆயிற்றே, சுமங்கிலிகளாகிய துரோபதை முதலியோர் தங்கள்தங்கள் இனத்தாரையும் பிள்ளைகளையும் இழந்து அவர்களை எப்போது காணப்போமோவென்று துக்கப்படுகிறுர்கள். அந்தரஞ் சொர்க்கம் பாதாளங்களை ஒன்றுய்ச் சேர்க்கவும் அவைகளை நாங்கள் கண்கொண்டு பார்க்கவும் செய்கின்ற சக்தி தங்களுக்கு உண்டாயிருக்கும்போது, இந்தபாரதப்போரில் இறந்தவர்களை அழைப்பித்துக் காண்பிக்கிறது தங்களுக்கு அருமையான வேலையல்ல, தேவரீர் அவ்வளவு தயவு புரிந்தால் யாவருக்கும் அற்புதமா யிருக்கும், நாங்களும் துயரம் நீங்கிப் பக்குவப்படுவோம் என்று அவருடைய இரண்டு பாதங்களையும் கெட்டியாய்ப் பிடித்துக் கதறியழுதாள். காந்தாரி பேரில் கருணைநாட்டி, மருமகளே! உன் இஷ்டப்படி நடக்கும், குந்திதேவீ! உன் குறை என்ன சொல் என்றுர். சுவாமீ! தூர்வாசர் அனுக்கிரகத்தால் நான் பெற்ற கர்ணனைக் காணச் செய்யும்மென்று வேண்டினுள். அம்மொழிக்குக் கிருபை கூர்ந்து குருக்ஷேத்திரத்தில் இறந்தவர்கள் தேவாமிசங்களில் கலந்துபோனுர்கள், போகட்டும் உங்களுக்கு இந்த விசனந்தீரும்படி காண்பிக்கிறேன் வாருங்கள் என்று கங்கா நதிக்கரைக்கு அழைத்துப்போய், தமது தபோ மகிமையால் அவர்களை அங்கே தங்கியிருக்கச் செய்தனர். மறுநாள் உதயத்தில் யாவரும் எழுந்து நித்திய விதிகளை முடித்துக்கொண்டு ஒரு தோப்பில் வந்திறங்கினுர்கள். இச்சங்கதி எங்கே பார்த்தாலும் பிரசித்தமாகி சுற்றுப்பக்கத்திலிருந்த ஜனங்களும் ரிஷிகள் முனிவர்கள் முதலிய யாவரும் இந்த அதிசயத்தைப் பார்க்க அவ்விடம் வந்து கூடினுர்கள்.

இத்தியாதியர் நடுவில் நட்சத்திரம் போல் பிரகாசிக்கின்ற திரிதராஷ்டிரனை நோக்கி நீங்கள் எல்லோரும் இங்கே வாருங்களென்று கூப்பிட்டு திரிதராஷ்டிரனுக்குப் பார்வையை அளித்து தன் வலது கரத்தை நீட்டி ஆகாயத்தை நோக்கிப் பாருங்கள் என்றுர். உடனே அங்கே பேரிகை முதலிய கோஷ்டங்களுடன் ஒரு பெரிய வெள்ளமாய் ஜனக்கும்புகள் நிறைந்து நின்றன. அவர்கள் நடுவில் தாளக்கொடி படைத்த பீஷ்மாசாரியரும் வேதக்கொடியோராகிய துரோணுசாரியரும் நாகக்கொடி பிடித்த துரியோதன ராஜனும் அவனுடைய தொண்ணூற் றென்பது தம்பிமார்களும் கர்ணமகாராஜனும் அபிமந்யுராஜன் அரவான் கடோற்கசன் இளம் பஞ்சபாண்டவர் அஞ்சனவர்மன் சகுனிமாமன் அவன் பிள்ளைகளும் சிகண்டி திருஷ்டத்தியும்நன் உத்தமோசன் உதாரமனு பாஞ்சாலன் விராடன் அவன் குமாரர் உத்தரன் சுவேதன் சதாநிகனும் சல்லியன் சைந்தவன் சோமதத்தன் பாண்டியன் முதலியவர்களும் அவரவர் படைகளுடன் வந்து நெருங்கி, சண்

டைக்குவா சண்டைக்குவா என்று சத்தமிட்டார்கள். அவர்களையெல்லாம் வியாசர் உறுக்கி கையமர்த்தினர். இதைப் பார்த்த ரிஷிகள் யாவரும் இந்த வேதவியாசரானவர் மெய்யாகவே தெய்வீக முடையவர் முன்னாலே மார்க்கண்டருக்கு என்னும் பதினாறு வயது கொடுத்த ஈசன் பிரதாபத்தைக் கேட்டிருக்கிறோம், இப்போது பதினெட்டு நாள் யுத்தத்தில் மடிந்த பாரத வீரர்களை இவரால் கண்ணுற் காணப்பெற்றோம். முற்காலத்தில் அகஸ்தியர் சமுத்திரத்தைப் பானம் பண்ணினரென்றும் பகீரதன் தவம்பண்ணிக்கொண்டுவந்த கங்கையை சந்நுமகாமுனி பருகினரென்றும் பெருமையாகப் பேசிக்கொள்ளுவார்கள். அதிலும் இது மிகவும் அருமையானதென்று ஆனந்தப்பட்டு, இவர்கள் யாவரையும் ஒன்றுபடுத்தி ராச்சியத்தை தாயாதிகளுக்கு பங்கிட்டுக் கொடுப்பார்போற் காண்கிறதென்று பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ரதத்தின்மீதுதோன்றிய வீஷ்மரும் துரோணரும் பூமியில் இறங்கிவந்து வியாசரை சேவித்து ஆசனத்தில் அமர்ந்தார்கள். பெரியராஜன் காந்தாரி குந்திதேவி முதலியோர் அவர்களை வந்தித்தனர். துரியோதனுதியர் தாய் தந்தைகளைப் பணிந்து பாண்டவர்களுடன் சினேகமாகப் பேசினார்கள். கர்ணராஜனானவன் வியாசர் திரிதராஷ்டிரர் காந்தாரி குந்திதேவிமாரைப் பணிந்து சகோதரர்களை அணைத்துப் பரிவுடன் வார்த்தையாடினான். அபிமந்யுவை அர்ச்சுனன் அழைத்து முத்தமிட்டு நானும் கூடவருகிறேன், அல்லது என் ஆயுளில் பாதியைக் கொடுக்கிறேன் என்று பிள்ளையைக் கட்டிக்கொண்டு பிரலாபித்தான். புத்திரன் கூறிய ஞானவாசகங்களால் உடனே பாசத்தை வெறுத்தான்.

கேளும் ஜநமேஜய மகாராஜனே! இறந்தவர்கள் யாவரும் தேவாமிசங்களில் கலந்தபடியால் மானிடசரீரந் தாங்கிக் காண்பித்தாலும் பந்தபாசம் அவர்களுக் குண்டாயிருந்ததில்லை. நல்லோரைக் கண்ட தீயோருக்கும் நன்மைகிடைக்குமென்னும் பழமொழிபோல் அவர்களைக் கண்ட இந்த மானிடர் அசாபாசமில்லாமல் உபாயமாயிருந்தார்கள். வியாசபகவான் உத்தாரப்படி அநேகம் பாசறைகளை அமைத்து அதில் அவர்களைத் தங்கியிருக்கக் கட்டளை பண்ணினர். பாசறையில் தங்கினோரும் மானிடரும் தாம்பூலம் சந்தனம் புஷ்பங்களைத் தரித்து வேடிக்கை விநோதமாய் அன்று பகலும் ராத்திரியும் சல்லாபித் திருந்தனர். மறுநாட்காலையில் ஸ்நானஞ் செய்து வியாசரை வணங்கி விடைபெற்று அன்னோர் வானுலகில் மறைந்தார்கள். துரியோதனுதியருடைய ஸ்திரீஜனங்கள் தங்கள் புருஷருடன் போகிறதாகவும் பூமியில் இருக்கிறதில்லையென்றும் வியாசர் பாதத்தில் விழுந்து அழுதவர்களை கெங்கையில் நீராடச்செய்து சரீரத்தை விட்டுத் தங்கள் தங்கள் புருஷர்சென்ற கதியில் சேரும்படி கிருபை புரிந்தார். குந்திதேவியார் தானும் பரகதியடைய வேண்டுமென்று வேண்ட, அதற்கு வாதராயணர் சற்றே பொறுத்திரு என்றருளினர். இங்ஙனஞ் சில்நாள் கழிந்த பின்னர் பாண்டவர்களை அழைத்து, நீங்கள் ஊருக்குப் போங்கள். உங்கள் தாய் தந்தையருக்கு இன்னஞ் சிலநாள் இருக்கிறது, அவ்வினை தீர்ந்த பிற்பாடு

மேற்கதிபுகுவர், அப்போது நீங்கள் வந்து சேரலாமென்று அனுக்கிரகம் பண்ணி தமதிடமெழுந்தருளினர். இப்பால் திரிதராஷ்டிரனும் தருமரும் ராஜஸ்திரீகளுடன் கங்கைக் கரையைவிட்டு முன் இருந்த தபோவனத்தில் வந்து சேர்ந்தார்கள். திரிதராஷ்டிரன் தருமரை நோக்கி நீங்கள் வந்து ஒரு மாதத்துக்கு மேலாயிற்று, ஊருக்குப் போங்களென்று ஆக்கியாபித்தார். தம்பிமார்களை ஊருக்கனுப்பிவிட்டு தான் மாத்திரம் தகப்பனுடன் கூட இருந்து பணிவிடை செய்கிறதாகப் பிடிவாதமாய்ப் பேசினர். பெரிய தகப்பன் அவரை யெடுத்தணைத்து உங்களால் நாங்கள் இவ்வளவு சிலாக்கியம் பெற்றோம். நீ ராச்சியபாரத்தில் போயிரு என்றார். காந்தாரி தேவியும் அதுபோல் புத்தி சொன்னாள், குந்தி தேவியார் புத்திரனை நோக்கி உங்கள் நிமித்தம் கிருஷ்ணத்துவைபாயனர் இங்கே வந்து எங்கள் கோரிக்கையை ஈடேறச் செய்தார். உங்களுக்கும் அவருடைய கடாட்சம் உண்டாகும், அவரால் எங்களுக்கும் மோக்ஷம் கிடைக்கும். நாட்டிலிருந்து அரசுபுரிவதும் காட்டில் தவம்புரிவதும் இரண்டும் ஒன்றுதான், இரண்டுக்கும் பலனுண்டு நீ நாட்டையாளப் போகிறது நலமென்று ஆக்கியாபித்தாள். குரவர் மூவரும் ஒரே மனதாய்ச் சொன்னதுபற்றி தருமர் மறுத்துப் பேசக் கூடாமல் அவர்களிடம் விடைபெற்று அஸ்தினபுரம் வந்து சேர்ந்தானென்று வைசம்பாயனர் திருவாய் மலர்ந்தருளினர்.

திரிதராஷ்டிரன் காந்தாரி குந்திதேவி முத்தி பெற்ற சருக்கம்.

பாண்டவர்கள் அஸ்தினபுரத்துக்கு வந்து இராச்சிய பரிபாலனம் பண்ணிவருங் காலத்தில், ஒருநாள் நாரத பகவான் வந்தார். அவரிடத்தில் காட்டில் தாங்கள் கண்ட அதிசயங்களைச் சொல்லி நமஸ்காரஞ் செய்தார்கள். நாரத பகவான் தருமரைப் பார்த்து நான் உங்கள் தாய் தந்தையர் தவம் பண்ணும் இடம் போய் அவர்கள் செய்தியை அறிந்து உங்களுக்குச் சொல்லிப் போக வந்தேன் என்றார். அச்சொல்லைக் கேட்டு சுவாமி எங்களைப் பெற்றோர் சுகமா, தவம் நிறைவேறி வருகிறதா, சஞ்சயருஞ் சுகமா என்று கேட்டதற்கு, கேளும் தருமநந்தனரே! நீங்கள் அவர்களைப் பார்த்து வந்த பின்பு, பிராமணர் வார்த்தையைக் கேட்டு முன்னிடத்தை நீங்கி மேட்டுப்பாங்காகிய ஒரு மூங்கிற் காட்டில் சிலநாள் தவம் பண்ணிக் கொண்டிருந்தார்கள், இப்படி யிருக்கையில் ஈசுவரனுடைய அனுக்கிரகத்தினால் காட்டுத் தீமூண்டு மூங்கிற்புதர் பற்றியெரிந்து எல்லோரும் அதில் மாண்டு போனார்கள் என்றார். தருமராஜன் முதலியோர் துக்கித்துஅழுது தூதர்களைஅனுப்பி இறந்தவர்களுடைய அஸ்திகளைச் சேகரிந்து தாங்களும் நேரே போயிருந்து செய்யவேண்டிய கர்மங்களைச் செய்து முடித்து அவர்கள் இறந்த இடத்தில் ஆலயங் கட்டிவைத்து உற்சவாதிகள் நடக்கும்படி செய்தார்கள், கேளும் ஜநமேஜய ராஜனேயென்று வைசம்பாயனர் சொல்லியருளினர்.

ஆசிரமவாசபர்வம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

ஸ்ரீ மகாபாரதம்.

பதினாறுவது

முசலபர்வம்.

கண்ணன் துதி.

விருத்தம்.

மிகுதியுஞ்சுலபமும் வெம்மைதண்மையும்
தகுதியினெதுமல ரதிகஞ்சார்ந்திடாப்
பகுதியோர்மிகுதியிற் பற்றிலார்பெருந்
தொகுதியுள்ளுவப்படுந் துணையெமக்கரோ.

பலராம நிரியாணச் சருக்கம்.

கேளும் ஜநமேஜய மகாராஜனே! தருமராஜனுக்குப் பட்டாபிஷேகமான பதினெட்டாம் வருஷம் ஆரம்பத்தில், திரிதராஷ்டிர மகாராஜன் இறந்துபோனது. இப்பால் முரசக்கொடி முதல்வன் மேலும் பதினெட்டுவருஷம் அரசாட்சி செய்துவந்தார். துவாரகையில் சகலத்திரளுடனேயும் ஸ்ரீகிருஷ்ணபகவான் வாசமாயிருக்கும் நாளில் இவரை தெரிசிக்கவேண்டி கௌசிகர் நாரதர் கண்ணுவர் முதலாகிய ரிஷிகளும், துவாரகைவீதியில் வரும்போது யாதவ குமாரர்களில் சாம்பன்என்பவனை கெர்ப்ப ஸ்திரீயைப்போல் பெண்வேஷம் போட்டு இந்தரிஷிகளுக் கெதிரில் கொண்டுவந்து நிறுத்தி, இந்தப்பெண் பப்பரவாகனன் பெண்சாதி, இவள் என்னபிள்ளை பெறுவாளென்று கேட்டார்கள். அந்தமகாரிஷிகள் இவர்களுடைய அகந்தையை உணர்ந்து இந்த கெர்ப்பம் அற்பமானதல்ல, எவராலும் வெல்லுதற்கு அரிதாகிய முசலம் ஒன்றுபிறக்கும், முசலம் என்கிற இந்த இருப்புலக்கையால் யாதவகுலம் முழுவதும் நாசமடைந்துபோம், இதில் ஸ்ரீகிருஷ்ணசுவாமியும், பலராமரும், ஸ்திரீஜனங்களும், தப்புவார்கள். பின்பு பலராமர் தாம்தானே சரீரத்தையொழித்து சமுத்திரத்திற் கலந்துபோவார். கிருஷ்ணமூர்த்தி காட்டிற்சென்று பொய்த்துயில் கொள்ளும்போது ஒருவேடன் பாணத்தை விடுவான், இதினால் தேகத்தைப் பரிகரித்து வைகுண்டம் சேர்வார் என்று சபித்து, கண்ணபிரானைக் கண்டு தெரிசியாமய் திரும்பினார்கள். இவைகளையெல்லாம் வாசுதேவர் கேட்டமாத்திரம் பிள்ளைகளை இகழ்ந்து பெரியவர்களிடத்தில் அபராதப்பட்டு சாபம் பெற்றீர்கள், இதென்ன அநியாய

மென்று வெறுப்படைந்து மனஞ்சலித்தார்; மறுநாள் சாம்பன் வயிறு வலிப் பெடுத்து ஒரு இருப்புலக்கையைப் பெற்றான். அந்த உலக்கையை வாசுதே வரிடத்தில் காண்பித்தார்கள், அதை அரத்தினுல் இராவி சமுத்திரத்தில் கொட்டிவிடச்சொன்னுர். அன்றுமுதல் கறுத்தநிறமுடைய மகாபுருஷன் ஒருவன் ராப்பகல், துவாரகா பட்டணத்தை சுற்றிக்கொண்டு எல்லோரும் பார்க்கும்படியாய் உலாவித்திரிந்தான். இஃதல்லாமலும் அநேகம் உற் பாதங்களுங் கண்டன.

சமுத்திரக்கரையில் வருஷந்தோறும் செய்யும் பண்டிகைக்கு ஸ்ரீகிருஷ் ணபகவான் எல்லோரையும் வரும்படியாய், ஆக்கியாபித்தார். யாவரும் சந்தோஷத்துடன் அவ்விடம்போய்ப் சேர்ந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணதேவர் வேறுதேரேறிக் கொண்டுவந்தார், பலராமர் பாதசாரியாய் நடந்துவந்து சமுத்திரக்கரையில் ஸ்தானஞ்செய்து மடியுடுத்திக்கொண்டு எல்லோருட னேயும் போசித்து இளைப்பாறி, மறுநாட் காலையில் எழுந்து காட்டுக்குப் போய்வருகிறேனென்று நடந்துவிட்டார். காட்டுக்குப்போன பலராமர் ஒரு விருக்ஷத்தடியில் சமாதியோகத் தியானத்தில் அழுந்திவிட்டார். இவ்வி டத்திலிருந்த யாதவர்கள் மதுவெறியேறி ஒருவரை ஒருவர் மதியாமல் வைதுதிட்டி சாத்தகிக்கும் கிருதபன்மனுக்கும் சண்டையுண்டாகி, சனங்கள் இருகட்சியாகப் பிரிந்து திருவிழாவுக்குக் கொண்டுவந்து பரப்பினதையும் இருப்புலக்கையை ராவிக் கொட்டினத்தினுல் முளைத்த தர்ப்பைகளையும் வாரிக்கொண்டு, ஒருவரை ஒருவர் அடித்து மாண்டார்கள். இவைகளுக்கெல் லாம் ஸ்ரீகிருஷ்ணபகவான் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். இந்தச் சண்டையில் மிந்தவர்கள் யார் என்னில் ஸ்ரீகிருஷ்ணர் தாருகன் பப்பரவாக னன் மூவரே. இவாள் மூவரும் புறப்பட்டு பலராமர் தியானத்தில் இருக் கும் சமாதிக்குப்போய் அவருடன் நம்முடையவர்கள் யாவரும் மாண்டுபோ னுர்கள் என்றுசொல்லிவிட்டு, தாருகனையழைத்து, நீ அஸ்தினபுரம்போய் பாண்டவர்களுக்கு இதைத் தெரிவித்து அர்ச்சுனனை மாத்திரம் அழைத்து வாயென்று அனுப்பினுர். இப்பால் பப்பரவாகனனை அழைத்து கடற்கரை யில் இருக்கப்பட்ட யாதவஸ்திரீகளையும் தம்முடைய அஷ்டபாரியாளையும் தேர் குதிரை முதலிய யாவத்தையும் துவார்கைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து வாவென்று ஆக்கியாபித்தார். அவன் புறப்படுஞ் சமயத்தில் அங்கேவந்த ஒருவேடன் கீழேகிடந்த ஒரு கோரையை எடுத்து வேடிக்கையாப் சுழட்டி பப்பரவாகனனை அதினுல்லகுவாக தட்டினுன் உடனே அவன் பூமியில்விழுந் திறந்தான். இதைப்பார்த்த மலைதாங்கிய மாதவன்நகைத்து, தாமே சமுத் திரதிரம்போய் அவர்களை அழைத்துவந்து துவாரகையில்விட்டு தாய்தந்தை யரைப்பணிந்து, தாருகன் அர்ச்சுனனை அழைத்துவருவான். அவன் முன் னிலையில் துவாரகாபட்டணத்தை காப்பாற்றிக் கொண்டிருங்கள், இறந்தா ரைக்குறித்து துக்கப்படவேண்டாம், எனக்குச் செலவு கொடுங்களென்றுர். பலராமரும் நீயும் தவம்பண்ணப்போனுல் நாங்கள் போகிறகெதி யென்ன வென்று வியாகுலித்தார்கள், ஆதிமூலமானவர் ஒன்றும் பேசாமல், பலரா

மர் இருக்கும் வனத்துக்குப் போய்ச்சேர்ந்தார். இவரைப் பார்த்தமாத்திரம் தியானத்திலிருந்த பலராமர் ஆயிரஞ்சிரம்படைத்த ஆதிசேஷரூபமாகப் புறப்பட்டு நாகலோகம் புக்கினர்.

ஸ்ரீகிருஷ்ணபகவான் இதைக்கண்ட பின்னர் தம்முடைய சரீரத்தை விட்டு வைகுண்டம் போவதற் கெண்ணி தூர்வாசரிஷி தம்மைச்சபித்த சாபத்தை நினைத்து காட்டில் அதிகதூரம் நடந்துபோய் ஒருமரத்தின் நிழலில் உட்கார்ந்து ரேசக பூரக மார்க்கமாய் வாயுவைக் கும்பகத்திலடக்கி, நிலத்தின்மீது சாய்ந்து ஒருகரத்தை சிரத்தின்கீழ்வைத்து மற்றொருகரத்தை இடையில் தாங்கி ஒருகாலை நீட்டி மற்றொருகாலை அந்தக்கால்மேல் அட்டணைக்காலிட்டு அசைத்துக்கொண்டு அரைக்கண்தூக்கமா யிருக்கும்போது, ஒருவேடன் வில்லில் பாணத்தைப்பூட்டி அசைகிற அந்தக்காலைப் புறுவென்று நினைத்து அடித்தான். பாணம் அவர் பாதத்தில்பட்டு உருவவே பரவாசுதேவனுடைய பிராணவாயுவானது சரீரத்தைவிட்டு நீங்கிப் போயிற்று. வேடன் ஓடிவந்துபார்த்து ஸ்ரீகிருஷ்ணபகவானென்று அறிந்தமாத்திரம் பயந்து பூமியில் விழுந்தழுதான். அதுகாலையில், ஆண்டவனுடைய திருமேனியிலிருந்து அநேகங்கோடி சூரியப்பிரகாசம்போன்ற சோதி ஒன்று எழும்பித் தமது பதமாகிய வைகுண்டத்தையடைந்தது. இந்த அற்புதத்தைப் பார்த்த ரிஷீசுராள் யாவரும் ஆதிமூலமாய் விளங்கப்பட்ட பரவாசுதேவனுக்கு சாஷ்டாங்கமாய் தெண்டனிட்டு பலவாறும் போற்றிசெய்தார்கள். பரமபதஞ்சேர்ந்த பரந்தாமன், திசைமுகன் முதலிய தேவர்களைநோக்கி நான் பூமியிற் பிறந்து கிருஷ்ணன் எனப்பேர் சிறந்து பொய்வாழ்க்கையிற் புகுந்து பூபாரந்தீர்த்துவந்த என் புனித சரித்திரத்தை எழுதிவைத்துப் பூசித்தாலும் ஒருவருக்குப் புகன்றாலும் அவர்கள் எம்மைப்போல் இகத்தில் சகல சுகமும் அனுபவித்து பரத்தில் நமது வைகுண்டமும் பெறுவார்கள் என்று திருவாய்மலர்ந்தருளி, அவரை யதாஸ்தானத்துக்கு அனுப்பிவிட்டார். சுவாமியினால் அனுப்பப்பட்ட தாருகன் அஸ்தினபுரத்தில் பாண்டவர்களைக்கண்டு சங்கதிகளைச்சொன்னான். இச்சேதிகேட்ட அவர்கள் துக்கத்தில் அழுந்தி வினையைவெறுத்து பெரியவர்களால் மனந்தேறினர்கள் என்று ஜநமேஜயராஜனுக்கு வைசம்பாயனர் செப்பியருளினர்.

அர்ச்சுனன் துவாரகைக்குப் போய் மீண்ட சருக்கம்.

அஸ்தினபுரத்திற்குப்போன ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய சாரதி தாருகனவன், தருமரைக் கண்டு வருஷா வருஷம் சமுத்திரக் கரைக்குப் போய் தேவதைகளுக்குப் பூசைபோடுகிற வழக்கப் பிரகாரம் நைவேத்தியஞ் செய்து மதுமாமிச பட்சணங்களுடன் யாதவர் யாவரும் புசித்தார்கள். மதுவெறியேறி சாத்தகியும் கிருதபன்மனும் அணைகடந்த கோபங்கொண்டு இருவர் பக்ஷத்திலும் சனங்கள் கட்சிகூடி சண்டை செய்து ஆயுதங்களை இழந்து மறுபடியும் ஆயுதந்தேடுகிற போது சில நாளைக்கு முன்னே சாம்

பினைப் பெண்வேடம் போட்டுக் கண்ணுவர் ஜமதக்கினி நாரதர்க்குக் காண்பிக்க அவர்கள் இட்ட சாபப்படி சாம்பன்பெற்ற இருப்புலக்கையை ராவிக் கொட்டினதூளில் முளைத்திருந்த முள்ளுக் கோரைகளையும் சம்புகளையும் பிடுங்கிக்கொண்டு ஒருவரையொருவர் அடித்து மாண்டார்கள். அதில் தப்பிப்பிழைத்தவர்கள் பலராமர் ஸ்ரீகிருஷ்ணன் பப்பரவாகனன் நான் ஆக நால்வர். இதில் பலராமரும் ஸ்ரீகிருஷ்ணரும் வனம் புகுந்தனர், பப்பரவாகனன் ஸ்திரீசனங்களை அழைத்துக்கொண்டு துவாரகையில் விட்டுவரப்போயிருக்கிறன். என்னை இவ்விடம் அனுப்பி அர்ச்சுனராசனை இட்டுக்கொண்டு வரச்சொன்னரென்றான். இதைக்கேட்ட பாண்டவர்கள் பிரலாபித்தழ, இச்செய்தியை அந்தப்புரத்துப் பெண்டுகள் அறிந்து ஒப்பாரிசொல்லி அழ ஆரம்பித்தார்கள். அர்ச்சுனராஜன் மனந்தேறி தருமராஜனிடம் விடைபெற்று விரைவில் துவாரகைவந்து சேர்ந்து, வசுதேவர் தேவகிதேவியாரைக் கண்டு வியாகுலித்து ஒருமண்டபத்தில் உட்கார்ந்தார்கள். வசுதேவர் கண்ணீர்ப் பெருக்கத்துடன் அர்ச்சுனனிடத்தில் யாதவகுலத்தார் சண்டையிட்டு மாண்டசெய்தியை முறையிட்டார். அர்ச்சுனன் அவருக்கு அநேகமாய்த் தேறுதல் சொல்லியும் நீ சொல்லும் பூர்வவினை யென்கிற வார்த்தை எனக்குச் சரிப்படவில்லை, என் இளையமகன் கிருஷ்ணன் நினைப்பானுகில், யாதொருசண்டையுமில்லை சாவுமில்லை ஊழ்வினையுமில்லை, இப்போது அவன் நினைத்தாலும் இறந்தவர்கள் பிழைப்பார்கள். அவர்கள் பிழைக்க அவனுக்கு இஷ்டமில்லாததினல் வேடிக்கைபார்த்துக் கொண்டிருந்துவிட்டான். அவன் பேரில் எனக்கு வெறுப்புண்டாயிருக்கிறது, இவன் முன்னலே அபிமன்னன் பிள்ளையைப் பிழைப்பூட்ட வில்லையா, இவனுக்கு இதொரு அருமையா, இந்தக்குலம் இப்படிக்கானது இவன் எட்டாவது புத்திரனுனதால் குட்டிச்சுவராகும்படி யாயிற்றேதென்றார். வசுதேவமகாராஜாவே! நீர் கிருஷ்ணன் பேரில் பழிசொல்லவேண்டாம், பாரத யுத்தம் முடிந்த பிறகு காந்தாரிதேவி இட்டசாபத்தினுலும் யதுகுலத்துப் பிள்ளைகள் முனிவர்களைப் பரிகாசித்துப் பெற்றுக்கொண்ட சாபத்தினுலும் இவ்வளவுதூரம் நேரிட்டது. அதை நிறுத்த ஒருவராலும் முடியாது என, அப்பா விஜயா! சமுத்திரக்கரையில் எல்லோரும் மாண்ட பிறகு கிருஷ்ணன் இவ்விடம்வந்து எங்களுக்கு தைரியஞ்சொல்லி உன்னைக்கொண்டு எல்லா சம்ரக்ஷணைகளையும் நடத்திக்கொள்ளும்படி கட்டளையிட்டு பலராமரிடம் போகிறதாகவும் இந்த துவாரகை இன்னம் ஏழுநாளில் சமுத்திரத்தில் முழுகிப்போம், இதைவிட்டு வேறிடந்தேடிக்கொள்ளுங்களென்று சொல்லி வெளிப்பட்டான் என்றார். அர்ச்சுனன் இதைக்கேட்டுப் பெருமூச்சுவிட்டு ஆ தெய்வமே! என் உயிருக்குயிராகிய உத்தமனை யொழிந்து எத்தனைநாள் இத்தலத்தில் இருப்பேன்? மாமா! கிருஷ்ணதேவர் உத்திரவுபடிக்கு உங்களுக்குத் துணையாயிருந்து சகலத்தையும் நடப்பிக்கிறேன், இந்திரப்பிரஸ்தம் போவோம் வாருங்கள் என்றான்.

சமுத்திரக்கரையில் இறந்தபேர்களைத் தகனஞ்செய்யவேண்டி வசுதேவர் முதலியபேர்கள் அவ்விடமணுகி ஸ்ரீகிருஷ்ணதேவருடைய பேரன் வச்சி

ரதந்தனைக்கொண்டு, ஈமவிதிகளை முடித்துவிட்டு, ஸ்ரீகிருஷ்ணர் தவஞ்செய்யும் இடத்தைப் பார்ப்போம் வாவென்றார். யாதவஸ்திரீகள் துக்கமடைந்திருக்கிறார்களே அவர்களை முந்திப்போய் பார்க்கலாமென்று தாருகன் புகல, அப்படியே துவாரகைக்குவந்து மறுநாள் ஊரைவிட்டுப் பயணப்பட ஏதுவானார்கள். பொழுது விடியுமுன்னர் வசுதேவர் நான் இருக்கமாட்டேன் என்று வாயுவைக் கும்பித்து பரகெதியடைந்தார். அவரைக் கிரமப்படி வச்சிரதந்தனைக்கொண்டு தகனஞ் செய்தார்கள். வசுதேவருடைய பத்தினிமாராகிய தேவகிதேவி ரோகிணி பத்திராதேவி மதுராதேவி இந்த நால்வரும் சாகமனஞ்செய்தார்கள். இப்பால் அர்ச்சுனன், வச்சிரதந்தன், மந்திரிமார், தாருகன் இவர்கள் கிருஷ்ணரைப்போய்ப் பார்க்கப் புறப்பட்டுத் தேடி அலுத்துத் திரும்பும்போது ஒருவேடன் அவர்கிடக்கும் இடத்தைக் காண்பித்தான். அதைப்பார்த்த அர்ச்சுனன் முதலியோர் பூமியில் விழுந்தழுது பிரலாபித்து, இவர்பிராணன் எந்தவழியால் வெளிப்பட்டதென்று அர்ச்சுனன் பரிசோதித்துப் பார்க்கும்போது உள்ளங்காலில் பாணம்பட்டு உருவி அதினால் பிராணவாயு வெளிப்பட்டதாகத் தெரிந்துகொண்டு. இது பூர்வம் தூர்வாசருக்கு தேகத்தில் அன்னம் பூசியபோது, அவர்உள்ளங்காலில் அன்னம் தடவாமையினால் இந்த கிருஷ்ணருக்கு உள்ளங்காலில் பிராணன்போமென்று சொன்ன வாக்கியம் பலித்ததென்று மறுகி, பாரதயுத்தத்தில் நம்மைக்காத்த பகவானுக்கு இப்பேர்ப்பட்ட கெதிகிடைத்தபோது, நமக்கென்ன கெதியோ அறியோமென்று, கோபாலனுடைய அருமைத்திருமேனியை ஊருக்குக் கொண்டுபோனால் ஸ்திரீஜனங்கள் துக்கிப்பார்கள், இங்கேயே தகனம்பண்ணுவது நலமென்று அவருடைய தேகத்தை சிதிலங்களின்மேல் வைத்து தகனஞ் செய்தார்கள். அப்படியே பலராமர் தேகத்தையுங் கண்டுபிடித்து தகனம் பண்ணி திரும்பி துவாரகை வந்துசேர்ந்தார்கள்.

அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணருடைய தேவிமார்களிடம்போய், பலராமரும் கண்ணனும் தபசில் இருக்கிறார்கள் என்று, காரியத்தை வெளிப்படுத்தாமல் சமாதானஞ்சொல்லி யாவரையும் அழைத்துக்கொண்டு ஊரைவிட்டு வெளிப்பட்டான். துவாரகைப்பட்டணம் சமுத்திரத்தில் முழுகிப் போயிற்று. அங்கிருந்து புறப்பட்டு வந்தவர்கள் அஸ்தமித்ததினால் ஒருகாட்டடியில் தங்கினார்கள். அவ்விடத்தில் குடியிருக்கும் வேடர்கள் இவர்களை வளைத்துக்கொண்டு ஆடையாபரணங்களை யெல்லாம் உரியத் தலைப்பட்டார்கள். வச்சிரதந்தன் தடுத்துப் பார்த்தும் பயன்படவில்லை, அர்ச்சுனன் காண்டீபத்தை வளைத்து அஸ்திரங்களைப் பிரயோகித்தான். அவைவெளிப்படவுமில்லை மந்திரம்பலிக்கவுமில்லை, அதினால் காண்டீபன் வேடருக்கு நல்லவார்த்தைசொல்லி அவர்களை விலக்கினான். உதயத்திலெழுந்து ஊர்நாடிவரும்போது அங்கிருக்கின்ற மகாரிஷிகள் முழுகிப்போன கோட்டைபோக மற்றை நாட்டை மூன்றுபங்கிட்டு கிருதபன்மன் குமாரனுக்கும் சாத்தகி குமாரனுக்கும் வச்சிரதந்தனுக்கும் கொடுத்து அவ்விடத்தில் மூன்றுபட்டணம் ஏற்படுத்திக் கொள்ளச் சொல்லி திட்டம்பண்ணினார்கள். இப்பால் வச்சிரதந்தனையும்

பட்டமஸ்திரீகள் எண்மரையும் பலராமருடைய தேவிகளேயும் மற்ற பந்து ஜனங்களேயும் இந்திரப்பிரஸ்தத்தில் கொண்டுவந்து சேர்த்து வச்சிரதந்த னுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைத்த பின்னர், ஸ்ரீகிருஷ்ணதேவர் காட் டிலிருந்து வைகுண்ட மடைந்தனரென்று வெளிப் படுத்தினன். இச்செய்தி கேட்ட ருக்குமணி முதலிய தேவிமார்கள் துயரப்படாமல் துணிவாயிருப்ப தை அறிந்து, உங்கள் எண்ணம் எப்படியென்று விஜயன்கேட்க, நாங்கள் அக்கினிப் பிரவேசமாகிறோமென்றார்கள். அதுபோல் அக்கினியை விருத்தி செய்துவைத்தமாத்திரம் அவர்கள் மங்களகோலத்துடன் அக்கினிகுண்டத் தில் இறங்கி ஸ்ரீவைகுண்டஞ்சேர்ந்து ஆதிநாராயணமூர்த்தியுடன் கலந்தார் கள். சத்தியபாமை முதலாகிய பதினாயிரம் கோபிகைகளும் தவமிழைந் துச் சரீரங்களே ஒழித்தார்கள். பலராமருடைய தேவிகளும் அக்கினியில் இறங்கி தங்கள் தங்கள் அமிசங்களிற் சேர்ந்தார்கள். இப்படியாக இறந்த ஸ்திரீ சமுகங்களுக்கெல்லாம் வச்சிரதந்தனேக் கொண்டு கருமக்கிரியைகளே முடிப்பித்து அவனிடம்விடைபெற்று அர்ச்சுனன் அஸ்தினபுரத்தை நோக்கி வரும்போது, வியாசபகவான் ஆசிரமத்துக்குப்போய் அவரை தெரிசித்தான். உங்கள் அண்ண முதலியபேர் சுகமா, உயிர்த்துணையாயிருந்த உங்கள் உத் தமனே ஒழித்து விட்டுவந்தாயோ, வேடருடனே சண்டைபண்ணி வெட்கப் பட்டுப்போனயோ, வேறே ஏதாகிலும் விந்தைகளுண்டா, உன்முகக்களே மாறியிருப்பானேன், உள்ளபடி சொல் என்று கேட்டார். யாதவகுலத்துக்கு நேரிட்டதீங்குகள் யாவத்தையுஞ் சொல்லி விஜயன் துயரப்பட்டான். வேத வியாசர் அவனே யாதரித்து அப்பா! மிக்கதூய்மையான தபசிகளின் சாபத்தி னல் யாதவகுலம் பாழாப்போயிற்று, ஆதியில் எண்ணிய தெய்வரகசியப் பிர காரம் பூமிபாரம்தீர்த்து காரியங்களைநிறைவேற்றிக்கொண்டு பழையபடிக்கே பரமபத நாதனுயினர், அவருக்கொருகாலமும்நாசமில்லை. யாரானபோதிலும் தோற்றமாயினல் மறைதலுண்டாகும், கடல்வண்ணனாகிய கண்ணபிரான் உனக்குத்துணையா யிருந்த வரையில், உன் அஸ்திர சஸ்திரங்களும் மந்திரங் களும் பலித்தன. அவர்போகவே அவையும் கூடப்போய்விட்டன. இனி உனக்கு எதுவுஞ் சாயாது: நீங்களும் சீக்கிரத்தில் சாக்கிரதைப்படவேண்டி ஐம்புலன்களேயும் அடக்கி உத்தரதிசையைநாடி மிகவும் துரிதமாய் நடப்பதே காரியமென்று வியாசர் உரைத்தனர், அதை அர்ச்சுனன் கேட்டு இது நிரி யாணதிட்சை மந்திரமென்று நினைவில் பதித்து, வேதவியாசரைப் பேணி விடை பெற்றுக்கொண்டு அஸ்தினபுரம்போய் தருமராஜனிடத்தில் துவார கைக்கு தாருகனுடன் தான் போனதுமுதல் இதுகாலம் வரையில் நடந்த சங்கதி யனைத்தையும் ஒன்றுவிடாமல் சவிஸ்தாரமாய்ச் சொன்னன்.கேளும் ஜனமேஜய மகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லி யருளினதாக சூதபுராணிகர் நைமிசாரண்ணிய ரிஷிகளுக்கு நவின்றனர்.

முசலபர்வம்

முற்றிற்று.

ஶ்ரீ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

ஸ்ரீ ம க ா பா ர த ம்.

பதினேழாவது

மகா பிரஸ்தாநிக பர்வம்.

கண்ணன் துதி.

விருத்தம்.

அண்டமுட்டையி னகத்தினும் புறத்தினு மாகிக்
கண்டவன்பர்கள் கண்ணினு நெஞ்சினுங் கலந்தோன்
பண்டைவேதங்கள் பழச்சியு மறிகொணுப் பழையோன்
முண்டகாசன னுதியா மூவர்கண் முதல்வன்.

பாண்டவர் துறவெய்திய சருக்கம்.

கேளும் ஜநமேஜய மகாராஜனே! அர்ச்சுனன் கூறிய வர்த்தமானங் களைக் கேட்ட தருமராஜன், அயர்ந்து பயந்து நடுங்கிப் பெருமூச் செறிந்து ராஜமண்டபத்தை விட்டு அந்தரங்க சாலைக்குள் புகுந்து தம்பிமார்களை நோக்கி நமக்குச் சகாயராயிருந்த கிருஷ்ணபகவானுனவர் இந்த மண்ணு சையை விட்டு சகல தேவரும் புகழும்படியாக பரமபதத்துக்கு எழுந்தருளி னர். இனிநாம் இந்த பூமியாளும் ஆசையை ஒழிக்கா விட்டால், இது வரை யிலும் நாம்பெற்ற பிரதிஷ்டை அபலமாகும், நாமும் நம்மில் இருக்கிற பஞ்ச பூதங்கள் யாவும் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய மாயமென்று நிச்சயமாய் நம் புங்கள். அப்பேர்ப்பட்ட ஆண்டவன் இவ்வுலகத்தை விட்டுத் தாண்டிய போதே, நாம் இங்கே தங்கலாகாது. வடதிசையை நாடி நடக்க வேண்டி யதே மார்க்கமென்று என் எண்ணத்தில் ஸ்திரப்படுத்திக் கொண்டேன். அவரவர்கள் கருத்தில் இருக்குங் காரியத்தைச் சொல்லுங்கள், தம்பிமாரே யென்று தருமராஜன் உசாவிய போது, பீமசேனன் முதல் நால்வரும் துரோபதைதேவியும் தருமர் கொண்ட கருத்தின்படி யாத்திரை போவதே காரியமென்று கூறினர்கள். உடனே சுபத்திரா தேவியை அழைத்து, தாங் கள் எண்ணிய கருத்தை வெளிப்படுத்தி அவளுக்கு இதனுல் நேரிட்ட மனஸ் தபங்களை மாற்றி பரிச்சித்துவை அழைத்து இராச்சிய பரிபாலனஞ் செய்ய வேண்டிய விதி முறைகளை உரைத்து பட்டாபிஷேகஞ் செய்துவைத்து, கிருபாசாரியர் தௌமியாசாரியரிடம் அவனை ஒப்பித்து அவனை நல்வழில் நடத்தி கிருதார்த்தனுகும்படி செய்யுங்கள் என்று சொல்லி, இப்பால் யாவ

ரிடத்திலுஞ் செலவு பெற்றுக்கொண்டு தாங்கள் அணிந்திருந்த திவ்வியரத்தின பரணங்களையும் இராஜகோலங்களையும் விசர்ச்சித்து மரவுரிதரித்து ஆசாபசாங்களை விடுத்து, ஊரைவிட்டு வரும்போது இரண்டு பிராமணுள் எதிரில் வந்து சொல்லத் தொடங்கினர்.

ஓய் தருமராஜனே! நீர் சத்திய வந்தர், பாரபட்சமில்லாதவர், நாங்கள் இருவரும் விவாதப்பட்டு வந்தோம், எங்கள் ஞாயத்தைக் கேட்டுத் தீர்ப்புச் சொல்லும்? இதோ நிற்கிற இந்த பிராமணன் எனக்கு ஒரு மனையை விற்ருன், நான் அதில் விடுகட்ட அஸ்திபாரம் வெட்டியபோது புதையல் அகப்பட்டது, அந்த தனத்தை தனக்குத் தரச் சொல்லிக் கேட்கிருன், நான் அறுதிக்கிரயமாய் வாங்கிய நிலத்தில் இருக்கிற ஜல நிதிபாஷணம் யாவத்தும் என்னுடையதே யென்கிறேன். இவனே மனையை மாத்திரம் விற்ருனே யல்லாமல் எங்கள் பெரியோர் புதைத்து வைத்த தனத்தை விற்க வில்லை யென்கிருன். இது தான் என்னுடைய வியாச்சியம் என்ருன். மற்ருெருத்தன் சொல்வது நான் இவனுக்கு மனையை மாத்திரம் விற்றேன். அதில் இருக்கும் தனத்தை விற்கவில்லை, இது தான் என் வழக்கென்ருன் உபய வாதிகளின் வார்த்தைக் கேட்டு தம்பீமனைப் பார்த்து இதற்கென்ன சொல்லுகிருயென்று தருமர் கேட்க, பீமன் சொல்லுகின்ருன். அண்ணலே! இந்த பிராமணுள் இருவரும் நேற்றைய தினம் என்னிடத்தில் வந்து விவகாரம் சொல்லிக்கொண்டார்கள். அஃதெவ்வாறெனில், கிரயத்துக்கு வாங்கினவன் கடைக்கால் வெட்டின போது அகப்பட்ட பொற்பாளங்களை எடுத்துக்கொண்டு விற்றவன் வீட்டைத் தேடிப்போய் தனத்தை யெடுத்துக் கொள்ளுமென்று சொன்னேனென்ருன். சர்வவில்லங்க சுத்தியாய் மனையை விற்றுப் போட்டபடியால் அதில் அகப்பட்ட திரவியம், வாங்கின உம்முடையதே யல்லாது எனக்குச் சொந்தமல்ல, உம்முடைய சொத்தை நான் கைப்பற்று வேனுகில் நரகங்கிடைக்குமென்று விற்றவனுகிய நான் தடுத்து விட்டனன், அவன் என்னைக் கட்டாயப்படுத்துகிருன் என்றதாக ஒருவருக் கொருவர் வாக்குவாதப் பட்டுக்கொண் டிருந்தார்கள். இன்றைக்கு நாக்குப்பிரண்டு பேசுகிருர்கள். இதைப் பார்த்தால் இன்றைக்கே கலியுகம் பிறந்து போயிற்று, இனி நாம் இருக்க வேண்டிய சாக்கிரதையில் இருக்க வேண்டுமென்று பீமன் நகைத்தான். இதைக்கேட்ட தருமராஜன் புன்னகை விளைத்து, பிராமணர்களே! இவ்வுலகத்தை ஆளப்பட்ட பரிசித்து மகாராஜனிடம் உங்கள் விவகாரத்தைச் சொல்லிக் கொள்ளுங்கள் என்று அனுப்பி விட்டார். பிற்பாடு பாஞ்சாலியும் தம்பிமாரும் தருமராஜனைப் பின் தொடர்ந்து நடந்தார்கள், அப்போது ஒரு நாய் இவர்களைப் பின்பற்றித் தொடர்ந்து வந்தது, அதை துரத்தியும் அதுவிடாமல் அவர்கள் பின்னே சென்றது. தருமராஜன் முதலியோர் பிரயாணப்பட்ட பிற்பாடு, அந்தப் புரத்து ஸ்திரீகளில் உலூபி நாகலோகம் போய்ச் சேர்ந்தாள். சித்திராங்கதை தன் தந்தை பாண்டியன் நகரத்துக்கேகினுள். மற்ற ராஜஸ்திரீகள் சுபத்திரா தேவியின் போஷணைக்குள் பட்டிருந்தனர். உன் தந்தையாகிய பரிச்சித்து மகாராஜன் துஷ்ட

நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ்செய்து இராஜ்ஜியத்தை நீதியாய் செங்கோல் செலுத்திவந்தானென்று வைசம்பாயனர் ஜநமேஜய மகாராஜனுக்கு உரைத் தருளினர்.

பாண்டவர்களும் பாஞ்சாலியும் உத்தாதிசை யடைந்த சருக்கம்.

கேளும் ஜநமேஜய மகாராஜனே! தருமராஜனும் பின்னவர்களும் பாஞ் சாலியும் துறவறவேடம் பூண்டு ஆயுதங்களை ஒழித்து நடந்து போகும் போது, அர்ச்சுனன் மாத்திரம் காண்டீபத்தை கைவிடாதவனாய் உறுதியு டன் சென்றான். நாயும் இவர்களை விடாமல் பின்சென்றது, பாகீரதி நதியை அடைந்து கீழைச் சமுத்திரத்தைக்கண்டு தெரிசித்து அவ்விடத்தில் மூன்று முகங்களுடையவராய் ஆட்டுக்கடாவின் பேரில் ஏறி வந்த அக்கினி பகவான் எதிர்ப்பட்டு, நீங்கள் ராஜ்ஜியத்தைத் துறந்து தபோ நிஷ்டர்களாய்ப் புறப் பட்டீர்களே! உங்களில் அர்ச்சுனன் மாத்திரம் வில்லை விடாமல் வைத்திருப் பானேன். தேவகாரியம் முடியும் பொருட்டு வருணதேவன் கையில் வாங் கிக் கொடுத்த வில்லை பாரத யுத்தம் முடிந்த பிற்பாடு இவன் வைத்திருப் பதில் பயன் இல்லை. இந்த சமுத்திரத்திற் போட்டுவிட்டுப் போங்கள் என்று தன் சுடர்க்கரத்தை நீட்டிக் காட்டினர். அவ்விதமே காண்டீபத்தை சமுத்திரத்தில் எறிந்துவிட்டு அவரை வணங்கி அகன்றார்கள். பாண்டவர் கள் பூப்பிரதக்ஷணம் பண்ணவேண்டி தெற்கு முகமாய்த் திரும்பி வெகு தூரம் போய் அவ்விட மிருந்து மேற்கு திசையை நாடி மேலைச் சமுத் திரத்தை தெரிசித்து வடக்கு முகமாய்த் நடந்துவந்து ஸ்ரீ கிருஷ்ணபகவான் வசித்த துவாரகா சமுத்திரத்தை தெரிசித்து இமவத்ப் பர்வதஞ் சென்றார் கள். அதிலிருந் தெழும்பிய காற்றினாலும் பனியினாலும் அருவி பெருகின்ற மலைத்தேனினாலும் தாங்கள் அடைந்த வழி நடப்பின் வருத்தத்தை ஆற்றிக் கொண்டு, அவ்விடத்தில் வசிக்குப் உமாபதியின் மகிமையை ஸ்தோத் திரித்து பெரியோரையும் தெரிசித்த பிற்பாடு தருமர் தம்பிமாரைப் பார் த்து, இது வரையிலும் கிழக்கு தெற்கு மேற்கு மூன்று திக்கிலும் போய் வந்த விதமாய் வட திசைக்குப் போய் வரக்கூடாது. வாயுவைக் கும்பித்து அடக்கி யோகமார்க்கங் கொண்டு அந்தரங்க பக்தியுடன் நடக்க வேண்டும், நீங்கள் எல்லோரும் சாக்கிரதைப் படுங்கள் என்று உரைத்து, தன் மட்டுந் திருந்தி வட திசையை நாடி நடந்தனர். கனிஷ்டர்களுந் துரோபதையும் தரு மராஜனுடைய தண்ணருள் தாங்கி அவரை விட்டுப் பிரியாமல் ஏம கூடஞ் சென்று அப்பால் நிடதகிரிதாண்டி தேவதைகள் வசிக்கும் உன்னதமான கோபுரங்கள் மண்டபங்களைத் தெரிசித்து மகாமேருவை வணங்கிக்கொண்டு அந்த மலையின் மேற்புறமாய்ப் போய் உத்தாதிசையை நாடி விரைந்து நடக்கும் போது.

பாஞ்சாலியின் மரணம்.

இவர்களுடன் பின்சென்ற பாஞ்சாலிக்கு வாய் வறண்டு நடை தளர்ந்து ஆகாயத்திலிருந்து எரிந்து விழுகின்ற நட்சத்திரம் போல் குபீரென்று சோதியாய் பிரகாசித்து விழுந்தாள். மகாமேரு வடியில் விழுந்த துரோபதையின் தேகத்தைப் பார்த்த பீமன் முதல் நால்வரும் தருமராசனுக்குச் சொன்னார்கள். நீங்கள் அதற்காக வருந்த வேண்டாம், நிற்காமல் வாருங்கள் என்று திரும்பிப்பாராமல் சென்றார். பாஞ்சாலி இறக்க வேண்டிய காரணம் யாதென்று பீமன் கேட்டதற்கு, தம்பி நம்மைந்து பேருக்கும் பத்தினியாயிருந்த இவள் அர்ச்சுனனிடத்தில் மாத்திரம் மெத்த ஆசைவைத்திருந்தாள். தான் என்னும் ஆணவமும் படைத்தவள். அதினால் முட்ட முடிய வாராள் என்றார்.

அப்பால் சகாதேவன் நடை தடுமாறி விழுந்திறந்தான். பீமன் தருமரைக்கூவிக் கேட்டபோது, பீமா! இந்த சகாதேவன் அறிவிலேயும் கற்ற வித்தைகளிலேயும் கெர்வங்கொண்டபடியால் இறந்தானென்றார். அப்பால் நகுலன் பூமியில் விழுந் திறந்தான். இவன் செய்தி என்னவென்று கூவினார்கள். தன் அழகுக்கு மிஞ்சினவர் ஒருவருங் கிடையாதென்று அகந்தைகொண்டவன், அதினால் மாண்டான் என்றார். சற்றெட்டி நடந்துபோகிறபோது அர்ச்சுனனுக்குத் தடமாட்டங் கண்டு காய மொழிந்தான். பீமன் கலங்கி சுவேதவாகனன் விழுந்தான் எனவும், கேளாய் பீமா! ரணகளத்தில் ஒரேநாளில் எல்லாரையுங் கொல்லுகிறேனென்று சபதம்பண்ணிஅந்தச் சபதந்தப்பி இரண்டு மூன்று நாளில் வெல்லுவான். இந்த இறுமாப்புடைய சொற்சோர்வினாலும் நேரிட்ட துர்தோஷங்களினாலும் இவனுக்கு இந்தகெதி லபித்தது என்றார். சிறிதுதூரம் போகும்போது வாயு குமாரனாகிய பீமன் வதங்கி தன் தேகம் நில்லாதென்று தெரிந்து, என் தேகம் நழுவிப்போகும்போலிருக்கிறது இதென்னத்தினாலே என்றான். நீ புஜபலபராக்கிரமனாய் வெற்றிபெற்றாய், ஆனால் நீ எவர்களுடனும் இன்பவார்த்தை பேசியறியாய். மிதமற்ற பொசிப்பும் நெடுநேரம் நித்திரையுஞ் செய்வாய். இக்குற்றத்தினால் நிறைதவம் குறைந்ததென்றார். உடனே பீமன் இறந்தொழிந்தான். அப்பால் தருமராஜன் நடக்கும்போது நாய்மாத்திரம் அவரைவிடாமல் பின்தொடர்ந்தது. எல்லாரையும் இழந்து நடக்கின்ற முரசக்கொடியோனை இந்திரன் முதலிய தேவர்கள் சகலவைபங்களுடன்வந்து கண்டார்கள். அவர்களை இவர் அநேகமாய் தொழுதபோது, நீர் தருமந்தப்பாமல் அரசுபுரிந்து உலகத்தைச்சீர்ப்படுத்தி எங்களுடைய மகிமையைக் காணவேண்டி இவ்வளவு தூரம் பாடுபட்டுவந்தபடியால் புனிதனாகிய நீர் பூமியில் நடக்கவேண்டாம், இந்த தேவ விமானத்தில் ஏறிக்கொள்ளுமென்றார்கள். என் தம்பிமாரையும் பாஞ்சாலியையும் இழந்து நான்மாத்திரம் இந்த இரதத்தில் ஏறிவர மனம் ஒப்பவில்லையென்று தருமராஜன் வருந்தினார். தருமபூபதியே உமது தம்பிமாரும் பத்தினியும் தேகத்தோடு இந்தப் பதவியை அடைவதற்குச் சுதந்தரார் அல்லர், அதினால் தேகத்தைவிட்டு விட்டார்கள். நீர் அவர்களைப்

போல் அல்ல, சத்தியமே வலுவேறிய தேகியான படியால் சரீரத்துடன் இவ்வளவுதூரம் வந்தீர். இந்த விமானத்தில் ஏறிக்கொள்ளுமென்றார்கள். என் தம்பிமார் தேகத்தை விட்டொழிந்ததுபோல் இந்த நாயானது ஒழியாமல் தேகத்துடன் இவ்வளவு தூரம் வந்ததை நான் கைவிட்டு நான் மாத்திரம் விமானமேறிச் செல்ல மனங்கொள்ள வில்லையென்றார். தர்மராஜனே! நீர் சொல்லுவது தகாத காரியம். எத்தனைகோடி தவங்கள் யாகங்கள் செய்தபேருக்கும் இந்தப் பதவிகிடைப்பது மிகவும் அருமை. அப்பேர்ப்பட்ட பதவியை எத்தனை சுலபமாய் எண்ணிச்சொன்னீர். ஈடுபடாத நாயை ஈடுபடுத்துவதினால் பெரும்பாவம் உண்டாம். உமது புண்ணியத்துக்கும் பழுதுண்டாகும், சுவானத்தின் வாடையும் அதின் நிழலும் அது உதறிய தூசியும் அதுவாய்வைத்துப் புசித்த சேஷமும் இவை கூடாதென்று வைதிகர் சொல்லியிருப்பதை மாற்றி அதையுங் கூட விமானத்தில் ஏற்றிவிடுங்கள் என்று விளம்பினீர். இது கூடாதகாரியமென்று இந்திரன் சொன்னான்.

அறன்மகன் சிந்தைவருந்தி, தேவர்களே! உலகத்திலும் பெரிது சொர்க்கம். அதிலும் பெரியவர் தேவர்கள் அதிலும் பெரியவன் தேவராஜன். அவரிலும் பெரியோர் ரிஷிகள். அவர்களிலும் பெரியவர் பிரகஸ்பதிபகவான் அவரிலும் உயர்ந்தவர் அரிபரந்தாமன். அப்பேர்ப்பட்ட கிருஷ்ணமூர்த்திக்கு மைத்துனனானேன், நீங்கள் என்னை யெதிர்கொண்டழைக்கப் பெற்றேன், உங்கள் தெரிசனங்கண்டேன், நான் அடையத்தக்க பலன் எப்பேர்ப்பட்டது. இப்படியிருக்க, என்னை நம்பிவந்த சீவனை நீக்கி நான்மாத்திரம் சுகம்பெறுவது நியாயமல்ல. எல்லாப்பொருளினும் பொருந்தி யிருப்பவன் ஈசன். இரக்கமில்லாதேகம் எடுத்தவன் நீசன். மானிடதேகம் பெற்றவர்களில் இவ்வளவுதூரம் வந்தவர்கள்யார். இந்த நாய் கடைப்பட்டதேயாயினும் இவ்வளவுதூரம் நடந்து இந்த பூமியை மிதித்து உங்களை தெரிசித்தபோது இதற்கெப்படி பலன் கிடைக்காமற்போம். இந்தமட்டுந் தேவபூமிக்கு உடலுமுயிருடன்வந்த நாய்களுண்டோ. இந்த நாய்க்குப் எந்த பதவி கட்டளை யிடுகிறீர்களோ அந்தப் பதவியே எனக்குப்போதும். நானும் அத்துடன் கூட இருந்து விடுகிறேன் என்றார். திடவானே! மானிடருக்கு சொர்க்கபூமியென்றும், மற்ற செந்துக்கள் யமலோகத்தில் இருந்து கண்டனை தெண்டனைப்பட்டு பிற்பாடு மானிடதேகமெடுத்துப் பதவிபெறவேண்டும், இந்த தர்மசூக்ஷ்மம் உமக்குத் தெரிந்திருந்தும் என்னை ஏன் வருந்துகிறீர் என்று தேவராசன் புகன்றான். நம்பினபேரைக் கைவிட்டவனுக்கும் பிராமணனைக் கொன்றவனுக்கும் தண்டனை ஒன்றுதானென்று கேட்டிருக்கிறேன். இந்த நாயைக் கைவிடுவதினால் எனக்கு நரகஞ் சித்திக்குமென்று பயப்படுகிறேன், சூரியவம்மிசத்தில் சிபிச்சக்கரவர்த்தி ஒரு புருவுக்காக தானும் பெண்சாதியும் பிள்ளையும் துலையேறிச்சிறிய உயிரைக் காப்பாற்றினார்கள். இன்னம் அநேகம் புண்ணியவான்கள் தங்கள் உயிரைக் கொடுத்து நம்பினபேரை ஆதரித்திருக்கின்றார்கள். மனிதரேனும், பட்சியேனும், மிருகமேனும், புழுவேனும், அடைக்கலம் புகுந்ததை, என் சீவனுள்ளவரையில் கைவிட

மாட்டேன் என்று ஓரே பிடிவாதமாய்ப் பேசினார். அம்மொழிகேட்ட ஆயிரங்கண்ணன் அகம்மகிழ்ந்து தருமரை மங்களாசாசனம் சொல்லிவாழ்த்த, நாய்வடிவாய் வந்த தருமதேவதை யமதர்மராஜனாக எதிரில் நிற்கக்கண்டு அவர் திருவடிகளில் விழுந்து சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணினார். தன் பிள்ளையாகிய தருமரை வாரி எடுத்தணைத்து உன்னுடைய சத்தியமும் ஒழுக்கமும், தருமமும், சாந்தமும், உலகத்தாருக்குத் தெரிய வேண்டி, நாய் வடிவமாகித் தொடர்ந்தேன். உன்னைக் கொண்டாடாத உத்தமர்களுமுண்டா? எல்லாரிலுஞ் சிறந்த பெருமை நிறைந்திருக்கின்ற உனக்கு, இனிப் பெருமை யுண்டாக்க வேண்டியதில்லை. நீ வனவாசம் பண்ணும்போது, நீயும் தம்பிமார்களும் காளமகா முனி செய்த யாகத்தில் வந்த பூதத்தால் இறந்து போகாமல், நச்சுப் பொய்கை யேற்படுத்தி தம்பிமார் நால்வரும் மடிந்த போது உன்னை அந்தத் தண்ணியைக் குடிக்க வொட்டாமல் தடுத்து உனக்குப் பிரசன்னமாகி, நால்வரில் ஒருவனை யெழுப்பிக் கொள்ளச் சொன்னதற்கு, நகுலனை எழுப்பித்தரக் கேட்டாய், அதினாலும் உன் குணாதிசயத்தை அறிந்தேன். இன்றைக்கு உன் மனதை தேவதைகளுக்குத் தெரியச் செய்யவேண்டி, நாய் வடிவமெடுத்து உனக்குத் துணையாக வந்து தெய்வலோகத்தின் எல்லையில் கொண்டு வந்து விடுத்தேன். உன் வம்மிசமெல்லாம் உன் ஒருவனால் கடத்தேறிற்று. நீ தேவர்களுக்கு உற்ற துணையானாய், உனக்குச் சமானம் ஒருவரும் இல்லையென்று யமதர்மராஜன் சொல்ல, தேவேந்திரனும் தேவர்களுஞ் சந்தோஷப்பட்டு ஆலசியம் பண்ணாமல் இந்திர விமானத்தில் ஏறுமென்று வாழ்த்த, அப்போது, குந்தி முதல்வன் விமானத்தை பிரதக்ஷணம் வந்து நமஸ்கரித்து, விமானமேறி மேலே போகும்போது, விமானத்தின் இருபாரிசத்திலும் யமனும் இந்திரனும் கூடச் சென்று தேவலோகத்தில் அவ்வவ்விடங்களிலுள்ள அதிசயங்களையும் விநோதங்களையுங் காட்டிக்கொண்டு சம்பிரமங்களுடன் போய்ச் சேர்ந்தார்கள்.

மகாபிரஸ்தாநிக பர்வம்

முற்றிற்று.

உ

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

ஸ்ரீமகாபாரதம்.

பதினெட்டாவது,

சொர்க்காரோகணபர்வம்.

கண்ணன்றுதி.

விருத்தம்.

மண்ணுடன்புனலுந்தேயு வாயுவாகாயமென்னு
மின்னொருமிரவிதிங்க ளியமானனெனுமோரெட்டு
வண்ணமுமாகியெல்லா வடிவினுஞ்சிறந்துநின்ற
கண்ணருளுடையகோவைக் கருதினோர் பிறவிதீர்ந்தோர்.

சுவர்க்கதரிசனச் சருக்கம்.

ஸ்ரீவேதவியாசரை மனதில் ஸ்மரித்து வைசம்பாயன மகாமுனிவர் ஜநமேஜயமகாராஜனுக்குச் சொன்னதாவது: கேளும் ராஜனே! உங்கள் பெரியபாட்டனாராகிய தருமராஜனுக்கு யமதர்மராஜனும் தேவேந்திரனும் சொர்க்க தெரிசனங் காட்டிவந்தபின்பு, சூரியமண்டல முதலிய யாவையும காண்பிக்கிறோம் பாருமென்று தேவதைகள் புடைசூழ அமராவதிப் பட்டணம்போய்ச்சேர்ந்து, அவ்விடத்துள்ள விநோத சம்பிரமங்களையெல்லாம் தெரிந்துக்கொண்டு பூமியில் நடற்றவம் புரிந்தோர் அங்கங்கே அடைந்திருக்கும் பதவிகளைச்சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது, தருமராஜன் சரீரத்துடன் தேவலோகம் வந்ததற்காக, அவரது புண்ணியங்களைப்பற்றி நாரதர் முதலிய மகாரிஷிகள் மிகவும் சிலாகித்தபோது, தருமராஜன் நகைத்து தபோதனர்களே கேளுங்கள் என்னைவிட்டகலாதிருந்த தம்பிமார்களும், துரோபதையும் என்னைப் பிரிந்துபோனார்களே, அது ஒன்றுதான் எனக்குக் குறை என்றார். சகலமுந்தெரிந்த உமக்கு மயக்கமுண்டாக வேண்டியுதென்ன? நீர் அடையப்போகிறபதவி அவர்களுக்குக் கிடைக்குமா? உமக்கு அவர்கள் நிகராவார்களா? நீர் அவர்களை நினைக்கப்போகாது, யாவற்றுக்கும் மனதேகாரணம். கடைசிநாளில் எந்தநினைப்பு மனதில் தட்டுப்படுகிறதோ அதற்குத் தகுந்தபதவியிற் கொண்டுபோய்ச் சேர்க்குமென்று வேதராசன் புகன்றனன். சுவாமீ? ஒன்றின்பேரில் ஆசைப்பட்ட நான் தந்தையாகிய உம்

மைவிட்டு யாரைக்கேட்பேன்? மன மிளைத்திருக்கின்ற எனக்கு கிஞ்சித்துச் சந்தோஷமுண்டாகும்படிக்கு என் சகோதராள் துரோபதை என் சுற்றத்தார் முதலிய பேர்களையெல்லாம் நான் கண்ணுறப்பார்க்கும்படி கடாக்ஷிக்க வேண்டும், அவர்கள் எங்கெந்த கதியை அடைந்திருந்தாலும், அதை நான் பார்க்கும்படி கிருபைபுரியும் சதமகனேயென்று தாழ்ந்தார். அமராவதியோன் நகைத்து நாரதர்முதலிய சப்தரிஷிகளையும் தேவதைகளையுஞ் சேர்த்து தருமராஜனுக்கு அவர் பந்துமித்திராதியரைக் காண்பித்து அழைத்துவாருங்கள் என்று ஆக்கியாபித்தார்.

அதுபோல் தேவதூதர் தருமராஜனை அழைத்துக் கொண்டுபோய் ஓரிடத்தைக் காண்பித்தார்கள். அவ்விடத்தில் துரியோதனராஜன் மிகுந்த சம்பிரமங்களுடன் வீற்றிருந்தான். அவனைக்கண்டு மகிழ்ந்து வீரலக்ஷ்மியின் கடாட்சத்தினுல் இந்த வைபவம் இவனுக்குக் கிடைத்ததென்று மெச்சி, இதனுல் அல்லவா ஓரே பிடிவாதமாய் இறந்து பிராணனைவிட்டு நற்கதி புகுந்தான் என்று நினைத்து, கூடவருகின்ற மகாரிஷிகளை நோக்கி ஐயர்மாரே! இந்த துரியோதனன் அநேக கொடுமைகளைச் செய்து அடுத்தோரை யெல்லாம் குருக்ஷேத்திரத்தில் பாழாக்கித் தானும் சவுக்கியப்படாமல் இப்பேர்ப்பட்ட பகாபாதகம் புரிந்த இவனுக்கு சவுக்கியபதவி கிடைத்திருக்கிறவிந்தை என்னவென்று கேட்டார். பூமியில் அநேகம் பாவங்களைச்செய்தாலும் போர் முகத்தில் பின்வாங்காமல் வீரருடன் சண்டைசெய்து இறப்பானுகில் அவனுக்கு வீரசொர்க்கமுண்டு, ஆனுல் இவனுக்கு வீரசொர்க்கம் இல்லை, போக சொர்க்கத்தில் இருக்கிறன், சுயோதனன் செய்ததெல்லாம் மோசமென்றும் வஞ்சனையென்றும் பொருமையென்றும் எண்ணிச்சொன்னீர். அவைகள் எல்லாம் ராசதந்திரத்துக்குரியவை. அவன் சத்தியமாய் நடந்திருந்தால் ஒருவரை ஒருவர் கொல்வதெப்படி? வெல்வதெப்படி? நீர் அவைகளை மறந்துவிடும். அந்தக் குலத்தில் உதித்த உத்தமனுகிய உம்மாலே அவன் நல்லபதவியில் இருக்கிறுனென்றுர்கள். சுவாமீ! எங்கள் தமயனுகிய கர்ணமகாராஜன் இருக்கிறவரையில் எங்களுக்கு இன்னுரென்று தெரியாமல் அவரை இழந்தோம். அவரையும் தம்பியர் நால்வரையும் துரோபதாதேவியையும் காண ஆவலாயிருக்கிறது என்றுர். அதுபோல் தேவதூதர்கள் இவரை அழைத்துக் கொண்டு பொன்னுடுமுழுதுஞ் சுற்றிக் காண்பித்தார்கள்.

நரக தெரிசனச் சருக்கம்.

கேளும் ஜனமேஜயராஜனே! தேவதூதர்கள் முன்னே செல்ல, தருமராஜன் பின்னேபோக, மிகுந்த இருளும் துர்க்கந்தமும் கொடிய மிருகங்களும் அசுத்தங்களும் நிறைந்த ஒரு ஸ்தலத்தைக் காண்பித்தார்கள்: அதிலே அநேக ஆத்துமகோடிகள் பாபங்களின் நிமித்தியம் கடினதண்டனைகளை உத்தரித்துக் கொண்டிருந்தார்கள்; இதை தருமராஜன் பார்த்துச் சகியாமல் ஐயோ நான் என்னபாபம் பண்ணினேன்? இவ்விடத்தில் இப்பேர்ப்பட்ட

அகோரங்கள் இருக்குமென்று தெரிந்தால் நான் பார்க்க வரமாட்டேன் என்றுவிரைந்து நடந்து, இந்தநரகம் தெய்வலோகத்தின் எல்லைக்குட்பட்டதா வென்று கேட்டார். தேவலோகத்துக்கும் நரகலோகத்துக்கும் பேதமுண்டு. எப்படியெனில், தேவலோகத்துக்குத் தெக்ஷணபாரிசம் யமதர்மராஜன் பட்டணம், அதற்குத் தெற்கு இந்தப் பொல்லாத நரகலோகம், உமது தம்பிமாரைப் பார்க்கவேண்டிய இடம் வைகுந்தம் என்றனர். அது இன்னம் எவ்வளவுதூரம் என்று கேட்டார். உம்மைப்போலொத்த உத்தமருக்கு மிகவும் சமீபம் நரகத்திற்கிடக்கும் பாபிகளுக்கு அது தொலைவு. நீர் சீக்கிரம் வாரும் என்று திரும்பினர்கள். உடனே நரகத்தில்வசிக்கும் ஆவிகள் உரத்த சத்தமாய், புண்ணியனாகிய உம்மை தெரிசனம் பண்ணின நாங்கள் கிரிசைகெட்டநரகத்தில் அழுந்தி துன்பப்படலாமா? எங்கள் நரகவேதனையைத் தீர்த்துப்போடும், எங்கள் ஆபத்துக்கு உதவிசெய்கிறதும் புண்ணியந்தானே? உம்மைபோன்ற உத்தமன் எங்களைப்பார்த்துச் சும்மாபோய்விட்டால் எங்களுக்கு என்ன முடிவு? யார் சகாயர்? போகாதீர்! போகாதீர்! நல்லகாலத்தில் தான் பலபேரை இரட்சிக்கவேண்டும் நீர் உடலுடன் வந்திருக்கிறபதவிக்கு ஆனியில்லையே என்று கதறினர்கள். யமதர்மராஜன் தண்டனையில் அகப்பட்ட உங்களை தண்டனை தீருமுன்னே எவ்விதமாய் விடுவிப்பான் என்னையேன் அழைக்கிறீர்கள் என்றார். இவ்வசனங் கேட்டவுடனே ஓவென்றழுது, தம்பீ நான் கர்ணன், அண்ணா நான் பீமன், அண்ணா நான் அருச்சுனன், நான் துரோபதையென்று இப்படியாக பாரதயுத்தத்தில் மாண்ட எல்லோருடைய ஆவிகளும் தங்கள் தங்கள் பேரைச்சொல்லிக் கூவினர்கள். இதென்ன தர்மசங்கடமாயிருக்கிறது. அநேகபாபம்பண்ணின துரியோதனன் சுகபதவியில் இருக்க, நம்முட வார்த்தைக்கு மாறுபேசாமல் அநேகம் யாகாதிபுண்ணிய கிருத்தியங்கள்செய்த இவர்களுக்கு இப்பேர்ப்பட்ட கெதியானால், மற்றவர்களுக்கு என்னமாய் முடியுமோ? ஆ தெய்வமே! என்று உயிர்சோர்ந்து தலையிறக்கமாகி சஞ்சலப்படும்போது, தேவதூதர்கள் இவ்விடம்விட்டு வாரும்வாருமென்று அவசரப்படுத்தினர்கள். என் பந்துக்கள் நரகத்தில் நொந்து கிடப்பதைப் பார்க்கிறேனே இதுவே எனக்குப்போதும் வேறு பதம் எனக்குவேண்டாம், நீங்கள் போங்கள் என்றார்.

தேவதூதாள்இதைப்போய் இந்திரனுக்குத் தெரிவித்தார்கள். உடனே ஐராணிவேந்தன் தருமரிடம் வந்து உம்மை உயர்ந்த பதவியாகிய அச்சுதானந்தத்தில் வைக்கக்கருதினல், நீர் தாழ்ந்தகெதியில் புகுவேன் என்று சங்கல்ப்பிக்கிற தென்ன சொல்லுமென்றான். ஐயா! துரியோதனாதியர் சொர்க்கபதவி பெறுவானேன்? என் தம்பிமுதலியோர் நரககெதி யடைவானேன்? இதென்னபுதுமை, இந்த சந்தேகத்தினல் நான் இங்கேயே இருந்து விட்டேன் என்றார். நல்வினை கொஞ்சம் செய்தவர்கள் முந்தி சொர்க்கபோகத்தை அனுபவித்து அப்பால் தீவினைகளுக்குத் தக்கபடி நெடுநாள் நகரத்தில் முழுகிக்கிடப்பார்கள். தீவினைகொஞ்சம் புரிந்தவர்கள் முந்தி நகரத்தை அனுபவித்து விட்டு அப்பால் நல்வினைக்குத் தகுந்தபடி மேம்பதவியை நெடு

நாள் அனுபவிப்பார்கள். இந்த விபரப்படி உன் தம்பிமார் முதலானோர் முந்திக் கொஞ்சம் துன்பத்தை அனுபவித்துத்தீர்த்தால், அப்பால் உம்முடன் கூடியிருக்குஞ் சவுக்கியம் உண்டாம். அதற்காக கிஞ்சித்துத் துன்பத்தை முந்தி உத்தரித்தார்கள். துரியோதனன் இனி உத்தரிக்கப்போகிறது அதிகம். உமது தம்பிமார் எப்போது உம்மைக் கண்டார்களோ அப்போதே அவர்கள் பாபதண்டனையை உத்தரித்துத் தீர்த்தார்கள், இதுதான் இங்கிருக்கிறஞாயம், அவர்கள் இப்போது விரஜாநதியில் ஸ்நானமாடி பரிசுத்தமான அமிர்தபோசன முண்டு ஆனந்தத்தில் இருக்கிறார்கள், காண்பிக்கிறோம் வாரும், நீரும் நரகதெரிசனம் செய்து அந்த பூமியில் ஒரு கடிகைவாசம் பண்ணக் கிடைத்தது தெரியுமா? நீர் நடந்ததெல்லாம் சத்தியந்தான் தருமந்தான் ஆகிலும் உம்மை யறியாமல் உற்றிருந்த தீவினை யொன்றை நீங்குகிறதற்காக நேமித்த ஆக்கினைப்படி இது உண்டாயிற்று. உம்மையும் ஊழ்வினை விட்டது, இனி கிலேசம் வேண்டாம். மநுமாந்தா முதலானோர் யாவரும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் உம்மைப்பார்த்து ஆசிர்வதிக்க அபேக்ஷிக்கிறார்கள். உமது தமயன் கர்ணன் எனக்கு தானம் அளித்தவன். ஆதிநாராயணனுக்கு தருமங்களைப் பிச்சைபோட்டவன். அப்பேர்ப்பட்ட மகானுபாவனுக்கு ஜெனன மரணங்கிடையாது, நீர் ஆகாய கங்கையைப் பார்த்துப் போவீர் வாருமென்று தருமராசனை அழைத்துப் போய், கங்கையில் ஸ்நானமாடின உடன் திவ்விய தேகமுடையவராயினர்.

பரமபத தெரிசனம்.

இப்பால் தேவேந்திரனும் தருமராஜனும் யமதர்மராஜன் முதலிய தேவதைகளும் வார்த்தையாடிக்கொண்டு வரும்போது, ஐயா தருமராஜனே! தேகமெடுத்த உமது மானிடஜன்மம் தீர்ந்து திவ்வியதேகம் பெற்றீர், பூமி சம்பந்தமான பந்துத்துவபாசம் உமக்கு இன்னம் கொஞ்சம் ஞாபகத்தில் இருக்கின்றது. நீ சத்தியரூபம்பெற்றாய். உன்னைப்பார்க்க நான் இரண்டு தரம்வந்தேன், வனவாசத்தில் ஒருதடவையும் நாய் வடிவமாய் ஒரு தடவையும் தெரிசனங்கொடுத்தேன் என்று பட்சத்துடன் தருமராஜனை யமதர்மராஜன் கட்டியணைத்துக்கொண்டதினால் அவர் ஐக்கியம்பெற்றவராயினர். தேவர்கள் புஷ்பமாரிபெய்து ஆசீர்வதித்தார்கள். அப்பால் பரவாசுதேவன் எழுந்தருளியிருக்கும் வைகுந்தபதத்தைக்கண்டு விமானம் விட்டிறங்கி அவ்விடத்திய காட்சிகளையெல்லாம் கண்ணுற்கண்டு மனதினுற்போற்றி நிற்கையில், இதோபாரும் ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளியிருக்கின்றார், அஷ்டலக்ஷ்மிகளும் அமர்ந்திருக்கின்றார்கள் என்று காண்பித்தனர். பார்த்தமாத்திரம் தரையில் மூர்ச்சித்து விழுந்தெழுந்து சரீரம்புளகித்து உள்ளன்பினால் உருகிய உத்தமனுக்கு மெத்தவும் பல்லாண்டுகூறினர். இன்னம் உன்மனதிலுள்ள பந்தத்தை இந்திரன் நீக்கிவைப்பான், நீர்போய்ப் பாருமென்று கருணைபுரிந்தனர். இந்திரனும் யமனும் தருமனும் விமானத்தில் ஏறிக்கொண்டு போகையில் பிதிர்லோகத்தைக் காண்பித்தார்கள்.

பிதிர்கள் தெரிசனம்.

அஷ்டவசுக்களில் ஒருவராகிய உங்கள் பாட்டன் பீஷ்மாசாரியரைப் பாருமென்றார்கள், அப்பால் துரோணாசாரியார் திரிதராஷ்டிரன் காந்தாரி குந்திதேவி கர்ணமகாராஜன் பீமன்முதலிய தம்பிமார்கள் துரோபதாதேவி இளம்பஞ்சபாண்டவாள் அபிமந்யுமுதலிய பந்துக்கள் யாவரையும் ஒருவர் தப்பாமல் காண்பித்து, இன்னம்காணவேண்டிய துண்டானால் கேளுமென்று யமதருமனும் இந்திரனுங்கேட்க, தருமராஜன் சொல்லுகின்றார். ஐயா! நான் காணவேண்டிய அதிசயங்கள் யாவுங்கண்டேன். இனி உங்கள் கிருபா கடாட்சம் மாத்திரம் என்றென்றைக்கும் என்னைவிட்டு அகலாதிருக்கவேணும், மூவர் முதல்வனேயென்று அவர்களைப் பணிந்து துதித்தார். அந்த தர்மபூபதியை தேவராசன் தன்னிடத்தில் மருவியிருக்கும்படிக்கு அனுக்கிரகஞ்செய்தார். கேளும் ஜனமேஜயராசனே யென்று வைசம்பாயனர் விளம்பினர். வபுஷ்டாதேவி மகிழ்நன்மகிழ்ந்து தேவரீர் அருளிச்செய்த தெல்லாம் சத்தியமே, தருமராசன் முதலியபேர்கள் இனிமேல் அந்தந்தப் பதவியில்தான் இருப்பார்களோ, பின்னையும் மண்ணில்வந்து பிறப்பார்களோ என்று நான் அனுமானப்படுகிறேன், அதை எனக்குத் தெரிவிக்கவேண்டும் தேவனேயென்று வணங்க, வைசம்பாயனர் மொழிகின்றார்.

முக்திபெற்ற சருக்கம்.

கேளும் ஜனமேஜயராசனே! அஷ்டவசுக்களில் ஒருவராகிய பிரபாசன வசுவென்பவர் பீஷ்மராகப்பிறந்து பிரமசாரியாயிருந்து வசுப்பதம்பெற்றார், துரோணர் சுக்கிரபகவான் அமிசத்தை அடைந்தார், திரிதராஷ்டிரன் கந்தர்வராசன் கலையிற் சேர்ந்தான், பாண்டுராசன் யக்ஷபதவிசேர்ந்தார். கர்ணன் சூரியனிற் கலந்தான். பீமன் வாயுவில் ஐக்கியமானான். அர்ச்சுனன் இந்திரனிற் கலந்தான். நகுலசகாதேவர்கள் அசுவினிதேவதைகளில் ஐக்கியமாயினார்கள். அபிமந்யு சந்திரகலையிற் சேர்ந்தான். பிரத்தியும்நன் சனற்குமாரனில் தங்கினான். கிருஷ்ணதேவருடைய பத்தினிமார் மகாலக்ஷ்மியில் மருவினார்கள். குந்திதேவி முதலான புனிதவதிகள் பூமிதேவியிற்பொருந்தினர். விதுரன் வித்தியாதரராசனிற் கலந்து யமனுக்குள் ஐக்கியமானான். தருமராசன் யமதர்மராசனாணையால் என்றும் இறவாமல் இருந்தனர். திருஷ்டத்தியும்நன் அக்கினியிற் கலந்தான். சிகண்டி காந்தர்வ அம்சத்தில் கலந்தான். இன்னம் எந்தெந்த தேவதைகள் எப்பெப்படி அவதரித்தார்களோ அந்தப்படியே ஐக்கியமானார்கள். துரியோதனாதியர் இராக்ஷச அமிசத்திலும் சகுனி பாபசொரூபமான நரகத்திலும் ஆழ்ந்தார்கள். துரியோதனன் வெகுநாள் நரகத்திற்கிடந்து கலிபுருஷனிற் கலந்துபோனான். பகதத்தன் முதலிய பார்த்திபர்கள் அசுரவர்க்கத்திற் கலந்தார்கள். துருபதன், பாஞ்சாலன், சோமுகன், விராடன், காமலிகன், கடோற்கஜன், விஸ்வதேவதைக் கூட்டங்களில் மேவினர். பலராமர் ஆதிசேஷாம்சத்தில் அமர்ந்தனர். யாதவகுலத்தார்

துரியோதனனைக் கிட்டி இராக்ஷச குலத்தை மருவினார்கள். பாண்டவர்களைச்சார்ந்த பேர்கள் தேவாம்சத்திற் கலந்தார்கள். அவரவர் செய்தவினைகள் அவரவர்களைப் பிடித்துக்கொண்டன. தீவினைகள் உண்டாயிருப்பவர்களுக்குப் பிறவியெடுக்க நேரிடும்.

கேளும் ஜனமேஜயமகாராஜனே! ஆதிபர்வம் முதல் சுவர்க்காரோகணபர்வபரியந்தம், இந்தப் பதினெட்டுப் பர்வத்தின் கதைகளை சாங்கோபாங்கமாய்ச் சொன்னேன். ஒப்புவமையில்லாத வேதவியாசர் என்னும் தபோநிதியானவர் எனக்குரைத்த வண்ணம் ஒன்றும் விடாமல் உமக்கு விளம்பினேன். இதனை ஐந்தாம் வேதமென்று கூறுவதுயாதென்னில், வேதரகசியம் உபநிஷதம் தர்மசொரூபம் இராசதர்மம் வேதாந்தம் புண்ணியம் தீர்த்தமகத்துவம் தெய்வச்சிறப்பு பிதிர்பூசை யாகம் விரதம் இல்வாழ்க்கை ஆசிரமதர்மம் பிக்ஷை விருந்து புத்திரப்பேறு சத்தியம் இவை முதலியயாவையும் இந்த ஒரு நூலிற் சொல்லியிருக்கிறார். மற்ற புராணங்களில் ஒன்று இரண்டு பேசியிருக்கும். புத்திமான்கள் இதைக் கூர்ந்துபார்த்தால் உண்டு, இந்த இதிகாசத்தை நீர் இப்போது கேட்டபடிக்கே நித்தியசெபம்போல் அனுஷ்டித்து வாருமென்று வைசம்பாயனர் உபவாச மந்திரம் உபதேசித்துவைத்தார். ஜநமேஜயராஜனும் வபுஷ்டாதேவியும் அவர்மகன் சதாநீகனும் அவன் பத்தினி வைதேகியும் அவள் பிள்ளை அசுவமேதவந்தனும் மந்திரிமாரும் வைசம்பாயன மகாரிஷியை ஊர்வலஞ்செய்வித்து மிகுந்த விசுவாசத்துடன் அவரைப்போற்றி ஆதுலர்க்கு அநேகமாய் அளித்து அஷ்டலக்ஷிமி கடாக்ஷம்பெற்றவனாக வாழ்ந்திருந்தானென்று, சூதபுராணிகர் நைமிசாரண்ணியவாசிகளுக்குச் சொல்லியருளினார். நைமிசாரண்ணியவாசிகள் சூதபுராணிகரை ஸ்தோத்திரித்து அடியோம் தேவரீரால் பதினெண் புராணமும் ஐந்தாம் வேதமென்கிற ஸ்ரீமகாபாரதமாகிய இதிகாசமும் கேட்டு தந்நியரானோம், என்று அவரைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கினார்கள். அவர் இவர்களைவாழ்த்தி, ஸ்ரீ வேதவியாசமகானுபாவர் இவ்வுலகத்தா ரெல்லோரும் கடந்தேறும்படி தேவதைகளின் பிறப்பும் மகாரிஷிகள் உற்பவமும் மகாவிஷ்ணு பரமசிவன் மகத்துவமும் அரசர் தம்பெருமையும் ஐவர் சரித்திரமும் எளிதில் விளங்கும்படி தேவாமிர்தமாக ஸ்ரீமகாபாரதத்தை திருவாய் மலர்ந்தருளினார். ஆகையால் இதை ஆசையுடன் படித்தோரும் கேட்டோரும் எழுதினோரும் வைத்துப் பூசித்தோரும் குறைகள் நீங்கி நினைவுபெற்று தீர்க்காயுளாய் நோயற்றவாழ்வும் குறையற்ற செல்வமுமாய் புத்திர மித்திர களத்திராதி சுற்றத்தாருடன் நீடூழி வாழ்வார்கள். மங்களம்.

பதினெட்டாவது சுவர்க்காரோகணபர்வம்

முற்றிற்று.

ஸ்ரீ கிருஷ்ணசகாயம்.